# கரிகாலன் கனவு

அய்க்கண்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர், 1993

உரிமை : ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 57-00

16863

3255381

அச்சிட்டோர் :
ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ்
49, காரணீஸ்வரர் கோவில் தெரு
மயிலாப்பூர், சென்னை-600 004

# முன்னுரை

அன்புடையீர்,

வணக்கம்,

இக்காலத்தில் உலக சமாதானம், உலக ஒருமைப்பாடு, போர் இல்லாத சமுதாயம், சமாதான சகவாழ்வு என்றெல்லாம் இலட்சியங் களைப் பேசுகிறோம்.

இந்த இலட்சிய நிலைகளின் அடிப்படையாக, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற பாடலில் தமிழ்த் தத்துவத்தைப் பாடியிருக்கின்றார் கணியன் பூங்குன்றன்.

இன்றைய ஐ.நா. அவையின் வாசலில், கொள்கை முழக்கமாகப் பொறிக்கத்தக்க சொற்கள் இவை.

இந்தத் தத்துவம் சங்க காலம் தொடங்கி, தமிழ் மண்ணிலே, அரசர்களிடமோ அல்லது

அறிஞர்களிடமோ, ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காதா என்று நான் சிந்தித்துப் பார்த்தபோது, கரிகால் சோழனின் பொற்காலம் அதற்கேற்ற களமாக என் கண்முன் விரிந்தது.

சங்க காலத்தில், கரிகாலனைப் போன்ற பெரு வீரர்களாய் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலிய பலர் விளங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர் களது வீரச் சாதனைகளைவிட— கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டி வெள்ளம் அடக்கியதும், கல்லணை கட்டிக் கால்வாய் வெட்டி, நாட்டைப் பொன்விளையும் நாடாக்கியதும், 'காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி'யதும்— வரலாற்றிய நெடிய நினைவுகளாக மக்கள் உள்ளங்களில் நிலைத்திருப்பதைப் பார்க்கிறோம்...

கரிகாலனைச் சிறந்த வீரனாகக் காட்டி, பலர் கதைகளும் நாவல்களும் எழுதியிருக்கிறார்கள். நான்கூட, அப்படி ஒரு நாவல் எழுதியிருக்கிறேன். இப்போது அவனுடைய வரலாற்றை வேறொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, அவன் ஒரு வீர அலெக்ஸாண்டராக மட்டுமல்ல, ஒரு நல்ல அசோகனாகவும் விளங்கியிருக்கிறான் என்று தெரிகிறது. எனவே இந்த நாவலில் பழைய கரிகாலனையே, ஒரு புதிய மன்னனாக வார்த்து, உலவ விட்டிருக்கிறேன்...



வரலாற்றில், கரிகாலன் என்று ஒருவன் அல்ல, இரண்டு பேர் இருந்திருக்கிறார்கள் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இன்னும் சிலர் மூன்று கரிகாலர்கள் உண்டு என்று வாதாடுகிறார்கள். அந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் 'இரண்டாவது கரிகாலன்தான், பகைவர் களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட போது, தப்பித்து, ஒரு கால் கரிந்து கரிகாலன் என்று பெயர் பெற்றான்' என்பதை ஆராய்ந்து சொல்லி விட்டு, 'அப்படியென்றால், முதல் கரிகாலனுக்கு எப்படி கரிகாலன் என்று பெயர் வந்தது?' என்று அவரே கேள்வியும் கேட்டுக்கொண்டு திகைக் கிறார்! (அந்த ஆராய்ச்சி அறிஞர்களின் பெயர் களைக் குறிப்பிட்டு, ஆராய்ச்சிகளை மறுக்கும் அளவுக்கு எனக்குத் தகுதியில்லாததால், அவர் களின் பெயர்களைக் குறிப்பிடாமல் விட்டு விடுகிறேன்.)

கரிகாலனைப்பற்றிப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணன், கழாத்தலையார், முடத்தாமக்கண்ணி முதலிய புலவர்கள், ஒருவர் கூறிய செய்திகளை மற்றவர் அப்படியே கூறாமல், கூட்டியும் குறைத்தும் பாடுவதால், அவர்கள் பாடிய கரிகாலர்கள் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று முடிவு செய்வது, பொருந்தாது என்று நினைக்கிறேன். ஏனென்றால், புலவர்கள், வரலாறு எழுதியவர்கள் அல்லர்; மன்னரின் செயல்களில் தங்கள் உள்ளத்தைத்

தொட்ட நிகழ்ச்சிகளை உணர்வுபூர்வமாகப் பாடுபவர்களே புலவர்கள். அவர்களுடைய பாடல்களை மட்டும் வைத்து, வரலாற்று முடிவு செய்வது தவறு அல்லவா?...

சோழர் வரலாற்று ஆராய்ச்சியில் புகழ் பெற்ற பேரறிஞர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, மு. இராகவய்யங்கார், கி. வா. ஜகந்நாதன், மா. ரா. இளங்கோவன் முதலியவர்கள் கரிகாலன் ஒருவனே என்று கொண்டிருப்பதைப் பின்பற்றி, நானும் என் நாவலில் கதைத் தலைவனைப் படைத்திருக்கிறேன்...

சங்க இலக்கியத்தில் பல பாடல்கள், எழுதியவர் பெயர் தெரியாமலே வழங்கி வருகின்றன. அவற்றில் இரண்டு பாடல்களை, என் பாத்திரங்கள் பாடுவதாகக் கற்பனை செய்து அவற்றைக் கையாண்டிருக்கிறேன். அந்த இலக்கியக் 'கையாடல்' மன்னிப்புக்குரியதே என்ற துணிவில், அவற்றை இணைத்து, அவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாமல் போனதற்கும் 'கதை ஜோடித்து' நம்ப வைக்க முயற்சி செய்திருக்கிறேன்...

'கரிகாலன் யானையால் மாலை சூட்டப்பட்டு மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்' என்ற செய்தி நம்பமுடியாத கற்பனை என்று ஆராய்ச்சி அறிஞர்கள் தள்ளிவிட்டார்கள். ஆனால் 'அதுவும்



நடந்திருக்கக் கூடியதே' என்று அந்த நிகழ்ச்சியையும் நியாயப்படுத்தி ஒப்புக் கொள்ளச் செய்ய முயன்றிருக்கிறேன்...

இந் நாவலின் நிகழ்ச்சிகளைப் படைப்பதற்கான சான்றுகளைத் தந்து உதவிய வரலாற்றுப் பேரறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் திருவடிகளைப் பணிந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

— அய்க்கண்

16863
8838

# கரிகாலன் கனவு

## 1

அன்று, புகார் நகரின் கீழ் கடலில் பொற் தட்டுப் போல, இளஞ் சூரியன், சுற்றிலும் கீழ்வானத்தைப் பொன்வண்ணத்தில் குளிப்பாட்டியபடி எழுந்ததிலே, ஒரு பொருத்தம் இருந்தது.

சோழ நாட்டின் ஈடிணையில்லாத ஒரு பொற் காலத்தின் எழுச்சிக் கட்டத்தைப் பார்க்கப் புறப்பட்டவன் போல், கதிரவன் குண கடலிலிருந்து எழுந்து வருகிறான்.

அன்று கரிகால்வளவனின் நாண்மங்கல விழா...

அரசனின் பிறந்தநாள் விழாவைப் புகார் நகரம் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நாட்டின் மேல் மட்டத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, சாதாரண குடிமக்களும், தங்கள் மகனின் பிறந்தநாளைப் போல் உள்ளம் பொங்க, கொண்டாட்டங்களில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். சோழமன்னன், 'உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி'யின் மகன் மட்டுமல்ல;

அழுந்தூரின் சாதாரண வேளாளக் குடும்பத்துப் பெண்ணான நல்லினியின் மகனுமல்லவா கரிகால் பெருவளத்தான்?

புகாரில் அரண்மனையிருந்த பட்டினப்பாக்கம் பகுதியில் மாளிகைகளெல்லாம் வண்ணத் தோரணங்களாலும் அணி வளைவுகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன.

அன்று விடிகாலையிலிருந்தே அரண்மனையில் பேரிகையும் முரசும் முழங்கத் தொடங்குகின்றன. காலை நேரத்துப் பண்ணான 'புறநீர்மை', கோயில்களில் செங்கோட்டு யாழில் இசைக்கப்படுகிறது. சிறப்பு அபிஷேகங்களும் ஆராதனைகளும் வழிபாடுகளும் நடக்கின்றன.

வீடுகள் தோறும் பசும்பொன் பூரண கும்பமும் முளைப்பாலிகையும் பாவை விளக்கும் பொற்கொடிகளும் வெண்மயிர்க் கவரியும் எடுப்பாக வைக்கப்பட்டு, ஒவிய அழகான வீடுகளின் எழில் மேலும் கூடியிருக்கிறது.

மாளிகைகளின் வாயில்களில் கிம்புரி செறித்த யானைக் கொம்புகளும் முத்துமாலைகளும் அலங்காரமாக வைக்கப் பட்டிருக்கின்றன. வாசல்களில், தெருவை நிறைத்துப் போடப்பட்டிருந்த வண்ணக் கோலங்கள், கண்களை நிறைப்பவையாய் விளங்குகின்றன.

விழாக் காணவரும் மக்களுக்கு, கொடிய வெயிலின் ஆட்சியிலிருந்து காப்பு அளிப்பதற்காக, தெருவெங்கும் போடப்பட்டிருக்கும் தென்னங்கீற்றுப் பந்தல்கள், கரிகாலனின் செங்கோல் ஆட்சிபோல், குளிர்ச்சி வழங்குகின்றன.

நகரத்தின் விழாக் கோலங்களைக் கண்டுகளிக்க வந்த வெளியூர்க்காரர்களும் அயல்நாட்டினரும் தெருக்களிலே நெருக்கமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். வீடுகளில் எல்லாம் விருந்தினர்களின் கூட்டம் நெருக்கமாயிருக்கிறது.



நகரெங்கும் ஆங்காங்கே நடைபெறும் கருத்தரங்குகளில் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு தமிழிலக்கிய விருந்தளிக்கிறார்கள். சில இடங்களில் பல்லியக் குழுக்கள்,[1] தம் திறமையனைத்தையும் காட்டி, இசை விருந்து படைக்கின்றன. மாலை நேரம் தொடங்கி, நகரத்தின் பல்வேறு அரங்கங்களில் வேத்தியல் கூத்து வகைகளும் பொதுவியல் கூத்துக்களும்[2] தனித்தனியே நடைபெறுகின்றன. சாக்கையர் தலைவனின்[3] நடனங்கள், சிறப்பான மேடையில் நிகழ்கின்றன. நகர மக்களும் விருந்தினர்களும் மாலை நேரத்தில் நகரத்தின் வீதிகளில் வேடிக்கை பார்த்துக் கொண்டே, கலை விருந்துகளையும் ரசித்துப் பார்த்தபடியே சுற்றி வருகிறார்கள்.

மாநாய்கர், தன் மகள் பொற்பாவையையும் மருமகன் இளமருதனையும் அழைத்துக் கொண்டு, நகர் விழாக் காணப் புறப்படுகிறார். தெருவில் அவரைப் பார்ப்பவர்களெல்லோரும், மரியாதையோடு நின்று வணக்கம் சொல்லி நலம் விசாரித்து விட்டே செல்கிறார்கள். ஏனென்றால், மாநாய்கர், புகாரிலே ஒரு செல்வாக்கான வணிகர்; சிறந்த வணிகம் செய்பவர்களுக்கு அரசன் வழங்கும் 'எட்டி' பட்டமும் பொன்னாலாகிய 'எட்டிப்பூ' பரிசும் பெற்றவர்; மன்னனுடன் நெருங்கிய தொடர்பும் உள்ளவர். அவருடைய மகளின் கணவன் இளமருதனும்,

---

1. பல இசைக் கருவிகளை வைத்து நடத்தப்படும் இசை நிகழ்ச்சி; இக் காலத்தில் 'ஆர்க்கெஸ்ட்ரா' *(Orchestra)* என்று வழங்கப்படுவது.
2. 'வேத்தியல்' என்பது, அரசர், அறிஞர் முதலிய உயர் அறிவு படைத்தவர்களுக்காக நடத்தப்பெறும் இலக்கிய நாடகங்கள்.
   'பொதுவியல்', அதிக நுண்ணறிவும் கலை நோக்கும் இல்லாத பொதுமக்களுக்காக நிகழ்த்தப்படும் பொழுதுபோக்கு நாடகங்கள்.
3. அரசவைக் கலைக்குழுவின் தலைவன்.

பாண்டிய நாட்டில் புகழ் பெற்ற வணிகன் என்பது எல்லோருக்கும் தெரியும்.

மூவரும் நாளங்காடியை நெருங்கியபோது, அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்த பெண்களைப் பார்த்துத் திகைக்கிறாள் பொற்பாவை:

''அடேயப்பா!... இந்த அங்காடியிலே என்ன இவ்வளவு கூட்டம்?... அத்தனைபேரும் வெளிநாட்டுப் பெண்கள்போல் தெரிகிறதே?''

தந்தத்தால் செய்த ஒல்லியான சிலைகள் மாதிரி, அளவெடுத்துக் கடைந்ததுபோன்ற அங்க அளவுகளுடனும், தொட்டால் சிவந்துவிடும் செம்பொன்னுடல் நிறத்துடனும், ஆலமரத்துக் கிளிகளாய் ஏதேதோ தம்முள் மிழற்றிக்கொண்டு, வண்ணத்துப்பூச்சிகளாய் அந்தப் பெண்கள் நடமாடும் காட்சி, அந்த அங்காடியின் அழகை மேலும் கூட்டியது.

இத்தகைய வெளிநாட்டுப் பெண்கள் கூட்டத்தை, பாவை மதுரையில் பார்த்ததில்லை. ஆனால் மருதன், கொற்கைத் துறைமுகப்பட்டினத்திலே பார்த்திருக்கிறான்.

''ஆம், பாவை! எல்லோரும் வெளிநாட்டுப் பெண்கள் தான்; நம் ஊர் யவனச்சேரி[4]யிலிருந்து வந்திருக்கிறார்கள். விழாக்காலங்களில், அங்காடியில் நல்ல முத்துக்களும் துணிகளும் வந்திருக்கும் அல்லவா, அதற்காகத்தான் இவ்வளவு கூட்டம்!'' என்று விளக்குகிறார் மாநாய்கர்.

''இங்கே மட்டுமில்லை, மாமா!... ரோம் நாட்டிலேயும் பெண்கள் இப்படித்தான் தமிழ்நாட்டு முத்துக்களையும் துணிமணிகளையும் ஆர்வத்துடன் கூட்டமாக நெருக்கி

4. வணிகத்திலும் அரசாங்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள யவன நாட்டவர், தங்கள் குடும்பத்துடன் தங்கி வாழும் பகுதி, 'யவனச்சேரி' என வழங்கப்பட்டது.



யடித்து வாங்குகிறார்கள். கைய்ஸ் என்னும் மன்னனின் மனைவி பௌலீனா, நான்கு கோடி பொற்காசு மதிப்புள்ள முத்து நகைகளை அணிந்திருக்கிறாளாம். பிளினி[5] என்ற அறிஞர் 'ரோம் நாட்டுப் பெண்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பி, முத்துக்கும் துணிக்குமாகத் தமிழகத்துக்குப் பெரும் பொருளை அனுப்புவதால், தன் நாட்டுப் பொருளாதாரமே ஸ்தம்பித்துப் போய்விடுகிறது' என்று வருத்தப்படுகிறார்,'' என்கிறான் இளமருதன்.

''ஆம்... நானும் கேள்விப்பட்டேன். பெட்ரோனியஸ்[6] என்பவர், 'ரோம் நாட்டுப் பெண்கள் தமிழ் நாட்டிலிருந்து வரும் மிக மெல்லிய துணிகளை அணியும்போது அவர்களின் உடல் வனப்பு முழுவதும் வெளியே தெரிகிறது; ஆனால் அவர்கள் அதைப்பற்றி வெட்கப்படாமல் அந்த மெல்லிய துணிகளையே விரும்பியணிகிறார்கள்' என்று கோபமாகப் பேசினாராமே?'' என்று கேட்கிறார் மாமனார்.

''ஆம்... ஆனால் அந்தப் பெண்கள், இந்த அறிஞர்களின் பேச்சையா கேட்கிறார்கள்?... பெண்கள் இருக்கிறார்களே, அவர்கள் அரசியானாலும் சரி, ஏழையானாலும் சரி— தமிழ் நாடாயினும் சரி, வெளிநாடாயினும் சரி— எல்லாப் பெண்களும் ஒன்றுதான், நகை, துணி, அலங்கார விஷயத்தில்!'' என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டே, மாமனாருக்குத் தெரியாமல் மனைவியின் இடுப்புச் சதையைச் செல்லமாகக் கிள்ளி ரகசியமாகச் சிரிக்கிறான் மருதன்.

சட்டென்று ஒதுங்கி, நாணம் பொங்கச் சிரித்துச் சிவந்த பாவை, ''போங்கள் அத்தான்! உங்களுக்கு எப்போதும் கேலிதான்!'' என்று பொய்க் கோபத்துடன்

5. *Pliny*
6. *Petronius*

சிணுங்கி, அப்பாவுக்குத் தெரியாமல், கணவனைக் கடைக் கண் பார்வையால் வெட்டிக் கொல்கிறாள்!

எதிரே வந்த ஒரு பெரியவர், அம்மூவரையும் பார்த்ததும், நிற்கிறார்:

''வணக்கம், மாநாய்கரே! நலம்தானே?... உங்கள் மகளும் மருமகனும் விழாவுக்கு வந்திருக்கிறார்களா?''

''ஆமாம்... நீங்கள் நலம்தானே?'' என்று பரிவோடு கேட்கிறார் 'எட்டி' வணிகர்.

''ஓ!... நன்றாயிருக்கிறேன்...'' என்ற பெரியவர், மருதனைப் பார்த்து, ''ஏன் தம்பி, நீங்கள் ரோம் நாட்டுக்குப் போயிருந்ததாகக் கேள்விப்பட்டேனே?'' என்று கேட்கிறார்.

''ஆம், ஐயா! எங்கள் நாட்டிலிருந்து, அகஸ்டஸ் பேரரசருக்கு[7] அனுப்பப்பட்ட வணிகக் குழுவில் நானும் ஒருவன். போன மாதம்தான், ரோமிலிருந்து திரும்பினேன்...'' என்கிறான் மருதன்.

''மிக்க மகிழ்ச்சி... நான் வருகிறேன்... விழாவை நன்றாகப் பார்த்து ரசியுங்கள்...'' என்று சிரித்துக் கொண்டே விடைபெற்றுச் செல்கிறார் அந்தப் பெரியவர்.

7. 'ஆக்டேவியஸ் சீஸர்' என்னும் இயற்பெயர் கொண்ட இம் மன்னருக்கு, அந்நாட்டு 'செனட்' அவை, அவருடைய வீரத்தையும் ஆட்சியையும் பாராட்டி, 'மாபெரும் மன்னர்' என்னும் பொருளுடைய 'அகஸ்டஸ்' என்னும் பட்டத்தை வழங்கியது.
இவருடைய ஆட்சிக்காலத்தில், பாண்டியமன்னன் இரண்டு முறை தூதுக்குழு அனுப்பியதாகவும், அகஸ்டஸ் தன் தூதுவர்மூலமாகப் பாண்டியனுக்குப் பரிசாகப் பல அரிய பொருள்களையும் பல அழகிய பெண்களையும் அனுப்பியதாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.



மருமகனைப் பற்றிய பெருமிதத்துடன், மாநாய்கர், அவன் பக்கம் திரும்புகிறார்:

''நீங்கள் ரோம் நகரில் இருக்கும்போது, இப்படி ஏதாவது விழாக்களைப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன், மாமா!... அகஸ்டஸ் பேரரசரின் முடிசூட்டுநாள் கொண்டாடப்பட்டபோது நாங்கள் அங்கே இருந்தோம்...''

''அங்கேயும் இதுமாதிரி கோலாகலமாக விழா நடந்ததா?'' என்று ஆர்வத்துடன் கேட்கிறாள் பாவை.

''கோலாகலம், ஆர்ப்பாட்டம், ஆரவாரம், களிப்பு எல்லாம் அங்கே இருந்தது; ஆனால் இந்த மென்மையான மகிழ்ச்சி அங்கே இல்லை... மக்கள் தங்கள் விருப்பம்போல் வீடுகளிலும் பொது இடங்களிலும் ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள். ஆனால் நல்ல கலை நிகழ்ச்சிகளை ரசிக்க மாட்டார்கள். ரோம் நகரிலே ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்னிடம் சொன்னார்: ஒருநாள் அவருடைய நாடகம் நடந்து கொண்டிருந்தபோது, பக்கத்திலே ஒரு கரடிச் சண்டை ஆரம்பித்துவிட்டதாம்; உடனே நாடகம் பார்த்துக்கொண்டிருந்த எல்லோரும், அந்தச் சண்டையை வேடிக்கை பார்க்கப் போய்விட்டார்களாம்!''

''அப்படியா?... நல்ல வேடிக்கைதான்!'' என்று சிரிக்கிறார்கள் தந்தையும் மகளும்.

''அங்கே விழாக்களிலே ரதப்போட்டி[8]யைத்தான் மிகவும் விரும்புகிறார்கள். மிருகங்களின் சண்டைகளையும் அடிமைகளும் கைதிகளும் கலந்துகொள்ளும் வாட்போர்களையும் பெரிய அரங்குகளில் நடத்தி ஆவலோடு பார்க்கிறார்கள். சண்டை முடிவிலே, இறந்தவர்களை

8. *Chariot race*

சங்கிலிக்கொக்கியில் மாட்டி, கீழே போட்டு இழுத்துச் செல்லும் காட்சியை மிகவும் ரசிப்பார்கள்.''[9]

''ஐயோ!... அந்தக் கொடூரத்தையா பார்த்து ரசிப்பார்கள்?'' என்று முகஞ்சுளித்து நடுங்குகிறாள் பொற்பாவை.

''ஆம்... அங்கே மக்கள் எல்லோருமே, வீரத்தைப் பாராட்டுகிறார்கள். ஆனால் அந்த வீரத்திலே அரக்கத் தனமும் கொடூரமும் அதிகம். சண்டையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு மனிதனும் ஒன்றுதான்; மிருகமும் ஒன்றுதான்... தமிழ்நாட்டிலே மாதிரி, நுண்கலைகளையும் இசை நடன நாடகங்களையும் கண்டு ரசித்துப் பாராட்டு கிறவர்களை அங்கே விழாக்களில் பார்க்க முடியாது...'' என்று விளக்கமாகக் கூறுகிறான் இளமருதன்...

நாளங்காடியில் நவரத்தின நகைக் கடைகள், துணிக் கடைகள் முன்னால் நிற்கும் கூட்டத்தைத் தாண்டி, மூவரும் மருவூர்ப்பாக்கத்தை நோக்கி நடந்து கொண் டிருக்கிறார்கள்.

நாளங்காடியின் கடைசியில், கம்பீரமான கலை அழகுடன் அமைந்திருக்கும் பதினாறுகால் மண்டபத்தை யும், முத்தும் வைரமும் இழைத்துச் செய்யப்பட்டிருந்த அதன் தூண்களையும் பார்த்துப் பிரமித்துப் போய் நின்று கொண்டிருக்கிறான் மருதன்.

நேற்று அங்குதான், கடியலூர் உருத்திரங்கண்ணனார், தனது 'பட்டினப்பாலை' நூலை அரங்கேற்றினார்.[10]

---

9. ரோம் நகர விழாக்கள் பற்றிய விவரங்களை *H.A. Davies, M. A.* எழுதிய *'An Outline History of the World'* என்னும் நூலின் 182-185 பக்கங்களில் காணலாம்.

10. கி.பி. 1238-ல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழ மன்னன் மூன்றாம் ராஜராஜனை வென்று, பழிக்குப்



அரங்கேற்றம் முடிந்ததும், புலவருக்கு, பதினாறு லட்சம்[11] பொற்காசுகளையும் அந்த மண்டபத்தையுமே பரிசிலாக வழங்கினான் கரிகாலன். 'பட்டினப்பாலை'யில் உருத்திரங் கண்ணன், கரிகாலனுடைய வீரத்தையும் ஆட்சிச் சிறப்பை யும், காதலன் தன் நெஞ்சிடம் கூறுவதாக வைத்துச் சித்திரித்திருந்த அழகு, கேட்டோர் உள்ளத்தில் அழுத்த மாகப் பதிந்திருந்தது.

''மாமா! கரிகால்வளவன், சோழ மன்னர்களிலே மட்டுமல்ல, தமிழ் மூவேந்தர்களிலுமே தலைசிறந்த மன்னனாக வரலாற்றில் வாழப்போகிறார். இவர்போல, ஒரு சிறந்த வீரரும் அதே சமயம் மக்களின் நலத்தில் நாட்டம் கொண்ட மன்னருமாக இன்னொருவர் இனிமேல் இந்த மண்ணில் பிறப்பார் என்பது சந்தேகம் தான்...'' என்று மனமாரப் புகழ்கிறான் அந்தப் பாண்டி நாட்டு வணிகன்.

''ஆமாம்... மற்ற அரசர்களை விட, கரிகால்வளவன் மிகவும் உயர்ந்து விளங்குகிறார். சோழ நாட்டு மக்கள் அவர் மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள். அதற்குக்

---

பழியாக (முன்பு, மூன்றாம் குலோத்துங்க சோழன் மதுரையில் அரண்மனைக் கட்டிடங்களையெல்லாம் இடித்துப் பாழ்ப்படுத்தியதற்குப் பழிவாங்குவதற் காக) சோழ நாட்டை அழித்தபோது, 'பட்டினப்பாலை' அரங்கேறிய இந்த பதினாறுகால் மண்டபத்தை மட்டும் நினைவுச் சின்னமாகப் போற்றி, அழிக்காமல் விட்டுவிட்டதாக, திருச்சி மாவட்டத்திலுள்ள திருவெள்ளறைக் கல்வெட்டு கூறுகிறது.

11. கலிங்கத்துப்பரணி— இராசபாரம்பரியம்— 21. ஆனால் 'சங்கரசோழன் உலா' 'தமிழ் விடு தூது' ஆகிய நூல்கள், பதினாறு கோடிப் பொற்காசுகள் பரிசு வழங்கியதாகக் கூறுகின்றன.

காரணம்— அவர் அரசராக முடிசூடும் வரை, சாதாரணக் குடும்பத்திலே வளர்ந்தவர்; ஆகவே ஒரு சாதாரணக் குடிமகனே அரசராகியிருப்பதைப் போலவே மக்கள் கருதுகிறார்கள். கரிகாலரும், சாதாரண மக்களின் வாழ்வு வளத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறார். தேவையற்ற காடுகளை அழித்து, மக்கள் வாழ்வதற்கேற்ற நாடாக்குகிறார்; குளங்களையும் கால்வாய்களையும் அமைத்து உழவுத் தொழிலை வளப்படுத்துகிறார்...''

''ஆம், அப்பா! ஆலூர் மூலங்கிழார் கூட 'ஒரு பெண் யானை படுக்கும் இடத்தில் ஏழு களிறுகளுக்குப் போது மான நெல் விளையும் சோழ நாடு'[12] என்று பாடியிருக் கிறாரே?'' என்று தந்தை கூறுவதை ஆமோதிக்கிறாள் மகள்.

''மாமன்னர்கள் எல்லோருமே, தங்கள் அதிகாரத்தை யும் படை பலத்தையும் நாட்டுப் பரப்பையும் பெருக்கவே நினைப்பார்கள். ஆனால் கரிகாலரோ, மக்களின் நலம் பெருக்கும் திட்டங்களையே நினைக்கிறார். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு, காந்தமன் என்னும் சோழ மன்னன் காவிரி நதியைக் குடகு மலையிலிருந்து வெட்டிச் சோழ நாட்டுக்குக் கொண்டு வந்தான்.[13] அந்த ஆற்றிலே ஆண்டுதோறும் வெள்ளப் பெருக்கு வந்து மக்களுக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டேயிருந்தது. அதை கரிகாலன்தான் கரை கட்டி ஒழுங்குபடுத்தினார்.''

காவிரிக் கரையில் இருக்கிற நாடுகளின் தலைவர்களை யெல்லாம் கட்டாயப்படுத்தி, ஆங்காங்கே காவிரிக்குக் கரை எழுப்பச் செய்தாராமே?'' என்று கேட்கிறான் மருமகன்.

''ஆமாம்... மற்ற அரசர்கள் தங்கள் வீரத்தைக் காட்டிப் பயமுறுத்தி, தங்களுக்கு அதிகக் கப்பமும்

---

12. புறநானூறு— 40-ம் பாடல்
13. விக்கிரம சோழன் உலா— ஒட்டக்கூத்தர்



பொருளும் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் கரிகாலர், எல்லோருக்கும் நல்ல காரியத்துக்குத்தானே கட்டாயப் படுத்தினார்? சில மன்னர்களைப் பயமுறுத்தினால்தான் நல்லது செய்வார்கள். அப்படித்தான் பிரதாப ருத்திரன் என்ற மன்னனின் நெற்றிக் கண்ணை அழித்துக் காட்டி, அவனையும் கரை கட்ட வைத்தார்...[14]'' என்று தன் மன்னரின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகிறார் மாநாய்கர்.

''ஆம்... எல்லாம் நானும் கேள்விப்பட்டேன், மாமா!... நேற்று மாலை கல்லணை திறப்பு விழாவுக்கு அரசருடன் போயிருந்தீர்களே, அந்தக் கல்லணையைக் கட்டிக் கொண்டிருக்கும்போது நான் ஒருநாள் போய்ப் பார்த்தேன். கரிகாலரின் அற்புதச் சாதனையான அந்த அணை, அவருடைய ஆட்சியின் சிறப்புக்கு நிரந்தர நினைவுச் சின்னமாகத் திகழும் என்பதில் சந்தேகமே யில்லை, மாமா! சோழ மண்டலத்தைப் பொன் விளையும் வள நாடாக மாற்றியுள்ள கரிகாலரை, மாவளவன்

---

14. பிரதாப ருத்திரன், 'நெற்றியில் கண்ணுடைய ருத்திர மூர்த்தியின் மரபில் வந்தவன் நான்' என்று தற்பெருமை பேசிக் கொண்டு, கரிகாலனின் வேண்டுகோள்படி, காவிரிக்குக் கரை கட்ட மறுத்து விட்டான். இதையறிந்த கரிகாலன், ருத்திரன் போல் ஓர் ஓவியம் வரையச் செய்து, அந்த ஓவியத்தில் நெற்றிக் கண்ணைத் தன் வேலால் குத்திக் கிழித்து, அப்படியே அதை அவனுக்கு அனுப்பி வைத்தான். அதைக் கண்ட பிரதாப ருத்திரன், கரிகாலனின் ஆணையை மறுத்தால், அந்த ஓவியத்தின் கதி தனக்கும் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, உடனே தன் நாட்டில் பாயும் காவிரியாற்றின் பகுதிக்குக் கரை கட்டி முடித்தான்— 'கலிங்கத்துப் பரணி.'

என்றும் மாவளத்தான் என்றும் புலவர்கள் பாராட்டுவது மிகவும் பொருத்தம்தான்.''

''கட்டுக்கடங்காத முரட்டுக்காளையை அடக்கிக் கட்டி, வயலில் உழுவதற்குப் பயன்படுத்துவதுபோல், பொங்கி வரும் பொன்னியை அணைகட்டித் தேக்கி, உழவுத் தொழிலுக்குப் பல கால்வாய்களாகப் பிரித்து விடுவது, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. நான் நேரில் பார்த்து மெய்சிலிர்த்துப் போனேன். அணையைக் கட்டிய பன்னிரண்டாயிரம் இலங்கை தொழிலாளர்களுக்கும்[15] பொற்காசுகளும் துணிமணிகளும் கொடுத்து, விடுதலை செய்து நேற்றே இலங்கைக்கு அனுப்பி வைத்தார் மன்னர். காவிரியில் நீர் உள்ளளவும், சோழ நாட்டில் நெல் விளையுமளவும் கரிகாலரின் பெயர் நிலைத்து நிற்கும்...''— தன் மன்னரின் புகழைப் பேசும் போது, 'எட்டி' வணிகருக்கும் கவிதைநடை துள்ளி வருகிறது!...

மூவரும் பட்டிமண்டபத்தை நெருங்கும் போது, அங்கிருந்து பல்லக்கில் ஒரு பெண் வெளியேறுவதைப் பார்க்கிறார்கள். அவளுடைய முதுகுப்புறம்தான் இவர்களுக்குத் தெரிகிறது.

அந்தப் பெண்ணைப் பார்த்த மக்களிடையே ஒரு பரபரப்பு எழுவதை, பொற்பாவை கவனிக்கிறாள்.

---

15. கரிகாலன், இலங்கைமேல் படையெடுத்துச் சென்று, வென்று, அங்கிருந்து பன்னிரண்டாயிரம் பேரைக் கைதிகளாகக் கொண்டு வந்து, கல்லணை கட்டுவதில் ஈடுபடுத்தினான்—

— டாக்டர் மா. இராசமாணிக்கனார்— 'சோழர் வரலாறு'

# 2

மருவூர்ப்பாக்கத்தின் தொடக்கத்தில் அமைந்திருந்த பட்டிமண்டபம், சிறந்த அறிஞர்களும் புலவர்களும் கூடும் இடம். அங்கே, கரிகாலன், தன் வட நாட்டு விஜயத்தின் போது கிடைத்த பரிசுப் பொருள்களைக் கண்காட்சியாக வைத்திருந்தான்.

வச்சிர நாட்டு மன்னன் வழங்கிய முத்துப்பந்தல், மகத மன்னன் அளித்த கொலுமண்டபம், அவந்தி வேந்தன் கொடுத்த தோரண வாயில், இன்னும் பல அரசர்கள் வழங்கிய திறைப் பொருள்களும் பரிசுப் பொருள்களும் அங்கே அழகான காட்சிப் பொருள்களாக விளங்கின.[1] அவற்றை மக்கள் கூட்டங் கூட்டமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்போது, பல்லக்கில் அங்கே வந்து செல்லும் பெண்ணைப் பார்த்ததும், மக்கள் பரபரப்பாகத் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொள்கிறார்கள்.

''அப்பா! அதோ அந்தப் பெண், புலவர் தாமக்கண்ணி தானே?'' என்று கேட்கிறாள் பொற்பாவை.

''ஆம், பாவை!... அவருக்கு ஒரு கால் நடக்கமுடியாத ஊனம்; அதனால்தான் பல்லக்கில் போகிறார்...''

''நானும் அவருடைய 'பொருநராற்றுப்படை' அரங்கேற்றம் நடந்தபோது கவனித்தேன், மாமா!... அவருக்குக் காலில்தான் குறை; ஆனால் கவிதையில் எத்தனை நிறைவு இருந்தது?'' என்று இளமருதன் உளம் நெகிழ்ந்து பாராட்டுகிறான்.

---

1. சிலப்பதிகாரம்— புகார்க்காண்டம்— இந்திரவிழவூரெடுத்த காதை.

அப்போது தந்தையைப் பார்த்துப் பாவை கேட்கிறாள்:

"அப்பா! காலையிலேயே உங்களிடம் கேட்கவேண்டும் என்று நினைத்தேன்; ஆனால் மறந்து போய்விட்டது. தாமக்கண்ணி, 'பொருநராற்றுப்படை' அரங்கேற்றத்தில்

'..................... ஒன்றிய
கேளிர்போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற்காண நண்ணுவழி இரீஇப்
பருகுவன்ன அருகா நோக்க மோடு
உருகுபவை போல்என்பு குளிர்கொளீஇ...' [2]

என்ற அடிகளைப் பாடும்போது, அவருடைய கண்கள் கலங்கி, குரல் உணர்ச்சிவசப்பட்டு உருகியதைக் கவனித்தேன் அப்பா! ஏன் அப்படி அவர் அந்த அடிகளைச் சொல்லும் போது உணர்ச்சிவசப்பட்டார்?" என்று கேட்டதும், தந்தை வியப்புடன் தன் மகளை உற்றுப் பார்க்கிறார்: "பாவை! எவ்வளவு நுட்பமாக நீ கவனித்திருக்கிறாய்? பாம்பறியும் பாம்பின் கால் என்பது சரிதான்!" என்று சிரிக்கிறார் அவர்.

---

2. பொருநராற்றுப்படை— (73-78)

பொருள் : '...முன்பே தன்னோடு நெருங்கிப் பழகியவனைப் போல் என்னுடன் உறவுகொள்ளுதலை விரும்பி, தான் உதவுவதற்கு வழியாகிய யாசகத்தையே யான் எப்போதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி, தன் கண்ணிலே காணுமளவுக்கு அருகிலே என்னை உட்கார வைத்து, கண்ணால் பருகுவது போன்ற நெருங்கிய பார்வையாலே, எலும்பை மெழுகுபோல உருகச் செய்யும்படியான குளிர்ந்த அன்பைக்காட்டி'... (கரிகாலன் பொருநர்க்கு நிறைந்த பொருள் (வழங்குவான்)— நச்சினார்க்கினியரின் உரையைத் தழுவியது.



"அதுமட்டுமில்லை, மாமா!... பாடல் முடிந்ததும், புலவரை உட்கார வைத்து, இரண்டு நாழிகை நேரம் பொற்காசுகளை அவர்மேல் கொட்டி, கனகாபிஷேகம் செய்து, அத்தனை பொற்காசுகளையும் பரிசாகக் கரிகாலர் வழங்கினாரே, அப்போது மன்னருடைய கண்கள் கசிந்து ஈரமாகியதையும் பார்த்து ஆச்சரியப்பட்டேன். தங்களைப் புகழும் பாடலைக் கேட்டுப் பெருமிதம் அடையும் அரசர்கள், துயரத்தால் கசிந்து கண்ணீர் விடுவது இல்லை. ஆகையால் கரிகாலரின் வருத்தம், எனக்கு வியப்பாயிருந்தது..." என்ற இளமருதன் மாமனாரின் முகத்தைப் பார்க்கிறான்.

மகளுக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட வியப்புக்கு எப்படிப் பதில் சொல்வது என்று யோசிப்பதுபோல், நெற்றியைத் தடவிக்கொள்கிறார் மாநாய்கர்:

"கரிகாலரின் கண்ணீருக்கும் புலவரின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கும் அவருடைய கால் முடமாகிப் போனதற்கும் பின்னணியிலே ஒரு சோகக் கதை இருக்கிறது. அது மன்னருடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கு மட்டும்தான் தெரியும். அதை, பிறகு வீட்டிலே சொல்கிறேன்..." என்று மேலே நடக்கிறார் அவர். கடந்த காலத்தின் நினைவுகள் அவர் உள்ளத்துள் ஆழ்ந்து, நடையைச் சிறிது தளர்த்துகின்றன.

அவர்கள் மருவூர்ப்பாக்கத்தை அடைந்தபோது, அங்கே மணியரங்கில்[3] பெரும் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது. மன்னர் கரிகாலன் முன்னிலையில், 'தலைக்கோல் அரிவை'ப் பட்டம்[4] பெற்ற அகுதையின் நடனம் அங்கே நடைபெறுகிறது.

---

3. அரசகுடும்பத்தினருக்காக இசை, நடனம், நாட முதலிய நிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கு. இங் அரசவைக் கலைஞர்கள் தங்கியிருப்பார்கள்.
4. தோல்வியுற்ற பகையரசனின் வெண்கொற்றக் குடையின் காம்பிலே, கணுக்கள் தோறும் நவரத்தினங்கள்

நடனக் கலையின் புகழ்பெற்ற பதினொரு ஆடல்களையும்[5] மிகச் சிறப்பாக ஆடுகிறாள் அருதை.

மாநாய்கர், மகளையும் மருமகனையும் அழைத்துக் கொண்டு, மணியரங்கின் முன் வரிசையில் போய் அமர்கிறார்.

அன்றைய நடன நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக 'கொடு கொட்டி' ஆடுகிறாள் அருதை. தன் உடலின் வலப்பகுதி சிவபெருமானாகவும் இடப்பகுதி பார்வதியாகவும் ஒப்பனை செய்துகொண்ட அருதை, திரிபுரம் எரித்த சிவனாக அபிநயித்து ஆடுகிறாள். வலது கால் தண்டை ஒலிக்க, வலக்கையில் பறை முழங்க, வலது கண் சிவக்க, செஞ்சடை பரந்து கலைய, ஆனால் அதே சமயம் இடது கால் சிலம்பு அசையாமல், தோளில் வளை ஆடாமல், மேகலை ஒலிக்காமல், இடது காதணி குலுங்காமல், பாதிக் கூந்தல் அவிழாமல் ஆடும் அற்புத நடனத்தைப் பார்த்து,[6] அவையில் உள்ளவர்கள் வியந்து ஆர்ப்பரித்துப் பாராட்டுகிறார்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும், பரிசளிக்கக் கரிகாலன் மேடை ஏறுகிறான். வீரமே உருவெடுத்து நடப்பது போல் கம்பீரமாக நடந்து போய் மேடையில் நிற்கும் மன்னனைப் பார்த்ததும், இளமருதனுக்கு, சில மாதங்களுக்கு

---

பதித்து, பொன்னால் பூண் பிடிக்கப்பட்ட 'தலைக் கோல்' என்னும் பரிசை, நாட்டின் மிகச் சிறந்த நடன மங்கைக்கு அரசன் வழங்கி, 'தலைக்கோலி' என்னும் பட்டமும் அளிப்பது மரபு— சிலப்பதிகாரம்: அரங்கேற்று காதை: (114— 120)

5. ஆடல்கள் பதினொன்றும் பற்றிய விவரங்களை சிலப்பதிகாரம்— கடலாடு காதை (38— 66)யில் காணலாம்.

6. சிலப்பதிகாரம் : நடுகற் காதை (67 — 75)



முன்னால், ரோம் அரண்மனையில் பார்த்த அகஸ்டஸ் பேரரசரின் நினைவு வருகிறது.

இருவருக்கும் நெடிய உடல்வாகு; எடுப்பான மூக்குடன் நீர்க்கமான பரந்த நெற்றி; திண் எனப் பூரித்து நிற்கும் முறுகிய தோள்கள்; முழங்காலைத் தொடுமளவுக்கு ராஜ அம்ஸமான நீண்ட வலுவான கரங்கள்; புடைத்துச் செறிந்த மார்பு; ஆனால் அகஸ்டஸ், கரிகாலரைவிட சிறிது சிவந்த நிறம்; தலைமுடியும் அதிகமாகச் சுருண்டு புரளும். இருவருக்கும் கூரிய பிரகாசமான ஒளிபடைத்த கண்கள் தான் என்றாலும், அகஸ்டஸின் சிவந்த கண்களில் கொடூரமும் கண்டிப்பும் குழுறி நிற்கும்; ஆனால் கரிகாலரின் விழிகளில் ஓர் அபூர்வமான மென்மையும் நளினமும் கலந்த— கலையுணர்வு கமழும் கவர்ச்சியான பார்வையோடு ஒளிர்வதை இளமருதன் கவனிக்கிறான்.

கவிதையை ரசித்து, கலையை அனுபவித்து உள்ளம் கலங்குகின்ற ஒரு நெகிழ்வை, அகஸ்டஸிடம் அவனால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியவில்லை. ரோம் நாட்டு வீரத்துக்கே உரிய கொடுமையும் நிர்த்தாட்சண்யமும் அகஸ்டஸ் விழிகளில் நடனமாடும்; அவர் விழிகளை நேரடியாகச் சந்திப்பவர்கள், நெஞ்சம் கலங்கி அஞ்சி நடுங்குவார்கள். ஆனால் கரிகாலரின் கருவிழிகள் காண்பவர் யாரையும் ஆகர்ஷிக்கும் சக்திவாய்ந்தவை என்பதை நுட்பமாக உணர்கிறான் இளமருதன்.

கரிகாலன் அடுக்கடுக்காகப் பெற்றுவரும் வெற்றிகளைப் பற்றி அகஸ்டஸ் கேள்விப்பட்டிருந்தான். வெண்ணிப் போரிலே சேரபாண்டியரையும், பதினொரு வேளிரையும், வாகைப்போரிலே ஒன்பது குறுநில மன்னர்களையும் வென்றதோடு, ஒளிநாகர், பொதுவர், குறும்பர், அருவாளர், வடுகர் முதலியவர்களையும் தோற்கடித்து, வச்சிரநாடு, மகதநாடு அவந்திநாடு ஆகிய நாட்டு மன்னர்களைப் பணியவைத்து, மேலும் வடநாட்டு அரசர்களைத் தோற்கடித்து இமயத்தில் புலிக்கொடியைப் பொறித்ததும்,

இலங்கையின் மேல் கப்பற்படையுடன் படையெடுத்துச் சென்று இலங்கை வேந்தனை வென்று, பன்னிரண்டாயிரம் கைதிகளைப் பிடித்துவந்ததும், அகஸ்டஸுக்குத் தெரிந்த போது, ஆச்சரியப்பட்டார்.

"பாண்டிய நாட்டுத் தூதுக் குழுவில் சென்ற எங்களிடம் அகஸ்டஸ் பேசிக்கொண்டிருக்கும்போது 'கரிகால் சோழர், வடநாடு, இலங்கையோடு நிற்காமல், இன்னும் வேறு வெளிநாடுகளின்மேல் படையெடுத்துச் சென்று இன்னொரு அலெக்ஸாண்டராக உலகப் புகழ் பெற நினைப்பாரோ' என்று கேட்டார், மாமா!" என்று ரோமிலிருந்து திரும்பியதும் மாமனாரிடம் தெரிவித்தான் இளமருதன்.

மாநாய்கர் "கரிகாலர் நினைத்தால், அலெக்ஸாண்டரை விட, பெரிய வீரனாக திக்விஜயம் செய்யலாம். ஆனால் அவர் இன்னொரு அலெக்ஸாண்டராக விரும்பவில்லை; மக்களுக்கு நல்லாட்சி வழங்கும் இன்னொரு அசோகராகத் தான் வாழ விரும்புகிறார்..." என்று சொல்லி மெதுவாகச் சிரித்தது அவனுக்கு இன்னும் நினைவிருக்கிறது.

அவருடைய அர்த்தபுஷ்டியான சிரிப்பு, இளமருதனின் உள்ளத்தில் ஆழமாகப் பாய்ந்திருந்தது. 'கரிகாலருடைய திட்டங்களுக்கு அஸ்திவாரமாக ஏதோ லட்சியம் மறைந் திருக்க வேண்டும்' என்று யூகித்துக் கொண்டான் அந்த வணிகன்...

நடனம் ஆடிய 'தலைக்கோலி' அகுதையைப் பாராட்டிப் பேசிப் பரிசளித்துவிட்டு, கரிகால்வளவன் அரண்மனைக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

மேடையில் அவர் பேசியதைக் கேட்ட பொற் பாவைக்கு, பல சந்தேகங்கள் எழுந்தன. அவளுக்கு மட்டுமா?— பொதுமக்கள் எல்லோருக்கும்தான்!

"அப்பா!... அரசர், தன் மகளுக்கு நாட்டியப்பயிற்சி கொடுத்து வருவதாகப் பேசினாரே, ஒரு பேரரசின்



இளவரசிக்கு நாட்டியப் பயிற்சியும் அரங்கேற்றமும் அவசியம்தானா?" என்று தந்தையிடம் பரபரப்பாகக் கேட்கிறாள் அவள்.

"நாட்டியப் பயிற்சி மட்டுமல்ல, கவிதை இயற்றுவதற் கும் கூட அவளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது, பாவை! மன்னர் தன் மகளைக் கலையரசியாகவும் கவியரசியாகவும் ஆக்க விரும்புகிறார்... ஒரு மாமன்னர் தன் ஒரே மகளுக்கு நாட்டியம் கற்பித்து அரங்கேற்றமும் செய்கிறார் என்றால், அதிலே—" என்று மாநாய்கர் ஆரம்பித்ததும் "அதிலே ஒரு ரகசியக் கதை இருக்கும்; அப்படித்தானே?" என்று குறுக்கிட்டுச் சொல்லிச் சிரிக்கிறாள் மகள்.

"உண்மைதான், பாவை! இளவரசிக்கு நடனப்பயிற்சி அளிப்பதற்கும், அவளை ஒரு சிறந்த நடனமங்கையாக்கி அரங்கேற்றம் நடத்துவதற்கும், ஒரு காரணம் இருக்கிறது— அதாவது ஒரு கதை இருக்கிறது!" என்று சொல்லி அவரும் சிரிக்கிறார்.

"இளவரசிக்கு நடனப்பயிற்சி அளிப்பது சரி, ஆனால் அவளுடைய அரங்கேற்றத்தை இங்கே வைக்காமல், எங்கோ சேர நாட்டில், கொடுங்கோளூர் என்ற ஊரிலே வைக்கக் காரணம் என்ன?— அதற்கும் பின்னணியிலே ஒரு கதை— மன்னரோடு நெருங்கிப் பழகுபவர்களுக்கு மட்டுமே தெரிந்த கதை ஒன்று— இருக்கிறதோ?" என்று மேலும் சிரிக்கிறாள் மகள்.

"ஆம்... நீ சிரித்தாலும் சிரிக்காவிட்டாலும், உண்மை என்னவோ, அதுதான்; பாவை! அது மட்டுமல்ல— கொடுங்கோளூரில் நடைபெறப் போகிற அரங்கேற்றத்தில் இன்னொரு ஆச்சரியமான அறிவிப்பு செய்யப்போகிறார் மன்னர். அதைக் கேட்டுத் தமிழகமே திகைத்து வியக்கப் போகிறது. அதற்கும்கூட, ஒரு கதை இருக்கிறது, மகளே!"

"என்ன அப்பா, கரிகாலரின் பின்னணியிலே எத்தனை கதைகள்தான் இருக்கின்றன?"

''நிறையக் கதைகள் இருக்கின்றன. எல்லாமே சுவையான கதைகள்தான்; மொத்தத்தில் கரிகாலருடைய வரலாறே ஒரு சுவையான காப்பியம்தான்; இராமனுக்கு வால்மீகி போல, பாரதத்துக்கு வியாசர் போல, இந்தக் காப்பியத்துக்கு ஒரு கவிஞன் இனி பிறப்பான்...'' என்று குரல் தழதழக்க உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார் தந்தை.

''அப்பா! இன்று இரவு வீட்டுக்குப் போனதும், எல்லாக் கதையையும் விளக்கமாகச் சொல்லவேண்டும், அப்பா!'' என்று ஆர்வம் பொங்க, தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறாள் பாவை.

''சரியம்மா!... நிச்சயம் சொல்கிறேன்...'' என்று மகள் முதுகில் செல்லமாகத் தட்டிக்கொடுக்கிறார் மாநாய்கர்.

பிறகு மூவரும் மருவூர்ப்பாக்கத்தின் கடற்கரை ஓரமாக நடந்து செல்கிறார்கள்.

துறைமுகத்தின் நடுநாயகமாக நின்று ஒளிவீசிக் கொண்டிருக்கும் கலங்கரை விளக்கமும், வரிசையாக நிற்கும் வணிகக்கப்பல்களில் ஏற்றியுள்ள விளக்குகளும், பரதவர் மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரங்களில் கட்டி வைத்துள்ள விளக்குகளும், கடற்தேவதை கார்த்திகை விழா கொண்டாடுவதுபோல் வரிசையாக ஒளிவீசிக் கொண்டிருக்கும் அழகிய காட்சி, கண்கவரும் படியாய் இருக்கிறது.

துறைமுகத்தை ஒட்டி யவன, சோனக, காழக,[7] சீனநாட்டு வணிகர்கள் கட்டியிருந்த அழகான புதுமையான செல்வ மாளிகைகளைத் தாண்டி, சுங்கவரி செலுத்தி புலி இலச்சினை போடுவதற்காக, பண்டசாலையின் முன்னால் குவிக்கப்பட்டிருந்த ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களின் மூட்டைகளில் ஏறி விளையாடும் நாய்களை

---

7. சோனகம்— அரேபியநாடுகள். காழகம்— பர்மா.



யும் ஆட்டுக்கிடாய்களையும் வேடிக்கை பார்த்தபடி, காவிரி கடலோடு கலக்குமிடத்தில் இருந்த சூரியகுண்டம், சோமகுண்டம் என்னும் பொய்கைகளையும் அவற்றின் கரையிலிருந்த காமவேள் கோட்டத்தையும் பார்த்துவிட்டு, வீடு திரும்புகிறார்கள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் பொற்பாவை, அவசர அவசரமாக, சாப்பாட்டு அறையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, தந்தையையும் கணவனையும் சாப்பிட அழைக்கிறாள்.

''பாவை! நீயும் உட்கார். நேரமாகிவிட்டது... பேசிக்கொண்டே சாப்பிடலாம்...'' என்று இளமருதன் அவளை வற்புறுத்தி உட்கார வைக்கிறான்.

சமையற்காரப் பெண் பரிமாற, மூவரும் சாப்பிடத் தொடங்குகிறார்கள்.

''அப்பா!... அப்பா!... அரசரைப் பற்றிய கதைகள் சொல்கிறேன் என்றீர்களே, இப்போது சொல்லுங்கப்பா!...'' என்று சிறு குழந்தை போல கொஞ்சலாகக் குழைகிறாள் மகள்.

அதைக் கேட்டதும், மாநாய்கருக்கு, சட்டென்று பழைய நினைவுகள் மனத்திரையில் மின்னலிடுகின்றன...

இருபது ஆண்டுகளுக்கு முன்பு— தாயைச் சிறுவயதிலே பறிகொடுத்துவிட்டு, செல்ல மகளாய் வளர்ந்த பாவை, இப்படித்தான் அப்பா பால்சோறு ஊட்ட வரும்போது ''அப்பா!... அப்பா!... ஒரு கதை சொல்லு... கதை சொன்னால்தான் சோறு சாப்பிடுவேன்...'' என்று தினசரி அடம்பிடித்துச் சிணுங்கும் நினைவு வர, மாநாய்கர் மனதிற்குள் சிரித்துக்கொள்கிறார்— அவர் மகள், இன்னும் அவருக்கு மகள் தானே?...

''சொல்கிறேனம்மா!... கதை கேட்கிற சுவையிலே சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ளக் கூடாது...'' என்று நிபந்தனை விதிக்கிறார் தந்தை.

"இல்லை அப்பா!... கதை கேட்கிற சுவாரஸ்யத்திலே அதிக நேரம் உட்கார்ந்திருந்து நிறையத்தான் சாப்பிடுவேன்..." என்று சிரித்துக் கொண்டே, கதை கேட்க நிமிர்ந்து உட்கார்கிறாள் பொற்பாவை.

இளமருதனும், மாமனார் சொல்லப் போவதைக் கேட்க, ஆவலுடன் பக்கத்தில் நெருங்கி அமர்கிறான்...

தமிழகத்தின் வரலாற்றில் ஒரு கலங்கரை விளக்கமாக நின்று ஒளி வீசப் போகும் ஒரு மாமன்னனின் தனிப்பட்ட வாழ்க்கைக் கதையல்லவா அது?......

தமிழ்நாட்டிலே ஒரு பொற்காலத்தை உருவாக்கிய ஓர் இலட்சியப் பேரரசனின் வரலாற்றிலே இடம் பெறாத—

வீரம், வெற்றி, படையெடுப்பு, ஆட்சியமைப்பு, திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றின் சூரிய ஒளியிலே அகல்விளக்காய்ப் போய்விட்ட—

மகிழ்ச்சியும் சோகமும், காதலும் பிரிவும், இனிமையும் ஏக்கமும், உறவும் துறவும், கனவுகளும் நனவுகளும், கற்பனைகளும் நடைமுறைகளும் நிறைந்த அந்தத் தனிமனிதனின் வாழ்க்கையில் பதிவாகியிருந்த நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் அல்லவா அவை?...

மாநாய்கர், மகளையும் மருமகனையும் பார்த்தபடி, சொல்லத் தொடங்குகிறார்:

## 3

கடந்த இருபது நாட்களாகவே, புகார் நகர மக்களின் முகத்தில் வழக்கமான மலர்ச்சியும் மகிழ்ச்சியும் மறைந்து போய்விட்டன.



புகார் நகரம் மட்டுமா, சோழநாடு முழுமையுமே ஒரு சோக மேகம் கவிந்ததுபோல் இருந்தது.

மன்னன் இளஞ்சேட்சென்னி திடீரென்று காய்ச்சலாகப் படுத்தவன் நாளாக ஆக, நச்சுக்காய்ச்சலாக முற்றி மரணப்படுக்கையில் விழுந்துவிட்டான். அரண்மனை மருத்துவரும் இன்னும் பல திறமை வாய்ந்த வெளியூர் மருத்துவர்களும், எமனின் பாசக்கயிற்றிலிருந்து மன்னனைக் காப்பாற்றுவதற்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் வழக்கமான ஆரவாரமோ பரபரப்போ இல்லை. நகரின் ஒவ்வொரு குடிமகனும், தன் குடும்பத்தலைவன் சாகக்கிடப்பதுபோல், கவலையுடன் நடமாடுவதைப் பார்த்த வெளிநாட்டு வணிகர்களும் பயணிகளும் ஆச்சரியப்பட்டார்கள். ஒரு மன்னனின் நோயைப்பற்றி ஏன் இந்த மக்கள் இப்படிக் கவலைப்படுகிறார்கள் என்பதே அவர்களுக்குப் புரியவில்லை! அவர்களுடைய நாடுகளிலெல்லாம், அரசன் என்பவன் குடிமக்களை அடக்கி ஆள்கிற தலைவனாக, குடிமக்களை எதுவும் செய்யக்கூடிய அதிகாரம் படைத்த சர்வாதிகாரியாக மட்டுமே, அவர்களுக்குத் தெரியும். ஆனால் குடிமக்களையெல்லாம் தன் குழந்தைகளாகப் பாவிக்கிற ஒரு தந்தையாக, அரசனை அவர்கள் பார்த்ததில்லையே!

குடிமக்களுக்கு, மன்னன் என்பவன் உயிர் போன்றவன். 'மக்களுக்கு நெல்லும் நீரும் உயிர்காப்பதில்லை; மன்னன் தான் உயிர்' [1] என்றல்லவா தமிழ்ப்புலவன் பாடினான்? அதுதானே முடியாட்சியின் உயர்ந்த இலக்கணம்?

இளஞ்சேட்சென்னி மற்ற அரசர்களைவிட, மக்களிடையே மிக நெருங்கிப் பழகியவன். சில சமயங்

---

1. 'நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்...'
—புறநானூறு— (186)— மோசிகீரனார் பாடியது.

களில் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுக் கரை புரண்டோடி, கரையிலிருக்கும் வீடுகளை அழித்துவிடும் போது, அவனே நேரடியாகத் தேரில் வந்து, மக்களுக்குத் தங்க இடமும் உணவும் கொடுத்து உதவிசெய்து ஆறுதல் கூறுவான்.

அழகான பல தேர்கள் வைத்திருந்த அவன், தினமும் ஒரு தேரில் மக்களிடையே வந்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பான். புதுமை எழிலும் கலை நுட்பமும் நிறைந்த பல தேர்களில் வந்து காட்சியளித்த அவனுக்கு 'உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி' என்ற பெயரே ஏற்பட்டுவிட்டது. இராஜவீதியில் அவன் கம்பீரமாகத் தேரில் அமர்ந்து செல்லும் அழகுக் காட்சியைக் காணும் சிறுவர்களும், தங்கள் வீட்டு முன்னால் சிறுதேர் உருட்டி விளையாடுவார்கள்.

முற்றத்திலே காயப்போட்டிருந்த தானியங்களைக் கொத்தித் தின்ன வருகின்ற கோழிகளை விரட்டுவதற்காக, உள்ளே வேலையாயிருக்கிற பெண்கள் தங்கள் காதணிகளைக் கழற்றி வீசுவார்கள் என்றும் அப்படி வீசிய பொன் காதணிகள், சிறுவர்களின் தேரோட்டத்துக்குத் தடையாகக் கிடக்கும் என்றும் ஒரு புலவன் [2] பாடியிருந்தான்!

இளஞ்சேட்சென்னியிடம் மக்கள் இவ்வளவு பற்றும் பாசமும் கொண்டிருந்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அவனுக்குப் பெண் கொடுக்க, சேரரும் பாண்டியரும் வடுகரும் அருவாளரும் மற்ற மன்னர்களும் காத்துக்கிடக்க, அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, அழுந்தூரில் ஒரு வேளாளக் குடும்பத்தில் பிறந்த நல்லினியைத் திருமணம் செய்துகொண்டு, பட்டத்தரசியாக்கியிருந்தான்.

2. கடியலூர் உருத்திரங்கண்ணன்— பட்டினப்பாலை; (20— 25)



'ஆட்சி நடத்தும் அரசனின் செங்கோலுக்கும், போர் செய்யும் வீரனின் வாளுக்கும், வணிகரின் தராசுக்கும், சக்தி தருவது உழவனின் ஏர்க்குச்சியே' என்பதை உணர்த்துவது போல், சென்னி ஒரு உழவர் குடிப்பெண்ணைத் தன் 'சக்தி' யாக்கிக் கொண்டான்!

சென்னி, இளமைப்பருவத்தில் 'இரும்பிடர்த்தலை' யாரின் [3] தந்தை சுகந்தரிடம் வில், வாள் பயிற்சி, குதிரை, யானையேற்றம் முதலியவற்றில் பயிற்சி பெற்றான். பயிற்சிக் காலத்தில் திருத்தாமனோடு ஏற்பட்ட நட்பு, நண்பனின் தங்கை நல்லினியோடு தொடர்பு ஏற்பட வழி வகுத்துக் கொடுக்க, தொடர்பு காதலாகப் பரிணமித்துத் திருமணத்தில் முடிந்தது.

தங்கள் அன்புக்குரிய மன்னன் சாகக் கிடக்கிறான் என்று மக்கள் துடிப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது.

அந்த மன்னன் இறந்துவிட்டால் அவனுடைய உயர்ந்த பண்புகள் வழிவழியாக மக்களுக்குக் கிடைப்பதற்கு வழியில்லை. சென்னிக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் குழந்தை பிறக்கவில்லை.

3. இவருடைய இயற்பெயர் வேறு; புலமையும் வீரமும் நிறைந்த இவர் ஒரு பாடலில் புறநானூறு— (3)— '...பெருங்கையானை இரும்பிடர்த்தலையிருந்து...'] யானையின் பிடரியை 'இரும்பிடர்தலை' என்று அருமையாகக் குறிப்பிட்ட சிறப்புக்காக, இவரை 'இரும்பிடர்த் தலையார்' என்றே அழைத்ததால், இவருடைய சொந்தப் பெயர் காலக்கிரமத்தில் மறைந்துபோய் விட்டது!

இவர் நம் கதையில் முக்கிய இடம் பெற்றிருப்பதால், நாம் இவருக்கு 'திருத்தாமன்' என்று இயற்பெயர் சூட்டி அழைப்போம்.

சென்னி மரணப்படுக்கையில் விழுந்துவிட்டான் என்று தெரிந்ததுமே பிடவூரில் இருங்கோவும் அவனுக்கு நண்பர்களான சில வேளிர்களும் அரச பதவிக்கு உரிமை கொண்டாடக் கிளம்பிவிட்டார்கள். 'அவர்களில் யாருமே, மன்னனாவதற்குத் தகுதியற்றவர்கள்; யாவரும் சுயநல, அதிகார வெறியர்கள்' என்பது மக்களுக்குத் தெரியும். அந்த பதவி வெறியர்களின் கையில் நாடு சிக்கிவிடுமே என்று குடிமக்கள் கவலையால் நைந்து கொண்டிருந்தார்கள்.

முன்பு உறையூரிலிருந்து ஆண்ட சேட்சென்னியின் மகன் இருங்கோ, தன்னைத்தானே வருங்காலச் சோழ மன்னனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு திரிந்தான். ஆனால் சேட்சென்னி உயிரோடிருக்கும் போதே, தன் மகனுடைய தீய குணங்களையும் கெட்ட சகவாசத்தையும் கண்டு, அவன் தன் வாரிசாக முடிசூடக் கூடாது என்றும் தனக்குப் பிறகு தம்பி இளஞ்சேட்சென்னியே பேரரசனாக வேண்டும் என்றும் பகிரங்கமாக அறிவித்துவிட்டான்.

அவன் இறந்ததும், உறையூர் அரண்மனையை ஆக்கிரமித்துக் கொண்ட இருங்கோவை, இளஞ்சேட்சென்னி தோற்கடித்து விரட்டிவிட்டு, தன் படைத்தலைவன் ஒருவனை அங்கே இருக்க வைத்துத் திரும்பினான். அந்தப் புல்லுருவி இப்போது மீண்டும் தலைதூக்கி உரிமை கொண்டாட இன்னும் சில காளான்களைத் தன் பக்கத்தில் சேர்த்துக் கொண்டு பகிரங்கமாக வெளிவந்து, சிறுசிறு கலகங்களை விளைவித்துக்கொண்டிருந்தான்.

நாட்டிலிருந்த பரபரப்பான சூழ்நிலையைப் பற்றி விவாதிப்பதற்கும் எதிர்காலத் திட்டம் பற்றி ஆலோசிப்பதற்கும், அரண்மனையில் ஐம்பெருங்குழு[4] கூட்டப்பட்டது.

---

4. அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் (ஒற்றர்) என்னும் ஐவர் அடங்கிய ஆலோசனைக்குழு.



அமைச்சர் உதயதேவரும் தளபதி திதியனும் புரோகிதர் கௌதமனாரும் தூதுவர் தலைவர் காலநாபரும் ஒற்றர் தலைவர் உருத்திரனும் கூடியிருந்த கூட்டத்தில் அரசரின் மைத்துனன் திருத்தாமனும் அரச மருத்துவர் நாகனாரும் கலந்து கொண்டார்கள்.

அரண்மனையின் நாளோலக்கத்தில்[5] ரகசியமாக இந்தக் கூட்டம் நடைபெற்றது. உள்ளே வேறு யாருமே அனுமதிக்கப்படாமல் மூடிய கதவுகளுக்குள்ளே கூடியிருந்தார்கள். வாயிலுக்கு வெளியே படைக்காவலர்கள் சுற்றிலும் நின்றுகொண்டிருந்தார்கள்.

கூட்டத்தின் தொடக்கத்தில் பேசினார் அமைச்சர்:

''அவையோர்களே! நாம் எத்தகைய நெருக்கடி நிலையில் இங்கே கூடியிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். நம் மன்னரின் உடல்நிலை நாளுக்கு நாள் கவலைக்கிடமாகி வருவதோடு, நாட்டின் பாதுகாப்பு நிலையும் கவலைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே நாம் விரைந்து செயலாற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்...''

''ஆம்... உறையூர்ப் பகுதியில் கலகங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன என்று அங்கிருக்கும் படைத்தலைவரிடமிருந்து செய்தி வந்துள்ளது...'' என்று தெரிவித்தார் காலநாபர்.

''இனம் இனத்தோடு சேரும் என்பதுபோல், பழைய மன்னர் சேட்சென்னியின் மகனான இருங்கோவோடு, தீயவர்களான சில குறுநிலத் தலைவர்கள் கூட்டுச் சேர்ந்து கொண்டு, பொன்னி நாட்டின் வளத்தைப் பங்குபோட்டுக் கொள்ளையடிக்க நினைக்கிறார்கள். அரசர் காலமானதும் ஆங்காங்கே உள்நாட்டுக் கலகங்களை ஏற்படுத்திக் குழப்பமான நிலையை உண்டாக்கி, எப்படியாவது— பிற

---

5. அரசவை, பகல் நேரத்தில் கூடும் மண்டபம்.

நாட்டு அரசர்கள் துணையோடாவது— சிம்மாசனத்தைப் பிடித்துவிட வேண்டும் என்பது இருங்கோவின் திட்டம்... இருங்கோ இளைஞன்தான்; ஆனால் அவனுக்குப் பின்னாலே பல முதிய மூளைகள் திட்டமிட்டுத் தூண்டி விடுகின்றன...'' என்று விளக்கினான் உருத்திரன்.

''நம் ஆலோசனைகளும் திட்டங்களும் அமைய வேண்டியது, குறுகியகால அளவிலா, நீண்ட கால அளவிலா என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதற்கு அடிப்படையாக மருத்துவர் நாகனாரின் கருத்தைக் கேட்பது முக்கியம் என்று கருதுகிறேன்...'' என்று குறுக்கிட்டான் தளபதி திதியன்.

திதியன் குறிப்பாக எதைச் சொல்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட அவையினர், நாகனாரின் பக்கம் திரும்பினார்கள்.

மருத்துவர் எழுந்து நின்று, சிறிது யோசித்தபிறகு, தொண்டையைக் கனைத்துக்கொண்டு, தயக்கத்தை வென்றுவிட்டு பேசத் தொடங்கினார்:

''அவையோரே! ஐம்பெருங்குழு ஆலோசிக்கிற திட்டங்கள், எந்தச் சூழ்நிலையையும் மனதிற்கொண்டு அமைகின்ற நீண்டகாலத் திட்டமாகவே இருக்கவேண்டும். மன்னர் எப்போது குணமடைவார் என்றோ, எப்படியும் குணமடைந்துவிடுவார் என்றோ, உறுதியாகச் சொல்ல முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம். நானும் திறமை வாய்ந்த பல மருத்துவர்களும் கூடிப்பேசி மருத்துவ முறைகளைக் கையாண்டு கொண்டுதான் வருகிறோம்; ஆனால் மருந்து கொடுப்பதுதான் நாங்கள்; குணப்படுத்து வது கடவுள் அல்லவா?... எல்லாவற்றையும் கடவுள் கையில் ஒப்படைத்துவிட்டு, நாம் திட்டமிடுவதுதான் நல்லது. திடீரென்று துக்கக் காரியமே நடந்துவிட்டது போல் நினைத்துச் செயல்பட்டால்தான், நாம் எந்தவித எதிர்பாராத சிக்கலுக்கும் ஆளாகாமல், முன்னெச்சரிக்கை



யாக இருப்பவர்களாவோம்...'' என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே அவருடைய உறுதியான கண்களும் கலங்கி நீர் கசிந்தன. அவருடைய ஆழமான பொருளுள்ள பேச்சும் உணர்ச்சிக் கசிவும் அவையோருக்குப் புரிந்தன.

''அரசரின் உடல்நலக் குறைவினால் உள் நாட்டுக் கலகங்கள் மட்டுமல்ல— சேரமன்னர், தன்னுடைய நீண்ட காலத் திட்டத்திற்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சென்னி காலத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத பழியை, அவர் இறந்துவிட்டால் உடனே தீர்த்துக்கொள்ள முயற்சிசெய்வார் என்று தோன்று கிறது,'' என்று சூசகமாகத் தெரிவித்தார் காலநாபர்.

சேரமன்னன் பெருஞ்சேரலாதன், சோழ மன்னனைக் கொன்று பழி தீர்க்கத் துடிக்கும் காரணம் எல்லோருக்கும் தெரியும். (அந்தக் காரணம், வாசகர்களுக்குப் பின்பு தெரியவரும்.)

''ஒருவேளை, சேர மன்னருடைய படையெடுப்பு தொடங்கிவிட்டால் மன்னர் இல்லாத நிலையில் நாம் எப்படித் தாக்குப்பிடிக்க முடியும் என்று புரியவில்லை. எல்லாச் சூழ்நிலைகளையும் பார்க்கும்போது, மன்னர் குணமாகி எழுந்திருப்பதுதான் ஒரே தீர்வு என்று தோன்றுகிறது...'' என்று முடித்தார் அமைச்சர்!

மன்னர் சாவுக்குப் பிறகு என்ன செய்வது என்று ஆலோசிக்கத் தொடங்கிய அவர், மன்னர் சாகக்கூடாது என்ற முடிவுக்கு வருமளவுக்குக் குழம்பிப் போயிருந்தார்!

அவர்மட்டுமா, கிட்டத்தட்ட எல்லோருடைய நிலைமையும் அதுதான்!

''அவையோரே! ஒரு நாட்டிலே அரசர் மாளலாம்; ஆனால் அரசாட்சி மாளக் கூடாது. ஆகவே, மன்னர் இறந்து விட்டார் என்றே வைத்துக்கொண்டு, அடுத்து அரசாட்சி பற்றி ஆலோசிப்பதுதான் அறிவுடைமை யாகும்,'' என்று குரல் தழதழக்க, அதே சமயம் உறுதி

மாறாமல் சொன்னான் திருத்தாமன். அவர் உள்ளத்தில் பொங்கும் சோகக் குமுறலை அந்த வீரர் எத்தகைய நிரத்துடன் அடக்கிக் கொண்டு பேசுகிறார் என்பதை மற்றவர்கள் புரிந்து கொண்டனர்.

சென்னி இறந்து விட்டான் என்றால், மற்றவர் களுக்கு, மன்னன் இறந்து விட்டான் என்ற அளவில் மட்டும்தான் துக்கம்; (அவர்களுக்கு, இன்னொரு மன்னன் வந்துவிடலாம்.) ஆனால் திருத்தாமனுக்கு, மைத்துனனும் அல்லவா இறந்து விடுகிறான்? 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'[6] என்பதால், தன் ஒரே தங்கையின் விதவைக் கோலத்தைப் பார்த்துத் துடிக்க வேண்டிய துர்ப்பாக்கியமும் அல்லவா அவனுக்கு ஏற்படப் போகிறது?

மன்னன் மாள்வதால், தங்கை விதவையாவது மட்டுமல்ல— ஆட்சிக்கு வாரிசு இல்லாமல் போவது மட்டுமல்ல— இன்னொரு மானாத அவமானமும் மன்னனுக்கும் அரசிக்கும் ஏற்படப் போவது, திருத்தாம னுக்கும் இன்னும் சில பேருக்கும் தான் தெரியும். பாண்டிய மன்னன் நம்பி நெடுஞ்செழியனிடம் இளஞ்சேட்சென்னி போட்டிருந்த சபதம் நிறைவேறாமல் போய், அதனால் சென்னியின் ஆத்மாவே சாந்தியடையாமல் போய்விடுமே என்று கவலைப்பட்டான் மைத்துனன்.

இளஞ்சேட்சென்னிக்குத் தன் தங்கை சீர்த்தியை மணமுடித்து வைக்க வேண்டும் என்று நம்பி நெடுஞ்செழியன் பெருமுயற்சி செய்தான். சென்னி, நல்லினியைத் திருமணம் செய்து கொண்ட பிறகும், தன் முயற்சியை விட்டுவிடவில்லை அவன். ஒருநாள் புகாருக்கு இந்திரவிழா பார்க்க வந்திருந்த போது, குறிப்பாகத் தன் விருப்பத்தைச் சென்னியிடம் கூறினான்:

---

6. சிலப்பதிகாரம்— வழக்குரை காதை (80)



''ஓர் அரசன், தனக்குப் பிறகு ஒரு வீரமகனை நாட்டுக்குத் தருவது, அவனுடைய முக்கியமான கடமை. நன்செய் நிலத்தில்தான் கரும்பு விளையும்; கடலில்தான் முத்து பிறக்கும். அதே போல், ஒரு அரசகுலப் பெண்ணுக்குத்தான் ஒரு வீர அரசன் பிறப்பான். அதற்காகத்தான், அரசர்கள் ஆசைக்காக யார் யாரையோ மணந்தாலும், வாரிசுக்காக ஒரு இளவரசியை மணந்து கொள்வதை மரபாகக் கொண்டிருந்தார்கள்...''

''நம்பி! மற்ற அரசர்கள், திருமணம் என்பதை அரச விவகாரமாகக் கருதியிருக்கலாம்; ஆனால் நான் அதை இதயவிவகாரமாகக் கருதுகிறேன். என் இதயத்தில் நல்லினி ஒருத்திக்குத்தான் இடம் உண்டு; என் சிம்மாசனத்தில் நல்லினிதேவி ஒருத்திக்குத்தான் இடம் உண்டு... இந்த விஷயத்தில் அரச மரபுகளை நான் பின்பற்றப் போவ தில்லை... அறுபதினாயிரம் மனைவிகளைக் கொண்டிருந்த தசரத மன்னரின் மகனான இராமன், சீதையைத் தவிர வேறொருத்தியைச் சிந்தையாலும் தொடாத ஏகபத்தினி விரதனாக வாழவில்லையா?''

''இராமன் ஏகபத்தினி விரதன்தான்; ஆனால் அவனுடைய பத்தினி மிதிலை ராஜ்யத்தின் இளவரசி யல்லவா? அவளுக்குத்தான், தந்தையையே வெல்லக்கூடிய வீர மகன் பிறந்தான், இல்லையா?'' என்று மடக்கினான் பாண்டியன்.

''என் மனைவிக்கும், என்னை வெல்லக்கூடிய அளவுக்கு வீரமுள்ள மகன் பிறப்பான், பாருங்கள்!''

''அது வீண் நம்பிக்கை. சேற்றிலே செந்தாமரை விளையலாம்; ஆனால் சேற்றிலே விளைவதெல்லாம் செந்தாமரையாகி விடுமா?... நீங்கள் நல்லினியைக் கைவிட வேண்டாம். அவளோடு, என் தங்கையையும் மணந்து பட்டத்தரசியாக்கிக் கொண்டால்—'' என்றதும் சீறி யெழுந்தான் சென்னி:

''இல்லை; ஒருக்காலும் இல்லை. நம்பி! இதை ஒரு சவாலாகவே சொல்கிறேன்— நல்லினிக்குப் பிறக்கும் என் மகன், என்னை வெல்லக்கூடியவனாக மட்டுமல்ல, உங்களையும் வெல்லக்கூடிய வீரனாகப் பிறப்பான், பாருங்கள்!...'' என்று உணர்ச்சி கொப்பளிக்க முழங்கினான் சோழன்.

அதைக் கேட்டு, பாண்டியன் கேலியாகச் சிரித்தான்:

''சென்னி! இது வறட்டுக் கற்பனை; பகல் கனவு... ஓர் உழவப்பெண்ணின் மகன், ஒரு நாட்டு மன்னனை வென்றதாக இதுவரை யாரும் கதைகூட எழுதவில்லை...'' என்று அவன் எகத்தாளமாகப் பேசியதும், சென்னியின் ரத்தம் கொதித்துக் குமுறியது.

''நம்பி! நீங்கள் எதைப் பகல் கனவு என்று சிரிக்கிறீர்களோ, அதை நனவாக்கிக் காட்டுகிறேன், பாருங்கள்! என் வீரமகன், உங்களை மட்டுமல்ல— உங்களைப் போன்ற ஏழு மன்னர்களைத் தோற்கடித்து 'ஏழு முடிமாலை'[7] அணியச் செய்கிறேன், பாருங்கள்!'' என்று சபதம் செய்து வஞ்சினம் மொழிந்ததைக் கேட்டு, நம்பியே நிலை தடுமாறிப் போனான்.

தன் கணவன் இப்படிச் சபதம் செய்திருப்பதைக் கேட்டதும், நல்லினிதேவிக்கு மெய்சிலிர்த்துவிட்டது.

அவனுடைய வஞ்சினத்தைத் தன்னுடைய வஞ்சினமாகவே எடுத்துக் கொண்டுவிட்டாள் அந்தக் கற்பரசி... தான் பட்டத்தரசியாக அருகதையில்லாதவள் என்றும்

---

7. ஏழு பகையரசர்களை வென்று அவர்களுடைய கிரீடங்களின் பொன்னால், பொன்மாலையும் கழலும் செய்து அணிந்துகொள்வது, ஒரு மன்னனுக்குப் பெரும் வீரச் சிறப்பு.

— 'பதிற்றுப்பத்து'— *14, 40, 45*
— சிலப்பதிகாரம்— *28 : 169*



ஆசைநாயகியாக இருக்கவே தகுந்தவள் என்றும் கருதும் பாண்டியனை, தன் மகனை விட்டுத் தோற்கடித்து அவமானப்படுத்த வேண்டும் என்று அவள் ஆத்திரத்தில் துடித்தாள். தான் ஒரு வீரமகனைப் பெற்று, தமையனிடம் படைப் பயிற்சி பெற வைத்து, பாண்டியனை மட்டும் அல்ல, தமிழ் வேந்தர்களெல்லோரையும் தோற்கடித்து, 'வீரம் என்பது அரசகுலத்துக்கு மட்டும் சொந்தமல்ல; வேளாளக் குலத்திலும் வீரம் விளையும்' என்று உலகத்திற்கு நிரூபித்துக்காட்டி, கணவனின் சபதத்தையும் நிறைவேற்றி வைக்கவேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

இந்தச் சபதம் நிறைவேறாமலே போய்விடக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறதே என்று உள்ளம் நொந்து வேதனைப்பட்டான் திருத்தாமன்.

ஐம்பெருங்குழுவில், மேற்கொண்டு என்ன நடவடிக்கையில் இறங்கலாம் என்று எல்லோரும் மனதிற்குள்ளாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, வாயிற்கதவைத் திறந்துகொண்டு காவலன் ஒருவன் உள்ளே நுழைந்தான்.

''வாழ்க மன்னர்! வாழிய பல்லாண்டு!... அந்தப்புரத்திலிருந்து ஒரு தோழிப்பெண் திருத்தாமனாரை அவசரமாகப் பார்த்துப் பேசவேண்டுமாம். வெளியே நிற்கிறாள்,'' என்று வணங்கிப் பணிவோடு தெரிவித்தான்.

''இதோ வருகிறேன்...'' என்று பரபரப்பாக எழுந்து வெளியே வந்தான் திருத்தாமன்.

அங்கே, நல்லினிதேவியின் தோழி பூங்கொடி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன பூங்கொடி! என்ன செய்தி?'' என்று படபடத்தான் அவன்.

''அரசியார் உங்களிடம் ஒரு முக்கியமான தகவல் தெரிவிக்கச் சொன்னார்கள்'' என்ற தோழி, அவன்

காதில் மட்டும் கேட்கும்படியாக, மெல்லிய குரலில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் "அப்படியா?" என்று திகைத்தவன், "உண்மையாகவா?" என்று மறுபடியும் கேட்டான்.

"ஆம்... உண்மைதான்..." என்று மறுபடியும் உறுதிப்படுத்தினாள் பூங்கொடி.

## 4

உறையூரிலிருந்து பிடவூருக்குச் செல்லும் அந்தக் குறுக்குப் பாதையில் மூன்று குதிரைகளில் மூன்று இளைஞர்கள் பேசிக்கொண்டே சென்றார்கள்.

மூவரும் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே மெதுவாகச் செல்வது, அவர்கள் யாரோ இன்னும் ஒருவரை எதிர்பார்ப்பதுபோல இருந்தது. குதிரைகள் குறைந்த வேகத்தில் பிடரியைத் திருப்பித் திருப்பி அசைந்து கொண்டே நடந்து கொண்டிருந்தன.

எடுப்பான தளதளக்கும் உடற்கட்டுடனும் செல்வ மினுமினுப்புடனும் விளங்கும் அவர்கள், ஏதோ செல்வ பரம்பரையைச் சேர்ந்தவர்கள்போல் தோன்றியது. சோழ மன்னருக்குக் கீழே அடங்கியுள்ள குறுநிலத்தலைவர்கள் தான் அவர்கள். ஒரு முக்கிய வேலையாக, பிடவூரிலிருக்கும் மாந்தரனைச் சந்தித்துப் பேசப் போய்க்கொண்டிருந்தார்கள்.

சோழ மன்னர் இளஞ்சேட்சென்னி சாகக்கிடக்கும் அந்தச் சமயத்தில், குறுநிலத் தலைவர்களுக்கு இருந்த



'முக்கிய வேலை' எது?... அந்த வேலையை வெளிப்படையாகச் செய்யவோ பேசவோ முடியாததால்தான் அவர்கள் நேர்வழியில் பிடவூருக்குச் செல்லாமல், அந்தக் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

இன்னும் சில குறுநிலத் தலைவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்ற இருங்கோவும் அந்துவனும் இன்னும் வரவில்லை. அவர்களை எதிர்பார்த்துத்தான், இந்த மூவரும் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"நந்தா!... சென்னி பிழைத்து எழுந்து விடுவான் என்று நினைக்கிறாயா?" என்று மெதுவாகக் கேட்டான் ஓர் இளைஞன்.

"சென்னி பிழைப்பதாவது, எழுவதாவது?... இப்போதே அவன் முகத்தில் சாவுக்களை வந்துவிட்டது என்று அங்கேயிருக்கிற நம் ஒற்றன் செய்தியனுப்பியிருக்கிறான். தனக்குப் பிறகு அரசாள ஒரு வாரிசு இல்லையே என்ற கவலை அவனை மேலும் கவலைக்குள்ளாக்கி நோயிலிருந்து எழ முடியாமல் செய்துவிட்டதாம்..." என்று சிரித்தான் நந்தன்.

"தனக்குக் கொள்ளி வைக்க மகன் இல்லையே என்று வருத்தப்பட்டால் அது நியாயம்; அரசாள வாரிசு இல்லையே என்று ஏன் வருத்தப்படுகிறான்?... பழைய மன்னர் சேட்சென்னியின் ஒரே மகன் இருங்கோதானே அரசுக்கு வாரிசு?" என்று இன்னொருவன் கேட்டான்.

"இருங்கோ இளமையிலே ஒழுங்காய் இருந்திருந்தால், அவன்தான் இப்போது அரசாளும் வாரிசு. ஆனால் அவன் தான் அந்த 'வாய்ப்பையே கெடுத்துக் கொண்டு விட்டானே? இளவரசன் என்ற அதிகாரம் ஏற்பட்டவுடனே சிறுவயதிலேயே ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டானே?"

''நெடுந்தத்தா! ஒரு பழமொழி கேள்விப்பட்டிருப்பாயே, அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை, குடியானவன் வீட்டு அம்மியை உடைக்குமாம்— அது மாதிரி சாதாரணக் குடிமக்களை மிகவும் கொடுமைப் படுத்த ஆரம்பித்துவிட்டான் இருங்கோ. இதைப் பார்த்த சேட்சென்னி, இப்படிப்பட்ட கொடிய குணமுள்ள மகன் அரியணை ஏறத் தகுதியுள்ளவன் இல்லை என்று முடிவு செய்துவிட்டார்...''

''அதற்காக, பெற்ற பிள்ளையையே 'நீ என் பிள்ளை இல்லை' என்று விரட்டியடித்து விடுவதா?''

''நீலா! சேட்சென்னி யார் தெரியாதா? மனுநீதிச் சோழன் பரம்பரை... கேவலம் ஒரு கன்றுக் குட்டியைக் கொன்று விட்டான் என்பதற்காக, தன் ஒரே மகனைத் தேர்க்காலில் ஏற்றிக்கொல்ல ஆணையிட்ட மன்னரின் பரம்பரையல்லவா? அதனால்தான், சேட்சென்னியும், தான் பெற்ற மகனையே துறந்துவிட்டார்...''

''அவர் தன் மகனைத் துறந்திருக்கலாம்; ஆனால் மகன், பதவியையும் உரிமையையும் ஏன் துறக்க வேண்டும்?'' என்று குமுறினான் நெடுந்தத்தன்.

''நம்மைப் பொறுத்தவரையில் இருங்கோ மன்னனாவதுதான் நல்லது. அவனுடைய பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாம் அதிக அதிகாரமும் சுதந்திரமும் அனுபவித்துக் கொள்ளலாம்.''

''ஆனால் புகாரில் திருத்தாமனும் மற்றவர்களும், இருங்கோவை மன்னன் ஆகவிடமாட்டார்கள் போலிருக்கிறதே?''

''எத்தனை நாள் இப்படித் தடுக்கமுடியும்?... மன்னன் இறந்து விட்டால், வேறு யாருமே வாரிசு கிடையாதே? இருங்கோதானே அரசனாக வேண்டும்?''

''அதிகாரத்திலும் பதவியிலும் இருந்தவர்கள், சுலபமாக, அந்த சுகத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.



திருத்தாமன் சிறந்த வீரன் மட்டமல்ல. நல்ல புத்திக் கூர்மையுள்ள அறிவாளி. மக்கள் இருங்கோவை விரும்பவில்லை என்று சொல்லி, அவனை அரியணை ஏறவிடாமல் தடுத்து விடுவான்...''

''இந்தக் காரணத்தை இல்லாமல் செய்வதற்கு மாந்தரன் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார், தெரியுமா?'' என்றான் நெடுந்தத்தன்.

''மாந்தரனும் சரியான தந்திரக்காரர் ஆயிற்றே? தன் பேரனுக்குக் கிடைக்க வேண்டிய அரியணையைச் சுலபத்தில் விட்டுவிடுவாரா?'' என்றான் நீலன்.

ஒருநாள், பிடவூர்க் காட்டுப் பக்கம் வேட்டையாட வந்த உறையூர்ச் சோழர் சேட்சென்னியை, தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்து வந்ததும், அவனுக்கு உணவு பரிமாறும் சாக்கில் தன் மகள் செள்ளையை அரசனுக்கு அறிமுகப்படுத்தியதும், ஒரு நீண்டகாலத் திட்டத்தை மனதிற்குள் வைத்துத்தான்.

மாந்தரனின் திட்டத்தில் முதல் கட்டம், எளிதான வெற்றியாக முடிந்தது. கானகத்து மலர்ந்த புதுமலர் போன்று அழகும் கவர்ச்சியும் திமிர்ந்து பொங்கிய செள்ளையின் உடல்வனப்பில் சேட்சென்னி மயங்கி விட்டான். அவளை மணந்து பட்டத்தரசியாக்கிக் கொண்டான்.

அப்பாவின் திட்டத்துக்கு இரண்டாவது வெற்றியாக, செள்ளை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆனால், அந்த பேரன்தான் தாத்தாவின் திட்டத்துக்குத் தடைக்கல்லாக அமைந்து விட்டான்.

சேட்சென்னிக்குப் பிறகு, தன் பேரன் இருங்கோ மன்னனாவான் என்று மாந்தரன் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் இருங்கோ, சிறு வயதிலேயே பல தீய பழக்கங்களில் ஈடுபட்டு, மன்னரின் கோபத்திற்கு மட்டுமல்ல, மக்களின் வெறுப்புக்

கும் ஆளாகி விட்டான். அவனுக்கு, மக்கள் மத்தியில் நல்ல பெயர் ஏற்படுத்தி வைக்க வேண்டிய பொறுப்பும் மாந்தரனுக்கு உண்டாகிவிட்டது.

''இருங்கோவைப் பற்றிப் புகழ்ந்து, அவன் சிறந்த வீரன், வள்ளல், கருணையாளன் என்றெல்லாம் பாராட்டிப் பாடுவதற்கு, சில புலவர்களைத் தயார் படுத்தியிருக்கிறார்,'' என்று தாத்தாவின் திட்டத்தை விவரித்தான் நெடுந்தத்தன்.

''உண்மையில்லாதவற்றைப் பாட மாட்டார்களே புலவர்கள்?'' என்று சந்தேகப்பட்டான் நீலன்.

''உண்மையான புலவர்கள்தானே பாட மாட்டார்கள்? போலிப் புலவர்களுக்குப் பணம் கொடுத்துப் பொய்யைப் பாடச் சொல்ல வேண்டியதுதானே?'' என்று சிரித்த தத்தன், ''அதுமட்டும் இல்லை... காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்கள் வீடு வாசல் இழந்து துன்பப் படும் போது, இருங்கோவை அங்கே அனுப்பி மக்களுக்குப் பணமும் உணவும் உடையும் கொடுத்து உதவச் சொல்லி, குடிமக்கள் துயரம் கண்டு துடிப்பது போல் நடிக்க வைக்கப் போகிறார்...'' என்று மேலும் கூறினான்.

''சரிதான்... காவிரி வெள்ளம் வந்து வீடு வாசல் போவதற்குள்ளே, அரசியல் வெள்ளத்திலே அரியணையே போய்விடும் போலிருக்கிறது!'' என்று கேலியாக நகைத்தான் நந்தன்.

பின்னால், சிறிது தூரத்தில் ஒரு குதிரை வேகமாக வரும் ஒலி, லேசாக ஆரம்பித்து, பெரிதாக வளர்ந்து, சமீபத்தில் கேட்டது.

மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். அப்படி வேகமாக வருபவன் இருங்கோவாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும்.



மூன்று பேரும், தம் குதிரைகளை அங்கேயே நிறுத்திக் கொண்டு, பாதை ஓரத்திலிருந்த ஒரு பெரிய மரத்தடியில் உட்கார்ந்தார்கள்.

வேகமாகப் பாய்ந்து வந்த இருங்கோவின் குதிரை, அவர்கள் முன்னால் வந்து நின்றது.

''அடடே! நீங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்களா?... உங்களைப் பிடித்துவிடலாம் என்று வேகமாக விரட்டிக்கொண்டே வந்தேன்...'' என்று மூச்சு இளைக்க, உடலில் கசிந்த வேர்வையுடன் குதிரையிலிருந்து குதித்தான் இருங்கோ.

அவனுக்குப் பதினெட்டு வயதிற்குள்ளாகத்தான் இருக்கும்; மீசை இன்னும் கருக்கவில்லை. ஆனால் வயதுக்கு மீறிய வளர்ச்சியாக உடல் திண்ணென்று வளர்ந்து செறிந்திருந்தது. முகத்தில் அங்கும் இங்குமாக முளைத்திருந்த பருக்களும் கரிய கண்களின் சுழற்சியும் கன்னங்களின் இளைப்பும் உதடுகளின் தடிப்பும், அவன் பிஞ்சிலே பழுத்திருந்தான் என்பதைப் பறைசாற்றின.

''வா இருங்கோ! நீ சென்ற காரியம் என்ன ஆயிற்று?'' என்று விசாரித்தான் நெடுந்தத்தன்.

''வல்லத்திலும் ஏணிச்சேரியிலும் இருக்கும் வேளிர் தலைவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். அவர்கள், தாத்தாவின் திட்டத்துக்கு ஆதரவும் உதவியும் அளிக்கத் தயாராயிருக்கிறார்கள்...''

''தாத்தாவின் திட்டம் என்ன என்று இன்னும் எனக்குச் சொல்லவில்லையே?'' என்று கேட்டான் நந்தன்.

''புகாரில் அரசர் இறந்ததும், உடனே எல்லா குறுநிலத் தலைவர்களும் சட்டென்று அரண்மனையை முற்றுகையிட்டுக்கொண்டு, அடுத்த அரசு வாரிசாக எனக்கு முடிசூட்ட ஏற்பாடு செய்ய வேண்டியது. நாம் எதிர்பார்ப்பதுபோல், திருத்தாமன், தளபதி, அமைச்சர்

முதலிய பதவி வெறியர்கள் நம்மை எதிர்த்து, என் தந்தை என்னைப்பற்றிச் சொல்லியதை நினைவுபடுத்தி, மக்களை நமக்கு எதிராகத் திருப்பி விடுவார்கள். நாம் உடனே வேறு கோணத்தில் பிரச்னையை அணுகுகிறோம். சேட்சென்னிக்குப் பிறகு இருங்கோ உறையூரில் அரசனாகக் கூடாது என்றுதான் அவர் சொல்லியிருந்தார். சென்னிக்குப் பிறகு, சோழ நாட்டுக்கு அரச வாரிசே இல்லாமல் போகும் போது, என்ன செய்வது? நாட்டுக்கு அரசன் இல்லாமல் முடியுமா? ஆகவே, இப்போதைய நிலைமையில் இருங்கோவைத் தவிர வேறு வாரிசு இல்லையே? இனிமேல் இருங்கோ நல்ல அரசனாக ஆட்சி நடத்தும்படி பார்த்துக் கொள்வது நமது பொறுப்பு என்று, குறுநிலத் தலைவர்கள் சாமர்த்தியமாகப் பேசி, மக்களை நம் பக்கம் திருப்பிவிட வேண்டும்...'' என்று விவரித்தான் இருங்கோ.

''நல்ல திட்டம்தான். மக்களுக்கு எப்படியும் ஒரு அரசன் வேண்டும். அதற்கு இருங்கோவைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?... இதில் ஒரு முக்கிய விஷயம் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; அரசர் இறந்ததும், திருத்தாமனுக்கு அவகாசம் கொடுத்துவிடக் கூடாது— அப்படி அவகாசம் கிடைத்துவிட்டால், அவன் ஏதாவது சூழ்ச்சி செய்து நம்மை ஒழித்துக் கட்டி விடுவான்!''

''அப்படி விட்டுவிடுவாரா, மாந்தரன்?... முள் தைக்கு முன்பே, முள்ளை வைத்து முள்ளை எடுத்து விடுவாரே!'' என்று சிரித்தான் நீலன்.

நால்வரும் குதிரைகளில் ஏறிப் புறப்பட்டு, பிடவூருக்குள் நுழைந்தார்கள்.

மாளிகை வாசலிலே நின்று, மாந்தரன் அவர்களை வரவேற்றார்.

''வாருங்கள்... எல்லோரும் வாருங்கள்... உட்காருங்கள்...'' என்று அந்தக் குறுநிலத் தலைவர்களை வரவேற்று



உபசரித்தார் அவர். அவர்களுக்குத் தாகம் தீர்க்கும் பானங்களையும் சிற்றுண்டிகளையும் கொண்டு வந்து, பணிவுடன் வைத்தார்கள் வேலையாட்கள்.

மாந்தரன் முன்னின்று அவர்களை உபசரித்ததைக் கண்டு, அவ்வேளிர்களின் உள்ளம் பெருமையால் நிறைந்தது.

மாந்தரனுக்கு அறுபது வயது தாண்டியிருந்தாலும், வலுவும் உடற்கட்டும் நெகிழாத நெடிய உருவம்; முகத்தில் பாதியளவு மறைத்துக் கொண்டிருக்கும் நரைத்த மீசை; ஆனால் ஆசை நரைக்காத கரிய ஆழ்ந்த கண்கள்; எடுப்பான மூக்கின் கீழே உறுதியைக் காட்டும் இறுகிய உதடுகள்; ஆண்மைக்குச் சான்றாக, பல போர்க்களங்களில் பெற்ற விழுப் புண்களின் அழகிய தழும்புகள்— மொத்தத்தில், யாருக்கும், பார்த்த உடனே பயம் கலந்த மரியாதையை ஏற்படுத்தும் கம்பீரமான தோற்றம் அவருக்கு இருந்தது.

''இருங்கோ! நீ சென்றிருந்த காரியம் என்ன ஆயிற்று?'' என்று பேரனிடம் கேட்டார் அவர்.

''தாத்தா! எல்லாம் வெற்றிதான். நீங்கள் சொன்ன திட்டத்துக்கு உதவ அவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அரசர் காலமானதும் உடனே அவர்கள் தங்கள் படையுடன் கிளம்பத் தயார். படை திரட்டப் போதுமான பணமும் அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்...'' என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போது, வெளியிலிருந்து ஒரு காவலன் உள்ளே நுழைந்தான்:

''ஐயா!... புகாரிலிருந்து சித்திரன் வந்திருக்கிறான்...''

''உள்ளே வரச் சொல்...'' என்று கட்டளையிட்டார் மாந்தரன்.

சித்திரன் என்ற குதிரைவீரன், உள்ளே நுழைந்து வணங்கினான்:

''ஐயா! ஒரு முக்கியமான செய்தி; தெரிந்ததும் குதிரையில் பறந்து வந்தேன்...''

''என்ன செய்தி?''

''அரசர் உடல்நிலை பற்றி ஐம்பெருங்குழு கூடி ரகசியமாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தபோது, அந்தப்புரத்திலிருந்து ஒரு தோழி வந்து, 'அரசி நல்வினிதேவி கர்ப்பமாயிருப்பதாக, திருத்தாமனிடம் சொன்னாள். அவர் அதை உறுதிப்படுத்திக்கொண்டு, ஐம்பெருங்குழுவிடம் தெரிவித்திருக்கிறார்.''

ஒற்றன் கூறியதைக் கேட்டதும், அங்கிருந்த எல்லோரும் திடுக்கிட்டு வாயடைத்துப் போய்விட்டார்கள்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மாந்தரன்தான் முதலில் மீண்டார்:

''சித்திரா! இந்தச் செய்தி மக்களுக்குத் தெரியுமா?''

''எல்லோருக்கும் தெரிவித்துவிட்டார்கள். மன்னருக்கு ஒரு வாரிசு இருக்கிறது என்ற செய்தியைக் கேட்டதும், புகார் நகர மக்களெல்லோரும் குதூகலமாயிருக்கிறார்கள்...''

மாந்தரன் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, மறுபடியும் நிமிர்ந்து உட்கார்ந்து பேசினார்.

''மக்களுக்குத் தெரிவிக்கப்பட்ட செய்தி, உண்மையாகவும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம். அது உண்மையாக இருந்தால், எதிரிகள் நம்மை நேரடியாகத் தாக்கத் தயாராயிருப்பார்கள். பொய்யாக இருந்தால், எதிரிகளும் வஞ்சகமாக நம்மை எதிர்க்கச் சூழ்ச்சி செய்கிறார்கள் என்று அர்த்தம்— அந்தச் சூழ்ச்சியின் முதல் கட்டம்தான் இந்தக் 'கர்ப்ப' செய்தி! இத்தனை நாள் இல்லாமல், திடீரென்று அரசர் சாகக்கிடக்கும் போது, இந்தச் செய்தியைப் பரப்புவதன் மூலம் எதிரிகள் நம்மை இன்னும் பத்துமாதத்திற்கு, அரியணையிலிருந்து



தள்ளிவைக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த இடைவெளிக்குள் அவர்கள், வேறு உபாயங்களைத் தேடி வைத்துக்கொண்டு நம்மை ஒழிக்க முயலுவார்கள். அவர்களைவிட நாம் இப்போது இன்னும் வேகமாக நம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். முதலில், சித்திரன் சொன்ன செய்தியை உண்மை என்றே வைத்துக்கொண்டு, நம் வருங்கால எதிரியை ஒழிக்க ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும்...'' என்று அழுத்தமாகச் சொன்னார் மாந்தரன். அவருடைய முகத்தில் தெளிந்த சிந்தனைக் கோடுகளை வைத்து, அவர் மனதிற்குள் அந்தத் திட்டம் உருவாகிக்கொண்டிருப்பதை மற்றவர்கள் யூகித்தார்கள்.

அந்தத் திட்டத்தைக் கேட்க, எல்லோரும் உன்னிப்பாக அவர் முகத்தை நோக்கித் திரும்பி உட்கார்ந்தார்கள்.

அப்போது வேகமாக உள்ளே நுழைந்த இன்னொரு குதிரை வீரன் சொன்ன செய்தி, மறுபடியும் அவர்கள் எல்லோரையும் திடுக்கிட வைத்துவிட்டது.

# 5

அந்தப்புரத்திலிருந்து வந்த பூங்கொடி சொன்ன செய்தி, திருத்தாமனை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தோழியிடம் மீண்டும் ஒருமுறை கேட்ட பிறகுதான் தன் காதுகளையே அவனால் நம்ப முடிந்தது.

சென்னிக்கு ஒரு வாரிசு தோன்றியிருக்கிறான் என்றால், திருத்தாமனையும் ஐம்பெருங்குழுவையும்— ஏன், நாட்டு மக்களையோ எதிர் நோக்கியிருக்கிற பிரச்னையில் பாதி தீர்ந்து விட்டதே! இருந்தாலும் மீதியுள்ள பிரச்னை

அவ்வளவு சுலபமானதல்ல என்பதுவும் அவனுக்கு விளங்கியது.

இப்போது அரசுரிமைக்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இருங்கோ, சென்னிக்கு ஒரு மகன் பிறக்கப் போகிறான் என்று தெரிந்ததும் சும்மாயிருந்து விடுவான் என்று திருத்தாமன் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எப்படியும் சென்னியின் வாரிசை, அந்தக் கொடிய பங்காளிகளிடமிருந்து காப்பாற்றி, அரசனாக முடிசூட்டி விடமுடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

அவனுடைய தங்கையின் மணிவயிற்றில் உதிக்கும் இளஞ்சிங்கம், வீரத்திலகமாக விளங்கி, அரியணையில் சிங்கமாக ஏறி அமர்ந்து, அவையிலே பகையரசர்கள் கொண்டு வரும் திறைப் பொருள்களையெல்லாம் ஏற்று வாங்கிக் கொண்டு, தன்னை நாடிவந்த தமிழ்ப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் வாரி வாரி வழங்குகின்ற காட்சியை, இப்போதே தன் மனக் கண்ணில் கற்பனைக் காட்சியாகக் கண்டு களித்தான்! கவிஞனல்லவா, அவன்? ஆகவே அவனுடைய கற்பனை வேகமாக விரிந்து வளர்ந்து மனத்திரையில் காட்சியாகப் பரிணமித்தது...

அந்த இனிய செய்தியைக் கேட்டதும், உடனே அவனுடைய கால்கள், தாமாக மன்னரின் படுக்கையறைக்கு அவனை இழுத்து வந்துவிட்டன. அங்கே நல்லினியும் அரசனும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, மன்னர் சிரித்து மலர்ந்து பேசும் காட்சி, திருத்தாமனுக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது.

''வாருங்கள், மைத்துனரே! கேட்டீர்களா, நீங்கள் மாமாவாகப் போகிறீர்கள்!... அதுமட்டுமல்ல, நீங்களும் சீக்கிரமே திருமணம் செய்து கொண்டு, ஒரு மகளைப் பெற்றெடுத்து என் மகனை மருமகனாக்கிக் கொள்ள வேண்டும்...'' என்று கலகலப்பாகச் சிரித்தான் சென்னி.



''அரசே! அதைவிட எனக்கு வேறு என்ன பேறு இருக்கிறது?'' என்று சிரித்த திருத்தாமன் 'அவனை என் மருமகனாக்கிக் கொள்வதை விட, இந்த நாட்டின் மன்னனாக்குவதுதான் என் இலட்சியம்' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

மன்னர் மகிழ்ச்சித் துடிப்பில் அதிகமாகப் பேசிச் சிரித்து அசைவதைப் பார்த்த மருத்துவர், மெதுவாகக் குறிக்கிட்டார்:

''அரசே! தாங்கள் இப்படி அதிகமாகப் பேசுவதும் உணர்ச்சிவசப்படுவதும் நல்லதல்ல. உங்கள் நோய்க்கு இது மேலும் கெடுதல் அளிக்கக் கூடியது...'' என்று தயங்கித் தயங்கி மெதுவான குரலில் வலியுறுத்தினார்.

''மருத்துவரே! நான் இனிமேல் சாகப் பயப்படவில்லை. எனக்கு ஒரு மகன் பிறக்கப்போகிறான் என்ற மகிழ்ச்சியோடு இனி நிம்மதியாகச் சாவேன்... நான் சாவதற்குள் நன்றாக மகிழ்ச்சியோடு பேசிச் சிரித்து மகிழ்ச்சியை அனுபவித்துவிட்டுப் போகிறேனே?''

''அரசே!...'' என்று மறுபடியும் ஏதோ சொல்ல வாயெடுத்தார் மருத்துவர்.

''மருத்துவரே! நான் இப்போது பேசாமல் அமைதியாக இருந்துவிட்டால், என்னைச் சாவிலிருந்து காப்பாற்றி விடுவோம் என்று உறுதியளிக்க முடியுமா உங்களால்? அப்படி உறுதியளித்தால், நான் அமைதியாக இருக்கிறேன்...'' என்றதும் மருத்துவர் அமைதியாகிவிட்டார்!

மருத்துவரின் அமைதியைப் பார்த்து நல்லினிதேவியும் திருத்தாமனும் திடுக்கிட்டுத் திகைத்தார்கள். ஆனால் சென்னியோ அதைப்பற்றிக் கவலையே படாமல் பேச ஆரம்பித்தார்.

சாகத் துணிந்தவனுக்கு, சமுத்திரம் முழங்கால் அளவு என்கிறார்களே, அது மாதிரி மன்னன் சாவை அலட்சியப் படுத்துகிறான் என்பது புரிந்தது.

''மைத்துனரே! நீங்கள் என் மகனுக்கு ஒரு பெண் பெற்றுக் கொடுப்பது மட்டும் முக்கியமல்ல; என் மகனை ஒரு வீரத்திருமகனாக நீங்கள் உருவாக்க வேண்டும்... சென்ற ஆண்டு கிரேக்கத்திலிருந்து வந்த வணிகக் குழுவின் தலைவர் எஸ்காலஸ் நம்மிடம் சொன்னது நினைவிருக்கிறதா? அவர்களுடைய மன்னர் பிலிப்புக்கு அலெக்ஸாண்டர் மகனாகப் பிறந்தவுடனே 'அரிஸ்டாட்டிலிடம் கல்வி கற்றுக்கொள்வதற்கு ஒரு மகன் எனக்குப் பிறந்திருக்கிறான்' என்று பெருமையுடன் சொன்னாராமே, அதுமாதிரி உங்களிடம் பயிற்சி பெறுவதற்கு ஒரு மகன் எனக்குப் பிறக்கப்போகிறான் என்பதை நினைத்து நான் இப்போது பெருமைப்படுகிறேன். எனக்கு உங்கள் தந்தை பயிற்சியளித்ததைப் போல், என் மகனுக்கு நீங்கள் பயிற்சியளித்து வீரனாக்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் நான் நிம்மதியாகச் சாகப் போகிறேன்...''

''நிச்சயம் செய்வேன், அரசே! அதைவிட வேறு எனக்கு என்ன வேலை?'' என்று உறுதியாகச் சொன்னான் மைத்துனன்.

''என் மகன் ஒரு சிறந்த வீரனாகத் திகழவேண்டும் என்று ஏன் ஆசைப்படுகிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? நான் நல்லினியைப் பட்டத்தரசியாக்கியதற்காக, பாண்டியன் என்னிடம் வந்து இழிவாகப் பேசியதும், நான் அவனிடம் சபதம் செய்திருப்பதும் உங்களுக்கு நினைவிருக்கும். அந்தச் சபதத்தை நிறைவேற்றி, பாண்டியன் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மன்னர்கள் எல்லோரையும் வென்று, எழுமுடிசூடி, இளஞ்சேட்சென்னியின் மகன் என்ற புகழை நிலைநிறுத்த வேண்டியது, என் மகனுடைய கடமை மட்டுமல்ல, உங்களுக்கும் அந்தக் கடமையில் பங்கு உண்டு... நான் செய்த சபதத்தை நிறைவேற்றி வைப்பீர்களா? சொல்லுங்கள்!'' என்று ஆவேசமாகப் பேசிய மன்னன் தன் கையை நீட்டினான்.



மன்னர் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட திருத்தாமன், மைத்துனனின் பலவீனமாகிவிட்ட கையில் தன் வலது கையை வைத்து மெதுவாக அழுத்தி ''மன்னர்பிரானே! இது சத்தியம்; உங்கள் சபதத்தை நிறைவேற்றி வைப்பேன்; உங்கள் மகன் கழுத்தில் எழுமுடி மாலை சூடச் செய்வேன். இது உறுதி...'' என்று உணர்ச்சி கொப்பளிக்க சத்தியம் செய்தான்.

இந்த வீரக்காட்சியைப் பார்த்த நல்லினிதேவியின் மெய்சிலிர்த்துப் பொங்க, விழிகள் ஈரமாகின. அவன் பக்கம் திரும்பினான் சென்னி.

''நல்லினி! மனத்தைத் திடப்படுத்திக்கொள். ஒரு மன்னனின் பட்டத்தரசி என்ற கோலத்தை உனக்கு நீண்ட நாட்களுக்குத் தர என்னால் முடியவில்லை; ஆனால் ஒரு மன்னனின் வீரத்தாய் என்ற பட்டத்தை உன் தமையன் உனக்கு நீண்ட நாள் நிலைக்க வைப்பார். 'ஈன்று புறந்தருதல்'[1] மட்டும் உன் கடமையில்லை; அது சாதாரணத் தாய்க்கு உரிய கடமை. நீ அப்படியல்ல; ஒரு வீரத்தாய். ஒரு வீரருக்கு மகளாக, ஒரு வீரனுக்குத் தங்கையாகப் பிறந்தாய்; ஒரு வீரனுக்கு மனைவியானாய்; இனி ஒரு வீரனுக்குத் தாயாகவும் வேண்டும்!''

அவனுடைய உணர்ச்சித் துடிப்பைப் பார்த்துத் திடுக்கிட்ட மருத்துவர், குறிப்பாக திருத்தாமனைப் பார்த்தார். உடனே அவன், மன்னர் அருகில் சென்று, ''அரசே! மிகவும் உணர்ச்சிவசப்படுகிறீர்கள். சிறிது அமைதியாக இருப்பது நல்லது,'' என்று மெதுவாக, அதே சமயம் அழுத்தமாகவும் கூறினான்— மைத்துனன் என்ற உரிமையும் உடையவனல்லவா அவன்?

''சிறிது அமைதி மட்டுமா, எனக்கு நீண்ட அமைதியே விரைவில் கிடைக்கப் போகிறது, மைத்துனரே! ஆனால்

---

1. புறநானூறு— (312)— பொன்முடியார்.

இதை மறந்துவிடாதீர்கள்— என் மகன் ஒரு சிறந்த வீரனாக வளர்ந்து, என் எதிரிகளை வென்று என் சபதத்தை நிறைவேற்றிய பிறகுதான், என் ஆத்மா சாந்தி அடையும்!... என்ன ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்கள்?... என் மகனை வீரனாக்க வேண்டும், வீரத்தைக் கற்றுக் கொடுங்கள், வெற்றி பெறச் செய்யுங்கள் என்று வீரத்தை மட்டுமே வலியுறுத்திக் கொண்டிருக் கிறேனே, ஒரு மன்னனுக்கு வீரம் மட்டும் போதுமா என்று நினைக்கிறீர்களா?... நீங்கள் நினைப்பது சரிதான். ஆனால் வீரமும் கல்வியும்தான் நல்ல பயிற்சியால் வரவேண்டியவை; வீரச்செயல் புரியவும் அறிஞனாய்த் திகழவும் பயிற்சி வேண்டும்; படிப்பு வேண்டும். ஆனால் மக்களிடத்தில் அவன் காட்ட வேண்டிய அன்பு, கருணை, இரக்கம், கொடை எல்லாம் அவனுக்கு இரத்தத்திலேயே வந்துவிடும். ஏனென்றால் அவன் என் மகன்; அவன் என் தசையின் தசை; உணர்வின் உணர்வு... என் ரத்தம் அவனை நல்லவனாக்கும்; ஆனால் உங்கள் பயிற்சிதான் அவனை வல்லவனாக்க வேண்டும்...''

''அரசே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் மகனை வல்லவனாகவும் நல்லவனாகவும் ஆக்குவது எங்கள் பொறுப்பு. நான் பெரு வீரர் ககந்தரின் மகன் என்பது உண்மையானால், உங்கள் மகனையும் சிறந்த வீரனாக்குவேன்; இது உறுதி!'' என்று எழுச்சி மிகுந்த குரலில் வஞ்சினம் கூறினான் திருத்தாமன்.

அதைக் கேட்டதும் மனம் நிம்மதியடைந்தவன்போல், சென்னி அமைதியாகிக் கண்களை மூடி ஓய்வெடுத்துக் கொண்டான். நல்லினிதேவி நீள்விழிகளில் நீர் பொங்க, மன்னனின் நெஞ்சை மெல்ல நீவிவிட்டபடி ''நீங்கள் சிறிது தூங்குங்கள்... அதிக நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டீர்கள்'' என்றாள்.

ஐம்பெருங்குழு, மண்டபத்தில் கூடியிருப்பது நினைவு வந்தது திருத்தாமனுக்கு. உடனே மன்னரிடம் விடை



பெற்றுக் கொண்டு, மண்டபத்திற்கு விரைந்து திரும்பி வந்தான் அவன்.

''மன்னர் இறக்கவில்லை; மன்னன் பிறக்கப் போகிறான்'' என்று தன்னை மறந்த உற்சாகத்தில் கூவிக் கொண்டே உள்ளே நுழைந்தான் அவன்

ஐம்பெருங்குழு உறுப்பினர்களுக்கு ஒன்றும் புரிய வில்லை. அந்தப்புரத்தில் திருத்தாமனின் மூளையைக் குழப்பக்கூடிய நிகழ்ச்சி ஏதும் நடந்திருக்குமோ என்று கூட, சிலர் சந்தேகிக்கும் அளவுக்கு, திருத்தாமன் குதித்துக் கொண்டே வந்தான்.

''அவையோர்களே! நம் நாட்டுக்கு அரசன் பிறக்கப் போகிறான்; அரசியார் இப்போது கர்ப்பமாக இருக்கிறார் கள். சென்னிக்குப் பிறகு நாட்டை ஆள வாரிசு தோன்றி விட்டான்!'' என்ற திருத்தாமன், நடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகத் தெரிவித்தான்.

வான்மழை கண்ட பயிர் போல, ஐம்பெருங்குழு உறுப்பினர்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள் 'அப்பாடா! இனிமேல் நாட்டிலே குழப்பம் இருக்கத் தேவையில்லை' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள் அவர்கள்.

உணர்ச்சிவசப்படாமல் எதையும் அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் அமைச்சர், சட்டென்று எழுந்தார்:

''திருத்தாமன் அவர்களே! உங்கள் தங்கைக்குப் பிறக்கப் போவது ஆண் குழந்தைதான் என்று என்ன நிச்சயம்? பெண் குழந்தையும் பிறக்கலாம், இல்லையா?'' என்ற அவருடைய கேள்வி, மற்றவர்களை விட, திருத்தாமனை அதிவேகமாகத் தாக்கி நிலைகுலைய வைத்தது.

நல்லினிதேவிக்குப் பிறக்கப் போவது ஆண்குழந்தை என்ற நினைப்பிலே எத்தனை கனவுகள், கற்பனைகள், சபதங்கள், சத்தியங்கள் நடந்து விட்டன?

திருத்தாமன் திகைத்துப் போய்விட்டான்.

''மன்னருக்கு ஆண் குழந்தை பிறக்கிறது என்று வைத்துக் கொண்டால்கூட, அந்த இளவரசரை சுலபமாக அரியணை ஏற எதிரிகள் விட்டு விடுவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்த நிலைமையில் இளவரசி பிறந்து விட்டால்— எதிரிகளைச் சமாளிப்பது நமக்குக் கடினமாகி விடுமே?'' என்று முணுமுணுத்தார் காலநாபர்.

சிறிது நேரம் அங்கே மயான அமைதி ஆட்சி நடத்தியது.

''மன்னருக்கு வாரிசு இல்லையே என்று நாம் திகைத்திருந்தபோது, அரசியார் கருவுற்றிருக்கும் நிலையை ஏற்படுத்திய கடவுள் அருள், இனியும் தொடர்ந்து நமக்குக் கிடைக்கும் என்று நம்புவதைத் தவிர வேறு வழியில்லை!... பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்ற பிரச்னையை விட, அரசியாரைப் பிள்ளை பெறும்வரை பத்திரமாகப் பாதுகாப்பதுதான் மிக அவசரமான பிரச்னை. அரசியார் கருவுற்றிருக்கும் செய்தி வெளியில் பரவியதும், எதிரிகள் அரசியாரின் உயிருக்கே ஆபத்து உண்டாக்க முயற்சி செய்வார்கள்,'' என்று தெரிவித்தான் உருத்திரன்.

''ஆம்...அரசர் காலமானதும், பகைவர்கள் திடீரென்று அரண்மனையை முற்றுகையிட்டுத் தாக்கத் திட்டம் போடலாம். திட்டத்தில் வெற்றியடைந்து உடனே அரியணை கிடைக்காவிட்டாலும், தங்கள் வருங்கால எதிரியை ஒழிப்போம் என்னும் நோக்கத்தில், திடீர்த் தாக்குதலை நடத்தி அரசியாரைக் கொல்ல முயல்வார்கள். போரிலே நாம் வெற்றி பெற்று விடலாம்; ஆனால் அந்தப் போரிலே நம் தரப்பில் உயிர் இழப்பவர்களில் ஒருவராக அரசியார் இருந்து விடக்கூடாது'' என்று எச்சரித்தான் தளபதி திதியன்.



''இப்பொழுதே அரசியாரை வேறு இடத்திற்கு அனுப்பிப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். ஆனால் யார் பொறுப்பில் அவரை ஒப்படைப்பது என்றுதான் யோசனையாயிருக்கிறது...'' என்று தயங்கினார் அமைச்சர்.

சட்டென்று திருத்தாமன் எழுந்தான்:

''நான் அரசியாரை அழைத்துக் கொண்டு போய், பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறேன்,'' என்று அவன் முன் வந்ததும், மற்றவர்களுக்கு மகிழ்ச்சியாகவும் தெம்பாகவும் இருந்தது.

''ஆனால் உங்களிடம் இருக்கும்போது அரசியார், பட்டத்தரசியாக வாழக்கூடாது. அதனால் எதிரிகளுக்கு அரசி இருக்கும் இடம் தெரிந்து விடும். அவர் உங்கள் தங்கையாகவே இருக்க வேண்டும். அதாவது சாதாரண குடிமக்களைப்போல் நீங்கள் வாழ வேண்டும். அரண்மனையின் வசதிகளையும் சுகங்களையும் விட்டு விட்டு, உங்களை வேறு இடத்துக்கு அனுப்புவதற்கு எங்களுக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது.'' என்று உள்ளம் நெகிழ்ந்து சொன்னார் அமைச்சர்.

''அமைச்சரே! பரவாயில்லை... இந்த அரண்மனையும் ஆடம்பரமும் பதவியும் எங்களுக்கு இடையில் வந்தவை தான்; எளிமையும் கிராம வாழ்க்கையும் எங்களுக்குப் பிறவியிலேயே பழக்கமானவை தாம். என்னைப் பொறுத்த வரையில், இந்த அரண்மனை ஆடம்பரத்தையும் அரசியல் பரபரப்பையும்விட, உழுது உழுவித்துண்ணும் வேளாள வாழ்க்கை, மிகவும் பிடித்தமானது. கிராமத்திலிருந்து வந்தவன், மறுபடி கிராமத்துக்குப் போவதிலே வருத்தப் படுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் திருத்தாமன்.

''நீங்கள் மறுபடி உங்கள் அழுந்தூருக்குப் போகக் கூடாது. ஏனென்றால் அரசியாரும் நீங்களும் இங்கே

இல்லை என்றதும், உங்கள் சொந்த ஊருக்குத்தான் எதிரிகள் வருவார்கள். ஆகையால் வேறு ஏதாவது ஊருக்கு— யாருமே கண்டு கொள்ள முடியாத ஊருக்குப் போய், நீங்கள் யார் என்றே தெரிந்துகொள்ள முடியாமல், சாதாரண மக்கள்போல வாழ வேண்டும்...''

''சரி, மற்றவர்கள் மட்டுமல்ல— நீங்களே கண்டு கொள்ள முடியாதபடி மறைந்து வாழ்கிறோம்...'' என்று சிரித்தான் திருத்தாமன்.

''அப்படியிருக்க நாங்கள் விட்டு விடுவோமா? உங்களுக்குத் தங்கை மேலும் மருமகன் மேலும் எவ்வளவு பாசம் இருக்கிறதோ, அதே மாதிரி எங்களுக்கும் அரசியார் மேலும் இளவரசர் மேலும் அக்கறை இருக்கும், இல்லையா? ஆகையால், நீங்கள் எங்கே இருந்தாலும், இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது மாறுவேடத்தில் புகார் வந்து, எங்களில் யாரைவது ஒருத்தரைப் பார்த்து விட்டுச் செல்ல வேண்டும்,'' என்று அன்புக்கட்டளை இட்டான் தளபதி திதியன்.

''சரி... நாங்கள் மறைந்து வாழ்வதற்கு, நாங்கூர் ஏற்ற இடம் என்று நினைக்கிறேன். ஏனென்றால்—'' என்று திருத்தாமன் காரணம் சொல்ல ஆரம்பிக்கும்போது, படீரென்று மண்டபத்தின் நெடுங்கதவுகள் வழக்கத்திற்கு மாறாக, பெருத்த சப்தத்துடன் அவசரமாகத் திறக்கப் பட்டன.

திறந்த கதவுக்கு வெளியே, காவலன் ஒருவன் வேக மாக ஓடி வந்து நின்று கொண்டிருந்தான்.

# 6

ஐம்பெருங்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்த மண்டபத்தின் கதவுகளை அவசரமாகத் திறந்து கொண்டு உள்ளே ஓடி வந்த காவலன், தான் சொல்ல வந்த செய்தியைக் கூற முடியாமல், மூச்சு இறைக்க நின்று கொண்டிருந்தான்.

அவனுடைய கண்களில் பொங்கிய கண்ணீரையும் உடல் படபடப்பையும் கவனித்த குழுவினர், செய்தியைப் புரிந்து கொண்டது போல் திடுக்கிட்டு எழுந்து நின்றார்கள்.

''அரசருக்கு உடல்நிலை—?'' என்ற கேள்வியை அமைச்சர் குறிப்பாகக் கேட்டார்.

''அரசர் பெருமான்...'' என்று ஆரம்பித்த காவலன், மேலே பேச முடியாமல் ஓவென்று கதறியழுது தேம்பினான்.

இந்த அவலச் செய்தி, எப்போதும் எதிர்பார்த்தது தான்; என்றாலும் அந்த எதிர்பார்த்த செய்தி வரும் போதும், சோகத்தை அடக்கிக் கொள்ளவோ, தாங்கிக் கொள்ளவோ முடியவில்லை.

எல்லோரும் அரண்மனை அந்தப்புரத்துக்கு வேக மாகச் சென்றார்கள்.

அரண்மனையில் எங்கும் அழுகை ஒலி; முகங்களி லெல்லாம் சோகச் சுவடுகள்; கண்களிலெல்லாம் கண்ணீர் வெள்ளம்...

அண்ணனைப் பார்த்த அரசி நல்லினி கதறியழுதாள். தங்கையின் அவல நிலையைக் கண்ட திருத்தாமன் உருகி நிலை குலைந்து போனான். அவனுடைய கண்ணீரைத் துடைத்துத் தேற்றவும் முடியாதவனாய், அவனே கதறி

யழத் தொடங்கி விட்டான். இருவருமே கையை இழந்த
வர்கள்தான்; யார், யார் கண்ணீரைத் துடைப்பது?...

செனனியும் நல்லினியும் வாழ்ந்த மனமொத்த இல்லற
வாழ்க்கை, மைத்துனனின் மனத்திரையில் ஓவியக்காட்சி
களாகத் தோன்றி மறைந்தன.

கணவன் இறந்தது, 'தன்னுயிர் கொண்டு அவனுயிர்
தேடுபவள்போல்'[1] அவளும் இறக்கக் கூடியவள்தான்;
ஆனால் அவள் அப்படி உயிர் விட முடியாதபடி ஓர்
கடமைப் பிணைப்பில் சிக்கிக் கொண்டிருக்கிறாளே?
மறைந்த மன்னனின் உயிர்த் துடிப்பையும் மக்களின் வருங்
காலத் தலைவனையும் அவள் வயிற்றில் சுமந்து கொண்
டிருக்கிறாளே? அது மட்டுமா?— கணவன் போட்டுள்ள
சபதத்தையும் அவள் தன் மகன் மூலம் நிறைவேற்றி
வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இருக்கிறதே?

மன்னர் இறந்த செய்தி கேட்டதும், மக்கள் வெள்ள
மாக அரண்மனை நோக்கி வந்து கூடிவிட்டார்கள்.

குடிமக்களின் தந்தைபோல் வாழ்ந்த மன்னர் இறந்து
விட்டாரே என்ற அளவில்லாத துயரத்தை, அவனுடைய
பண்புகளுக்கு ஒரு வாரிசு தோன்றியிருக்கிறது என்ற
எண்ணம் சிறிது குறைத்து, ஆறுதலளித்தது.

நாள்தோறும் அழகிய குதிரைகள் பூட்டிய வண்ண
வண்ணத் தேர்களில் வந்து தங்களைச் சந்தித்துப் பேசிப்
பழகிய மன்னனை, மக்கள் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட
தேரில் வைத்து, மயானத்தை நோக்கி இறுதி ஊர்வலமாக
இழுத்துச் சென்றார்கள்.

---

1. சிலப்பதிகாரம்— காட்சிக் காதை— 85 நெடுஞ்செழி
யன் இறந்ததும் உயிர் நீத்த கோப்பெருந்தேவி
போல், கணவனைத் தொடர்ந்து உடனே உயிர்
துறக்கும் கற்பு, 'மூதானந்தம்' என்னும் முதல் வகைக்
கற்பு எனப்படும்.



நாளொரு விழாவும் பொழுதொரு கொண்டாட்டமு
மாக மகிழ்ச்சி பொங்கும் புகார் நகரம், அன்று ஒளியே
இல்லாத இருள் வெள்ளத்தில் ஆழ்ந்ததுபோல், சோகக்
காட்சிகளால் நிறைந்து அவல ஓவியமாகக் காட்சி
யளித்தது.

வளைகாப்பு நடக்குமுன்பே, அரசியார் வளையையும்
மலரையும் திலகத்தையும் இழந்து விதவைக் கோலம்
பூண்ட காட்சி, மக்கள் உள்ளத்தை வாளாக அறுத்தது.
அரசியைப் பார்க்கச் சென்ற பெரியவர்களும் முதியவர்
களும் 'தாயே! சூரியனைப் போன்ற புகழ் பெற்ற மகனைப்
பெற்று, இந்த நாட்டைக் காப்பாற்றுக' என்று வாழ்த்தி
னார்கள்.

பிடவூரில் கூடியிருந்த வேளிர்கள், இரண்டாவதாகப்
புகாரிலிருந்து வந்த ஒற்றன் கூறிய செய்தியைக் கேட்டுத்
திகைத்து விட்டார்கள். அவர்கள் ஓரளவு தங்கள் எதிர்
காலத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போதே,
திடீரென்று அரசன் இறந்த செய்தி அவர்களைத்
திடுக்கிடச் செய்துவிட்டது.

"சரி... நம்மிடமுள்ள மிகச் சிறந்த ஒற்றன் ஒருவனை
உடனே புகாருக்கு அனுப்பி, அரசியை எப்படியாவது
கொன்று விடவேண்டும். இது எளிதான காரியமில்லை;
என்றாலும், அது கடினமான காரியம் என்பதற்காக
விட்டுவிடவும் கூடாது. எப்படியும் அந்த எதிர்கால
மன்னன், இந்த உலகத்திற்கு உயிரோடு வந்துவிடக்
கூடாது..." என்று உறுமினார் மாந்தரன்.

"ஒருவர் மட்டும் போதாது; அரண்மனைக்குள்
எத்தனைபேர் ரகசியமாக மாறுவேடத்தில் நுழைய
முடியுமோ, அத்தனை பேரும் நுழைந்து, பலமுனைத்
திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும். அரசிக்கு
அண்மையில் செல்லக்கூடிய வேலைக்காரர்களில் நாம்
இடம் பிடிக்கவேண்டும்; அல்லது அந்த வேலைக்காரர்

களில் ஒரு சிலரை நம் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும்'' என்று யோசனை கூறினான் நெடுந்தத்தன்.

சித்திரன் தலைமையில் முதலில் மூன்று ஒற்றர்களை ஆயத்தம் செய்து, அவர்களைப் புகாருக்கு அனுப்பி வைத்தார் மாந்தரன்.

அவர்கள் புகார் நகருக்கு வந்ததும் கேள்விப்பட்ட செய்தி, அவர்களுடைய திட்டத்துக்கே வேலையில்லாமல் செய்துவிட்டது.

மன்னர் இறந்தவுடனே, ஐம்பெருங்குழுவின் முடிவை நல்லினி தேவியிடம் தெரிவித்தான் திருத்தாமன்.

அரண்மனை வாழ்வை விட்டுச் செல்ல அரசி தயங்க வில்லை. ஆனால் கேவலம் உயிர் தப்பிப்பதற்காக, எதிரிகளுக்குப் பயந்து அரண்மனையை விட்டு ஓடுவதா என்று தயங்கினாள், அந்த வீரமன்னனின் தேவி.

''நல்லினி! எங்களுடைய யோசனை, எதிரிகளுக்குப் பயந்ததனால் தீர்மானிக்கப்பட்டதல்ல. எதிரிகளுடன் போராடி, ஒருவேளை அந்தப் போரிலே உயிர் துறக்க நேரிட்டால், அப்படி உயிர் துறக்க நமக்கு உரிமை உண்டு தான்; ஆனால் உன் வயிற்றிலிருக்கும் வருங்கால மன்னரின் உயிரைப் போக்குவதற்கு நமக்கு ஏது உரிமை? நோய் கண்டு இறப்பவர்களை— அவர்கள் குழந்தைகளாயிருந்தாலும்— வீர மரணமடைந்ததற்கு அடையாளமாக வாளால் வெட்டி அடக்கம் செய்வது நம்முடைய மரபு.[2]

2. இயற்கை மரணம் எய்தியவர்களையும், வீர சொர்க்கம் அடையச் செய்வதற்காக, அவர்களை வாளால் அறுத்து அடக்கம் செய்வது சங்க காலப் பழக்கம். இது 'வாள் போழ்ந்தடக்கல்' எனப்படும்.

'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளின் தப்பார்...'
— சேரமான் கணைக்கால் இரும்பொறை:
புறநானூறு : 74

'வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர்...'
— ஔவையார் : புறநானூறு : 93



அந்தச் சடங்குகூட இல்லாமல் சோழமன்னரை நாம் கொன்று விடலாமா?... மேலும், அந்த மன்னன் நமக்கு மட்டும் உரிமையான சொத்து அல்ல; சோழ நாட்டு மக்களின் பொதுச் சொத்து. அவர்களுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும்.'' என்று உள்ளம் உருகப் பேசி, தங்கையின் மனத்தை மாற்றினான் திருத்தாமன்.

அரண்மனை அந்தப்புரம், நந்தவனம், இலவந்திகை வெள்ளி மாடம்[3] முதலியவற்றில் சென்னியுடன் தான் பழகிப் பேசிச் சிரித்து விளையாடி வாழ்ந்த இனிய நினைவுகளை நெஞ்சில் பதித்து தாங்கிக்கொண்டு, நல்லினிதேவி புறப்படத் தயாரானாள்.

ஒருநாள் நள்ளிரவு ரகசியமாக ஒரு பல்லக்கில் புகார் நகர எல்லையைத் தாண்டி, மாறுவேடத்தில் நல்லினியும் திருத்தாமனும் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து பல்லக்கைத் திருப்பி அனுப்பிவிட்டு, விடிந்ததும் சாதாரணக் குடிமக்களைப்போல் பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஆங்காங்கே மாட்டு வண்டிகளை வாடகை பேசி ஒவ்வொரு ஊராகக் கடந்து நாங்கூர் வந்து சேர்ந்தார்கள்.

பட்டத்தரசியையோ, திருத்தாமனையோ முன்பே பார்த்திருந்தவர்கள் யாரும் அந்த ஊரில் இல்லை. ஆகவே அங்கேயே ஒரு வாடகை வீட்டில் தங்கியிருக்க ஏற்பாடு களைச் செய்து முடித்தான் திருத்தாமன்.

சில நாட்கள் கழிந்ததும், வீட்டின் முன்புறத்தில் ஒரு போரவை[4] தொடங்கினான் அவன்.

3. நீராடும் பொய்கையும் சோலையும் உள்ள வசந்தகால விடுதி; மற்ற காலங்களில், அரச விருந்தினர்கள் தங்கும் இடமாக இது பயன்படும்.

4. இளைஞர்களுக்குப் படைக்கலப் பயிற்சி, குதிரை யானையேற்றம், தேரோட்டுதல், போர்முறைகள், வியூக அமைப்புக்கள் பற்றிய பயிற்சிகள் அளிக்கும்

புகாரின் சோழர் படையில் தான் ஏற்கனவே பணியாற்றியவன் என்று, தன்னை ஊராருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான். தலைநகரில் நிலவிய பரபரப்பான அரசியல் சூழ்நிலையும் படைகளின் நடமாட்டமும் போர் அபாயமும், தன் விதவைத் தங்கைக்குப் பிடிக்கவில்லையாதலால், அமைதியான அந்தக் கிராமத்துக்கு வந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டான்.

படைப்பயிற்சி அளிப்பது அவனுக்குக் 'குலவித்தை' அல்லவா? அவனிடம் பல இளைஞர்கள் வந்து பயிற்சி பெறத் தொடங்கினார்கள்.

அதிகாலையில் மாணவர்களுக்கு வாள் சுழற்றுதல், ஈட்டி எறிதல், அம்பு எய்தல், கேடயத்தைப் பயன்படுத்துதல், மற்போர், குத்துச் சண்டை முதலியவற்றிலும், மாலை நேரத்தில் யானையேற்றம், குதிரைச் சவாரி, தேரோட்டம் முதலியவற்றிலும் பயிற்சியளிப்பான் திருத்தாமன்.

வீட்டு வேலைகள் முடிந்ததும், நல்லினிதேவி, குடிசையின் வேதிகை[5]யில் உட்கார்ந்து, இளைஞர்களின் வீர விளையாட்டை ரசித்தபடி பொழுது போக்குவாள்.

சில நாட்களுக்குப் பிறகு, நல்லினி வீட்டு வேலை செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் செய்துவிட்டாள் அடுத்த விட்டுப்பெண் திலகை.

பொற்கொடி போன்ற உடல்வனப்பும் பருவ வாளிப்பும் பூரித்துப் பொங்கிய அந்த மங்கை, அடிக்கடி நல்லினியின் விட்டுக்கு வந்து, அவளுக்கு வீட்டு வேலை

---

நிலையம். 'போரவை' என வழங்கப்பட்டது. இந்நாளைய *Military Academy* போன்ற அமைப்பு இது.

5. வேதிகை— வீட்டின் முன்புறத்திலுள்ள திண்ணை (சிலப்பதிகாரம்— இந்திரவிழவூரெடுத்த காதை:148).



களில் ஒத்தாசை செய்வாள். பிறகு இருவரும் வேதிகையில் உட்கார்ந்தவாறு, இளைஞர்களின் படைப்பயிற்சியை வேடிக்கை பார்த்தபடியே பேசிக்கொண்டிருப்பார்கள்.

நல்லினிக்குப் பேறு காலம் நெருங்க நெருங்க, திலகை அவளை ஒரு தாயின் கரிசனத்தோடு கவனித்துக் கொண்டாள். 'மெல்ல... மெல்ல... இப்படியெல்லாம் அதிர்ந்து நடக்கக் கூடாது'... 'கனத்த பாத்திரங்களைத் தூக்கக் கூடாது'... என்றெல்லாம் நல்லினியிடம் சொல்வாள் அவள்.

''என்ன, திலகை! என்னமோ நீ ஏழெட்டுப் பிள்ளைகள் பெற்ற அனுபவசாலி மாதிரி, எனக்குப் புத்திமதி சொல்கிறாயே?'' என்று சிரிப்பாள் நல்லினி.

''நான் பெற்றால்தானா? எங்க அம்மாவுக்கு, எனக்குப் பிறகு எட்டுக் குழந்தைகள். கர்ப்பிணிப் பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி ஒரு பள்ளிக்கூடம் வைத்து நான் சொல்லிக் கொடுக்க முடியும்!''

''ஆமாம்... என் அண்ணன் 'போர் அவை' வைத்திருக்கிறார்; நீ ஒரு 'பேறு அவை' வைக்கலாம்...'' என்று கேலியாக நகைப்பாள் நல்லினி.

நல்லினிக்குத் தேவையான பணிவிடைகளையும் வீட்டு வேலைகளையும் சீக்கிரத்தில் செய்து முடித்துவிட்டு, அவளையும் கூட்டிக்கொண்டு, வேதிகைக்கு வந்துவிடுவாள் திலகை.

''ஏன் திலகை! இப்படித் தினந்தோறும், இந்தப் போரவையிலே வேடிக்கை பார்க்க என்ன இருக்கிறது?'' என்று ஒருநாள் தோழியிடம் கேட்டாள் நல்லினி.

அதைக் கேட்டதும் சட்டென்று திடுக்கிட்டு, திலகை நல்லினியை ஏறிட்டு ஆழமாகப் பார்த்தாள்.

அப்பொழுது அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களும் உடல் நடுக்கமும் நல்லினிக்குத் திகைப்பூட்டியது.

திலகை, தன் வீட்டுக்கு வந்து, வேலைகளைச் செய்து முடித்து, போரவையை வேடிக்கை பார்ப்பதற்கு, ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்கிறது என்பதை நல்லினி புரிந்து கொண்டாள்.

புகாரிலிருந்து சற்று தொலைவில் அந்த ஊர் இருந்தாலும், அந்த ஊர் மக்கள் அரசியையோ, அரசரின் மைத்துனனையோ முன்பு பார்த்ததில்லையாதலாலும், திருத்தாமனும் நல்லினிதேவியும் அங்கு சாதாரணக் குடிமக்களாக மறைந்து வாழ்வது சுலபமாயிருந்தது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை, திருத்தாமன் மாறுவேடத்தில் புகார் சென்று அமைச்சரையும் தளபதியையும் ரகசியமாய்ச் சந்தித்து, நல்லினிதேவியின் உடல் நலத்தைச் சொல்லிவிட்டு, அரண்மனை அரசியல் செய்திகளை அறிந்து வருவார்.

மன்னன் இறந்ததும் பட்டத்தரசி திடீரென்று யாருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறியது, மாந்தரனுக்குப் பெரும் ஏமாற்றம் அளித்தது.

முட்டையை அடைகாக்கும் கோழி போல், பாதுகாப்பான இடத்தில் அரசி வருங்கால மன்னனை வயிற்றில் வளர்த்து வருகிறாள் என்ற செய்தி, சதிகாரர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அரசியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொல்வதற்கு, நாடு முழுவதும் தன் கையாட்களை மாந்தரன் அனுப்பி வைத்திருக்கிறார் என்று சாரணர் தலைவன் உருத்திரன், அமைச்சரிடம் தெரிவித்திருந்தான்.

ஒருமுறை, திருத்தாமன் அமைச்சரைச் சந்திக்க வந்தபோது, ''நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அரசியாரை வீட்டைவிட்டு வெளியே அனுப்பாதீர்கள். நீங்கள் இங்கு அடிக்கடி வருவதுகூட முக்கியமில்லை; அரசியாரைப்



பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்து வருங்கால அரசரைக் காப்பாற்றுவதுதான் மிகவும் முக்கியம். வருங்கால அரசரை மட்டுமல்ல, நாட்டின் வருங்காலத்தையும் உங்களிடம்தான் ஒப்படைத்திருக்கிறோம்...'' என்று அமைச்சர் வலியுறுத்தி எச்சரித்தார்.

''நீங்கள் கவலைப்படாதீர்கள். நல்லினியை வீட்டை விட்டு வெளியே அனுப்பாதது மட்டுமல்ல— நான் அந்த ஊர் முழுவதும், குதிரைப் பயிற்சியளிப்பதுபோல், மாணவர்களுடன் அடிக்கடி சுற்றி வந்து, யாரேனும் புதிய ஆட்கள் நடமாடுகிறார்களா என்று கண்காணித்துக் கொண்டேயிருக்கிறேன்...'' என்றான் திருத்தாமன்.

திருத்தாமனின் புத்திக் கூர்மையை நினைத்து மகிழ்ந்தார் அமைச்சர். பழமரம், பிஞ்சுவிடும் காலத்திலிருந்தே கவனமாகக் காவல் காக்கும் பொறுப்புணர்ச்சி உடையவன் அவன் என்று அமைச்சருக்குத் தெரியாதா என்ன?

இன்னும் சில மாதங்கள்தானே? அரசியாருக்குக் குழந்தை பிறந்துவிட்டால், நமக்கு மிகவும் தெம்பாக இருக்கும். சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்பார்களே, அது மாதிரி, குழந்தையானாலும் அவர் நாட்டுக்கு அரசரல்லவா?'' என்றான் தளபதி திதியன்.

அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அந்தப் பொன்னாளும் ஒருநாள் வந்தது.

நல்லினிக்கு இடுப்புவலி ஏற்பட்டதும், ஊரிலிருந்த இரண்டு மருத்துவச்சிகளையும் வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டான் திருத்தாமன். அது மட்டுமல்ல, ஒருவேளை அவசரமாக அவளை ஆதுரசாலை[6]க்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், தேவைப்படுமே என்று ஒரு குதிரை வண்டியையும் தயாராக ஏற்பாடு செய்து வைத்திருந்தான்.

---

6. ஆதுரசாலை— மருத்துவமனை

எதிர்காலப் பட்டத்து வாரிசு உலகில் தோன்றப் போகிறது என்ற மகிழ்ச்சி உள்ளுக்குள் பொங்கி எழுந்தாலும், பிறப்பது ஆணாக இல்லாமல் பெண்ணாகப் பிறந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் திருத்தாமனின் உள்ளத்திற்குள் பிறந்து விஸ்வரூபம் எடுத்துத் திகைக்க வைத்துக் கொண்டிருந்தது.

அறைக்கு வெளியே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த திருத்தாமனிடம், ''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்று ஒரு மருத்துவச்சி வெளியே வந்து சொன்னதும், அவன் கிட்டத்தட்ட மயக்கம் போட்டு விழுந்துவிடுமளவுக்கு, உடலெங்கும் நாளங்களில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோட, களிப்புப் பிரவாகத்தில் மிதந்தான். 'மண்ணெல்லாம் பொன்னாக்கிக் கரையெல்லாம் கழனியாக்கி, வற்றாத வளம் பாய்ச்சும் பொன்னி நாட்டை ஆளப் போகும் மன்னன் பிறந்து விட்டான்' என்று கூவிக் குதித்துக் கொண்டாடும் மகிழ்ச்சியை, அங்கே யாரிடமும் சொல்லிப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையை எண்ணி, அவனுடைய கண்கள் கலங்கிக் கசிந்தன.

பிரம்மாண்டமான அரண்மனை மண்டபத்தில், ஆயிரம் பெண்கள் சுற்றியிருக்க, கோட்டையிலும் கோயில்களிலும் முரசம் முழங்க, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, நவரத்னங்கள் இழைத்த தொட்டிலிலே பொன்வண்ணப் பூவாய், பிஞ்சுக் கைகளையும் கால்களையும் விரித்து ஆட்டிச் சிரித்துக் கிடக்க வேண்டிய இளவரசன், அந்தச் சிற்றூரில் யாரோ ஒரு சாதாரணக் குழந்தையாக, ஓர் ஓலைக் குடிசையில் மரத்தொட்டிலில் கிடக்கும் ஏழைக் காட்சி, திருத்தாமனின் உள்ளத்தைப் பிழிந்தது.

மாமனுக்கே அப்படியிருந்தால், பெற்ற தாயின் மனநிலை எப்படியிருக்கும்?

உயிருடனிருந்து, தன் மகனைப் பார்க்கும் பேறு, இளஞ்சேட்சென்னிக்கு இல்லாமல் போய்விட்டதே!...



மொட்டவிழ்ந்த மலராய், தொட்டிலில் கிடக்கும் மகனைப் பார்க்க, மன்னன் உடம்பிலே இரும்புக்கவசமும் கையிலே வாளும் கேடயமுமாய் சர்வாயுதபாணியாய்ப் போர்க் கோலத்துடன் வந்து நிற்கும் வீரக்காட்சியை,[7] தன் மனக் கண்ணில் கற்பனையாகக் கண்டு நெட்டுயிர்த்து உருகினாள் நல்லினிதேவி.

பிறந்தவுடனே, போர்க்கோலம் காட்ட தந்தை இல்லாவிட்டால் என்ன, நாள்தோறும் போர்ப்பயிற்சியளிக்கும் மாவீரன் மாமன், குழந்தையின் முன் நின்று, வீர தரிசனம் அளித்தான். மங்கல வாத்தியங்கள், முரசங்களின் ஒலிக்குப் பதிலாக, முற்றத்திலே இளைஞர் பயிற்சி பெறும்போது ஏற்படும் வாள் ஒலி, கேடய ஓசை, சிலம்பங்களின் சப்தம், குழந்தையின் செவிகளை நிறைத்தது.

வளவன் பிறந்த செய்தியை, ஐம்பெருங் குழுவிடம் தெரிவித்தான் திருத்தாமன். உடனே அரண்மனையில் முரசும் பேரிகையும் முழங்க, கோயில்களில் சிறப்புப் பூசனைகளும் வழிபாடுகளும் நிகழ்த்தப்பட்டன. சிறிது நேரத்தில் நகரம் விழாக் கோலம் பூண்டது.

அந்தச் செய்தியைக் கேட்டதும், மாந்தரன் இடியோசை கேட்ட நாகம்போல் திடுக்கிட்டுத் திகைத்தார். சட்டென்று, ஓர் அதிரடிப் படையைக் கொண்டு வந்து, அரண்மனையைச் சுற்றி வளைத்துக்கொண்டு அரியணையைக் கைப்பற்ற வந்துவிட்டார். பிறந்திருக்கும்

---

7. சங்க காலத்தில், அரசனுக்குக் குழந்தை பிறந்ததும், மகனைப் பார்க்க முதல் தடவையாக வரும் தந்தை, போர்க் கோலத்துடன் காட்சியளிப்பதன்மூலம், குழந்தைக்குப் பிறந்தவுடனேயே வீர உணர்ச்சியை ஊட்டுவது, வழக்கமாக இருந்து வந்தது.

— புறநானூறு : 100வது பாட்டு : ஔவையார் பாடியது.

மன்னன் அரண்மனைக்குள் வருவதற்குள்ளே, திடீர்த் தாக்குதலிலே அரியணையைக் கைப்பற்றி அதிலே பேரனை அமர்த்திவிட வேண்டும் என்பது அவருடைய மின்னல் வேகத்திட்டம்.

ஆனால் தளபதி திதியன் அந்த முற்றுகையைச் சமாளித்து முறியடித்துவிட்டான். தோல்வி ஏற்படப் போகிறது என்பதை உணர்ந்ததும் எதிரிப்படை பின்வாங்கிப் புறமுதுகிட்டு ஓடித் தப்பித்துக் கொண்டது.

அரண்மனையை முற்றுக்கையிட்ட படை மறைந்து விட்டது; ஆனால் பயம் மறையவில்லை.

"தளபதி! இந்த அபாயச் சூழ்நிலையில் நம் மன்னரை இங்கே கொண்டு வருவது சரியாகத் தோன்றவில்லை எனக்கு. மன்னர் இங்கிருந்தால், எதிரிகள் இன்னும் பல முறை ஆக்ரோஷத்துடன் திடீர்த் தாக்குதல்கள் நடத்தலாம். அந்தத் தாக்குதல்களின் முடிவு, எப்போதும் நமக்குச் சாதகமாகவே இருக்கும் என்று எதிர்பார்ப்பது விவேகம் அல்ல. மன்னரின் உயிரை அடிக்கடி ஆபத்துக்குள்ளாக்குவது தவறு. ஆகவே மன்னர் பழைய இடத்திலேயே மறைவாக வாழ்வது நல்லது என்று நினைக்கிறேன்" என்று கருத்துத் தெரிவித்தார் அமைச்சர்.

"ஆம்... நானும் அப்படியே நினைக்கிறேன்... மன்னர் வளர்ந்து இளைஞராகும்வரை, திருத்தாமனிடமே ரகசியமாக இருக்கட்டும்..." என்று ஆமோதித்தான் தளபதி.

சிறிது நேரத்தில், ஐம்பெருங்குழுவினர் ஏகமனதாக ஒரு முடிவு செய்தார்கள்:

"திருத்தாமன்! உங்களிடத்தில்தான் மேலும் பொறுப்பு தொடர்கிறது. மன்னரை நாங்கூரிலேயே வைத்து வளர்த்து வாருங்கள்... உங்களிடம் வளர்வதால், அவர் கல்வி, கலை, போர், அரசியல் எல்லாவற்றிலும் சிறந்த பயிற்சி பெற்று வீரமன்னராக உருவாகுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு



இருக்கிறது... தயவு செய்து, நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும்..." என்று எல்லோரும் கேட்டுக் கொண்டார்கள்.

சூழ்நிலையின் நெருக்கடியைப் புரிந்துகொண்ட திருத்தாமன் ஒப்புக் கொண்டான்:

"உங்கள் விருப்பத்தை நான் மறுக்க முடியுமா?... மன்னர் என்னிடம் வளர்வதைப்பற்றி எனக்கு மகிழ்ச்சிதான்; ஆனால் அரண்மனையில் செல்வ போகத்தோடு ராஜகுமாரனாக வாழவில்லையே என்றுதான் கவலைப் படுகிறேனே ஒழிய, அவரை என் தங்கை மகனாக வளர்ப்பதில் எனக்குப் பெருமைதான்..."

"இராமன் இருக்குமிடம் அயோத்தி என்பார்கள்; அதுபோல, மன்னர் இருக்குமிடம்தான் அரண்மனை... நீங்கள் அவரை ஒரு மன்னராகவே வளர்ப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை..." என்று குரல் தழுதழுக்க, உள்ள நெகிழ்ச்சியோடு சொன்னார் புரோகிதர் கௌதமனார்.

"மன்னர் உங்களிடம் ரகசியமாக வளரும்போது, வழக்கம்போல், நீங்கள் புகாருக்கு மாறுவேடத்தில் வந்து எங்களுக்குச் செய்தி கூறவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான் தளபதி திதியன்.

திருத்தாமன் நாங்கூருக்குத் திரும்பிவந்து, தங்கையிடம் ஐம்பெருங்குழுவின் தீர்மானத்தைக் கூறினான். நிலைமையின் அவசியத்தை உணர்ந்த அரசியும் வளவனை அந்த ஊரிலேயே வைத்து வளர்க்கச் சம்மதித்தாள்.

குழலும் யாழும் இழைந்தொலிக்க, பணிப்பெண்களும் பாடினியரும் மெல்லிசை பாட, பொற்சங்கிலே பாலுண்டு, மணிகள் பதித்த வண்ணத் தொட்டிலிலே வளரவேண்டிய வளவன், தாயின் மடியிலும் தாய்மாமன் தோளிலும் வளர்ந்து வந்தான்.

ஒருநாள், மாறுவேடத்தில் புகாருக்கு அமைச்சரைச் சந்திக்கப் போய்க்கொண்டிருந்த திருத்தாமன், தாகசாந்தி

செய்து கொள்வதற்காக, நாளங்காடியில் ஒரு கடைக்குள் நுழைந்து, யவனத் தேறல்[8] வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அங்கே இரண்டு ஆட்கள், பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு அவன் திடுக்கிட்டுப் போனான்.

## 7

**அ**ன்று, நிர்மலமான வான்பரப்பிலே முழுநிலவு பால் வெண்மையைப் பொழிந்து கொண்டிருந்தது.

முற்றத்திலே நிலா வெளிச்சத்திலே உட்கார்ந்து நல்லினிதேவியும் திருத்தாமனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

முன்பு, புகார் நகர அரண்மனையில் எழுநிலை மாடத்தின் நிலா முற்றத்திலே— முழுநிலவைக் கண்ட மகிழ்ச்சியில் பொங்கிக் குதித்து நடனமாடும் கடலலைகளின் மேற்பரப்பை முத்தமிட்ட களிப்பால் துள்ளி ஓடி வரும் தென்றலின் குளுமையிலே— நகரின் பல்வேறு இசையரங்குகளிலிருந்து தெறித்து வந்து இசைக்கலவையாக ஒலிக்கும் பின்னணியோசையிலே— கடற்கரையில் தூங்கும் வெளிநாட்டு, உள்நாட்டுக் கப்பல்களின் ஒளி விளக்குகளையும், காவிரி நீரிலே நகரும் படகுகளின் கை விளக்குகளையும் வேடிக்கை பார்த்தபடி, தானும் அரசனும் பேசிக் கொண்டிருந்த இனிய நாட்களின் நினைவு, நல்லினியின் மனத்திரையில் தோன்றி உள்ளத்தைச்

8. ரோம்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, போதையற்ற திராட்சைச் சாறு.



சலனப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால் தன் வருத்தத்தை அண்ணன் தெரிந்து கொண்டுவிடாதபடி லாகவமாக மறைத்துக் கொண்டு, உணவின் ருசியை ரசிப்பதுபோல், மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் நல்லினி.

திம்புளி[1]யை மிகவும் ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த திருத்தாமன் "நல்லினி! என்ன, இன்றைக்குத் திம்புளி மிகவும் அருமையாக இருக்கிறதே, பௌர்ணமிக்காகச் செய்யப்பட்ட சிறப்பு விருந்தா?" என்று கேட்டான்.

"சிறப்பு விருந்துதான்!... ஏனென்றால் இதைச் சமைத்தது நான் அல்ல; திலகை," என்று சொல்லியபடி சிரித்தாள் தங்கை.

"அப்படியா? சமையல்கூட மிகவும் அருமையாகச் செய்கிறாளே?... பாவம், உனக்காக எவ்வளவு வேலைகள் செய்து கொடுக்கிறாள்? மிகவும் நல்ல பெண்; கூலி வாங்காத வேலைக்காரியாக நம் வீட்டில் இருக்கிறாள், இல்லையா?"

"அப்படி நினைக்காதே, அண்ணா! அவள் பெரிய சூழ்ச்சிக்காரி! ஒரு பெரும் திட்டத்தை மனதிற்குள் வைத்துக் கொண்டுதான் என்னோடு பழகியிருக்கிறாள்..." என்று முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டு சொன்னாள் நல்லினி.

"என்ன, இப்படிச் சொல்கிறாய்?"

"ஆம், அண்ணா! கூலி கேட்காதவள் என்றாயே, அவள் இப்போது இதுவரை செய்த எல்லா வேலைக்கும் சேர்த்து, நேற்று கூலி கேட்டு விட்டாள்."

"என்ன கூலி?"

"மிகப் பெரிய கூலி, அண்ணா! மொத்தக் கூலியாக, என் அண்ணனையே அவளுக்குக் கொடுக்க

1. திம்புளி:— புளியையும் கருப்பங்கட்டியையும் சேர்த்துப் பிசைந்து பொரித்த உணவு— (மதுரைக்காஞ்சி : 318)

வேண்டுமாம்...''— கலகலவென்று சிரித்தாள் தங்கை. திடுக்கிட்டு நிமிர்ந்தான் அண்ணன்.

''என்ன?... உண்மையாகவா?''

''ஆமாம்... அவள் இங்கேயே நிரந்தரமாக வேலை செய்ய ஆசைப்படுகிறாள். நீயும் தினசரி இவ்வளவு சுவையான உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம், அண்ணா!''

''நல்லினி! சாப்பாட்டுக்காக வாழ்வு இல்லை; வாழ்வுக்காகத்தான் சாப்பாடு...'' என்று அமைதியாக அண்ணன் சொன்னதும், சட்டென்று குறுக்கிட்டாள் தங்கை.

''அண்ணா! திலகையையே நீ வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டால் என்ன?... உன்னைப் பார்ப்பதற்காகத்தான், அவள் அடிக்கடி இங்கே வந்து, போரவையை வேடிக்கை பார்ப்பதுபோல் உன் வீரத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்திருக்கிறாள்... உன்மேல் உயிரையே வைத்திருக்கிறாள். உன்னை அடைவதற்காக அவள் [2] மடலேறுவதற்குக்கூடத் தயாராக இருப்பாள் போலிருக்கிறது!''

---

2. ஒருதலைக் காதல் கொண்ட இளைஞன், தான் விரும்பும் காதலியின் உருவப்படத்தைக் கையிலே பிடித்துக் கொண்டு, பனைமடல் கருக்கினால் செய்யப்பட்ட குதிரை வாகனத்தில் ஏறி, ஓலைக் கருக்கினால் தன் உடலெங்கும் புண்ணாக்கி, இரத்தம் சொட்டச் சொட்ட, ஊர்வலம் வருவான். காதலியை அடைவதற்காக இத்தனை துன்பத்தை அனுபவிக்கும் அவனைக் கண்டு ஊராரெல்லாம் இரங்கி வருந்த, கடைசியில் அந்தப் பெண்ணும் மனம் இரங்கி, அவனை மணக்கச் சம்மதிப்பாள்.

இவ்வழக்கம் 'மட லூர்தல்' எனப்படும்.



சிறிது நேரம் திகைத்துச் சிந்தனையில் மூழ்கிய திருத்தாமனின் முகம் இறுகி, உறுதியைப் பிரதிபலித்தது. சலனமில்லாத தீர்மானத்தோடு அழுத்தமாகப் பேசினான் அவன்:

''நல்லினி! என் வாழ்க்கையில் காதல், திருமணம், குடும்பம் என்ற விஷயங்களுக்கே இடம் இல்லை; எப்போதும் படைக் கருவிகளுக்கிடையே வாழும் என் இரும்பு உள்ளத்தை உருக்க, மன்மதனின் மலரம்புகளால் முடியாது!... மறைந்த மன்னர் போட்ட சபதம் உனக்கு நினைவிருக்கிறதா?''

''என் கணவர் போட்ட சபதத்தை நான் மட்டும் மறந்து விடுவேனா, அண்ணா?''

''அது, உன் கணவர் போட்ட சபதம் மட்டுமல்ல; என் உயிர் நண்பன் போட்ட சபதம். எனக்கு நண்பனான பிறகுதான், இளஞ்சேட்சென்னி உன் கணவனானான். அவனுடைய சபதத்தை நிறைவேற்றுவதில் உன்னைவிட, எனக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது, நல்லினி! அன்று பாண்டியன் உன்னைப்பற்றிச் சொன்னானே, ஓர் உழவப் பெண்ணுக்கு வீரமன்னன் பிறக்கமாட்டான் என்று— அது உன்னைமட்டும் கேவலமாகப் பேசியதல்ல! என்னை— என் தந்தையை— என் குலத்தையே கேவலப்படுத்திய பேச்சு அது. வீரம் என்பது, குலத்தினால் அல்ல— வளர்ப்பினால் தான் என்பதை அந்தப் பாண்டியனுக்கும் இந்த உலகத்துக்கும் நிரூபித்துக் காட்டவேண்டும்...'' என்று வீராவேசமாகப் பொழிந்தான் திருத்தாமன்.

''அதற்காக, நீ திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று விதியா?''

''விதியல்ல; அது என் தீர்மானம்... நான் கொண்ட இலட்சியம் நிறைவேறும்வரை, காதல், இல்லறம் ஆகியவற்றில் என் கவனத்தையும் நேரத்தையும் திசை திருப்பவோ வீணாக்கவோ நான் விரும்பவில்லை...

என்னுடைய இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நான் ஒரு முனைப்பான மனநிலையுடன் ஈடுபடவேண்டும். நல்லினி! தயவுசெய்து என்னை வற்புறுத்தாதே! திலகையின் உள்ளத்தில் ஏற்பட்ட காதலுக்கு நான் காரணம் என்று நினைத்தால், அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்... திலகை மிக நல்ல பெண்; அவளுக்கு என்னைவிட மிக நல்ல கணவன் கிடைப்பான்; கிடைக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அவளுடைய உதவிகளுக்கு நாம் எப்படிக் கைம்மாறு செய்யப்போகிறோம்?'' என்று உள்ளம் நெகிழ்ந்து குரல் தழதழக்கச் சொன்னான் திருத்தாமன்.

அண்ணனுடைய இலட்சிய உறுதியையும், தனக்காகத் தன் வாழ்வின் இனிய சுகங்களைத் தியாகம் செய்யும் அன்பையும் கண்டு, மெய்சிலிர்த்து, உணர்ச்சிச் சுழிப்பில், பேச வாயெழாமல் உட்கார்ந்திருந்தாள் நல்லினிதேவி.

திருத்தாமன், இளமையிலிருந்தே வளவனுக்கு ஒரு தூண்டுதலான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருந்தான்.

புகாரை விட்டுக் கிளம்பியதும், தான் ரகசியமாகத் தங்கி வாழ்வதற்கு நாங்கூரைத் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு சிறப்பான காரணம் இருந்தது.

சங்க காலத்தில் நாங்கூரிலே மிகச் சிறந்த வீரப் பரம்பரை விளங்கி வந்தது.[3] அங்கே நடமாடும் வீரர்களின் சூழலிலே, வளவன் பிறந்து வளர்வது, மனோதத்துவ ரீதியில் அவனுக்கு வீர உணர்வை இரத்தத்திலே ஊட்டும் என்று எண்ணினான் திருத்தாமன்.

---

3. ‘நாங்கூர், சிறந்த வீரர்கள் நடமாடும் ஸ்தலம்’ என்று திருமங்கையாழ்வார், தன் பாடலில் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்—

— பெரிய திருமொழி : 4-ம் பத்து ; 5-ம் பாட்டு.



சில ஆண்டுகளுக்கு முன்பு, புகாரில் பண்டரஸ் என்னும் ரோம் நாட்டு வணிகரைச் சந்தித்தபோது, அவர் கூறிய செய்தி திருத்தாமனின் உள்ளத்தில் பசுமரத்தாணியாகப் பதிந்திருந்தது.

''எங்கள் நாட்டில் பெண்களுக்குத் திருமணமானவுடன், அவர்கள் படுக்கையறையிலும் தனியறையிலும், புராண வீரன் ஹெர்குலிஸின் ஓவியத்தை வைத்திருப்போம். அதன்மூலம், பெண்கள் கருவுறும்போதும், கருவளரும் காலத்திலும், ஹெர்குலிஸின் வீர உணர்வு, குழந்தைக்குக் கருவிலேயே தோன்றும் என்பது எங்கள் நம்பிக்கை. இது, மனோதத்துவ சாஸ்திரப்படிகூட உண்மைதானே?'' என்றார் பண்டரஸ்.

ரோம் நாட்டினர், உலகத்தில் சிறந்த வீரர்களாகத் திகழ்வதன் காரணம், திருத்தாமனுக்குப் புரிந்தது. ஆனால் தமிழ்நாட்டுப் பெண்கள், அப்படி இன்னொரு ஆடவனின் உருவத்தை— அவன் கடவுளாக இருந்தாலும் சரி— தங்கள் உள்ளத்தில் பதிய விடுவார்களா? ஆகவே, நாங்கூரின் வீரச் சூழ்நிலை, நல்லினியின் வயிற்றுக் கருவுக்கு உணர்வுத் தூண்டுதல் அளிக்க முடியும் என்றுதான், அவளை அந்த ஊருக்குத் திருத்தாமன் அழைத்து வந்தான்.

நாங்கூரின் மற்ற சூழ்நிலை மட்டுமல்ல, திருத்தாமனின் வீட்டு முன்னால் நடைபெற்ற போர்ப் பயிற்சியை நாள்தோறும் நல்லினி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாளே, அந்தச் சூழ்நிலையும் கருவிலிருந்த வளவனுக்கு வீர உணர்வை ஊட்டியிருக்குமே?

திருத்தாமன் நினைத்தது வீண் போகவில்லை. வளவன் இளமையிலிருந்தே, பயம் என்பதே இல்லாத வீரக்குழந்தையாகத் திகழ்ந்தான்.

அவனுடைய வீரத்துக்குப் பயிற்சி கொடுப்பதோடு நின்று விடாமல், அவனுடைய அறிவையும் வளர்ப்பதற்கேற்ற கல்விப் பயிற்சியும் அளித்து வந்தான் திருத்தாமன்.

''நல்லினி! நான் வளவனை இத்தனை அக்கறையோடும் கவனத்தோடும் ஒரு வீர மன்னனாகவும் அறிவுள்ள அரசனாகவும் வளர்ப்பதற்கு என்ன காரணம் தெரியுமா? என் மைத்துனரின் சபதத்தை நிறைவேற்றி வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புணர்ச்சி மட்டுமல்ல; அதிலே எனக்கு ஒரு சுயநலமும் இருக்கிறது... மாமன்னர் அலெக்ஸாண்டரை நினைத்தவுடனே அவரை உருவாக்கிய அரிஸ்டாட்டில் நினைவு வருகிறதல்லவா? அதுபோல, சோழவளவனை நினைத்ததும் என் பெயரும் நினைவு வரும்படியாக. அவனுடைய வரலாற்றிலே எனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ள முயற்சி செய்கிறேன்...'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் திருத்தாமன்.

''இதிலென்ன சந்தேகம், அண்ணா? அரிஸ்டாட்டில், அலெக்ஸாண்டருக்கு ஆசிரியர் மட்டும்தான்; ஆனால், நீ வளவனுக்குத் தாய்மாமனும் அல்லவா?'' என்று சிரித்துக் கொண்டே கூறிய தங்கை, தொடர்ந்து ''தாய் மாமன் என்றால், சாதாரண அர்த்தம் அல்ல; தாயும் மாமனும் என்று அர்த்தம். வளவன் என்ற குழந்தைக்குத்தான் நான் தாய்; ஆனால் வளவன் என்ற மன்னனுக்கு நீதான் தாய்!...'' என்று குரல் நெகிழ, உள்ளம் பூரிக்கப் பெருமைப்பட்டாள் பெற்ற தாய்.

தங்கையின் மகனை ஒரு சிறந்த வீரனாக, அறிஞனாக உருவாக்கும் இலட்சியத்திற்காக, தன் காதலையே உதறித் தள்ளி விட்டான் திருத்தாமன் என்பதைக் கேள்விப் பட்டதும், திலகைக்கு அவன்மேல் வெறுப்பு ஏற்பட வில்லை. மாறாக, அவனிடத்து ஒரு மதிப்பு ஏற்பட்டது. தன் காதல் தோல்விக்குப் பிறகும், முன்போலவே நல்லினியின் வீட்டுக்கு அடிக்கடி வந்து அவளுக்குத் துணையாக வேலை செய்தும், குழந்தை வளவனை வளர்ப்பதிலே தேவையான உதவிகளைச் செய்தும் பழகி வந்தாள் திலகை.



''திலகை! உன் காதலை என் அண்ணன் உதாசீனம் செய்த பிறகு, நீ இங்கே வரவே மாட்டாய் என்று நினைத்தேன். ஆனால், நீ எவ்வளவு பெருந்தன்மையானவள் என்பதைக் காட்டிவிட்டாய்!'' என்று ஒரு நாள் தோழியிடம் சொல்லி மகிழ்ந்தாள் நல்லினி.

''உலகத்திலே காதல் என்பது ஒன்று மட்டும்தானா? நட்பு, பாசம், அன்பு என்றெல்லாம் எத்தனையோ பண்புகள் இருக்கின்றனவே?... முன்பெல்லாம் உன் அண்ணனின் வீரத்தைப் பார்த்து ரசிக்க வருவேன்; இப்போது வளவனின் வீர விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ வருகிறேன்... ஒன்றுமட்டும் நிச்சயம், நல்லினி! உன் மகன் வருங்காலத்தில் குருவை மிஞ்சிய சீடனாகி விடுவான், பார்!''

''தனக்குக் கீழே இருந்தவன், தன்னைவிட உயர்ந்த ஸ்தானத்திற்குப் போவதைப் பார்த்துப் பெருமைப்படுகிற ஒரே ஜீவன், ஆசிரியர்தானே?... வளவன் அப்படிச் சிறந்த வீரனாக வேண்டும் என்பதுதானே என் அண்ணனின் இலட்சியம்?'' என்ற நல்லினி சட்டென்று ஏதோ நினைவு வந்தவளாய், தோழியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, ''அந்த இலட்சியம், சோழ நாட்டுக்கு ஒரு நல்ல வீரனைத் தரலாம்; ஆனால் எனக்கு, ஒரு நல்ல அண்ணியைத் தர முடியவில்லையே!'' என்று கண் கசியச் சொல்லி நெட்டுயிர்த்தாள் நல்லினி.

காதல் என்னும் மென்மை உணர்வின் கொடிய பாதிப்பிலே வாய் மூடி நின்றாள் திலகை.

நல்லினிக்கு உயிர்த்தோழியாகத் திலகை வாய்த்தது போல், சிறுவன் வளவனுக்கும் ஒரு விளையாட்டுத் தோழி, அந்தப் பக்கத்து வீட்டிலிருந்தே கிடைத்து விட்டாள்.

திலகையின் அண்ணன் முருகனின் மகள் அருட்கோதையும் வளவனும், இளம்பருவத்திலிருந்தே இணைபிரியாத் தோழர்களாகப் பழகி வந்தார்கள். காலையில் வளவன்,

மாமாவிடம் பயிற்சி பெறும்போது, கோதை தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். திருத்தாமன், அவனுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்கும் போது, அவளும் கூட இருந்து படித்துக் கொள்வாள். மற்ற நேரங்களில் இருவரும் ஏதாவது விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பார்கள்.

அவனைச் சாப்பிட வைப்பதற்குள் தினசரி தாய் ஆதிரைக்குப் பெரும்பாடாகிவிடும். 'வளவனோடு இருந்துதான் சாப்பிடுவேன்' என்று அடம் பிடித்து, சாப்பாட்டுத் தட்டுடன் நல்லினி வீட்டுக்கு வந்து விடுவாள் கோதை.

''உலகத்திலே, பிள்ளைகளுக்குச் சாப்பாடு ஊட்ட, 'அம்புலியே, வா...வா...' என்று சந்திரனைக் கூப்பிடுவார் கள் தாய்மார்கள். ஆனால் நான் 'வளவா, வா...வா' என்று உன் மகனைக் கூப்பிட வேண்டியிருக்கிறது!...'' என்று சிரித்துக்கொண்டே சொல்வாள் ஆதிரை.

''தாய்மார்கள் கூப்பிடுவதற்காகச் சந்திரன் கீழே வந்துவிடமாட்டான்; ஆனால் என் மகன் உடனே வந்து விடுவானே!... கோதை பசியோடிருப்பதைப் பார்க்க அவனுக்குப் பொறுக்காதே!'' என்பாள் நல்லினி.

இவ்வளவு ஒற்றுமையாக இருக்கிற தோழர்கள், சண்டை போட்டுக் கொள்வதிலும் குறைந்தவர்கள் இல்லை.

இருவரும் போட்டி போட்டு விளையாடுகிற விளையாட்டுக்களில் எல்லாம், கோதையைத் தோற்கடித்துக் கேலி செய்து அழ வைத்து வேடிக்கை பார்ப்பான் வளவன். அவள் ஈரமணலில் சிற்றில் கட்டி விளையாடும் போதெல்லாம், தன் சிறுதேரை அவற்றின் மேல் உருட்டி அழித்து, அவள் தனது சிறு கண்மலர்களைக் கசக்கிச் சிணுங்கி அழும் அழகை ரசித்துப் பார்ப்பான்.



ஆனால், இந்த மாதிரி சிறு சண்டைகளெல்லாம் ஒரு நாழிகைக்குள் தீர்ந்துபோய் சமாதானமாகி, அப்புறம் சேர்ந்து விளையாடுவதைப் பார்த்து, பெற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

வீட்டு வேலையிலே ஏதாவது கூடமாட சிறு ஒத்தாசை செய்வதற்கு, மகனைக் கூப்பிடுவாள் ஆதிரை. ஆனால் அவனோ, பக்கத்து வீட்டிலேதான் எப்போதும் இருப்பான்!

''கோதை இருக்கிறதைப் பார்த்தால், அவள் உங்கள் வீட்டுப் பெண்ணா, எங்கள் வீட்டுப் பெண்ணா என்றே சந்தேகம் ஏற்படுகிறது!...'' என்று சொல்லிச் சிரிப்பாள் ஆதிரை.

''ஏன், அவளையும் என் மகளாக எடுத்துக் கொள் கிறேனே?'' என்று விளையாட்டாகக் கேட்பாள் நல்லினி.

''வீட்டிலே ஏதாவது வேலை செய்யக் கூப்பிட்டால், ஆளையே காண முடிவதில்லை...'' என்று பொய்க் கோபத் துடன் பொருமுவாள் தாய்.

''பெண், பிறந்த வீட்டிலே வேலை செய்கின்ற பழக்க மில்லை, அண்ணி! அவள், இன்னொரு வீட்டுக்கு வேலை செய்வதற்குத்தான் பிறந்திருக்கிறாள்!'' என்று சிரிப்பாள் திலகை.

அந்தப் பேச்சின் அர்த்தத்திலே சிறிதுநேரம் லயித்துப் போய் நிற்பாள் நல்லினி.

'அப்படியும் நடக்குமா?... என் கணவரைப் போல், என் மகனும் ஓர் எளிய குடும்பத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வானா?... ஏன் மாட்டான்?... எல்லா வகையிலும், எல்லாப் பண்புகளிலும் வளவன், தந்தையைப் போல்தானே இருக்கிறான்?...'

— தாயின் எண்ணங்கள், இனிய எதிர்காலக் கனவுக் காட்சிகளாய் பரிணமித்து விரியும்...

ஒருநாள் மாலை நேரம், சோலையில் போய் விளையாடி விட்டுத் திரும்பிய அருட்கோதை, நல்லினியிடம் தன் மழலைமொழியில் கூறிய சம்பவம், நல்லினியின் உள்ளத்தில் ஆழமாகப் பாய்ந்து நிலைபெற்றுவிட்டது.

அன்று, வளவனும் கோதையும் மற்ற குழந்தைகளும் சோலையில் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

''இன்றைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்?'' என்று ஒரு சிறுமி கேட்டாளாம்.

''குரவை, கழங்கு, ஓரை, பந்தாட்டம் எல்லாம் விளையாடிச் சலித்துப் போய்விட்டது; இன்றைக்கு ஒரு புது விளையாட்டு விளையாடலாம்...'' என்றான் ஒரு பையன்.

''என்னடா, அது புதுவிளையாட்டு?''

''நேற்று எங்கள் வீட்டிலே, என் அத்தைக்குத் திருமணம் நடந்தது அதுமாதிரி நாம் ஒரு திருமண விளையாட்டு விளையாடலாம்...''

''ஓ!... நானும் நிறைய திருமணங்கள் பார்த்திருக்கேன்...''

— ஒவ்வொரு குழந்தையும் உற்சாகத்துடன் புது விளையாட்டில் ஈடுபட்டது. திருமண வீடுகளில் தாங்கள் பார்த்ததுபோல, விளையாட்டிலும் அமைத்துக் கொண்டார்கள்.

பையன்கள், மரங்களிலிருந்து சிறுசிறு கம்புகளை ஒடித்து வந்து பந்தல்போல அமைத்து, கீழே மணலைப் பரப்பினார்கள். பூக்களைப் பறித்து மாலை தொடுத்து, பந்தலிலே கட்டி அலங்கரித்தார்கள். பெண் குழந்தைகள், சிறு மண்பாத்திரங்களில் மண்ணையும் தண்ணீரையும் கலந்து, 'நெய்ச்சோறு' சமைத்தார்கள்.

''சரி... நடுவிலே மாப்பிள்ளை, பெண்ணாக யார் யார் உட்காருவது?'' என்று ஒருவன் பிரச்னையைக் கிளப்பினான்.



உடனே 'நான்... நான்... நான்தான்... நான்தான் மாப்பிள்ளை... நான்தான் பெண்...' ஊஹூம்... எல்லோரும் குதித்துக் கத்தத் தொடங்கிவிட்டார்கள்.

கூச்சலும் குழப்பமும் பெருகியதே ஒழிய, ஒரு முடிவும் ஏற்படவில்லை. எல்லோருக்கும், மணமக்களாக உட்கார வேண்டுமென்றே ஆசைதான்!

''ஒரு வழி செய்யலாம்... யார் யார் மாப்பிள்ளை பெண்ணாக இருப்பது என்பதை முடிவு செய்ய பூக்கட்டிப் போட்டுப் பார்க்கலாம்...'' என்று ஒரு புத்திசாலி, பிரச்னையைத் தீர்க்க யோசனை கூறினான்.

குடும்பத்தில் இப்படி ஏற்படும் பிரச்னைகளுக்கு, பூசை அறையில் கடவுள் சந்நிதியில் பூக்களைக் கட்டிப்போட்டு, திருவுளச் சீட்டு முறைபோல, முடிவு செய்வதைத் தங்கள் வீடுகளில் சிறுவர்கள் பார்த்திருப்பார்கள் அல்லவா?

அந்தச் சிறுவனின் யோசனையை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

கோடற்பூ, வாளிப்பூ, குறிஞ்சிப்பூ, வெட்சிப்பூ, தேமாப்பூ முதலிய பூக்களைப் பறித்து வந்து, ஒவ்வொரு இலையிலும் வைத்து மடித்து, ஒவ்வொரு பூவுக்கும் ஒரு பையனைக் குறிப்பிட்டு, மேடையில் போட்டார்கள். ஒரு சின்னஞ்சிறிய பையன் கண்ணை மூடிக்கொண்டு, அந்தப் பூக்குவியலிலிருந்து ஒரு இலைமடிப்பை எடுத்தான்.

அந்த இலைக்குள் இருந்தது, குறிஞ்சிப்பூ. அந்தப்பூ, வளவனுக்குக் குறிப்பிடப்பட்டது.

''ஓ!... வளவன்தான் மாப்பிள்ளை!...'' என்று கூவினார்கள் சிறுவர்கள்.

அடுத்து, இதே மாதிரி கூவிரமலர், அனிச்சமலர், வாகைமலர், பூளைமலர், மருதமலர் முதலிய மலர்களை மடித்துப் போட்டு, எடுத்தபோது, கோதைக்குக் குறிப்பிடப்பட்ட அனிச்சமலர் வந்தது!

எல்லோரும் சேர்ந்து, வளவனையும் கோதையையும் மேடையில் உட்கார வைத்து ஆரவாரம் செய்தார்கள்.

பெண் குழந்தைகள், தங்கள் தலையில் குடங்களையும் முளைப்பாலிகைகளையும் தாங்கிக்கொண்டு நின்றார்கள். நான்கு பேர், மணமக்களைச் சுற்றி நின்று, மலரையும் நெல்லையும் தூவி வாழ்த்தினார்களாம்...[4]

இந்த நிகழ்ச்சியைக் கேட்ட நல்லினிக்கு வியப்பாயிருந்தது.

இத்தனை குழந்தைகளிடையே, வளவனும் கோதையும் 'மணமக்களாக'த் தேர்ந்தெடுக்கப்பட்டது, வெறும் 'தற்செயலான' விளையாட்டுத்தானா? அல்லது தெய்வத்தின் திருவிளையாடலா?...

இந்த நிகழ்ச்சியை, கள்ளங்கபடமில்லாமல், பிஞ்சு மொழிகளால் தன்னிடம் வந்து சொன்ன கோதையை அன்போடு தூக்கி, தலைமுடியைக் கோதி, முகத்தைப் பரிவோடு தடவிக் கொடுத்து முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள் நல்லினிதேவி.

புகாரில் நாளங்காடியில் இருவர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுத் திடுக்கிட்ட திருத்தாமன், மாந்தரன் எப்படிப்பட்ட சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான். அந்தச் சூழ்ச்சியை எப்படி முறியடிப்பது என்று சிந்தித்துக் கொண்டே அரண்மனையை நோக்கி நடந்தான் அவன்.

4. சங்க காலத்தின் திருமண முறையை நல்லாவூர்கிழார் பாடிய (அகநானூறு— 86) பாடலில் விளக்கமாகக் காணலாம்.

8

இளஞ்சேட்சென்னி இறந்ததுமே, எதிர்கால மன்னனைக் கருவிலே ஏந்தியிருக்கும் நல்லினிதேவியை வஞ்சகமாகக் கொல்லத் திட்டமிட்ட மாந்தரனுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. யாருக்கும் தெரியாமல் திடீரென்று அரசியும் அண்ணலும் அரண்மனையை விட்டு மறைந்துவிட்டார்கள்.

அவர்கள் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க நாடெங்கும் தன் ஆட்களை விட்டுத் தேடிக்கொண்டிருக்கும் போது, மாந்தரனுக்கு இரண்டாவது அதிர்ச்சி வெடித்தது. அரசியாருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்துவிட்டது என்ற செய்தி அவரைத் திகைக்க வைத்தது.

அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக்கொண்டு, குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும் அரண்மனையை அதிரடித் தாக்குதலால் கைப்பற்ற புத்திசாலித்தனமான திட்டம் வகுத்துச் செயல்பட்டார் மாந்தரன். ஆனால் சோழத் தளபதி திதியன் ஏமாந்து விடவில்லை. திடீர்த் தாக்குதலையும் சமாளித்து எதிரிகளை விரட்டியடித்து விட்டான்.

அரசன் பிறந்திருப்பதாக அறிவித்துவிட்டு, ஆனால் அவனைத் தலைநகருக்குக் கொண்டு வராததையே ஒரு காரணமாகக் கற்பித்துக்கொண்டு, மாந்தரன் தன் ஆட்கள்மூலம், மக்களிடையே ஒரு பலமான வதந்தியைப் பரப்ப ஆரம்பித்தார். அந்த வதந்தி விஸ்வரூபம் எடுத்து, அன்று புகாருக்கு வந்த திருத்தாமனையே திடுக்கிட வைத்துவிட்டது.

நாளங்காடியில் இரண்டு ஆட்கள் பேசிக்கொண்டிருந்ததை உற்றுக்கேட்டான் திருத்தாமன். அவர்களை

அவனுக்கு ஏற்கனவே தெரியும்; ஆனால் அப்போது திருத்தாமன் மாறுவேடத்தில் இருந்ததால், அவனை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள், மாந்தரனின் கையாட்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் மாந்தரனின் சூழ்ச்சிக்குப் பலியாகி, அவர் பரப்பின வதந்தியை நம்ப ஆரம்பித்துவிட்டார்கள் என்பது தெரிந்தது.

''எனக்கும் சந்தேகமாய்த்தான் இருக்கிறது. உண்மையிலே நம் மன்னருக்குக் குழந்தை பிறந்திருந்தால், ஏன் அந்தக் குழந்தையை அரண்மனைக்குக் கொண்டு வரவில்லை?'' என்று ஒருவன் கேட்டான்.

''அதைத்தானே நிறையப்பேர் கேட்கிறார்கள்? மன்னருக்கு ஒரு வாரிசு இருப்பதாகச் சொல்லிக் கொண்டே, அமைச்சரும் தளபதியும் தங்கள் விருப்பத்துக்குத் தொடர்ந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள்...''

''ஆமாம்... புதிதாக வருகிற மன்னர், அவர்களைப் பதவியில் வைத்துக் கொள்வார் என்று என்ன நிச்சயம்? அதனாலே, 'நாம் ஆளமுடிந்தவரை ஆண்டு கொண்டிருப்போம்' என்று இவர்கள் நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது!'' என்று சொல்லிச் சிரித்தான் அந்த ஆள்.

''பதவி என்பது, மது போதை மாதிரி; அந்தப் போதை, சுலபத்திலே தீராது!'' என்று குலுங்கிச் சிரித்தான் இன்னொரு ஆள்.

இவர்கள் பேசிய பேச்சும் சிரிப்பும் திருத்தாமனுக்குத்தான் அதிர்ச்சியாக இருந்ததே ஒழிய, அந்தக் கடையில் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வேறு யாரும் அதிர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. ஏதோ சாதாரண நடைமுறை விஷயத்தைக் கேட்பது போல், நிச்சலனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள் ஆகவே இந்த வதந்தி, தலைநகர் மக்களிடையே வெகுவாகப் பரவி



நிலைபெற்றிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான் திருத்தாமன்.

அவன் அரண்மனைக்குச் சென்று, அமைச்சரிடம், தான் நாளங்காடியில் கேட்டதைச் சொன்னான். அமைச்சர், அதைக் கேட்டதும் ஒரேயடியாகப் திடுக்கிட்டு விடவில்லை.

''இந்த வதந்தி சில நாட்களாகவே புகாரில் பரப்பப்பட்டு வருகிறது என்று சாரணர் தலைவன் உருத்திரன் என்னிடம் சொல்லியிருக்கிறார். அது நாளாக ஆக பெரிதாகிக் கொண்டே போவதைப் பார்க்க எனக்கு ஒன்றுமே புரியவில்லை...'' என்று தலையைத் தடவிக் கொண்ட உதயதேவரின் முகத்தில் கவலை ரேகைகள் அழுத்தமாகப் பதிந்திருந்தன.

''ஏன் இந்த வீணான சந்தேகத்தைப் பரவ விட வேண்டும்? வளவனை இங்கு கொண்டு வந்து விட்டாலென்ன?'' என்று துடித்தான் திருத்தாமன்.

''இல்லை!... அந்த ஆபத்தில் நாம் ஈடுபடக்கூடாது; அரசர் எங்கோ வளர்ந்து வருகிறான் என்பதால், அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் எதிரிகள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். அவரை இங்கு கொண்டு வந்து விட்டால், நாம் எவ்வளவுதான் அரண்மனைக்குப் பாதுகாப்புக் கொடுத்தாலும், நம் அரசருக்கு ஆபத்து ஏற்படாமல் தடுத்துவிடலாம் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எப்போதும் எதிரியை வலுவானவனாக, புத்திசாலியாகவே நினைத்து, நாம் காரியம் செய்ய வேண்டும்...'' என்று சொல்லி திருத்தாமனின் யோசனையை எதிர்த்தான் இதியன்.

அமைச்சர், தன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே இருந்தபோது, ஒரு யோசனை தோன்றியது:

''தளபதி! இப்படிச் செய்தால் என்ன?... அரியணையில் அரசர் இருப்பதுபோலவே பாவித்து, ஆண்டுதோறும்

நாண்மங்கல நாள் கொண்டாடினால் என்ன? எங்கோ ஓரிடத்தில் வளர்ந்து வரும் மன்னரின் பாதுகாப்புக்கும் நீண்ட ஆயுளுக்கும் பிரார்த்தித்து, கோயில்களிலெல்லாம் விசேஷ அபிஷேகம், பூஜைகள் நடத்தி, தலைநகரில் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்களும் ஏற்பாடு செய்தால், மக்களுக்கும் 'நம் மன்னர் இருக்கிறார்' என்ற மன உணர்வும் நம்பிக்கையும் ஏற்படுமல்லவா?''

அமைச்சரின் யோசனையை ஐம்பெருங்குழுவும் ஏற்றுக்கொண்டது.

ஆண்டுதோறும வளவன் பிறந்தநாளில் தலைநகரில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. வீர விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப் பட்டன. இதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தனர்:

''என்னப்பா, இது அதிசயமாயிருக்கிறது?... மன்னரையே நாம் இன்னும் பார்க்கவில்லை; ஆனால் அவருக்குப் பிறந்தநாள் கொண்டாடுகிறோமே?'' என்று ஆச்சரியப்பட்டார்கள் சிலர்.

''நாம் நேரே பார்த்தால்தானா? நாம் முருகப் பெருமானை நேரிலே பார்த்த பிறகா, கார்த்திகை விழா கொண்டாடுகிறோம்? அரசனும் தெய்வம் மாதிரிதானே?''

''நம் மன்னர் விஷயத்தில் இதுமட்டுமா அதிசயம்?... மற்ற அரசர்கள் பிறக்கும்போது இளவரசனாகப் பிறந்து, பிறகுதான் அரசப்பட்டம் பெறுவார்கள். ஆனால் நம் மன்னர், தாய் வயிற்றில் இருக்கும்போதே, அரசப்பட்டம் பெற்றுவிட்டாரே![1]''

---

1. 'தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி...' என்னும் 'பொருநராற்றுப்படை' (132) அடிக்கு இப்படிப் பொருள் கொள்ளலாமே?

இந்த அடிக்கு நச்சினார்க்கினியரின் உரை அபத்தம் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டு



முதலாண்டு நாண்மங்கல விழாவின்போது, இப்படி யெல்லாம் மக்கள் வியந்து பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் அடுத்தடுத்த ஆண்டுக் கொண்டாட்டங்களில் இந்தப் பேச்சு மறைந்து போய் விட்டது.

இத்தனை விவகாரங்களுக்கும் காரணமான வளவன், இதெல்லாம் தெரியாத விளையாட்டுப் பிள்ளையாய் நாங்கூரில் சிறுவர்களோடு தேர் ஓட்டும் போட்டியில் கலந்து கொண்டிருந்தான்.

தந்தையைப்போல், மகனுக்கும் வண்ண வண்ணமான தேர்களை அமைப்பதில் ஆர்வம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு நல்லினி உள்ளம் உவகையால் பொங்கியது. இவன் நாள்தோறும் புதிய புதிய தேர்களைச் செய்து உருட்டிக் கொண்டு தெருவில் விளையாடப் போகும் அழகைப் பார்த்த தாய்க்கு, கணவனின் நினைவு இதயத்தில் சிலிர்த்து எழும். அவனும் இப்படித்தானே, புதிய புதிய தேர்களில் உலா வந்து மக்களிடையே கலந்து பேசிப் பழகுவான்? 'உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி' என்று

---

உள்ளனர். ஜனனத்துக்கு நல்லநேரம், நட்சத்திரம் வரும்வரை, தாய்வயிற்றிலேயே நீடித்து வைத்தி ருப்பதற்காகப் பிரசவ சமயத்தைத் தள்ளிப்போட்டு, பிறகு குறித்த நல்ல நேரத்தில் குழந்தை பிறக்கும்படி செய்ததாக (கோச்செங்கண் சோழரும், இவ்வாறே பிறக்கின்ற காலத்தில் பிறவாமல், நல்ல முகூர்த்தம் வருமளவும், தாய் வயிற்றிலேயிருந்து பிறந்தார் என்றும், அக்காரணத்தால் அவர் சிவந்த கண்களை யுடையவராயிருந்தார் என்றும் கூறுவர்— உ.வே.சா உரை— அடிக்குறிப்பு) சிலர் கூறுவது, ஆராய்ச்சிக்கும் நடைமுறைக்கும் பொருந்தாது என்பது தெளிவு.

எனவே, மேற்கூறியபடி 'தாய் வயிற்றில் கருவாக இருக்கும்போதே அரச பதவி பெற்றுவிட்டவர்' என்று பொருள் கொள்வது, பொருத்தமாயிருக்கும் அல்லவா?

அவனுக்கு ஏற்பட்ட பட்டப்பெயர், மகனுக்கும் பொருந்தும் போலிருக்கிறதே என்று மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள் நல்லினிதேவி.

தெருவிலே சிறுவர்களுக்குள்ளே நடத்தப்படும் தேர் உருட்டும் போட்டியில், வளவனே வெற்றி பெறுவது வழக்கம். அதைக் கண்டு அந்த ஊர் இளைஞர்களுக்கு அவன்மேல் பொறாமை உண்டு.

ஒரு நாள், ஓர் அருமையான புதிய தேர் செய்து கொண்டு விளையாடச் சென்றான் வளவன். அதைப் பார்த்துப் பொறாமையால் புழுங்கிய ஒரு சிறுவன் ''வளவனுக்கு என்னமோ தான் ஒரு அரசர் வீட்டுப் பிள்ளை என்ற நினைப்பு!...எப்போதும் புதுத்தேர் செய்து கொண்டு வருகிறானே?'' என்று முணுமுணுத்தபடி முறைத்துப் பார்த்தான்.

''ஏன், அரசர் வீட்டுப் பையன்தான் அழகான தேர் வைத்துக் கொள்ள வேண்டுமா?'' என்று திருப்பிக் கேட்டான் வளவன்.

''ஆமாம்... புகாரிலே நம் அரசர் ஒருத்தர் இருந்தாராம்; அவர்தான் புதிது புதிதாகத் தேர்கள் வைத்திருப்பாராம்.''

''அவர் யார்? அவர் பெயர் என்ன?'' என்று கேட்டான் வளவன்.

''ஏதோ பெயர்; என் அப்பாதான் சொன்னார். நீ உன் வீட்டிலே போய்க் கேட்டுத் தெரிந்துகொள்...'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான் அந்தப் பையன்.

வளவன் ஆர்வத்தோடு வீட்டுக்கு ஓடி வந்தான்:

''அம்மா!... அம்மா!... புகாரிலே ஒரு அரசர் இருந்தாராம்; அவர் புதிது புதிதாகத் தேர்கள் வைத்திருந்தாராம். அவர் யார் அம்மா?''



மகனுடைய கேள்வியைக் கேட்டுத் திகைத்த நல்லினிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது.

'மகன் அப்பாவைப்பற்றிக் கேட்கிறானே, அவனிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?... இப்போது வளவன் விவரம் தெரிந்தவனாய் விட்டானே? அவனிடம் உண்மையைச் சொல்வதில் என்ன தவறு? அவனாக ஆர்வத்தோடு கேட்கும்போது எப்படிச் சொல்லாமலிருப்பது?'

— சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தாள் நல்லினிதேவி.

தான் யார் என்பதையும், எதிரிகளுக்குப் பயந்து தலைமறைவாக இருப்பதையும் தெரிந்து கொண்டால், ஒருவேளை இளங்கன்று பயமறியாது என்பதைப்போல், வளவன் பொங்கியெழுந்து 'அம்மா! நான் இன்றே புகார் சென்று என் தந்தையின் உரிமையை அடைவேன். உலகமே எதிர்த்து வந்தாலும் அவர்களையெல்லாம் வென்று, புலிக்குப் பிறந்த புலி என்பதை நிரூபித்து, என் தந்தையின் சபதத்தை நிறைவேற்றுவேன்' என்று கிளம்பி விட்டால்—

வேண்டாம். அவனுக்கு எப்போது உண்மையைச் சொல்வது, அவனை எப்போது அரசன் என்று பிரகடனப் படுத்துவது என்பதெல்லாம் அண்ணனுக்குத் தெரியும்...

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்த நல்லினி, வளவனை அணைத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்:

''வளவா! அந்த அரசருக்கு 'உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி' என்று பெயர். மக்களுடன் நெருங்கிப் பழகிய அந்த நல்ல மன்னர், இளம் வயதிலேயே காலமாகி விட்டார். அவர், தன் மாதிரி அரச குடும்பத்திலே சம்பந்தம் செய்யாமல், நம் மாதிரி ஒரு வேளாளக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை அரசியாக்கிக் கொண்டார். அந்த உழவக் குடும்பப் பெண்ணுக்கு வீரமான மகன் பிறக்க மாட்டான் என்று மற்ற அரசர்களெல்லாம், அவரைக் கேலி செய்தார்கள்...''

"அதெப்படியம்மா?... வீரம் என்பது அரச குடும்பத்தார்க்கு மட்டும் உரிமையான சொத்தா? ஏன், நம் மாமா, அவரிடம் பயிற்சி பெறுகிற இளைஞர்கள் எல்லாம் எப்பேர்ப்பட்ட வீரர்கள்? அவர்களெல்லாம் சாதாரணக் குடும்பத்தவர்கள்தானே? 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சொல்வார்களே, அதை மற்ற அரசர்கள் படித்ததில்லையா?" என்று குமுறும் குரலில் வெடித்தான் வளவன்.

அவனுடைய வேகத்தையும் வாதத் திறமையையும் பூரிப்போடு ரசித்தாள் தாய்:

"சிறு பிள்ளைகளுக்கு ஞாபகம் இருக்கிற சில விஷயங்கள், பெரியவர்களுக்கு மறந்து போய்விடும் போலிருக்கிறது!" என்று சிரித்தாள் அவள்.

அத்தோடு பேச்சை மாற்றி விட்டாள் நல்லினி.

வளவனைப் பற்றிய ரகசியத்தை அவனுக்குத் தெரியாமல் சாமர்த்தியமாக மறைத்து விட்டதால், அவன் எந்த வித ஆபத்தான காரியத்திலும் இறங்க மாட்டான் என்று நினைத்துக் கொண்டாள் அவள். ஆனால் உண்மையில், அந்த ரகசியம் மறைக்கப்பட்டிருந்ததாலேயே, அவனுக்கு ஓர் ஆபத்து ஏற்படப் போகிறது என்பது அவளுக்குத் தெரியாது! அவனுடைய பிறப்பின் ரகசியம் அப்போது தெரிந்திருந்தால், ஒரு வேளை அவன் எச்சரிக்கையாய் இருந்து, அந்த ஆபத்திற்குள் சிக்காமல் இருந்திருக்கலாம், யார் கண்டது?

பிடவூர் மாளிகையில், தனியறையில் உல்லாசமாக நாட்டியத்தை ரசித்துக் கொண்டிருந்தான் இருங்கோ.

அழகான இரு பெண்கள் குழலும் யாழும் இசைக்க, இன்னொரு அழகி நடனமாடிக் கொண்டிருந்தாள். இருங்கோவின் கண்களின் கோணத்தையும் சுழற்சியையும் நுட்பமாகக் கவனித்தால், அவன் நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தான் என்பதைவிட, ஆடும் அழகியின் அழகு அவயவங்களைத்தான் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



அந்தப் பெண் சிறந்த நடனக்காரி என்பதற்காக அங்கே அழைத்து வரப்பட்டவள் இல்லை. அவள் ஒரு கவர்ச்சியான இளம் பருவ அழகி என்பதற்காகவே அந்த அறைக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாள்!

இருங்கோவின் தாத்தா மாந்தரன், பாண்டிய நாட்டுக்குச் சென்றிருந்ததால், அந்த மாளிகைக்கு இப்போது பேரன்தான் ராஜா!... அவன் வைத்ததுதான் சட்டம். தாத்தா இல்லாத ஒவ்வொரு வினாடியையும் வீணாக்காமல், அருமையாக ரசித்துப் பொழுதுபோக்காக, இன்பத்தில் மூழ்கியிருந்தான் இருங்கோ.

அவனுடைய அழகு ரசனையைக் கலைப்பதுபோல், தட தட என்று அறைக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது எரிச்சலோடு எழுந்து வெளியே வந்த இருங்கோ, எதிரே சித்திரன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்:

"சித்திரா! என்ன செய்தி? ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று, அந்த 'அழகுப் போதை'யிலும் நிதானமாகக் கேட்டான் அவன்.

அரசியும் திருத்தாமனும் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டறிய, மாந்தரன் நிறைய ஆட்களை அனுப்பி நாடெங்கும் தேடிப் பார்க்கச் சொல்லியிருந்தார். அவர்களில் ஒருவன்தான் சித்திரன்.

"அரசே, மறைந்த சோழ மன்னரின் வாரிசு வளவனை நாங்கூரில் கண்டேன்..." என்று அவன் சொன்னதும், அழகு ரசனைகளையெல்லாம் உதறிவிட்டு, பிரத்தியட்ச உணர்வுக்குத் திரும்பி வந்தான் இளங்கோ:

"என்ன, நாங்கூரிலா?... உண்மையாகவா?"

''ஆம்... நான் ஒவ்வொரு ஊராக அலைந்து சுற்றி விட்டு, நேற்று நாங்கூர் போய்ச் சேர்ந்தேன். அங்கே ஊர்க் கோடியில் உள்ள குளத்தங்கரையில் சிறுவர்கள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கே இரண்டு பையன்கள் விளையாட்டாக வாள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அவர்கள் சண்டையை வேடிக்கை பார்க்கச் சென்றேன். அவர்களிலே ஒருவனுடைய வாள்வீச்சும் கைச்சுழற்சியும் காலடிப் பாய்ச்சலும், திருத்தாமனின் பாணியில் இருந்தது...''

''அதனால் என்ன? திருத்தாமனின் தந்தை காகந்த ருடைய பள்ளியில் பயிற்சி பெற்ற யாராவது அந்தப் பையனுக்குப் பயிற்சி அளித்திருக்கலாமே?''

''யாராவது என்ன? சாட்சாத் திருத்தாமன்தான் அவனுடைய குரு! சண்டை முடிந்ததும் வெற்றி பெற்ற அந்த வளவன் என்ற பையனை ரகசியமாகப் பின் தொடர்ந்து சென்றேன். அவன் முகஜாடைகூட, நம் காலஞ்சென்ற மன்னரைப் போலவே இருந்தது. அவன் வீட்டுக்கு வந்ததும் 'அம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டே நுழைந்தான். உள்ளேயிருந்து வந்த அவனுடைய அம்மா— நம்முடைய பழைய பட்டத்தரசி நல்லினிதேவிதான்!''

''நன்றாகப் பார்த்தாயா, சித்திரா? அரசியேதானா?''

''அரசியைத்தான் எனக்கு நன்றாகத் தெரியுமே?... ஆனால், அரசி என்ற ஆடம்பரமோ படாடோபமோ இல்லாமல், சாதாரண கிராமத்துப் பெண் மாதிரி இருந் தார்கள். சிறிது நேரத்தில் வெளியே இருந்து திருத்தாமனே அங்கே வந்தார். 'வளவா! எங்கே போயிருந்தாய்? தனியாக நீ எங்கேயும் போகக்கூடாது, தெரியுமா?' என்று கண்டித்தார். 'ஏன் மாமா?' என்று வளவன் கேட்டான். ஆனால் அதற்கு அவரோ, அரசியோ பதில் சொல்லவில்லை. உண்மையில் அவன் யார் என்று அவனுக்குச் சொல்லாமலே வளர்த்து வருகிறார்கள் என்று



நினைக்கிறேன்,'' என்று விளக்கமாகச் சொன்னான் சித்திரன்.

இருங்கோவுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. இப்போதே வளவனைத் தொலைத்துவிட்டு, தான் அரியணை ஏறி விட்டதுபோல் சந்தோஷத்திலே பொங்கித் துள்ளினான்:

''சித்திரா! நாளைக்கே நீயும் இன்னும் நான்கு பேரும் நாங்கூர் போய், வளவனைத் தந்திரமாகத் தூக்கி வந்து விடுங்கள். அவனை இங்கே கொண்டுவர வேண்டாம். பருவூர்க் காட்டிலே நாம் வேட்டையாடப் போகும் போது தங்கும் வீடு இருக்கிறதல்லவா, அங்கே அவனை அடைத்து வைத்துக் காவல் காத்திருங்கள். பாண்டிய நாடு சென்றிருக்கும் தாத்தா இன்னும் இரண்டு நாளில் திரும்பி விடுவார். அவர் வந்ததும், வளவனை எப்படித் தொலைப்பது என்பது பற்றி அவரிடம் கேட்டுச் செய்ய லாம்...'' என்று ஆணையிட்டான் இருங்கோ.

சித்திரனிடம் செலவுகளுக்கான பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, சோழ சாம்ராஜ்யத்தை அடைந்து விட்ட மகிழ்ச்சியைக் கொண்டாட, தன்னுடைய தனியறையின் இன்ப சாம்ராஜ்யத்துக்குள் நுழைந்தான் அவன்.

மறுநாள், சித்திரன் நான்கு வீரர்களோடு மூன்று குதிரைகளில் நாங்கூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

முதல் நாள் வளவனைப் பார்த்த இடத்திலே சிறிது நேரம் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அதிர்ஷ்டம், அந்த இடத்திற்கே மறுநாளும் வளவன் தன் நண்பர்களுடன் விளையாட வந்தான். குளத்தங்கரையில் நின்ற ஓர் உயர்ந்த மாமரத்தில் மாங்கனிகளை வில் அம்புகளால் குறி வைத்து வீழ்த்துகின்ற விளையாட்டை ஆரம்பித்து வைத்தான் வளவன்.

தன் துணையாட்களைத் தூரத்தில் நிறுத்தி வைத்து விட்டு, சித்திரன் மட்டும் அங்கே வந்து மறைந்து நின்றான்.

“டேய்! இன்றைக்குச் சீக்கிரம் விளையாட்டை முடித்துக் கொள்ள வேண்டும். என் மாமா புகாருக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வருவதற்குள் நான் வீட்டுக்குப் போய்விட வேண்டும். நாம் இங்கே வந்து விளையாடுவது தெரிந்தால், அவர் கோபித்துக் கொள்வார்...” என்று வளவன் சொல்வது, சித்திரனின் காதுகளில் தெளிவாக விழுந்தது.

மறைவிடத்திலிருந்து வெளிப்பட்ட சித்திரன், வேகமாக வருவது போல் அந்தக் கூட்டத்திற்குள் வந்தான்.

“தம்பிகளா! இங்கே வளவன் என்று ஒரு பையன் இருக்கிறானா?” என்று தெரியாத புதிய ஆள் போல் கேட்டான்.

உடனே வளவன் முன்னால் வந்து “ஏன், நான்தான் வளவன்” என்றான்.

“உன் மாமா திருத்தாமன் என்பவர், புகார் சென்று திரும்பும் வழியில், கையில் ஏதோ அடிபட்டு, குதிரை ஓட்ட முடியாமல், புகார் சாலையிலே உட்கார்ந்திருக்கிறார். உன்னைக் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்...”

அதைக் கேட்டதும் பதறிப் போன வளவன், மாமாவுக்கு எப்படி அடிபட்டது, எங்கே காயம்பட்டது என்றெல்லாம் கேட்கவும் கருதாமல், உடனே புறப்பட்டு விட்டான்.

“வளவா! நாங்களும் வருகிறோம்...” என்று நண்பர்கள் கிளம்பினார்கள்.

“வேண்டாம். வளவனை மட்டும்தான் கூட்டிவரச் சொன்னார்...” என்று சொல்லி, அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டு, வளவனை மட்டும் குதிரையில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான் சித்திரன்.



சிறிது தூரம் சென்றதும், மற்ற இரண்டு குதிரைகளில் நான்கு ஆட்கள் சித்திரனுடன் வந்து சேர்ந்து கொண்டது, வளவனுக்குத் திகைப்பூட்டியது:

“இவர்களெல்லாம் யார்?... மாமா எங்கே இருக்கிறார்?...” என்று கேள்விக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தான் வளவன்.

“வளவா! பேசாமல் வா...” என்று உறுமினான் சித்திரன். மற்றவர்கள், வளவனுடைய பதற்றத்தைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.

ஊர் எல்லையைக் கடந்து, புகார்ச் சாலையில் திரும்பிச் சிறிது தூரம் சென்றதும், எதிரே ஒரு குதிரை வேகமாக வரும் சப்தம் கேட்டது.

சற்று நேரத்தில் அந்தக் குதிரையில் வரும் ஆள் அடையாளமும் தெரிந்தது.

அந்த ஆள், திருத்தாமன்தான்!

எதிரே வருவது மாமா என்பதை வளவன் பழக்கத்தினாலும், சித்திரன் கூர்மையான பார்வையாலும் ஒரே சமயத்தில் தெரிந்துகொண்டு விட்டார்கள்.

தன் முன்னால் உட்கார்ந்திருக்கும் வளவன் ‘மாமா!’ என்று அபயக்குரல் எழுப்புவதற்குள், சட்டென்று அவன் வாயை இறுக மூடிக்கொண்டு, தன் குதிரையை மட்டும் சாலையிலிருந்து கீழே இறக்கி, ஒரு மறைவான அடர்ந்த புதர்ப்பக்கம் திருப்பினான் சித்திரன்.

“நீங்கள் மெதுவாக நேரே போய்க் கொண்டிருங்கள்!” என்று தன் துணையாட்களை நேரே அனுப்பிவிட்டான்.

எல்லோரும் திடீரென்று பாதையை விட்டுக் கீழே இறங்கினால், ஒருவேளை திருத்தாமனுக்குச் சந்தேகம் ஏற்படலாம் இல்லையா? அந்த மாலைப் பொழுதின் மஞ்சள் வண்ண அந்தி வெயிலிலே, எதிரே மூன்று குதிரைகள் வந்தன என்பது திருத்தாமனுக்குத் துல்லிய

மாகத் தெரிய வாய்ப்பில்லை; ஒரு குதிரை சாலையை விட்டுக் கீழே இறங்கி ஒளிந்துவிட்டது என்பதை அவன் கண்டுபிடிக்க முடியாதே!

சித்திரன் நினைத்தது சரியாயிருந்தது.

## 9

புகார்ச் சாலையிலிருந்து கீழே இறங்கி, ஒரு பெரும் புதருக்குள் ஒளிந்துகொண்ட சித்திரனின் இறுகிய கைகளை மீறி, மாமாவைக் கூப்பிட வளவன் எவ்வளவோ திமிறிப் பார்த்தான்; ஆனால் வாயைத் திறக்க விடவில்லை சித்திரன்.

திருத்தாமனின் குதிரை, அவர்களைக் கடந்து வெகு தூரம் சென்று மறைந்தபின்தான், சித்திரன் வளவனின் வாயை மூடியிருந்த, தன் இரும்புக் கையை நீக்கினான்.

''தம்பி! வீணாக முரண்டித் திமிறி உடம்பைப் புண்ணாக்கிக் கொள்ளாதே! இன்னும் இரண்டு நாளில், மேல் உலகம் போகும்போது உடல் வலியோடு போக வேண்டுமா?'' என்று கொடூரமாகச் சிரித்தான் சித்திரன்.

மூன்று குதிரைகளும் சிறிது நேரப் பயணத்திற்குப் பிறகு, புகார்ச் சாலையிலிருந்து பிரிந்து, வடக்குத் திசையில் திரும்பி, ஒரு செறிவான காட்டுப் பாதையில் போய்க் கொண்டிருந்தன.

வளவன் அழுதழுது கண்கள் சிவந்துவிட்டன. தன் உயிருக்கு ஆபத்து என்பதைப் புரிந்துகொண்டான் சிறுவன். அந்த ஆபத்திலிருந்து தப்ப முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை.



சாவதற்கு முன்பு, மாமாவையாவது தூரத்திலிருந்து பார்க்க முடிந்தது; ஆனால் அம்மா முகத்தை இனி எப்போது பார்க்கப் போகிறான்?...

காட்டின் நடுப்பகுதியில் இருந்த ஒரு பழைய வீட்டுக்குள் வளவனைக் கொண்டுபோய் அடைத்துவிட்டு, வெளியே எல்லோரும் காவல் இருந்தார்கள்.

பனை ஓலையாலே வேயப்பட்ட அந்த வீடு, வேட்டையாட வரும்போது தங்குவதற்காகக் கட்டப்பட்ட கூடாரம் மாதிரிதான்; ஆனால் சுற்றுச் சுவர்கள் பலமாக அமைக்கப்பட்டிருந்தன. நான்கு பக்கமும் ஜன்னல்கள் இருந்தன; ஒரே கதவுதான்.

அந்த வீட்டுக்குள் சுற்றிவந்த வளவனுக்கு, சுற்றிலும் காடுதான் கண்ணில் பட்டது. ஜன்னல்களும் கதவும் அசைக்க முடியாதபடி வலுவாக இருந்தன. கதவுப் பக்கத்தில் கொலையாளிகள் எப்போதும் ஒன்றாக உட்கார்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய பேச்சிலிருந்து— வளவனைக் கொன்று ஒழித்துவிட்டால், புகார் நகரத்து அரியணை இருங்கோ என்பவனுக்குச் சுலபமாகக் கிடைக்கும் என்றும், மாந்தரன் என்பவர் பாண்டிய நாட்டிலிருந்து திரும்பியதும்தான் வளவனைக் கொல்லப் போகிறார்கள் என்றும் அவன் யூகித்துக் கொண்டான். ஆனால், அரியணைக்கும் தனக்கும் என்ன சம்பந்தம், அரியணையைக் கைப்பற்றுவதற்காகத் தன்னைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன என்பதெல்லாம் அவனுக்குப் புரியவில்லை.

வேடர்கள் தோண்டி வைத்த குழிக்குள் அகப்பட்டுக் கொண்ட ஆண் யானைபோல, அந்த வீட்டுக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து யோசித்துக் கொண்டிருந்தான்.

வேளாவேளைக்கு அவனுக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தார்கள். மூன்று பேர் உருவிய வாளுடன் உள்ளே வந்து உணவுத் தட்டை அவன் முன்னால் வைத்துவிட்டு

வெளியே போய் மறுபடியும் கதவை அடைத்துக்கொண்டு விடுவார்கள். மூன்று வீரர்களையும் நிராயுதபாணியான வளவனால் தாக்கித் தப்பிக்க முடியுமா?

மறுநாள், சித்திரன் பிடவூருக்குப் புறப்பட்டுச் சென்றான். மாந்தரனைச் சந்தித்து, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுத் தெரிந்து வருவதற்காக அவன் போய்விட்டான். மற்ற நான்கு பேரும், வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் புரிந்தார்கள். கால் கடுக்கும் போது, வாசற் கதவுக்கு வெளியே ஒன்றாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

''நாளைக் காலையில் மாந்தரனிடமிருந்து நமக்குக் கட்டளை வந்துவிடும். இந்தப் பையனைத் தொலைத்து விட்டு நாம் ஊருக்குத் திரும்பிவிடலாம்...'' என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"பாவம் இந்தப் பையன்! இவ்வளவு இளம்வயதிலேயே மேலுலகம் போகவேண்டும். இவனுக்குத் தலைவிதி!... அரச குடும்பத்திலே பிறந்தால் இப்படித்தான்; கிடைத்தால் சாம்ராஜ்யம்; தவறினால் சமாதி!... நம்மாதிரி ஏழைக் குடும்பத்திலே பிறந்திருந்தால், இந்தமாதிரி பெரிய ஆபத்துக்களெல்லாம் வராதுடா!...'' என்று சிரித்தான் இன்னொருவன்.

"பாவம்! இவனுடைய அப்பா, ஒருகாலத்திலே சோழ நாட்டுக்கே மன்னராய், அழகு அழகான தேர்களிலே ஊர்வலம் வருவார். ஆனால் அவருடைய மகனுக்குச் சவ ஊர்வலம்கூட பிராப்தம் இல்லாமல், காட்டிலே சமாதியாகப் போகிறான்!'' என்று பரிதாபப்பட்டான் ஒருத்தன்.

வளவனுக்கு, அவர்களுடைய பேச்சு இப்போது தெளிவாகப் புரிய ஆரம்பித்தது...

எப்படியாவது இந்தச் சிறையிலிருந்து தப்ப வேண்டும் என்று துடித்தான் அவன். அதுவும் இன்றைக்குள்ளே



தப்பியாக வேண்டும். நாளை எதிரிகள் அவனுக்கு நாள் குறித்திருக்கிறார்கள்!...

— தீவிரமாகச் சிந்தனையில் மூழ்கிய வளவனுக்கு, ஒரு யோசனை பளிச்சிட்டது.

கதவுக்கு வெளியே மூன்று பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, வளவன் திடீரென்று ''பாம்பு!... பாம்பு!... ஐயோ பாம்பு!... ஓடிவாருங்கள், பாம்பு!...'' என்று அலறினான்.

திடுக்கிட்டு எழுந்த மூவரும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஓடிவந்தார்கள். விருட்டென்று வளவன், வாயில் பக்கம் நகர்ந்து, கதவுக்குப் பின்னால் நின்று கொண்டான். இரண்டுபேர் உள்ளே நுழைந்ததும், பின்னே மூன்றாவது ஆள் நுழையும்போது, தன் காலைக் குறுக்கே நீட்டி அவனைக் கீழே விழச்செய்து, அவன் மேல் பாய்ந்து அவன் இடுப்பில் இருந்த வாளை உருவிக்கொண்டு, மின்னல் வேகத்தில் வெளியே பாய்ந்து, கதவை அடைத்துக் கொண்டுவிட்டான் வளவன்.

கூச்சல் கேட்டு வாயிற்பக்கம் ஓடிவந்த நான்காவது வீரன், தப்பியோட முயன்ற வளவனைத் தடுத்துப் போரிட்டான். இருவரும் வாள் சண்டையில் இறங்கி, மும்முரமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அனுபவம் வாய்ந்த அந்த வீரனின் ஆக்ரோஷமான தாக்குதலை, நுட்பமாகச் சமாளித்துக் கொண்டிருந்த வளவன், திடுதிப்பென்று இளமை வேகத்தைக் காட்டி வாளை எதிர்பாராத கோணத்தில் சுழற்றினான். இளம் ரத்தத்தின் துடிப்புக்கு முன், அந்த வயதான வீரன் தடுமாறிவிட்டான். அவனைப் படுகாயப்படுத்திக் கீழே வீழ்த்தியபோது, உள்ளே அடைபட்டிருந்த மூவரும் கதவை உடைத்துக்கொண்டு வெளியே வந்து வளவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால் வளவன் அஞ்சவில்லை.

எப்படியும் போகப் போகிற உயிர்தானே, போரிட்டாவது சாவோம் என்ற துணிச்சலில், யானைக் கூட்டத்தில் புகுந்த சிங்கக்குட்டி போல, துள்ளிக் குதித்து அவர்களுடன் மோதினான்.

மாமனிடம் பெற்ற பயிற்சியும் இரத்தத்தில் ஓடிய பரம்பரை வீரமும் இளமையின் வேகமும் உயிரைப் பற்றிய துச்சமும், அவனுடைய வாள் சண்டையிலே வீச்சுக்கு வீச்சு பிரதிபலித்தன... ஒவ்வொருவராக மூவரையும் வீழ்த்தி விட்டு, வெற்றி வீரனாக அந்த இடத்தைவிட்டுப் பறந்து விட்டான் வளவன்.

வேடர்கள் தோண்டி வைத்த குழிக்குள்ளே விழுந்த ஆண்யானை, தன் கொம்பாலே அந்தக் குழியின் பக்கங்களைக் குத்திக் குத்தி அதன்மூலம் குழியைத் தூர்த்து வெளியேறி, தன் இனத்தைச் சேர்ந்ததுபோல,[1] வளவன் வாள் திறமையால் கொலையாளிகளிடமிருந்து தப்பி, இரவு பூராவும் காட்டுக்குள் சுற்றியலைந்து, கடைசியில் தன் வீடு வந்து சேர்ந்தான்.

மகனை இழந்த வருத்தத்தில் அழுது புலம்பிக் கொண்டிருந்த நல்லினிதேவி, வளவனைக் கண்டதும், உயிர் திரும்ப வரப்பெற்றவளாய் அவனைக் கட்டி யணைத்து உச்சி மோந்து முத்தமிட்டாள்:

"கண்ணே! என் உயிரே!... எங்கேடா போனாய்?... எப்படித் தப்பித்து வந்தாய்? பாதி உடம்பாய் இளைத்துப் போய் விட்டாயே?" என்று அவன் உடலெங்கும் ஆதுரத் துடன் தடவிக் கொடுத்தாள்.

வளவன், நடந்ததையெல்லாம் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்:

"அம்மா! என்னை அரச குடும்பத்தின் வாரிசு என்றும், என்னைக் கொன்று விட்டால் இருங்கோ

1. 'பட்டினப்பாலை' : (222—225)



என்பவனுக்கு அரியணை கிடைக்கும் என்றும் சொன்னார் களே. யாரோ மாந்தரன் என்று சொன்னார்களே, அவர் களெல்லாம் யாரம்மா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் மகன்.

இனியும் அவனிடமிருந்து உண்மையை மறைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டாள் அரசி.

"மகனே! சோழ மன்னருடைய செல்வப் புதல்வனாய், செல்வம் கொழிக்க, அரண்மனையில் வாழ வேண்டிய நீ, இங்கே யாரோ ஒரு சாதாரணப் பையனாய் மறைந் திருந்து வளர்ந்து கொண்டிருக்கிற அவலக் கதையைச் சொல்கிறேன்..." என்று தொடங்கி, கடந்தகால நிகழ்ச்சிகளைச் சொன்னாள் நல்லினி:

"என் மகன் ஒரு வீரனாக இருப்பான் என்று உன் தந்தை செய்த சபதத்தை நீ நிறைவேற்றி வைக்கவேண்டும், வளவா! அப்போதுதான் அவருடைய ஆத்மா சாந்தி யடையும்..." என்று குரல் தழுதழுக்க விம்மிய தாயின் கண்ணீரை, தன் பிஞ்சுக் கைகளால் துடைத்துவிட்டான் வளவன்.

"கவலைப்படாதே அம்மா! நான் நிச்சயம் அப்பா வின் சபதத்தை நிறைவேற்றுவேன்; உன்மீது ஆணை!... நம்மை இழிவாகப் பேசிய பாண்டியனையும், அவனுக்குத் துணையாக வருபவர்களையும், என்னைச் சிறைபி லடைத்த இருங்கோ, மாந்தரன் எல்லோரையும், வென்று தோற்கடித்து, நான் வீரனுக்குப் பிறந்த வீரன் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன், அம்மா!" என்று முகம் சிவக்க, வீராவேசமாக முழங்கிய மகனைப் பார்த்து மெய்சிலிர்த்து, உள்ளம் பூரித்து நின்றாள் தாய்.

"வளவா! உன்னை ஒரு வீரனாக உருவாக்கி வருகிற உன் மாமா, நீ யார் என்று உலகத்துக்கு அறிவிக்கும்வரை, நீ யார் என்பதை நீயாக யாருக்கும் தெரிவிக்கக்கூடாது... கவனமாக இரு..." என்று எச்சரித்தான் அவன்.

''சரி அம்மா! என்னை எப்போது புகாருக்கு அழைத்துச் செல்வது என்பது மாமாவுக்குத் தெரியும். அதுவரை நான் யாரிடமும் நம் ரகசியத்தைச் சொல்ல மாட்டேன்... எச்சரிக்கையாகவே இருப்பேன்...''

''ஆனால், நீ யார் என்பதை இப்போது எதிரிகள் தெரிந்து கொண்டு விட்டார்களே?... ஆகவே நீ தனியே எங்கும் போகக்கூடாது...''

''சரி, அம்மா! அப்படிப் போகும்படி நேரிட்டால், எப்போதும் வாள் கையிலே வைத்திருப்பேன். கையிலே வாள் இருந்தால், எத்தனை எதிரிகள் வந்தாலும் ஓட ஓட விரட்டி விடுவேனம்மா!'' என்று பொங்கித் துடித்தான் வீரமகன்.

''வளவா! உன்னை எதிரிகள் தூக்கிச் சென்றதும், மாமா ஒரு ரகசிய ஓலை எழுதி, புகாரில் அமைச்சரிடம் கொடுக்கும்படி நம்பிக்கையான ஓர் ஆள் மூலம் அனுப்பி விட்டு, உன்னைத் தேடிப் போனவர் இன்னும் திரும்பவில்லை. அவர் திரும்பி வந்ததும், நாம் இந்த இடத்தைவிட்டு, வேறு ஊருக்குப் போய் விடுவோம். உன் இருப்பிடத்தை எதிரிகள் கண்டு கொண்ட பிறகு, நாம் இங்கிருக்கக் கூடாது...'' என்று முடிவு செய்தாள் நல்லினி.

அன்றும் திருத்தாமன் திரும்பி வரவில்லை; மறுநாளும் வரவில்லை...

பாவம்! மாமா உன்னைத் தேடி எங்கெங்கெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறாரோ?'' என்று உருகினாள் நல்லினி.

''ஏம்மா, ஒரு வேளை, புகாரிலே அரண்மனையில் சொல்லி, வீரர்களும் சேர்ந்து தேடிக் கொண்டிருக்கிறார்களோ, என்னவோ?'' என்று சந்தேகப்பட்டான் வளவன்.

அன்று மாலை வரை, வீட்டுக்குள்ளேயே இருந்து அலுத்துப் போன வளவன், ''அம்மா! வெளியே காலாரச்



சிறிது நேரம் நடந்து போய் விட்டு வருகிறேன்...'' என்று சொல்லிவிட்டு, கையில் வாளுடன் கிளம்பினான்.

''சரி... சீக்கிரம் திரும்பி விடு... இருட்டுகிறவரை அங்கே திரியக்கூடாது.'' என்று சொல்லியனுப்பினாள் தாய்.

வளவன், ஊர்க்கோடியில் உள்ள மாந்தோப்பு அருகே வந்தபோது, எதிரே இரண்டு குதிரை வீரர்கள் வந்து அவனைப் பார்த்தவுடன் கீழே இறங்கி, அவன் முன்னால் பணிவாக நின்றார்கள்:

''அரசே! வாழ்க நின் கொற்றம்...'' என்று அவர்கள் அவனை வாழ்த்தி வணங்கியதும், திகைத்து நின்றான் வளவன்.

அவன் அரசன் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிற இவர்கள் யார்?... எதிரிகளாக இருப்பார்களோ?... இருக்காது; எதிரிகள்தான் அவனை அரசன் என்றே அங்கீகரிக்கவில்லையே? குலப் பகைவனாகக் கருதி, பாய்ந்து கொல்ல அல்லவா காத்திருக்கிறார்கள்...?

''அரசே! நான்தான் அரசாங்க ஒற்றர் தலைவன் உருத்திரன். நீங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு எதிரிகளால் தூக்கிச் செல்லப்பட்டுவிட்டதாக, உங்கள் மாமா திருத்தாமன் புகாருக்கு வந்து தெரிவித்ததும், நாங்கள் நாலாபக்கமும் வீரர்களை அனுப்பித் தேடினோம். பருவூர்க் காட்டுக்குள் தேடிச்சென்ற நம் வீரர்கள், அங்கே உள்ள வேட்டைக்கூடாரத்திலே உங்களால் காயப்படுத்தப் பட்டுக் கிடந்த நான்கு எதிரிகளையும் பார்த்து, நடந்ததை அறிந்துகொண்டு எங்களிடம் வந்து தகவல் தெரிவித்தார்கள். உடனே ஐம்பெருங் குழுவைக் கூட்டி ஆலோசனை செய்தோம். உங்களையும் உங்கள் இருப்பிடத்தையும் எதிரிகள் அடையாளங் கண்டுகொண்டு விட்டதால், இனிமேல் மறைந்து இருப்பது கடினம்; உங்கள் உயிருக்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம். ஆகையால்

உங்களை உடனே தலைநகர் அரண்மனைக்கு அழைத்து வர முடிவு செய்துள்ளார்கள்...'' என்று விளக்கமாகப் பேசினான் ஒரு குதிரை வீரன்.

''மாமா இப்போது புகாரில்தான் இருக்கிறாரா?'' என்று விசாரித்தான் வளவன்.

''ஆமாம். அமைச்சர் உதயதேவர் வீட்டில் இருக்கிறார். அரசே! நீங்கள் வேட்டைக்கூடாரத்திலிருந்து தப்பித்து விட்டதைக் கேட்டதும் ஏமாற்றமடைந்த மாந்தரன், ஒரு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு, சீக்கிரமே நாங்கூரை முற்றுகையிடத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். அதற்குள்ளே உங்களை அரண்மனைக்குள் பத்திரமாக நாங்கள் சேர்த்துவிடவேண்டும்... உடனே புறப்படுங்கள்...'' என்று அவசரப்படுத்தினான் அவன்.

''சரி... அம்மாவிடம் செய்தியைச் சொல்லி, அவர்களையும் அழைத்துக்கொண்டு புறப்படுவோம்...'' என்று திரும்பினான் வளவன்.

''அரசே! வேண்டாம். நீங்கள் சிறிது நேரம்கூட காலந் தாழ்த்தக்கூடாது. மேலும் அரசியாரை இந்த எளிய சூழ்நிலையிலே பார்க்க என் மனம் தாங்காது. அரசவை மண்டபத்திலே, அந்தப்புர மாளிகையிலே, மணியாசனத்திலே பட்டத்தரசியாகக் கம்பீரமாகத் திருமகள் போல் வீற்றிருந்த அந்த அரசமாதேவியை, ஒரு பழைய குடிசையிலே, குடியானவப் பெண்ணாகப் பார்த்தால், என் மனம் சுக்குநூறாக வெடித்துவிடும், அரசே!'' என்ற அவனுடைய கண்களில் நீர் துளும்பி வழிந்தது.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவன் ''அரசே! அரசியாரை அழைத்து வர, ராஜமரியாதைகளோடு பல்லக்கும் பரிவாரமும் புகாரிலிருந்து இந்நேரம் புறப்பட்டிருக்கும். அவர்கள் வந்துசேரும் வரை நாம் காத்திருக்க வேண்டாம். நீங்கள் சீக்கிரமே அரண்மனைக்குள் போய்ச்



16863

சேர்ந்து விடுவது நல்லது... அரசே! இன்னொரு முக்கியமான விஷயம்... நீங்கள் இப்படி வெளிப்பட்டு எங்களுடன் வருவது சரியில்லை. ஏனென்றால் உங்களை ஏற்கனவே எதிரிகள் பார்த்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் சிறிது தோற்றத்தை மாற்றிக் கொள்வது பாதுகாப்பானது...'' என்று சொல்லிவிட்டு, தன் இடுப்பில் கட்டியிருந்த ஒரு துணியை எடுத்துக் கொடுத்து ''இதை உங்கள் தலையில் பெரிதாகச் சுற்றி, நெற்றி மறையும்படி கட்டிக் கொள்ளுங்கள்; எதிரிகள் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடும்...'' என்று யோசனை சொன்னான் அவன்.

ஒற்றர் தலைவனின் சாமர்த்தியத்தைக் கண்டு வியப்படைந்தான் வளவன்.

ஒற்றன் கூறுவதிலும் உண்மையிருப்பதை உணர்ந்தான் அவன். ஏமாந்துபோன மாந்தரன், எந்த வினாடியிலும் பெரும் படை பலத்தோடு நாங்கூரைத் தாக்கித் தன்னைக் கொல்லவருவான் என்பது நிச்சயம்தான்.

ஒற்றர் தலைவன் கொடுத்த குதிரையில் ஏறிப் புறப்பட்டான் வளவன். பின்னாலேயே மற்றொரு குதிரையில் ஒற்றர்தலைவன் ஏறி வளவனைப் பின் தொடர்ந்தான்.

இரண்டு குதிரைகளும் சிறிதுதூரம் சென்றதும், பக்கத்துப் புதரிலிருந்து ஒரு குதிரைவீரன் சரேலென்று வெளிவந்து, அவர்களைப் பின் தொடர்ந்ததை வளவன் கவனிக்கவில்லை...

**பாண்டிய** நாட்டிலிருந்து திரும்பிய மாந்தரன், பருவூர்க்காட்டிலே வளவன் சிறைவைக்கப்பட்டிருப்பதைக் கேட்டதும், தன் முதிய வயதையும் மீறி, உற்சாகத்தில் துள்ளிக் குதித்தார்.

''அப்பாடா! என் லட்சியம் நிறைவேறப் போகிறது!... சோழ குலத்தின் வாரிசு, முளையிலே கிள்ளியெறியப்

படப் போகிறது!... சோழநாட்டின் பரம்பரை மணிமகுடம், என் பேரனின் தலையிலே இடம் பெறப் போகிறது!... இனிமேல், சோழ மண்ணின் ஆட்சியுரிமை, இந்த மாந்தரனின் பரம்பரைக்கே!...'' என்று மகிழ்ச்சியில் பூரித்துப் பொங்கி முழங்கிக்கொண்டிருந்தார் தாத்தா.

''தாத்தா! சிறையிலிருக்கும் அந்தச் சிறுவனை எப்படித் தீர்த்துக்கட்டுவது? உங்களுடைய ஆணைக்காகத் தான் அவனை அங்கேயே அடைத்து வைத்திருக்கிறேன்...'' என்றான் இருங்கோ.

உண்மையான பட்டத்து வாரிசை எந்த முறையில் கொல்வது என்ற சிந்தனையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார் மாந்தரன்.

''இருங்கோ! அவனை வாளால் வெட்டிக் கொல்ல வேண்டாம். அவனைக் கூடாரத்துக்குள்ளேயே தூணில் கட்டி வைத்து, சுற்றிலும் ஓலையைப் போட்டு, எண்ணையை ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுங்கள். தீவிபத்திலே சிக்கி எரிந்து போய்விட்டான் என்று நாட்டு மக்களிடையே செய்தியைப் பரப்பி விடுவோம். பிறகு, அரியாசனத்துக்கு வாரிசே இல்லாத நிலையில், நீதானே அரசாட்சிக்கு உரிமையுள்ளவன்? மக்கள் மூலமே ஒரு புரட்சியைத் தூண்டிவிட்டு, உனக்குப் பட்டம் வாங்கித்தரச் செய்துவிடுகிறேன்...'' என்று மாந்தரன் பேசிக்கொண்டிருக்கும்போதே, வெளியே யிருந்து சித்திரன் ஓடிவந்தான்.

''ஐயா! ஏமாந்துவிட்டார்கள் நம் ஆட்கள். வளவன் தந்திரமாகத் தப்பித்து ஓடிவிட்டான்...'' என்று அலறிக் கொண்டே நுழைந்தான் அவன்.

திகைத்து நின்றார்கள் தாத்தாவும் பேரனும்.

சித்திரன், பருவூர்க்காட்டு வீட்டிலே நடந்ததைக் கூறியதும், இருவரது முகங்களும் தொங்கிப் போய் விட்டன.



''சரி... இனி நடக்கவேண்டியதைப் பார்ப்போம். வளவன் புத்திசாலித்தனத்தில் மட்டுமல்ல, வாள் வீச்சிலும் கெட்டிக்காரன் என்று தெரிகிறது. இனிமேல் அவனிடம் வாளைக் காட்டிப் பயமுறுத்த முடியாது. தப்பித்துப் போன வளவனை உடனே வேறு ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் ஒளித்துவைக்க, திருத்தாமன் முயற்சி செய்வான். அதற்குள் நாம் வளவனை அமுக்கிவிட வேண்டும்...'' என்றார் மாந்தரன்.

''தாத்தா! உடனே நம் படைவீரர்கள் நூறுபேரை அனுப்பி, ஊரையே முற்றுகையிட்டு வளவனைப் பிடித்து விடுவோமே?'' என்று துடித்தான் இருங்கோ.

''இல்லை... இல்லை... அப்படிச் செய்யக் கூடாது. நாங்கூரைப் பற்றி உனக்குத் தெரியாது. அது வீரம் விளைகின்ற பூமி. நம் வீரர்கள் நிறையப் பேர் அங்கு போனால், ஊர் மக்கள் சந்தேகப்பட்டு விடுவார்கள். விளைவுகள் மோசமாகிவிடும். தந்திரத்தால்தான் நாம் வளவனைக் கைப்பற்ற வேண்டும். அவனைக் காப்பாற்று வதில் திருத்தாமனும் புகார் அதிகாரிகளும் தீவிரப்படும் முன்பு, நாம் அவனைப் பிடித்துவிட வேண்டும்...'' என்று சொல்லிவிட்டு ஏதோ சிந்தித்தவாறே இருந்தார் மாந்தரன்.

அவருடைய நெற்றியில் விழுந்த சிந்தனைச் சுருக்கங்கள், மூப்பினால் ஏற்பட்ட சுருக்கங்களோடு நெருங்கிச் சுளித்து நின்றன. கடைசியில் ஒரு நல்ல திட்டத்தைச் சிந்தித்து உருவாக்கி, அதைச் சித்திரனிடம் கூறி நிறைவேற்றச் சொன்னார் அவர்.

''சித்திரா! சீக்கிரம் புறப்படு... புகார் நகரத்து அதிகாரிகள் சுறுசுறுப்பு அடைவதற்குள் நீ நாங்கூரில் இருக்கவேண்டும்...'' என்று அவனை அனுப்பிவைத்தார் மாந்தரன்...

**அன்று**— மாலை நேரத்தில் மேலைவானத்தில் சூரியன் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருக்கும்போது, புகாரிலிருந்து வரும் நெடுஞ்சாலையிலே திருத்தாமன் ஒரு குதிரையில் வெகு வேகமாக நாங்கூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால், சிறிது தூரம் இடைவெளியில், ஒரு நாங்கூர் இளைஞனும் அருட்கோதையும் அமர்ந்திருந்த குதிரை, மின்னல் வேகத்தில் ஊரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

## 10

**வளவனைத்** தேடிச் சென்ற தமையனை எதிர் பார்த்து, வாயிற்படியிலேயே நின்று கொண்டிருந்தாள் நல்லினிதேவி.

குதிரையில் வேகமாக வந்த திருத்தாமன், கீழே இறங்கும் முன்பே, ''வளவன் வந்துவிட்டானா?'' என்று துடிப்புடன் கேட்டான்.

''வந்துவிட்டான், அண்ணா!... நேற்றே வந்துவிட்டான்... வாருங்கள்... நீங்கள் நன்றாக அலைந்திருப்பீர்கள் போலிருக்கிறது... ஏதாவது சாப்பிடலாம், வாருங்கள்...'' என்று உள்ளே திரும்பினாள் தங்கை.

''நல்லினி! வளவன் எங்கே போயிருந்தானாம்? எப்படித் தப்பினானாம்? எங்கே அவனைக் காணோம்?'' என்று ஆர்வத்துடன் கேட்டபடியே அவள் பின்னாலேயே வந்தான் திருத்தாமன்.



''இவ்வளவு நேரம் உங்களுக்காகக் காத்திருந்துவிட்டு, இப்போதுதான் வெளியே போயிருக்கிறான்... இதோ, இந்தப் பாலைச் சாப்பிடுங்கள்...'' என்று பால் குவளையை அண்ணனிடம் கொடுத்தாள் நல்லினி.

''சரி, அவன் எப்படித் தப்பிவந்தான் என்பதைச் சொல்லு...''

வளவன் எதிரிகளிடம் சிக்கியது முதல் நடந்தவற்றை விளக்கமாக அண்ணனிடம் சொன்னாள் நல்லினி.

''ஆகா! என் மருமகன், பரம்பரை வீரத்தைத் தாண்பித்துவிட்டான்!... குட்டி என்றாலும் அவன் புலி தான்!''

''ஒரு புலிக்குப் பிறந்தது மட்டுமில்லை; ஒரு புலியிடம் பயிற்சி பெற்றவனுமாயிற்றே?'' என்று இரு உறவுகளிலும் பெருமைப்பட்டாள் நல்லினி.

அந்தச் சமயத்தில், வேகமாக ஒரு குதிரை வந்து நிற்கும் சப்தம் கேட்டு, இருவரும் வெளியே வந்து பார்த்தார்கள்.

அவன் புகாருக்கு ரகசிய ஓலை கொடுத்தனுப்பிய நாங்கூர் இளைஞனும் அருட்கோதையும் குதிரையிலிருந்து இறங்கினார்கள்.

''மாமா!... மாமா!... வளவனுக்கு மறுபடியும் ஆபத்து... எதிரிகள் அவனைப் பிடித்துக் கொண்டுபோய்க் காட்டில் வைத்திருக்கிறார்கள்...'' என்று மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்க, பதற்றத்துடன் கூவினாள் கோதை.

மாமனும் தாயும் திடுக்கிட்டு நின்றார்கள்:

''கோதை! என்னம்மா சொல்கிறாய்?'' என்று திகைப்புடன் அவளிடம் விவரத்தைக் கேட்டார்கள்.

மாலை நேரத்தில் வளவன் தனியே மாந்தோப்பை நோக்கிப் போவதைப் பார்த்த அருட்கோதை, அவனுக்குத்

தெரியாமல், பின்னாலேயே போனாள். (மாந்தோப்பில் தனியாக அவனுடன் பேசிக்கொண்டிருக்கலாம் என்ற ஆசை பொங்க, அவனைப் பின் தொடர்ந்ததை அவள் கூறவில்லை!) அவள் சிறிது தூரம் பின்னால் இருக்கும் போது, வளவனிடம் இரண்டு குதிரை வீரர்கள் வந்து ஏதோ சொன்னதும், அவர்களும் வளவனும் குதிரைகளில் ஏறிப் புறப்பட்ட சிறிது நேரத்தில், பாதையின் பக்கத்தில் ஒரு புதரிலிருந்து இன்னொரு குதிரை புறப்பட்டு அவர்களைப் பின்தொடர்ந்ததும், கோதைக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தின.

ஒருவேளை எதிரிகள் மறுபடியும் வளவனைத் தந்திரமாகக் கடத்திக்கொண்டு போகிறார்களோ என்ற எண்ணம், அவள் உள்ளத்தில் எழுந்தது.

சட்டென்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அவர்கள் பின்னாலேயே வேகமாக, மறைந்து மறைந்து ஓடினாள் கோதை.

ஊர் எல்லையைக் கடந்து, புகார்ச் சாலையில் ஏறிப் போகும் போது, தன் பின்னால் வந்த மூன்றாவது குதிரையைத் திரும்பும்போது பார்த்துவிட்டான் வளவன்.

''உருத்திரரே! யார் அது? நம் ஆளா அல்லது எதிரியா?''

உடனே அவன் கடகட என்று சிரித்தான்.

''அவனும் நம் ஆள்தான்; உங்கள் எதிரிதான்!'' என்று கேலியாக நகைத்தான்.

வளவன் திடுக்கிட்டான்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''நீ வாள் முன்னால் சூரப்புலிதான்; ஆனால் எங்கள் தந்திரத்தின் முன்னால், வெறும் பூனைக்குட்டிதான்!...'' என்று சிரித்துக் கொண்டே முகத்தில் ஒட்டியிருந்த இளந்தாடியை எடுத்தெறிந்தான்—



— அவன் பழைய சித்திரன்!

திகைத்துப்போன வளவன் சட்டென்று திமிறிக் கீழே குதித்தான். உடனே மூன்று பேரும் மின்னல் வேகத்தில் அவன்மேல் பாய்ந்து, அவனிடமிருந்த வாளைத் தட்டிப் பறித்துக்கொண்டு விட்டார்கள்.

நிராயுதபாணியாக நின்ற வளவனைச் சுற்றிலும் நீட்டிய வாள்களுடன் நடந்தார்கள்.

''டேய் சிறுபயலே! மூச்சுவிடாமல் ஒழுங்காய் நடந்து வா. ஏதாவது முரண்டு செய்தால், இந்த வாள்களுக்கு இரையாகிப் போவாய்!'' என்று அந்த மூன்று சூரப்புலிகளும் உறுமினார்கள்.

வளவன் ஆபத்தில் சிக்கியிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட கோதைக்கு உடலெல்லாம் நடுங்கியது; பயத்தால் வியர்த்துக் கொட்டியது.

உடனே ஊருக்குத் திரும்பி நல்லினியிடம் விஷயத்தைச் சொல்லி, ஊர் இளைஞர்களை அழைத்துக் கொண்டு வரலாமா என்று நினைத்தாள் அவள். ஆனால் அவள் ஊருக்குப் போய்த் திரும்புவதற்குள், வளவனை அவர்கள் எங்கே கொண்டு போயிருக்கிறார்கள் என்பது தெரியாமல் போய்விடுமே?...

அவர்களைப் பின்தொடர்ந்து போவதா, ஊர் திரும்புவதா என்று புரியாமல், நடந்து போய்க்கொண்டிருந்தாள் அந்தச் சிறுமி...

சிறிது தூரம் சென்றதும், ஒரு ஓலைக்கூரை வீடு தனியே இருந்தது. அதுதான் வளவனை முன்பு சிறை வைத்திருந்த வேட்டைக் கூடாரம். அதற்குள்ளே அவனை இழுத்துக் கொண்டுபோய், வீட்டின் நடுவிலிருந்த ஒரு தூணில் கட்டினார்கள்.

''டேய்! உன்னைச் சும்மா நடமாடவிட்டால், தப்பித்துப் போக முயற்சி செய்வாய்... எங்களை ஏமாற்றி

விட்டுத் தப்பிச் சென்ற இதே கூடாரம்தான், உனக்குச் சுடுகாடாகப் போகிறது!...'' என்று கொடூரமாகச் சிரித்த கொலையாளிகள், சுற்றிலும் காய்ந்த ஓலைகளைப் போட்டுவிட்டு, வெளியே வந்து கதவைச் சாத்தினார்கள்.

''சாத்தா! நீ பக்கத்து ஊருக்குப் போய், கொஞ்சம் எண்ணெயும் தீக்கடைகோலும் வாங்கி வா... கூரையில் எண்ணெயை ஊற்றித் தீ வைத்துவிடுவோம்...'' என்று ஒருவனை அனுப்பிவிட்டு, சித்திரனும் இன்னொருவனும் வாயிற்பக்கம் உட்கார்ந்தார்கள்.

சாத்தான் திரும்பி வருவதற்குள், தான் நாங்கூர் போய் ஆட்களை அழைத்து வரவேண்டும் என்ற முடிவுடன், தன் முழுச் சக்தியையும் திரட்டிக்கொண்டு, திரும்பி ஓடிவந்து கொண்டிருந்தான் கோதை.

வியர்க்க விறுவிறுக்க அவன் புகார்ச் சாலையில் ஓடிவந்து கொண்டிருந்தபோது, தெய்வாதீனமாக, புகாருக்குச் சென்றிருந்த நாங்கூர் இளைஞன் குதிரையில் திரும்பி வருவதைக் கண்டு, அவனை நிறுத்திச் செய்தியைச் சொல்லி, அவனுடைய குதிரையில் ஏறி ஊர் வந்து சேர்ந்தான் கோதை...

பதறிப் போன திருத்தாமன், உடனே அவனை அழைத்துக் கொண்டு குதிரையில் ஏறிப் பறந்தான்.

கோதை வழிகாட்ட, நாலுகால் பாய்ச்சலிலே குதிரையை விரட்டினான் அவன்.

பருவூர்க் காட்டுக்குள் இருந்த அந்த வேட்டைக் கூடாரத்தை நெருங்கிய போது, அது தீப்பிடித்துத் திகுதிகு என்று எரிந்து கொண்டிருந்தது...

சாத்தன் பக்கத்து ஊருக்குப் போய் எண்ணெய்யும் தீக்கடைகோலும் கொண்டு வந்ததும், எண்ணெய்யைக் கூரையில் ஊற்றிவிட்டு, உள்ளே தூணில் வளவன் சரியாகக் கட்டப்பட்டிருக்கிறானா என்பதையும பார்த்து விட்டு, உள்ளேயும் நிறையக் காய்ந்த ஓலைகளை அள்ளிப்



போட்டுவிட்டு, தீக்கடைகோலிலிருந்து நெருப்பு உண்டாக்கிக் கூரையைப் பற்ற வைத்தார்கள்.

உள்ளேயிருந்து வளவன், ''மாமா!... அம்மா!... மாமா!...'' என்று அலறி அலறி ஓய்ந்து விட்டான்.

தீயின் நாக்குகள், கூரையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று விழுங்கிவிட்டு, உட்புறமாக மேயத் தொடங்கின.

கார்த்திகை தீபத்தைப் பார்த்து ரசிப்பது போல், வளவனைச் சுற்றி எரியும் தீயைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் எதிரிகள்.

அப்போது, திடீரென்று ஏதோ ஒரு பாட்டுக்குரல் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள்.

தூரத்திலிருந்து காற்றிலே மிதந்து வந்த அந்தப் பாட்டு, மெதுவாக அந்த இடத்தை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தது போலிருந்தது.

''யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. இந்த இருட்டு நேரத்தில் நிச்சயம் யாரும் தனியாக வர மாட்டார்கள்; கூட்டமாகத்தான் வரவேண்டும். அவர்கள் இந்தப் பக்கம் வந்து தீப்பிடித்து எரியும் வீட்டைப் பார்த்து விட்டால்— அந்தச் சமயம் வளவன் கூக்குரல் போட்டு விட்டால்— விஷயம் தெரிந்து வளவனைக் காப்பாற்றி விட்டால் என்ன செய்வது?'' என்று பதறினான் ஒருவன்.

''இந்த நேரத்தில் இந்தப் பாதையில் வருவது, ஏதாவது வணிகச் சாத்தாக[1]த்தான் இருக்க வேண்டும்...

---

1. அக்காலத்தில் உள்நாட்டு வணிகர்கள், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கூட்டமாக, வண்டிகளுடன் செல்வார்கள். இதற்கு 'வணிகச் சாத்து' என்று பெயர்.

— டாக்டர் கே. கே. பிள்ளை : 'தமிழக வரலாறு— மக்களும் பண்பாடும்'

நாம் போய், அவர்களைத் தந்திரமாகத் திசை திருப்பி, வேறு பாதையில் அனுப்பி விடுவோம், வாருங்கள்!'' என்று சித்திரன், மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவர்கள் போய்ச் சிறிது நேரத்தில், அங்கே திருத்தாமனும் அருட்கோதையும் வந்து சேர்ந்தார்கள்.

கிட்டத்தட்ட அதே சமயத்தில், எதிர்த்திசையிலிருந்து ஓர் இளைஞன், குதிரையில் வேகமாக வந்து தீப்பிடித்து எரியும் கூரையைப் பார்த்தவாறு, சுற்றிலும் கண்களைச் சுழற்றினான். அவன் உடம்பில் வழிந்த வியர்வையும் முகத்தில் காணப்பட்ட பரபரப்பும் ஏதோ ஒரு அவசரமான செய்தியுடன் வந்திருப்பான் என்று தோன்றியது.

கூடாரத்துக்கு வெளியே யாரும் இல்லாததைக் கண்டு, பேசாமல் நின்று கொண்டிருந்தான் அவன்.

கூரையை ஜீரணம் செய்துவிட்டு உள்ளே புகுந்து எரிந்து கொண்டிருந்த தீ, வளவனுக்கு மிக அருகில் நெருங்கிவிட்டது.

தீயில் எரிந்து கட்டுவிட்ட மரச் சட்டங்களும் விட்டங்களும் 'தொப் தொப்' என்று அவனைச் சுற்றி விழுந்து கொண்டிருந்தன.

நெருப்பின் தகிக்கும் சூட்டில், வளவன் கடைசி முறையாக, சாவுக்குரலாக ''அம்மா! மாமா!'' என்று அலறியது கேட்டது.

குதிரையிலிருந்து குதித்த திருத்தாமனின் முன்னால், அந்தப் புது இளைஞன் உருவிய வாளுடன் நின்றான்.

திருத்தாமனை அவனுக்கு ஏற்கனவே தெரியும். வளவனைக் காப்பாற்ற அவன் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டுவிட்ட அந்த இளைஞன், திருத்தாமனை எதிர்க்க வாளை உருவிக்கொண்டு நின்றான்.



உள்ளே மரணத்துடன் கடைசி விநாடிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் மருமகனைக் காப்பாற்றப் பாய்ந்த திருத்தாமன், தன் வாளை உருவி, ஆக்ரோஷமாக அந்த இளைஞனோடு மோதி, மூன்று நான்கு வீச்சுக்களிலே அவனை வீழ்த்தி அவனது இளம் நெஞ்சிலே வாளைப் பாய்ச்சிவிட்டு, கூடாரத்துக்குள் பாய்ந்தான்.

கதவை உடைத்துக்கொண்டு உள்ளே ஓடிவந்த மாமாவை நோக்கிக் கையை நீட்டிக் கதறினான் வளவன்.

அவனுடைய கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, இருவரும் வெளியே ஓடிவந்தபோது, நீண்ட நேரம் கட்டுண்டு இரத்த ஓட்டம் நின்று போயிருந்த ஒரு கால் தடுமாறி, நெருப்புக் கோளத்திற்குள் சிக்கிவிட்டது.

''மாமா!'' என்று வலி தாங்காமல் கதறிய வளவனை இழுத்து, நெருப்பில் சிக்கிய காலையும் விடுவித்து, அவனை அலாக்காகத் தூக்கிக் கொண்டு, வெளியே வந்து குதிரையில் அவனையும் கோதையையும் ஏற்றிக் கொண்டு கிளம்பும்போது சட்டென்று ஒரு யோசனை பளிச்சிட்டது திருத்தாமனுக்கு.

'எங்கோ போயிருக்கிற எதிரிகள் இன்னும் சிறிது நேரத்தில் திரும்பி வந்து பார்க்கும்போது, உள்ளே இருந்த வளவன் தப்பித்து விட்டான் என்பதைத் தெரிந்து கொண்டால், தொடர்ந்து வளவனைத் தேடிக் கொல்லச் சூழ்ச்சி செய்து கொண்டேயிருப்பார்களே?...'

சற்று நேரத்துக்கு முன்பு தன்னுடன் மோதி இறந்து கிடந்த அந்தப் புதிய இளைஞனைத் தூக்கிக் கொண்டு போய், எரிந்து கொண்டிருந்த வீட்டுக்குள் நுழைந்து, வளவன் கட்டப்பட்டிருந்த தூண் அடியில் போட்டு விட்டுத் திரும்பினான் திருத்தாமன்.

கூடாரம் எரிந்து முடிந்ததும், தூண் அருகே கிடக்கிற எலும்புத் துண்டுகளை வைத்து, 'வளவன் எரிந்து போய்

விட்டான்' என்று அவர்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று யோசித்து அந்தக் காரியத்தைச் செய்து முடித்தான் திருத்தாமன்.

அந்த இளைஞன் ஏறி வந்த குதிரையின்மேல் கோதையை உட்கார வைத்து, அதன் கடிவாளத்தைத் தன் கையில் பிடித்துக் கொண்டு, தன் குதிரையில் வளவனைத் தூக்கி வைத்துக் கொண்டு, இரண்டு குதிரைகளையும் ஓட்டிக் கொண்டு வேகமாக அந்த இடத்திலிருந்து வெளியேறினான் திருத்தாமன்.

உடலெங்கும் ஏற்பட்ட தீப்புண்களாலும், காலிலே பட்டிருந்த நீண்ட காயத்தாலும் தோன்றிய வலியின் வேதனை பொறுக்க முடியாமல் கதறினான் வளவன்.

முதலில் ஒரு மருத்துவரிடம் அவனைக் காட்டி, தீப்புண்களுக்கு மருந்து போட வேண்டுமே?...

ஊருக்குத் திரும்ப நினைத்த திருத்தாமன், தன் திட்டத்தை மாற்றிக் கொண்டான்.

எதிரியிடமிருந்து ஏதோ அவசரச் செய்தியோடு வந்த குதிரை வீரன் திரும்பி வராமல் காணாமற் போனதைக் கொண்டு, ஒரு வேளை சந்தேகம் தோன்றி விட்டால், எதிரிகள் மறுபடியும் வளவனைத் தேடி நாங்கூர் வருவார்களே? அவர்களிடமிருந்து நிரந்தரமாகத் தப்பி மறைந்திருப்பதற்கு வழி என்ன என்று சிந்தித்தான் திருத்தாமன்.

புகார்ச் சாலையிலிருந்து தெற்கே திரும்பாமல், நேரே மேற்கே குதிரைகளைச் செலுத்தினான் அவன்.

''மாமா!... நம் ஊருக்கு இங்கே திரும்ப வேண்டும், மாமா!... நீங்கள் மறந்து போய் நேரே செல்கிறீர்களே?'' என்று நினைவூட்டினாள் கோதை.

''இல்லை அம்மா! முதலில் வளவன் கால்களுக்குச் சீக்கிரமாக மருந்து போட வேண்டும். அதனால்தான் நேரே பாதையில் போய் பக்கத்திலே இருக்கிற ஏதாவது



கிராமத்தில் மருத்துவரிடம் அவனைக் காட்டலாம்...'' என்று அவளுக்குச் சமாதானம் சொன்னான் திருத்தாமன்.

சிறிது தூரத்தில் இருந்த ஒரு கிராமத்துக்குள் நுழைந்து, அங்கு மருத்துவருடைய வீட்டை விசாரித்தறிந்து, அவரிடம் போய் வளவனுக்கு ஏற்பட்டுள்ள காயங்களுக்கு மருந்து போடச் சொன்னான்.

நல்ல வேளையாக, அங்கும் யாருக்கும் திருத்தாமனைத் தெரியவில்லை. வளவனை யார் என்று விவரம் கேட்காமலே, அந்த நல்ல மருத்துவர், புண்களுக்கு மருந்து வைத்துக் கட்டினார்.

அவனை அங்கேயே மருத்துவர் வீட்டில் படுக்க வைத்து விட்டு, அருட்கோதையை அழைத்துக் கொண்டு நாங்கூர் திரும்பினான் திருத்தாமன்.

கோதைக்கு, வளவனைச் சுற்றி நடக்கிற நிகழ்ச்சிகளெல்லாம் புரியாத மர்மமாயிருந்தது!

ஊரிலுள்ள இத்தனை இளைஞர்களிலே, இந்த வளவனுக்கு மட்டும் ஏன் இப்படிப்பட்ட எதிரிகள் இருக்கிறார்கள் என்பதை அவளால் யூகிக்க முடியவில்லை. அதைப்பற்றி நல்லினியிடமோ திருத்தாமனிடமோ கேட்பதற்கு அவளுக்குத் தைரியமில்லை; அது அவசியம் என்று அவள் நினைக்கவும் இல்லை.

தனக்கிருந்த பரபரப்பிலும் துடிதுடிப்பிலும் சூழ்நிலை நெருக்கடியிலும், அருட்கோதையின் செயலைப் பாராட்டவோ நன்றி சொல்லவோ, இதுவரை திருத்தாமனுக்கு நேரமே கிடைக்கவில்லை!

''கோதை! நீ செய்த உதவியை நாங்கள் என்றைக்கும் மறக்கமாட்டோம் அம்மா! நீ இல்லையென்றால், இந்நேரம் வளவன் எரிந்து சாம்பலாகியிருப்பான். வளவனுக்கு உயிர் கொடுத்த தெய்வம் நீதான்!... இப்பொழுது அவன் உடலில் இருக்கும் உயிரும், உதிரத்துளி ஒவ்வொன்றும்,

உனக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டலை!...'' என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, குரல் தழுதழுக்க, கண்ணில் நீர் கசிய, உளம் நெகிழ்ந்து சொன்னான் திருத்தாமன்.

அவனுடைய கனமான சொற்களின் அழுத்தத்திலே, ஒன்றும் பேச முடியாமல் திகைத்துப் போய் நின்றாள் அந்தச் சிறுமி.

வீட்டிலே துடித்துக் கொண்டிருந்த நல்லினியிடம், வளவன் காப்பாற்றப்பட்டு விட்டான் என்றும், உடம்பில் சிறு தீக்காயங்கள் மட்டும் ஏற்பட்டுள்ளன என்றும் சொன்னான் அண்ணன்.

''நல்லினி! வளவன் இப்போது உயிரோடியிருக்கிறது, என்னால் அல்ல; இந்தக் கோதையால்தான்!'' என்றான் திருத்தாமன்.

கோதையை இறுகத் தழுவிக்கொண்டு, கண்ணீர் பொங்க, உணர்ச்சி வசப்பட்டுத் தேம்பினாள் தாய்:

''அம்மா! வளவனுக்கு நீதான் பெற்ற தாய்; ஒரு மகனைக் காப்பாற்ற முடியாமல் விட்டுவிட்ட என்னை விட, அவன் உயிரைக் காப்பாற்றிய நீதான், உண்மையில் தாய்மாதிரி... உனக்கு நாங்கள் ஏழேழு பிறவிக்கும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம், தாயே!''

தன் தோழன் வளவனைக் காப்பாற்றியதற்கு, ஏன் இவர்கள் இப்படி மாற்றி மாற்றி நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று திகைத்துப் போனாள் கோதை.

அன்று இரவு, யாரிடமும் சொல்லாமல் திருத்தாமனும் நல்லினியும் குதிரையில் ஏறி, வளவன் இருந்த மருத்துவர் வீட்டுக்குச் சென்றார்கள்.

வளவனுக்குப் புண்கள் ஆறி முழுமையாய்க் குணமாகும்வரை, தன் வீட்டிலேயே அவர்களைத் தங்கியிருக்க அனுமதித்தார் அந்த மருத்துவர்.



வளவன் உடலில் ஏற்பட்டிருந்த சிறுசிறு புண்களெல்லாம் சீக்கிரமே ஆறிவிட்டன. ஆனால் வலது காலில் இருந்த பெரிய புண்ணின் மேல் போட்ட கட்டை அவிழ்க்க, பல நாட்களாயின.

கடைசியில் அந்தப் புண்ணும் ஆறியபிறகு, கட்டை அவிழ்த்தபோது—

அந்தக் கால், முழுவதும் ஒரே கருப்பாக மாறியிருந்தது!

தன் மகனின் பொன்வண்ண உடலுக்கு முற்றிலும் மாறுபாடாக, கால்மட்டும் கரிந்து போய்விட்ட நிலையைப் பார்த்து, தாய் குமுறிக் குமுறி அழுதாள். அவன் உடலழகுக்கே ஒரு திருஷ்டி பரிகாரமாக அமைந்துவிட்ட கருப்புத் தழும்புகளைக் கண்டு நெக்குருகினான் தாய்மாமன்.

அன்று முதல், வளவன் கரிகாலன் ஆனான்!

அந்தக் கரிகால்தான், தமிழக வரலாற்றிலே அழுத்தமான சுவடுகளைப் பதித்துப் புதிய சாதனைகளை நிகழ்த்தப் போகின்றது!...

அந்தக் கரிகால்தான், பல மன்னர்களின் மணிமுடிகளை வீழ்த்தி மிதித்து வீரநடை போட்டு, சாம்ராஜ்யம் அமைக்கப் போகிறது!...

அந்தக் கரிகாலன்தான், இன்னொரு அலெக்ஸாண்டராக, இன்னொரு அசோகராக, வீரத்திலும் ஆட்சியிலும் புதிய வரலாறுகளைப் படைக்கப் போகிறான்!...

சோழநாட்டுக்குள் இருப்பது, எப்போதும் ஆபத்துக்கு இடமளிக்கும் என்பதை உணர்ந்த திருத்தாமன், அந்நாட்டை விட்டு, சேரநாட்டு எல்லையில் இருக்கும் கருவூர் என்னும் ஊருக்கு, வளவனையும் தங்கையையும் அழைத்துக் கொண்டுபோய்த் தங்கினான்.

அங்கே, தன் வீட்டின் முன்னால் ஒரு பள்ளிக்கூடம் அமைத்து, [2]இளம்பாலாசிரியனாய்ப் பணியாற்றத் தொடங்கினான்.

வளவனை விட்டுவிட்டு, வெளியே எங்கேயும் போக இப்போது திருத்தாமனுக்குத் தைரியமில்லை. வளவனைக் கண்ணுங் கருத்துமாக, கண்ணின் மணியாகத் தன் பார்வைக்குள்ளேயே வைத்து வளர்த்து வந்தான்.

சில மாதங்களாக, திருத்தாமன் புகார் நகருக்கு அமைச்சரைச் சந்திக்கவும் போகவில்லை. அங்கே போய் வர நாட்கள் அதிகமாகும் என்பதனால், போகாமலே இருந்துவிட்டான்.

வளவனைப் பக்கத்திலிருந்தே கவனித்துக் கொள்ள வேண்டும் என்னும் நல்ல நோக்கத்தில் திருத்தாமன் புகாருக்கே போகாமலிருந்தது, எத்தகைய ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திவிட்டது என்பது அவனுக்குத் தெரியாதே!

## 11

நாங்கூரின் வடக்குக் கோடியிலிருந்த தாமரைக் குளத்திலே புதுத் தண்ணீர் வந்திருந்தது. இளம் பெண்கள் கூட்டமாய்க் கூடி, குளத்திலே குடைந்து ஆடிக்கொண்டிருந்தார்கள்.

---

2. சங்ககாலத்தில் சிறுகுழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு, 'இளம்பாலாசிரியர்' என்று பெயர்.



குளத்திலிருந்த தாமரைப்பூக்களை நாடி வந்த வண்டுகள், அந்த இளம் பருவப் பெண்களின் விழிகளைத் தாமரை என்று கருதி, அவர்களின் முகங்களைச் சுற்றி வந்தன. அந்த முகம், நிலவு மாதிரி ஒளி விளங்கத் தோன்றியதால், 'ஓ! நிலவு வந்துவிட்டது; ஆகவே இனி தாமரை குவிந்துவிடும்' என்று நினைந்து, தாமரையில் தேனுண்ணும் ஆசையை விட்டு திரும்பத் தொடங்கின.

அந்த இளமையான மெல்லிய உடல்களைத் தொட்டுப் பழகுகிற மகிழ்ச்சியில் தண்ணீர் அலையலையாகப் பொங்கிக் குதித்துக் கொண்டிருந்தது.

கடைசியாக, இன்னொரு பெண் அவசர அவசரமாகக் குளிக்க வந்தாள். அவளுக்குச் சிறிது ஸ்தூல சரீரம். அவள் அசைந்து அசைந்து நடந்து வந்து குளத்திற்குள் இறங்கியது, ஒரு யானைக் குட்டி வந்து தண்ணீருக்குள் அமிழ்வதுபோல் இருந்தது. அவள் பருமனை வைத்துக் கேலி செய்வது, தோழிகளுக்கு ஒருபொழுது போக்கு!

''மருதி! ஒரு விஷயம் தெரியுமா? அரசருடைய போர் யானையைக் குளிப்பாட்டக் கூட்டிப் போகும்போது, முன்னாலே ஒருத்தன் பறையறைந்து கொண்டே போவானாம்; 'யானை வருகிறது! எல்லோரும் ஓரமாக ஒதுங்கி நில்லுங்கள்!' என்று எச்சரித்துக்கொண்டே போவானாம். அதுமாதிரி, நம் ஊரிலே அரசர் இருந்தால், நம் பொற்கொடி வரும்போது பறையறிவிப்பார்கள், இல்லையா?'' என்று ஒருத்தி கேலியாகச் சொன்னதும் பெண்கள் கூட்டம் ஒரே சிரிப்பாகச் சிரித்துக் குலுங்கியது.

குளத்துக்குள்ளே இறங்கிக் கொண்டிருந்த அந்தப் 'பொற்கொடி', ''இந்த அருட்கோதைக்கு எப்போதும் என்னைப் பார்த்தால் கேலிதான்!'' என்று விளையாட்டான கோபத்துடன் சிணுங்கினாள்.

ஓ! அருட்கோதையா இவள்?.........

இப்போது எத்தனை அழகிய பருவ மங்கையாக வளர்ந்துவிட்டாள் கோதை!

சின்னஞ் சிறு மொட்டாக, வளவனோடு விளையாடித் திரிந்த அந்தக் கோதை, இப்போது எத்தகைய அழகுப் பூவாகப் பரிணமித்து மலர்ந்திருக்கிறாள்?

நீலவானிலே மிதக்கும் கருமேகம் போல், திரண்டு படர்ந்து நீரிலே தவழும் கூந்தலின் பின்னணியிலே, பிறை போன்ற நெற்றியில் தளும்பிய தண்ணீர்த் துளிகள், நீண்ட கரிய கண்களின் அழகைப் பார்க்கும் ஆசையில் கீழே இறங்கிக் கொண்டிருந்தன. கறுத்த புருவங்களின் வளைவு அழகா, சிவந்த இதழ்களின் வளைவு அழகா என்ற போட்டியில், நடுவு நிலைமை வகித்து நிமிர்ந்து நின்ற மூக்கு, எள்ளுப்பூவை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. சங்கு போல அழகு மடிப்புக்கள் விழுந்த திரண்ட கழுத்தும், நடுவில் சற்றே ஏறி, ஓரங்களில் இறங்கியிருந்த வளமையான தோள்களும், தண்ணீருக்குள் மறைந்திருந்த உடலின் ஏற்ற இறக்கங்களின் அழகுகளை ஊகித்தறியும் படி விளங்கின.

''ஏன்டி கோதை! உனக்குச் செய்தி தெரியுமா? நீ யானை என்று சொன்னவுடனே நினைவு வருகிறது... நம் சோழ மன்னரின் பழைய பட்டத்து யானை, மதம் பிடித்து, [1]கழுமலத்திலிருந்து ஓடி விட்டதாம். ஆகவே பொதுமக்கள் தெருக்களில் எச்சரிக்கையாக நடமாடும்படி நாடெங்கும் பறையறைந்து வருகிறார்களாம். அந்த யானையைப் பார்ப்பவர்கள், உடனே யாராவது ஓர் அரசாங்க அதிகாரிக்குத் தகவல் தெரிவிக்கும்படியாகவும் சொல்லியிருக்கிறார்களாம்...'' என்றாள் இன்னொரு தோழி.

இளஞ்சேட்சென்னி காலமான பிறகு, புகார் அரண்மனையில் அரசர் இல்லாததால், பட்டத்து யானைக்கு வேலையில்லாமல் போய்விட்டது. ஆகையால் அதை, கழுமலத்திலுள்ள கோயிலில் விட்டு வைத்திருந்தார்கள். கோயில் பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருந்த யானைக்கு ஏனோ திடீரென்று மதம் பிடித்து ஓடிவிட்டது.

''ஏன்டி, ஒருவேளை கோயிலிலே யானைக்குப் போதுமான உணவு கொடுக்கவில்லையோ, என்னவோ?''

''ஆமாம்... யானையைக் கட்டித் தீனி போடுவது சுலபம்மா?... அதைவிட, நம் பொற்கொடிக்குத் தீனி போட்டு வைத்துக் கொள்வது சுலபம்...''

— மறுபடியும் கேலி செய்த கோதையை நோக்கி, பொற்கொடி தண்ணீரை அள்ளி எறிந்தாள். அவளை நெருங்கிப் பிடிக்க நகர்ந்த பொற்கொடியின் பிடியில் சிக்காமலிருக்க, மீனாய் நீந்தி விலகினாள் கோதை.

''உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு என்று சொன்னார்களே, இந்தப் பொற்கொடியைப் பார்த்த பிறகுதான் அப்படிச் சொல்லியிருப்பார்களோ?''

— பொற்கொடியைச் சுற்றி, கேலிச் சிரிப்பின் அலைகள் எழுந்தன.

கோதையைப் பிடிக்கப் பொற்கொடி வேகமாக விரட்ட, அவள் ஓட, இவள் விரட்ட, ஒரு நீச்சல் போட்டியே நடந்து கொண்டிருந்தது.

எருமை குளிக்கும் குட்டைபோல, அந்தத் தாமரைக் குளமே பொற்கொடியின் உடம்பின் பரிமாணத்தால் குழம்பித் தளும்பிக் கலங்கி விட்டது.

கடைசியில் மீனைப் பிடிக்க முடியாமல், யானை மூச்சிரைக்க நின்றுவிட்டது!



---

1. தற்போது 'சீர்காழி' என வழங்கும் ஊருக்கு, 'கழுமலம்' என்னும் பெயர் இருந்தது. சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தரை 'கழுமல முதுபதிக் கவுணியன்' என்று குறிப்பிடுவது, இங்கு நினைவு கூரத் தக்கது.

''ஏன்டி, மதம் பிடித்த பட்டத்து யானையை யாராலும் அடக்க முடியாதா?'' என்று சந்தேகம் கேட்டாள் மருதி.

''மதம் பிடித்த யானையை யாராலே அடக்கமுடியும்? எந்த வீரனும் கிட்டே போகமாட்டான்...'' என்றாள் ஒருத்தி.

''ஏன், எனக்குத் தெரிந்த ஒருத்தர், நிச்சயமாய் அந்த யானையை அடக்கி விடுவார்...'' என்று அழுத்தமாய்ச் சொன்னாள் கோதை.

''யாரடி அந்த வீராதி வீரர்?''

''ரொம்ப நாட்களுக்கு முன்னே, எங்கள் பக்கத்து வீட்டிலே இருந்தாரே, வளவன் என்று— அவர்தான்!''

''வளவனா? அவன் சிறுபிள்ளையாயிற்றே!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் பொற்கொடி.

''ஆமாம்... இவன் மட்டும் பிறக்கிறபோதே இவ்வளவு பெரிய யானையாய்ப் பிறந்தாள் போலிருக்கிறது!'' என்று சிரித்துக் கேலி செய்தாள் கோதை.

''அந்த வளவன் இப்போது எவ்வளவுதான் இளைஞனாய் வளர்ந்திருந்தாலும், மதயானையை அடக்குகிற அளவுக்குப் பெரியவனாய் இருப்பானா?'' என்று விடாமல் மடக்கினாள் 'குட்டியானை.'

''யானையை அடக்குவதற்கு, உன் மாதிரி பெரிய ஆளாய் வளர வேண்டியதில்லை; வீரனாய் வளர்ந்திருந்தால் போதும்... பெரிய பாறையைச் சிற்றுளி வைத்து உடைத்து விடுவதில்லையா?'' என்று 'யானைக்குட்டி'யை அடக்கினாள் கோதை.

''வளவனைப்பற்றி எல்லாம் கோதைக்குத் தெரியும். ஏனென்றால், அவர்கள் இருவரும்......'' என்று ஆரம்பித்த மருதி, மேலே வாயால் பேசாமல், விழியால் மொழி பேசிச் சிரித்து, குறும்பாகக் கண் சிமிட்டினாள்.



''ஆமாம்... அதுதான் திருவுளச் சீட்டிலேயே கணவன்— மனைவியாக முடிவான சேதிதானே?'' என்று கழுத்தை நொடித்துச் சிரித்தாள் இன்னொருத்தி.

அந்த இளமைக்கால நினைவு, கோதையின் நெஞ்சத்திலே அழியாத ஓவியமாகப் பதிந்து நிலைத்திருந்தது...

அன்று, சிறுபிள்ளைப் பருவத்தின் திருமண விளையாட்டுக்காக, பூக்கட்டிப் போட்டுத் தேர்ந்தெடுத்த போது, கணவன்— மனைவியான வளவனும் கோதையும், உண்மையான வாழ்க்கையிலும் அப்படி வாழ்க்கைத் துணைவர்களாவார்களா? அல்லது... அது வெறும் சிறுபிள்ளை விளையாட்டாகவே, நிஜமாகாத நிழலாகவே, நனவாகாத கனவாகவே கலைந்து போய் விடுமா?......

வளவனின் குடும்பம், திடீரென்று இரவோடிரவாகச் சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டுப் போனதைக் கண்டு, அவளுக்கு அதிர்ச்சிதான்; ஆனாலும், ஏதோ மர்மம் நிறைந்த வளவனின் வாழ்க்கையிலே அது ஓர் அவசியமான மாற்றமாக இருக்கும் என்று தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவன் எங்குச் சென்றாலும், எத்தனை காலமானாலும் அவனுக்காக அவள் காத்திருக்கலாமா?...

அப்படிக் காத்திருப்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்குமா?...

— கோதையின் உள்ளத்திற்குள் சிந்தனைகள் அலையலையாக எழுந்து புரண்டு மோதிப் பரவின.

''கோதை சொல்வது உண்மைதான். வளவன் இங்கே சிறுபிள்ளையாயிருக்கும்போதே, பயமில்லாத வீரனாக விளங்கினானே? இப்போது பெரிய வீரனாக வளர்ந்திருப்பான்...'' என்ற மருதி, தற்போது வளவன் எவ்வளவு வளர்ந்திருப்பான் என்பதை மனக்கண்ணால் கற்பனை செய்து பார்க்க முயற்சி செய்தாள்......

அந்தப் பெண்களின் கற்பனைக்கும் சிறிது அதிகப்படியாகவே வளவன் வீரனாக வளர்ந்திருந்தான்.

கருவூரில் உள்ள இளைஞர்கள், வளவனின் செயற்கரிய வீரச்செயல்களைக் கண்டு வியந்து பாராட்டினார்கள். அவனுடைய வில் திறமை, வாள் பயிற்சி முதலியவற்றைக் கண்டு, அங்கே அவனுக்கு ஒரு ரசிகர் படையே ஏற்பட்டு விட்டது.

மாலை நேரங்களில் இளைஞர்களைக் காட்டுப்பக்கம் அழைத்துக் கொண்டு போய், அவர்களுக்கு வில்வித்தை, வாள்சண்டை எல்லாம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விட்டான் வளவன்.

நாங்கூரில் மாமன் செய்து வந்த வேலையை, மருமகன் கருவூரிலே தொடங்கி விட்டான்......

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

வளவன் இப்போது இளமை ததும்பும் துடிதுடிப்போடு, முகத்தில் மீசைக் கருமை அரும்பும் இளைஞனாகிவிட்டான்.

தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் அரசியல் நூல்களையும் கரைத்துக் குடித்துவிட்ட அவன், போர்த்திறமையிலும் முற்றுப்பெற்று விளங்கினான்.

திருத்தாமனும் நல்லினியும் அவனுடைய வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். மற்றவர்களுக்கு, அவன் வளர்ந்துவிட்டவனாகத் தோன்றினாலும், உற்றவர்களுக்கு அவன் இன்னும் சிறுபிள்ளையாகவே தோன்றுகிறானோ என்னவோ?...

ஒரு நல்ல நாள் பார்த்து, வளவனை அழைத்துக் கொண்டு புகார் செல்லத் திட்டமிட்டிருந்தான் திருத்தாமன். ஆனால் விதி செய்திருந்த திட்டம், வேறாக இருந்தது அவனுக்குத் தெரியுமா?...



அன்று வெளியே சென்றிருந்த வளவன், சிறிது நேரம் கழித்து வந்தான். அவனைக் காணாமல் திகைத்துப் போன நல்லினிதேவி, வாசலிலே அவனுக்காகக் காத்திருந்தாள்:

''வளவா! எங்கே போயிருந்தாய்?''

''அம்மா! இன்றைக்குக் காட்டுக்குள்ளே போய், யானைகளைப் பிடிக்கிற காட்சியைப் பார்த்தேன். பெரிய குழியைத் தோண்டி, அதன்மேலே மூங்கில் கழிகளைப் போட்டு, மேலே இலைதழைகளை வெட்டிப் போட்டு, குழியை மறைத்து விடுகிறார்கள். யானைகள் கூட்டமாய் வரும்போது, தாரை, தம்பட்டை முதலியவைகளை அடித்து முழக்கிப் பெருஞ் சப்தம் உண்டாக்கி, யானைகளைக் குழிப் பக்கமாக விரட்டுகிறார்கள். வெருண்டு ஓடுகின்ற யானைகள் சில, அந்தக் குழிக்குள் விழுந்து விடுகின்றன. மற்றவை, குழியில் விழுந்தவைகளைப் பார்த்து வருத்தப்பட்டாலும், அவற்றைக் காப்பாற்ற முடியாமல் திகைக்கின்றன. அவைகளைப் பயமுறுத்தி விரட்டிவிட்டு, குழியில் விழுந்த யானைகளைச் சங்கிலியால் கட்டுகிற காட்சியைப் பார்த்தேன். குட்டியைப் பிரிந்த யானைகள், தாயைப் பிரிந்த குட்டிகள்... பாவம்! ரொம்ப பரிதாபமாக இருக்கிறதம்மா!...'' என்று கண் கலங்கச் சொன்ன மகனின் இளகிய உள்ளத்தைப் பார்த்து, தாய் உள்ளம் நெகிழ்ந்து மகிழ்ந்தாள்.

''அம்மா! இன்னொரு செய்தி தெரியுமா? சோழ நாட்டிலிருந்த பட்டத்து யானை மதம்பிடித்து ஓடிப்போய் விட்டதாம். அதைப்பற்றிச் சோழநாடு முழுவதும் பறையறைந்திருக்கிறார்களாம்... இங்கே, யானை பிடித்தவர்கள் எங்களிடம் சொன்னார்கள்,'' என்று மகன் கூறியதும், நல்லினிதேவிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

இளஞ்சேட்சென்னி இறந்ததும், பட்டத்து யானையைக் கழுமலம் கோயிலுக்கு அவன்தான் அனுப்பச்

சொன்னாள். அந்த யானைக்கு மதம்பிடித்துக் காணாமல் போய்விட்டதே!

சட்டென்று அவள் இதயத்தில் ஏதோ சுறுக்கென்று முள்ளாய்க் குத்தியது...

முகத்திலே தங்கப்படாம் போர்த்து, உடம்பெல்லாம் மணிகளால் அலங்கரிக்கப்பட்ட அந்தப் பட்டத்து யானையில், இளஞ்சேட்சென்னி கம்பீரமாக உலாவரும் காட்சி, நல்லினிதேவியின் நினைவுத் திரையிலே மீண்டும் ஒளிபாய்ச்சியது.

உலாவரும் மன்னனைக் காண்பதற்காக, நகரத்தில் உள்ள எழு பருவமங்கையரும், கண்ணுக்கு மைதீட்டும் கோலுடனும் காலுக்குச் செம்பஞ்சுக் குழம்பூட்டும் தூரிகையுடனும், முகத்தில் பாதி பூசிய சுண்ணப்பொடி, கண்ணாடியுடனும் ஓடிவந்து, மாடங்களில் நின்று, அவர் அழகைப் பார்த்து, அவரைக் கணவராக அடைந்த தன் மேல் பொறாமைப்பட்டுப் புழுங்கும் காட்சியைக் கண்டு, நல்லினிதேவி எவ்வளவு பெருமைப்பட்டிருக்கிறாள்?

வீரச் சிங்கத்தைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டிருக்கும் பெருமிதத்தில், அழகு நடை போட்டுச் செல்லும் அந்த யானை காணாமல் போனது, அவளுக்கு ஏதாவது அபசகுனத்தைக் குறிப்பிடுகிறதோ?...

தந்தை பவனிவந்த அந்த யானையின் மேல், மகன் வளவனும் கம்பீரமாக உலாவரும் எதிர்காலக் காட்சியை, நெஞ்சில் உருவகப்படுத்தி வைத்திருந்தாளே, அந்த உருவகம் உருக்குலைந்து போய்விடுமோ?...

கோயிலில் நின்ற அரச யானையை மதம்பிடித்து ஓட விட்டதன் மூலம், இறைவன் அவள் மகனுக்கு ஏற்படப் போகும் நிலையைச் சூசகமாகக் கூறி எச்சரிக்கிறானோ?—

— உள்ளத்திற்குள் எழுந்த கலவரத்தைப் பெருமுயற்சி செய்து தனக்குள்ளே அடக்கிக் கொண்டாள் தாய்.



பட்டத்து யானை காணாமல் போனது பற்றி, இவ்வளவு மன உளைச்சலுக்கு இடம் கொடுக்கவில்லை அந்த இளைஞன்.

மறுநாள் வழக்கம்போல், தன் தோழர்களுடன் காட்டுக்குச் சென்றான் வளவன்.

ஒவ்வொருவருக்கும், அம்பு எய்வதில் பயிற்சி கொடுத்த பிறகு, இருட்டுவதற்குள் வீட்டுக்குத் திரும்பப் புறப்பட்டார்கள்.

வழியிலே, கூட்டங் கூட்டமாக யானைகள் போய்க் கொண்டிருந்தன. சேர நாட்டிலே, யானைகளுக்கா பஞ்சம்?

அந்த யானைகளைப் பார்க்கும் போதெல்லாம், வளவனுக்கு அவற்றின் மேல் பரிதாபம் ஏற்பட்டது.

அவற்றின் சுதந்திரத்திலே தலையிட்டு, அவற்றை வஞ்சகமாகப் பிடித்து அடிமையாக்கி, தன் சொந்த வேலை களைச் செய்யப் பயன்படுத்துகிறானே, மனிதன் எவ்வளவு சுயநலக்காரன்?...

இவ்வளவு பெரிய வலிமையும் உடம்பும் படைத்த யானை எப்படி இந்தச் சிறிய மனிதனுக்குக் கட்டுப்பட்டு அடிமையாக மாறி விடுகிறது?... யானையைப் போல், சிங்கத்தையோ, புலியையோ மனிதன் அடிமைப்படுத்தி வேலை வாங்க முடிகிறதா?...

— சிந்தனையோடு நடந்து கொண்டிருந்தான் வளவன்.

''வளவா! அதோ... ஒரு பெரிய காட்டு முயல் உட்கார்ந்திருக்கிறது, பார்! அதை உன் அம்பாலே வீழ்த்து...'' என்று கேட்டுக் கொண்டான் ஒரு தோழன்.

சற்று தூரத்திலே, ஒரு மரத்தடியிலே வேறெங்கோ பார்த்தபடி புல் மேய்ந்து கொண்டிருந்தது ஒரு முயல்.

வளவன் கையிலே ஒரே அம்புதான் மிஞ்சியிருந்தது:

"வேண்டாம்... கடைசியாக இருக்கிற ஒரே அம்பை, இந்த முயலின்மேல் எய்ய வேண்டாம். வேறே ஏதாவது சிங்கம், புலி எதிரே வந்தால், வேட்டையாடலாமே?" என்று மறுத்துவிட்டான் வளவன்.

"சிங்கம், புலி இனிமேல் வரும் என்று என்ன நிச்சயம்? இப்போது கண்ணில் படுகிற முயலை வேட்டையாடினால் என்ன?"

"அப்படியில்லை... கானமுயல் எய்த அம்பைவிட, யானையை எய்து தவறிய அம்பு சிறந்தது என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்,[2] தெரியுமா?... எப்போதுமே உங்கள் இலக்கு, பெரியதாயிருக்க வேண்டும்; சிறிய இலக்குகளை வெல்வதைவிட, பெரிய இலக்குகளை முயன்று தோற்பது, பெருமை," என்று விளக்கினான் வளவன்.

"சரி... ஒரே அம்பை வைத்துக் கொண்டு, யானை, புலி, சிங்கத்தை வேட்டையாட முடியுமா?" என்று குறுக்குக் கேள்வி கேட்டான் இன்னொரு இளைஞன்.

"ஏன் முடியாது? ஓரி என்று ஒரு வீரன் இருந்தானாம். அவன் எய்த ஓர் அம்பு, யானையை வீழ்த்தி, அதைக் கடிக்க நின்ற சிங்கத்தின் வாயுள் ஊடுருவி, பின்னால் நின்ற கலை மானையும் குத்தி, பிறகு ஒரு காட்டுப் பன்றியையும் வீழ்த்தி, கடைசியில் புற்றில் இருந்த உடும்பின்மேல் தைத்து நின்றதாம்...[3]" என்று வளவன் சொன்னதும் வியப்பில் வாய் பிளந்து நின்றார்கள் தோழர்கள்.

சிறிது தூரம் வந்ததும், யானை பயங்கரமாகப் பிளிறும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு நின்றார்கள்:

---

2. திருக்குறள்— படைச்செருக்கு— 772.

3. இத்தகைய வில்வன்மை பெற்றிருந்ததால், ஓரி என்ற மன்னன் 'வல்வில் ஓரி' என்று பாராட்டப்பட்டான்.
 — பரணர் : புறநானூறு : 152.



"ஏதோ ஒரு யானை வருகின்றது போலிருக்கிறது... தனியே வருகிற யானையால் மனிதனுக்கு ஆபத்து ஏற்படும் என்று சொல்வார்களே?" என்று நடுங்க ஆரம்பித்தார்கள் தோழர்கள்.

வளவன், யானையின் பிளிறலைக் கூர்ந்து கேட்டான்; அது ஏதோ ஆபத்தில் சிக்கிக் கூக்குரலிடுவதுபோல் தோன்றியது.

மெதுவாக சப்தம் வரும் திசையை நோக்கி நடந்தான் வளவன்.

இப்போது யானையின் பிளிறலைப்போல, சிங்கத்தின் கர்ஜனையும் கேட்டது. சிறிது தூரம் சென்றதும், அவன் எதிர்பார்த்தது போலவே ஒரு யானையும் சிங்கமும் போரிட்டுக் கொண்டிருந்தன.

சேரநாட்டுக் காடுகளிலே, யானையும் சிங்கமும் புலியும் இப்படித் தனியே சண்டையிடும் காட்சிகளை அவன் பலமுறை பார்த்திருக்கிறான்.

சிங்கம், யானையின் மத்தகத்திலே ஏறி உட்கார்ந்து, தன் வலிய கால்களால் ஓங்கி அடித்து, யானையின் மண்டையைப் பிளக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. தலை, முகமெல்லாம் ரத்தம் வடிய, சிங்கத்தின் அடி தாங்க முடியாமல், யானை பிளிறி அலறியது. துதிக்கையை வளைத்துத் தலையை ஆட்டி, சிங்கத்தைக் கீழே இழுத்துத் தள்ளப் பெருமுயற்சி செய்து திணறிக் கொண்டிருந்தது யானை.

சண்டையைப் பார்த்த வளவனுக்கு, யானையின்மேல் பரிதாபம் ஏற்பட்டது. சிங்கத்திடமிருந்து அதைக் காப்பாற்றத் தீர்மானித்தான் அவன்.

சட்டென்று நேரே வந்து, வில்லில் அம்பை வைத்து, நன்கு குறி பார்த்து, சிங்கத்தின் மேல் எய்தான் அம்பு, சிங்கத்தின் முகத்தில் தாக்கி உள்ளே பாய்ந்துவிட்டது.

எதிர்பாராமல் அடிபட்டுக் கலங்கிய சிங்கம், ஆத்திரத்துடன் திடீரென்று, வளவன்மேல் பாய்ந்தது. இதை எதிர்பார்த்திருந்த அவன், மின்னல் வேகத்தில் விலகிக்கொண்டு, கீழே விழுந்த சிங்கத்தின் மேல் பாய்ந்து, அதன் முகத்தில் வில்லால் ஓங்கியடித்தபடி, அதன் முதுகில் ஏறி வாயைப் பிடித்து பிளந்து கிழித்தான். ஓலமிட்டவாறு, சிங்கம் வாய் கிழிந்துபோய், பின்கால்களை உதைத்தபடி, கடைசி மூச்சைக் காற்றில் கலந்தது.

தன்னைக் காப்பாற்றிய வளவன் முன்னால், யானை மண்டியிட்டு உட்கார்ந்து நன்றியுணர்வுடன் வணங்கியது. அதன் தலையிலும் காதிலும் வடிந்த இரத்தத்தைத் துடைத்துவிட்டான் வளவன். இடது காதின் மேற்புறத்தில், சிங்கத்தின் நகம்பட்டுக் கிழிந்து பெரிய காயம் ஏற்பட்டிருந்தது.

சுற்றுப் புறத்தில் தேடி, ஒரு பச்சிலையைக் கொண்டு வந்து தேய்த்துச் சாறு பிழிந்து, யானையின் தலையிலும் காதிலும் இருந்த காயங்களில் ஊற்றி, பச்சிலையைக் காதிலிருந்த ஆழமான காயத்தில் அழுத்தி வைத்தான் வளவன்.

அவனுடைய உதவியாலும் அன்பாலும் உள்ளம் நெகிழ்ந்த யானை, அவனைத் தூக்கி முதுகில் வைத்துக்கொண்டு ஊரை நோக்கி நடந்தது.

வளவனின் வீரத்தைப் பார்த்து வியப்பில் மூழ்கிய நண்பர்கள், ஆரவாரத்துடன் முன் செல்ல யானை அவனைக் கொண்டு வந்து வீட்டு வாசலில் விட்டு விட்டுக் காட்டுக்குத் திரும்பியது.

வளவன் சிங்கத்தைக் கொன்ற செய்தி ஊரெங்கும் பரவி, பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்த திருத்தாமனும் நல்லினியும் ஓடிவந்தார்கள்.

வளவன் சிங்கத்தை வென்றது, ஒரு சுப சூசகமாய்த் தோன்றியது திருத்தாமனுக்கு. அந்த இளஞ்சிங்கத்தைச்



சிங்காதனத்தில் ஏற்றவேண்டிய தருணம் வந்து விட்டது என்று உணர்ந்த அவன், ''நல்லினி! நான் புகாருக்குப் போய், வளவன் பட்டம் சூடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்...'' என்றதும், தாய் மகிழ்ச்சியில் பூரித்தாள்.

திருத்தாமனை நம்பிப் படிக்க வந்த சிறுவர்களை, அப்படியே பாதிப்படிப்பில் விட்டுவிட்டுப் போக முடியுமா? அவர்களுக்கு, வேறொரு ஆசிரியரை ஏற்பாடு செய்து முடிக்க, ஒரு வாரம் ஆகிவிட்டது.

''நல்லினி! நான் தலைநகர் சென்று, உங்களை அரச மரியாதையுடன் அழைத்துவர, பல்லக்கும் பரிவாரமும் அனுப்பிவைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்ற திருத்தாமன், புகாரை நெருங்கியபோது கேட்ட செய்தி, பயங்கர இடியாய் அவன் தலையில் விழுந்து, அவனுடைய எதிர்காலக் கனவுகளையும் இத்தனை வருட முயற்சிகளையும் தூள் தூளாக்கிவிட்டது.

## 12

பருலூர்க் காட்டில் வேட்டைக் கூடாரத்தில் வளவனை எரித்து, எலும்புகளையும் சாம்பலையும் பார்த்த பிறகு தான், சித்திரனும் மற்றவர்களும், பிடலூர் திரும்பினார்கள்.

அவர்கள் வந்து சொன்னதும், மாந்தரனுக்குச் சிறிது ஏமாற்றமாகி விட்டது.

வளவன் உடலை எரித்து விடாமல், ஏதோ காட்டு மிருகத்தால் தாக்கப்பட்டு இறந்ததுபோல், கொன்று

போட்டுவிட்டு, அரசாங்க அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் செய்தியைப் பரப்பினால், அந்த உடலை நேரடியாகப் பார்த்து விட்டு, தங்கள் மன்னனின் வாரிசு போய் விட்டான் என்று உறுதியாகத் தெரிந்து கொள்வார்கள் என்ற யோசனை தோன்றியது மாந்தரனுக்கு.

உடனே தன் வீரன் ஒருவனை அவசரமாகப் பருவூர்க் காட்டுக்கு அனுப்பி வைத்தார் அவர். தான் முன்பு அளித்திருந்த கட்டளையை மாற்றுவதற்காக, அந்த வீரன் குதிரையில் வேகமாகப் போய்ச் சேருவதற்குள், சித்திரன் பழைய கட்டளைப்படி வளவனை எரித்து விட்டதை அறிந்து, மாந்தரனுக்குச் சிறிது ஏமாற்றமாகி விட்டது.

"ஐயா! நீங்கள் அனுப்பிய அந்தக் குதிரை வீரன் இதுவரை அங்கே வரவில்லையே?" என்று திகைத்தான் சித்திரன்.

அந்த இளைஞன் என்ன ஆனான் என்பதைவிட, இனி என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை மாந்தரனின் மனதில் இடம் பிடித்துக் கொண்டது.

'மறைந்து வாழ்ந்த வளவன், பருவூர்க் காட்டிலே ஒரு வீட்டில் இருந்தபோது தீவிபத்துக்குள்ளாகி இறந்து விட்டான்; எலும்புத் துண்டுகள்தான் அங்கே கிடக்கின்றன' என்ற செய்தியை, மக்களிடையே மாந்தரனின் ஆட்கள் பரப்பினார்கள்.

பொய் என்று தெரிந்ததையே, உண்மை மாதிரி சொல்லிப் பரப்புகிறவர்களுக்கு, உண்மை என்று தெரிந்ததை, பரப்புவது கடினமா?...

இந்தச் செய்தி அமைச்சர் வரை எட்டியது. பதறிப் போன அமைச்சர் உடனே தன் வீரர்களைப் பருவூர்க் காட்டுக்கு அனுப்பி வைத்தார். எலும்புகள் கிடப்பது உண்மைதான் என்றாலும், அது வளவன்தான் என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்?



"அமைச்சரே! நாங்கூருக்கும் நான் மாறுவேடத்தில் போய்ப் பார்த்தேன். அங்கே திருத்தாமனோ, அரசியாரோ, அரசரோ, யாருமே இல்லை. திடீரென்று அவர்கள் ஊரை விட்டுப் போய்விட்டதாகத் தெரிகிறது. ஒரு தடவை வளவனை யாரோ தூக்கிக்கொண்டு போனதாகவும், இரண்டு நாளில் அவன் திரும்பி வந்ததாகவும், மறுபடியும் அவன் காணாமல் போய்விட்டதாகவும் அந்த ஊர்க்காரர்கள் சிலர் சொன்னார்கள்..." என்றான் ஒற்றர் தலைவன் உருத்திரன்.

"அடிக்கடி தலைநகருக்கு வருகிற திருத்தாமன், சில மாதங்களாக இந்தப் பக்கமே வரக்காணோமே?" என்று சந்தேகப்பட்டான் திதியன்.

"எதிரிகள் கிளப்பிவிட்டிருக்கிற வதந்தி, நாடெங்கும் பரவி, மக்கள் மிகவும் பரபரப்பாக இருக்கிறார்கள். அரசர் பெயரைச் சொல்லிக்கொண்டு அரசாட்சி நடத்துகிற நம்மை எதிர்த்து, மக்கள் எந்த நேரத்திலும் கிளர்ச்சி செய்யத் தொடங்கிவிடுவார்கள் போல் தோன்றுகிறது..." என்று எச்சரித்தான் உருத்திரன்.

உடனே அவசரமாக ஐம்பெருங்குழு கூட்டப்பட்டது.

"திருத்தாமன் அடிக்கடி இங்கே வந்து அரசரின் நலத்தைச் சொல்லிவிட்டுப் போவது வழக்கம். ஆனால் சில மாதங்களாக அவர் இங்கே வரவில்லை. நம் ஒற்றர் தலைவர் மூலம், அவர்கள் நாங்கூரிலேயே இல்லை என்ற உண்மையும் தெரியவருகிறது. இந்த நிலையில், எதிரிகள் கிளப்பி விட்டிருக்கிற வதந்தியை நாம் எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி ஆலோசனை செய்யத்தான் இங்கே கூடியிருக்கிறோம்" என்று பிரச்னையை முன் வைத்தார் அமைச்சர் உதயதேவர்.

"அமைச்சரே! திருத்தாமன் எத்தகைய சிறந்த வீரர், அறிவாளி என்று நமக்குத் தெரியும். அவர் பாதுகாப்பில் இருக்கும் அரசருக்கு எந்தவிதக் கெடுதலும் ஏற்பட்டிருக்

காது என்று நம்புகிறேன்,'' என்று அழுத்தமாகச் சொன்னார் புரோகிதர் கௌதமனார்.

''வெறும் நம்பிக்கைகள் மட்டும், பிரச்னைக்குத் தீர்வு தராது; எல்லோரையும் நம்ப வைக்கவும் முடியாது. ஒரு வேளை, அரசருக்கு ஆபத்து வந்துவிட்டதால்தான் திருத்தாமன் இங்கே வரவில்லையோ என்று தோன்றுகிறது. அரசரை இழந்துவிட்டு எப்படி அவர் இங்கே வந்து நம் முகத்தில் விழிப்பார்? அவருக்கும் அரசியாருக்கும் அப்புறம் இங்கே என்ன வேலை? அதனால், அரசரைப் பறிகொடுத்ததும், இருவரும் எங்கோ தொலை தூரத்துக்குப் போய்விட்டார்கள் போலிருக்கிறது?''

''பருவூர்க் காட்டு வீட்டிலே தீ விபத்தில் இறந்தது அரசர்தான் என்றால், மற்ற இருவரும் அங்கேதானே இருந்து எரிந்து போயிருக்க வேண்டும்? அவர்களுடைய எலும்புகள் எங்கே?'' என்று கேட்டார் தூதுவர் தலைவர் காலநாபர்.

''ஒரு வேளை, எதிரிகள் அரசரைத் தூக்கிக் கொண்டு போய், காட்டில் வைத்து எரித்துவிட்டு, தீவிபத்து என்று பொய் சொல்லலாம், இல்லையா?'' என்றார் அமைச்சர்.

''நாட்டு அரசியல் நிலையைத் தெரிந்து கொள்ளாமல் திருத்தாமன் இத்தனை மாதங்கள் ஒளிந்திருக்கக் கூடியவர் அல்ல. ஆகவே அவர் இங்கே வராமல் இருப்பதற்குக் காரணம்—'' என்று சொல்ல வந்த உருத்திரன், தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டு விட்டான்.

பொதுவாக, அங்கே— அரசன் எரிந்து போய் விட்டான் என்னும் நம்பிக்கைதான் ஓங்கியிருந்தது. ஆனால் அதை யாருமே பட்டவர்த்தனமாக ஒப்புக் கொண்டு பேச மனம் இடம் தரவில்லை; சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். கசப்பான, அதிர்ச்சியான அந்த உண்மையை எதிர்கொள்ள, அந்த நல்லவர்களுக்குத் தைரியம் ஏற்படவில்லை!...



''சரி... இப்பொழுது பிரச்னைக்கு வருவோம். அரச வாரிசு இல்லை என்ற முடிவுக்குக் கிட்டத்தட்ட வந்து விட்ட பிறகு, நாம் தொடர்ந்து ஆட்சி நடத்துவதற்கு, நமக்குத் தார்மீக உரிமையோ, துணிச்சலோ கிடையாது. ஆகவே இனி என்ன செய்ய வேண்டும் என்று நாம் முடிவு செய்ததாக வேண்டும்...'' என்று, கடைசியில் திண்ணமான தீர்மானத்துக்கு வந்தார் அமைச்சர்.

''அரசன் இல்லாத நாடு, திலகம் இல்லாத நெற்றி போல, சிறக்காது. ஆகவே நாம் இன்னொரு அரசரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதான்...'' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சொல்ல ஆரம்பித்த காலநாபர், தழுதழுத்த குரலிலே பேசி முடித்தார்.

''அரச குடும்பத்தின் வாரிசு என்று சொல்லிக் கொள்கிற இருங்கோ, தனக்கு அரச பதவி வேண்டும் என்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறான். ஆனால் அவனை அரசனாக்கக் கூடாது; அவன் தன் மகனே இல்லை என்று காலஞ்சென்ற மூத்த மன்னர் சேட்சென்னி அறிவித்திருக்கிறாரே?...''

''இருங்கோவை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும், மற்றவர்களில் யாருமே அரசனாகும் தகுதியுள்ளவர்களாகத் தெரியவில்லையே?...''

''எரிகின்ற கொள்ளிகளிலே எது நல்ல கொள்ளி?... எல்லோருமே திறமையற்றவர்கள்தான்; சுயநலக்காரர்கள்தான்; பதவியாசை பிடித்தவர்கள்தான்!'' என்று குமுறினான் படைத்தலைவன்.

''யாரை நாம் அரசராகத் தேர்ந்தெடுப்பது? எந்த முறையில் தேர்ந்தெடுப்பது?'' என்று திகைத்தார் அமைச்சர்.

அமைச்சரைப் போல்தான் எல்லோரும், என்ன செய்வதென்று புரியாமல் குழம்பித் திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

கடலிலே மிதக்கும் துரும்புபோல, அவர்களின் சிந்தனை அங்குமிங்கும் தாவிக் குழம்பிக் கொண்டிருந்தது.

அப்போது, அந்த அறைக் கதவு திறந்து கொண்டது— அரசாங்கப் பணியாள் ஒருவன் உள்ளே வந்து வணங்கி நின்றான்.

''என்ன செய்தி?'' என்று கேட்டார் அமைச்சர்.

''கழுமலத்திலிருந்து காணாமல் போன பட்டத்து யானை, தானாகத் திரும்பி வந்து விட்டதாம்; செய்தி இப்போதுதான் கிடைத்தது...'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான் அந்தப் பணியாளன்.

பட்டத்து யானை என்றதும், சட்டென்று கெளதமனாரின் சிந்தனையில் ஒரு பொறி தட்டியது:

''அமைச்சரே! காணாமல் போன பட்டத்து யானை, நம்மிடம் தானாகத் திரும்பி இப்போது வந்திருப்பதில், ஒரு தெய்வீகக் குறிப்பு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது... அந்த யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து அனுப்பி வைத்து, ஒரு அரசனைத் தேர்ந்தெடுக்கச் சொல்லலாமே?... இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில், பட்டத்து யானை மூலம் அரசர்களைத் தேர்ந்தெடுப்பது, நம் நாட்டின் பழக்கம்தான்.[1]''

கெளதமனாரின் யோசனை, எல்லோருக்கும் சரியென்று தோன்றியது.

அவர்களாக ஒரு மன்னனைத் தேர்ந்தெடுத்தால், எதிரிகள் மக்களைத் தூண்டிவிட்டுக் கலவரம் செய்யும் வாய்ப்பு உண்டு. ஆனால் பட்டத்து யானையால் தேர்ந்தெடுக்கப்படுபவன் யாராயிருந்தாலும், தெய்வத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்று கருதி, மக்கள் மகிழ்ச்சியுடன் அவனை ஏற்றுக் கொள்வார்கள்.

---

1. பெரிய புராணத்தில், மூர்த்தி நாயனார் புராணத்தில் இப்பழக்கம் நடந்த வரலாறு கூறப்பட்டுள்ளது.



கழுமலத்திலிருந்த பட்டத்து யானையை அரச சின்னங்களுடன் அலங்கரித்து, தூப தீபங்காட்டி வணங்கி, துதிக்கையில் ஒரு மாலையைக் கொடுத்து அவிழ்த்து விட்டார்கள். யானையின் பின்னால் ஒரு சிறு படையும், எதிர்கால மன்னரை அழைத்து வர, பல்லக்கும் அனுப்பப் பட்டன...

சோழநாட்டு அரசனைத் தேர்ந்தெடுக்கப் பட்டத்து யானை அனுப்பப்பட்டுள்ள செய்தி, திருத்தாமன் தலையில் இடிபோல விழுந்தது. தான் புகார் அரண்மனைக்குச் சில மாதங்களாகப் போகாமலிருந்தது, எத்தகைய பாதகத்தை ஏற்படுத்தி விட்டது என்று உணர்ந்து துடித்தான் அவன்.

பட்டத்து யானை யாராவது ஒருவன் கழுநீர் மாலையைப் போட்டு அரசனாக்கிக் கொண்டு விட்டால் உரிமையுள்ள வளவன் கதி?... திடீர் அரசனானவன், வளவனுக்கு அரசுரிமையை விட்டுக் கொடுப்பானா?... அந்தத் 'திடீர் அரசனை'த் தம் பக்கம் சேர்த்துக் கொண்டு, எதிரிகள் கிளர்ச்சி நடத்த மாட்டார்களா?... சோழ நாட்டிலே ஓர் உரிமைப்போர், உள்நாட்டுப் போர் நடக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விடுமே?... இந்த வாய்ப்பை, பகை நாடுகள் எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும்?... நிலைமை பெரும் சிக்கலாகி விட்டதே!...

வளவன் இறந்து விட்டான் என்று எப்படி ஐம்பெருங் குழு முடிவு செய்தது?... உண்மையைச் சரிவர விசாரித்து உணர்ந்து கொள்ளாமல், ஒரு தவறான முடிவுக்கு வந்த ஐம்பெருங்குழுவின் அவசரத்துக்காக வருந்துவதா, அல்லது அவர்களையும் நிலை தடுமாறச் செய்யும் அளவுக்குப் பொய்ப் பிரச்சாரம் நடத்தி வெற்றி கண்ட எதிரிகளின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டுவதா?—

— திருத்தாமன் திகைத்துப் போய் நின்றான்.

பட்டத்து யானை புகாரை விட்டுப் புறப்பட்டு நாலைந்து நாட்களாகி விட்டதாம். இதற்குள் அது யாரையாவது தேர்ந்தெடுத்திருக்குமோ?...

வேக வேகமாக, புகார் நகருக்கு விரைந்து, அமைச்சர் இருந்த இடத்துக்குச் சென்றான் திருத்தாமன்.

திருத்தாமனைப் பார்த்ததும், அமைச்சர் வியப்பால் திகைத்து நின்றார்:

''திருத்தாமனா?'' என்று வாய் பிளந்து கூவினார் அவர்.

''அமைச்சரே! நீங்கள் செய்த செயல், உங்களுக்கே ஞாயமாகப் படுகிறதா? இத்தனை அறிவும் அனுபவமும் ள்ள நீங்கள் இந்தத் தவற்றைச் செய்யலாமா? மன்னர் ஞ்சேட்சென்னியின் உப்பைத் தின்று, அவர் நமுக்கே துரோகம் செய்து விட்டீர்களே? சேட்சென்னி ன் மகன்— உண்மையான வாரிசு, சிங்கக்குட்டிபோல் வளர்ந்திருக்கிறான். நீங்கள் அவனை ஒதுக்கிவிட்டு, யாரோ ஒருவனுக்கு அரச பதவியைத் தூக்கிக் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டீர்களே?'' என்று எரிமலையாய்ப் பொங்கிக் குமுறினான் திருத்தாமன்.

''வளவன் உயிரோடிருக்கிறாரா?''

''வளவன் மட்டுமா, அரசியாரும் நானும் எல்லோரும் உயிரோடு இருக்கிறோம். காலஞ்சென்ற மன்னருடைய காலம் சென்றதும் அவருடைய ஆட்கள் எவ்வளவு விசுவாசமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்க்க, எல்லோரும் உயிரோடுதான் இருக்கிறோம். சோழநாடு மறுபடியும் பழம் பெருமையை அடைய வேண்டும்; அதற்குத் தகுதியான ஓர் அரசனை உருவாக்க வேண்டும் என்று நான் அல்லும் பகலும் பாடுபட்டுக் காப்பாற்றி வருகிறேன்; நீங்கள் வெகு சுலபமாக, யாரோ ஒருவனை அரசனாக்கத் திட்டமிட்டுவிட்டீர்கள்!'' என்று கோபாவேசமாகச் சிரித்தான் திருத்தாமன்.



அமைச்சர், அவசரப்பட்டுத் தாங்கள் செய்த முடிவை நினைத்துத் துடித்தார்; என்றாலும், அந்த முடிவுக்கு வந்ததற்கு, அவர்கள் மேல் மட்டும் தவறு இல்லையே— பல மாதங்களாக, அரண்மனைக்கே வராமலிருந்த திருத்தாமன் மேலும் தவறு இருக்கிறதே!

''திருத்தாமன்! எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள். தாங்கள் அவசரப்பட்டு இந்த முடிவுக்கு வந்துவிட்டோம். ஆனால் நீங்கள் பல மாதங்களாக என்னை வந்து சந்திக்காததால், எங்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. எதிரிகள் கிளப்பிவிட்ட வதந்தி உண்மையாக இருக்குமோ என்று நினைத்துவிட்டோம்,'' என்று விளக்கினார் அமைச்சர்.

அமைச்சர் கூறிய வாதத்தை, திருத்தாமனும் ஏற்றுக் கொண்டான். தான் ஏன் புகாருக்கு வரவில்லை என்பதற்கான சூழ்நிலையையும் நடந்த நிகழ்ச்சிகளையும் சுருக்கமாகக் கூறினான் அவன்.

எதிரிகள் பரப்பிய வதந்தியால் நாட்டு மக்களிடையே ஏற்பட்ட குழப்பத்தையும், தங்கள் ஆட்சியைக் குறை சொல்லும் அளவுக்கு மக்களிடையே எதிர்ப்புக்குரல் எழும்பியதையும் அதனால் ஓர் அவசர முடிவுக்கு வர நேர்ந்ததையும் அமைச்சர் விளக்கினார்.

''பரவாயில்லை, அமைச்சரே! என் தங்கையின் மகன் அரசனாக வேண்டும் என்று எனக்கு ஆசை இல்லை; உங்கள் மன்னரின் மகன் அரசனாக வேண்டும் என்றுதான் நான் இவ்வளவு பாடுபட்டேன்... என் தங்கையோ, நானோ, பரம்பரையாக அரச போகத்திலே வாழ்ந்தவர்கள் இல்லை; நல்ல வேளையாக, வளவனும் இதுவரை அரச போகத்தை அனுபவிக்கவும் இல்லை. நாங்கள் பரம்பரையாகக் கலப்பையைத் தோளில் ஏந்தி நிலத்தைக் கிளறி வாழ்ந்த குடிதான்; என் தங்கை மகனும், உழவுத் தொழில் செய்து பிழைப்பதைக் கேவலமாகக் கருதுபவனில்லை. நாங்கள் மறுபடியும் எங்கள் பரம்பரை

நிலத்துக்கே போய் விடுகிறோம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை... கடவுள் அருளால், இந்தச் சோழ மண்ணுக்கு ஓர் உயர்ந்த லட்சியங்கள் உள்ள, ஒரு நல்ல பண்புகளுள்ள மன்னன் கிடைக்கட்டும்...'' என்று திருத்தாமன் சொன்னதும், அமைச்சர் உணர்ச்சிவசப் பட்டுக் கண் கலங்கினார்; அவர் உடலெல்லாம் சிலிர்த்து நடுங்கியது.

அப்போது, தூரத்தே ஒரு கோயிலில் முழங்கிய மணியோசை அவர் காதுகளை நிறைத்தது. திடீரென்று ஓர் ஆவேச உணர்ச்சி அவருள்ளே புகுந்தது.

''திருத்தாமன்!... இந்தச் சோழ மண் புண்ணியம் செய்திருந்தால்— நான் அரசருக்கு நன்றி மறவாத ஊழியன் என்பது உண்மையாயிருந்தால்— நான் தின்ற உப்புக்குத் துரோகம் செய்யாதவன் என்பது உண்மையானால்— பட்டத்து யானை நம் வளவனையே அரசனாகத் தேர்ந் தெடுக்கும்! இல்லையேல், என்னை நன்றி மறந்த துரோகி என்றும் கடமை தவறிய அமைச்சன் என்றும் நாடு பழி தூற்றட்டும்!... மக்களெல்லாம் என்னைப் பழி தூற்ற, நான் பாவியாக இறந்தொழிந்து நீ நரகத்தில் போய்ச் சேருவேனாகுக!...'' என்று வஞ்சினம் கூறிக் குமுறியழுதார் அமைச்சர்.

அவருடைய உணர்ச்சித் துடிப்பைப் பார்த்துத் திடுக்கிட்ட திருத்தாமன், சட்டென்று அவர் வாயைப் பொத்தி ''அமைச்சரே! அப்படியெல்லாம் சொல்லாதீர் கள்!... உங்கள்மேல் எவ்விதக் குற்றமும் இல்லை... எல்லாம் அவன் செயல்; அவன் விட்ட வழிபிலேயே நடக்கட்டும்...'' என்று அவரைச் சாந்தப்படுத்தினான்.

நிதானத்துக்கு வந்த அமைச்சருக்கு, சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

''திருத்தாமன்! ஒன்று செய்யலாம்— உடனே அவசர மாக ஐம்பெருங்குழுவைக் கூட்டி, அரசர் வளவன் உயிரோ



டிருப்பதைத் தெரிவிப்போம். பட்டத்து யானையை உடனே திருப்பி அழைத்து வந்து விடலாம்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாசற்கதவு திறந்து உள்ளே ஒருவன் ஓடி வந்தான்.

''என்ன செய்தி? சீக்கிரம் சொல்...'' என்று நடந்து கொண்டே கேட்டார் அமைச்சர்.

''பட்டத்து யானை, ஒருவரை அரசராகத் தேர்ந் தெடுத்துத் தன் மேல் ஏற்றிக் கொண்டு அரண்மனை நோக்கி வருகிறது!...''

அதிர்ச்சியில் திடுக்கிட்டு நின்ற திருத்தாமனும் அமைச்சரும், சிறிது நேரத்தில் தம்மை நிதானப்படுத்திக் கொண்டு, மாடி உப்பரிகைக்குச் சென்று ராஜ வீதியைப் பார்த்தார்கள்.

தூரத்திலே பட்டத்து யானை வந்து கொண்டிருந்தது.

யானையைச் சுற்றி மக்கள் கூட்டமும் ஆரவாரமும் வானைப் பிளப்பது போலிருந்தது. கடலிடையே கப்பல் போல, மக்கள் வெள்ளத்தின் நடுவே, யானை மிடுக்காக நடந்து வந்து கொண்டிருந்தது!...

பட்டத்து யானை கழுமலத்திலிருந்து மாலையுடன் புறப்பட்டதிலிருந்து, அதைச்சுற்றி இப்படித்தான் மக்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டேயிருந்தது.

நாடெங்கும் மக்கள் பரபரப்புடன், தங்கள் மன்னனா கும் அதிர்ஷ்டம் யாருக்குக் கிடைக்கப் போகிறதோ என்ற ஆர்வத்தோடு அதைச் சுற்றி வந்தார்கள். எந்த ஊரிலே, எந்த வீட்டிலே அந்த அதிர்ஷ்டக்காரர் இருக்கிறாரோ என்று பேசிக்கொண்டே, எல்லோரும் ஆசையாய்த் தங்கள் கழுத்தை நீட்டிக் கொண்டிருந்தார்கள். சில துணிச்சல் காரர்கள், யானை முன்னாலேயே போய் நின்று பார்த் தார்கள்.

யானை கடந்து செல்லும் ஒவ்வொரு ஊரின் எல்லை தொடக்கத்திலும் அதை வரவேற்று வணங்கி, எல்லை முடிவில் அதைப் பணிந்து வழியனுப்பி வைத்தார்கள்.

சோழ நாட்டின் குறுநில மன்னர்களெல்லாம், அரசனைப்போல் கம்பீரமாக ஆடையணியால் அலங்கரித்துக் கொண்டு, தங்கள் ஊர் எல்லையில் யானை முன் பணிந்து நின்றார்கள். ஆனால் பட்டத்து யானை, யாரையுமே ஏறிட்டுப் பார்க்காமல், மேற்குத்திசை நோக்கி நடந்து கொண்டிருந்தது.

பட்டத்து யானை விடப்பட்ட செய்தி, சேர பாண்டிய நாடுகளிலும் பரவியது.

சோழ நாட்டின் மீது ஒரு கண் வைத்திருந்த சேரனும் பாண்டியனும், தங்கள் எதிரியாக வரப் போகிறவன் யாரோ என்ற ஆர்வத்தோடு காத்திருந்தார்கள்.

கடவுளின் கருணைப்பார்வை, எந்த அதிர்ஷ்டக்காரன் மீது விழப் போகிறதோ என்று தமிழ்நாடே எதிர் பார்த்துக் கொண்டிருந்தது....

மேற்கு நோக்கி நடந்த யானை, சேரநாட்டு எல்லையை நெருங்கிவிட்டது.

'ஒரு வேளை, யானை சோழநாட்டைத் தாண்டி, சேரநாட்டுக்குள் புகுந்து, அந்நாட்டு அரசனையே தேர்ந்தெடுத்து விடுமோ?' என்று சந்தேகப்பட்டார்கள் படை வீரர்கள்.

அவர்கள் அஞ்சியபடியே, யானை சோழநாட்டைக் கடந்து, சேர நாட்டுக்குள் பிரவேசித்து, எல்லையோரத்திலிருந்த கருவூரை நெருங்கி, ஊருக்குள்ளே நுழைந்தது.

அங்கே ஊர்க் கோடியிலிருந்த ஒரு குடிசை முன்னால் போய் நின்றது.

பட்டத்து யானை ஊருக்குள் நுழைந்ததுமே, அந்த ஊர் மக்களெல்லாம் திரண்டு, சோழ மன்னனாகும் பேறு



பெற்றவனைப் பார்க்க, யானை பின்னாலேயே வந்து, குடிசைமுன் நின்றதும் ஆரவாரம் செய்தார்கள்.

கூட்டத்தின் ஆரவாரத்தைக் கேட்டு, உள்ளிருந்து வெளியே வந்தான் வளவன்.

எதிரே நின்ற யானையைப் பார்த்து அவன் ஆச்சரியப் படும்போதே, அவன் கழுத்தில் மாலையைப் போட்டு, அவனைத் தூக்கித் தன் முதுகில் வைத்துக்கொண்டது பட்டத்து யானை.

வெளியே வந்த நல்லினி, நடந்ததைக் கேட்டு, மகிழ்ச்சியில் திக்பிரமையடைந்து நின்றாள்.

'சோழ மன்னர் வாழ்க!... வாழ்க சோழ மன்னர்!... வாழ்க!...' என்று சோழப் படைவீரர்கள் முழங்கினார்கள்.

பல்லக்குச் சேவகர்கள், நல்லினிதேவி முன்னே பல்லக்கை வைத்துப் பணிவாக நின்றார்கள்.

கூட்டத்தில் ஒரு பெரியவர் ''அம்மா! நீ பல்லக்கில் ஏறிக்கொள். ஆண்டவன் உன்மேல் கருணை மழை பொழிந்திருக்கிறான்...! யாருக்கும் கிடைக்காத அதிர்ஷ்டம் உன் மகனுக்குக் கிடைத்திருக்கிறது. அரண்மனைக்கு உன் மகனுடன் நீயும் போ... உன் அண்ணன் இங்கு வந்ததும், செய்தியைச் சொல்லி அனுப்பி வைக்கிறோம். நீ மகராசியாய்ப் போய் வாம்மா!...'' என்று வாழ்த்தி வழியனுப்பினார்.

'அது அவர்களுக்கு அதிர்ஷ்டம் அல்ல; உரிமைதான்' என்பது அந்த ஊர்க்காரர்களுக்குத் தெரியுமா?

யானையின் மேல் இருந்த வளவன், சட்டென்று ஏதோ நினைவு உந்த, யானையின் இடது காதைப் பார்த்தான்.

ஆம்; அதே யானைதான்!

சில நாட்களுக்கு முன், சிங்கத்திடமிருந்து அவன் காப்பாற்றிய அதே யானை!... இடது காதில் சிங்கத்தின் நகம் பட்டுக் கிழிந்த காயத்தின் வடு இருந்தது.

யானையின் நன்றியுணர்வையும் நினைவாற்றலையும் கண்டு, மெய்சிலிர்த்துப் போனான் வளவன்.

எத்தனையோ கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு, அவன் பெறவேண்டிய உரிமைச் சிங்காதனத்தை, எவ்வளவு எளிதாக அந்த நன்றி மறவா யானை அவனுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டது!

யானைமேலே சிங்கக்குட்டிபோல் வந்த வளவனைப் பார்த்த சோழ நாட்டு மக்கள் மகிழ்ச்சியால் பூரித்துக் களித்தார்கள்.

புகாருக்குள் நுழைந்ததும் நல்லினிதேவியை அடையாளங் கண்டு கொண்ட மக்கள், இளஞ்சேட் சென்னியின் மகனையே தங்கள் அரசனாக்கிய தெய்வச் செயலை நினைத்து மெய்சிலிர்த்துப் போனார்கள்.

மறுநாளே, முடிசூட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப் பட்டது.

நாடு முழுவதும் திருவிழாக் கோலம் பூண்டது. வீடுதோறும் திருமண விழா போல் அலங்கரிக்கப்பட்டு, தெருக்களிலெல்லாம் தோரணங்களும் அணி வளைவுகளும் வண்ணக் கோலங்களும் காட்சியளித்தன.

கண்கவர அலங்கரிக்கப்பட்டிருந்த அரண்மனையின் மணிமண்டபத்தின் நடுவே, மக்கள் வெள்ளம் அலை மோதி ஆர்ப்பரிக்க, கரிகால் வளவன் அரியணையில் சிங்கம் போல் கம்பீரமாக அமர்ந்தான்.

வயது முதிர்ந்த உழவன் ஒருவர், மணிமுடியை இரு கைகளால் எடுத்துத் தர, அமைச்சர் உதயதேவர் வளவன் தலையில் சூட்டினார். 'மாமன்னர் கரிகால் வளவன்



வாழ்க! வாழ்க!' என்று மக்கள் எழுப்பிய வாழ்த்தொலி வானை முட்டி எதிரொலித்தது.

அந்த விழாவைக் காண மாறு வேடத்தில் வந்திருந்த இருங்கோவிடம், பரபரப்புடன் ஓர் அவசரச் செய்தியைச் சொல்ல ஒருவன் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

## 13

மாந்தரனுக்கு இப்படி ஒரு திடீர் மரணம் ஏற்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

கரிகாலன் முடிசூடிய அதே சுப நேரத்தில், பிடவூரில், தன்னுடைய லட்சியத்தின் எல்லை இன்னும் நீண்டு கொண்டே போவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த மாந்தரன், இதயவலி ஏற்பட்டு, சடக்கென்று சுருண்டு விழுந்தவர், சில வினாடிகளுக்குள்ளே காலமாகி விட்டார்.

செய்தி தெரிந்து, முடிசூட்டு விழாவிலிருந்து ஓடோடி வந்தான் இருங்கோ.

தாத்தாவின் கடைசிக் காலத்தில் பக்கத்தில் இருக்க முடியாமல் போய்விட்டதே என்று குமுறியழுதான் பேரன்.

பேரனை மன்னனாக்குவதற்காக எத்தனையோ திட்டங்களை அடுக்கடுக்காகப் போட்டுக் கொண் டிருந்தாரே, ஆனால் அத்தனையும் நீர்மேல் எழுத்தாய், கானல் நீராய், நனவாகாமல் போய்விட்டதே?

பருவூர்க் காட்டிலே எரிக்கப்பட்டு, எலும்பும் சாம்பலுமாய்ப் போன வளவன் எப்படித் தப்பித்தான் என்ற மர்மம்— வளவனை எரிக்க வேண்டாம் என்ற

செய்தி சொல்ல அவர் அவசரமாய் அனுப்பிய ஆள்தான் எரிந்து அந்த எலும்பானான் என்ற விஷயம்— கடைசி வரை அவருக்குத் தெரியாமலே போய்விட்டது. ஏதோ கடவுள் அருள்தான் வளவனைத் தீயிலிருந்து காப்பாற்றியிருக்கிறது என்று, தன் திட்டத்தின் தோல்விக்குச் சமாதானம் தேடிக் கொண்டார். அந்தக் கடவுள் அருளினால்தானே, எங்கேயோ சேரநாட்டு ஓரத்தில் ஒளிந்திருந்தவன் கழுத்தில் மாலை போட வைத்து மன்னனாக்கியது?

ஒருவேளை தன் பேரனை அரியணையில் ஏற்றி வைத்துப் பார்க்கும் பாக்கியம் தனக்குக் கிடைக்காமலே போய்விடுமோ என்ற நினைவின் அழுத்தத்திலே, வளவன் முடிசூடிய நேரத்தில் அவருக்கு இதய அதிர்ச்சி ஏற்பட்டு, நிறைவேறாத ஆசைகள் நெஞ்சிலே நிறைந்திருக்க, மண்ணுலகை நீத்துச் சென்று விட்டார்.

"அந்துவன்! தாத்தா சாகும்போது பக்கத்திலே இருக்க முடியாத பாவியாகி விட்டேனே!" என்று அழுதான் இருங்கோ.

"நீ பக்கத்தில் இருந்திருந்தால், அவர் என்ன சொல்லியிருப்பார் என்று எனக்குத் தெரியும். உன் கையைப் பிடித்துக் கொண்டு 'நான் இறந்து போய்விட்டேன் என்று தளர்ச்சியடைந்து விடாதே! நீ தொடர்ந்து முயற்சி செய்து சோழ நாட்டுச் சிம்மாசனத்திலே ஏறி மன்னனாக வேண்டும். அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும்' என்று தன் கடைசி ஆசையைச் சொல்லியிருப்பார்..."

'ஆம்... அவருடைய கடைசி ஆசையை நிறைவேற்றுவதுதான் என் வாழ்க்கை லட்சியம். அவர் ஆத்மா சாந்தியடைவதற்காக நான் சோழ நாட்டு மன்னனாக வேண்டும்..." என்று ஆவேசமாக முழங்கிய பேரன், அதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டான்.

"சோழ நாட்டுச் சிம்மாசனம் காலியாக இருந்தவரை, நாம் உள்நாட்டுக்குள்ளே திட்டங்கள் போட்டுக் கொண்



டிருந்தோம். இனி அப்படி முடியாது. ஏனென்றால் இங்கே மன்னன் வந்துவிட்டான். இனிமேல் அரசியல் ரீதியான எதிர்ப்பை நாம் உருவாக்கியாக வேண்டும். இனி நேரடியாகக் கரிகாலனுடன் போரிட்டுத்தான் நாம் ஆட்சியைக் கைப்பற்றியாக வேண்டும்..." என்றான் இருங்கோ.

அவனுடைய கருத்தைக் கூட்டாளிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

"ஆம்... ஆனால் நாம் அந்தப் போரை விரைவிலே துவங்க வேண்டும். கரிகாலன் இப்போதே தன் படையைப் பெருக்குவதில் மும்முரமாக இறங்கியிருக்கிறான். அவன் பதவிக்கு வந்ததும் செய்த முதல் காரியமே, தன்னுடைய படைபலத்தைப் பெருக்கி நிலைப்படுத்துவதுதான். அவனுடைய மாமன் இருத்தாமன், அந்த வேலையிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான். சோனக[1] நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறதாம். கருங்கொல்லர் பட்டறைகளில் போர்க்கருவிகள் செய்யும் வேலை தொடங்கியிருக்கிறதாம்..." என்று விவரித்தான் நெடுந்தத்தன்.

"முள் பெரிதாக வளரும் முன்பே, அதைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இல்லையேல் அது வளர்ந்து நம் கையையே காயப்படுத்திவிடும்..." என்று திருக்குறள் வேதம் ஓதியது இன்னொரு சைத்தான்!

"நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்தாலும், இப்போது கரிகாலனைத் தோற்கடிக்கக் கூடிய அளவுக்குப் படைபலம் போதுமா? சிறு நரிகள் ஒன்றுகூடி, சிங்கத்தை வெல்ல முடியுமா?" என்று நந்தன் சொன்னதும், ரோஷம் பொங்கக் குறுக்கிட்டான் இருங்கோ:

"நந்தன்! நாம் எல்லாம் சிறு நரிகளும் அல்ல; கரிகாலன் பெரிய சிங்கமும் அல்ல— நினைவு வைத்துக்

1. சோனகம்— அரேபிய நாடு.

கொள்!... நாம் எல்லாம் ஒன்று சேர்ந்து திட்டமிட்டுச் சமயம் பார்த்துத் தாக்கினால், புயல் கூட்டத்தில் சிக்கிய பஞ்சாக, அவன் தூள்தூளாகிப் போவான்...'' என்று கர்ஜித்தான் இருங்கோ.

அவன் பேச்சை எதிர்க்காவிட்டாலும், அவனுடைய திட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தான் நீலன்:

''நம்முடைய படைகளையெல்லாம் ஒன்று திரட்டிக் கரிகாலனை வெல்ல முடியுமா முடியாதா என்று கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பதை விட, பாண்டியனையோ சேரனையோ நம் பக்கம் சேர்த்துக் கொண்டு விட்டால், நிச்சயமாகக் கரிகாலனைத் தோற்கடித்து விடலாம், இல்லையா?'' என்று அவன் சொன்னதும் எல்லோரும் அதை ஒப்புக் கொண்டார்கள்.

''அதுசரி, கரிகாலனை எதிர்த்துத் தோற்கடிப்பதில் பாண்டியனோ சேரனோ உதவுவான் என்பது என்ன நிச்சயம்?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் நந்தன்.

''நிச்சயம் உதவுவார்கள். சோழ நாட்டுச் செல்வத்திலே பங்கு பெறுவதற்கு யாருக்குத்தான் ஆசையிருக்காது? கரிகாலனை வெல்வதற்கு உதவி செய்தால், அவர்களுக்கு நம் அரசாங்கக் கருவூலத்திலிருந்து கணிசமான பொன்னும் நிலப் பகுதியையும் அன்பளிப்பாகக் கொடுப்போம்...'' என்று தாராளமாக வழங்க முன்வந்தான் வள்ளல் இருங்கோ!

''சேரனும் பாண்டியனும் நேரடியாகச் சோழ நாட்டைத் தாக்கத் தயங்குகிறார்களே ஒழிய, இங்கே உள் நாட்டிலே அவர்களுக்கு நாம் உதவிசெய்யத் தயாராயிருந்தால், அவர்கள் நிச்சயமாகப் போருக்கு ஒப்புக்கொள்வார்கள். கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு என்றால் எதிரிகளுக்குக் கொண்டாட்டம்தானே? ஆகையால் நாம் சேரனையோ, பாண்டியனையோ உடனடியாக உதவிக்கு அழைக்க வேண்டும்...''



''சேரனையோ அல்லது பாண்டியனையோ என்பதை விட, சேரனையும் பாண்டியனையும் என்று ஒன்றாக முயற்சி செய்வது புத்திசாலித்தனம் இல்லையா?'' என்று ஒரு யோசனையைச் சமர்ப்பித்தான் நந்தன்.

அது ஏகமனதாக நிறைவேறியது.

''அப்படியே செய்யலாம்... நெடுந்தத்தனும் நீலனும் பாண்டியனிடம் சென்று உதவி கேட்டு வரட்டும். நானும் அந்துவனும் சேரநாட்டுக்குப் போய் வருகிறோம். நமக்கு உதவி செய்வதற்காக அவர்கள் என்னென்ன கேட்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு வந்து, நாம் மறுபடி எல்லோரும் கூடி ஓர் இறுதி முடிவுக்கு வரலாம்...'' என்று சொன்னான் இருங்கோ.

புகாரில் இந்திரவிழா கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இளஞ்சேட்சென்னி இறந்தபிறகு பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த விழா, கரிகாலன் முடிசூடிய சில மாதங்களிலேயே வந்துவிட்டது. மக்கள் புதிய உற்சாகத்துடனும் எழுச்சியுடனும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டார்கள்.

இத்தனை ஆண்டுகளாய்க் கொண்டாடாமல் இருந்த ஏக்கத்தையெல்லலாம் ஒன்று சேர்த்து, இந்த ஆண்டு வெளிக்காட்டி விடுவதைப் போல், புகார் நகரம் புதிய கோலம் கொண்டு விளங்கியது.

வழக்கத்திற்கு அதிகமாகவே அயல்நாட்டு மக்களும், தமிழ்நாட்டுப் பிற பகுதிகளிலிருந்து வந்த மக்களும், கூடியிருந்தார்கள். தங்கள் புதிய மன்னரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள சோழ நாட்டு மக்கள், இந்திர விழாவையும் பார்த்துப் போகலாம் என்று அந்தச் சமயத்தில் புகாருக்கு வந்திருந்தார்கள்.

புகார் நகரில் உள்ள வீடுகளிலெல்லாம் உறவினர்களையும் நண்பர்களையும் விருந்தினராக ஏற்று உபசரித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அரசாங்க மண்டபங்களிலும் பல ஓய்வு விடுதிகளிலும்[2] அட்டில்சாலைகளிலும் விருந்தினருக்கு உணவு வழங்கப்பட்டது.

சித்திரை மாதம் சித்திரையும் பௌர்ணமியும் கூடிய நாளில் விழா தொடங்கியது. மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் நடுவில் இருந்த நாளங்காடிப் பூதத்திற்குப் பெண்கள் பொங்கல் வைத்துப் பூச்சூடிக் குரவையாடி அரசனை வாழ்த்திச் சென்றனர். பின்பு வீரர்கள் கூட்டமாகச் சென்று, முரசு முழக்கி உயிர்ப் பலியூட்டினர். அதன்பின் அரும்பெறல் மண்டபம், வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் ஆகியவற்றிலும் பலிகள் கொடுக்கப்பட்டன.

வச்சிரக் கோட்டத்தில் இருந்த முரசை வெள்யானைக் கோட்டத்துக்குக் கொண்டு வந்து, யானை மேல் ஏற்றி விழாத் தொடங்கியதை நகர் முழுவதும் பறையறிவித்து, தருநிலைக் கோட்டத்திலுள்ள கொடியை ஏற்றினர்.

ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும்[3] அரச குடும்பத்தினரும் குதிரை, யானை, தேர் முதலியவற்றில் வந்து கோயிலில் கூடியிருந்தனர். காவிரி நீரைப் பொற் குடங்களில் கொண்டு வந்து, இந்திரனை நீராட்டி

2. அட்டில்சாலை— உணவு சமைத்து வழங்கும் இடம்.
3. கரணத்தியலவர் (கணக்கர்), கரும விதிகள் (அரசாணைகளை நிறைவேற்றுவோர்), கனகச் சுற்றம் (கருவூல அதிகாரி), கடை காப்பாளர் (காவலாளர்), நகர மாந்தர் (மக்கள் பிரதிநிதி), படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகியோர் அடங்கிய அவை, எண் பேராயம் எனப்படும்.



அரசனை வாழ்த்தினர். சிவன் கோயில் முதலிய மற்ற தெய்வங்களின் கோயில்களிலும் ஓமம், பூசை, வழிபாடு முதலியன சிறப்பாக நடத்தப்பட்டன.[4]

அன்று மாலை நேரம், காரிக் கண்ணனார், தன் மனைவி, மகன், விருந்தாக வந்திருந்த ஓர் இளம்பெண் ஆகியவர்களை அழைத்துக் கொண்டு, விழாக்கோலம் கண்டு ரசிக்க, வீட்டை விட்டுக் கிளம்பினார்.

''இந்திர விழாவைப் பற்றிப் பல வெளி நாட்டு வணிகர்கள் என் அப்பாவிடம் புகழ்ந்து பாராட்டிப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அதை எப்படியாவது பார்த்து விடவேண்டும் என்று எனக்கு நெடு நாட்களாக ஆசை... அது இந்த ஆண்டுதான் நிறைவேறியது...'' என்று குதூகலமாகத் துள்ளிக் குதித்தபடி வீதியில் நடந்து வந்தாள் அந்த இளம்பெண்.

நகரத் தெருக்களில் எல்லாம் வண்ணத் தோரணங்களும் வளைவு வாயில்களும் பூரண கும்பமும் பொற் பாலிகையும் வைத்து அழகுபடுத்தப்பட்டிருந்தன. மரகதம், வைரம் முதலியவற்றை ஆயப்பலகையாகப் படுத்து, பவளத் தூண்களையுடைய மாபெரும் மாளிகைகளின் வாயில்கள்தோறும் கிம்புரி செறித்த யானைக் கொம்புகளையும் முத்துமாலைகளையும் அலங்கரித்து வைத்திருந்த காட்சி, காண்போர் கண்களைக் கவர்ந்தது; வீடுதோறும் பசும்பொன் குடமும் முளைப் பாலிகையும் பாவை விளக்கும் பசும்பொன்கொடிகளும் வெண்மயிர்க்கவரியும் மேலும் அழகு ஒளிவீசச் செய்தன.

''இந்திரவிழா என்பது ஓர் அரசாங்க விழா மாதிரி மட்டும் இல்லை; ஒவ்வொரு வீட்டிலும் ஒரு திருமணவிழா

4. இந்திர விழா பற்றிய முழு விவரங்களைச் சிலப்பதிகாரத்தில் 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் காணலாம்.

நடப்பது போலல்லவா, அலங்கரித்து வைத்திருக்கிறார்கள்?'' என்று ஆச்சரியப்பட்டாள் அந்தப் பருவ மங்கை.

''அது சோழநாட்டு மக்களின் பண்பு; தங்கள் அரசனை ஏதோ தெய்வப் பிறவியாய்க் கருதிப் பயப்படுகிறவர்கள் இல்லை— தங்களில் ஒருவனாகவே நினைத்துப் பாசத்தோடு பழகுகின்ற ஒரு குடும்பப் பிணைப்புத்தான் இங்கே. இளஞ்சேட்சென்னி இறந்ததும், தங்கள் குடும்பத் தலைவனே இறந்ததாகக் கருதி, இத்தனை ஆண்டுகளும் இந்திர விழாவையே மக்கள் கொண்டாடவில்லை. இப்போது கரிகால்வளவன் வந்தபிறகுதான், விழாக் கொண்டாடுகிறார்கள்...'' என்று விளக்கினார் காரிக்கண்ணன்.

நகரத்தின் பல்வேறு இடங்களிலும் மக்கள் இனிமையாகப் பொழுது போக்குவதற்காக, யாழிசையும் இசையரங்குகளும் நிகழ்ந்துகொண்டிருந்தன. அறவோர் பள்ளி முதலிய இடங்களில் அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடந்துகொண்டிருந்தன.

கடற்கரையில் ஆண்களும் பெண்களும் கூட்டங்கூட்டமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இளம் தம்பதிகள், கரை ஓரத்தில் சிறுசிறு கூடாரங்களை வண்ணத் துணிகளால் அமைத்துக்கொண்டு, உள்ளே அமர்ந்து மகிழ்ச்சியாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் காட்சி, அழகாயிருந்தது.

கடற்கரையின் நடுவிடத்தில் உயர்ந்த தலமாக அமைக்கப்பட்டிருந்த ஒரு வண்ண மேடையில், இன்னும் சிறிது நேரத்தில் 'தலைக்கோலி' பட்டம் பெற்ற ஆடலரசியின் நாட்டியம் நடைபெறவிருந்தது. அந்த மேடையை நோக்கி, மக்கள் கூட்டம் நெருக்கியடித்துப் போய்க் கொண்டிருந்தது.



அந்தக் கூட்டத்தில் வயது முதிர்ந்த ஒருவர், எதிரே வருவோரிடத்தில் எல்லாம் ஏதோ கேட்டு அவர்கள் கருத்தைத் தெரிந்துகொண்டபடி, நடந்து வந்து கொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட அறுபது வயதைக் கடந்த தோற்றம்; தாடியும் மீசையும் முற்றிலும் கடல் நுரையாய் வெளுத்திருக்க, தலையில் வெள்ளை மயிர்களுக்கு இடையே ஒன்றிரண்டு கருமுடிகள், பழங்கால நினைவுச் சின்னங்களாகக் காட்சியளித்தன. தளர்ந்துபோன கால்களுக்கு ஆதரவாக ஒரு கைத்தடி வைத்து ஊன்றி நடந்து வந்தார். அவர் உடலின் நடுக்கம், அந்தக் கைத்தடிக்கும் பரவியிருந்தது. பேசும்போது குரலிலே லேசான நடுக்கம்; தலையும் அவ்வப்போது நடுங்கி, தன் முதிய வயதைக் காட்டிக் கொண்டிருந்தது.

அந்த முதியவர், எதிரே வந்து கொண்டிருந்த காரிக்கண்ணனாரின் பக்கத்தில் வரும் இளம்பெண்ணைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார்.

கொல்லிப்பாவை[5] போன்ற வாளிப்பான உடற்கட்டு மட்டுமல்ல; அந்த அழகிய கவர்ச்சியான முகத்திலே தவழ்ந்த அறிவு தேஜஸ், அவரை அப்படியே வைத்த கண் வாங்காமல் பார்க்கும்படி செய்துவிட்டது.

அவளைப்போன்ற எத்தனையோ அழகிகளை அவர் அந்த நகரத்திலே பார்த்திருக்கிறார்; ஆனால் இவளுடைய அகன்ற விழிகளில் தீபச்சுடராய் ஒளி வீசுகின்ற தீட்சண்யம் அலாதியாக இருந்தது. சிறிது அகன்ற நெற்றியின் அழகும் எடுப்பான நாசியின் தீர்க்கமும், சிவந்த

---

5. கொங்கு நாட்டில் நாமக்கல் பக்கம் உள்ள கொல்லி மலையில் 'கொல்லிப்பாவை' என்னும் அழகிய சிலை இருந்தது. சங்க இலக்கியங்களில் பல பாடல்களில் இச்சிலையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இதழ்களின் வடிவான இறுக்கமும், அவர் வெறும் அழகுப் பாவை அல்ல; அழகும் கவர்ச்சியும் அறிவும் புத்திக் கூர்மையும் கலந்த ஓர் அபூர்வக் கலவை என்பதைக் காட்டின. அந்த அபூர்வ அழகும் மிடுக்கான ஆளுமையும், முதியவரைக் கவர்ந்து இழுத்தன.

அவள் வெறுமே பார்த்து மகிழ வேண்டிய அழகோவியம் அல்ல; பேசி ரசிக்க வேண்டிய அறிவுஜீவி என்பதை உணர்ந்து, மெதுவாக அவள் முன்னால் தள்ளாடித் தள்ளாடி வந்து நின்றார் முதியவர்.

''வணக்கம், ஐயா! தாங்கள், புலவர் காரிக்கண்ணனார்தானே?'' என்று, காரிக்கண்ணனுக்குத் தன் நடுங்கும் குரலால் வணக்கம் சொல்லி, நடுங்கும் கைகளைக் குவித்துக் கும்பிட்டார் முதியவர்.

''ஆம்... முதியவரே!... தாங்கள் யார்?'' என்று பரிவோடு கேட்டார் காரிக்கண்ணன்.

''நான் யார்?... முதியவர்தான்!...'' என்று உடல் குலுங்கச் சிரித்துக் கொண்ட அவர், ''புலவரே! உங்களை நான் முன்பே பார்த்திருக்கிறேன். உறையூரில் இருக்கிறாரே, மோசியார், அவர் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். உங்கள் கவிதைகளெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். அவற்றில் ஒரு பாட்டு எனக்கு மிகவும் பிடித்தது; மனப்பாடமே பண்ணியிருக்கிறேன்...

[6] அவ் விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார்......"

என்று தொடங்கி முழுப் பாட்டையுமே பாவபூர்வமாக அனுபவித்துப் பாடினார்.

---

6. குறுந்தொகை: 297— காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது. இப்பாடலின் கருத்து: கொடிய கள்வர்களின் கூர் அம்புக்கு இரையாகி



16863

காரிக்கண்ணனின் [illegible] நல்ல பாட்டுக்களையெல்லாம் [illegible], காதல்களை [illegible] ததும்பும் அகப்பொருள் [illegible] அனுபவித்துப் பாடியது, என்னவோ [illegible].

தன் விற்புருவங்களைச் சற்றே அழகாகத் தூக்கி, அந்த முதியவரை ஏறிட்டுப் பார்த்தாள் அந்த இளம் பெண். காரிக்கண்ணன், தன் மன வேறுபாட்டை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''ஐயா, முதியவரே! நீங்கள் இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''புகாரில் நடக்கின்ற இந்திரவிழாவைக் கண் குளிரப் பார்த்து மகிழ்ந்த பிறகுதான், கண்ணை மூடவேண்டும் என்ற ஒரு வைராக்கியம் எனக்கு இருந்தது. இந்த ஆண்டுதான் அந்த லட்சியம் நிறைவேறியது. நல்ல வேளை, கரிகால்வளவன் என்கிறவர் அரசனாக வரா விட்டால், இந்த ஆண்டும் இந்திரவிழா நடந்திருக்காது... அது சரி, உங்கள் மன்னர் கரிகாலன் மிகவும் இளைஞராயிற்றே, எப்படி ஆட்சி நடத்துகிறார்?'' என்று விசாரித்தார் முதியவர்.

''வயதிலே இளைஞராயிருந்தாலும், அறிவிலே முதிர்ந்தவர்தான் மன்னர். அரண்மனையில் வாழ்ந்து அரச காரியங்களில் முன் அனுபவம் பெறாவிட்டாலும், புலவர் திருத்தாமனால் வளர்க்கப்பட்டவராயிற்றே? சிறந்த கல்வியும் அரசியல் அறிவும் நிர்வாகத் திறமையும் அவருக்கு நிறையக் கற்றுக் கொடுத்திருக்கிறார் திருத்தாமன்...'' என்றார் காரிக்கண்ணன்.

---

மாண்ட வழிப்போக்கர்மீது குவிக்கப்பட்ட தழைக் குவியல்கள், ஊர்போல நிறைந்து தோன்றும் வழியைக் கடந்து போய், 'திருமணம் செய்து கொள்கிறேன்' என்று உறுதி கூறும் காதலனுடன் போவதே சிறந்த காரியம் என்று தோழி, தலைவியிடம் கூறுகிறாள்.

''இருத்தாமனார் வெறும் புலவர் மட்டுமல்ல, மிகச் சிறந்த வீரரும்கூட. ஆகையால் எங்கள் மன்னருக்குச் சிறந்த போர்ப்பயிற்சியும் இளமையிலே கிடைத்திருக்கிறது...'' என்று பெருமையாகச் சொன்னான் காரிக்கண்ணனின் மகன் வடிவேலன்.

''கரிகாலனைவிட, அனுபவத்திலும் போரிலும் சிறந்த சேரபாண்டியர்கள் சேர்ந்து சோழநாட்டின்மேல் படையெடுத்தால், இந்த இளைய மன்னரால் சமாளிக்க முடியுமா?''

''சேரனும் பாண்டியனும் என்ன, உலகமே ஒன்று சேர்ந்து எதிர்த்து வந்தாலும், இந்தச் சோழ மண்ணில் ஒரு பிடியளவுகூட எதிரிகளால் வெல்ல முடியாது. எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற இந்த இளைய மன்னருக்காக, வீட்டுக்கு ஒரு வீரனும் வீதிக்கு ஒரு படையும் திரளும். எத்தனை படைகள் வந்தாலும் இங்கே தூள் தூளாகிப் போவார்கள்!'' என்று கர்ஜித்தான் வடிவேலன்.

''நாட்டு மக்களும் இந்த இளைஞர்களின் படையும் மட்டுமல்ல, கடவுளே எங்கள் மன்னர் பக்கம் இருக்கிறார். எங்கோ மறைந்து வாழ்ந்த மன்னரைத் தேடிப் போய் மாலை போட்டு மன்னனாகக் கொண்டு வந்த தெய்வீக அருள், எப்போதும் கரிகாலனின் பக்கம் இருக்கும்!'' என்று அமைதியாகச் சொன்னாள் காரிக்கண்ணனின் மனைவி மீனாட்சி.

''மிக்க மகிழ்ச்சி, காரிக்கண்ணனாரே! சோழ நாட்டு மக்கள் எல்லோருமே மன்னன்மேல் அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். அதேபோல் உங்கள் குடும்பமும் அவரிடம் கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொண்டேன் ஆனால்... இந்தப் பெண் ஒன்றுமே பேசவில்லையே?'' என்று குறும்பாகச் சிரித்த முதியவர், அந்த அழகியைப் பார்த்துக் கொண்டே ''இவள் உங்கள் மகளா?'' என்று கேட்டார்.



''ஆம்... மகள்மாதிரிதான்... ஆலத்தூர் கிழார் இருக்கிறாரே, அவருடைய மகள்; பெயர் இளஞ்செல்வி. இவளும் உங்களைப்போல், இந்திரவிழா காண வந்தவள்தான்...''

''ஆனால், என்னைப்போல் அதிகமாகப் பேசமாட்டாள் போலிருக்கிறது!'' என்று கண்களை இடுக்கிக் கொண்டு சிரித்தார் முதியவர்.

''அப்படியில்லை... நன்றாகப் பேசுவாள்...'' என்றார் காரிக்கண்ணன்.

''பேசுவது மட்டும்தானா? புலவரின் மகளாயிற்றே, கவிதையும் பாடத் தெரிந்திருக்குமே?'' என்று தொடர்ந்தார் முதியவர்.

''ஓ!... நன்றாகக் கவிதையும் பாடுவாள்...''

''அப்படியா?... நாளை நடக்கப்போகும் கவியரங்கிலே இவளும் கரிகாலனைப் பற்றிப் பாடிப் பரிசு வாங்கலாமே?'' என்று யோசனை சொல்லிவிட்டு, அவளையே பார்த்தார் முதியவர்.

இன்னும் அந்த அழகி, தன் அழகிய இதழ்களைத் திறந்து பேசவேயில்லை!...

''ஆம்... செல்வி!... நாளை நீயும் கவிதை பாடிப் பரிசு வாங்கலாமே?'' என்று ஆமோதித்தார் புலவர்.

''பாடலாம், அப்பா!... ஆனால் பாடுபொருள் ஒன்றும் இல்லையே?'' என்று சட்டென்று கேட்டாள் இளஞ்செல்வி.

''ஏன், எங்கள் நாட்டு மன்னன் கரிகாலனுடைய வீரம், புகழ், திறமைகளில் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பாடலாமே?'' என்றார் முதியவர் பெருமையாக.

''அதில்தான் என்ன புதிதாக இருக்கிறது? எல்லா மன்னர்களையும் போல்தானே கரிகாலனும் இருக்கிறார்? இதில் ஒரு புலவரால் பாடப்படுகிற சிறப்புத் தகுதி என்ன

இருக்கிறது?'' என்று செல்வி கேட்ட கேள்வி, சுருக்கென்று முதியவர் உள்ளத்திலும் பாய்ந்து, முகம் சிவக்க, உடல் சற்றே நிமிர்ந்துவிட்டது. அவருடைய முகத்தில் ஏற்பட்ட கோபத்தையும் ரோஷத்தையும் நுட்பமாகக் கவனித்த காரிக்கண்ணன் ஆச்சரியத்துடன் திகைத்து நின்றார்.

## 14

தங்கள் நாட்டு மன்னன் கரிகாலனைப்பற்றி 'அவனுக்கு என்ன சிறப்புத் தகுதி இருக்கிறது?' என்று ஒரு பெண் கேட்டதும் அந்த முதியவர் சினம் அடைந்ததைக் கண்டு, காரிக்கண்ணன் மிகவும் பெருமைப்பட்டார்.

கரிகாலனுக்கு மக்களிடையே எவ்வளவு மதிப்பும் அன்பும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி யடைந்தார் புலவர்.

இளஞ்செல்வியின் பேச்சைக் கேட்டு, முதிர்ந்த வயதானவருக்கே அவ்வளவு கோபம் ஏற்பட்டால், இளைஞன் சும்மாயிருப்பானா?

''ஏன் அக்கா, அப்படிச் சொல்கிறீர்கள்? எங்கள் மன்னர், பகைவரின் சிறையிலிருந்து, தனியாளாகத் தப்பி வந்தாரே, இளம் வயதிலேயே வாளை மட்டும் துணையாக வைத்துக் கொண்டு, சுற்றியிருந்த வீரர்களையெல்லாம் புறம் கண்டு வெற்றி பெற்றாரே, அந்த வீரத்தைப் புலவர்கள் பாட வேண்டாமா?'' என்று துடிப்புடன் கேட்டான் வடிவேலன்.



முதியவரின் கோபத்தையோ, இளைஞனின் துடிப்பையோ கண்டு பரபரப்படையாமல், சாதாரணமாகவே பதில் சொன்னாள் இளஞ்செல்வி:

''வடிவேலா! ஒரு சிட்டுக் குருவியைக் கூண்டில் அடைத்து வைத்தால், அதுகூட, தப்பிப் பறப்பதற்குத் தன்னால் ஆனமட்டும் முயற்சி செய்கிறதே, அது ஒரு பெரிய வீரம் என்று சொல்லுவாயா?... தன் உயிருக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்று தெரிந்தவுடன், அந்த உயிரைப் பற்றியே கவலைப்படாமல், முழு மூச்சாய்ப் போரிட்டுத் தப்ப நினைப்பது, மனித இயல்பு... ஒரு மன்னர், வீரனாயிருப்பது ஒன்றும் அதிசயமல்ல; அந்த வீரத்தை வைத்து அவர் என்ன சாதிக்கிறார் என்பதுதான் முக்கியம். தன் எதிரிகளை வென்று, தனக்குரிய பதவியை அடைவதும், பட்டம் பெறுவதும் கவிதைக்குப் பாடுபொருள் ஆகிவிடுமா?... அந்த வீரத்தை வைத்துச் செயற்கரிய செயல் செய்தால், அது பாடுவதற்குரிய தகுதியுடைய வீரமாகும். சிம்மாசனத்தில் அமர்வதற்காக நடத்தும் சண்டைகளும் அவற்றில் பெறும் வெற்றிகளும், ஒரு கவிஞருக்குக் காவியப் பொருளாக மாட்டாது. வாரிசுப் போரும் பட்டாபிஷேகமும் மக்களுக்கு முக்கியமல்ல; அவனுடைய ஆட்சியும் செங்கோலும்தான் மக்களுக்கு முக்கியம், இல்லையா?... சொல்லப்போனால், கரிகால் சோழர், பட்டம் பெறப் போர் செய்யவேண்டிய தேவைகூட இல்லாமல், யானையே அவரைச் சுலபமாக அரசராக்கிவிட்டது! ஆகவே அவர் ஒரு அதிர்ஷ்டசாலி என்று சொல்லலாமே ஒழிய, புலவரால் பாடக்கூடிய அளவு திறமையானவர் என்று சொல்ல முடியுமா?''

— அவளுடைய அமைதியான, தெளிவும் அழுத்தமும் நிறைந்த பேச்சு, வடிவேலனை மட்டுமல்ல, காரிக்கண்ணனையே அழுத்திவிட்டது.

முதியவர், அவள் பேசும்போது அசையும் இதழ்களின் அழகு வளைவுகளையும் கவர்ச்சியான முக பாவங்களையுமே, அதிகமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இளஞ்செல்வி வெறும் அழகி மட்டுமல்ல, திட்சண்யமான சிந்தனைத் திறனும் நிறைந்தவள் என்பது முதியவருக்குத் தெளிவாகப் புரிந்தது. சிந்தனைத் திறன் மட்டுமல்ல, தான் சிந்திப்பதைத் துணிச்சலாக யாரிடமும் எந்த இடத்திலும் சொல்லக்கூடியவள் என்பதும் தெரிந்தது.

''ஆட்சித் திறமையிலும் அவருக்குக் குறையில்லை, செல்வி! சென்ற வாரம், அறங்கூறவையத்திலே நடந்த நிகழ்ச்சி, தெரியுமா?'' என்ற மீனாட்சி, அந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தாள்:

நாட்டின் எல்லைப் புறத்திலிருந்து இருவர், அன்று அரசனிடம் தங்கள் வழக்கைத் தெரிவிக்க வந்தார்கள். அரசர் என்றால், வயதான, அனுபவம் நிறைந்தவராக இருப்பார் என்று நினைத்திருப்பார்கள் போலிருக்கிறது. இளைஞன் கரிகாலனை அரியணையில் பார்த்ததும், அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்களாம்: 'நம் ஊர் வழக்குமன்றங்களில் எல்லாம் தீர்த்து வைக்க முடியாத நம் சிக்கலை, இந்த இளைஞர் எப்படித் தீர்க்கப் போகிறார்' என்று இருவரும் சந்தேகப்பட்டு, ரகசியமாய்ப் பேசிக்கொண்டதை, பாம்புச் செவி ஒற்றர்கள் கேட்டு மன்னனிடம் சொல்லிவிட்டார்கள்.

அந்த இருவரும் அவைக்குள் நுழைந்து வணங்கியதும், கரிகாலன் எழுந்தான்:

''ஐயா! உங்களுடைய நீண்டநாள் வழக்கை விசாரித்துத் தீர்ப்புக்கூற, எனக்குப் பதிலாக, அனுபவம் நிறைந்த வயதான ஒருவரை அனுப்பி வைக்கிறேன்...'' என்று சொல்லி உள்ளே போய்விட்டான்.

அவையினர் வியப்படைந்தார்கள்:



'இது என்ன புது வழக்கமாயிருக்கிறது? எல்லா வழக்குகளையும் அரசர் தானே விசாரிப்பார்?... ஒருவேளை, தீராத சிக்கலைத் தீர்த்து வைக்க, இருத்தாமனை அனுப்பி வைப்பாரோ?' என்று தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில், இருத்தாமன் அல்ல— வேறொரு முதிய கிழவர் அங்கே வந்து அவையில் நீதிபதியாக அமர்ந்தார்.

எல்லைப்புறத்திலிருந்து வந்த இருவரின் சிக்கலான வழக்கைக் கேட்டு, சரியான தீர்ப்பும் வழங்கினார் அவர். அந்தத் தீர்ப்பு, எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருந்தது.

உடனே அந்த நீதிபதி, தன் மாறுவேடத்தை நீக்கிவிட்டு, கரிகாலனாக காட்சியளித்தான்!

அவை முழுவதும் வியப்பில் மூழ்கி, ஆரவாரித்தது...[1]

''செல்வி! இவ்வளவு இளம் வயதிலேயே எவ்வளவு அறிவும் நடிப்புத் திறமையும் எங்கள் மன்னருக்கு இருக்கிறது, பார்த்தாயா?... தன் நடிப்புத் திறமையால் அவை முழுவதையுமே மயக்கிவிட்டாரே, அந்தத் திறமையைக் கவிதையில் பாடலாமே?'' என்று கேட்டாள் மீனாட்சி.

செல்வி மென்மையாகச் சிரித்தாள்:

''அம்மா! ஓர் அரசனுக்குப் போர்க்கலையும் ஆட்சிக் கலையும் தெரிந்திருந்தால் போதும்; ஒரு [2]பொருநனுக்குத் தெரிய வேண்டிய நடிப்புக்கலை மன்னருக்குத் தேவையில்லை. ஒரு தடவை, கிரேக்க நாட்டு வணிகர் ஒருவர்,

---

1. இந்த நிகழ்ச்சி, மணிமேகலை (4:107-108), பழமொழி (21) ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.
2. பொருநன்— நடிப்புக் கலைஞன்.

எங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்: மாமன்னர் பிலிப்பின் மகன் அலெக்ஸாண்டர், புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக் கொண்டு, அப்பாவிடம் அருமையாக ஒரு நாள் வாசித்துக் காட்டினாராம். தன் இசைத் திறமையைக் கண்டு தந்தை பெரிதும் பாராட்டுவார் என்று எதிர்பார்த்தாராம் அலெக்ஸாண்டர். ஆனால் பிலிப் தன் மகனைத் திட்டினாராம்: 'ஓர் அரசன் அரசியல் கலையையும் போர்க் கலையையும் கற்றுக்கொள்ளத்தான் தன் நேரத்தைப் பயன் படுத்த வேண்டும். அவன் இசையை ரசிக்கத் தெரிந்து கொண்டால் போதும்; ஆனால் அவன் இசையைக் கற்றுக் கொள்ள நேரம் செலவழிப்பது வீண்...' என்று கண்டித்தாராம்...''

இளஞ்செல்வி ஒவ்வொருவர் பேச்சையும் ஆப்பு வைத்ததுபோல் மறுத்துச் சொல்லி வாயடைத்து விடுகிறாளே என்று முதியவர் ஆச்சரியப்பட்டார்.

இவள் ஒரு வித்தியாசமான பெண்தான்!... அந்த வித்தியாசத் தன்மையே, அவளுடைய அபரிமிதமான அழகுக்கு மேலும் கவர்ச்சியூட்டுகிறது என்று உணர்ந்தார் அவர்.

''செல்வி! நீ சொல்வது, கிரேக்க நாட்டுக்குச் சரி; ஆனால் தமிழ்நாட்டு மன்னர்களும் பழக்கமும் கலை ஞானமும் வேறு... அரசனை நாம் தெய்வங்களாகப் பாவித்து வழிபடுவதில்லை; நம்மில் ஒருவராக, நம்மோடு எளியனாகப் பழகுபவராய் இருப்பதே, நம் மன்னர்களின் சிறப்பு. நீ என்ன சிறப்புத்தகுதி இருக்கிறது என்று கேட்கிறாயே, அந்தக் கரிகாலனைப் பற்றி இங்கே எத்தனையோ புலவர்கள் பாடியிருக்கிறார்கள், பாடிக் கொண்டிருக்கிறார்கள், இனியும் பாடப் போகிறார்கள்— உன் கருத்துப்படி பார்த்தால், அவர்களெல்லாம், தகுதியற்ற மன்னனைப் பாடுகிற வணிகப் புலவர்கள் என்று ஆகிவிடுமே?'' என்று சிரித்துக் கொண்டே, ஆனால்



அதே சமயம் கடுமையான அர்த்தத்துடன் சொன்னார் காரிக்கண்ணன்.

''அப்படியில்லை, அப்பா! கரிகாலனைப் பற்றிப் புலவர்கள் பாடுவதில் நான் தவறு காணவில்லை... ஒரு குழந்தையின் அர்த்தமற்ற மழலைப் பேச்சையும், தட்டுத் தடுமாறி விழும் குறு குறு நடையையும் சிறு விளையாட்டுக் களையும், அதன் பெற்றோர்கள் ரசித்து மகிழ்ந்து பாராட்டுவது இயல்பு. அதுமாதிரி உங்கள் மன்னரின் திறமைகள், உங்கள் புலவர்களுக்குப் பாடுபொருள் ஆவதில் ஆச்சரியமில்லை!'' என்று செல்வி சொன்னதும் முதியவர் சட்டென்று ஏதோ தோன்றியவராய், காரிக் கண்ணனைப் பார்த்தார்.

அந்தப் பார்வையின் கடுமையைப் புரிந்துகொண்ட புலவர், இளஞ்செல்வியைக் குறிப்பாகப் பார்த்து, பேச்சின் போக்கைத் திசை திருப்ப முயன்றார்:

''அது சரி, செல்வி! நேரமாகிவிட்டது... நாம் ஆடல் அரங்குக்குப் போவோமா?'' என்று கேட்டார் அவர்.

ஆனால் வடிவேலனுக்கு, அப்பாவின் நோக்கம் புரியவில்லை.

''அக்கா! எங்கள் கரிகாலரையே பாடுவதற்கு நீங்கள் தயங்கினால், அப்புறம் உலகத்தில் நீங்கள் பாடிப் புகழ்வதற்கு வேறு எந்த மன்னருமே இருக்கமாட்டார் கள்!'' என்று அதே விவகாரத்தைத் தொடர்கதை யாக்கினான்!

''அதனால் என்ன? என்னைப் பொறுத்த வரையில், உங்கள் மன்னரை மட்டுமல்ல, வேறு எந்த மன்னரையுமே நான் பாடப்போவதில்லை... போர்களை நடத்துவதிலும் பிறநாடுகளை வெல்வதிலும் மற்ற அரசர்களை அடிமை யாக்குவதிலும் மட்டும் புகழ் பெறும் அரசர்களை, என் நாக்கு என்றுமே பாடாது. அரசர் என்ற சொல்லுக்கு, நான் அர்த்தம் செய்துகொண்டிருக்கிற அரசனே வேறு!...''

என்று ஆழ்ந்த சிந்தனைத் தடம்பதியப் பேசினாள் செல்வி.

அவளுடைய பேச்சு, தனக்கு எரிச்சல் ஊட்டுகிற கருத்து உடையதாயிருந்தாலும், அவள் பேசுகிற பாவம், அந்தப் பேச்சின் அழுத்தம், அதன் பின்னணியிலுள்ள அறிவின் ஆழம், முதியவருக்கு மிகவும் பிடித்திருந்தது என்பதை அவருடைய ரசனை காட்டியது.

பேச்சின் இறுதியில், அவள் கரிகாலனைக் குறிப்பிட்ட முறை, அவள் சோழ நாட்டைச் சேர்ந்தவள் அல்ல என்பதைக் காட்டுவதை அவர் நுட்பமாகக் கவனித்தார். அவர் அதைக் கவனித்து விட்டார் என்பதைப் புரிந்து கொண்டதால்தான், காரிக்கண்ணன் பேச்சை மாற்றுகிறார் என்பதையும் முதியவர் உணர்ந்தார்.

"சரி, செல்வி! இந்தக் கவிதை விஷயத்தை இத்துடன் விட்டு விடுவோம். நாம் வந்த வேலையைக் கவனிப்போம். இந்திரவிழாவிலே இன்னும் எவ்வளவோ பார்க்க வேண்டியிருக்கிறது... வாருங்கள், மருவூர்ப்பாக்கம் சென்று கடற்கரைக் காட்சிகளைக் காணலாம்..." என்று நகர்ந்த காரிக்கண்ணன், முதியவர் பக்கம் திரும்பினார்.

"ஓ! நானும் வருகிறேனே! நான் மட்டும் தனியே பார்ப்பதை விட, இரண்டு கவிஞர்களுடன் சேர்ந்து சுற்றிப் பார்த்தால் இன்னும் அதிகமாக ரசிக்கலாமே?" என்று சொல்லிக் கொண்டே, இளஞ்செல்வியின் பக்கமாக நடக்க ஆரம்பித்தார் முதியவர்.

வேறு வழியில்லாமல், தன் ரசிகரையும் சேர்த்துக் கொண்டு நடந்தார் காரிக்கண்ணன்.

மருவூர்ப்பாக்கத்தில் ஆங்காங்கே நடைபெறும் கலைக் காட்சிகளையும், குடும்பத்தினர் கூட்டங் கூட்டமாக அமர்ந்து பொழுது போக்கிக் கொண்டிருக்கும் அழகுக் காட்சிகளையும், தரையில் இறங்கிய வானவில்கள் போல் வண்ணம் வண்ணமாகக் கவிந்திருக்கும் கூடாரங்களின்



எழிலையும், கடலோரத்தில் பல நிறக் கொடிகள் பறக்க நீரிலே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் வெளிநாட்டு வணிகக் கப்பல்களின் வரிசையையும் காட்டி விளக்கிக் கொண்டே சென்றார் காரிக்கண்ணன்.

அந்த விழாக் காட்சிகளைக் கண்டு ரசிப்பதைவிட, இளஞ்செல்வியைப் பார்த்து ரசிப்பதிலும் அவளோடு பேசுவதிலும் முதியவர் அதிக ஆர்வம் காட்டுகிறார் என்பதைக் காரிக்கண்ணன் கவனிக்கத் தவறவில்லை.

அந்தப் பெண்ணின் வயதுக்கு மீறிய அதித அறிவு நுட்பத்தையும் பேச்சுத் திறனையும் அவர் ரசிக்கிறாரா அல்லது அவளுடைய இளம் பருவத்து உடலழகையும் கவர்ச்சியையும் ரசிக்கிறாரா என்று காரிக்கண்ணனுக்கு விளங்கவில்லை.

விழாக் கோலங்களைப் பார்த்து முடித்துவிட்டு, வீடு திரும்பும் போது இளஞ்செல்வி, "அப்பா! இவ்வளவு அருமையான விழாவை இத்தனை ஆண்டுகளாய்ப் பார்க்காமல் போய் விட்டோமே என்று வருத்தமாயிருக்கிறது... இந்தப் புகாரிலே பிறந்து வாழ்பவர்கள், மிகவும் அதிர்ஷ்டசாலிகள்! இந்திரவிழாவை ஆண்டுதோறும் பார்த்து ரசிக்க இங்கேயே பிறந்திருக்கக் கூடாதா என்று எனக்கு ஏக்கமாக இருக்கிறது..." என்று நெடுமூச்செறிந்தபடி சொன்னாள்.

"இந்த ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்வது, ஆண்களை விட, பெண்களுக்குச் சுலபம்..." என்று சிரித்தார் முதியவர்.

'எப்படி?' என்று கேட்பதுபோல், அவர் பக்கம் திரும்பிப் பார்த்தாள் இளஞ்செல்வி.

"இதிலென்ன கஷ்டம்?... பெண்களுக்கு ஒரு ஜன்மத்திலேயே இரண்டு பிறவிகள் உண்டே? நீ பிறந்தது ஆலத்தூராயிருந்தாலும், இனிமேல் ஒரு புகார் நகரத்து ஆளாகப் பார்த்துத் திருமணம் செய்துகொண்டு விட்டால்,

இங்கேயே நீ ஆண்டுதோறும் விழாவைப் பார்த்து ரசிக்கலாமே?'' என்று குறும்பாகச் சொல்லிச் சிரித்தார் அவர்.

அவர் சொல்வது எவ்வளவு கஷ்டம் என்று செல்விக்குத் தெரியும்!...

முகத்தில் வந்து கவிந்த சிந்தனையைத் தள்ளிவிட்டு, இயல்பாகச் சிரித்தபடி நடக்கத் தொடங்கினாள் அவள்.

சிறிது நேரத்தில் வீடு வந்து சேர்ந்தார்கள்.

இவ்வளவு நேரமும் தம்முடன் வந்த முதியவரை வீட்டுக்குள் அழைக்காமல் விட்டுவிடுவது பண்பல்ல என்பதை உணர்ந்த காரிக்கண்ணன், ''ஐயா! வாருங்கள்... எங்கள் வீட்டிலே உணவு உண்டு செல்லலாம்...'' என்றார்.

''ஓ!... மிக்க மகிழ்ச்சி... இவ்வளவு நேரமும் உங்கள் குடும்பத்தார் எனக்குச் சிந்தனை விருந்து படைத்தார்கள். இனி உங்கள் வீட்டில் வயிற்றுக்கும் உணவருந்திவிட்டுப் போகிறேன்...'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார் முதியவர்.

வடிவேலன் ஏதோ வேலையாக அல்லங்காடி[3]க்குச் சென்றான். பெண்கள் இருவரும் உள்ளே அட்டில் அறைக்குச் சென்றதும் காரிக்கண்ணனும் முதியவரும் தனியே முகப்பில் ஓர் அறைக்குள் நுழைந்தார்கள்.

உள்ளே நுழைந்ததும் அறைக் கதவைச் சட்டென்று அடைத்துத் தாழிட்டார் முதியவர். தன் நரைத்த தலை முடியையும் தாடி மீசையையும் கழற்றிக் கையிலே வைத்துக் கொண்டு ''புலவரே! நான் யார் என்று தெரிகிறதா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்ட இளைஞனைப் பார்த்துத் திடுக்கிட்டார் காரிக்கண்ணன்.

---

3. அல்லங்காடி— இரவு முழுவதும் வணிகம் நடக்கும் கடைகள் உள்ள தெரு.



''ஆ!... நீங்களா?... அரசே! நீங்கள்... ஏன் இப்படி மாறுவேடத்தில் வந்தீர்கள்?''

''தங்கள் மன்னனைப்பற்றி, ஆட்சியைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை நேரடியாக அறிவதற்கு இதுதானே நல்ல வழி?''

''அரசே! மக்களுடன் பழகுவதில், உங்கள் தந்தையையும் மிஞ்சி விட்டீர்கள்!... அவர், விதவிதமான தேர்களிலே அரசராகவே வந்துதான் மக்களைச் சந்தித்துப் பேசுவார். ஆனால் நீங்கள் சாதாரண ஆளாக, நடந்து வந்து, மக்களுடன் பழகுகிறீர்களே, உங்கள் பண்பை எப்படிப் பாராட்டுவது என்று தெரியாமல் திகைக்கிறேன்...'' என்று உள்ளம் நெகிழ்ந்தார் புலவர்.

''ஆமாம்... நீங்கள் என்னைப்பற்றிப் பிரமாதமாகப் பாராட்டுகிறீர்கள்; பாட்டுப் பாடுகிறீர்கள். ஆனால் உங்கள் மகள் இளஞ்செல்வி, 'பூ!... இவன் என்ன பெரிய மன்னன்' என்று ஊதித் தள்ளி விட்டாளே?'' என்று சலித்துக் கொள்வதுபோல் சிரித்தான் கரிகாலன்.

''அரசே! மன்னித்துக் கொள்ளுங்கள். அவள் சிறு பெண்; அனுபவமில்லாதவள்...''

''இல்லை, அவள் சாதாரணப் பெண் இல்லை; அவளுடைய ஆழமான சிந்தனையும் உயர்ந்த இலட்சியங்களும் உண்மையைச் சொல்லும் துணிவும் என்னை மிகவும் ஆச்சரியத்துக்குள்ளாக்கி விட்டன... புலவரே! நீங்கள் உண்மையைச் சொல்லுங்கள். அவள் சோழ நாட்டுப் பெண்தானா? உங்கள் உறவினள்தானா?'' என்று அழுத்தமாகக் கேட்ட மன்னர் முன்னால், புலவர் தொடர்ந்து பொய் சொல்லும் துணிவை இழந்து நின்றார்.

அவள் நிச்சயம் சோழ நாட்டைச் சேர்ந்தவள் இல்லை என்பதைக் கரிகாலன் முன்பே ஊகித்து விட்டான் என்பது காரிக்கண்ணனுக்குத் தெரியும்.

அவன் யார் என்று தெரிந்து கொண்டதால்தான் கரிகாலன் காரிக்கண்ணனை இவ்வளவு தூரம் தொடர்ந்து வந்திருக்கிறான் என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

''புலவரே! பயப்படாமல் சொல்லுங்கள். அவனுக்கு நான் எந்த விதத்திலும் கெடுதல் செய்யமாட்டேன்,'' என்று உறுதியளித்த கரிகாலன், மறுபடியும் நரைத்த தலை முடியையும் தாடி மீசையையும் பொருத்திக் கொண்டு, முதியவரானான்.

இளஞ்செல்வி உண்மையில் யார் என்பதைக் காரிக்கண்ணன் ரகசியமாய்ச் சொன்னதும், திடுக்கிட்டுப் போனான் கரிகாலன்!

அவன் மீண்டும் பழைய முதியவராகி, காரிக்கண்ணன் வீட்டைவிட்டு வெளியேறியதும், பின்னாலேயே இன்னொரு முதிய உருவம், அந்த வீட்டுக்குள் நுழைந்தது. அந்த உருவம்,

—இத்தனை நேரமும் பழைய முதியவரையே பின் தொடர்ந்து வந்து, காரிக்கண்ணனைச் சந்தித்தது முதல், கடைசி வரை பின்பற்றி மறைந்து வந்தது, யாருக்கும் தெரியாது!...

**அன்று** [4] நாளோலக்கத்தில், ஐம்பெருங்குழுவின் அவசரக் கூட்டம் கூடியது.

ஒற்றர் தலைவர் உருத்திரன் கொண்டு வந்த சில ரகசியத் தகவல்களை ஒட்டி ஆலோசனை நடத்துவதற்காக, அந்தக் கூட்டத்தை அமைச்சர் அழைத்திருந்தார்.

''அரசே! நம்முடைய ஆட்சியை எதிர்த்து, முன்பு பல வழிகளிலும் முயன்று பார்த்துத் தோல்வியடைந்த

4. நாளோலக்கம்— பகல் நேரத்தில் அரசவை கூடும் மண்டபம்.



எதிரிகள் இப்போது அரசியல் ரீதியாக நம்மை எதிர்த்து மோதப் புறப்பட்டு விட்டார்கள். சேரனையும் பாண்டியனையும் சந்தித்துப் பேசி, அவர்களுடைய உதவியுடன் நம் நாட்டின்மேல் படையெடுக்கத் திட்டமிடுகிறார்கள். அதற்காக, இருங்கோ, சேரனிடமும் நெடுந்தத்தன், பாண்டியனிடமும் சென்றிருக்கிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்துள்ளது...'' என்று முதலில் பேசினார் உருத்திரன்.

''இந்தக் குறுநிலத் தலைவர்களுடைய பேச்சை நம்பி, சேரனும் பாண்டியனும் நம் நாட்டின்மேல் படையெடுக்கத் துணிவார்களா?'' என்று கேட்டார் புரோகிதர் கௌதமனார்.

''ஏன் துணிய மாட்டார்கள்? பேராசை, சில மனிதர்களுடைய சிந்தனையையே அமுக்கிவிடும். வற்றா வளங்கொழிக்கும் பொன்னி நாட்டைக் கைப்பற்றி ஆள வேண்டும் என்ற ஆசை, எந்த மன்னனுக்குமே இருக்கத்தானே செய்யும்? அதனால் நம் நாட்டைச் சேர்ந்த குறுநிலத் தலைவர்களுடைய ஆதரவும் கிடைக்கும்போது, உள்நாட்டுக் கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வெற்றி பெறலாம் என்ற சபலம், யாருக்குமே ஏற்படுவது இயல்புதானே?'' என்றார் தூதுவர் தலைவர் காலநாபர்.

''அந்தச் சபலத்துக்கு ஆளாகுகிறவர்கள், தங்கள் அஸ்தி மட்டுமல்ல, உடலே காவிரியில் கரைக்கப்படுகிற புண்ணியத்தை நிச்சயம் அடைவார்கள்... நம் மன்னர் பதவிக்கு வந்ததும் செய்த முதல் காரியம், படையை அதிகரிக்கத் திட்டங்கள் வகுத்ததுதான் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? திடீரென்று சேரனும் பாண்டியனும் சேர்ந்து படையெடுத்தாலும், சமாளிப்பதற்கு வேண்டிய படைபலம் நமக்கு விரைவிலேயே சேர்ந்துவிடும்,'' என்று தைரியமூட்டினார் திருத்தாமன்.

"எண்ணிக்கையில் மட்டுமல்ல, அத்தனை வீரர்களுக்கும், நாள்தோறும் திருத்தாமனாரின் மேற்பார்வையில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. நம் படையைவிட எண்ணிக்கையில் அதிகமான படைகள் வந்தாலும், நம் வீரர்கள் புத்திசாலித்தனமான புதிய போர் முறைகளைக் கையாள்வதால், எதிரிகளை விரட்டியடித்து விடுவார்கள். அதிலும் தங்கள் தாய் நாட்டின் ஒரு சாண் இடம்கூட, எதிரிகளின் கைப்பட நம் வீரர்கள் பொறுக்க மாட்டார்கள். யானையைத் தாக்குகிற புலியைவிட, சிங்கத்திடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளப் போரிடுகிற புலிக்கு அதிக வலிமை தோன்றும், இல்லையா?" என்றார் தளபதி திதியன்.

"திதியன் சொல்வது உண்மைதான்; ஆனாலும் அண்மைக் காலத்தில் பயிற்சி பெறுகிற நம் படையைவிட நெடுங்காலம் பயிற்சியும் அனுபவமும் உடைய சேர பாண்டியரின் படைகள் அதிக வலிமை உடையதாக இருக்கலாம், இல்லையா?... எதிரியின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டுக் காரியத்தில் இறங்குவதைக் காட்டிலும், அவர்கள் பலத்தை மிகுதியாகவே கருதிக்கொண்டு, முன்ஜாக்கிரதையாக இருப்பதுதான் அறிவுடைமை..." என்றார் அமைச்சர்.

"எதிரிகளின் பலத்தைக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ யூகித்துக் கொள்வதைவிட, நேரடியாகவே அவர்களுடைய பலத்தை அறிந்து கொள்வது, இன்னும் அறிவுடைமையல்லவா?" என்று கேட்டான் கரிகால் வளவன்.

"ஆம்... மன்னர் கூறுவதுபோல, எதிரிகளின் 'பலத்தையும் பலவீனத்தையும் நேரடியாகவே தெரிந்து கொள்வது, அறிவுடைமை மட்டுமல்ல— அவசியமும்கூட... நம் குறுநிலத் தலைவர்கள் சேர பாண்டியரின் மனத்தை அளக்கப் போயிருப்பதுபோல, நாமும் அந்நாடுகளின் படையை



அளக்கச் சென்றால் என்ன?" என்ற கேள்வியை எழுப்பினார் ஒற்றர் தலைவர்.

"நானும் அதைத்தான் நினைத்தேன். பாண்டியனுடைய படை பலத்தைவிட, நாம் சேரனைத்தான் கவனமாகப் பார்க்க வேண்டும். ஏனென்றால், நம் நாட்டின் மேல் படையெடுக்க வேண்டும் என்று சேரமன்னன் கடந்த பல ஆண்டுகளாகவே நினைத்து ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியும்..." என்று தொடங்கிய கரிகால்வளவன் தன் திட்டத்தை விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தான்.

சோழ நாட்டின் மேல் படையெடுத்து வென்று அதைத் தன் அடிமை நாடாக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டே, தன் படைகளை வலுப்படுத்திக் கொண்டு, பயிற்சியும் அளித்து வந்தான் சேரன் பெருஞ்சேரலாதன்.

அவனுடைய பழிவாங்கும் திட்டத்துக்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது.

## 15

[1] திருப்போர்ப்புறம் போர்க்களத்திலே, சோழன் பஃறடக்கை பெருவிறற் கிள்ளிக்கும், குடக்கோ நெடுஞ்

1, 'திருப்போர்' என்பது, இக்காலத்தில் திருப்பூர் என வழங்கும் ஊர் என்றும், 'திருப்போர்ப்புறம்' என்னும் இடம், இப்போது திருப்பூருக்குத் தென்புறம் இருக்கும் 'கோயில்வெளி' என்னும் இடம் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

சேரலாதனுக்கும் நடந்த சண்டையிலே, இரண்டு மன்னர்களுமே இறந்தனர்.[2]

தன் அன்புள்ள அண்ணனைக் கொன்ற சோழ மன்னனையும் நாட்டையும் பழிவாங்க, தம்பி பெருஞ்சேரலாதன் தக்க நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். இளஞ்சேட்சென்னியின் காலத்திலேயே சோழ நாட்டின் மேல் படையெடுக்கத் திட்டம் வகுத்தான். ஆனால் சோழ நாட்டுப் படையை விட, தன் படை திறமையிலும் எண்ணிக்கையிலும் குறைவாக இருப்பதை ஒற்றர்மூலம் அறிந்த சேரன், தன் படை வலிமை பெறும் வரை, தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டிருந்தான்.

இதற்கிடையே, ரோம் நகர் சென்ற வணிகர் குழுவோடு, தன் தூதுவர் ஒருவரையும் அனுப்பி, சோழ நாட்டுக்கு எதிராகத் தனக்குப் படையுதவி தரும்படி ரோம் மன்னருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தான் பெருஞ்சேரலாதன். ஆனால் ரோம் மாமன்னர் அகஸ்டஸ், நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, சேரனுக்கு உதவ மறுத்து விட்டார்.

சேரனுக்கு உதவி, சோழநாட்டுக்குப் பகையாகி விட்டால், புகாரிலிருந்து ஏற்றுமதியாகும் முத்து, மணி, பவளம், மெல்லிய துணிகள் ரோமுக்கு ஏற்றுமதியாகாமல் தடைப்பட்டுப் போய் விடலாம். ஆகவே தனக்கு மிளகும் அகிலும் தந்தமும் தேக்கும் சந்தனமும் தருகிற சேர நாடும் வேண்டும்; சோழநாடும் வேண்டும் என்று நடுவுநிலைமை வகிக்கத் தீர்மானித்தார் அகஸ்டஸ். ஆனாலும் சேரனுடைய வேண்டுகோளுக்காக, தன் நாட்டிலிருந்து ஒரு பொறியியல் வல்லுநனை ரகசியமாகச் சேரநாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

---

2. புறநானூறு— கழாத்தலையார் (62, 368)
„ — பரணர் (63)



அவன் போர்க்கருவிகள் செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவன். அவனைப் பயன்படுத்திக் கொண்டு, சேரன் பல யவனப் பொறிகளைத் தன் கோட்டையில் அமைத்த பிறகு, படையெடுப்புக்கான கருவிகளைச் செய்து குவித்துத் தன் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டேயிருந்தான்.

இந்த ரகசிய விஷயமும் சோழ நாட்டு ஒற்றர் மூலம் கரிகாலனுக்குத் தெரிந்திருந்தது. சேரனுடைய படையின் பலத்தை உளவறிந்த பிறகே, தன் படையின் வலிமையை மதிப்பிட முடியும் என்று உணர்ந்தான் அவன்.

''சேர நாட்டுக்கு மாறு வேடத்தில் போய், அங்கே உள்ள யவனப் பொறிகள், படைக் கருவிகள், படையின் போர் முறை முதலியவற்றைத் தெரிந்து கொண்டு வருவது மிகவும் முக்கியம். அவர்களுடைய தாக்கு முறைகள் நமக்குத் தெரிந்தால், அதற்கேற்றவாறு நாம் தற்காப்பு முறைகளை உருவாக்கி எதிர்ப்பை முறியடிக்க முடியும். வளைந்து வரும் நல்ல பாம்பிடமிருந்து தப்பிக்க நாம் நேரே ஓட வேண்டும்; நேரே ஓடிவரும் சாரைப்பாம்பிடமிருந்து தப்பிக்க நாம் நெளிந்து ஓடவேண்டும் என்பார்களே, அது மாதிரி நாமும் எதிரியின் போர் யுக்திக்குத் தக்கவாறு, நாம் போர் முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே சேர நாட்டுக்கு நானே ஒற்றறியப் போகலாம் என்று கருதுகிறேன்...'' என்று கரிகாலன் சொன்னதும் எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

''கூடாது... கூடாது... சேர நாட்டுக்குள் ஒற்றறியப் போவதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்; ஆனால் அந்த ஆபத்தான வேலையில் மன்னர் ஈடுபடுவதை நாங்கள் ஒரு போதும் ஒப்புக் கொள்ளமாட்டோம்...'' என்று எல்லோரும் ஒரே குரலில் ஆட்சேபிப்பதைப் பார்த்துத் திகைத்தான் கரிகாலன்.

''அரசே! சேர நாட்டுக்கு ஒற்றறியப் போகிறவர் ஒரு முக்கியமான ஆளாய்த்தான் இருக்க வேண்டும் என்றால்,

நான் அந்த வேலையை ஏற்றுக் கொள்கிறேன்...'' என்று முன் வந்தார் திதியன்.

''சேர நாடு செல்வதன் முக்கிய நோக்கம், படைபலம், படைக்கருவி, போர்முறை முதலியவற்றை உளவறிவது என்பதால், அந்த வேலைக்கு நம் தளபதி செல்வது முற்றி லும் சரிதான்; அவர் சேர நாடு சென்றால், நான் பாண்டிய நாட்டுக்குச் சென்று வருகிறேன்...'' என்றார் உருத்திரன்.

அவர்கள் இருவரும் ஒற்றறியச் செல்ல, ஐம்பெருங்குழு ஒப்புதல் அளித்தது.

''அவையோரே! எதிரி நாட்டுக்குப் போய் அவர்களுடைய பலத்தை அறிந்து வருவதைப் போல, நம் உள்நாட்டு நிலைமையையும் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?... நம் நாடு ஒரு போருக்குத் தயாராக இருக்கிறதா, எதிரிப்படைகளைச் சமாளித்து எதிர்த்து விரட்டியடிக்கும் மனத்திண்மையும் உறுதியும் நம் மக்கள் கொண்டிருக்கிறார்களா என்பதை நான் மாறுவேடத்தில் நாடெங்கும் சுற்றிப் பார்த்து அறிந்து வரலாம் என்று கருதுகிறேன்...'' என்று அழுத்தமாகச் சொன்ன கரிகாலனின் முகத்தில் தெரிந்த உறுதிப் பாவத்தைக் கண்டு, ஐம்பெருங்குழு மௌனமாக இருந்துவிட்டது.

அந்த மௌனத்தைச் சம்மதத்தின் அறிகுறியாக எடுத்துக் கொண்டு விட்டான் மன்னன்.

அரண்மனையை விட்டு வெளியே செல்வதில் மன்னர் உறுதியாக இருப்பதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்பதை யூகித்துக் கொண்டார் திதியன்.

அந்த யூகத்தை உண்மையாக்குவது போல், அன்று மாலையே திதியனைத் தனியாகச் சந்தித்துப் பேச வரும்படி, ஆள் மூலம் கட்டளையிட்டிருந்தான் கரிகாலன். மன்னருடைய மர்மமான திட்டத்தை அறிந்து கொள்ளும் ஆவல் உந்த, அவரைச் சந்திக்கச் சென்றார் திதியன்.



பிடவூரிலிருந்து புறப்பட்ட இரு குதிரைகள், மேற்கு நோக்கி வேகமாக ஓடிவந்து, சேரநாட்டு எல்லையை நெருங்கியதும் மெதுவாகக் காலார நடந்து வந்து கொண் டிருந்தன.

காடு அடர்ந்த பகுதியாக இருந்ததால், நண்பகல் நேரத்திலேயே, பகலவனின் ஒளிக்கதிர்களின் வெப்பமான தாக்குதல் இல்லாமல், பாதையெங்கும் குளிர்ச்சியாக இருந்தது.

நீண்ட நேரம் பயணம் செய்து வந்த களைப்பில், இருங்கோவும் அந்துவனும் ஒன்றும் பேசவேயில்லை. ஒருவேளை, தாங்கள் மேற்கொண்டிருக்கும் முக்கியமான பணியின் கனபரிமாண அழுத்தம் காரணமாக, அப்படி அமைதியாகச் சிந்தித்தபடியே போகிறார்களோ என்னவோ?

சேரநாட்டு எல்லைக்குள் புகுந்து சிறிது தூரம் வந்ததும், ஒரு சிற்றாறு தென்பட்டது. உயர்ந்த மலையிலிருந்து சுற்றிச் சுற்றி ஓடிவந்த அந்தச் சிற்றாறு, ஓரிடத்தில் சிறு அருவியாக விழுந்து கொண்டிருந்தது.

அதைச் சுற்றிலும் அடர்ந்திருந்த பச்சை மரங்களும் செழுமையான கொடிகளும் அந்த அருவிக்கே ஓர் அழகிய பின்னணியை வழங்கின. ஏறத்தாழ இரண்டு ஆள் உயரம் இருந்த அந்த அருவியில் விழுந்த நீர், எதிரே ஒரு குளம் போல் ஆழமாகத் தங்கி, பிறகு மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

சிற்றாற்றின் தண்ணீரிலே முகம் கழுவிக் கொண்டு சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்ட இருவரும், மேலும் அந்த ஆற்றின் கரையோரமாகவே குதிரைகளை மெதுவாக நடக்கவிட்டுக் கொண்டு, சுற்றிலும இருந்த மரஞ்செடி கொடி மலர்களையும் தன்னிச்சையாகக் குரல் எழுப்பிப் பறந்துகொண்டிருந்த பறவைகளையும் வேடிக்கை பார்த்த வாறு போய்க்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று, சிறிது தூரத்திலிருந்து பெண்களின் சிரிப்பொலி காற்றிலே இசைபோல் மிதந்து வந்தது.

"ஆற்றுநீரிலே பெண்கள் குளித்துக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது..." என்றான் இருங்கோ.

பெண்களின் சிரிப்பொலியிலிருந்தே, அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை யூகித்துச் சொல்லும் அளவுக்கு அவன் அனுபவசாலியாயிற்றே!

அவன் குதிரையிலிருந்து இறங்கி, ஓசைப்படாமல் ஆற்றுப் போக்கிலே நடந்தான். அவன் எதிர்பார்த்தபடியே, நாலைந்து பெண்கள், ஆற்றின் அருவியிலே குளித்துக்கொண்டிருந்தார்கள்.

குளத்திலே மலர்ந்த குவளைப் பூக்களும் தாமரைப் பூக்களும் ஆற்றிலே வந்து நீராடுவதுபோல், அந்த அழகு மலர்கள் நீராடும் அழகைப் பார்த்துக்கொண்டே மறைவாக நின்றான் இருங்கோ.

அவர்களிலே ஒருத்தி, நட்சத்திரக் கூட்டத்திற்கிடையே ஒரு வெண்ணிலவுபோல, அழகு தேவதையாக நீராடிக் கொண்டிருந்தாள். யாரும் தங்களைப் பார்க்கவில்லை என்ற தைரியத்தில், மிகக் குறைந்த ஆடைகளுடன் அந்த அழகி அங்கே துள்ளிக் குதித்துக் குளித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுடைய பளிங்கு போன்ற உடலைத் தொட்ட மகிழ்ச்சியில் சில நீர்த்திவலைகள், வேகமாக வடிந்து அவள் மெல்லுடம்பை விட்டுப் பிரிய மனமில்லாமல், அவளுடைய செழிப்பான மேட்டுப் பகுதிகளில் நெடுநேரம் தங்கியிருக்க அந்த வெள்ளிய நீரோட்டத்திலே தங்கச் சிலையாக ஒளிரும் அந்த அழகியின் உடற் கவர்ச்சியிலே தன்னை மறந்து கிறங்கிக்கொண்டிருந்தான் இருங்கோ.

தோழிகளோடு சிரித்துப் பேசிக் கும்மாளம் போடும் அந்த அழகியின் கொழுவிய கன்னத்தின் நடுவிலே



தோன்றும் அழகுக்குழி, நீந்துபவர்களை இழுத்து அழுத்தும் ஆற்றுச்சுழி போல, அவனுடைய மனத்தை இழுத்து அமுக்குவதுபோல உணர்ந்தான் அவன்.

"சரி, வா போவோம்! வஞ்சி நகரம் இன்னும் தூரத்தில் இருக்கிறது..." என்று தங்கள் காரியத்தை நினைவூட்டினான் அந்துவன்.

"அந்த வஞ்சி கிடக்கட்டும்; முதலில் இந்த வஞ்சியைக் கவனிப்போம்!... அதிலும் வஞ்சிக்கொடிகள் வஞ்சனையில்லாமல் குளிக்கிற அழகு இருக்கிறதே, அது தனி அழகு! அதைக் கண்டு ரசிக்க, பூர்வஜன்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்..." என்று அழகுகளைப் பார்த்துக் கொண்டே நின்றான் அந்த ரசிகன்.

"இவர்கள் சேரநாட்டுப் பெண்கள். அதுவும், நாம் உதவி கேட்டுப் போகிற சேரநாட்டுப் பெண்கள்... இவர்களிடம் எந்த வம்பும் செய்யவேண்டாம்..." என்று எச்சரித்தான் நண்பன்.

"எந்த நாடாக இருந்தால் என்ன, பெண்கள் எல்லோரும் பெண்கள்தான்!" என்று ஒரு பெரிய தத்துவத்தைத் திருவாய் மலர்ந்தருளிய இருங்கோ, ஏதோ ஒரு திட்டத்தோடு திடீரென்று அந்த அருவியின் மேற்புறத்திலே ஓடிய ஆற்றில் குளிப்பதுபோல் குளித்து, நீச்சல் தெரியாதவன் மாதிரி வெள்ளத்தோடு உருண்டு புரண்டு, அருவியோடு கீழே குதித்து, அடுத்து இருந்த ஆழமான குளத்தில் விழுந்து "ஐயோ! ஐயோ!... காப்பாற்றுங்கள்! ஐயோ!" என்று கைகளை மேலே தூக்கி ஆட்டியபடி கதறினான்.

தண்ணீருக்குள் இரண்டு மூன்று முறை முங்கி எழுந்தவாறு, கதறி அலறும் அவனைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்கள் அந்தப் பெண்கள்.

"ஐயோ!... காப்பாற்றுங்கள்!... எனக்கு நீச்சல் தெரியாதே!... ஐயோ!" என்று உரக்க அலறினான் இருங்கோ.

சிறிது நேரம் தயங்கிய அந்த அழகி, சட்டென்று குளத்தில் குதித்து, அவனுடைய தலைமயிரைப் பிடித்துக் கொண்டு கரைக்கு நீந்தினாள். இருங்கோ உடனே திரும்பி, அவள் உடலை நெருங்கி இறுகப் பிடித்துக் கொள்ள முயல, அவள் அவனது பிடியிலிருந்து லாகவமாகத் தப்பித்துக் கொண்டே நீச்சலடிக்க, அவன் தன் கைகளை நீட்டித் துளாவி அவளது அவயவங்களைத் தொட்டுத் தொட்டு அணைக்கப் பிரயத்தனம் செய்ய, ஒருவாறாக அவனை இழுத்துக் கொண்டு வந்து கரையில் தள்ளினாள்.

கரைக்கு வந்த பிறகும், மூர்ச்சையடைந்தவன்போல் அசையாமல் கிடந்தான் இருங்கோ.

உடனே அவனைக் குப்புறப் படுக்க வைத்து, முதுகையும் வயிற்றையும் அழுத்தி, மூச்சுவிடச் செய்தாள் அவள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, அவன் சரேலென்று எழுந்து கடகட என்று சிரித்தான்.

அதைக் கண்டு பெண்களெல்லோரும் அரண்டு போனார்கள்.

''மிக்க நன்றி... எனக்கு உண்மையிலேயே நீந்தத் தெரியாது என்று நினைத்து விட்டீர்களா? நான் சோழ நாட்டுக் காவிரியின் மீன் குஞ்சு!'' என்று கேலியாக நகைத்தான் இருங்கோ.

தங்களை அவன் எவ்வளவு ஏமாற்றி விட்டான் என்பதையறிந்து ஆத்திரம் பொங்க அவனைப் பார்த்துப் பொசுக்கிவிட்டுத் திரும்பிய பெண்கள், வேகமாக உடைகளை அணிந்து கொண்டார்கள்.

அவர்களில் நடுநாயகமாக நின்ற அழகியை நெருங்கிய இருங்கோ, ''என் ஆசைக் கைகளால் உன் அழகு உடலைத் தொடவும், உன் அழகுக் கைகளால் என் ஆசை உடலைத் தொட வைக்கவும்தான், இப்படிக் குளத்தில் விழுந்து,



சாகப் போகிறவன் போல் நடித்தேன்... இவ்வளவு அழகான பெண் காப்பாற்றுவாள் என்றால், நான் சமுத்திரத்தில் விழவும் தயார்!'' என்றான்.

கோபத்தாலும் ஆத்திரத்தாலும் முகம் சிவந்த அந்த அழகி ''சீ! நீயும் ஒரு மனிதனா?'' என்று சீறினாள்.

அந்தச் சீற்றத்தையும் ரசித்துப் பார்த்தபடி இன்னும் நெருங்கினான் அவன்:

''ஆகா!... நீ கோபித்துக் கொள்வதுகூட மிகவும் அழகாகத்தான் இருக்கிறது!... அது சரி, உன் பெயர் என்ன என்று அடியேன் தெரிந்து கொள்ளலாமோ?'' என்று பணிவுடன் கேட்பதுபோல், குனிந்து நின்றான் இருங்கோ.

''தூ! முதலில் பண்பாட்டையும் மரியாதையையும் தெரிந்து கொள்!...'' என்று திரும்பினாள் அவள்.

''சரி, வாருங்கள், இளவரசி! நேரமாகி விட்டது. அரசர் நம்மைத் தேட ஆள் அனுப்பி விடுவார்...'' என்று ஒருத்தி சமயோசிதமாகவும் எச்சரிக்கையாகவும், சொன்னதைக் கேட்ட இருங்கோ திகைத்து நின்று விட்டான்...

சிறிது தூரம் நடந்து சென்று அங்கே நிறுத்தியிருந்த குதிரைகளில் ஏறி அந்தப் பெண்கள் வேகமாகப் பறந்து மறைந்தார்கள்.

நடந்தவற்றைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அந்துவன், எரிச்சலோடு அங்கே வந்தான்:

''முதலிலேயே சொன்னேனே, கேட்டாயா?... கடைசியில் உன் கைவரிசையை இளவரசியிடமே காட்டி விட்டாயே?'' என்று பொருமினான் நண்பன்.

''என் அந்துவா! உண்மையிலேயே அவள் இளவரசியாகத்தான் இருப்பாளா?'' என்று சந்தேகப்பட்டான் இருங்கோ.

"ஆம்... இவள் சேரநாட்டு இளவரசிதான்; குதிரை யேற்றமும் தெரிந்து வைத்திருக்கிறாள், பார்த்தாயா?... சேர மன்னருக்கு, வேறு ஆண் வாரிசு இல்லாததால், தன் ஒரே மகளை ஆண்மகன் மாதிரியே வளர்க்கிறார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்..." என்று உறுதிப்படுத்தினான் அந்துவன்.

அவள், தன்னைக் காப்பாற்றுவதற்காக ஆழமான குளத்தில் குதித்த துணிவு, குளத்திற்குள்ளே அவன் உடலைக் கட்டிப்பிடிக்க அவன் முயற்சி செய்ததை யெல்லாம் சமாளித்து அவனைக் கரைக்குக் கொண்டு வந்து தள்ளிய பலம், அவனை மூக்கவிடச் செய்ய முதுகை யும் வயிற்றையும் அழுத்தி அமுக்கிய வலிமை— எல்லாம் அந்துவனின் முடிவை மேலும் உறுதிப்படுத்துவதை உணர்ந்தான் இருங்கோ.

"என்னதான் ஆண்மகன் மாதிரி வளர்த்தாலும், தன் ஒரே மகளை இவ்வளவு தொலைவு காவலர் துணையில்லா மல் வந்து நீராடுவதற்கு அரசர் அனுமதித்திருப்பாரா?"

"தன் நாட்டுக்குள்ளே இளவரசிக்கு யார் தொந்தரவு கொடுக்கப்போகிறார்கள்?... இப்போது நாம்தான் கண்ணியமின்றி நடந்து கொண்டுவிட்டோம். நாம் வஞ்சிக்குப் போய் அரசனிடம் உதவி கேட்கும்போது, இளவரசி நம்மைப்பற்றிச் சொல்லிவிட்டால்—?" என்று இரைந்தான் அந்துவன்.

"எனக்கென்னவோ, இளவரசி இங்கே நடந்ததை அரசரிடம் சொல்லமாட்டாள் என்றே தோன்றுகிறது..." என்று உறுதியாகச் சொன்னான் இருங்கோ.

"எப்படி அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்கிறாய்?... உன்னைப் பார்த்து இளவரசி காதல் வசப்பட்டிருப்பாள் என்று நினைக்கிறாயா?"

"இன்னொரு காரணமும் இருக்கலாம்... அந்துவா! எல்லாப் பெண்களுமே தானாகவே கண்டதும் காதலித்து



விடுவதில்லை; சில பெண்களைத் திட்டமிட்டுப் பழகிக் காதல் வசப்படுத்த வேண்டும்... எல்லாப் பெண்களுமே, கண்ணியத்தையும் மென்மையையும் விரும்புவதில்லை; சில பெண்கள், முரட்டுத்தனத்தையும் பலாத்காரத்தையும் விரும்புவதும் உண்டு... இந்த வஞ்சிக் கொடியாளை எப்படியும் என் பிடியில் சிக்க வைக்கிறேன், பார்!" என்று கொக்கரித்தான், காதல் சாஸ்திர நிபுணன்!

'நம்மிடம் திட்டங்களுக்கு ஒன்றும் பஞ்சமில்லை; ஆனால் எந்தத் திட்டம் இதுவரை நிறைவேறியிருக்கிறது?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் நம்பன்.

இருட்டுவதற்குள் இருவரும் வஞ்சி நகரை நெருங்கி விட்டார்கள்.

பிரம்மாண்டமான கோட்டை அவர்களை எதிர் கொண்டு நின்றது. கோட்டை மதிலிலே பல புதுமையான கருவிகளும் அமைப்புக்களும் இருப்பதாக, அவர்கள் மக்களிடம் பேசும்போது தெரிந்து கொண்டார்கள்.

கோட்டைக்கு வெளியே பல கோட்டங்களும் பொது மன்றங்களும் சைனப் பள்ளிகளும் பொழில்களும் கண்கவரும் அழகோடு அமைந்திருந்தன. அவ்விடங்களில் தவ முனிவர்களும் துறவிகளும் வாழ்ந்து கொண்டிருந் தார்கள்.

கோட்டையைச் சூழ்ந்துள்ள புறக்குடி என்னும் புறஞ்சேரியில், கோட்டையைக் காவல்புரியும் படைகளும், வெளிநாட்டரசரும் முக்கியப் பயணிகளும் தங்கிச் செல்லும் விருந்தினர் மாளிகைகளும் இருந்தன. கோட்டையைச் சுற்றியிருந்த அகன்ற ஆழமான அகழியில் தண்ணீர் அமைதியாக நிறைந்திருந்தது. அதிலே ஆங்காங்கே பெரும் முதலைகளும் சுறா மீன்களும் தலையை நிமிர்த்திக் கொண்டு, நீர்ப்பரப்பைக் கிழித்தபடி நீந்திச் செல்லும் காட்சி, பயங்கரமாக இருந்தது. வஞ்சிமாநகருக்குள்ளே ஓடுகின்ற கழிவு நீரையெல்லாம்,

முடிவிலே இந்த அகழியில் வந்து சேரும்படியாக அமைத்திருந்தார்கள்.

கோட்டையின் வாயில், அழகான வேலைப்பாடும் அசைக்க முடியாத உறுதியும் கொண்டதாய், பல நிலைகள் கொண்ட கோபுரத்தோடு கொடிகள் ஆட, கம்பீரமாக நின்றது.

இன்னும் முற்றாக இருட்டவில்லையாதலால், அகழி மேல் போடப்பட்டிருந்த கதவுப் பாலம் இன்னும் தூக்கப் படவில்லை.

அந்தப் பாலத்தின் வழியாகக் குதிரையில் சென்று, கோட்டைக் கதவு முன்னால் நின்ற படைத் தலைவனிடம், தாங்கள் யார் என்பதையும் அரசரைப் பார்க்க விரும்பும் காரணத்தையும் ஓர் ஓலையில் எழுதிக் கொடுத்தான் அந்துவன்.

அந்த ஓலையை வாங்கிச் சென்ற வீரன் ஒருவன், சிறிது நேரத்தில் திரும்பிவந்து, இருங்கோவையும் அந்துவனையும் மரியாதையோடு அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

கோட்டை வாயிலைக் கடந்ததும், வாயிலை ஒட்டி உட்பக்கத்தில், போர்வீரர்களின் வீடுகளும், அடுத்து உப்பு, கள், மீன், உணவுப் பொருள்கள் விற்கும் கடைத் தெருக்களும், அதற்கும் உள்ளே தொழிலாளர் குடியிருப்புக் களும், நாடகக்கலைஞர், கணிகையர் தங்கியுள்ள இடங் களும், துணி, மணி, கூலங்கள் விற்கும் கடைகளும், அவற்றை அடுத்து வணிகர், அந்தணர், அரசாங்க அதிகாரிகள் வாழும் உயர்ந்த மாட வீடுகளும், இடையிடையே இளமரக்கா, அருவியோடு அமைந்த செய்குன்று கள், மக்கள் கூடும் அம்பல மன்றங்கள் ஆகியவை நிறைந் திருந்தன.

இருங்கோவும் அந்துவனும் அரண்மனையை அடைந்த போது, சேரன் பெருஞ்சேரலாதனே நேரே வந்து,



வாயிலில் அவர்களை எதிர்கொண்டு அழைத்துப் போக நின்று கொண்டிருந்தான்.

ஏறத்தாழ நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க நெடிய திண்ணென்ற கம்பீரமான தோற்றம்; அந்த உயரத்திற்கேற்ற செழுமையான வலிய தோள்கள்; உருண்டு திரண்டு, நரம்புகள் எழும்பித் தெரியும் நீண்ட கைகள்; அகன்ற நெற்றிக்குக் கீழே, விரிந்த கண்களைப் பார்த்தபடி விறைத்து முறுகி நிற்கும் அடர்ந்த கரிய மீசை...

''வாருங்கள்!... வாருங்கள்!...'' என்று வரவேற்றான் பெருஞ்சேரலாதன்.

''வணக்கம், மன்னர் பெருமானே!'' என்று கை கூப்பிப் பணிவுடன் வணங்கினார்கள் இருங்கோவும் அந்துவனும்.

சேர மன்னரின் இனிய வரவேற்பைப் பார்த்துப் பூரித்துப் போனான் இருங்கோ. ஏறத்தாழ ஒரு நாட்டு அரசனுக்குக் கிடைக்கும் வரவேற்பு போல, தனக்கும் இப்படி ஒரு வரவேற்பு கிடைக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை, சோழ நாட்டின் எதிர்கால மன்னன் என்ற முறையில் இப்படி வரவேற் பளிக்கிறாரோ சேரமன்னர்?

அரண்மனைக்குள் அழைத்துப் போய், தன்னுடைய தனியறையில் அவர்களை உட்கார வைத்து உபசரித்தான் பெருஞ்சேரலாதன். மன்னர் வழங்கிய யவனத் தேறல், இனிப்புப் பண்டங்கள், பழங்கள் முதலியவற்றைச் சாப்பிட்டுக் கொண்டே, தான் அங்கே வந்த நோக்கத்தை விவரித்தான் இருங்கோ.

''அரசே! என் தந்தை சேட்சென்னிக்குப் பிறகு, எனக்குத்தான் முறைப்படி பட்டம் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் என் சிற்றப்பா இளஞ்சேட்சென்னியும் திருத்தாமனும் என்னைப்பற்றி இல்லாததும் பொல்லாதது

மான அவதூறுகளைச் சொல்லி, என்மேல் பொய்ப் பழிகளை உருவாக்கி, என்னை ஒதுக்கித் தள்ளும்படியாகச் செய்து விட்டார்கள். முறைப்படி உரிமையில்லாத ஒருவனை— அரண்மனைப் பக்கம் மழைக்குக்கூட ஒண்டியிராத ஒருவனை— இப்போது அரசனாக்கியிருக்கிறார்கள். அதுவும், கேவலம் ஒரு யானையால் கரிகாலன் அரசனாகியிருக்கிறான்! இப்போது, அரசாட்சி விஷயங்களில் அனுபவமே இல்லாததால், ஆட்சி எந்திரத்தின் நடைமுறைகள் புரியாமல் மிகவும் திணறிக் கொண்டிருக்கிறான்... நியாயமான உரிமைக்காரனான என்னை அரசனாக்கவேண்டும் என்று நாட்டிலே பல குறுநிலத் தலைவர்கள் எனக்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பயன்படுத்தி, உள் நாட்டிலே ஒரு குழப்பத்தை உருவாக்கிவிட்டு, நாம் கரிகாலனைத் தாக்கினோம் என்றால், அந்தச் சிறுபையன் ஓடி ஒளிந்து விடுவான்... அந்தப் படையெடுப்புக்கு நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும். உங்கள் உதவியுடன் நான் மன்னனாகி விட்டால், அதற்குப் பிரதியாக நீங்கள் எது கேட்டாலும் நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்...'' என்று பணிவாகச் சொன்னான் இருங்கோ.

''ஒரு தந்தைக்கு மகன்மேல் கோபம் ஏற்படலாம் தான்; ஆனால் அவனுக்குள்ள உரிமையே இல்லாமல்— தந்தைக்குப் பிறகு தனயன்— என்ற உரிமையே இல்லாமல் போகும் அளவுக்கு, நீங்கள் என்ன தவறு செய்துவிட்டதாக, சேட்சென்னி நினைத்து விட்டார்?'' என்று திகைத்தான் சேரன்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை; என்னைப்பற்றி அவ்வளவு பொய்ச் செய்திகளை அவரிடம் சொல்லியிருக்கிறார்கள் என் எதிரிகள்...'' என்று தந்திரமாக இருங்கோ பேசிக் கொண்டிருக்கும்போது, ''அப்பா!'' என்று துள்ளிக் குதித்துக் கொண்டே உள்ளே ஓடி வந்தாள் ஓர் இளம் பெண்.



காட்டாற்று அருவியிலே நீராடிய அதே அழகு இளவரசிதான்!

அவளைப் பார்த்ததும் இருங்கோவும் அந்துவனும் திடுக்கிட்டார்கள்.

''இருங்கோவைப் பற்றிச் சேட்சென்னி நினைத்தது சரியா, இல்லையா என்பதற்கு, சேரனிடம் சான்று சொல்ல, இளவரசி எக்கச்சக்கமான சமயத்தில் வந்து விட்டாளே' என்று திடுக்கிட்டு அதிர்ந்துபோய், இருங்கோவைப் பார்த்துப் பரிதாபமாக விழித்துக் கொண்டிருந்தான் அந்துவன்.

உள்ளே ஓடி வந்த இளவரசி, எதிர்பாராமல் தந்தையின் தனியறையிலே இருந்த இருங்கோவைக் கண்டதால், திடுக்கிட்டுப் பார்த்த பார்வையின் வெப்பத்தைத் தாங்க மாட்டாமல், தடுமாறிப் போனான் அந்த அழகுரசிகன்.

## 16

தன் அறைக்குள்ளே நுழைந்த மகளை, இருங்கோவுக்கு அறிமுகப்படுத்தினான் பெருஞ்சேரலாதன்.

''இருங்கோ! இவள்தான் என் மகள் சித்ராதேவி'' என்றதும், அவன் எழுந்து நின்று அவளுக்கு வணக்கம் கூறினான்.

இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட சேரன் ''என்ன இருங்கோ, இவள் உங்களைவிட வயதிலே இளையவள். அவளுக்கு இவ்வளவு மரியாதை தரவேண்டுமா நீங்கள்?'' என்று கேட்டான்.

''ஏன், இளவரசி ஒரு சாதாரண இளவரசி இல்லையே? உங்களுடைய ஒரே வாரிசு ஆயிற்றே? உங்களுக்குப் பிறகு சேரநாட்டுக்கே அரசியாக வரப்போகிறவர் அல்லவா? அந்த வருங்காலத் தகுதியைக் கருதி, நான் மரியாதை தருவதில் தவறு இல்லையே?'' என்று சமத்காரமாகப் பேசினான் இருங்கோ.

''ஒரு பெண், அரசி என்பதற்காகத் தருகிற மரியாதையைவிட, அவள் ஒரு பெண் என்பதற்காகத் தருகிற மரியாதைதான், ஆத்மார்த்தமானது!'' என நறுக் கென்று வெட்டினாள் சிந்தாதேவி.

இருங்கோவின் மரியாதையை, மகள் வேறொரு கோணத்தில் எதிர்கொள்வது ஏன் என்று தந்தைக்குப் புரியவில்லை.

''இருங்கோ! என் மகளைச் செல்லமாக, சர்வ சுதந்திரத்துடன் வளர்த்துவருகிறேன். அதனாலே சில சமயங்களில் குறும்புத்தனமாக, படபட என்று பேசி விடுவாள்; அது அவளுக்குப் பழக்கமாகப் போய்விட்டது,'' என்று சமாதனம் சொன்னான் மன்னன்.

''அதனால் என்ன? அப்படிப் பேசுபவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும்; சும்மா வழவழா என்று பேசுபவர் களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது...'' என்று சிரித்தான் இருங்கோ.

''என் தந்தைக்கும் அப்படித்தான்; நீங்களும் சுறுசுறுப்பாகப் பேசப் பழகிக்கொள்ளுங்கள்!'' என்று தொடர்ந்து தாக்கினாள் இளவரசி.

''தேவி! இவர் யார் தெரியுமா? சோழ நாட்டுக்கு மன்னனாகப் போகிறவர்; சோழ சிம்மாசனத்தின் உண்மையான வாரிசு இவர்தான். பெயர் இருங்கோ...'' என்று தந்தை அறிமுகப்படுத்தியதும், கலகல என்று ஓடை நீர்போல் சிரித்தாள் தேவி:



''என்ன, அப்பா! எத்தனை நாட்கள் தூங்கிவிட்டு இப்போது எழுந்திருக்கிறார் இவர்?'' என்று அவள் கேட்டதும், எல்லோரும் ஏதும் புரியாமல் விழித்தார்கள்.

''சோழநாட்டிலே கரிகால் வளவன் மன்னராகி ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். இவர் இப்பொழுது திடீர் என்று தூக்கத்திலிருந்து எழுந்து 'நான்தான் அரசன்' என்று கிளம்பியிருக்கிறாரே!... இவர் விழித்திருக்கும் போதும், பகற்கனவு காண்பார் போலிருக்கிறது!''

அவளுடைய கனிவான அழகு இருங்கோவை எவ்வளவு இன்புறுத்தியதோ, அவ்வளவு பயமுறுத்தியது அவளுடைய கூர்மையான நாக்கு. மகளுடைய வாயடி யிலே சிக்கித் திணறும் இருங்கோவைக் கண்டு, தர்ம சங்கடமாயிருந்தது சேரனுக்கு:

''அப்படி நினைக்காதே, தேவி! இவர் காண்கின்ற பகல் கனவு, என்னுடைய இலட்சியக் கனவின் காரணமாக நிறைவேறப் போகிறது... என்னுடைய நீண்ட கால இலட்சியத்தின்படி, சோழநாட்டுப் படையெடுப்பு நடக்கும்போது, இவரும் நமக்குத் துணையாக வருவார். அந்தப் போரிலே கரிகாலன் தோற்று அழியப் போகிறான்...'' என்று தந்தை ஆரம்பித்ததும், குறுக்கிட்டாள் சிந்தாதேவி:

''அப்பா! இன்னும் அந்த வெறியை நீங்கள் விட வில்லையா?... ஒரு மன்னருக்குப் போர் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதுதான் வேலையா? வாழ வேண்டிய ஆயிரக்கணக்கான உயிர்களை மாளச் செய்து வாகை சூடுவது, மன்னருக்கெல்லாம் ஒரு பொழுது போக்கா?'' என்று வேதனையோடு கேட்டாள் அவள்.

''போர் என்பது மன்னர்களுக்குப் பொழுதுபோக்கு அல்ல; முக்கிய லட்சணம். போர் நடத்துவதும் எதிரி களை வெல்வதும் மன்னர்களின் முக்கியக் கடமை யல்லவா?'' என்றான் இருங்கோ.

"போர்தான் ஒரு மன்னருக்கு முக்கியக் கடமை என்றால், அவனுக்கு வாளும் கேடயமும் மட்டும் இருந்தால் போதுமே? அவனுக்குச் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் எதற்காக? நீதியான ஆட்சி நடத்துகின்ற செங்கோலும், குடிமக்களுக்கு ஆதரவு நிழல் தருகின்ற குடையும் அரசனுக்கு ஏன் வைத்திருக்கிறார் கள்?" என்று இளவரசி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்தான் இருங்கோ.

பெருஞ்சேரலாதனுக்குத் தெரியும், அறிவுபூர்வமான விவாதத்தில் இளவரசியை வெல்லுதல் எளிதல்ல என்பது; அவனே பலமுறை அவளிடம் விவாதித்துத் தோற்றிருக் கிறான்.

"ஏன் அப்பா! எந்த நாட்டின்மீது படையெடுக்கலாம், எந்த மன்னனைத் தோற்கடிக்கலாம் என்றுதானே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்யலாம் என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா?" என்று தந்தை தனித்திருக்கும் போது கேட்பாள் சிந்தாதேவி.

ஓர் இளவரசனுக்கு உரிய கல்வி, போர்ப்பயிற்சி, அரசியல் ஆலோசனைகளில் பங்கெடுக்கும் உரிமை எல்லாம் அவளுக்குக் கொடுத்திருந்தான் மன்னன். ஆனால் அவளோ, ஒரு வருங்கால அரசிக்கு வேண்டிய அதிகார ஆசை, போர் வெறி, வீரத் தினவு எதுவும் இல்லாமல், ஒரு 'தத்துவஞானி'யாக உருவாகியிருந்தாள்!

"தேவி! நம் நாட்டிலே மக்கள் நலமாக, மகிழ்ச்சி யாகத்தானே வாழ்கிறார்கள்?... வேறு சில நாடுகளில் மன்னர்கள், மக்களுக்கு அதிக வரி போட்டு எவ்வளவு துன்புறுத்துகிறார்கள், தெரியுமா? நான் எவ்வளவு செங்கோலாட்சி நடத்துகிறேன் என்று மக்களிடம் கேட்டுப் பார்!" என்று பெருமையாக நெஞ்சை நிமிர்த்துவான் சேரன்.



"செங்கோலாட்சி நடத்துவது மட்டும் ஒரு மன்ன னுக்குப் பெருமையாகிவிடாது, அப்பா! உங்களுக்குப் பதிலாக ஒரு பொம்மையை வைத்தால்கூட, அது மக்களுக்கு எவ்விதக் கொடுமையும் செய்யாமல் செங்கோலாட்சி நடத்துமே! மக்களைப் பொறுத்த வரையில்— ஒரு மன்னன் நல்லவனாயிருந்தால் போதும்; வல்லவனாயிருந்தால் போதும்; மக்கள் அறிவு அவ்வளவு தூரம்தான் செல்லும். ஆனால் சிந்தனையாளர்களுக்கு— அது மட்டும் போதுமா?... மக்களுக்கு மேன்மேலும் வளமும் செல்வமும் வசதியும் ஏற்படுத்துகிற திட்டங் களைத் தீட்டிச் செயல்படுத்துவது அல்லவா, ஓர் அறிவுள்ள அரசனின் கடமை?... இப்போது சேரநாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள்; அதனுடைய வளத்தை மேலும் வளர்ப்பதற்கு ஏதாவது செய்திருக்கிறீர்களா நீங்கள்?"

"ஏன், நம் நாட்டில் விளையும் மிளகையும் தேக்கை யும் தந்தத்தையும் சந்தனத்தையும் வாங்குவதற்காக, முசிறித் துறைமுகத்தில் எத்தனை வெளிநாட்டுக் கப்பல் கள், தங்கக்கட்டிகளையும் பொற்காசுகளையும் வைத்துக் கொண்டு காத்து நிற்கின்றன, தெரியுமா?"

"தங்கத்தை வைத்து வணிகத்தை வளர்க்கலாம்; வயிற்றை வளர்க்க முடியாது, அப்பா! நம் மக்களுக்குப் போதுமான உணவு இங்கே விளைகிறதா? போகப் போக, மக்கள் தொகை பெருகி இன்னும் உணவுப் பொருள் தேவைப்படுமே? அதற்கு ஏதாவது திட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்களா?... சோழ நாட்டைப் பாருங்கள்! காவிரியால் நல்ல விளைச்சல் இருக்கிறது. அங்கே இயற்கையாக வளம் கொழிக்கிறது. நாம் அந்த அளவு வளத்தைச் செயற்கையாக அடைய முயற்சி செய்யலாமில்லையா?"

"செயற்கையாக எப்படி?..."

"நம் நாட்டில் ஓடுகிற பேரியாறு, ஆன்பொருநை, குடவனாறு, காரியாறு, சுள்ளியம் பேரியாறு,

காஞ்சியாறு[1] முதலியவற்றில் நீர் ஓடி வீணாய் கடலில் போய்த்தானே சேர்கின்றன? அவற்றில் அணைகள் கட்டி நீரைத் தேக்கிவைத்தால் அதை உழவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம், இல்லையா?''

மகளுடைய கூரிய அறிவை நினைத்துப் பெருமிதப் படுவானே ஒழிய, அவள் கூறும் திட்டங்களை நினைத்துப் பார்க்கவே அவனுக்கு மலைப்பாக இருக்கும்.

ஓர் அணை கட்டுவதென்றால், அதற்கு எத்தனை ஆட்கள், எவ்வளவு பொருள், எத்துணை முயற்சி வேண்டும்!

''தேவி! நம் நாட்டு உணவுப் பற்றாக்குறை நிலைமையைப் பற்றித்தானே நீ கவலைப்படுகிறாய்? நீ பிரமாதமாகச் சொல்கிறாயே, காவிரி பாயும் சோழநாடு—அதையே வென்று நம் நாட்டுக்கு அடிமைப்படுத்தி விட்டால், அங்கே விளைகின்ற நெல்லும் கரும்பும் நமக்கும் கிடைத்துவிடும், இல்லையா?'' என்று சாமர்த்திய மாக அவளை மடக்குவதாக நினைத்துக்கொண்டு வாதிடுவான் சேரன்.

''தமிழகத்தில் ஒரு நாட்டை எத்தனை நாட்கள் நீங்கள் அடிமையாக வைத்திருக்க முடியும் என்று நம்புகிறீர்கள்? அப்பா! மாமன்னர் அசோகன் கூட, தமிழ் மூவேந்தர்களைத் தாக்காமல் பயந்துவிட்டு வைத்திருந்தார் என்பது உங்களுக்கு நினைவில்லையா? அது மட்டுமல்ல—மாவீரர் அலெக்ஸாண்டர் அடிமைப்படுத்திய நாடுகள் எத்தனை நாட்கள் அடிமையாக இருந்தன?... ஏன் அப்பா! நீங்கள் சோழநாட்டின்மேல் படையெடுக்கத் திட்டமிடு வதற்குக் காரணம், அந்த நாட்டின் சோற்றுவளத்தை நமக்குப் பெறுவதற்காகவா?''

---

1. மு. இராகவய்யங்கார்— 'சேரன் செங்குட்டுவன்'— பக். 158



''இல்லை, தேவி! சோற்றைவிட முக்கியமான மானத்திற்காக; ஒரு மனிதன் சோற்றால் மட்டும் வாழ்வதில்லையம்மா! அதைவிட, ஏன், உயிரைவிட, மானம்தான் பெரிது!... என் அண்ணனைக் கொன்ற சோழ மன்னனைப் பழிக்குப்பழி வாங்கி, அவனை அடிமைப் படுத்துவதே என் வாழ்க்கை லட்சியம். அதிலிருந்து என்னைத் திசை திருப்பிவிட, உன்னால்கூட முடியாது!'' என்று அறிவு பூர்வமான விவாதத்தை, உணர்ச்சிப் பிரச்னையாக்கி முடித்து விடுவான் சேரன்!

இப்போது இருங்கோ முன்னிலையிலும், தொடர்ந்து பேசி மகளிடம் தோற்க வேண்டாம் என்று முடிவு செய்தவனாய், அவளிடமிருந்து இருங்கோ பக்கம் தன் பார்வையைத் திருப்பினான் சேரன். ஆனால், விவாதத் தில் தான் ஒன்றும் சளைத்தவனல்ல என்பதை அந்த அழகியிடம் காட்டிக் கொள்ள விரும்பிய இருங்கோ, தொடர்ந்து பேசினான்.:

''இளவரசி! அப்படியென்றால், போர் என்பதே உலகத்தில் தேவையில்லை என்கிறீர்களா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. போர் தேவை தான்; ஆனால் அந்தப் போர், மனித சமுதாயத்துக்கும் இயற்கைக்கும் இடையே நடக்கட்டும். இயற்கையோடு போராடி ஜெயித்துத்தான் மனிதன் பல வாழ்க்கை வசதி களை அமைத்துக் கொண்டான். வெயிலையும் மழையை யும் தோற்கடித்துத்தான் மனிதன் வீடு அமைத்துக் கொண்டான். குளிரையும் வெப்பத்தையும் புறங்கண்டு தான் மனிதன் ஆடை செய்யக் கற்றுக் கொண்டான் நோயோடும் மரணத்தோடும் போராடத்தான் மனிதன் மருத்துவத்தைக் கண்டு கொண்டான்... இந்தப் போரை நான் வரவேற்கிறேன். இந்தப் போரினால் மனித சமுதாயம் ஆக்கம் பெறுகிறது; இயற்கைத் தடைகள் அழிகின்றன. ஆனால் நீங்கள் நடத்தும் போரிலே மனிதனல்லவா அழிகிறான்? மனித சமுதாயம் அல்லவா

மரணமடைகிறது?... மனிதனும் இயற்கையும் போராடலாம்; வெற்றியோ தோல்வியோ பெறலாம். ஆனால் மனிதனும் மனிதனும் போராடக் கூடாது. உங்கள் போரால் மனிதன் சாகக் கூடாது; பொருளாதாரம் நலியக் கூடாது; நாகரிக முன்னேற்றம் தடைப்படக் கூடாது...'' என்று மடை திறந்தது போல் பேசிக் கொண்டேயிருந்தாள் சிந்தாதேவி.

அவள் பேச்சின் பல கருத்துக்கள், இருங்கோவின் மூளைக்குப் புரிபடாமல், தலைக்கு மேலே போய்க் கொண்டிருந்தன! அவளுடைய தர்க்கத்தின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், இருங்கோ திணறித் திகைத்து அசடு வழிவதைப் புரிந்து கொண்டான் சேரன்.

''அரசே! உங்கள் மகள் உண்மையிலே ஒரு பெரிய சிந்தனையாளர்தான்... நான் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன்; எத்தனையோ இளவரசிகளுடன் பேசியிருக்கிறேன். ஆனால் சிந்தாதேவி போன்ற அறிவும் கருத்துவளமும் விவாதத் திறமையும் உள்ள ஓர் இளவரசியைக் கேள்விப்பட்டதுகூட இல்லை!'' என்று பாராட்டி விட்டு, விவாதத்திலிருந்து பின்வாங்கிக் கொண்டான் இருங்கோ!

''நீங்கள் மட்டுமல்ல, இவளுடன் பேசிய எல்லோருமே இப்படித்தான் பாராட்டுகிறார்கள். சென்ற ஆண்டு இங்கே திருவோண விழாக் காணவந்த பாண்டிய இளவரசர் திருமாறன் இவள் அறிவைக் கண்டு பிரமித்து, இவளை மணந்து கொள்ள விரும்பிக் கேட்டிருக்கிறார். அவர் மட்டுமல்ல, ஆந்திர மன்னர், கொங்கிளங்கோசர், மாளுவ வேந்தர், கலிங்க மன்னர், தாம்ப பர்ணி[2] முதலிய அரசர்களும் என்னிடம் மகட்கொடை[3] வேண்டியிருக்கிறார்கள். இவளை யாருக்குக் கொடுப்பது என்று தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றான் சேரன்.

2. இலங்கைத் தீவின் அரசர்களுக்கு இப்பெயர் வழங்கப் பட்டது— அசோகனின் சாசனங்கள்— பக். 94.

3. மகட்கொடை— 'கன்யாதானம்' எனப் பிற்காலத்தில் மருவியது.



நீங்கள் நன்றாக யோசித்துப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும். இவர்களையெல்லாம்விட, வளமான நாட்டுக்குக்கூட சிந்தாதேவி பட்டத்தரசியாகும் வாய்ப்புக் கிடைக்கலாமே!'' என்று குறிப்பாக, சேரன் காதில் மட்டும் கேட்கும்படியாகச் சொன்னான் 'எதிர்கால சோழ நாட்டு மன்னன்.'

அவன் பேச்சின் உட்பொருளைப் புரிந்தும் புரியாதது போல் எழுந்தான் சேரன்:

''இருங்கோ! நான் இன்று [4] ஆடகமாடம் சென்று பார்வையிட வேண்டும். நீங்கள் இங்கு பேசிக்கொண்டிருந்துவிட்டு, [5] வேண்மாடத்தில் தங்கி ஓய்வெடுக்க ஏற்பாடுகள் செய்யச் சொல்லியிருக்கிறேன். நான் கோயிலுக்குப் போய்த் திரும்பிவந்து உங்களைச் சந்திக்கிறேன்...'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அந்த அறையில் இருங்கோ முன்னிலையில் தனியே விடப்பட்ட சிந்தாதேவி சிறிதும் கலக்கம் அடையாமலிருந்தது, அவனுக்கு வியப்பாகவும் அதே சமயம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. கிடைத்திருக்கும் அருமையான வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள நினைத்த அவன், தேவியை ஏற இறங்கப் பார்த்தபடி ஏதோ பேச வாயெடுத்தான்.

நிலைமையைப் புரிந்துகொண்ட அந்துவன் ''அரசே! நான் போய், குதிரைகளைப் [6] பணையில் கட்ட ஏற்பாடு

4. ஆடகமாடம்— வஞ்சிக்கு அருகிலுள்ள திருமால் கோயில்

5. வேண்மாடம்— அரசரின் முக்கிய விருந்தினர்களைத் தங்க வைக்கும் மாளிகை.

6. பணை— குதிரைகளைக் கட்டும் லாயம்.

செய்துவிட்டு வருகிறேன்...'' என்று சொல்லி அங்கிருந்து நழுவிச் சென்றுவிட்டான்.

சிந்தாதேவியின் சிந்தையைக் கவர்வது எப்படி என்று மனதிற்குள் அடுத்தடுத்துப் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்ட இருங்கோ, மெல்ல பேச்சைத் தொடங்கினான்:

''இளவரசி! மிக அழகான நெற்றி, மிக அழகான கண், மிக அழகான மூக்கு, மிக அழகான வாய் என்று உலகத்தில் மிக அழகான உறுப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்து, பிரம்மன் திலோத்தமை என்ற அழகியைப் படைத்ததாகக் கூறுவார்கள். அந்தத் திலோத்தமை கூட உங்கள் அழகுக்கு முன்னால், சாதாரணமாகி விடுவாள்!'' என்ற முகஸ்துதி அஸ்திரத்தால் அந்த அழகியை வீழ்த்த நினைத்தான் அனுபவஸ்தன்; ஆனால் அப்படி முகஸ்துதியால் மனம் மகிழ்ந்துபோகின்ற சாதாரணப் பெண் இல்லையே அந்த அழகி!

''திலோத்தமைக்கு அவ்வளவு அழகு தேவைதான்; ஏனென்றால், அவள் சுந்தோப சுந்தர் என்னும் அசுரர்களை மயங்க வைத்து அழிப்பதற்காகப் படைக்கப்பட்டவள்... ஒரு விறலிக்கும் நாட்டியக்காரிக்கும் வீட்டிலே வாழும் பெண்ணுக்கும், அழகு என்பது ஒரு சிறப்புத்தகுதி. ஆனால் நாட்டை ஆளவேண்டிய அரச குடும்பத்துப் பெண்களுக்கு, அழகு மட்டும் தகுதியாகிவிடாது; அறிவு தான் அவர்களுக்குச் சிறப்புத் தகுதி!...'' என்றாள் சிந்தாதேவி.

''அறிவிலும் நீங்கள் சாதாரணமானவர்கள் இல்லையே? உங்கள் அழகு வண்ணத்தை அருவிக் கரையிலே கண்டேன்; அறிவு வண்ணத்தை இங்குக் கண்டு வியந்தேன். உங்கள் அழகாலே அறிவு மேலும் பளிச்சிடுகிறதா, அல்லது அறிவாலே அழகு மேலும் வெளிப்படுகிறதா என்று என்னால் சொல்ல முடியவில்லை...'' என்று அந்த அழகுக் கோட்டையை மேன்மேலும் தொடர்ந்து முற்றுகையிட்டான் இருங்கோ.



அவன் பேச்சில் பாதிக் கவனமும், அந்த அறையின் மூலையிலிருந்த ஓர் அழகிய பளிங்குச் சிலையின் கலையழகில் மீதிக் கவனமுமாக உட்கார்ந்திருந்தாள் சிந்தாதேவி.

''இளவரசி! தனக்கு உரிமையான புதையலை எடுக்கும் லட்சியத்துடன் புறப்பட்ட ஓர் இளைஞன், வழியில் ஓர் அற்புதமான பொற்சிலையைக் கண்டுவிட்டால், அவன் புதையலைத் தேடித் தொடர்ந்து போவானா, அல்லது கண்ணில்பட்ட பொற்சிலையை அடைய முயல்வானா?'' என்று சூசகமாக, பாதிப்பார்வை அவள் மேலும், பாதிப் பார்வை பளிங்குச்சிலை மேலுமாகப் பதித்தவாறு கேட்டான் இருங்கோ.

''புத்திசாலியாக இருந்தால், முதலில் கொண்ட இலட்சியத்தையே தொடர்ந்து செல்வான்; ஏனென்றால், வழியில் கண்ட பொற்சிலை யாருக்கு உரிமையானதோ?''

''கண்ணுக்குப் புலப்படாத புதையலைத் தேடுவதற்கு முன்னால், கைக்கு அருகில் இருக்கும் பொற்சிலையை உரிமை கொள்ள முயற்சி செய்தால்—?''

''அந்தப் புதையல் அவனுக்கு உண்மையிலேயே உரிமையானதில்லை என்று அர்த்தம்—'' என்று பட்டென்று குறுக்கிட்டுச் சொன்னாள் இளவரசி.

அந்த 'அறிவுஜீவி'யைப் பேச்சாலே, தான் வீழ்த்தி விடமுடியாது என்பதைத் தெரிந்து கொண்ட இருங்கோ, வேறு உபாயத்தைக் கடைப்பிடிக்க முடிவு செய்தான்.

இவள் மாதிரி, பிடிகொடுத்த அறிவு நிறைந்த பெண்களுக்கு ஒரு முறை பருவ இன்பத்தின் ருசி காண்பித்துவிட்டால், உணர்விலும் அவர்கள் தீவிரமாகி, ஆணின் கைப்பிடிக்குள் சிக்கிக் கிடப்பார்கள் என்ற அனுபவ உண்மை, அவனுக்குத் தூண்டுதல் அளித்தது.

வெளியே சோலையிலே, கொடிகளில் மலர்ந்த பூக்களைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்த தென்றல்,

அறைக்குள்ளே மற்றொரு பூங்கொடியாய் அமர்ந்திருந்த சிந்தாதேவியின் மலர் முகத்தைத் தொட்டு விளையாட ஓடி வந்தது.

அவளுடைய குவளைப்பூ விழிகளையும் ரோஜாப்பூக் கன்னங்களையும் எள்ளுப்பூ மூக்கையும் தாமரைப்பூ இதழ்களையும் தொட்டு மயங்கிய தென்றல், சிறிது கீழே இறங்கிக் குறும்பு செய்ததால், அவளது மார்புத்துணி சிறிதே விலகியதைப் பார்த்த இருங்கோவின் நெஞ்சம் ஆசையால் வெறி ஏறித் துடித்தது.

திடீரென்று உன்மத்தம் பிடித்தவன்போல், சிலையைப் பார்த்துக் கொண்டிருந்த சிந்தாதேவியின் அருகில் சென்று, அவளைக் கட்டியணைத்துக் கொள்ளக் கைகளை நீட்ட, இதை ஓரளவு எதிர்பார்த்திருந்தவள் போல் தேவி, விருட்டென்று எழுந்து, அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள்.

பொறி கலங்கிப் போய் நின்றான் இருங்கோ.

அது வளையல் அணியும் கை மட்டுமல்ல; வாள் ஏந்தும் கையும் கூட!

**பொன்**னிறமான மாலை நேரம். அந்தி ஞாயிற்றின் மஞ்சள் கிரணங்கள், உலகத்தின் பொருள்கள் எல்லாவற்றையும் பொன்னாக்கும் 'ரஸவாதம்' செய்து கொண்டிருந்தன.

கணவன் கதிரவனை வரவேற்க, மேலைவானத்து வாசலில் வண்ண வண்ணக் கோலங்களை அழித்து அழித்துப் போட்டு அலங்கரித்துக் கொண்டிருந்தாள் குட கடல் பெண். வசந்த காலத்தின் வருகையைக் கட்டியங் கூறிக் கூவி வரவேற்றுக் கொண்டிருந்தன பூங்குயில்கள்.

சேரநாட்டின் தலைநகர் வஞ்சிக்குச் சிறிது தூரத்தில் உள்ள கொடுங்கோளூர் கிராமத்தை ஒட்டி ஓடும் சிற்றாறு, கலகல என்ற ஓசையுடன் தவழ்ந்து செல்லும்



சப்தம், கூட்டிலிருக்கிற பறவைக் குஞ்சுகளுக்கு இனிய தாலாட்டாக ஒலித்தது.

கூடு திரும்பும் முன்பு காகங்கள், அந்த ஆற்றங்கரைக்கு வந்து, தலையையும் உடம்பையும் நனைத்துக் கொண்டு, சிறகை விரித்து வெயிலில் காய்ந்தவாறு புறப்பட்டன. எங்கோ இருந்து இனிமையாகக் கேட்ட ஆயச்சிறுவனின் புல்லாங்குழல், சிதறி நின்ற மாடுகளையெல்லாம் ஒன்று சேர்த்து, வீட்டுப் பக்கம் நடக்க வைத்தது. ஊரின் கோடியில் இருந்த கண்மாயில் மூழ்கிக் கிடந்த எருமைகளின் நிறைந்த மடியில் வரால் மீன்கள் முட்ட, கன்றுகளின் நினைவு வந்து பால் சொரிந்தபடி வீட்டை நோக்கிப் புறப்பட்டன.

அந்த ஆற்றங்கரையின் ஓரத்தில் நின்ற மரங்களும் கொடிகளும் பூவும் மொட்டுமாய், பூப்படைந்த மங்கையின் பருவ மெருகுபோல், தளதள என்று தென்றலின் அசைவால் மெதுவாக ஆடி அசைந்து கொண்டிருந்தன.

அங்கே நாலைந்து இளம்பெண்கள், பேசும் பூக்களாய், கலகல என்று பேசிச் சிரித்துக்கொண்டு, அந்தப் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தார்கள்.

இனம் இனத்தோடு சேரும் என்பதுபோல், இந்தப் பூவையருக்குப் பூக்களின்மேல் இயல்பான விருப்பம் இருப்பதில் வியப்பில்லைதான்! இயற்கையின் படைப்பிலே, பூவையும் பெண்களையும் ஒரே சமயத்தில் பிரம்மா படைத்திருப்பார் போலிருக்கிறது!

பக்கத்திலே ஒரு வேங்கை மரம் நிறையப் பூக்கள் செழித்துக் குலுங்கின. அதைக் கண்ட பெண்கள், ''புலி! புலி!!'' என்று கூவிக்கொண்டே பூப்பறிக்க,[7] அம்மரத்தின் கீழ் ஓடிவந்தார்கள்.

---

7. வேங்கை மரத்தின் மலர்கள், புலித்தோல் போலிருப்பதாலோ அல்லது மரத்தின் பெயர் வேங்கை

பகட்டுக்காரி, தன்னிடமுள்ள நகைகளையெல்லாம் உடலில் நிறைய அணிந்துகொண்டு பிறர்க்குப் பெருமையாய்க் காட்டுவதைப்போல், அந்த வேங்கை மரம் தன் பூக்களைக் காட்டிச் சிரித்து மணத்துக் கொண்டிருந்தது.

வேங்கை மரத்தின் தாழ்ந்த கிளைகளில் உள்ள பூக்களை, "புலி, புலி!" என்று களிப்புடன் கூவிக் கொண்டே, குதித்துக் குதித்துப் பறித்துக் கொண்டிருந்த போது, பக்கத்தில் இருந்த ஒரு புதரிலிருந்து 'உர்ர்...' என்ற உறுமல் ஒலி கேட்டு, அந்தப் பெண்கள் திடுக்கிட்டு அந்தப் பக்கம் பார்த்தார்கள்.

நிஜப்புலி ஒன்று அங்கிருந்து எழுந்து வாலை நிமிர்த்தி முறுக்கியபடி, வாயைத் திறந்து, அந்தப் பெண்களைக் கோபத்துடன் உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தது! அதன் தூக்கத்தை இவர்களின் கூக்குரல் கெடுத்துவிட்ட கோபம் போலிருக்கிறது!

அச்சத்தால் மிரண்டுபோன பெண்கள் "புலி!... புலி!" என்று கதறிக் கூச்சலிட்ட ஓலம், அந்தக் காட்டிலே, காற்றிலே பரவி, மெலிந்து, கரைந்து கொண்டிருந்தது.

ஓடவும் பிரக்ஞை இல்லாமல் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தார்கள் அந்தப் பெண்கள்; ஓடினால் மட்டும் தப்பிவிடமுடியுமா என்ன?...

கோபத்திலே கண்கள் சிவந்து போயிருந்த புலி, பலமாக உறுமியவாறு, உடலை மூரி நிமிர்த்தி, அவர்கள் மேல் பாயத் தயாராகிவிட்டது!...

---

என்றிருப்பதாலோ, பெண்கள், அந்தப் பூக்களைப் பறிக்கும்போது 'புலி!... புலி!!' என்று கூவிக் கொண்டே பறிப்பது வழக்கம்.

இது அகநானூறு முதலிய சங்கப்பாடல்களில் பல இடங்களில் குறிக்கப்படுகிறது.

# 17

ஆற்றங்கரையோரமாகக் குதிரையில் அந்த இளைஞன் வந்து கொண்டிருந்தபோது, 'புலி, புலி' என்று பெண்கள் சிரித்துக் கூவும் சப்தம் கேட்டது.

பெண்கள் வேங்கைப் பூக்களைப் பறித்து விளையாடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அந்த இடத்திலிருந்து சற்று ஒதுங்கி, வஞ்சியை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான் அவன்.

ஆனால் சட்டென்று 'புலி, புலி' என்ற மகிழ்ச்சிக் குரல் அவலக்குரலாக மாறியதும், குதிரையைத் திருப்பி, குரல் வந்த பக்கம் விரட்டினான்.

அவன் அங்கே வந்தபோது, தலையைச் சிலுப்பிக் கொண்டு வாலை முறுக்கி, பெண்கள் மேல் பாய ஆயத்தமாயிருந்த புலி, குதிரையின் காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பி, அந்த இளைஞனைப் பார்த்தது.

அவன் குதிரையிலிருந்து இறங்கி, இடுப்பிலிருந்த வாளை உருவும்போது, கண்சிமிட்டும் நேரத்துக்குள், சரேலென்று புலி பாய்ந்து அவனை அடித்துக் கீழே தள்ளி விட்டது. வாள் ஒரு பக்கமும் அவன் ஒரு பக்கமுமாக விழ்ந்தார்கள். சட்டென்று சுதாரித்து எழுந்துகொண்ட இளைஞன், இப்போது தன் கைகளையே ஆயுதமாக வைத்துக்கொண்டு புலியுடன் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

ஓங்கி அடிக்கும் புலியின் முன்னங்கால்களிலிருந்து லாவகமாகத் தப்பிக்கொண்டே, அதன் கழுத்தைப் பிடித்து மடக்க முயற்சி செய்தான். புலியின் நீண்ட நகங்கள் அவன் உடலில் பல இடங்களில் தாக்கிக் கிழித்து இரத்தம் கசிந்தது.

அவன் கீழே உருண்டு நகர நகர, விடாமல் ஓங்கியடித்துக் கொண்டேயிருந்தது புலி. சிறிது சிறிதாக வாள்கிடந்த பக்கம் நகர்ந்துகொண்டே வந்தான் இளைஞன். வாள் கைக்கு எட்டும் தூரத்தில் வந்த போது, வாயைப் பிளந்தவாறு தாவிய புலியின் வாயைப் இருகைகளாலும் பிளந்தபடியே பிடித்துக் கொண்டு, அதை மல்லாக்கப் புரட்டிவிட்டான்.

வலது காலால் அதன் கழுத்தை அழுத்திக் கொண்டு, இடதுகாலால் பின்தொடைப் பக்கம் மிதித்துப் புலியை அசையமுடியாதவாறு பார்த்துக் கொண்டான் அவன்.

வலக்கைக்குள் புலியின் முன் கால்களைப் பிணைத்துப் பிடித்துக்கொண்டு, இடதுகையை நீட்டி வாளை எடுக்கக் குனிந்தான் இளைஞன்.

தன் பலத்தையெல்லாம் சேர்த்துக்கொண்டு முண்டிப் புரள முயற்சிசெய்தது வேங்கை. ஆனால் அந்த இளைய புலியிடம் அதனுடைய வீரியம் பலிக்கவில்லை. அவனது வலது காலின் அழுத்தத்தில் சிக்கிய அதன் கழுத்து நெரிபட்டு, இறுதி மூச்சுவிட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. புரள முடியாமல் சற்றே அது திகைத்திருந்த நொடிப் பொழுதில், கீழே கிடந்த வாளை இடது கையால் எடுத்துக் கொண்டுவிட்டான் இளைஞன்.

அவனுடைய வீரத்தை அந்தப் பெண்களுக்கு நிதர்சனமாகக் காட்டிவிட்டு, புலி வீரசுவர்க்கம் புகுந்தது.

பயத்தில் அரண்டு போய், சப்த நாடியும் ஒடுங்கிப் போய், தூரத்தில் நின்று கொண்டிருந்த பூவையருக்கு இப்போதுதான் உயிர் திரும்பிவந்தது.

உடம்பெல்லாம் இரத்தம் பீரிடக் களைத்து நின்ற இளைஞனைப் பார்த்துக் கண் கலங்கினார்கள் அவர்கள்.

இயல்பாகச் சிவந்திருந்த அந்த அழகிய உடலை, ஆங்காங்கே கசிந்த இரத்தம் மேலும் சிவப்பு வண்ணமாக்கிக்



காட்டியது. கரிய சுருண்ட மயிர்க் குழல்கள் கீழே இறங்கி விளையாடிய நெற்றியில் ஒரு மூலையில் மட்டும் சிறிது சிராய்ப்பு ஏற்பட்டியிருந்தது. எடுப்பான அழகான மூக்கும், அரும்பியும் அரும்பாமலும் கருந்தடமாய்க் காட்சியளித்த மீசையும் துடிப்பான இறுகிய சிவந்த உதடுகளும் சீரான முத்துப்பல் வரிசையுமாய் அழகு பொங்கிய அவன் முகத்திலே நல்லவேளையாக எந்தக் காயமும் படவில்லை.

அந்தப் பெண்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடி, தங்களுக்குத் தெரிந்த பச்சிலைகளைத் தேடிப் பறித்து வந்து, சாறு பிழிந்து, புண்களில் தடவினார்கள்.

அவர்களில் ஒருத்தி தன் மேலாடையின் ஓரத்தில் கிழித்து, அவனது தோளிலிருந்த பெரிய புண்ணில் பச்சிலையை வைத்துக் கட்டுப் போட்டாள்.

"ஐயையோ!... இந்தப் புண்ணுக்காக உங்கள் ஆடையைக் கிழித்துவிட்டீர்களே?" என்று படபடத்தான் இளைஞன்.

"உயிரையே இழக்க இருந்த எங்களைக் காப்பாற்றிய உங்களுக்கு, உடையின் ஓரத்தைக் கிழித்துக் கட்டுப் போடுவது பெரிய காரியமா? புலியை வென்ற பெரும் வீரர் மட்டுமல்ல நீங்கள்; கோழை பலமுறை சாகிறான் என்று சொல்வார்களே, அதுமாதிரி, புலியைப் பார்த்ததுமே நாங்கள் செத்து விட்டோம். செத்துப் போன எங்களுக்கு மறுபிறவி கொடுத்த தெய்வம் நீங்கள்!" என்று நன்றியுணர்வு விகசிக்க, சிரித்துக் கொண்டே, அவன் உடலில் காயங்களுக்குப் பச்சிலை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய தோழிகள், பச்சிலைகளைத் தேய்த்துச் சாறும் இலையுமாக அவளிடம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கென்னவோ, அந்தப் புலி உங்களைக் கொன்றிருக்கும் என்று தோன்றவில்லை..." என்றான் அவன்.

"அப்படியானால், எங்களைப் பார்த்துப் பேசி விட்டு அந்தப் புலி போயிருக்கும் என்கிறீர்களா?" என்று குறும்பாகக் கேட்டாள் அவள்.

"ஆமாம். அது தமிழ்நாட்டுப் புலியாயிற்றே, உங்களுடைய அற்புதமான இளம் அழகைப் பார்த்து ரசித்து விட்டுத் திரும்பிப் போயிருக்கும்!" என்று இளைஞன் சொன்னதும், அவளுடைய சிவந்த கன்னம் மேலும் செவ்வண்ணத்தால் கனிந்து மின்னியது.

"ஒருவேளை அந்தப் புலி பசியோடிருந்திருந்தால்?... பசி வர, பத்தும் பறந்து போய் விடும் என்பார்களே, பசியோடிருக்கிறவனுக்கு அழகு ரசனை இருக்குமா?" என்று, புலியை மடக்கிய அவனை மடக்கினாள் அவள்.

அவள் வெறும் அழகி மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொண்ட அவன், "அது சரி, நீங்கள் யார் என்று தெரிந்துகொள்ளலாமா?" என்று விசாரித்தான்.

அவனுடைய உடலில் இருந்த காயங்களுக்குப் பச்சிலை தடவி முடித்த அவள், "என் பெயர் தாமக் கண்ணி... அதோ, அந்தக் கொடுங்கோளூர் எங்கள் ஊர். புலவர் கழார்த்தலையாரின் பேத்தி நான்..." என்றதும், "ஓ! அதுதான் உங்கள் பேச்சிலே சொல் நயமும் பொருள் நயமும் துள்ளியாடுகின்றன!" என்று சிரித்தான் அவன்.

"உள்ளத்துள் உள்ளது கவிதை... ஆகவே உள்ளத்துக் குள்ளிருந்து வருவதெல்லாம் உண்மையில் கவிதைதானே?" என்று ஏதோ உள்ளர்த்தத்தோடு சொல்லிச் சிரித்த தாமக் கண்ணி, "இதோ, இவள் அறக்கோதை... இவள் செல்வி... இவள் இன்பவல்லி..." என்று தன் தோழிகளை அறிமுகப் படுத்தினாள்.

"அடடே! என்ன ஆச்சரியம், பாருங்கள்! உங்கள் தோழிகளின் பெயர்களைக் கவனித்தீர்களா?" என்று



10863
3288381

அவன் கேட்டதும் தாமக்கண்ணி ஏதும் புரியாமல் நின்றாள்:

"இந்தப் பெயர்களில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?"

"நீங்கள், கவிதை பாடும் புலவர்; கவிதை பாடுவதற் குரிய பொருள்கள் என்னென்ன? அறம், பொருள், இன்பம் தானே?... உங்கள் கவிதைக்கு, உங்கள் தோழிகளே பொருள்களாயிருப்பார்கள் போலிருக்கிறது!" என்று அவன் சொன்னதும், கண்ணி வியந்து நின்றாள்.

இந்த இளைஞன், வெறும் வீரர் மட்டுமல்ல என்பதைப் புரிந்து கொண்டாள் அவள்:

"அது சரி, வீடு என்னும் நான்காவது பொருளை விட்டுவிட்டீர்களே?"

"அதை வயதான முதுமைக் காலத்தில் அல்லவா கவனிக்க வேண்டும்?" என்று அவன் சிரித்ததும், எல்லோருமே சிரித்து ரசித்தார்கள்.

"அது சரி, நீங்கள் யார் என்று சொல்லவே யில்லையே?" என்று கேட்டாள் கண்ணி.

"என் பெயர் குமரன். சோழ நாட்டைச் சேர்ந்தவன். எல்லையில் இருக்கும் பொதினி மலைக்குப் பக்கம்தான் எங்கள் ஊர்..."

"இங்கே, சேர நாட்டுக்கு என்ன வேலையாக வந்தீர்கள்?"

"நான் வந்த வேலையைச் சொன்னதும் நீங்கள் கேலி செய்து சிரிக்கக் கூடாது..." என்று தயங்கினான் குமரன்.

"சிரிப்பதற்கென்ன இருக்கிறது? எந்த வேலையா யிருந்தால் என்ன, எல்லா வேலையும் கௌரவமானது தானே?"

''உங்களைப் போல், கவிதை எழுத வேண்டும் என்று எனக்குள் ஓர் ஆசை. அதற்குப் பயிற்சி பெறத்தான் சேரநாட்டுக்கு வந்திருக்கிறேன்.''

''என்னைக் கேட்டால், உங்களைப் போன்ற ஒரு சிறந்த வீரர், நல்ல படைப் பயிற்சி பெற்று, ஒரு நாட்டுக்கே தளபதியாக முன்னேறுவதுதான் சிறந்தது என்பேன். வீரம்தான் ஓர் ஆணுக்கு முக்கியமான பண்பு...''

''வாழ்க்கைக்கு, வீரம் மாதிரி முரட்டுப் பண்பு இருந்தால் மட்டும் போதுமா? கவிதையுணர்வு மாதிரி மென்மைப் பண்பும் வேண்டும் அல்லவா?''

''இப்பொழுதே நீங்கள் பாதிக் கவிஞராகி விட்டீர்கள்!'' என்று சிரித்த கண்ணி, ''கவிதைப் பயிற்சி பெறுவதற்காக நீங்கள் சேர நாட்டுக்கு வர வேண்டுமா? சோழ நாட்டிலே புலவர்களே இல்லையா?'' என்று கேட்டாள்.

''சோழ நாட்டிலே உறையூருக்கோ புகாருக்கோ போவதைவிட, இங்கே வஞ்சி எங்களுருக்கு அருகிலுள்ள இடமல்லவா?''

''அப்படி என்றால், என் தாத்தாவிடமே நீங்கள் பாடம் படிக்கலாமே?'' என்று விழிகள் பளபளக்க, ஆவலுடன் கேட்ட கண்ணிக்கு, சட்டென்று முகத்தில் அடித்தது போல் பதில் சொல்ல, குமரனுக்கு மனம் வரவில்லை;

''ஆனால், என் ஆசிரியர் ஆணைப்படி, வஞ்சிக்குப் போவதுதான் மரியாதை... மேலும், அவருக்கு வஞ்சியிலுள்ள கருங்குழலாதனார், மிகவும் நட்புள்ளவராம்; அதனால் அவருக்குக் கடிதம் கொடுத்து என்னை அனுப்பியிருக்கிறார்...''

''சரி, உங்கள் ஆசிரியர் ஏதோ காரணத்தினால் கருங்குழலாதனாரிடம் உங்களை அனுப்பியிருக்கலாம்.



ஆசிரியர் கட்டளையை மீறுவது அழகல்ல... கருங்குழலாதனாரை எனக்கு நன்றாகத் தெரியும்; என் தாத்தாவுக்கும் அவர் நெருங்கிய நண்பர்தான். அவர் நல்ல புலவர் மட்டுமல்ல, திறமையான ஆசிரியருங்கூட... சேர நாட்டு இளவரசிக்கு, அவர்தான் தமிழாசிரியர்...''

''அரச குடும்பத்தினருக்கு மட்டும்தான் பாடம் சொல்லிக் கொடுப்பாரா? என் மாதிரி சாதாரண ஆட்களுக்கு—?''

''படிப்பிலே, அரசர் என்ன, சாதாரண ஆள் என்ன? எல்லோரும் சமம்தான். இளவரசிகூட, அவருடைய வீட்டுக்குப் போய்த்தான் பாடம் படித்துக் கொள்கிறாள்.''

''ஏன், இளவரசி நினைத்தால் ஆசிரியரை அரண்மனைக்கு வரவழைத்திருக்கலாமே?''

''அது இளவரசிக்குப் பெருமையாயிருக்கலாம்; ஆனால் ஆசிரியருக்கு—? உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்பதுதான், கல்வி; கற்றவரை மதிப்பவனுக்குத்தான் கல்வியின் சிறப்பு வந்து சேரும்... இளவரசி, கல்வியையும் ஆசிரியரையும் மதித்து நடப்பவள்.''

''இளவரசியைப்பற்றி இவ்வளவு விளக்கமாகச் சொல்கிறீர்களே, உங்களுக்கு இளவரசியைத் தெரியுமா?'' என்று கேட்டான் குமரன்.

''தன் தோழியைப்பற்றி ஒருத்திக்குத் தெரியாதா, என்ன?... சரி, அந்த விவரம் எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். வாருங்கள், இருட்டப் போகிறது... வீட்டுக்குப் போவோம்...'' என்று எழுந்தாள் தாமக் கண்ணி.

''ஆம்...'' கண்ணி! புறப்படு... இருட்டுவதற்குள் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும்...'' என்று தோழிகள் அவசரப்படுத்தினார்கள்.

"நீங்கள் புறப்படுங்கள்... நான் வஞ்சிக்குப் போக வேண்டும். நான் போய் வருகிறேன்," என்று நகர்ந்தான் குமரன்.

"நன்றாக இருக்கிறது!... உடம்பெல்லாம் இத்தனை புண்களை வைத்துக்கொண்டு, எப்படி வஞ்சிக்குப் போக முடியும்? எங்கள் வீட்டிலே தங்கி, புண்ணெல்லாம் ஆறிய பிறகு, வஞ்சிக்குச் செல்லலாம். அதற்குள்ளே கவிதைச் சரக்கு ஒன்றும் தீர்ந்துபோய்விடாது!" என்று சிரித்தாள் கண்ணி.

"எங்கள் உயிரைக் காப்பாற்றிய நீங்கள், எங்கள் ஊருக்கு வந்துவிட்டுத்தான் போகவேண்டும்," என்று மற்ற பெண்களும் வற்புறுத்திக் கெஞ்சினார்கள்.

அவன் உடலில் உள்ள காயங்களும் இப்போது கொஞ்சங் கொஞ்சமாக வலிக்கத் தொடங்கின. வஞ்சிக்குப் போய் ஆசிரியர் வீட்டில் காயங்களுக்கு மருந்துபோடும் படியான நிலையில் போகவேண்டாம் என்று நினைத்தான் அவன்.

குதிரை பின்தொடர்ந்துவர, குமரன் அந்தப் பெண் களுடன் பேசிக்கொண்டே, கொடுங்கோளூருக்கு வந்தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை, கழார்த் தலையார் சேரமன்னனுக்கு நெருங்கிய தொடர்புள்ள வராக வஞ்சியில் அரண்மனைப் பக்கத்து மாளிகையில் இருந்து வந்ததையும், அவள் இளவரசி சித்ராதேவியுடன் சிறுபிள்ளைப் பிராயத்திலிருந்து தோழியாகப் பழகியதை யும், இப்பொழுது தாத்தாவுடனும் விதவைத் தாயுடனும் வஞ்சியை விட்டுக் கொடுங்கோளூர் வந்து வாழ்வதையும் சுருக்கமாகச் சொன்னாள் கண்ணி.

அரசியலிலிருந்து கழார்த்தலையார் ஏன் விலகி ஒதுங்கி விட்டார் என்பதையும், அவளுடைய தந்தை யார் என்பதை யும் குமரன் குறுக்கிட்டு அவளிடம் கேட்கவில்லை. அவள் சொல்வதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டானே



ஒழிய, அவன் எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை. அவளுடைய குடும்ப விவகாரங்களில் அனாவசியமாகத் தான் உரிமை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஊருக்குள் நுழைந்ததும் மற்ற தோழிகளெல்லாம் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். பக்கத்து வீட்டு இன்பவல்லி தாமக்கண்ணியோடு வந்தாள்.

வெளியே சென்ற கண்ணியை இன்னும் காணோமே என்ற கவலையில், வாசற்படியிலே நின்றுகொண் டிருந்தார் ஒரு முதியவர். தலைமுடியும் தாடியும் போட்டி போட்டுக்கொண்டு நரைத்ததுபோல், வெண்ணிற அலைகளாய் காற்றிலே பறந்துகொண் டிருந்தன. உடலெல்லாம் திரைந்து தளர்வும் நடுக்கமு மாய் வாசல் நிலையின் ஆதரவிலே நின்ற அவரைப் பார்த்ததும் "தாத்தா!" என்று துள்ளிக் குதித்து முன்னே வந்தாள் தாமக்கண்ணி.

அவளுடன் கூடவே வந்த இளைஞனையும் குதிரையை யும் இடுங்கிய கண்களால் கூர்ந்து பார்த்தார் கழார்த் தலையார்.

"தாத்தா! இவர்தான், எங்களைக் காட்டிலே ஒரு புலி யிடமிருந்து காப்பாற்றினார். இவர் வராமலிருந்தால், நாங்கள் எல்லோரும் அந்தப் புலிக்கு இரையாகி யிருப்போம்," என்று கண்ணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே உள்ளேயிருந்து வேகமாக வந்தாள் ஒரு விதவைப் பெண்.

தூசி படிந்த ஓவியம் போல், முகத்தில் திலகமும் கூந்தலிலே மலரும் கையிலே வளையலும் இல்லாமல், முடிக்கப்படாத சிலையாய் நடுத்தர வயதுடைய அவள் "கண்ணி! இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?" என்று கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டே வந்தவள்,

அவளுடன் நிற்கும் இளைஞனைப் பார்த்ததும், தன் முகத்தின் கடுமையைக் குறைத்துக் கொண்டாள்.

''அம்மா!... இவர் இல்லையென்றால் நாங்கள் ஒரேயடியாய் எமலோகம் போயிருப்போம்...'' என்று சிரித்துக் கொண்டே மகள் சொன்னதும், தாய் பதறிப் போனாள்.

''என்னம்மா, என்ன நடந்தது?''

நடந்த நிகழ்ச்சியை விளக்கமாகக் கூறினார்கள் தாமக்கண்ணியும் இன்பவல்லியும்.

கழார்த்தலையார், தன் தளர்ந்த கைகளால் குமரனின் கையைத் தொட்டுப் பிடித்துக் கொண்டார்:

''தம்பி குமரா! நீ காப்பாற்றியது இந்தப் பெண்களுடைய உயிரை மட்டுமல்ல; எங்கள் இருவருடைய உயிரையும் சேர்த்துக் காப்பாற்றியிருக்கிறாய்!... நானும் என் மகள் உத்திரையும் இந்தக் கண்ணிக்காகத்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சோகக் குளிரையெல்லாம் இந்தக் கண்ணியின் அன்பு வெதுவெதுப்பினால்தான் குறைத்துக் கொண்டு வாழ்கிறோம்...'' என்று குரல் தழதழக்கச் சொன்னார் அவர்.

''தம்பி!... நீ செய்த உதவிக்கு எங்களாலே கைம்மாறு செய்யவே முடியாது. காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது என்பார்கள். ஆனால் நீ காலத்தில் செய்த நன்றியே ஞாலத்தை விடப் பெரியது...'' என்று உள்ளம் நெகிழ்ந்து நன்றி சொன்னாள் உத்திரை.

அந்த வீட்டிலே பாசமும் அன்பும் கவிதையுணர்வும் கமழ்வதைக் கண்டு வியப்படைந்தான் குமரன். 'கவிஞன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்றால், கவிஞரின் பேத்தியும் மகளும் கவி பாடுவதில் என்ன ஆச்சரியம்' என்று நினைத்துக் கொண்டான் அவன்.



''ஐயா! நான் என்ன பெரிதாகச் செய்துவிட்டேன்?... இந்தச் சிறியவனை அதிகமாகப் புகழாதீர்கள், ஐயா!... உங்களைப் போன்ற முதிய புலவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்ததற்காக, நான் அந்தப் புலிக்கு நன்றி சொல்ல வேண்டும்!... ஒருவேளை, நான் வராவிட்டால்கூட, உங்கள் பேத்தியே புலியை விரட்டியிருக்கலாம், யார் கண்டது?'' என்று கண்ணியை ஓரக்கண்ணால் பார்த்தபடி சொன்னான் குமரன்.

''இருக்கலாம்... கண்ணியின் இரத்தத்தில் அத்தகைய வீரம் ஓடத்தான் செய்யும்; அந்த வீரத்தை நான்தான் திசைதிருப்பி விட்டிருக்கிறேன்...'' என்ற முதியவரின் கண்கள் எங்கோ சூன்யத்தைப் பார்த்து வெறிப்பதுபோல் இருந்தது. ஏதோ ஒரு சோகச் சித்திரத்தை, தன் நெஞ்சில் மீண்டும் நினைவூட்டிக் கொண்டு வேதனைப்படுகிறார் அவர் என்பதைப் புரிந்து கொண்டான் குமரன்.

''என்ன தாத்தா! புலியோடு சண்டைபோட்டு உடலெல்லாம் ரத்தக் காயங்களோடு நிற்கிறார் இவர், நீங்கள்பாட்டுக்குப் பேசிக் கொண்டேயிருக்கிறீர்களே?'' என்று பேத்தி கடிந்து கொண்டதும், கழார்த்தலையார் தன் நினைவுக்கு மீண்டு வந்தார்:

''ஓ!... ஆமாம்... உத்திரை! நீ போய் நம் ஊர் மருத்துவரைக் கூட்டிக் கொண்டு வா...'' என்றதும் உத்திரை புறப்பட்டாள்.

''வேண்டாம், ஐயா!... அப்படியொன்றும் பெரிய காயங்கள் இல்லை...'' என்று மறுத்தான் குமரன்.

''இல்லை, அம்மா! காயங்கள் நிறைய இருக்கின்றன... நீ போய் மருத்துவரைக் கூட்டிக் கொண்டு வா...'' என்று தாயை அனுப்பிவிட்டு, ''இதோ இந்தக் கட்டிலிலே படுத்துக் கொள்ளுங்கள்...'' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினாள் கண்ணி.

இன்பவல்லி, கட்டிலைச் சீர்ப்படுத்தி, குமரனை இருக்கச் செய்தாள். கழார்த்தலையார், அவன் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு, பரிவோடு அவனது காயங்களைப் பார்த்து மென்மையாகத் தடவிக் கொடுத்தார்.

''ஐயா! வஞ்சியில் உள்ள கருங்குழலாதனாரிடம் தமிழ் படிக்கப் போகிறேன். அவருக்கு, என் ஆசிரியர் செங்கண்ணனார் கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறார். கருங்குழலாதனாரிடம், கவிதைபாடப் பயிற்சி பெற வேண்டும் என்று எனக்கு ஆசை...'' என்று தன் வருகையின் காரணத்தைக் கூறினான் குமரன்.

''அப்படியா? மிக்க மகிழ்ச்சி... உன்னைப்போல் ஒரு சிறந்த வீரன், புலவனாகவும் விளங்கிப் புகழ் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்... சரி, குமரா! நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய்; அதிகம் பேசாதே. அப்புறம் பேசிக் கொள்ளலாம்...'' என்று அன்போடு அவன் வாயை அடக்கிவிட்டு, உள்ளே திரும்பி, ''கண்ணி!... கண்ணீ!!'' என்று கூப்பிட்டார் அவர்.

''இதோ வந்துவிட்டேன், தாத்தா!... எதற்குக் கூப்பிட்டீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே, கையில் ஒரு பாத்திரத்துடனும் குவளையுடனும் வந்தாள் கண்ணி.

''இவருக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்கத்தான் கூப்பிட்டேன்...''

''இதோ, [1]அக்காரடலை செய்து கொண்டுவந்திருக்கிறேன்...'' என்றாள் கண்ணி. என் என்னும் முன்பே எண்ணெயாக நிற்கும் பேத்தியின் புத்திசாலித்தனத்தைக் கண்டு பெருமிதமடைந்தார் முதியவர்.

அக்காரடலையைக் குவளையில் ஊற்றிக் குமரனிடம் கொடுத்தாள் கண்ணி.

---

1. அக்காரடலை— சர்க்கரை போட்டு ஆக்கப்பட்ட சுவை நீர்.



''ஆகா! மிகவும் அருமையாக இருக்கிறதே!... கண்ணிக்குச் சமையல்கலையும் தெரியுமா?'' என்று அக்காரடலையைச் சுவைத்துக் கொண்டே கேட்டான் குமரன்.

''சமையல் மட்டுமா? கவிதை, இசை, நடனம் எல்லாம் தெரியும்...'' என்றாள் இன்பவல்லி.

''நடனமும் தெரியுமா?'' என்று வியப்புடன் கேட்டான் அவன்.

''ஆமாம்... இன்னும் சில நாட்களில் அரங்கேற்றம் நடத்தலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்... என் பேத்தியை ஒரு சாதாரணப் பெண்ணாக நான் வளர்க்க விரும்பவில்லை. ஒரு பல்கலைச் செல்வியாக அவளை நான் உருவாக்க முயற்சி செய்து வருகிறேன்...'' என்றார் கழார்த்தலையார் பெருமையாக.

அப்போது உத்திரையும் மருத்துவரும் உள்ளே வந்தனர். குமரனின் காயங்களைக் கழுவித் தூய்மைசெய்து புது மருந்து வைத்துக் கட்டினார் மருத்துவர்:

''நீங்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முழு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அதிகமாக அசையவோ நகரவோ கூடாது. மூன்றாம் நாள் காயங்களின் கட்டுக்களை அவிழ்த்து விடலாம்...'' என்று சொல்லிவிட்டுச் சென்றார் அவர்.

குமரனைக் கட்டிலில் படுக்கவைத்தாள் கண்ணி: ''இப்போது வலி எப்படியிருக்கிறது?'' என்று பரிவோடு கேட்டாள்.

''ஏம்மா கண்ணி!... குமரனுக்கு ஒரு நடனம் ஆடிக் காட்டேன்?... நடனம் பார்த்துக் கொண்டிருந்தால் வலி தெரியாது...'' என்று யோசனை சொன்னார் கழார்த்தலையார்.

''ஆம், கண்ணி!'' என்று உத்திரையும் ஆமோதித்தாள். வெட்கத்தோடு உள்ளே ஓடிய தாமக்கண்ணி, காலில் சலங்கை கட்டிக்கொண்டு திரும்பிவந்தாள்.

மின்னல், வானின் வழியே நெளிந்து அழகாய் அசைவது போல, கண்ணியின் பொன்னுடல் நெளிந்து அபிநயங்கள் வடிந்தன. கால்களின் லாகவமான துள்ளலையும் கைகளின் குழைவான நெளிவுகளையும் விரல்களின் ஓவியமான துடிப்புக்களையும் முகத்தின் பொருள் உணர்த்தும் பாவங்களையும் விழிகளின் ரஸனையான வீச்சுக்களையும் பார்த்த போது— கடவுள் பெண்ணுக்காகவே நாட்டியத்தைப் படைத்தானா அல்லது நடனத்துக்காகவே பெண்ணைப் படைத்தானா என்று வியந்தான் குமரன்.

தாமரைமலர் போன்ற பாதங்கள் அங்குமிங்கும் ஆடி ஓடி எழும்பிப் படிந்து இசை எழுப்புவதைப் பார்த்தவர்கள், அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்! செங்காந்தட்பூ மலர்ந்ததுபோல், விரல்கள் விரிந்து கூம்பிப் பேசுவதைப் பார்த்தவர்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்! குவளைப்பூவை வெட்கச் செய்யும் விழிகளின் அசைவுகளிலே கவிதையைப் பார்த்தவர்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்!...

இப்படி ஒவ்வொருவரும், எல்லாவற்றையும் ஒருசேரப் பார்க்க முடியாமல், 'இதைக் காண இரு கண்கள் போதாது; ஆயிரம் கண் இருக்கக் கூடாதா?' என்று ஏங்கினார்கள்.

மை தீட்டிய எல்லைகளுக்கிடையே சுழன்ற கரு விழிகள், எல்லையில்லாத கடல் சூழ்ந்த உலகத்தையே ஆணைக்கு அடிபணியச் செய்யும் சக்தியைக் காட்டின. பிறை நெற்றியின் அடிப்புறத்தில் நின்ற புருவங்கள், 'எங்கள் முன் எந்த வாள் நிற்க முடியும்' என்று கேட்டுச் சிரித்து, வளைந்து வெற்றி கொண்டாடின. முகத்தின்



அபிநயங்களைப் பார்ப்பதற்காக, பின்புறத்திலிருந்து கருநாகப் பின்னல் அடிக்கடி முன்னே வந்து சென்று கொண்டிருந்தது.

நடனம் ஆடிக்கொண்டிருந்தாள் தாமக்கண்ணி...

ஆட்டத்தில் தன்னை மறந்திருந்த குமரனுக்கு, தான் இருக்குமிடம், சூழ்நிலை எல்லாம் மறந்து போய் விட்டன... நடனம் ஒரு தெய்வீகக் கலை என்பது எவ்வளவு உண்மை? எங்கோ ஒரு இன்பமயமான உலகிலே, அழகுக் கலைகளெல்லாம் சூழ, நுண்மையான லேசாகிவிட்ட மன உணர்வுகளுடன் நடனத்தை ரசிக்க முடிவதை உணர்ந்தான் குமரன். வஞ்சகம், சூது, சூழ்ச்சி, கொடுமை நிறைந்த இவ்வுலகத்திலிருந்து விடுபட்டு, எங்கும் ஒரே இன்பமயமான அமைதி நிறைந்த கற்பனையுலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அந்த உலகிலே தாமக்கண்ணியின் நடனம் மட்டுமே தெரிந்தது...

அமைதியான சூழ்நிலையிலே நடனத்தை முடித்தாள் கண்ணி. கற்பனா உலகிலே உலவிக் கொண்டிருந்த குமரன், இந்த உலக நினைவுக்கு வர, பல வினாடிகள் ஆகியிருக்கும். ஆனால் திடீரென்று எழுந்த கைதட்டல் ஒலி, அவனை விரைவில் இந்த உலகத்திற்கு இழுத்து வந்து விட்டது.

எல்லோரும் திடுக்கிட்டு, கைதட்டல் சப்தம் வந்த திசையை நோக்கினர்.

# 18

**வேண்**மாடத்தில் தங்கியிருந்த இருங்கோவும் அந்துவனும், பாண்டியநாடு சென்றவர்களின் வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சோழநாட்டு உரிமையை இருங்கோவுக்குப் பெற்றுத் தரச் சேரன் கொள்கையளவில் ஒப்புக் கொண்டு விட்டாலும், அந்த முயற்சிக்குப் பாண்டியனும் உதவினால்தான் சுலபமாகச் சோழப்படையைத் தோற்கடிக்கலாம் என்று சேரன் நம்பினான். ஆகவே சேரனும் பாண்டியநாட்டுத் தூதின் முடிவை அறிய ஆவலோடிருந்தான். மதுரை சென்றவர்கள் திரும்பி வரும் வரை, இருங்கோவை விருந்தினர் மாளிகையிலேயே தங்கியிருக்கும்படி சொன்னான் மன்னன். அவனும் மிக்க மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டான்.

அவனுடைய மகிழ்ச்சிக்கு வேறொரு முக்கியக் காரணமும் இருந்தது: சித்தாதேவியைப் பார்த்ததிலிருந்து இருங்கோவுக்கு அரசியல் பிரச்னை இரண்டாம் பட்சமாகப் போய்விட்டது! சோழ நாட்டின் சிம்மாசனத்தில் அமர்வதைவிட, தேவியின் இதயச் சிம்மாசனத்தில் அமர்வது முக்கியம் என்று நினைக்கத் தொடங்கிவிட்டான். சேர இளவரசியின் உள்ளத்தை எப்படிக் கவர்வது என்று சிந்தித்துக் கொண்டேயிருந்தான். செக்கு மாடுபோல், எந்த விஷயத்தை யோசித்தாலும் கடைசியில் சித்தாதேவியைச் சுற்றியே அவனுடைய சிந்தனை சுழன்றது.

அவள் தன் பட்டத்தரசியாகச் சோழ சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்திருப்பது போல் கனவு கண்டபோது, அவனுடைய இரட்டை லட்சியங்களும் ஒரே சமயத்தில் நிறைவேறுவதை உணர்ந்து களிப்பில் மூழ்கினான்.



அவளை முதலில் ஆற்றங்கரையில் குளிக்கும்போது சீண்டியதை அவள் தந்தையிடம் சொல்லாதது அவனுக்கு வியப்பாயில்லை; ஏனென்றால் அதை அவனே ஓரளவு யூகித்திருந்தான். தந்தைக்குத் தெரியாமல், வெகுதூரம் பாதுகாப்பில்லாமல் போய் நீராடியிருக்கிறாள்; ஆகவேதான் அந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சேரனிடம் புகார் செய்யவில்லை என்று ஊகித்துக் கொண்டான். ஆனால் அன்று அரசன் ஆடகமாடத்துக்குப் புறப்பட்டுச் சென்றவுடன், தனியே இருந்த அவளிடம் சிறிது 'சுதந்திரமாகப்' பழக அவன் முயன்றபோது, கன்னத்தில் அறைந்தாளே, அந்த நிகழ்ச்சியையும் தந்தையிடம் சொல்லவில்லை என்பதை அறிந்தபோது, ஒருவேளை, தன்னுடைய முயற்சிக்குப் பயன் கிடைக்குமோ என்று சபலப்படத் தொடங்கினான் இருங்கோ.

ஆனால் அந்துவனுக்கு அந்த நம்பிக்கை இல்லை. இருங்கோவைப் பார்க்கும்போதெல்லாம் அவளுடைய முகத்தில் வெடிக்கும் வெறுப்பும் அலட்சியமும் அவனுக்கு நன்கு புரிந்தது:

"எனக்கென்னவோ, உன் இரட்டை லட்சியமும் ஒன்றாக நிறைவேறும் என்று தோன்றவில்லை..." என்று முணுமுணுத்தான் தோழன்.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது, அந்துவா! சில பெண்கள் இப்படித்தான் முதலில் வெறுப்பது போல் நடப்பார்கள். பிறகு, பழகப் பழக, குணத்தைப் புரிந்து கொண்டு காதலிப்பார்கள்!..."

'உன்னோடு பழகப் பழகக் குணம் புரிந்துவிட்டால், பிறகு எப்படிக் காதலிப்பார்கள்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்ட நண்பன், "உஷ்!... மெதுவாகப் பேசு!... சேர நாட்டிலே காற்றுக்கூட ஒற்றர் வேலை பார்க்கலாம், யார் கண்டது?" என்று மெதுவாக

எச்சரித்தான். ஆனால் அது இருங்கோவின் காதில் விழவில்லை.

"அந்துவா! எறும்பு ஊர, ஊரக் கல்லும் தேயும் என் பார்கள். நான் அந்த இளவரசியிடம் கெஞ்சக் கெஞ்ச, கடைசியில் அவள் மனம் இரங்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். மடல் ஏறுவதன் அர்த்தம் தெரியுமா உனக்கு?... 'தன்மேல் கொண்ட காதலுக்காக ஒருவன் இப்படி உடலெல்லாம் ரத்தம் சொட்டச் சொட்ட, வெட்கத்தை விட்டு ஊர்வலம் வருகிறானே' என்று இரக்கப் பட்டு, கடைசியில் அந்தக் காதலி அவனைத் திருமணம் செய்துகொள்வதுண்டு அல்லவா?... அது ஏன்? இரக்கமும், காதல் ஏற்படுவதற்கு ஒரு காரணம்தான்!..." என்று உறுதியாக அழுத்திச் சொன்னான் இருங்கோ.

"அந்துவா! நம் நாட்டிலே எத்தனையோ கலைஞர் கள் இருக்கிறார்களே, அந்தச் சிற்பிகள், ஓவியர்கள், கவிஞர்கள் அத்தனைபேரின் கற்பனைக்கும் அப்பாற் பட்ட அழகி சிந்தாதேவி... அந்த அற்புத அழகின் முன்னே ஒரு வீரன் அடிபணிந்து கெஞ்சிக் கிடப்பது கூட ஒரு கௌரவம்தான்!... இப்போது ரோம் சக்கிரவர்த்தியா யிருக்கின்ற அகஸ்டஸின் எதிரி ஆன்டனி, கிளியோபாட் ராவுக்காகத் தன் சாம்ராஜ்யத்தையே இழந்துவிட்டார் என்று சொல்வார்கள்; சிந்தாதேவி மாதிரி அழகிக்காக, ரோமை விடப் பெரிய சாம்ராஜ்யத்தையே இழக்கலாம்!" என்று தன்னை மறந்து அழகை ஆராதனை செய்து கொண்டிருந்தான், காதல் சாம்ராஜ்யம் மட்டுமே கண்ட இருங்கோ.

அப்போது கீழேயிருந்து ஒரு பாட்டு, காற்றிலேறி மேலே வந்தது...

'பொன்னிலங்கு பூங்கொடி! பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்...'



பெண்கள் கூட்டமாய்ப் பாடும் கந்துகவரிப் பாட்டு,[1] மென்மையாக வேண்மாடத்தின் மாடிக்குத் தவழ்ந்து வந்தது.

பாட்டு வந்த பக்கம் நடந்து, மாடியிலிருந்து பார்த் தார்கள் இருவரும்.

கீழே, தோட்டத்தில் ஓர் [2] இலவந்திகையின் அருகே, சிந்தாதேவியும் தோழிகளும் கூடிப் பந்தடித்து விளை யாடிக் கொண்டிருந்தார்கள்.

நட்சத்திரக் கூட்டத்தினிடையே பால் ஒளி பாய்ச்சும் நிலவு போல, தோழிகளின் நடுவிலே சொர்ணச் சிலை ஒன்று உயிர் பெற்றது போன்று, துள்ளித் துள்ளிப் பந்தாடிக் கொண்டிருந்தாள் தேவி. மேகம் போல் கறுத்துத் திரண்டிருந்த கருங்கூந்தல், துள்ளும் சமயத்தில் கலைந்து எழும்பி அவளது முழுமதி முகத்தை மறைக்க, அதைத் தன் மலர்க்கைகளால் விலக்கியவாறு, உடலின் மென்தசைகளெலாம் அழகாகக் குலுங்கி அசைய, ஆடிக் கொண்டிருந்தாள் அவள். பொற்றட்டிலே வைத்த வெண்முத்துக்கள் போல், அவள் முகத்தில் பூத்திருந்த வியர்வைத் துளிகள், அந்த அழகு முகத்தைப் பிரிய மனமில்லாமல், அங்கேயே காய்ந்து கலந்து சங்கமமாகிக் கொண்டிருந்தன. ஆண்கள் யாரும் பார்க்கவில்லை என்ற நினைப்பில், சர்வ சுதந்திரமாகத் துள்ளிக் குதித்து எல்லோரும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

சிந்தாதேவி குதித்து ஆடும் அழகையும் ஆட்டத்துக் காகக் குலுங்கும் உடலழகையும், ஆட்டத்தின் சுவாரஸ்

---

1. 'கந்துகவரி' என்பது பெண்கள் பந்தடித்து விளையாடும் போது பாடும் பாட்டு.
(சிலப்பதிகாரம்— 29 : 20)

2. இயந்திர வாவி உள்ள ஒரு தடாகம்; அரண்மனைத் தோட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.

யத்தில் கலைந்திருக்கும் ஆடைகளின் மறைப்பிலிருந்து வெளிப்படும் உள் அழகுகளையும் பார்த்தவாறு, வைத்த கண் வாங்காமல் மாடியில் நின்று கொண்டிருந்தான் இருங்கோ.

பெண்கள் தனியே விளையாடுவதை மறைந்திருந்து பார்ப்பது கண்ணியக் குறைவு என்று அவனுக்கு முதலில் ஒரு நினைவு குறுக்கிட்டாலும், காமம் கண்ணியத்தை விரட்டியடித்து விட்டது.

''சேர நாட்டிலே, சுவர்களுக்கும் கண் இருக்கலாம். ஆகவே கவனமாயிருக்க வேண்டும்,'' என்று மெதுவாக எச்சரித்தான் அந்துவன். அந்த எச்சரிக்கை அர்த்தம் உள்ளதுதான் என்பது அடுத்த சில வினாடிகளில் நிருபணமாயிற்று.

விளையாடிக் கொண்டிருந்த இளவரசியிடம் ஒருத்தி ஓடிவந்து ஏதோ மெதுவாகச் சொல்ல, சட்டென்று தலை நிமிர்ந்து பார்த்தாள் அவள். வேண்மாடத்தின் மேலே நின்று கீழே பார்த்துக் கொண்டிருந்த இருங்கோவைக் கண்டு திடுக்கிட்ட அவள், அவனை எரித்து விடுவது போல் பார்த்துவிட்டு, அங்கிருந்து தோழிகளுடன் வெளியேறினாள்.

இருங்கோ சேர நாட்டுக்கு வந்ததிலிருந்து, தந்தையிடம் அரசியல் விஷயங்கள் பேசுவதை விட, தன்னிடம் அதிகமாகப் பேசுவதாகத் தோன்றியது அவளுக்கு.

இப்படித்தான் முந்திய நாளும், அவள் தோட்டத்தில் பறவைகளை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஆண்புறா ஒன்று தலையைத் தாழ்த்திக் கொண்டு குடுகுடு என்று பெண்புறாவைச் சுற்றிச் சுற்றி ஓடுவதையும், பெண்புறா தலையைச் சாய்த்தவாறு கடைக்கண்ணால் 'கொல்வதுபோல்' பார்த்தபடி, குறுக்காக நடந்து ஒயிலாகத் திரும்பி, மூக்கைத் தரையில் தட்டிக்



குறிப்பாக நோக்குவதையும், பிறகு இரண்டும் அருகே வந்து ஒன்றையொன்று அலகால் அன்போடு கொத்தி விளையாடுவதையும் அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது, அங்கே எப்படியோ இருங்கோ வந்து விட்டான்.

அவள் வேடிக்கை பார்த்ததிலே ஏதோ ஓர் ஆழ்ந்த ஏக்கப் பார்வை பொதிந்திருப்பது போல, அவன் கற்பனை செய்து கொண்டான்:

''இளவரசி! எந்த உயிருக்கும் இணையும் துணையும் தேவை என்பதை இறைவன் எவ்வளவு அழகாக நமக்குக் காட்டுகிறார், பார்த்தீர்களா?'' என்று அவன் 'வேதம் ஓதிய'தும், சட்டென்று திரும்பி வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்:

''உண்மைதான்; ஆனால் இணைவதெல்லாம் துணை என்று சொல்ல முடியாது; துணை என்று வருவதெல்லாம் இணையாகும் தகுதி பெற்றிருக்காது. அதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்,'' என்று கடுமையாகச் சொன்னாள் தேவி.

ஆனால் வெட்கமறியாத ஆசையோடு நின்றவனால், அந்த நுட்பப் பொருளை அறிந்துகொள்ள முடியுமா?

''இளவரசி! அரசருக்கு ஒரே கவலை: தன் செல்வ மகளுக்கு ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்து மணம் செய்விக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அவருடைய லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு ஒரு மாபெரும் வீரன் மருமகனாக வந்தால், அவருக்கு மிகவும் துணையாக இருக்கும். அதை நீங்கள் நினைவு வைத்துக் கொள்வது நல்லது,'' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வீர முழக்கமிடுவது போல் சொன்னான் அவன்.

''நீங்களும் ஒன்றை நினைவு வைத்துக் கொள்வது நல்லது. இந்தச் சோலை, பெண்கள் மட்டும் நடமாடுகிற

சோலை; இங்கே மாபெரும் வீரர்கள் வருவது வழக்கமில்லை." என்று கேலியாகச் சிரித்துக்கொண்டே சொன்னதும், இருங்கோ தடுமாறிப் போனான்.

அடுத்த நாளும் தொடர்ந்து, தான் பந்து விளையாடுவதைத் திருட்டுத்தனமாகப் பார்த்து ரசித்த கண்ணியமற்றவனை நினைத்தாலே அவளுக்கு எரிச்சலாக வந்தது.

அவனைப்பற்றித் தந்தையிடம் சொல்லிவிடலாமா என்று ஆத்திரம் குமுறியது. ஆனால் இந்தச் சாதாரண விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்தச் சாதாரண மனிதனையும் ஒரு முக்கியஸ்தனாக்கி விடாமல் அலட்சியம் செய்துவிடவேண்டும் என்று முன்பே தீர்மானித்திருந்தாள்.

மேலும் இந்த வீரனை நம்பி, தன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தந்தை நினைத்திருக்கும் வேளையில், அவனுக்கு ஓர் அரச விருந்தினன் என்ற கௌரவம் கொடுத்து, வேண்மாடத்தில் தங்க வைத்திருக்கும் சூழ்நிலையில், அவனைப்பற்றிக் கோள்சொல்லி, தந்தையின் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று நினைத்தாள் தேவி.

எப்படியும் இன்னும் ஓரிரண்டு நாட்களில் இருங்கோ வஞ்சியை விட்டுப் போய்விடுவான்; அவன் இங்கிருந்து போகும்வரை, அவளுக்குத் தர்மசங்கடம்தான். அவள் குளிக்கிற இடத்திலிருந்து தூங்குகின்ற இடம்வரை, பின் தொடர்ந்து வந்து பேச, வெட்கமில்லாமல் வந்து விடுவான். அவனை எப்படித் தவிர்ப்பது என்று யோசிக்கத் தொடங்கினாள் தேவி. சட்டென்று தாமக்கண்ணியின் நினைவு வந்தது:

''அப்பா! நான் தாமக்கண்ணியைப் பார்த்துப் பல நாட்களாகி விட்டன. நாளைக்குக் கொடுங்கோளூர் போய், இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டு வருகிறேன்,'' என்று சேரனிடம் சொன்னாள் சிந்தாதேவி.



''சரி... துணைக்குச் சில வீரர்களை அழைத்துக் கொண்டு போ... தனியாகப் போக வேண்டாம்...''

''நம் நாட்டுக்குள்ளே எனக்கென்னப்பா பயம்? பேச்சுத் துணைக்கு மாதரியை மட்டும் கூட்டிக் கொண்டு போகிறேன்...''

''பேச்சுத் துணைக்கு மாதரி வரட்டும்; வழித் துணைக்குச் சில வீரர்களை அழைத்துக்கொண்டு போ!...'' என்று கட்டளையிட்டான் அன்புத் தந்தை.

''சரி, அப்பா!'' என்று விடை பெற்றுக் கொண்டு, பல்லக்கிலே ஆறு வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு புறப்பட்டாள் தேவி.

அவளும் மாதரியும் கொடுங்கோளூரை அடைந்து கழார்த்தலையாரின் வீட்டுக்குள் நுழைந்தபோது, அங்கே தாமக்கண்ணி அற்புதமாக நடனமாடிக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் எதிரே உட்கார்ந்து ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருக்க, ஓர் இளைஞன் உடம்பெல்லாம் காயக் கட்டுகளுடன் தலையணையில் ஒரு கையை மடித்து ஊன்றிச் சாய்ந்துகொண்டு இருந்ததையும் பார்த்தாள் தேவி.

நடுவே புகுந்து ஆட்டத்தைத் தடைசெய்ய அவளுக்கு மனமில்லை. சப்தம் செய்யாமல் வாசற்படியில் நின்றவாறே நடனத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் இளவரசி.

நடனம் முடிந்ததும், கைதட்டிப் பாராட்டிக் கொண்டே ''கண்ணி! உன் ஆட்டம் அபாரம்! நீ இவ்வளவு அருமையாக ஆடி, இதுவரை நான் பார்த்ததேயில்லை!...'' என்று உள்ளே நுழைந்தாள்.

இளவரசியைக் கண்டதும் எல்லோரும் பரபரப்புடன் எழுந்து வரவேற்றார்கள்.

"வா, தேவி!... வா மாதரி! நலந்தானே?" என்று ஓடிப்போய் தோழியைக் கட்டித் தழுவிக் கொண்டாள் கண்ணி.

"வா தேவி!... வாம்மா மாதரி!..." என்று கழார்த் தலையாரும் உத்தரையும் அவர்களை வரவேற்று உட்கார வைத்தார்கள்.

"என்ன இளவரசி! திடீரென்று விஜயம் செய்திருக்கிறீர்கள்?" என்று குறும்பாகக் கேட்டாள் கண்ணி.

"கலையரசியைப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது; அதனால் உடனே புறப்பட்டு வந்தேன்..." என்று சிரித்தாள் இளவரசி.

"ஏம்மா, தேவி! மன்னர் நலமாயிருக்கிறாரா? அரண்மனையில் எல்லோரும் நலம்தானே?" என்று விசாரித்தார் கழார்த்தலையார்.

"அரசர் இன்றுவரை எல்லோரையும் நலமாகத்தான் வைத்திருக்கிறார்... நீங்கள்தான் எங்களையெல்லாம் தனியே விட்டுவிட்டு வந்துவிட்டீர்கள்..." என்று ஏதோ மர்மமான அர்த்தத்துடன் சொன்ன தேவி, சட்டென்று குமரன் பக்கம் திரும்பி, குறிப்பாகத் தோழியை நோக்கினாள்.

தேவியின் விழிக்கோடியில் தோன்றிய வினாக்குறியைப் புரிந்துகொண்ட கண்ணி, "இன்று நானும் தோழிகளும் ஒரு புலியால் தாக்கப்பட இருந்தபோது, இவர்தான் எங்கள் உயிரைக் காப்பாற்றினார். அந்தப் புலியோடு தனியாளாகப் போராடி வெற்றிபெற்ற வீரப்புலி இவர்... இவர் புலியோடு சண்டையிட்ட காட்சி— அடேயப்பா! மிகப் பயங்கரம்... இந்த மாதிரி வீரர்களை நாங்கள் பாராட்டுவதைவிட, உன்போல் அரச குடும்பத்தினர்



பாராட்டுவதுதான் மிகவும் பொருத்தம்!..." என்று விளக்கிக் கூறினாள் தாமக்கண்ணி.

"ஓ! அப்படியா?... மிக்க மகிழ்ச்சி... இவர் புலியைக் கொன்ற வீரர் என்பதற்காக நான் பாராட்ட விரும்பவில்லை; ஆனால் என் தோழியைக் காப்பாற்றிய வீரர் என்பதற்காக நான் பாராட்டவும் நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்..." என்றாள் சித்தாதேவி.

அவளுடைய பேச்சைக் கேட்டு, குமரனின் முகத்தில் திகைப்பின் சாயல் படிவதைக் கண்ட தாமக்கண்ணி, அவனைப் பார்த்து, "இளவரசி எப்போதுமே இப்படித்தான்; எதையுமே ஆழ்ந்த அர்த்தத்தோடும் கருத்தோடும் தான் பேசுவாள்... வெறும் வீரம் மட்டும் இவளுக்குப் பிடிக்காது; வேட்டையாடும் பொழுதுபோக்குக்காக நூறு சிங்கங்களைக் கொல்லும் மாவீரனை இவள் வீரனாகவே மதிக்கமாட்டாள். ஆனால் ஒரு நாயிடமிருந்து குழந்தையொன்றைக் காப்பாற்றியவனைச் சிறந்த வீரன் என்று பாராட்டுவாள்..." என்று தோழியின் குணத்தை விளக்கினாள் கண்ணி.

"அப்படியா?... ஆனால் போர்க்களத்திலே ஆயிரம் யானைகளைக் கொன்றவனுக்குப் புலவர்கள் பரணி பாடிப் பாராட்டுகிறார்களே? வாழ்க்கை நெறியை அகம், புறம் என இரண்டாகப் பிரித்து, அகத்திலே காதலையும் புறத்திலே வீரத்தையும்தானே புலவர்கள் பாடுகிறார்கள்?" என்று கேட்டான் குமரன்.

"அகத்தில் காதல் உணர்வைப் பாடியவர்கள், புறத்திலே வீரத்தை மட்டும் வைத்துப் பாடவில்லையே? அப்படித் தவறாகச் சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள்... மனமொத்த இருவர் தவிர, யாவராலும் இது இப்படிப் பட்டது என்று சொல்லி விளங்க வைக்கக் கூடிய எல்லாவற்றையுமே, புறப்பொருள் என்றுதான் வகுத்திருக்கிறார்கள். புறத்திலே வீரத்தை மட்டுமல்ல, வாழ்க்கையின்

பல்வேறு காட்சிகளையும் தத்துவங்களையும், மெய்ம்மைகளையும்— ஏன், வாழ்க்கை நிலையாமை பற்றியும் கூட— பாடியிருக்கிறார்கள்... இல்லையா தாத்தா?'' என்று தன் விவாதத்திற்கு ஆதரவாகக் கழார்த்தலையாரையும் இழுத்தாள் சித்தாதேவி.

''ஆம், குமரா! இளவரசி சொல்வது சரிதான்... போருக்கு உரிய திணைகளான வெட்சி, கரந்தை முதலியவற்றை வகுத்த தொல்காப்பியர், முதலில் தற்காப்புப் போருக்குத்தான் சிறப்பிடம் தந்துள்ளார் என்பதை, நுட்பமாகப் படித்தவர்கள் புரிந்து கொள்வார்கள். பகைவரால் கைப்பற்றப்பட்ட ஆநிரையைக் காப்பாற்றுவதுவே முதலாவதாக இடம் பெறுவதைக் கவனிக்க வேண்டும். இதேபோல் ஒவ்வொரு திணையிலும் தற்காப்புப் போருக்குச் சிறப்புத் தந்திருக்கிறாரே ஒழிய, ஆதிக்கப் போருக்கும் ஆக்கிரமிப்புப் போருக்கும் அவர் சிறப்புத் தரவில்லை. வாகை என்னும் திணையைக் கூறும்போது, வெறும் போரிலே பெறும் வெற்றியை மட்டும் குறிக்கவில்லை தொல்காப்பியர். கல்வியினால் பெறும் சிறப்பு, தொழிலால் அடையும் உயர்வு, கொடையால் பெறும் புகழ், துறவினாலும் தியாகத்தினாலும் உயர்ந்த பண்புகளாலும் மக்களிடைப் பெறும் சிறப்பு ஆகியவைகளையும் வாகைத்திணையென்றே வகுத்துப் பாராட்டுகின்றார்...[3]'' என்று விளக்கினார் கழார்த்தலையார்.

''அது மட்டுமில்லை... போர்களையும் போரில் பெற்ற வெற்றிகளையும் மட்டும் பாராட்டி மகிழவில்லை புலவர்கள். அந்தப் பாடல்களிலேயே, அந்நாட்டு மக்கள் போரால் எப்படியெல்லாம் துன்பப்படுகிறார்கள், வெற்றி வெறியினால் எப்படியெல்லாம் வேதனைக்குள்ளாகிறார்கள் என்பதையும் உருக்கமாக, மழபுலவஞ்சித்

3. 'பண்டைத் தமிழர் போர்நெறி'— புலவர் கா. கோவிந்தன்— (பக்கம் xiv, 221)



துறைகளில் பாடியிருக்கிறார்களே?... போர் வெற்றிகளினாலே பெறும் புகழ், எப்போதும் நிலைக்காது; அறம் செய்வதனால் ஏற்படும் புகழே நிலைத்து நிற்கும் என்று அரசர் முன்னால் நின்று துணிவாக, பொருண்மொழிக் காஞ்சித் துறையில் பாடிய பாடல்கள் எத்தனையோ இருக்கின்றனவே?... திருப்போர்ப்புறத்திலே போரிட்டு மாண்டார்களே, என் பெரியப்பாவும் சோழமன்னரும், அப்போது அவர்களைப் பாடிய பரணர், அவர்களுடைய வீரத்தைப் பாராட்டுவதைவிட, 'என்னாவது அவர் அகன்றலை நாடே?'[4] என்று நாட்டுமக்களுக்காக வருந்துவதைத்தானே பார்க்கிறோம்?...'' என்று உணர்ச்சி பொங்கப் பேசிய இளவரசி, கழார்த்தலையார் பக்கம் திரும்பி, ''அந்தப் போர்க்களத்தைப் பார்க்கச் சென்ற உங்களுக்கு, தான் சாகும்போதுகூட, தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கொடுத்த கொடைதான்,[5] அவருக்கு இன்னும் சாகாத புகழைத் தந்து கொண்டிருக்கிறதே ஒழிய, அங்கே அவர் காட்டிய வீரம் இன்று மறந்துவிட்டதே?... இல்லையா தாத்தா?...'' என்று அடுக்கடுக்காக ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி வாதாடுவதைக் கண்ட குமரன் திணறிப் போனான்:

''போர்க்களத்தை விளையாட்டுக் களமாகக் கருதுகின்ற அரச குடும்பத்திலே, இப்படி போரையே வெறுக்கின்ற ஓர் இளவரசி பிறந்திருப்பது வியப்புத்தான்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் அவன்.

''இதில் என்ன வியப்பு இருக்கிறது? நான் இவ்வளவெல்லாம் பேசிக்கொண்டு இன்னும் அரண்மனைக்குள்தானே இருக்கிறேன்? ஆனால் சித்தார்த்தர் அரண்மனையையே விட்டுவிட்டு, அன்பைப் போதிக்கிற புத்தராக வெளியே வந்துவிட்டாரே?'' என்றாள் தேவி ஆற்றாமை தொனிக்க.

4. புறநானூறு— 63
5. ,, — 368

''நீ போகிற போக்கைப் பார்த்தால், நீயும் அரண்மனையை விட்டு வெளியே வர அதிக நாள் ஆகாது போலிருக்கிறதே!'' என்று சிரித்தபடி சொன்னாள் உத்திரை.

''நீங்கள் சுலபமாக அரசாங்கத்திலிருந்து வெளியேறி, இங்கு வந்துவிட்டீர்கள்; ஆனால் நான் அவ்வளவு சுலபமாக வெளியே வர முடியவில்லையே?'' என்று வருத்தப் பட்டாள் இளவரசி.

தான் வஞ்சியை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது பற்றிய கசப்பான நினைவு, கழார்த் தலையாரின் உள்ளத்தில் பொங்கி வந்து குமுற, சிறிது நேரம் அமைதியாயிருந்தார் அவர்.

## 19

திருப்போர்ப்புறத்திலே தன் அண்ணன் குடக்கோ நெடுஞ்சேரலாதனைக் கொன்றதற்குப் பழி வாங்குவதற்காக, பெருஞ்சேரலாதன் சோழ நாட்டைத் தாக்க ஆயத்தங்கள் செய்வது, கழார்த்தலையாருக்கு முதலிலிருந்தே பிடிக்கவில்லை:

''அரசே! உங்கள் அண்ணனும் சோழனும் மோதிக் கொண்ட போருக்கே அர்த்தம் இல்லை. அந்தப் போரிலே இருவருமே மாண்டார்கள். அந்த அர்த்தமற்ற போரை ஒரு பொருட்டாக மதித்துப் பழிவாங்குவதாகக் கூறிக் கொண்டு, நீங்கள் மறுபடி இன்னொரு அர்த்தமற்ற போரிலே ஈடுபடுவது சரியில்லை... இப்படிப் போருக்குப் போர் என்று தொடர்ந்தால், அதற்கு முடிவே இல்லாமல்



போய்விடும். போருக்கு ஆயத்தங்கள் செய்வதை விட, மக்களுக்கு நன்மையான காரியங்கள் செய்வதில் உங்கள் கவனத்தை ஈடுபடுத்துங்கள்...'' என்று அடிக்கடி கூறி வந்தார் புலவர்.

''இல்லை, புலவரே! மனிதனுக்கு உயிரை விட மானம் தான் முக்கியம்... சோழ நாட்டை அடிமைப்படுத்திப் பழி வாங்கி, அதன் வளத்தை என் நாட்டு மக்களுக்குக் கொண்டு வருகிறேன், பாருங்கள்!'' என்று தீவிரமாகப் போர் ஏற்பாடுகளில் முனைந்தான் பெருஞ்சேரலாதன்.

அந்தப் போர் ஆயத்தச் சூழ்நிலையில், தான் வாழ விரும்பாமல் குடும்பத்தைக் கொடுங்கோளூருக்கு அழைத்து வந்துவிட்டார் கழார்த்தலையார்.

''தேவி! அரசர் இன்னும் போர் ஏற்பாடுகள் செய்து கொண்டுதானிருக்கிறாரா?'' என்று கேட்டார் அவர்.

''ஆம், தாத்தா!... இன்னும் ஆயிரக்கணக்கான உத்திரைகளைத் தன் நாட்டிலே தவிக்கச் செய்த பிறகு தான் அவர் வெறி தணியும் என்று நினைக்கிறேன்...'' என்று கண்ணீர் மல்க, உத்திரையைப் பார்த்தாள் தேவி.

குமரனும் உத்திரையைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந் தான். அந்தப் பெண் விதவைக் கோலம் பூண்டதற்கும் போருக்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டும் என்று யூகித்தான் அவன்.

தன் அவல வாழ்வை இளவரசி குறிப்பிட்டதும், பழைய நினைவுகளின் அழுத்தத்தினாலோ என்னவோ, கண்ணில் ஊறிய நீரை மறைத்தவாறு உள்ளே நகர்ந்து மறைந்தாள் உத்திரை.

''இளவரசி! கண்ணியின் தாய் விதவையானதற்குக் காரணம் என்ன என்று நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று மெதுவாகக் கேட்டான் குமரன்.

குமரனை நிமிர்ந்து பார்த்தாள் தேவி. அவனுடைய உள்ளத்தின் இரக்கத்தையும் பரிவையும் கண்களின் ஈரம் காட்டுவதைப் புரிந்து கொண்டு, பழைய நிகழ்ச்சியைச் சுருக்கமாகச் சொன்னாள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, மங்கலாபுர நகரம் யாருக்கு உரிமை என்பதில் சேரனுக்கும் [1] கடம்பனுக்கும் தகராறு ஏற்பட்டு நடந்த போரில், சேரப்படையுடன் சென்ற தளபதி திரையன் வீரமரணம் அடைந்தான். தன் ஒரே மகனைப் போர்க்களத்தில் பறிகொடுத்த புலவர் கழார்த் தலையார் நிலைதடுமாறிப் போனார். அன்பு மருமகளை விதவைக் கோலத்தில் காணும்போது, அவர் நெஞ்சம் வெடித்துச் சிதறியது.

போரின் கொடுமை நேரே அவர் தலையில் விழுந்து வெடித்ததும், அவருக்குப் போர் என்றாலே உயிர் நடுங்கியது. கேவலம், மண்ணுக்காக— போர் என்ற பெயரிலே, வாழ வேண்டிய உயிர்களைக் கொல்வதும், இன்னும் சில உயிர்களை வாட வைப்பதும் கொடிய குற்றம் என்பதை உணர்ந்தார்.

அதன் பிறகு, சேரனுடைய போர் முயற்சிகளை எதிர்த்துத் தடுக்க முயன்றார். ஆனால் அந்த முயற்சி பயனின்றிப் போனதும், அரசியல் பரபரப்புக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, குடும்பத்தைக் கிராமப் புறத்திற்கு அழைத்து வந்து விட்டார்.

''திரையனின் வீரத்தைப் பாராட்டி [2] ஏனாதிப் பட்டமும் வாகைப் பொலந்தோடும் கொடுத்தார் என்

1. பூழியைத் தலைநகராகக் கொண்ட துளுநாட்டு மன்னன்.
2. போர்க்களத்தின் சிறந்த வீரர்களுக்கு 'ஏனாதி' என்ற பட்டமும, பொன்னாலாகிய வாகைப்பூவும் வழங்குவது சங்க கால வழக்கம்.



அப்பா; ஆனால் உத்திரைக்கு சுமங்கலிப் பட்டமும் பூவும் பொட்டும் கொடுக்க அவரால் முடியுமா?... அரசர் பெற்றது மங்கலாபுரம்; ஆனால் உத்திரை இழந்தது மங்கலக்கோலம்!...'' என்று ஆத்திரம் கொப்புளிக்கப் பேசினாள் சிந்தாதேவி.

போர் என்றாலே கழார்த்தலையார் ஏன் வெறுக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான் குமரன்.

''தாத்தா! உலகத்திலிருந்து போர் என்பதை ஒழிக்கவே முடியாதா?'' என்று கேட்டாள் தாமக்கண்ணி.

''முடியும். வடக்கே ஓர் அசோகச் சக்கரவர்த்தி தோன்றவில்லையா?... உயிர்களைக் கொன்று வெற்றியடையும் போரினால் பெறுகின்ற புகழ் நிலையற்றது; உயிர்களுக்கு நன்மை செய்து வாழ வைத்துப் பெறுகின்ற புகழ்தான் நிலையானது என்பதை அரசர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஊர் என்னுடையதா, உன்னுடையதா என்று போரிடாமல் 'யாதும் ஊரே' என்று வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இவர் பகைவர், இவர் நண்பர் என்று பாராமல் 'யாவரும் கேளிர்' என்று எல்லோரையும் உறவாகக் கருதி வாழப் பழகிக் கொள்ளவேண்டும்... போரை ஒழிக்க, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று பாடிய கணியன் பூங்குன்றனின் வழிதான் ஒரே வழி!...'' என்று விளக்கினார் கழார்த்தலையார்.

''அரசர்களின் மனம், அவ்வளவு சுலபமாக மாறி விடாது, தாத்தா!... போர் முடிவிலே 'எதிரிப்படையிலே இரண்டாயிரம் பேர் மடிந்தார்கள். நம் படையில் ஆயிரம் பேர்தான் மாண்டார்கள்' என்று மகிழ்ச்சியடைவதைவிட, 'மொத்தம் மூவாயிரம் மனிதர்கள் இறந்து போய் விட்டார்கள்' என்று வருந்தும் மனப் பக்குவம் ஏற்பட வேண்டும்... மங்கலாபுரம் போரிலே மகனை இழந்த உங்களுக்கு, போரிலே வெறுப்பு ஏற்பட்

டுள்ளது. திருப்போர்ப்புறத்திலே பெரியப்பாவை இழந்த எனக்கு, போர் என்றாலே வெறுப்பு வந்து விட்டது. ஆனால் என் தந்தைக்கு இன்னும் வெறி தணியவில்லையே? தமையனை இழக்கும்படி செய்த போரை வெறுக்காமல், 'அவருக்காகப் பழிவாங்க இன்னொரு போர் நடத்துவேன்' என்று துடிக்கிறாரே, தாத்தா?'' என்று வருந்தினாள் சிந்தாதேவி.

''தாத்தா! நீங்கள் என்ன இளவரசி வந்ததிலிருந்து அரசியல் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள்?...... பாவம், அவள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளட்டுமே!'' என்று குறுக்கிட்டாள் தாமக்கண்ணி.

''ஆம், கண்ணி! அரசியல் பேச்சுக்களிலிருந்தும் சூழலிலிருந்தும் சிறிது விடுதலை பெறத்தான் இங்கே வந்தேன்... உன்னை வஞ்சியிலிருந்து பிரித்துத் தாத்தா இங்கே கொண்டு வந்து விட்டாரே என்று நான் பலமுறை வருத்தப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கே வந்த பிறகு, நீ எவ்வளவு அருமையான கலையரசியாக உருவாகி யிருக்கிறாய் என்பதைப் பார்க்கும்போது, எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறது...'' என்று உள்ளம் பூரித்துச் சொன்னாள் தேவி.

''சரி, வா, உள்ளே போவோம்!...மறுபடியும் பேச்சிலே ஆரம்பித்து விடாதே!'' என்று தேவியையும் மாதரியையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்றாள் கண்ணி.

அன்று இரவு முழுவதும் பால்யத் தோழிகள் இருவரும் என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் என்றாலே பேச்சுக்குப் பஞ்சம் இருக்காது; அதிலும் நெடுநாட்களுக்குப் பிறகு சந்திக்கும் தோழிகள் என்றால் கேட்க வேண்டுமா?

மறுநாளும் ஏதேதோ அரட்டையடித்தபடி, அந்த ஊரின் கோயில், குளம், ஆற்றங்கரை எங்கும் போய்ச் சுற்றிவிட்டு வந்தார்கள்.



இரண்டு நாட்கள் கழித்து, குமரனின் உடம்பிலிருந்த புண்களெல்லாம் முற்றிலும் ஆறிக் கட்டுக்களை எடுத்து விட்டார் மருத்துவர்.

அன்று மாலை, தாமக்கண்ணியும் சிந்தாதேவியும் குமரனிடம் வந்தார்கள்:

''இளவரசி காட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டு மென்று ஆசைப்படுகிறாள். நீங்களும் எங்களுக்குத் துணையாக வந்தால் நல்லது...'' என்றாள் கண்ணி.

''ஓ!... இளவரசியும் கலையரசியும் ஆணையிட்டால், இந்தச் சாதாரண ஆள் மறுக்க முடியுமா?... இதோ, புறப்பட்டு விட்டேன்...'' என்று இடுப்பில் வாளுடனும் கையிலே வில்லம்புகளுடனும் கிளம்பினான்.

மாலை நேரத்தில், கதிரவன் மேலை வான ஓவியத் திரையில் பலவித வண்ணக் கலவைகளைக் குழைத்துக் குழைத்துக் கலைத்துக் கொண்டிருந்தான். ஊர்ப்பக்கத்தி லிருந்து கூட்டுக்குத் திரும்பும் பறவைகள், இளவரசி வருகைக்குக் கட்டியம் கூறுவதுபோல், குரல் எழுப்பிக் கூவிக் கொண்டே பறந்து சென்றன. மலர் மணத்தைச் சுமந்து வரும் தென்றல், அவர்கள் வழி நடக்கும் களைப்புத் தெரியாமலிருக்க, மென்மையாக வீசிக் கொண் டிருந்தது.

காட்டிலே புதிய புதிய மரங்களையும் மலர்களையும் பார்க்கும்போது 'இது என்ன மரம், இது என்ன மலர்,' என்று குமரனிடம் கேட்பாள் சிந்தாதேவி.

''இளவரசி! இது என்ன என்று என்னைக் கேட்டால், இது வேய், இது காந்தள் என்று சாதாரண மாகத்தான் சொல்லுவேன். ஆனால் இதையே இந்தக் கவிஞர் தாமக்கண்ணியிடம் கேட்டால், 'இது அழகிகளின் தோள் அழகை வெல்ல முடியாத வேய்' 'இது நாட்டிய மங்கையின் அபிநயிக்கும் விரலைப் போன்ற காந்தள்'

என்று கவிதை நடையில் விளக்கம் சொல்வார்!'' என்று குறும்பாகச் சிரித்தான் குமரன்.

''ஏன், நீங்கள் சொல்வதே கவிதை நடையில்தானே இருக்கிறது?'' என்று பாராட்டினாள் தேவி.

சட்டென்று குமரன், கண்ணி பக்கம் திரும்பினான்:

''நான் எதற்காகச் சேரநாட்டுக்கு வந்திருக்கிறேன் என்று இளவரசியிடம் சொல்லவில்லையே? தேடிப்போன மூலிகை எதிரே நின்றதுபோல், இளவரசியே நம் இருப்பிடம் தேடி வந்திருக்கிறார்கள்...'' என்று குறிப்பாகச் சொன்னான்.

''ஆம்... தேவி! இவர் இங்கே எதற்காக வந்திருக்கிறார், தெரியுமா? நீ படித்த ஆசிரியர் கருங்குழலாதனார் இருக்கிறாரே, அவரிடம் தமிழ்க்கவிதைப் பயிற்சி பெறத்தான் வந்திருக்கிறார்...'' என்று கூறினாள் கண்ணி.

''அப்படியா? மிக்க மகிழ்ச்சி... உங்களைப் போன்ற ஒரு சிறந்த வீரர், கவிதையில் ஈடுபாடு கொள்வது மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறது... பெரும்பாலும் வீரர்கள் வெறும் முரட்டுத்தனமாகவே வாழ்கிறார்கள்; வாழ்க்கையின் மென்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்வதேயில்லை. வீரர்களுக்கு, கலைகளை ரசிக்கும் பக்குவமும் பயிற்சியும் இருந்தால், உயிர்களை அனாவசியமாகக் கொல்லும் அரக்கக்குணம் குறையும். என்னைக் கேட்டால், கலைஞர்களெல்லாம் வீரர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; ஆனால் வீரர்களெல்லாம் கட்டாயம் கலையுணர்ச்சி உடையவர்களாக இருக்க வேண்டும்...'' என்று தேவி சொல்லிக் கொண்டிருக்கும்போது, ''அதாவது— உன்னைப்போல்!'' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் கண்ணி.

உடனே அவள் குமரன் பக்கம் திரும்பி, ''உங்களுக்கு இந்தச் செய்தி தெரிந்திருக்காது... இளவரசி வாள்



சண்டை முதல் குதிரையேற்றம் வரை எல்லாப் போர்ப் பயிற்சியும் பெற்றிருக்கிறாள். அன்றைக்குப் புலி எங்கள் மேல் பாய வந்ததே, அப்போது இளவரசி அங்கே வந்திருந்தால், அவளே அந்தப் புலியைத் தோற்கடித்து விரட்டியிருப்பாள்!'' என்று பெருமையுடன் சொன்னாள் கண்ணி.

''சேச்சே! அப்படி நடந்திருக்காது!'' என்றான் குமரன்.

''ஏன்?'' என்று திகைப்புடன் கேட்டாள் கண்ணி.

''அது தமிழ்நாட்டுப் புலியல்லவா?... இளவரசியைப் பார்த்ததும், 'ஆகா, எவ்வளவு அழகான மான் இங்கே வந்திருக்கிறது' என்று வியந்து பார்த்து ரசித்துக் கொண்டே நிற்குமே ஒழிய, தாக்காது!'' என்று அவன் சொன்னதும், தேவியின் சிவந்த கன்னங்கள் சட்டென்று நாணத்தால் மேலும் சிவந்து குங்குமமாய்க் குழைந்தன. காற்றிலே ஒசியும் பூங்கொடிபோல், வெட்கம் பொங்க, ஒடுங்கி வளைந்து நின்றாள் அவள். காதளவு ஓடிய அவளது நீண்ட கண்கள், குமரன் பக்கம் கடைக்கண்ணாக ஒல்கிக் கூர்ந்து பாய்ந்தன.

''அரசர்க்கு ஆண் வாரிசு இல்லாததால், இளவரசிக்கு எல்லாப் படைப்பயிற்சியும் அரசியல் பயிற்சியும் அளித்து, தேவியைக் கிட்டத்தட்ட ஓர் ஆண்மகன் போலவே வளர்க்கிறார்...'' என்று கண்ணி விவரித்ததும் குறுக்கிட்டாள் சிந்தாதேவி:

''அப்படிச் சொல்லாதே, கண்ணி! ஆண் போல இருப்பது, ஒரு பெண்ணுக்குப் பெருமை அல்ல; ஆண்மையின் இடத்தை நிரப்பி விடுவோம் என்று நினைப்பதே பெண்மையின் முதல் அறிவீனம்; ஆண்கள் ஆண்மையுடனும் பெண்கள் பெண்மையுடனும் இருப்பதுதான் ஒரு நாட்டுக்குத் தேவை; அதுதான் நாகரிகமும் கூட! ஆணுக்கு இணையாகப் பெண் வாழ முயல வேண்டுமே

ஒழிய, ஆணுக்குச் சமமாக வாழ முடியாது; வாழக் கூடாது!''

அவளுடைய ஆழமான சிந்தனைகளும் நறுக்குத் தெறித்தாற் போன்ற பேச்சுக்களும், குமரன் உள்ளத்தில் பதிந்து பாதிப்பு ஏற்படுத்தின. ஒரு நாட்டின் அரசியாகத் திகழ்வதற்கு வேண்டிய அறிவும் திறனும் அவளிடம் அமைந்துள்ளதை உணர்ந்து வியந்தான் அவன்:

''இளவரசி! போரையும் உயிர்க்கொலையையும் வெறுக்கின்ற நீங்கள், ஏன் படைப்பயிற்சி கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் குமரன்.

''போர் வேண்டாம் என்று சொல்கிறவர்களெல்லாம், போருக்குப் பயந்தவர்களோ, போரிடத் தெரியாதவர்களோ அல்ல; அமைதி என்பதும் சமாதானம் என்பதும், கோழைகளின் புகலிடம் அல்ல; வீரர்களின் அரங்கம்!... சிறந்த வீரன்தான் அமைதியைப்பற்றிப் பேச முடியும்; அப்பொழுதுதான் அமைதி என்ற பேச்சுக்கும் மரியாதை கிடைக்கும்,'' என்றாள் சிந்தாதேவி.

அவளுடைய வாதத் திறமையும் சிந்தனையின் ஆழமும் அவனை வாயடைக்கச் செய்துவிட்டன.

''இளவரசி! இவ்வளவு சிந்தனைத் திறமும் பேச்சுத் திறமையும் உடைய ஒரு பெண்ணை நான் பார்த்ததே யில்லை...'' என்று வியந்து மனப்பூர்வமாகப் பாராட்டினான் குமரன்.

''ஓ! நீங்கள் நிறையப் பெண்களுடன் பழகியிருக்கிறீர்களோ?'' என்று குறும்பாகக் கேட்டபடி, அவனைப் பார்த்து ஓரக்கண்களால் சிரித்தாள் தேவி.

''ஐயையோ!... உங்களிடம் எப்படிப் பேசினாலும் சிக்கிக் கொள்ளவேண்டியதுதான் போலிருக்கிறது!'' என்று சிரித்தான் குமரன்.



கலகல என்று பேசிச் சிரித்துக்கொண்டே மூவரும் காட்டைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள்.

காட்டிலே ஓரிடத்தில் மேய்ந்துகொண்டிருந்த சில மான்கள் அவர்களைப் பார்த்ததும் மருண்டு ஓடின.

''அதோ, அந்த மான்கள் ஏன் இப்படி ஓடுகின்றன, தெரியுமா?'' என்று கேட்ட குமரன், ''நம்மைவிட அழகான இளம் மான்கள் இங்கு வருகின்றனவே என்று பொறாமைப்பட்டு ஓடி ஒளிகின்றன!...'' என்று அவனே பதிலும் சொல்லிச் சிரித்தான்.

''அவனுடைய களங்கமற்ற சிரிப்பும் கனிவான பேச்சும் கண்ணியமான நடத்தையும் அந்தப் பெண்களுக்கு மிகவும் பிடித்திருந்தன.

''எனக்கு ஓர் ஆசை: காட்டு மயில் தோகையை விரித்து நடனமாடுவதைப் பார்க்க வேண்டும்,'' என்று சிறு குழந்தைபோல் கண்களை விரித்தபடி சொன்னாள் தேவி.

''என்ன, தேவி! நீ நினைத்தால் ஆயிரம் மயில்களைப் பிடித்து வந்து அரண்மனையில் ஆடச்செய்யலாமே?'' என்றாள் கண்ணி.

''அப்படி ஆடவைத்தால், மயில்களின் இயற்கையான ஆட்டத்தைப் பார்க்க முடியுமா? குயிலைக் கூட்டில் அடைத்துக் கூவச் சொன்னால், அது சோககீதம்தான் இசைக்கும். மயில் ஆட்டத்தின் முழு அழகையும் பார்க்க வேண்டுமானால், இந்த இயற்கைச் சூழ்நிலையிலேதான் பார்க்க வேண்டும்,'' என்றான் குமரன்.

''மயில், கார்மேகத்தைக் கண்டால்தான், தோகை விரித்து ஆடும் என்பார்களே, இப்போது இங்கே கார்மேகமே இல்லையே?'' என்று வருத்தப்பட்டாள் தேவி.

''ஏன், உங்களுடைய கரிய கூந்தலைப் பார்த்தால், கார்மேகம் வந்துவிட்டது என்று கருதி, மயில்கள் நிச்சயம் ஆடும்...'' என்றான் குமரன் சாமர்த்தியமாக.

''ஆகா! பிரமாதம்!... நீங்கள் இப்பொழுதே பாதிக் கவிஞராகி விட்டீர்கள்... கருங்குழலாதனாரிடம் நானே நேரடியாக உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்...'' என்றாள் இளவரசி.

''ஏன், தேவி! நீ இன்னும் அவரிடம்தானே படிக்கிறாய்?'' என்று கேட்டாள் தாமக்கண்ணி.

''இல்லை... போன வாரமே ஆசிரியர் 'இனி நீ வர வேண்டாம், தேவி' என்று சொல்லிவிட்டார்,'' என்று அவள் சொன்னதும், குமரனின் முகம் சட்டென்று குவிந்து விட்டது. முகத்திலே ஏமாற்றத்தின் சாயல் படிந்து, உற்சாகமிழந்து, பேசாமல் நின்றான்.

அந்த மாற்றத்தை நுட்பமாகக் கவனித்துவிட்டாள் சிந்தாதேவி.

''ஏன், உங்கள் முகம் இப்படி மாறிவிட்டது?'' என்று பரிவோடு அவனைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

''ஏமாற்றம்தான்; ஓர் அறிவாளி மாணவியோடு சேர்ந்து படிக்கலாம் என்று நினைத்து மகிழ்ச்சியுட னிருந்தேன்...''

''நீங்கள் என்னை அளவுக்கு மீறிப் புகழ்கிறீர்கள்?'' என்று நாணம் விகசிக்க முறுவலித்தாள் தேவி.

''இல்லை. இன்னும் அதிகமாகப் புகழ வேண்டிய அளவுக்கு உங்களிடம் தகுதியிருக்கிறது; எனக்குத்தான் சரியாகப் புகழத் திறமையில்லை...'' என்று அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் குமரன்.

இருவர் கண்களும் கலந்து ஏதேதோ பேசி, மொழியின் போதாமைக்கு ஈடுகட்டிக்கொண்டிருப்பதை, காட்டில் தூரத்தில் போய்க்கொண்டிருந்த ஒரு யானைக் கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தாமக்கண்ணி கவனிக்கவில்லை.



''அதோ!... யானைக்கூட்டம் பார்த்தீர்களா?'' என் கையை நீட்டியபடியே திரும்பிய அவளுக்கு, குமரனு தேவியும் விழியாலே பேசிக்கொண்டிருக்கும் காட் இன்னும் புலப்படவில்லை.

தேவி கலகல என்று சிரித்தாள்.

''என்ன, கண்ணி! அதிசயத்தைக் கண்டுவிட்டாய்?. சேரநாட்டிலே யானைக் கூட்டத்தைப் பார்க்கிறது அதிசயமா?... நீ இன்னும் சிறுபிள்ளைதான்!...'' என் செல்லமாகத் தோழியின் தலையில் குட்டினாள்.

ஆம்... தாமக்கண்ணி இன்னும் சிறுபிள்ளைதான் அந்த இரண்டு இளம் உள்ளங்களின் உணர்வுச் சங்கம இன் அருகிலே இருந்தும், அவளால் அதைக் கண் கொள்ள முடியவில்லையே!...

''ஏன் தேவி, என்ன சொல்லிக் கொண்டிருந்தாய்?. இப்போது படிப்பை நிறுத்திவிட்டாயா, ஏன்? எல்லா கற்று முடித்துவிட்டாயா?'' என்று இயல்பாகக் கேட்டா கண்ணி.

''இல்லை... கற்றது கையளவுதான்; மீதி, கல்லாதன உலகத்தில் கற்றுக்கொள்ளச் சொல்லிவிட்டார் ஆசிரியர், என்று கையை விரித்தாள் தேவி.

''அதுசரி... எப்படியாவது இவரை உன் ஆசிரியரிட சொல்லிச் சேர்த்துவிட வேண்டியது உன் பொறுப்பு... என்று அழுத்தமாகத் தெரிவித்தாள் கண்ணி.

''என் தோழியின் கட்டளையை மீற முடியுமா?. உங்கள் ஆணைப்படியே செய்கிறேன், கலையரசி!'' என் குறும்பாகச் சொல்லி, அவள்முன் வணங்குவதுபோ குனிந்து நின்றாள் இளவரசி.

அவர்களுடைய விளையாட்டுப் பேச்சுக்களிலு கும்மாளச் சிரிப்புக்களிலும் நேரம் போனதே தெரி வில்லை.

மேலைக் கடலுக்குள்ளே குதித்துப் பகலவன் உடல் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டிருந்தான்.

''சரி... நேரமாகிவிட்டது... வாருங்கள், வீட்டுக்குப் போவோம்...'' என்று குமரன் இருவரையும் அழைத்துக் கொண்டு ஊருக்குள் திரும்பினான்.

இலவந்திகை மாடத்தில் பந்து விளையாடிக் கொண்டிருந்த சிந்தாதேவியைத் திருட்டுத்தனமாகப் பார்த்த மறுநாளே, இளவரசி கொடுங்கோளூர் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டதும், இருங்கோவுக்கு மனம் சோர்ந்துவிட்டது.

தன் திறமை, அனுபவம் எல்லாவற்றையும் பயன்படுத்தி, அந்த அழகுக் கோட்டையை வீழ்த்த முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் போது, கோட்டை நகர்ந்து, வெளியூர் போய்விட்டதே என்று வருந்தினான்.

அந்த அழகுச்சிலை நடமாடாத நாட்களெல்லாம், வேண்மாடமும் இலவந்திகையும் பூங்காவும்— ஏன், உலகமே— நிலவு இல்லாத வானம்போல், அவனுக்கு வெறிச்சோடிவிட்டது!...

நேரிலே பார்த்துப் பேசிப் பழகி ரசிக்கமுடியாத அழகோவியத்தை, கனவுக் கன்னியாகவாவது கண்டு மகிழும் நம்பிக்கையில், இரவும் பகலும் தூக்கத்திலேயே நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தான் அந்த இரட்டை லட்சியக் காதலன்!...

வேகமாக வேண்மாடத்துக்குள்ளே நுழைந்தான் ஓர் அரண்மனைக் காவலன்:

''அரசே! உங்களை உடனே மன்னர்பிரான் அழைத்து வரச் சொன்னார்...'' என்று அவன் கூறியதும், திடுக்கிட்டான் இருங்கோ.



மிகவும் முக்கியமான விஷயமாக இருந்தால் ஒழிய, இப்படி ஆள் அனுப்பி வரச்சொல்ல மாட்டார் மன்னர் என்று அவனுக்குத் தெரியும்.

''இப்பொழுது திடீரென்று என்ன அவசர விஷயம் ஏற்பட்டிருக்கும்?... ஒருவேளை, கொடுங்கோளூர் போயிருந்த இளவரசி திரும்பி வந்து, நீ செய்த திருவிளையாடல்களையெல்லாம் அரசரிடம் சொல்லியிருப்பாளோ?... சரி, இனிமேல் நம் கதி அதோ கதிதான்!'' என்று மெதுவாக முணுமுணுத்தான் அந்துவன்.

இளவரசியிடம் தான் பழகிய முறையில் சிறிது அதிகப்படியான 'சுதந்திரம்' எடுத்துக் கொண்டுவிட்டோம் என்பதை உணர்ந்த இருங்கோவின் உள்ளம் பதைபதைத்தது.

''சரி... இதோ வருகிறேன் என்று சொல்...'' என்று நா நடுங்கச் சொல்லிவிட்டுப் புறப்பட்ட அவன் உடலெல்லாம் பயத்தால் குப்பென்று வியர்த்துக் குளிர்ந்தது.

## 20

'உதவி கேட்டு வந்த இடத்தில், தேவையற்ற வம்பிலே ஈடுபட்டிருக்க வேண்டாம்' என்று பக்கத்தில் அந்துவன் கடுகடுத்துக் கொண்டே வர, நடுங்கும் உள்ளத்துடன் இருங்கோ, சேரன் அறைக்குள் நுழைந்தான்.

அங்கே சேரனின் முன்பாக, இருங்கோவின் நண்பர்கள் நெடுந்தத்தனும் நீலனும் உட்கார்ந்திருந்தார்கள்.

''வாருங்கள் இருங்கோ! பாண்டிய நாடு சென்ற உங்கள் நண்பர்கள் இப்பொழுதுதான் வந்தார்கள். அதற்காகவே உங்களை அழைத்துவரச் சொன்னேன்...'' என்று வரவேற்றான் சேரன்.

போன உயிர் திரும்பி வந்தது போல், நிம்மதிப் பெருமூச்சு விட்ட இருங்கோ ''நெடுந்தத்தா! பாண்டிய மன்னர் என்ன சொன்னார்?'' என்று கேட்டான்.

''நமக்குச் சாதகமாகத்தான் சொன்னார். சோழ சிம்மாசனத்தின் மேல் உங்களுக்குள்ள பரம்பரை உரிமையை அவர் அங்கீகரிப்பதோடு, ஏதோ தற்செயலாக யானையால் முடி சூட்டப்பட்ட கரிகாலனை அவர் மன்னனாகவே கருதவில்லையாம்...''

''ஆகா! பரம்பரையாக அரச ரத்தம் உடம்பிலே ஓடுகிறவர்களுக்கு, இப்படித்தான் சிந்தனை ஓடும்!'' என்று தன்னையும் அரசனாக சுய அங்கீகாரம் செய்து கொண்டான் இருங்கோ.

''மகிழ்ச்சியான செய்திதான்— ஆனால் சேர மன்னரும் உங்களுக்கு உதவ முன்வந்தால்தான், மூவரும் ஒன்று சேர்ந்து கரிகாலனை எளிதாக வீழ்த்த முடியும் என்று நினைக்கிறார் பாண்டியர், ஆகவே சேர வேந்தரின் உதவியைக் கேட்டுப் பெறுங்கள் என்று சொல்லியனுப்பினார்...'' என்று விளக்கமாகச் சொன்னான் நீலன்.

''நானும் அதைத்தான் நினைத்தேன். எதிரியைச் சிறியவன் என்று இலேசாகக் கருதி, நாம் மட்டும் களத்தில் இறங்கிவிடக் கூடாது. பெரிய யானையே, நீரில் முதலையிடம் தோற்றுப்போக நேரிடும் அல்லவா?'' என்றான் பெருஞ்சேரலாதன்.

''சேரமன்னர், தன் அண்ணனைக் கொன்ற சோழ நாட்டு மன்னனைப் பழிவாங்க வேண்டும் என்று நெடுநாள் திட்டமிட்டிருப்பதும் பாண்டியருக்குத்



தெரியுமாம். ஆதலால் ஒரே அம்பில் இரண்டு மான்களை அடிப்பதுபோல், ஒரே தாக்குதலில் இருங்கோவின் லட்சியமும் சேரரின் பழியும் நிறைவேறும் என்று சொன்னார் பாண்டியர். இந்த விஷயம் மட்டுமல்ல, சேரருடன் மேலும் தொடர்ந்து நெருங்கிய உறவு கொள்ளவும், தான் விரும்புவதாகக் குறிப்பாகக் கூறினார்...'' என்று, அதைத் தனிஅர்த்தமுள்ளதாக அழுத்திச் சொன்னான் நெடுந்தத்தன்.

பாண்டியவேந்தன் 'நெருங்கிய உறவு' என்று எதைக் குறிப்பிடுகிறான் என்பது பெருஞ்சேரலாதனுக்குப் புரிந்தது; இருங்கோவுக்கும் புரிந்தது.

''அரசே! தங்களுடன் நெருங்கிய உறவு கொள்ள, பாண்டியர் மாதிரி பரம்பரை மன்னர்கள் விரும்புவதில் அர்த்தம் இருக்கிறது; ஆனால் யானையை ஆட்டிவைக்கும் பாகன் போன்றவர்களெல்லாம், அப்படி நினைப்பது எவ்வளவு திமிர்?'' என்று இருங்கோ சொன்னதும் சேரன் திகைத்தான்:

''என்ன சொல்கிறீர்கள்?''

''யானையை மயக்கி, ''மாலையை வாங்கிப் போட்டுக் கொண்டு அரசனாகியிருக்கிறானே கரிகாலன், அவன் உங்கள் இளவரசியைத் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டிருக்கிறான்...''

''அப்படியா?... உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி, பருந்தாகுமா?... என்னிடம் பெண் கேட்க வரட்டும் அவன்; தலைதூக்க முடியாதபடி அவமானப்படுத்தி அனுப்புகிறேன்...'' என்று சிரித்தான் சேரன்.

''அவ்வளவு கண்ணியமாக உங்களிடம் வந்து மகட்கொடை கேட்கக் கூடியவனா அவன்?... உங்களுக்கு அவமானம் உண்டாக்கத்தான் அவன் நினைப்பான்; சூழ்ச்சி செய்து உங்கள் மகளை எப்படியாவது தூக்கிக்

கொண்டு போய்விடுவது என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான் என்று நான் சோழ நாட்டிலிருக்கும் போதே கேள்விப்பட்டேன்...'' என்று இருங்கோ விளக்க மாகச் சொன்னதும், சேரன் மட்டுமல்ல, மற்றவர் களுக்குமே தூக்கிவாரிப் போட்டது!

சேரனுடைய முகம் கோபத்தால் சிவந்து, மீசை துடித்தது; பற்களை நறநற என்று கடித்துக் குமுறினான்:

''ஆ!... நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளானுக்கு இத்தனை நெஞ்சழுத்தமா?... அவனை என் வாளால் வெட்டிச் சின்னாபின்னப்படுத்தினால்தான் என் இரத்தத் துடிப்பு அடங்கும்...''

''அரசே! நீங்கள் ஆத்திரப்படாதீர்கள். நான் அந்த வேலையை ஏற்றுக் கொள்கிறேன். என் உரிமைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிய அவன் என் கையாலேதான் சாகவேண்டும்...'' என்று கையை உயர்த்திப் பொங்கி னான் இருங்கோ.

சேர நாட்டு இளவரசியைத் தூக்கிப் போகக் கரிகாலன் சூழ்ச்சி செய்கிறான் என்று திடீரென்று அபாண்டமாக இருங்கோ பழி சுமத்துவதன் பொருள் தெரியாமல், அவனுடைய நண்பர்களே திகைத்துக் கொண் டிருந்தார்கள்!

''சரி, மன்னர்பெருமானே! நீங்கள் இன்று அமைதி யாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் நாளை நம் எதிர் காலத் திட்டத்தைப் பற்றி விரிவாகப் பேசி முடிவெடுக் கலாம்...'' என்று இருங்கோ எழுந்து, நண்பர்களை அழைத்துக்கொண்டு வேண்மாடத்துக்குச் சென்றான்.

**கொ**டுங்கோளூரில் காலையில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் கடந்த மூன்று நாட்களாகவே அந்த வீடு, கலை, இலக்கியம்



முதலியவற்றைப் பற்றிய பேச்சுக்களாலும் விவாதங் களாலும் கலகல என்றிருந்தது.

''ஏன் குமரா! அன்று தாமக்கண்ணி ஆடிய நடனம் பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லையே?'' என்று கேட்டார் கழார்த்தலையார்.

''நடனம் முடிந்ததும்தான், நான் குறுக்கே வந்து விட்டேனே, நடனம்பற்றி அவர் கருத்துச் சொல்ல எங்கே நேரம் இருந்தது?'' என்று சிரித்தாள் இளவரசி.

''ஆமாம்... இப்பொழுது உன் கருத்தைச் சொல், குமரா! என் பேத்தி நடனம் உனக்குப் பிடித்திருந்ததா?'' என்று அவனைப் பார்த்தார் தாத்தா.

''கண்ணியின் நடனம், என் இதயத்தை நன்றாகப் பிடித்துக் கொண்டுவிட்டதே!... நடனம் என்பது ஒரு தெய்வீகக்கலை; மனிதனுடைய கீழ்த்தர உணர்ச்சி களுக்குத் தூண்டுதலளிக்காமல், அவனுடைய உயர்ந்த பண்புகளுக்கு எழுச்சியூட்டி, சிறிது நேரமாவது அவனது உள்ளத்தை ஓர் அபூர்வ அமைதியில் ஆழ்த்துவதுதான், ஒரு சிறந்த நடனத்தின் இலக்கணம்— அதை நான் கண்ணி யின் நடனத்தில் கண்டேன். சிலபேர், நடனம் என்ற பெயரில் தங்கள் அழகு உடலையும் அழகு உறுப்புக்களை யும் காட்டுவதே நடனக்கலை என்று நினைக்கிறார்கள். அது பெருந்தவறு...'' என்று விளக்கமாக விமர்சனம் செய்தான் குமரன்.

அவனுடைய ஆழ்ந்த கலைநுகர்வைக் கண்டு வியந்த வாறு கேட்டுக்கொண்டிருந்தார்கள் எல்லோரும்.

''அப்படியென்றால், நடனப் பெண்ணுக்கு அழகு இருப்பதே தவறு என்கிறீர்களா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள் இளவரசி.

''இல்லை... நடனக்கலையில் பாவங்களைக் காட்டு வதற்கு அழகு என்பது ஒரு துணைக்கருவி. அழகிய

முகத்தாலும் அவயவங்களாலும், பாவங்களையும் குறிப்புக் களையும் நன்றாகக் காட்டலாம். அதற்கு அழகு பயன்பட வேண்டும். ஓவியத்திற்குத் தூரிகை கருவிதான்; தூரிகையே ஓவியமாகிவிடாது. அது மாதிரிதான், நடனத்துக்கு அழகு என்பதும். நடனக்கலையில் அழகு என்பது, பார்ப்பவர்களை உயர்ந்த உணர்வுகளுக்கு உயர்த்திச் செல்லும் கருவியாக அமையவேண்டும்...'' என்று மேலும் விளக்கினான் குமரன்.

''குமரா! இந்த இளம் வயதிலே நீ இவ்வளவு அறிவு பூர்வமாகத் திறனாய்வு செய்வதைப் பார்க்க, மிகவும் வியப்பாயிருக்கிறது!'' என்றார் கழார்த்தலையார்.

''எங்களூரிலே நடனம் சம்பந்தமான பல நூல்களைப் படித்திருக்கிறேன். பல நாட்டியக் கலைஞர்களோடு பேசியிருக்கிறேன். எத்தனையோ பேர் நடனமாடுவதை யும் பார்த்திருக்கிறேன். ஆனால், நாட்டியத்தின் இலக்கணங்களுக்கு ஏற்ற இலக்கியமாக அமைந்திருந்த கண்ணியின் நடனத்தைப்போல் நான் இதுவரை பார்த்ததேயில்லை. நடனக்கலையே தவமிருந்து பெற்ற கலைச்செல்வி உங்கள் பேத்தி...'' என்று குமரன் மனமாரப் பாராட்டுவதைக் கேட்டு தாமக்கண்ணி உள்ளம் பூரித்துப் போனாள். அவன் சொற்கள் ஒவ்வொன்றும் அவளது இதயத்தில் இனிமையான நினைவாகப் பதிந்து கலந்தது.

''தம்பி குமரா! நீ இனிமேலும் படிக்கப் போகிறேன் என்று சொல்வது எனக்கு வியப்பாயிருக்கிறது... நீ இதுவரை படித்திருக்கும் அறிவை வைத்து நீயே ஓர் ஆசிரியராயிருக்கலாம் போலிருக்கிறது!'' என்றார் கழார்த்தலையார்.

''இல்லை, ஐயா! இத்தனையும் எங்கள் ஊர் ஆசிரியர் எனக்கிட்ட பிச்சை இன்னும் படிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்று சொல்லித்தான் என்னைக்



கருங்குழலாதனாரிடம் அனுப்பியிருக்கிறார்...'' என்று அடக்கமாகச் சொன்னான் குமரன்.

''நல்லது... கருங்குழலாதன் மிகவும் கொடுத்து வைத்தவர்; இவ்வளவு அறிவுள்ள மாணவன் கிடைப்பதற்கு அவர் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவராலே உனக்குப் பெயர் கிடைக்கிறதோ இல்லையோ, உன்னாலே அவருக்குப் பெரும் புகழ் கிடைக்கப் போவது நிச்சயம். எதிர்காலத்தில் நீ குருவை மிஞ்சிய சீடன் ஆகிவிடுவாய்!''

''எவ்வளவுதான் உயர்ந்து, ஊருக்கே அரசனா னாலும், தாய்க்கு மகன்தானே, ஐயா? நான் எவ்வளவு மிஞ்சி உயர்ந்தாலும், அந்த உயர்வுக்கு ஆசிரியர்தானே காரணம்?''

''ஆமாம்... அதிலும், தன்னைவிட, தன் மாணவன் உயர்நிலைக்கு வரவேண்டும் என்றுதான் ஒவ்வொரு ஆசிரியனும் விரும்புவான். தனக்குக் கீழே இருந்தவன், தன்னைவிட மேல்நிலைக்குப் போகும்போது பொறாமைப் படாமல், பெருமைப்பட்டு மகிழ்கிற ஒரே ஆள்— ஆசிரியர் தானே?'' என்று சிரித்தார் கழார்த்தலையார்.

அன்று மாலை, தோட்டத்தில் உட்கார்ந்து, காய்ந்த பனையோலைகளை ஒழுங்காக நறுக்கிச் சீவி துளையிட்டு, சுவடி தயாரித்துக் கொண்டிருந்தான் குமரன். அப்போது வீட்டுக்குள்ளிருந்து இளவரசியும் தாமக்கண்ணியும் குதித்து ஓடி வந்தார்கள் அவனை நோக்கி.

''அப்பாடா! நம் தோட்டத்திற்கு இருந்த ஒரு குறை இப்போது தீர்ந்தது!'' என்று அவர்களைப் பார்த்துச் சிரித்தான் குமரன்.

''குறையா?... என்ன குறை?...'' என்று புருவத்தை உயர்த்தினாள் கண்ணி.

''இவ்வளவு அழகான தோட்டத்திலே, ஒரு மானோ, மயிலோ இல்லாமல் குறையாயிருந்தது. இப்போது

அந்தக் குறை முழுவதும் தீர்ந்துவிட்டது. துள்ளிவரும் மானும் குதித்தாடும் மயிலும் ஒன்றாக வந்து விட்டனவே!'' என்று குறும்பாகச் சொன்ன குமரனை, மானும் மயிலும் தங்கள் நீண்ட கண்களின் வீச்சினால் செல்லமாகக் கோபித்துச் சிரித்தன.

''எங்களுக்குள் ஒரு வழக்கு; அதற்கு நீங்கள்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்,'' என்றாள் தாமக்கண்ணி.

''வழக்கா?... வழக்குகளுக்குத் தீர்ப்புச் சொல்கிற அளவுக்கு எனக்கு அனுபவம் போதாது... தாத்தாவிடம் கேளுங்கள்...''

''தாத்தாதான் உங்களிடம் கேட்கச் சொல்லி விட்டார்... 'உங்கள் வழக்கு, இளமை சம்பந்தப்பட்டது; அதிலே முதியவனுக்கு இடம் இல்லை' என்று சொல்லி, உங்களிடம் அனுப்பி விட்டார்...''

''இளமை சம்பந்தப்பட்ட வழக்கா?... என்ன அது?''

''என்னைவிட, கண்ணிதான் அழகி என்கிறேன் நான்; ஆனால் அவளோ, தன்னைவிட நான்தான் அழகு என்று வாதாடுகிறாள். எங்களிலே யார் அதிக அழகு என்று நீங்கள்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்...'' என்று தங்கள் வழக்கைத் தாக்கல் செய்தாள் தேவி.

குமரன் திடுக்கிட்டான்: ஓர் அழகி, இன்னொருத்தியை அதிக அழகி என்று சொல்கின்ற அதிசயத்தைக் கண்டு திகைத்து நின்றான்! இரண்டு அழகிகளிடையே இயல்பாக ஏற்படுகின்ற பொறாமையைத் தாண்டி, அந்த இரு உள்ளங்களிடையே மலர்ந்திருக்கின்ற அழகான நட்பைப் பார்த்து வியந்தான்.

''இது, மிக மிகக் கடினமான வழக்காயிற்றே? முல்லை மலர் அழகா, தாமரை மலர் அழகா என்று கேட்பது போலிருக்கிறதே! இரண்டும் அழகுதான்...'' என்று சமாளித்தான் குமரன்.



''அவற்றிலே எது அதிக அழகு என்பதுதான் இப்போது வழக்கு. அதற்கு நீங்கள் தீர்ப்புச் சொல்லித் தானாக வேண்டும்,'' என்று இருவரும் அவன் எதிரே உட்கார்ந்து விட்டார்கள்.

எப்படித் தீர்ப்புச் சொல்வது என்று புரியாமல் விழித்தவாறு, இருவரையும் ஏற இறங்கப் பார்த்தான் குமரன். இப்படி ஒரு தர்மசங்கடமான நிலை அவனுக்கு ஏற்படுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''யார் அதிக அழகு என்று மதிப்புப் போடும் முன், அழகு என்பது என்ன என்று புரிந்து கொள்ள வேண்டும். கண், மூக்கு, கழுத்து, உடல் என்று ஒவ்வொன்றின் அழகையும் கூட்டி மொத்தம் பார்ப்பது அல்ல, ஒரு பெண்ணின் அழகு. சர்க்கரை, பால், அரிசி இவற்றின் ருசிகளின் கூட்டல் அல்ல, பொங்கலின் ருசி; இவை யெல்லாம் ஒன்று சேரும்போது ஏற்படுகிற ஒரு புது ருசிதான் பொங்கல் ருசி. அதுபோல, புற உறுப்புக்களின் அழகெல்லாம் சேர்ந்து, அகத்தில் உள்ள பண்புகளின் அழகும் சேரும்போதுதான், அழகு என்று பார்ப்போர் கண்களில் படுகிறது. அம்பு நேராக இருந்தாலும், அது அழகான பொருளாகத் தோன்றுவதில்லை; யாழ் வளைந்திருந்தாலும் அது அழகுப் பொருளாகத் தென்படுகிறது—இல்லையா?'' என்று சுற்றி வளைத்து விளக்குவதிலே நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான் அவன்!...

''அது சரி... நீங்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, யார் அதிக அழகாகத் தென்படுகிறாள் என்று சொல்லுங்கள்...''

''அதில்தான் சிக்கல் இருக்கிறது!... அழகு என்பது, பார்க்கப்படும் பொருளில் இல்லை; பார்ப்பவர்களின் கண்களில்தான் இருக்கிறது... ஒருவன் கண்ணுக்குக் கிளியோபாட்ராவாகத் தோன்றுபவள், இன்னொருவன் கண்ணுக்குக் சூர்ப்பநகையாகக் காட்சியளிப்பாள்.

ஏனென்றால், ஒருவரிடம் பழகப் பழக, அவரிடம் நாம் அதிகமாக ஈடுபட்டு விடுகிறோம்... தாமக்கண்ணியோடு அதிகமாகப் பழகுகின்ற தாத்தாவுக்கும் இந்த ஊராருக்கும், அவனே சிறந்த அழகியாகத் தோன்றுவான். இளவரசியோடு அதிகமாகப் பழகுகின்ற அரண்மனைக் காரர்களுக்கு, இளவரசி பெரும் அழகியாகத் தோன்றுவார்கள்... அதனால்தான், காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது,'' என்று அவன் தீர்ப்பே சொல்லாமல், மழுப்பிச் சமாளிக்கும் திறமையைக் கண்டு சிரித்தார்கள் அழகிகள்.

மாலைக் கதிரவன் மேலைவானத்தில் சரிந்து இறங்கிக் கொண்டிருக்கும்போது, இளவரசி வஞ்சிக்குத் திரும்பப் புறப்பட்டாள்.

''என்ன தேவி! இன்னும் கொஞ்சநாள் இருந்துவிட்டுப் போகலாமே?'' என்று கெஞ்சினாள் தாமக்கண்ணி.

''இல்லை, கண்ணி! இன்று திரும்பிவருவதாக அப்பாவிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்...'' என்று தோழியின் கைகளைப் பரிவோடு பிடித்துக்கொண்டாள் இளவரசி.

''அப்படியென்றால், தேவி போகட்டும், கால தாமதம் செய்தால், அரசரே தேடி இங்கு வந்துவிடுவார்...'' என்றார் கழார்த்தலையார்.

''இந்த இரவு நேரத்திலே புறப்படுகிறாயே, தேவி?'' என்று கேட்டாள் உத்திரை.

''இரவு என்றாலும் நிலாநாள்தானே? வெண்ணிலா வெளிச்சத்தில் காட்டின் அழகுக் காட்சிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டே போக ஆசையாயிருக்கிறது, அம்மா! அதனால்தான் இப்போது புறப்படுகிறேன்...''

''சரி... அரசர் நலத்தை நான் மிகவும் கேட்டதாகச் சொல், தேவி!... அதோடு, இந்தக் குமரன் விஷயம்—?'' என்று நினைவூட்டினார் கழார்த்தலையார்.



''குமரனும் இப்போது என்னுடன் வரட்டுமே?... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று அவன் பக்கம் திரும்பினாள் தேவி.

''இளவரசியின் கட்டளைக்காகத்தான் காத்திருக்கிறேன்.''

அதைக் கேட்டதும், விரக்தி பாவத்தோடு ஒரு புன்னகை அவளது இதழ்களில் தவழ்ந்து சென்றது.

''கட்டளையிடும் இளவரசியாக என்னை என்றுமே உலகம் பார்க்கப் போவதில்லை...'' என்று தேவி மெதுவாகச் சொன்னதன் பொருள் கழார்த்தலையாருக்கு மட்டும்தான் தெரியும்!...

'என்ன சொல்கிறீர்கள், இளவரசி?' என்று குமரன் துருவிக் கேட்க நினைப்பதற்குள், ''சரி, புறப்படுவோம்... மாதரி! வீரர்களைப் பல்லக்குக் கொண்டு வரச் சொல்...'' என்று தோழியை அனுப்பினாள் சிந்தாதேவி.

தாமக்கண்ணி, குமரனைப் பார்த்து ''நீங்களும் இப்போதே போக வேண்டுமா? உடலெல்லாம் புண்கள் நன்றாக ஆறும் வரை இருந்துவிட்டுப் போகலாமே?'' என்று கேட்டதும், அவளது பரிவையும் அன்பையும் கண்டு நெக்குருகினான் அவன்.

''உடலிலே எனக்கு ஒன்றும் இல்லை, கண்ணி!... இளவரசியுடன் சென்றால், கருங்குழலாதனாரிடம் எளிதாக அறிமுகம் கிடைக்கும், இல்லையா?''

''குமரா! சில நாட்கள்தான் இங்கு இருந்தாலும், எங்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பழகிவிட்டாய்... வஞ்சியிலிருந்து அடிக்கடி இங்கே வந்துவிட்டுப் போ...'' என்று குரல் தழதழக்கச் சொன்னார் தாத்தா.

''நிச்சயம் வருவேன், ஐயா!... இனிமேல் இது உங்கள் குடும்பம் மட்டும் அல்ல; என் குடும்பம்...'' என்ற குமரனின் கண்கள் ஈரத்தால் நனைந்து கசிந்தன.

''கருங்குழலாதனாரிடம் என்னைப் பார்த்த விவரத்தைச் சொல்... குமரா! நானும் அவருக்குக் கடிதம் கொடுக்கலாம். ஆனால் இளவரசியே அறிமுகப்படுத்தும் போது, என் கடிதம் தேவையில்லை... நன்றாகப் படித்துச் சிறந்த கவிஞராய்ப் பெயரெடுக்க வாழ்த்துகிறேன்...'' என்ற கழார்த்தலையாரின் கால்களில் விழுந்து வணங்கினான் குமரன். அவனை வாரியெடுத்து அணைத்து வாழ்த்தியனுப்பினார் புலவர்.

புறப்படும்போது, இளவரசி, ''கண்ணி! நீ ஒருமுறை வஞ்சிக்கு வரக்கூடாதா?'' என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

''ஓ!... வருகிறேன்... திருவாதிரை விழாக் காலத்தில் வஞ்சி வருகிறேன்...'' என்று தோழி ஒப்புக் கொண்டதும், இளவரசி வியப்பில் திகைத்துப் போனாள்:

இதற்கு முன் எத்தனையோ தடவை, அவளை அரண்மனைக்கு வரச் சொல்லிக் கெஞ்சியிருக்கிறாள் தேவி; அப்போதெல்லாம் வர மறுத்து விட்ட கண்ணி இப்போது வரச் சம்மதித்ததற்கு விசேஷக் காரணம் இருக்கும் என்று தேவி சந்தேகப்படவேயில்லை.

கழார்த்தலையார் குடும்பத்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு, இளவரசி பல்லக்கில் ஏறிக் கொண்ட பிறகு, பின்னாலே குதிரையில் புறப்பட்டான் குமரன்.

வீட்டு வாசலைக் கடந்து தெருவில் சிறிது தூரம் சென்ற பிறகு, ஏதோ நினைத்துக் கொண்டவனாய், சட்டென்று திரும்பிப் பார்த்தான் குமரன்.

அங்கே— வீட்டு வாசலில் நின்ற தாமக்கண்ணியின் விழிகளில் கசிந்த கண்ணீர், அவளது மலர்க்கன்னங்களில் முத்துக்களாக உருண்டு நகர்வதைப் பார்த்த அவன் உள்ளம் நெகிழ்ந்து நைந்தது.

பல்லக்கிலே இளவரசியும் மாதரியும் எதிரெதிரே உட்கார்ந்திருந்தார்கள். முன்னே மூவரும் பின்னே



மூவருமாக, வீரர்கள் குதிரைகளில் சென்று கொண்டிருந்தார்கள்.

அரங்கத்திலே தன் முழுத் திறமையையும் காட்டும் நடிகன்போல, வெண்ணிலவு வானத்திலே முழு வட்டமாகப் பால் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. அந்த முத்து ஒளியில், பச்சை மரங்களும் கொடிகளும் பளபளத்துத் தெரிந்த அழகு, மிகவும் ரம்மியமாயிருந்தது. தவழ்ந்து வந்த தென்றலை ஊஞ்சலாகக் கொண்டு, புதிதாக மலர்ந்த காட்டுப்பூக்களின் மணம் சுற்றி விளையாடியது.

சில் வண்டுகளின் இடைவிடாத ரீங்காரம், அந்த அமைதியான சூழ்நிலைக்குப் பின்னணி இசை வழங்குவது போலிருந்தது. மெதுவாக வீசிக் கொண்டிருந்த காற்று, வானத்திலே மிதந்த வெண்மேகங்களை ஒவ்வொன்றாக நகர்த்தி, நிலவை மறைக்க முயன்று, சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தது. கூட்டுக்குள்ளே அடைந்திருந்த பறவைகள், கடைசியாகத் தம் குரலை ஒலித்துக் கொட்டாவி விட்டுவிட்டு, தூக்கத்தில் ஆழ்ந்தன.

பல்லக்கின் முன்பு சிறிது தூரத்தில் போய்க் கொண்டிருந்த குமரனை அழைத்தாள் இளவரசி.

குமரனை அழைப்பதற்காக, பல்லக்கை மூடியிருந்த மெல்லிய திரையை நீக்கியபடி அவள் முகம் வெளியே வருவதற்கும், மேகங்களின் திரையிலிருந்து நிலவு முகத்தை விடுவித்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது. அப்போது காட்டிலே வீசிய பால்ஒளிக்குக் காரணம், அவள் முகமா அல்லது வெண்ணிலவா என்று தடுமாறுபவன்போல், இரண்டையும் மாறி மாறிப் பார்த்தான் குமரன்.

அவள் முகத்திலே தவழ்ந்து பிறழ்ந்தோடிய மான்விழிகளுக்கு ஒப்பாக, தன்னிடம் இல்லையே என்று வெட்கப்பட்டு மறுபடியும் தன் முகத்தை மேகத்திற்குள் ஒளித்துக் கொண்டது நிலவு.

''ஏன் இப்படிப் பேசாமலே வந்து கொண்டிருக்கிறீர்கள்?... ஏதேனும் மௌன விரதமா?'' என்று கேலியாகச் சிரித்தாள் தேவி. அந்தச் சிரிப்பிலே கன்னத்தில் தோன்றிய அழகுக்குழி, அந்த இருளிலும் அவனை மயங்க வைத்தது.

''இல்லை... இளவரசி ஏதோ தனிமையில் இயற்கையழகை ரசித்துக் கொண்டு வரும்போது—'' என்று அவன் சொன்னதும் குறுக்கிட்டாள் தேவி:

''இயற்கையழகு எல்லாவற்றையும் தனிமையில் ரசிக்க முடியுமா? சில அழகுகளைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளும்போதுதான் ரசனை இன்பம் கிடைக்கும், இல்லையா?''

''உண்மைதான்; ஆனால் அப்படிப் பகிர்ந்து ரசிக்க வேண்டிய அழகுகள் என்னென்ன என்று அடியேனுக்குத் தெரியாதே, இளவரசி!'' என்று பணிவாக அவன் சொன்னதும் அவள் கலகல என்று சிரித்தாள்:

''இப்படிச் சிரித்துப் பேசிக்கொண்டே போகலாம் என்றுதானே, உங்களை இப்போது என்கூட அழைத்து வந்தேன்...'' என்று மெதுவாக அவன் காதில் மட்டும் கேட்கும்படி முணுமுணுத்த தேவி, ''அங்கே கொடுங்கோளூரிலே, குறும்புப் பேச்சும் குறுக்குப் பேச்சும் கொள்ளை கொள்ளையாகயிருந்தது. ஆனால் இப்போது இங்கே ஒன்றையும் காணோமே?'' என்று கேட்டாள்.

''அங்கே நீங்கள் தாமக்கண்ணியின் தோழியாக இருந்தீர்கள்; அதனால் இயல்பாகப் பேச முடிந்தது. ஆனால் இப்போது நீங்கள், இளவரசியாக, பல்லக்கிலே, அரசாங்க வீரர்கள் சுற்றியிருக்கின்ற சூழ்நிலையில், அப்படியெல்லாம் குறும்பாகப் பேச முடியுமா? ஆகவே தான் இப்படி ஊமையாக வருகிறேன்...''

''ஊமைகளுக்கு அரசாங்கத்தில் மரியாதை கிடையாது, தெரியுமோ?''



''அதிகப்பிரசங்கிகளுக்குத் ஆஸ்தானத்தில் அனுமதியிருக்காதே, இளவரசி!... அகலாது அணுகாது தீக்காய்பவர்போல், அரசாங்கத்து ஆட்களிடம் பழகவேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறாரே?''

''நான் ஒன்றும் தீ இல்லை; ஆகவே நீங்கள் பக்கத்தில் வந்து பேசலாம்.''

''இளவரசியின் கட்டளையை நான் மீற முடியுமா?'' என்று குமரன் சொன்னதும் சட்டென்று அவனை நிமிர்ந்து, கோபமாகப் பார்த்தாள்:

''இனிமேல் என்னை இளவரசி, இளவரசி என்று கூப்பிடாதீர்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. என்னைச் சாதாரணமாக 'தேவி' என்று அழைத்தால் போதும்...''

''இளவரசிபோல் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கு, பட்டமும் அந்தஸ்தும் சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் என்னைப் போன்ற சாதாரணமானவர்கள் அப்படி நினைக்க முடியாது. உங்களை 'தேவி' என்று அழைக்கச் சொல்வது, உங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது; ஆனால் அதற்காக நான் உங்களை அப்படிக் கூப்பிடுவது, எனக்குத் தகுதியுமில்லை; மரியாதையுமில்லை...'' என்று மறுத்தான் குமரன்.

''அடடா!... உங்களோடு பேசி ஜெயிக்க முடியுமா?'' என்று சலிப்பதுபோல் குறுகுறுத்தாள் தேவி.

''இது போன்ற சாதாரணப் பேச்சுக்களில் நான் உங்களை ஜெயித்து விடலாம்; ஆனால் ஆழமான சிந்தனைகளில், அறிவுபூர்வமான விவாதங்களில் நான் உங்கள் கால்தூசி பெறமாட்டேன்!'' என்றதும் இளவரசி பதறி விட்டாள்:

''இல்லை... இல்லை... அப்படிச் சொல்லாதீர்கள்... உங்களை நீங்களே இப்படித் தாழ்த்திக் கொள்வதை நான்

பொறுத்துக் கொள்ள முடியாது!... ஊர் உலகத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் சாதாரணமானவராயிருக்கலாம்; ஆனால் என்னைப் பொறுத்தவரையில்—'' என்று ஏதோ சொல்ல வந்தவள், நாணம் எழுப்பிய தயக்கத்தால் சற்றே நிறுத்திக் கொண்டு, சுற்றிலும் பார்வையைத் திருப்பி விட்டாள்.

அவள் என்ன வார்த்தைகளைச் சொல்லத் தயங்குகிறாள் என்பதை அவளுடைய பாவபூர்வமான விழிகளின் அசைவிலே புரிந்து கொள்கிறான் அவன்.

அந்தஸ்தைப் பொறுத்தவரையில், மலையும் மடுவுமாக உள்ள இரு உள்ளங்கள், விழிகளின் மௌன மொழியாலே சங்கமமாகி ஐக்கியப்படுவதை, அந்த இருளிலும் துல்லியமாகக் கவனித்து வியந்து கொண்டிருந்தாள் மாதரி.

தங்களின் மௌனத்தின் அர்த்தத்தைத் தோழி புரிந்து கொண்டிருப்பாளோ என்று துணுக்குற்ற இளவரசி, சட்டென்று மேலே பார்த்தவாறு ''அதோ, பார்த்தீர்களா, வெண்ணிலாவை மூடிவிட மேகங்கள் எவ்வளவு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன?'' என்றாள்.

''இளவரசி! நீங்கள் கவிதையிலக்கணத்தை நன்றாகப் படித்திருப்பதாகத் தாமக்கண்ணி கூறினாளே, நீங்கள் இதுவரை கவிதையே பாடவில்லையா?'' என்று ஆர்வமாகக் கேட்டான் குமரன்.

''ஏதோ ஒன்றிரண்டு இயற்கைக் காட்சிகளை வைத்துப் பாடியிருக்கிறேன்; ஆனால், ஆழமான கருத்துள்ள பாடல்களை நான் இன்னும் எழுதவில்லை...''

''ஏன், உங்கள் அறிவுக்கு, எத்தனையோ கருத்துள்ள பாடல்களைப் பாடலாமே?''

''கவிதைக்கு அறிவு மட்டும் போதாது; உள்ளத்தில் அனுபவமும் உணர்ச்சித் தூண்டுதலும் வேண்டும்.



புறப்பொருளிலே, நான் பாடுவதற்குத் தகுதியுள்ள எந்த மனிதனையும் நேற்று வரை சந்திக்கவில்லை; அகப்பொருளில் பாடுவதற்கு நேற்றுவரை எந்த அனுபவமும் எனக்கு ஏற்படவில்லை...'' என்று தலை குனிந்தபடி முகஞ்சிவக்கச் சொல்லிக் கொண்டிருந்தபோது— சிறிது தூரத்தில் குதிரைகள் பெருங்கூட்டமாய்ப் பாய்ந்து வரும் சப்தம், கிழக்குத் திசையிலிருந்து கேட்டது.

சிறிது நேரத்தில், பத்துப் பதினைந்து குதிரை வீரர்கள் ஆயுத பாணிகளாய் வருவதைப் பார்த்து, பல்லக்குக்கு முன்னும் பின்னும் சென்ற சேரநாட்டு வீரர்கள், இளவரசியைக் காப்பாற்றச் சுற்றிலும் நின்றார்கள்.

சேரநாடு அல்லாத வேறு ஏதோ நாட்டைச் சேர்ந்த குதிரை வீரர்களின் கூட்டம், சேர வீரர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கத் தொடங்கியது.

## 21

திடீரென்று கிழக்கேயிருந்து வந்த அந்தக் குதிரை வீரர்களின் கூட்டத்தில் ஒருவன் ''பல்லக்கைத் தூக்குங்கள்!'' என்று உறுமியதும், உருவிய வாள்களுடன் வந்த அந்தக் கூட்டத்தை, சேர வீரர்கள் எதிர்த்துத் தாக்கினார்கள்.

இவர்கள் ஆறுபேர்தான்; அவர்களோ பத்துப் பதினைந்து பேர். இளவரசியின் பக்கத்திலிருந்த குமரன் சட்டென்று வாளை உருவிக்கொண்டு, நரிக்கூட்டத்திற்குள் புகுந்த சிங்கம் போல் குதித்தான். அவனுடைய

மின்னல்வேக வாள்வீச்சு, எதிரிகளைப் பல்லக்கின் பக்கம் நெருங்க விடாமல், சுற்றிச் சுற்றி, வலதுசாரி இடது சாரியாகச் சுழன்றது.

குமரனுடைய வாள் வீச்சைக் கண்டு வியந்த சேர நாட்டு வீரர்களுக்குப் புது உற்சாகமும் உத்வேகமும் கிளம்பியது. அவர்களும் சிறிப்பாய்ந்து போரிட்டார்கள். ஒன்றுடன் ஒன்று நெருங்கிப் போராடும் வாளின் முனைகள், நிலாவொளியில் பளிச் பளிச் என்று மின்னலாய் ஒளி வீச, மோதும் சப்தம் இடியோசையாக, காடெல்லாம் கிடுகிடுக்க வைத்தது.

சூறாவளியாகச் சுழன்று பாய்ந்த குமரனின் வாள் வீச்சுக்கே பதில் சொல்ல முடியாமல், வந்த எதிரிகளின் கூட்டம் தடுமாறியது. காயம் பட்டுவிடாமல் பின்னாலும் பக்கவாட்டிலும் நகர்ந்து எதிர்த்துப் பார்த்தார்கள் அவர்கள். சக்கரவியூகமாக மாறி, குமரனைச் சிறைப் பிடித்துவிடவேண்டும் என்று அவர்கள் முயலும்போது, சடாரென்று ஒரு பக்கமாகத் துள்ளிக் குதித்து வாளை வீசி அவர்கள் சூழ்வதைத் தவிர்த்துக்கொள்வான் குமரன்.

நெடுநேரப் போராட்டத்துக்குப் பிறகும், குமரனின் கைத்திறனோ, வீச்சு வேகமோ குறையவில்லை. உயிர் பிழைத்தால் போதும் என்று புறமுதுகிட்டு ஓடத் தொடங்கி விட்டார்கள் எதிரிகள். அவர்களில் யாராவது ஒருவனைப் பிடித்துவிட வேண்டுமென்று எண்ணி, சிறிது தூரம் குதிரையில் விரட்டிப்பார்த்தான் குமரன்; முடிய வில்லை. அவர்களும் குதிரைகளும் புறமுதுகுகாட்டி ஓடுவதில் நல்ல அனுபவம் பெற்றவர்கள் போலிருக்கிறது! தப்பிவிட்டார்கள்!...

வெற்றிவீரனாய் களைப்புடன் திரும்பி வந்த குமரனை ஆதுரத்துடன் பார்த்துக் கண்களால் நன்றி சொன்னாள் தேவி:



''நீங்கள் இல்லாவிட்டால் இன்று என் கதி என்னவாகியிருக்கும்? அன்று என் தோழியின் உயிரைக் காப்பாற்றினீர்கள்; இன்று என் உயிரையும் காப்பாற்றியிருக்கிறீர்கள்...''

''எனக்கென்னவோ, இந்தக் கூட்டம் நம்மைக் கொல்ல வந்த கூட்டமாகத் தெரியவில்லை. கொள்ளைக்காரர்களாயிருப்பார்களா அல்லது ஏதேனும் அரசியல் சூழ்ச்சியாயிருக்குமா என்று யோசிக்கிறேன்... அவர்கள் யார் என்று கண்டுபிடிக்கத்தான் ஒருவனையாவது பிடித்துவிட வேண்டும் ஒன்று விரட்டிப்பார்த்தேன்; முடியவில்லை. சண்டைப் பயிற்சியைவிட ஓடும் பயிற்சி நிறையப் பெற்றிருப்பார்கள் போலிருக்கிறது!...'' என்று சிரித்தான் குமரன்.

''அரசியல் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும். கொள்ளையடிப்பதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது?''

''ஏன் இல்லை? உலகத்திலேயே விலை மதிக்க முடியாத அழகுச் செல்வம் இங்கே இருக்கிறதே,இளவரசி!'' என்று மெதுவாக முணுமுணுத்தான் அவன். அதைக் கேட்டதும் தேவியின் சிவந்த முகத்தில் பொங்கிய நாணச் சிரிப்பு, நிலவொளியில் மேலும் அழகாகத் தோன்றியது.

''சரி... இளவரசி! நீங்கள் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்...''

''இல்லை... நீங்கள்தான் சண்டையிட்டுக் களைத்துப் போயிருக்கிறீர்கள். நீங்கள் பல்லக்கில் ஓய்வு எடுத்துக் கொண்டு வாருங்கள். நான் குதிரையில் வருகிறேன்....''

''இல்லை... இல்லை... எனக்கொன்றும் களைப்பு இல்லை. நீங்கள் பல்லக்கில் ஏறிக்கொள்ளுங்கள்...'' என்று, குதிரையில் ஏறிக்கொண்டான் அவன்.

வஞ்சி அரண்மனைக்குச் சென்றதும், குமரனை மண்டபத்தில் உட்காரவைத்துவிட்டு, அந்தப்புரத்தில் சேரன் இருக்குமிடத்திற்குத் துள்ளி ஓடினாள் சிந்தாதேவி.

வழியில் நடந்த நிகழ்ச்சியை அவள் சொன்னதும், தந்தை திடுக்கிட்டுப்போனான்:

''அப்படியா? உனக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?'' என்று படபடத்தான் சேரன்.

''நான்தான் இதோ நன்றாக வந்திருக்கிறேனே?'' என்று சிரித்தாள் மகள்.

''அந்த அயோக்கியர்கள் யார்? நம் வீரர்கள் அவர்களைப் பிடிக்க முடியவில்லையா?''

''நம் வீரர்கள் ஆறு பேர்தான்; அவர்கள் பத்துப் பதினைந்து பேர்... நம் ஆட்கள் என்ன செய்ய முடியும்?... நான் ஒரு வீரரை கொடுங்கோளூரிலிருந்து அழைத்து வந்தேன். அவர்தான் அந்த அயோக்கியர்களை அடித்து விரட்டி என்னைக் காப்பாற்றினார். அவர் இல்லாவிட்டால், நான் இங்கே உங்கள் மகளாகத் திரும்பி வந்திருக்க முடியாது...''

''அப்படியா? நம் வீரர்களால் முடியாததை அந்த ஒரு வீரன் சாதித்துவிட்டானா?''

''ஆம், அப்பா! அவர் சாதாரண வீரர் அல்ல; கொடுங்கோளூர்க் காட்டில் தாமக்கண்ணியைத் தாக்க வந்த புலியைத் தனியாளாக நின்று போரிட்டுக் கொன்ற புலியப்பா அவர்!''

''அப்பேர்ப்பட்ட வீரனா?... அவன் யார்?'' என்று ஆவலோடு விசாரித்தான் மன்னன்.

''அவர் சோழநாட்டுக்காரர்; இங்கே நம் கருங்குழலாதனாரிடம் தமிழ்க் கவிதைப் பயிற்சி பெற, அவருடைய ஆசிரியர் அனுப்பி வைத்திருக்கிறார்...'' என்று விவரங்களைக் கூறினாள் தேவி.

''என்ன தேவி! இப்படிப்பட்ட ஒரு சிறந்த வீரனை, தமிழ்க் கவிதை பாடவா அனுப்புவது? நம் படையில்



அவனைச் சேர்த்துக் கொண்டால் என்ன?... அவனுடைய வீரத்துக்கும் திறமைக்கும் படையிலே சேர்ந்து, ஏனாதிப் பட்டமெல்லாம் பெற்றுப் புகழ் பெறுவானே?'' என்று யோசனை தெரிவித்தான் சேரன்.

உடனே தேவியின் முகம் கோபத்தால் சிவந்து கனன்றது:

''அப்பா! நிறுத்துங்கள்... அந்த வீர இளைஞரை உங்கள் போர் வெறிக்குப் பலி கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன். உங்கள் நாட்டு அப்பாவி மக்களுடைய வாழ்க்கையோடும் உயிரோடும் உங்கள் விளையாட்டை வைத்துக் கொள்ளுங்கள்! அந்தச் சோழ நாட்டு இளைஞரின் வாழ்க்கையோடு விளையாட நான் அனுமதிக்க மாட்டேன்!''

மகளுடைய ஆத்திரத்தைக் கண்டு திகைத்துப் போனான் தந்தை:

''சரி, தேவி! இந்த அந்தப்புரத்தில், என் ஆணையை விட, உன் ஆணைதானே செல்லுபடியாகும்?'' என்று சிரித்த சேரன், ''சரி, அந்த வீரனை நான் பார்க்கவாவது அனுமதிப்பாயா?'' என்று பணிவாகக் கேட்டான்

''நீங்கள் நிச்சயம் பார்க்க வேண்டும், அப்பா!'' என்று சொல்லி, குமரனை உள்ளே கூட்டிவர ஆணையிட்டாள்.

குமரன் வந்து, ''வணக்கம் அரசே! வாழ்க நின் கொற்றம்!'' என்று அடக்கத்தோடு பணிந்து நின்றான்.

அவனை ஏற இறங்கப் பார்த்தான் மன்னன். சிறந்த வீரனுக்குரிய திண்ணென்ற தோள்களும் பரந்த மார்பும் நீண்ட கரங்களும் சேரனை மிகவும் கவர்ந்தன. இத்தனை வீரத்துக்கும் பின்னணியாக, அவன் முகத்திலே நிலவிய அமைதியான கம்பீரம் எடுப்பாக இருந்தது.

''குமரா! நீ சிறந்த வீரன் என்பதை உன் அடக்கமே காட்டுகிறது. உன் வீரத்தைப் பற்றி இளவரசி சொன்

னாள்: தாமக்கண்ணியைப் புலியிடமிருந்து காப்பாற்றிய நீ. இப்போது என் மகளையும் விரோதிகளிடமிருந்து காப்பாற்றியிருக்கிறாய். இரண்டுக்குமே நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்... இந்த நன்றிக்கடனுக்குப் பிரதியாக உன்னை என் படை—'' என்று அரசன் ஆரம்பித்ததும், சட்டென்று குறுக்கிட்ட தேவி, ''அப்பா! நீங்கள் ஒன்றும் பேசவேண்டாம்!'' என்று கடுகடுத்தாள்.

மகளின் கோபத்தைக் கண்டு பயந்த மன்னன், பேச்சை வேறு பக்கம் திருப்பினான்!

தந்தையின் பேச்சை ஏன் மகள் இவ்வளவு கோபத்துடன் இடைமறித்தாள், அவர் என்ன சொல்லவந்தார் என்பதெல்லாம் புரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்தான் சோழநாட்டு வீரன்!

''குமரா! இளவரசி கொடுங்கோளூரிலிருந்து வருகிறாள் என்பது தெரிந்துதான் எதிரிகள் அவளைத் தூக்கிச் செல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். நான் முன்பே கேள்விப்பட்டிருந்தேன்— என் எதிரி கரிகாலன் இளவரசியைத் தூக்கிச் செல்லத் திட்டமிட்டிருக்கிறான்—'' என்றதும், குமரன் சட்டென்று குறுக்கிட்டான்:

''அரசே! மன்னிக்க வேண்டும்... கரிகால் சோழர் இப்படிப்பட்ட கண்ணியக் குறைவான காரியங்களில் ஈடுபடமாட்டார்...''

குமரனுடைய அழுத்தமான மறுப்பைக் கண்டு திகைத்தான் சேரன்.

''அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?''

''என்னைப் பார்த்தவுடனே, நான் அடக்கமானவன் என்று எப்படி நீங்கள் உறுதியாகச் சொன்னீர்களோ, அப்படித்தான் நானும் சொல்கிறேன்— நான் சோழ நாட்டில் கரிகாலரைப் பல தடவை பார்த்திருக்கிறேன்...''



''சரி, அதைப்பற்றி நான் விசாரித்துக் கொள்கிறேன்... குமரா! நீ கருங்குழலாதனாரிடம் போகவேண்டுமல்லவா? நானே அவரிடம் உன்னை அழைத்துப் போகிறேன்...'' என்று அன்போடு சொன்னான் மன்னன்.

''வேண்டாம் அப்பா!... நான் இவரை அழைத்துப் போகிறேன்... நானும் ஆசிரியரைப் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன... இன்று மாலை இவரை அழைத்துக் கொண்டு செல்கிறேன்...'' என்றாள் மகள். தந்தையிடம் குமரனை விட அவளுக்கு விருப்பமில்லை.

''சரி, அதுவரை நம் வேண்மாடத்தில் அரச விருந்தினருக்குரிய மரியாதையுடன் குமரன் தங்கியிருக்கட்டும்...'' என்றான் சேரன்.

''மிக்க நன்றி, அரசே! இந்த எளியேனுக்கு நீங்கள் மிகவும் பெரிய தகுதிகள் வழங்குகிறீர்கள்...'' என்று மனம் நெகிழ்ந்து நன்றி சொன்னான் குமரன்.

''தகுதிகள், பிறப்பால் வருவதில்லை, குமரா! செயல்களால்தான் வருகின்றன...'' என்று சிரித்தவாறு, அவனுடைய தோளில் தட்டிக்கொடுத்தான் சேரமன்னன்.

அன்று மாலை, சிந்தாதேவியும் குமரனும் குதிரைகளில் ஏறி, அரண்மனையிலிருந்து புறப்பட்டார்கள்.

அவர்கள் போகும் வழியெல்லாம் மக்கள் ஒதுங்கி நின்று இளவரசிக்கு வணக்கம் செலுத்தினார்கள். இளவரசி பக்கத்தில் செல்லும் புதிய ஆளை ஆர்வமாகப் பார்த்தார்கள். 'புதிதாகச் சேர்ந்துள்ள மெய்க்காப்பாளர் போலிருக்கிறது' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

''இளவரசி! நீங்கள் கம்பீரமாகக் குதிரையில் பவனி வரும் காட்சியைப் பார்க்கும்போது, நீங்கள் ஒரு அரசியாக இந்த நாட்டை ஆளக்கூடிய தகுதி பெற்றவர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது...'' என்றான் குமரன்.

"அரசியாவதா?... இளவரசியாக இருப்பதே எனக்குப் பிடிக்கவில்லை..."

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? தன் வாரிசாக உங்களை உருவாக்க மன்னர் உங்களை ஆண்மாதிரி வளர்த்துவருவதாகச் சொல்கிறார்களே?"

"போர்ப் பயிற்சியும் புறத் தோற்றங்களும் நடத்தையும் என்னை ஓர் ஆண் மகனாக்க முயற்சி செய்யலாம்; ஆனால் உள்ளுக்குள்ளே ஒரு பெண்ணின் பலவீனமான இதயம்தானே இருக்கிறது? அந்த இதயத்தில் ஊறும் உணர்வுகளும் எண்ணங்களும் என்னை ஒரு பெண்ணாகத் தானே வாழச் செய்கின்றன? இதோ, இந்த வீதிகளிலே எல்லோரும் பார்த்து வணங்கும்படி இளவரசியாகச் செல்வதே எனக்குப் பிடிக்கவில்லை; நானும் ஒரு சாதாரணப் பெண்ணாக, தரையிலே நடந்தவாறு, சுதந்திரமாகச் சுற்றித் திரிய வேண்டும் என்று என் உள்ளம் ஆசையாய்த் துடிக்கிறது..."

"நீங்கள் சாதாரணப் பொண்ணானால்கூட, சுதந்திரமாக, யாரும் பார்க்காமல், நடக்கமுடியாது. உங்களைச் சுற்றி அப்போதும் பெருங்கூட்டம் பார்த்துக் கொண்டே வரும்..."

"ஏன்? இளவரசிப் பட்டம் போன பிறகுமா, கூட்டம் வரும்?"

"ஆம்... பார்ப்பவர்கள் கண்களைக் கவர்ந்திழுக்கும் கட்டழகு இருக்கிறதே!" என்று குறும்பாகச் சிரித்த குமரன் "மேல் நாடுகளில், இவ்வளவு அழகு இருந்தால், ஒரு சாதாரணப் பெண்கூட, அரசியாகி அதிகாரம் செலுத்த முடியுமாம்..." என்றான்.

"எனக்கு இந்த அரசியல் விவகாரங்களே பிடிக்கவில்லை; அரசியல் மட்டுமல்ல— அரசர்களையும்கூட பிடிக்கவில்லை!"



"ஐயோ! அரசர்கள் என்ன பாவம் செய்தார்கள்?" என்று படபடத்தான் குமரன்.

"சில நாட்களுக்கு முன், வேண்மாடத்தில் இரண்டு சோழநாட்டுக் குறுநில மன்னர்கள் வந்திருந்தார்கள்..." என்று அவள் ஆரம்பித்ததும், "யார், இருங்கோவா?" என்று குறுக்கிட்டுக் கேட்டான் குமரன்.

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று ஆச்சரியப்பட்டாள் தேவி.

"சோழநாட்டில் பேசிக்கொண்டார்கள். கரிகாலரை ஒழிப்பதற்காக, இருங்கோ கங்கணம் கட்டிக்கொண்டு திரிவது, சோழநாட்டில் எல்லோருக்கும் தெரியுமே?... நம் மன்னரின் படை உதவி கேட்டு வந்திருப்பான்; நம் மன்னரும் ஒப்புக்கொண்டிருப்பாரே?" என்று சாதுர்யமாக விசாரித்தான் அவன்.

"அப்பாதான், போர் போர் என்று துடித்துக் கொண்டிருக்கிறாரே? சோழநாட்டை அடிமைப்படுத்துவதற்கு இருங்கோவையும் பயன்படுத்திக் கொள்ளலாமே?... சரி சரி, அந்த அரசியல் விஷயங்களை நாம் ஏன் பேச வேண்டும்?" என்று சட்டென்று பேச்சின் போக்கைத் திருப்பிவிட்டாள் தேவி.

கோட்டையை விட்டு வெளியே வந்து, கடற்கரை ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள் இருவரும்.

துறைமுகப் பகுதியெங்கும், எண்ணற்ற கப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. கப்பல்களில் ஏற்றப்படவேண்டிய மிளகு, அகில், சந்தனம், தந்தம், தேக்கு முதலியனவும், இறக்குமதியான யவனத் தேறல் புட்டிகளும், பாவை விளக்குகளும், கண்ணாடிப் பொருள்களும் குவியல் குவியலாய்க் கிடந்தன. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் இரண்டுக்கும் உல்கு[1] வாங்கி, வில் முத்திரை

1. உல்கு— சுங்கவரி

பொறித்துக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள், சுங்கச்சாவடி அதிகாரிகள். கரை ஓரத்தில் உயர்ந்து நின்ற கலங்கரை விளக்கு ஒளிவீசிச் சுழன்று கொண்டிருந்தது. அதைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும், வெளிநாட்டு மக்கள் நடமாடும் யவனச்சேரி குறுக்கிட்டது. செக்கச் சிவந்த மேனியும் பொன்னிறத் தலைமுடியும் நெடிய உடலும் கொண்ட ஆண்களும் பெண்களும் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''இவர்கள் எல்லோருமே வணிகம் சம்பந்தப்பட்டவர்கள்தானா?'' என்று விசாரித்தான் குமரன்.

''இல்லை... சிலர் நம் அரண்மனையிலே கருவூலம்,[2] அந்தப்புரம், கோட்டை முதலியவற்றைக் காவல்காக்கும் வேலை சம்பந்தப்பட்டவர்கள். சில பெண்கள் அரண்மனையில் பணிப்பெண்களாக வேலை பார்க்கிறார்கள்...[3]''

''இவர்களெல்லாம் எங்கேயோ கூட்டமாகச் சென்று கொண்டிருக்கிறார்களே?''

''ஆம்... அவர்களுக்கு இங்கு ஒரு கோயில் இருக்கிறது. அங்கே அகஸ்டஸ் பேரரசருடைய சிலையும் வைத்திருக்கிறார்கள்.[4] அந்தக் கோயிலுக்கு வழிபாடு செய்யப் போகிறார்கள்...''

''யவன நாட்டிலிருந்து நிறையப் போர்க்கருவிகளை வரவழைத்திருக்கிறாராமே மன்னர்? அது மட்டுமல்லாமல், யாரோ ஒரு பொறியியல் வல்லுநர்கூட இங்கே வந்திருக்கிறாராமே?'' என்று அவன் கேட்டதும் அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்:

2. கருவூலம்— பொக்கிஷம்

3. பெரிப்ளுஸ்— 'சோழர்கள்': கே. ஏ. என். சாஸ்திரி

4. 'ப்யூதிங்கர் தொகைநூல்'



''ஏது, நிறைய விஷயங்களைத் தெரிந்துவைத்திருக்கிறீர்களே?'' என்று அவள் சொன்னதும், பதற்றத்துடன் சமாளித்தான் அவன்:

''எல்லாம்... வேண்மாடத்தில் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள்...''

''உங்களைப் பார்த்தால், கவிதை கற்றுப் போக வந்தவர் மாதிரி இல்லை; ஏதோ அரசியல் சம்பந்தமானதை ஒற்றறிய வந்தவர் மாதிரிதான் இருக்கிறது...'' என்று அவள் கூறியதும் அவன் திடுக்கிட்டு வாயடைத்துப் போய் நின்று விட்டான்!

''என்ன, ஏன் இப்படித் திகைத்துப் போய்விட்டீர்கள்?'' என்று மறுபடியும் அவனைத் திகைக்க வைத்தாள் தேவி.

''ஒன்றுமில்லை... நான் அரசியல் பற்றிக் கேட்டதற்கு, நீங்கள் வேறேதோ காரணம் கற்பித்துவிட்டீர்கள்... எனக்கு இளமையிலிருந்தே போர்க்கருவிகள், அரசியல் விஷயங்கள் என்றால் ஆர்வமாக இருப்பேன்...'' என்று உடனடியாக விளக்கம் கொடுத்தான் குமரன்.

''அது உங்கள்மேல் தப்பு இல்லை; இந்தச் சமுதாயமே ஆண்களை அப்படிப் பழக்கிவிட்டது. கல்வி, தறுகண், புகழ், கொடை ஆகிய நான்கு பண்புகளின் அடிப்படையில் வீரச்சுவை தோன்றும்[5] என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம் சமுதாயம், தறுகண் என்னும் பண்புடைய போர்வீரனையே புகழ்ந்து பேசிப் பாடி, இளைஞர்களின் வாழ்க்கையைத் திசை திருப்பி விட்டு விடுகிறது...'' என்ற தேவி, மென்மையாகச்

5. தொல்காப்பியம்: பொருளதிகாரம்:
மெய்ப்பாட்டியல்: (9)

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே.'

சிரித்துக் கொண்டே "சரி, உங்கள் ஆர்வத்தைக் கெடுப்பானேன்? உங்களுடைய ஓய்வு நேரங்களில், கோட்டையையும் படைக்கருவிகளையும் காட்டுகிறேன்...இப்போது கருங்குழலாதனார் வீட்டுக்குப் போகலாமா?" என்று குறும்பாகக் கேட்டாள்.

கருங்குழலாதனார் வீடு, நகருக்கு வெளியே இருந்தது. சேரநாட்டுக்கே உரிய அழகான ஓர் உப்பங்கழியின் கரையில், பத்துப் பன்னிரண்டு தென்னை, கமுகு மரங்களுக்கிடையே ஓர் ஓலைக் குடிசைதான் அவர் வீடு. அந்தத் தோப்புக்குள்ளே இரண்டு மான்குட்டிகள் ஓடி விளையாடியது மிகவும் அழகாக இருந்தது.

"உங்கள் ஆசிரியர் ஏன் நகரத்தை விட்டு இவ்வளவு தூரம் தள்ளி வந்து வாழ்கிறார்?" என்று கேட்டான் குமரன்.

"வயதாகி விட்டதில்லையா?... ஆகவே அமைதியான ஓர் இடத்தைத் தேடி இங்கு வந்து விட்டார். இங்கே அவரும் மனைவியும்தான்; அவர்களுக்கு ஒரே மகள் நப்பசிலை; அவளுக்குத் திருமணம் முடிந்ததும், வஞ்சி நகரத்தை விட்டு இங்கே குடியேறிவிட்டார்."

"இவரும் கழார்த்தலையார் மாதிரி, போருக்கு எதிரானவர்தானா?"

"இவர் மட்டுமல்ல— ஆழ்ந்த சிந்தனையும் மனிதாபிமானமும் உள்ளவர்கள் எல்லோருமே போரை வெறுக்கத்தான் செய்வார்கள்!... இவருடைய அழகான மகளைத் திருமணம் செய்து கொள்ள, எத்தனையோ வீரர்கள், படைத்தலைவர்கள் விரும்பினார்கள். இவர் ஒப்புக் கொள்ளவில்லை. முசிறியிலே போரவை ஒன்று வைத்து இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சியளித்துக் கொண்டிருந்த அகுதை என்பவர், நப்பசலைக்காகத் தன் போரவையை விட்டுவிட்டு, இப்போது உழவராகியிருக்கிறார், தெரியுமா?" என்று பெருமிதத்தோடு சொன்னாள் தேவி.



"அப்படியென்றால் உங்கள் அமைதிக் கொள்கையாலே, அகுதையைச் சீர்திருத்தி விட்டீர்கள் என்று சொல்லுங்கள்!" என்று சிரித்தான் குமரன்.

"அப்படி நிச்சயமாகச் சொல்லி விட முடியுமா?... ஒருவேளை, நப்பசலையின்மேல் கொண்ட காதலுக்காக, தனக்கு விருப்பமான தொழிலைத் தியாகம் செய்திருக்கலாம், இல்லையா?" என்று திருப்பினாள் தேவி.

"காதலுக்காக, அப்படி ஒருவன் தியாகம் செய்து விடுவானா?"

"ஏன், காதலுக்காகத் தியாகம் செய்ய முடியாதது என்று சொல்வதற்குரிய ஒன்று உலகத்தில் எதுவுமே இல்லை; காதலின் மதிப்பு அவ்வளவு உயர்ந்தது!..." என்ற இளவரசியின் விழிகளில் ஓர் அதீத ஒளி பரவியதைக் கவனித்தான் குமரன்:

"இளவரசி! இப்படி, அமைதி, சமாதானம் என்று உலகத்தைச் சீர்திருத்திவிட்டால், அப்புறம் ஆண்மை, வீரம் என்பதற்கெல்லாம் அர்த்தமே இல்லாமல் போய் விடாதா?"

"அப்படியில்லை... தாமக்கண்ணியைப் புலியிடமிருந்து காப்பாற்றியதும், என்னை விரோதிகளிடமிருந்து காப்பாற்றியதும் சிறந்த வீரம் என்று எல்லோருமே பாராட்டுவார்களே?" என்று குறும்பாக அவனைப் பார்த்தாள்.

"நீங்கள் போரவைகளையெல்லாம் ஒழித்துவிட்டால், இளைஞர்களுக்கு வீரமும் ஆண்மையும் பயிற்சியில்லாமல் போய் விடாதா? நாட்டுக்கு ஆபத்து என்று வரும்போது, தற்காத்துக் கொள்ளக்கூட, போர்ப் பயிற்சியில்லாமல் போய்விடுமே?" என்று மடக்கினான் குமரன்.

"தனக்கும் தன் நாட்டுக்கும் ஆபத்து என்றால், எவருக்கும் தன்னாலேயே காப்பாற்றிக் கொள்ளும் வீரம் பொங்கி வரும்; அது உயிரின் இயல்பு... மேலும், நான் போர்ப்பயிற்சி பெறுவதை எதிர்க்கவில்லை. ஆனால் போர் எண்ணத்தை இளைஞர்களின் மனதில் அதிகமாக வளர்த்து விட்டால், அது வெறியாக மாறிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறதல்லவா?"

எப்படிப் பேசினாலும், அவள் அதற்குப் பதில் சொல்லித் தன் கொள்கையை நிலைநிறுத்தி விடுகின்ற சாதுர்யத்தைக் கண்டு வியந்தான் குமரன்.

தென்னந்தோப்புக்குள் சென்று, ஓலைக்குடிசையை அடைந்தார்கள் இருவரும்.

வாசலில் நின்று "ஐயா!" என்று குரல் கொடுத்தாள் சிந்தாதேவி.

அடைத்திருந்த கதவைத் திறந்து கொண்டு, ஓர் இளம்பெண் வெளியே வந்தாள்.

அவளைப் பார்த்த குமரன் திகைத்து நின்றான்.

கீழ்வானிலே எழும் பொன்னிலவு திடீரென்று அந்தக் கதவு வழியே உதயமானதுபோல், அந்தக் குடிசையே பொன்னொளி வீசிப் பிரகாசிப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

பார்த்த மாத்திரத்திலேயே அவள் தமிழ்நாட்டுப் பெண் அல்ல என்று தெரிந்தது.

உயிர்பெற்று அசையும் சொக்கத்தங்கச் சிலைபோல், தொட்டால் சிவந்து விடுகிற அளவு மென்மையான ரோஜா வண்ண உடல், கடைந்தெடுத்த பரிமாணங்களோடு அமைந்திருந்தது. உடல் நிறத்துக்குப் பொருத்தம் காட்டுவதுபோல், பொன்னிறமான சுருண்ட முடி, தோள்வரை பரவிக் காற்றிலே, பட்டுடைபோல் அசைந்து கொண்டிருந்தது. சற்றே எடுப்பான நெற்றியின் கீழே



நீலநிற நயனங்கள்; கடலின் ஆழம்போல் அந்த விழிகளிலே ஆயிரம் முத்துக்களின் ஒளிச்சுடர்கள்; ஒடுக்கமான சிறு மூக்குக்குப் பொருத்தமான கன்னங்களின் நடுவிலே சற்று அதிகமான ரோஜாவண்ணம்; பற்களின் முத்துக்கள் அடங்கிய இரத்தினப் பெட்டிபோல், சிறிய சிவந்த இதழ்கள்; சங்குபோல் மடிப்பு விழுந்திருந்த கழுத்தை ஒட்டி உயர்ந்து படிந்த தோள்கள்; பருவத்தின் சுமைகளைத் தூக்கிக் களைத்து ஒல்லியாகிப் போன இடை; அதிகச் சதைப் பிடிப்பு இல்லாத கால்களின் கீழ்ப் பாகத்தை மறைக்காத ஆடை; அதிக நகையோ அலங்காரமோ இல்லாமல் இருந்ததே, அவளுக்கு ஓர் அலங்காரமாக அமைந்திருந்ததைக் கண்டு, வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் குமரன்.

## 22

சேரநாட்டு எல்லையோரத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஒரு கூடாரத்தின் உள்ளே, குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தான் இருங்கோ. எதிரே அந்துவனும் நெடுந்தத்தனும் நீலனும் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களுடைய பார்வை அடிக்கடி கூடாரத்தின் மேற்கு வாயிலையே நோக்கிக் கொண்டிருந்தது. அவர்கள் அந்த இரவு நேரத்தில் யாரையோ ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டியது.

வெளியே பால்வண்ண நிலவிலே காடு குளித்துக் கொண்டிருந்தது. கூடாரத்தின் வெளியே வைக்கப்பட்டிருந்த தீவட்டிகளின் செந்நிற ஜ்வாலை, நிலவின் வெள்ளிய ஒளியோடு கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. நிலவைப் பிடித்துத் தனக்குள்ளே அமுக்கிக் கொள்ள, ஒவ்வொரு மேகமும் முயன்று பார்த்துத் தோற்றுப் போய்ச் சோர்ந்து முகம் வெளுத்து நகர்ந்து சென்றது.

பின்புறம் கைகளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, கூடாரத்தின் நீளத்தை அளப்பவன் போல் காலடி வைத்து இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான் இருங்கோ:

''என்ன, இன்னும் காணோம்?... ஒருவேளை நமக்குக் கிடைத்த செய்தி பொய்யாகிவிட்டதோ?'' என்று முணுமுணுத்தான் அவன்.

''எனக்கென்னவோ, உன்னுடைய காரியம் சரியென்று தோன்றவில்லை. இந்தமாதிரி பலாத்காரச் செய்கைகள், நம் லட்சியப் பயணத்தையே தடைபோட்டு அழித்து விடலாம்'' என்று குறைப்பட்டுக் கொண்டான் அந்துவன்.

''ஒருவேளை நாம் அனுப்பியவர்கள் காரியத்திலே தோல்வியடைந்து, சேர வீரர்களிடம் பிடிபட்டு விட்டால்—?... அவர்கள் யாரால் அனுப்பப்பட்டவர்கள் என்று தெரிந்துவிட்டால்—?'' என்று திகைத்தான் நெடுந்தத்தன்.

''நண்பர்களே! இதையெல்லாம் நான் யோசிக்காமல் இல்லை— நீங்கள் சொல்வதற்கு மேலேயும் யோசித்துத் தான், இந்தக் காரியத்திற்கு ஏற்பாடு செய்தேன்...'' என்று சிரித்தான் இருங்கோ.

அந்தச் சமயம், பத்துப் பதினைந்து வீரர்கள் உள்ளே நுழைந்து அவனை வணங்கினார்கள். அவர்களை ஏற இறங்கப் பார்த்த இருங்கோவின் முகம் ஏமாற்றத்தால் சோர்ந்தது:



''என்ன ஆயிற்று?... எங்கே இளவரசி?'' என்று கர்ஜித்தான் அவன்.

''வெறும் ஆறு வீரர்கள்தான் இளவரசியின் பாதுகாப்பாக வருவதாகச் சொல்லி எங்களை அனுப்பினீர்கள்; ஆனால் அங்கே இன்னொரு வீரன் இருக்கிறான்; அவன் நூறு பேரை விரட்டியடிக்கக்கூடிய அளவு சூரப்புலியாக வாள் வீசுகிறான். அவனை எங்களால் வெல்ல முடியவில்லை...'' என்று ஒரு வீரன் ஒப்பாரி வைத்தான்.

''சீ! நீங்களெல்லாம் வீரர்களா?... ஒரு சேர நாட்டு வீரனுக்குப் பதில் சொல்ல முடியாமல் ஓடிவந்திருக்கிறீர்களே?... சரி, எல்லோரும் திரும்பி வந்து விட்டீர்களா?'' என்று ஆத்திரமாகக் கேட்டான் இருங்கோ.

''ஆம்... நீங்கள் சொன்னபடியே, இளவரசியைக் கைப்பற்ற முடியாது என்று தெரிந்ததும், கவனமாக, யாரும் பிடிபடாமல் தப்பி ஓடிவந்து விட்டோம்...''

''அப்பாடா!... மிக்க மகிழ்ச்சி!... திரும்பி வருவதற்காவது வீரம் இருந்ததே, போங்கள்!...'' என்று எரிந்து விழுந்தான் இருங்கோ.

வீரர்கள் அங்கிருந்து நகர்ந்ததும் ''இந்த மாதிரி ஆபத்தான செயல்களில் ஈடுபடுவதால் நமக்கு என்ன லாபம்?'' என்று கோபமாகக் கேட்டான் நீலன்.

''இளவரசியைக் கடத்திக் கொண்டு வந்து சோழ நாட்டில் ஒளித்து வைத்துவிட்டு, அவளைத் தூக்கிச் சென்ற பழியைக் கரிகாலன் மீது சுமத்தி விட்டால், மகளைப் பறிகொடுத்த ஆத்திரத்தில் சேரமன்னன் இன்னும் அவசரமாக, அவசியமாகக் கரிகாலன்மேல் படையெடுப்பான் அல்லவா?'' என்று தன் மகோன்னதத் திட்டத்தை விளக்கினான் இருங்கோ.

''ஓ! அதனால்தான், இளவரசியைத் தூக்கிச் செல்லக் கரிகாலன் திட்டமிட்டிருக்கிறான் என்று முன்பே

சேரனிடம் சொன்னாயா?'' என்று, தங்கள் தலைவனின் சமயோஜிதத்தை நினைத்து வியந்தான் அந்துவன்.

''ஆம்... அப்படிச் சொல்லி வைத்துவிட்டு, மறுநாளே நாம் அங்கிருந்து புறப்பட்டதும் அதற்காகத்தான். அடையாளம் தெரியாத வீரர்களாக இவர்களை அனுப்பி, 'ஒருவேளை இளவரசியைக் கைப்பற்ற முடியாவிட்டால், நீங்கள் யாரும் அங்கே சிக்கிக்கொள்ளக்கூடாது; அது மிக முக்கியம்' என்று முன்னெச்சரிக்கையாகவே சொல்லித் தான் அனுப்பிவைத்தேன்,'' என்று நிறைவேறாமல் போன தன் திட்டத்தை விளக்கினான் இருங்கோ.

''சரி! பரவாயில்லை... நாம் ஊருக்குப் புறப் படுவோம்... சேரமன்னர் உறுதியளித்தபடி விரைவில் படையெடுப்புக்கு நாள் குறித்து விடுவார். இந்தச் செய்தி யைப் பாண்டிய வேந்தருக்கும் தெரிவித்துவிட்டு, நாமும் நம் படைகளைப் பெருக்குவோம்...'' என்று சொல்லி இருங்கோ, புறப்படுவதற்கான கட்டளையிட்டான்.

கருங்குழலாதனாரின் வீட்டுக்குள்ளிருந்து வந்த யவன அழகியைப் பார்த்துத் திகைத்து நின்றான் குமரன்.

சிந்தாதேவியைக் கண்ட அந்தப் பெண், ''வாருங்கள், இளவரசி! வாருங்கள்...'' என்று மழலைத் தமிழில், கிளியாய் மிழற்றியதைக் கண்டு, அவன் மேலும் திகைப்பில் ஆழ்ந்தான்.

அதைக் கவனித்த சிந்தாதேவி, கலகல என்று சிரித்தாள்:

''என்ன, இப்படித் திகைத்துப் போய் நிற்கிறீர்கள்?... இவளைப் பற்றி உங்களிடம் முன்பே சொல்லியிருக்க வேண்டும்; மறந்து விட்டேன்... இவள் பெயர் ஒலிவியா— ரோம் நாட்டிலிருந்து வந்திருக்கிறாள். கருங்குழலாதனா ரிடம் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறாள்...'' என்று



சொல்லிவிட்டு, ''ஒலிவியா! இவர் பெயர் குமரன்; இவரும் சோழ நாட்டிலிருந்து கவிதை கற்றுக் கொள்ள இங்கு வந்திருக்கிறார்...'' என்று அறிமுகப்படுத்தினாள்.

''வணக்கம்...'' என்று அவனைப் பார்த்து, கொஞ்ச லாய் மொழிந்தாள் ஒலிவியா.

''வணக்கம்... ரோம் நாட்டுப் பெண் இவ்வளவு அழகாகத் தமிழ் பேசுவதைப் பார்க்க வியப்பாயிருக் கிறது...'' என்றான் குமரன்.

''எந்த மொழியாயிருந்தால் என்ன, எல்லாம் பழக்கம் தான்!... எங்கள் நாட்டுக்கு வந்த ஒரு பாண்டிய நாட்டு வணிகர் மூலம்தான் எனக்குத் தமிழ் மொழியின் சிறப்புத் தெரிய வந்தது. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இல்லாமல், பொருளுக்கும் இலக்கணம் இருப்பதாக அவர் கூறியதும் எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. அதிலும் மனித வாழ்க்கையை அகம், புறம் என்று பிரித்து, அதற்கு இலக்கணம் வகுத்திருப்பதையும் கேட்டு, அந்த ஆர்வத்தில்தான் என் அண்ணனோடு இங்கே வந்தேன்...'' என்று இயல்பாக, ஆனால் சிறிது நிறுத்தி நிறுத்தித் தமிழில் பேசினாள் ஒலிவியா.

''உங்கள் அண்ணனும் தமிழ் படிக்கிறாரா?'' என்று கேட்டான் குமரன்.

''ஆம்... ஓரளவு படித்திருக்கிறார்... இங்கே வணிகராக இருக்கிறார்...'' என்று ஒலிவியா சொன்னதும், சிந்தாதேவி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் சட்டென்று அதை மாற்றிக் கொண்டு, வேறு விஷயத்தைக் கேட்டாள்:

''ஆசிரியர் எங்கே போயிருக்கிறார்? அம்மாவையும் காணோமே?'' என்று விசாரித்தாள் இளவரசி.

"இருவரும் குணவாயில் கோட்டத்துக்கு அருகதேவனை[1] வணங்கப் போயிருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவார்கள்... நீங்கள் உட்காருங்கள்!..." என்று அவர்களை அமரச் செய்தாள் ஒலிவியா.

அவளுடைய பேச்சும் பண்பும் குமரனை மிகவும் கவர்ந்தன:

"ஒலிவியா! இங்கே வந்த பிறகு, தமிழ்நாட்டைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஆர்வமாகக் கேட்டான் குமரன்.

"ஓ!..." என்று புருவங்களை உயர்த்திக் கண்களில் ஒளி பிரவகிக்க, அழகாகச் சிரித்தாள் அவள்.

"மொழியைப் போலவே பண்பாடும் எனக்குப் பிடித்திருக்கிறது... முதலாவதாக, காதலும் பெண்மையும் இங்கு மிகவும் அற்புதமாயிருக்கின்றன. எங்கள் நாட்டில் ஆணும் பெண்ணும் சேர்வது என்பது, வெறும் உடல் சம்பந்தப்பட்ட இச்சைதான்; ஆனால் இங்கே அதற்கு ஆத்மார்த்தமான சங்கமத்தின் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நம் ஆசிரியர் அன்று ஓர் அருமையான பாடலைச் சொல்லிக் கொடுத்தார்:

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே..."[2]

---

1. அருகதேவன்— சமண சமயக் கடவுள்.
2. குறுந்தொகை (40): செம்புலப் பெயனீரார் பாடியது- பொருள்:— 'என் தாயும் நின் தாயும் யாரோ? என் தந்தையும் நின் தந்தையும் எந்த முறையில் உறவினரோ? இப்பொழுது ஒன்றான நானும் நீயும் இதற்கு முன்பு எப்படி அறிந்தோம்? செம்மண் நிலத்திலே பெய்த மழைநீர், அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைவதுபோல, அன்புடைய நம் நெஞ்சங்கள் தாமாகவே ஒன்று கலந்தன...'



என்று அந்தப் பாட்டு முழுவதையுமே உணர்ச்சி பாவத்தோடு ஒலிவியா சொன்னதைக் கேட்டு, வாயைப் பிளந்தபடி வியப்படைந்து நின்றான் குமரன்.

"காதலைப்பற்றி நல்ல பாடலைத்தான் மனப்பாடம் செய்திருக்கிறாய்!" என்று கேலியாகச் சிரித்த தேவி, "சரி, தமிழ்நாட்டுப் பெண்களைப் பற்றியும் ஏதோ சொன்னாயே?..." என்று துருவினாள்.

"எங்கள் நாட்டில் பெண்களுக்கு உள்ள மதிப்பு, உணவு, குடிநீர், மது, மாமிசத்திற்குள்ள மதிப்புத்தான்! ஆண்களுடைய அனுபவத்துக்கு அந்தப் படுக்கையறைப் பாவைகள் தேவை— அவ்வளவுதான்! வாழ்க்கையிலே உரிமையோ, பங்கோ, மரியாதையோ பெண்களுக்கு அங்கே இல்லை... ஆனால் இதிலே ஒரு வேடிக்கை— அழகாலும் கவர்ச்சியாலும் அரண்மனையில் இடம் பிடித்து விடுகிற பெண்கள், அரசியலிலே மறைமுகச் சர்வாதிகாரியாய், தாங்கள் நினைத்ததையெல்லாம் நடத்திக் காட்டுவார்கள். அந்த அளவுக்கு அரசர்கள் பெண்ணழகிலே மயங்கிக் கிடப்பதும் உண்டு! ஆனால் தமிழ்நாட்டில் பெண்கள் அரசியலில் தலையிடுவதே இல்லை..." என்று ஒலிவியா சொன்னபோது, குமரன் குறுக்கிட்டு "அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியமுள்ள பெண்கள்கூட, அதை வெறுத்து ஒதுக்குகிறார்கள்!" என்று சிரித்தபடி இளவரசியைப் பார்த்தான்.

"ஆம்... அதனாலேயே இங்கே பெண்களுக்கு உயர்ந்த மதிப்பும் மரியாதையும் உரிமையும் கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். பெண்களை, மென்மையான மலர்களைப்போல் நடத்துகிறார்கள்... 'பல போர்க்களங்களில், பல கோட்டைகளையெல்லாம் பிடித்து, அரசர்களின் முடிகளைப் பறிக்கின்ற வீரக் கரங்களையுடைய மன்னன் ஒருவன், தன் மனைவியின் கையிலிருக்கின்ற தாமரைப் பூவைப் பறிக்க முடியாமல் அவளிடம்

கெஞ்சுகிறான்' என்று ஒரு புலவர் பாடியிருக்கிறார் அல்லவா?... புறத்திலே வீரம் நிறைந்தவனானாலும், அகத்திலே வீரத்தைக் காட்டுவதில்லை. ஆனால் எங்கள் நாட்டிலே, வீரம் என்றாலே முரட்டுத்தனமும் கூடவே இருக்கும்... இங்கே அரசர்களிலே கவிஞர்களை, கலைஞர்களைக் காண முடியும்; ஆனால் எங்கள் நாட்டிலே அப்படிக் காண முடியாது; மனிதனும் மனிதனும் அல்லது மனிதமும் மிருகமும் சண்டை போடும் காட்சியை ரசிப்பானே தவிர, ஒரு கலைஞனையோ, கலையை ரசிக்கிற மன்னனையோ அங்கே காண்பது அரிது..."

"ஆனால் அந்த வீரத்தை வைத்து உலகத்தையே கட்டியாள்கிறார்களே உங்கள் மன்னர்கள், அது புகழுக்கு உரியதுதானே?" என்று கேட்டான் குமரன்.

"அது இப்போது புகழ்தான்; ஆனால் அது எத்தனை நாட்களுக்கு நிலைத்து நிற்கும்?... அதைவிட நிலையான புகழைத் தருவது எத்தனையோ இருக்கிறதே!... உங்கள் அரசர்கள் வென்ற ராஜ்யங்கள் மறைந்து விடும்; ஆனால் அவர்கள் பாடிய கவிதைகள், பாடச் செய்த காவியங்கள் யுகம் யுகமாய் நிற்கும், இல்லையா?... இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, அலெக்ஸாண்டர் ஓர் உலக சாம்ராஜ்யம் அமைக்க ஆசைப்பட்டார்; உலக ஒருமைப்பாட்டை உருவாக்க, கிரேக்கர்களுக்கும் பாரசீகர்களுக்கும் கலப்புத் திருமணம்கூட செய்து வைத்தார். அதையெல்லாம் அவர் படை பலத்தை வைத்து நடைமுறைப்படுத்த நினைத்தார்; ஆகவே, நிலைக்கவில்லை. ஆனால் அந்த உலக ஒருமைப் பாட்டுக்கு, உங்கள் புலவர் ஒருவர் அருமையான அன்பு வழி ஒன்றைச் சொல்லியிருக்கிறார், தெரியுமா?" என்று ஒலிவியா, தங்களிடம் கேட்டதும் திகைத்துப் போனார்கள் சிந்தாதேவியும் குமரனும்.

ஒரு யவன நாட்டுப் பெண், இவ்வளவு ஆழமாகத் தமிழ்ப் பாட்டுக்களைக் கற்றிருப்பதைக் கண்டு வியந்தான் குமரன். அவர்கள் திகைப்பைப் பார்த்துச் சிரித்தவாறே தொடர்ந்து பேசினாள் ஒலிவியா:



" 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று பாடியிருக்கிறாரே, அதுதான் உலக ஒருமைப்பாட்டுக்கு அருமையான வழி... உலகத்தில் எல்லா நாட்டையும் தன் நாடாகவும், எல்லா மக்களையும் தன் உறவினராகவும் கருதுவதுதான், உலக ஒற்றுமைக்கு அடிப்படை அமைக்க முடியும்... ஒருவேளை, எதிர்காலத்தில் எல்லா நாட்டு அரசுகளும் ஒன்று சேர்ந்திருக்கும் ஓர் உலக ஐக்கியப் பேரவை தோன்றினால்— அந்தப் பேரவையின் முன்னால் இந்தத் தமிழ்ப்பாட்டைத்தான் எழுத வேண்டும்!..."

ஒலிவியாவின் சிந்தனையையும் அறிவுத் திறனையும் நினைந்து மலைத்துப் போனான் குமரன்.

அப்போது வெளியேயிருந்து ஒரு முதியவரும் அவர் மனைவியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் இளவரசியும் ஒலிவியாவும் எழுந்து நின்றார்கள்.

"ஐயா! வணக்கம்..." என்று சிந்தாதேவி வணக்கம் தெரிவித்ததும், குமரனும் எழுந்து நின்று பணிவோடு வணங்கினான்.

"வா, தேவி! நலம்தானே? அரண்மனையில் அரசரும் மற்றவர்களும் நலந்தானே?" என்று பரிவோடு விசாரித்தார் கருங்குழலாதன்.

"எல்லோரும் நலம்தான்... ஐயா! இதோ, இவர் உங்களைக் காண, சோழ நாட்டிலிருந்து வந்திருக்கிறார். உங்கள் நண்பர் செங்கண்ணனாரின் கடிதத்தோடு வந்திருக்கிறார்..." என்று குமரனை அறிமுகப்படுத்தியதும், அவன் அவரிடம் தன்னைப் பற்றிய விவரங்களையும் தன் நோக்கத்தையும் கூறினான்.

''அப்படியா? மிக்க மகிழ்ச்சி... தமிழ்ப் படிப்பதற்காக இவ்வளவு தூரம் நாடு விட்டு நாடு வந்திருக்கிறாயே?'' என்று வியந்தார் ஆசிரியர்.

''உங்களிடம் தமிழ்ப் படிப்பதற்காக, எவ்வளவு தூரமானாலும் கடந்து வரலாம் என்பதை இப்போது தெரிந்து கொண்டு விட்டேன், ஐயா! சிறிது நேரம், உங்கள் மாணவி ஒலிவியாவிடம் பேசிக் கொண்டிருந்தோம். மாணவியே இவ்வளவு அறிவுள்ளவராயிருக்கும்போது, ஆசிரியரைப் பற்றிக் கூறவேண்டியதில்லை!'' என்று குமரன் பாராட்டியதும், ஒலிவியாவின் செவ்வண்ணக் கன்னங்கள் மேலும் சிவந்து கனிந்தன.

பெண்கள் எந்த நாடாயிருந்தாலும், நாணம் பொதுதானோ?

''அப்படி முழுப் பாராட்டையும் என்மேல் சுமத்திவிடக்கூடாது. ஒலிவியா, இயல்பாகவே சிறந்த அறிவுள்ளவள்; அவளுக்கு நான் மொழியைத்தான் கற்றுக் கொடுத்தேன்; சிந்தனை அவளுக்குள்ளே இருப்பது அல்லவா?'' என்று சொன்னார் ஆசிரியர்.

குமரன் புலியையும் வெல்லும் வீரன் என்பதைச் சொல்லி, நடந்த நிகழ்ச்சிகளையும் ஆசிரியரிடம் கூறினாள் தேவி.

''அப்படியா?... இவ்வளவு சிறந்த வீரன், கவிதை பயில விரும்புவது வியப்புத்தான்!'' என்றார் கருங்குழலாதன்.

''ஏன் ஐயா! வீர மன்னர்கள் பலரும், கவிதை பாடிக் கேட்டிருக்கிறோமே?'' என்றாள் தேவி.

''ஆம்... அவர்கள் அதைப் பொழுதுபோக்கு மாதிரிதான் பாடினார்கள். அவர்கள் ஆற்றிய போர்களைவிட, அவர்கள் பாடிய அந்தப் பாடல்கள்தாம் வரலாற்றில் அவர்களுடைய பெயர்களைச் சொல்லப் போகின்றன



என்பதை உணராமலே பாடியிருக்கிறார்கள். ஆனால் நீ அப்படியிருக்கக் கூடாது; ஒரு வீரன் கவிஞனாகவும் இருக்கிறான் என்பதைவிட, ஒரு கவிஞன் வீரனாகவும் இருக்கிறான் என்பதையே நான் விரும்புகிறேன்.''

''ஐயா! நீங்கள் இவரை இங்கேயே வைத்துக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும்...'' என்று கேட்டுக் கொண்டாள் தேவி.

அன்று முதல், குமரன் ஆசிரியரின் வீட்டிலேயே இருந்து, தமிழ் இலக்கணம் படிக்கத் தொடங்கினான். ஓய்வான மாலை நேரங்களில் வீட்டைவிட்டு, கடற்கரையோரம் வந்து பொழுதுபோக்கிக் கொண்டிருப்பான்.

பொழுதுபோக்கிக் கொண்டிருப்பான் என்பதைவிட, இளவரசியைச் சந்தித்துப் பேசும் இடமாக அதை வைத்துக் கொண்டிருந்தான் என்று சொல்லலாம்! அடிக்கடி அரண்மனையிலிருந்து மாலை நேரங்களில் அந்தக் கடற்கரைப் பகுதிக்கு வந்து, குமரனோடு பேசிக் கொண்டிருப்பாள் இளவரசி:

''பாடமெல்லாம் எந்த அளவுக்கு வந்திருக்கிறது?'' என்று கேட்பாள் தேவி.

''எழுத்து முடிந்து, அசை, சீர் தொடங்கி இப்போது தேமா, புளிமா, கருவிளங்காய், கூவிளங்காய் என்ற அளவுக்கு வந்திருக்கிறது...''

''காய் எல்லாம் விரைவிலே கனியாகும் நாள் வந்துவிடும்!'' என்று குறிப்பாகச் சொல்லிச் சிரிப்பாள் அவள்.

''என்ன சொல்கிறீர்கள், இளவரசி?'' என்று புரியாததுபோல் கேட்பான் அவன்.

''புரியாதவருக்குச் சொல்லிப் புரிய வைத்து விடலாம்; புரியாததுபோல் நடிப்பவருக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியுமா?'' என்று முகம் சிவக்கச் சொல்லி, கடலின் ஈரமணலில் விரலால் கோலம் போடுவாள் சிந்தாதேவி.

அந்தத் தூய வெண்ணிற மணலின் பின்னணியில், தங்கச்சிலையாய் வீற்றிருக்கும் அவளுடைய அற்புத அழகைப் பார்த்தவாறு பிரமிப்பில் ஆழ்ந்திருப்பான் அவன். காவிரியின் நீர்ச்சுழலிலே சிக்கியவர்கள் செயலற்றுப் போய் மூழ்குவதுபோல, சிரிக்கும்போது தேவியின் கன்னங்களில் முகிழ்க்கும் குழியின் கவர்ச்சியிலே தன்னை மறந்து செயலற்றுப் போய், அழகு ரசனையிலே மெய்ம்மறந்திருப்பான்.

''என்ன, ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று செல்லக் கோபத்தோடு அவனைப் பார்ப்பாள் அவள்.

''எதைப் பேசுவது? இலக்கியம் பற்றிப் பேசலாம் என்றால், அதிலே உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை; வாழ்க்கையைப் பற்றிப் பேசுவது என்றால், அதிலே எனக்கு அனுபவம் இல்லை; அரசியல் பற்றிப் பேசலாம் என்றால், அதிலே உங்களுக்கு விருப்பம் இல்லை... பிறகு எதைப்பற்றிப் பேசுவது?'' என்று கலகல எனச் சிரிப்பான் குமரன்.

அவன் சிரிக்கும் அழகையே பார்த்து, ரசித்துக் கொண்டிருப்பாள் சிந்தாதேவி.

சற்று தூரத்தில் கடற்கரை ஓரத்தில் பரதவர்கள் விளையாடும் விளையாட்டுக்களை வேடிக்கை பார்த்தபடியே இருவரும் அமர்ந்திருப்பார்கள்.

நிலவு நடுவே காணப்படும் களங்கம் போல, வெண்மையான மணற்பரப்பிலே வலை கிடந்து காயும் வீட்டு முற்றத்திலே, தாழை மலர் சூடிய தம் காதலியரோடு கள்ளுண்டு மகிழ்ந்து, கடலிலே இணைந்து விளையாடுவதையும், பெண்கள் நண்டுகளைப் பிடித்து ஆட்டி விளையாடுவதையும், பாவை செய்து விளையாடுவதையும், காதலர்களோடு சேர்ந்து ஆடிப்பாடுவதையும் பார்க்கும்



போதெல்லாம், தேவியின் கற்பனைக் கனவுகள் மனக்கண்ணில் முளைத்துப் பரவி மலரும்...

குமரனுடைய இடைவிடாத வேண்டுகோளையும ஆசையையும் நிறைவேற்றுவதற்காக, இரண்டு மூன்று நாட்கள் அவனை வஞ்சி நகர அரணுக்கு அழைத்துப் போய், அங்கேயிருக்கும் புதிய போர்க்கருவிகளையும் எந்திரப் பொறிகளையும் காட்டினாள் இளவரசி.

படைவீரர்கள் பயிற்சி பெறும் திடலுக்கும் அழைத்துப் போய், வீரர்களின் போரிடும் முறையை அவனுக்கு விளக்கிக் கூறினாள். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்கள் எத்தனை எத்தனை இருக்கிறார்கள் என்பதையெல்லாம், அங்கேயிருந்த வீரர்களிடம் துருவித் துருவிக் கேட்டுத் தெரிந்து கொண்டான் குமரன்.

''என்ன இது, படையிலே உங்களுக்கு இருக்கிற ஆர்வத்தைப் பார்த்தால், நீங்கள் கவிதையை விட்டுவிட்டு, படையிலேயே சேர்ந்து விடுவீர்கள் போலிருக்கின்றதே!'' என்று கொஞ்சலாகக் கடிந்து கொள்வாள் தேவி.

''படையிலும் போரிலும் எனக்கு இருக்கிற மிகுந்த ஆர்வத்தை நீங்கள் தெரிந்து கொள்வதனால், எனக்கு ஒரு வகையில் நன்மைதான்!''

''எப்படி?''

''ஒருவருக்காக நான் இந்த ஆர்வத்தைத் தியாகம் செய்யும் போது, நான் எவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கிறேன் என்று அவருக்குப் புரியும், இல்லையா?'' என்று முறுவலித்தான் குமரன்.

கருங்குழலாதனாரின் மகள் நப்பசலைக்காக, அவளுடைய காதலன் அகுதை செய்த தியாகச் செயல், தேவியின் நினைவில் மின்னி மறைந்தது.

குமரன் பேச்சின் உட்பொருளை உணர்ந்த சிந்தாதேவி, வாயடைத்துப் போய், தலைகுனிந்தவாறு வெட்கம் விகசிக்க நின்றாள்.

ஒருநாள், சிந்தாதேவியைச் சந்திக்கும் போது "இளவரசி! உங்கள் கோட்டையில் வைக்கப்பட்டிருக்கும் அற்புதமான கருவிகள் எல்லாம் செய்யப்படுகிற இடத்தைப் பார்க்கலாமா?" என்று மெதுவாகக் கேட்டான் குமரன்.

"அங்கே நீங்கள் ஏன் போக வேண்டும்? இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?" என்று கேலியாகச் சொல்லிச் சிரித்தாள் அவள்.

"சரி... அந்த யவன நாட்டுப் பொறியியல் வல்லுநனையாவது சந்தித்து, அந்த நாட்டைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வோமே?" என்று சுற்றி வளைத்தான் குமரன்.

"ஏன், அந்த விஷயத்தை ஒலிவியாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாதா?... சரி, அவள் எப்படி உங்களிடம் பழகுகிறாள்?"

குமரன், தேவியைக் கூர்ந்து பார்த்தான்:

"ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? ஒரு சக மாணவி போல்தான் பழகுகிறாள்... ஏன், என் மேல் சந்தேகமா?" என்று பொய்க் கோபத்துடன் முணுமுணுத்தான் அவன்.

"இல்லை... இல்லை..." என்று பதறியபடி மறுத்தாள் தேவி:

"உங்களைவிட, என் தோழியை எனக்கு நன்றாகத் தெரியும்!... அவள் பிறப்பில்தான் யவனப் பெண்; ஆனால் பண்பில் தமிழச்சி... அவளைப் புரிந்து கொள்ள உங்களுக்கு இன்னும் நாளாகும்... அது சரி, அவள் வீட்டுக்குப் போயிருக்கிறீர்களா?"

"இல்லை... அவள் ஒரு தடவை கூட கூப்பிடவில்லையே?"



"அவள் நம்பிக்கைக்கு நீங்கள் பாத்திரமானால்தான், அவள் உங்களை வீட்டுக்கு அழைப்பாள்; அப்போது ஒரு வியப்பான செய்தி உங்களுக்குத் தெரிய வரும்!" என்று பூடகமாகச் சொல்லி முறுவலித்தாள் தேவி.

"அது என்ன வியப்பான செய்தி?"

"அதை இப்போது சொல்லக் கூடாது! அது பிறகு தெரிந்தால்தான் சுவை!" என்று கண்சிமிட்டிச் சிரித்தாள் அவள்.

அன்று குமரன் கருங்குழலாதனாரின் வீட்டுக்குத் திரும்பி வந்ததும், அவரும் மனைவியாரும் கோயிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

தனியே வீட்டில் உட்கார்ந்திருந்தபோது, திடீரென்று உள்ளே நுழைந்தவளைப் பார்த்துத் திகைத்துப் போய் எழுந்தான் குமரன்.

## 23

**வஞ்சி** நகரக் கோட்டையின் உயரத்தையும் திண்மையையும் வெளியிலிருந்து பார்த்தே திகைத்திருந்த குமரன், அந்தக் கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த கருவிகளையும் எந்திரங்களையும் பார்த்து வியப்பில் ஆழ்ந்தான்.

இளவரசியோடு போனதால் ஆங்காங்கே இருந்த யவனக் காவலரும் மற்ற வீரர்களும் ஒவ்வொரு கருவியையும் அவனுக்கு விளக்கியும் இயக்கியும் காட்டினார்கள்.

கோட்டைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த 'ஐயவி' என்னும் எந்திரம், பிரம்மாண்டமானதாக இருந்தது. கோட்டைக் கதவை உடைத்து உள்ளே நுழையும் எதிரிகளின் தலைகளில் மோதிக் கொல்லக்கூடியதாக அது அமைக்கப்பட்டிருந்தது. மிகப் பெரிய துலாமரங்களாலான அந்த எந்திரத்தை எந்த அம்பாலும் ஈட்டியாலும் அறுக்கவோ உடைக்கவோ முடியாது.[1]

அந்தக் கருவியைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தான் குமரன். அது இயங்கும்போது, எந்த இடத்தில் தாக்கினால் அதை இயங்காமல் நிறுத்தமுடியும் என்பதை நுட்பமாகக் கவனித்து மனதிற்குள் வைத்துக் கொண்டான்.

பிறகு, மதில்மேலும் பக்கங்களிலும் இருந்த எந்திரங்களையும் போய்ப் பார்த்தார்கள். வளைந்து தானே வரிசையாக அம்புகளை எய்யும் விசைவில்லை ஊன்றிப் பார்த்து, அதை எப்படிச் செய்வது என்பதையும் கவனித்துக் கொண்டான் குமரன்.

முற்றுகையிடுவோர் மேல் எண்ணெய், செம்பு, இரும்பு முதலியவற்றைக் காய்ச்சி ஊற்றும் உலைக் கருவிகளையும், தூண்டில் வடிவாக அமைந்த கருவிகளையும், கழுத்தில் பூட்டி முறுக்கிக் கொல்லும் தொடக்குக் கருவிகளையும், கோட்டைச் சுவரில் ஏறுபவர்களைத் தள்ளிவிடும் இரும்புக் கவைகளையும் இன்னும் பல கருவிகளையும் கவனமாகப் பார்வையிட்டான் குமரன்.

அவன் ஒவ்வொரு கருவியையும் சுற்றிச் சுற்றி வந்து, நுட்பமாக பார்ப்பதைக் கண்ட சிந்தாதேவி, "என்ன, நீங்கள் கவனிப்பதைப் பார்த்தால், நீங்களே இந்தக் கருவிகளைச் செய்ய ஆரம்பித்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்று வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்ததும்,

---

1. 'பதிற்றுப் பத்து'— *(16, 22)*



பட்டென்று நெஞ்சம் துடிக்கத் தடுமாறிப் போனான் குமரன்.

ஒருவேளை, அவன் நெஞ்சில் உள்ள எண்ணத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாளோ?...

அவள் இயல்பாகச் சிரித்துக் கொண்டே, மேலே தொடர்ந்து நடந்துவருவதைப் பார்த்த பிறகுதான், அவனுக்கு நிம்மதியான மூச்சு வந்தது.

பிறகு இருவரும் சேரநாட்டுப் படைகள் பயிற்சி பெறும் இடத்திற்கெல்லாம் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள்.

ஒலிவியாவோடு பழகி, அவளுக்குத் தன்மேல் நம்பிக்கை ஏற்பட்டு, அவள் வீட்டுக்கு அழைக்கப்பட்டுச் சென்றால், ஓர் ஆச்சரியமான செய்தி தெரியவரும் என்று இளவரசி சொன்னதைப் பற்றியே நினைத்துக் கொண்டு வீடு திரும்பினான் குமரன்.

அந்த ஆச்சரியம் என்னவாக இருக்கும் என்று சிந்தித்தபடியே வீட்டில் தனியே இருக்கும்போது, திடீரென்று அங்கு வந்த தாமக்கண்ணியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு எழுந்தான்.

''கண்ணி! நீ எப்போது வந்தாய்?'' என்று அவளை வரவேற்றான்.

அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல், அவனையே பார்த்தவாறு, கண்களால் அவனை முழுக்க விழுங்கியபடி நின்று கொண்டிருந்தாள் அவள்.

ஏதோ பல யுகங்களின் பிரிவுக்குப் பிறகு அவனைச் சந்திப்பவள்போல், வைத்த கண் வாங்காமல் அவனைப் பார்த்தபடியே நின்றாள் கண்ணி.

''என்ன கண்ணி! ஏன் இப்படிப் பார்க்கிறாய்? நான் குமரன்தான்!'' என்று கலகல எனச் சிரித்தான் அவன்.

'ஆம்... என் குமரன் தானா என்றுதான் பார்த்தேன்...' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் அவள்.

அவன் கொடுங்கோளூரிலிருந்து வந்து எத்தனை நாட்களாய்விட்டன?... தினந்தோறும் அவளுடைய கவிதைகளில் பாட்டுடைத் தலைவனாகப் பவனி வந்தவன் தான்; என்றாலும் அவனை நேரிலே காணும்போது, அவளுடைய நெஞ்சம் மகிழ்ச்சியால் துளும்பிக் கூத்தாடியது.

''கண்ணி! ஊரிலே எல்லோரும் நலம்தானே?... இப்போது ஊர்க் காட்டுக்குள்ளே புலிகள் வருகின்றனவா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் குமரன்.

இருவரும் வாயில்புறத்தில் இருந்த திண்ணையில் வந்து உட்கார்ந்தார்கள்.

''இந்தச் சிங்கம் அங்கே இருப்பதாக நினைத்துக் கொண்டு, புலிகளெல்லாம் வேறெங்கோ ஓடிப் போய்விட்டன!'' என்று கண்களிலே குறும்பு கொப்பளிக்கச் சிரித்தாள் கண்ணி.

''புலி வந்தாலும், உன் நடனத்தைக் கண்டால், அதுவும் நடனமாடிக் கொண்டே போய்விடுமே!... ஏன் கண்ணி! நீ அருமையாகக் கவிதை பாடுவதாகச் சொன்னார்களே, ஏதாவது நீ எழுதிய கவிதையைச் சொல்லேன்?'' என்று ஆர்வமாகக் கேட்டான் குமரன்.

''புறப்பொருள் பற்றிப் பாடவேண்டும் என்று நினைத்தேன்; ஆனால் இப்போது அகப்பொருள் கருத்துக்கள்தான் மனதில் தோன்றுகின்றன...'' என்று நாணம் விகசிக்க, நேரே தெரிந்த தோப்பைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டு குறுகுறுப்பாக முணுமுணுத்தாள் தாமக்கண்ணி.



வானத்திலே ஏராளமான தாரகைகள் முளைத்தெழுந்து சந்திரனைப் பார்த்துக் கண்சிமிட்டிக் கண்சிமிட்டித் தங்கள் காதலைக் கூறிக் கொண்டிருந்தன. ஆனால் சந்திரனோ அவைகளையெல்லாம் கண்டும் காணாதது போல் அலட்சியப்படுத்திவிட்டு, வேறெங்கோ நகர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

வீட்டுக்கு முன்பாக இருந்த உப்பங்கழியிலே மெல்லிய காற்று ஊஞ்சலாடிக் கொண்டே, சிறு அலைகளோடு கொஞ்சிக் கொண்டிருந்தது. எங்கோ தூரத்திலிருந்து ஒரு கருங்குயில், தன் துணையைக் கூப்பிட்டுக் கூவும் குரல் கேட்டது.

அந்தப் பசுஞ்சோலையின் பின்னணியில் அவள் சொர்ணச் சிலையாக உட்கார்ந்திருப்பது, ஏதோ ஒரு வனதேவதை வழிதவறி வந்து அங்கே அமர்ந்திருப்பது போல் தோன்றியது குமரனுக்கு.

அந்த இனிய தனிமையில் என்னென்னவெல்லாமோ பேசவேண்டும் என்று கண்ணி நினைத்துக் கொண்டு வந்தாளோ, அவையெல்லாம் இப்போது அவனைக் கண்டதும் நெஞ்சுக்குள்ளேயே புதைந்து வெளிவர மறுக்கின்றனவே!...

''என்ன, கண்ணி! திடீரென்று வந்துவிட்டாய்?'' என்று, மௌனத்தைக் கலைத்தான் குமரன்.

''திடீரென்று எதிர்பாராமல் வரும் சந்திப்புக்கள் தான், மிகவும் சுவையாக இருக்கும்,'' என்று முறுவலித்தாள் அவள்.

''ஏன் கண்ணி, ஊரிலிருந்து அரண்மனைக்குப் போகாமல் இங்கே நேரே வந்துவிட்டாயே? இது தெரிந்தால் உன் பால்யத் தோழி இளவரசி கோபித்துக் கொள்ளமாட்டாளா?''

"பெண்கள் நாற்றங்கால் பயிர் மாதிரி; அவர்கள் சிறுபிள்ளையாக வளர்வது ஓர் இடம்; பருவம் வந்ததும் வாழப்போவது இன்னொரு இடம்தானே? சிறுபிள்ளையாயிருந்தபோது வளர்த்த தாய் தந்தையரையும் தோழியரையும் விட, பருவ வயதில் இன்னொருவர் முக்கியமானவராகி விடுகிறார், இல்லையா?" என்று சமத்காரமாக அவள் தலைகுனிந்தபடியே சொன்னதும், குமரனின் உள்ளம் இலேசாக அதிர்ந்தது:

தாமக்கண்ணி என்ன நினைக்கிறாள்?... அவன் முன்பு சந்தேகப்பட்டது மாதிரி, அவள் உள்ளத்தில் ஏதாவது ஊமைக் காதல் அரும்பியிருக்குமோ?...

பேச்சின் போக்கை மாற்றுவதற்காக, "ஊரிலே தாத்தா அம்மா தோழிகள் எல்லோரும் நலம்தானே?" என்று விசாரித்தான் அவன்.

"எல்லோரும் நலம்தான்; ஆனால் தாத்தாவுக்கும் அம்மாவுக்கும்தான் ஒரு கவலை..."— எப்படியும் இந்தப் பொன்னான தனிமைப் பொழுதில், பேச்சைத் துவக்கிவிட வேண்டும் என்று கன்னி தீர்மானித்து விட்டாள் போலிருக்கிறது!

"கவலையா?... போர் தொடங்கப் போகிறதே என்ற கவலையா?"

"இல்லை... அந்தக் கவலை அவர்களுக்கு ஏற்படுவதனால் என்ன ஆகப்போகிறது?... அவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருப்பது குடும்பக் கவலை..."

"குடும்பத்தில்தான் அவருக்கு என்ன கவலை?"

"திருமணமாக வேண்டிய ஒரு பெண், வீட்டில் இருப்பதே ஒரு கவலைதானே?"

"இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? தாமக்கண்ணி மாதிரி ஒரு பல்கலையரசியைத் திருமணம் செய்து கொள்ள



இளைஞர்களா கிடைக்க மாட்டார்கள்?... ஒரு நல்ல இளைஞனாகத் தேர்ந்தெடுத்து அவனிடம் அவளை ஒப்படைத்துவிட வேண்டியதுதானே?" என்று பட்டும் படாதது போல் சொன்னான் குமரன்.

"பொறுப்பு இப்போது அவர்களைக் கடந்து போய் விட்டதே!... அவள் உயிரைக் காப்பாற்றி, அவள் இனி தனக்குத்தான் சொந்தம் என்று ஒருத்தர் அவளை தன் உடைமையாக்கிக் கொண்டு விட்டாரே!" என்று மெதுவாக வேறெங்கோ பார்த்தவாறு அவள் சொன்ன வார்த்தைகள், சொல்லம்புகளாக அவனுடைய உள்ளத்தில் பாய்ந்து துளைத்தன.

"கண்ணி! நீ என்ன சொக்கிறாய்?... இப்படி ஒரு எண்ணம் உன் நெஞ்சில் ஏற்பட்டிருக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே!..." என்ற அவன் குரல் கழிவிரக்கத்தால் நைந்து நொந்தது.

தானே தன் காதலைப் பிரகடனப்படுத்தியதும், குமரன் களிப்புடன் துள்ளிக் குதித்து 'கண்ணி! நான் எவ்வளவு கொடுத்து வைத்தவன்!' என்று மகிழ்ச்சியடைவான் என்று அவள் எதிர்பார்த்திருந்தாளே, அது இப்படி ஒரு சோகக் குரலாக நைந்து போய்விட்டதே!...

"ஏன்... எங்கே, என்னைப் பாருங்கள்!... என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்... என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்மேல் உங்களுக்கு அன்பு இல்லையா?..." என்று அவன் முன்னால் வந்து நின்றபடி, குரல் தழதழக்கக் கேட்டாள் கண்ணி.

அவளுடைய முகத்தைப் பார்க்கவே அவனுக்குத் துணிவு இல்லை.

'உன்மேல் எவ்வளவோ அன்பு வைத்திருக்கிறேன்; பாசம் வைத்திருக்கிறேன்... ஆனால் அந்த அன்பையும்

பாசத்தையும் கூட்டினால் அது காதலாகப் பரிணமிக்க வில்லையே?' என்று சொல்ல நினைத்தான். ஆனால் அவளுடைய நம்பிக்கைபூர்வமான பேச்சைக் கேட்ட பிறகும் அவன் சாதிக்கின்ற மௌனமே, அவளுடைய உள்ளத்தை அறுத்துக் கிழித்துவிடுமே, மேற்கொண்டு வார்த்தைகளாலும் அந்த உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்க வேண்டுமா?...

அவனுடைய நெஞ்சிலே ஏற்பட்டிருந்த குழப்பத்தையும், உள்ளத்தில் வீசும் புயலையும் பிரதிபலிப்பதுபோல், எதிரேயிருந்த கழியில் அலைகள் எழும்பி நகர்ந்து கரையில் மோதிக் கொண்டிருந்தன.

'என்னை மன்னித்துவிடு... உன்னுடைய நிர்மலமான உள்ளத் தடாகத்திலே காதல் உணர்வு என்னும் கல்லை எறிந்து சலனமுண்டாக்கி விட்டேன்; இது நான் தெரிந்து செய்த குற்றம் அல்ல— தெரியாமல் நடந்த தவறு. என்னை மன்னித்துவிடு... என் உள்ளத்தில் உனக்கு நீங்காத இடம் உண்டு; ஆனால் காதலுக்குரிய இடம் அல்ல. அந்த இடத்திலே உனக்கு முன்பே, இன்னொருத்தி அமர்ந்து விட்டாளே!...' என்று சொல்லிவிடுவோமா என்று சிந்தித்தான் குமரன்.

தன் முன்னே நின்ற கண்ணியை நிமிர்ந்து பார்த்தான் அவன்.

அவளுடைய நீண்ட கரிய கண்களிலே நீர் கசிந்து திரண்டு கொண்டிருந்தது. சிவந்த மெல்லிய உதடுகள் ஏமாற்றத்தைத் தாங்கும் வலிமையில்லாமல் நெகிழ்ந்து துடித்துக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரத்தில் 'ஓ' என்று அழுது வெடித்து விடுவாள் போலிருந்தது:

''ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? உங்கள் மனைவியாவதற்கு எனக்குத் தகுதியில்லையா?'' என்று கேட்கும் போதே அவளது கண்களிலிருந்து நீர்த்துளிகள் கீழே



நழுவி, மாம்பழக் கன்னங்களில் மாதுளை முத்துக்களாக உருண்டன.

''இல்லை, கண்ணி! உன்னை மனைவியாக அடைய எனக்குத்தான் தகுதி போதாது. நீ ஒப்புயர்வற்ற கலையரசி; கவியரசி; அழகரசி. ஆனால் நான் ஓர் எளிய இளைஞன். உன் கலையை, அழகை, அறிவை நான் ரசிக்கலாம்; உன் ரசிகனாக நான் இருக்க முடியுமே ஒழிய, உன் தலைவனாகும் தகுதி எனக்கு இல்லையே?...'' என்று உள்ளம் கசிந்து மெதுவாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, வெளியே யாரோ ஒருவர் வரும் சப்தம் கேட்டது.

சட்டென்று பேச்சை நிறுத்திக் கொண்டு, எழுந்து எட்டிப் பார்த்தான் குமரன்.

இளவரசி சிந்தாதேவி வாயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்!

உள்ளேயிருந்த தாமக்கண்ணியைப் பார்த்து சிந்தாதேவி எவ்வளவு திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தாளோ, அதே மாதிரி தாமக்கண்ணியும், இளவரசி அங்கே வந்ததைக் கண்டு திடுக்கிட்டாள்:

ஒவ்வொருத்தியின் திகைப்புக்கும் காரணங்கள் வெவ்வேறுதான்!

''கண்ணி! நீ எப்பொழுது வந்தாய்?'' என்று ஓடிப் போய், தோழியைக் கட்டியணைத்துக் கொண்டாள் இளவரசி. அவளுடைய அன்பான அணைப்பிலே மேலும் திக்குமுக்காடிப் போனாள் கண்ணி:

''இப்பொழுதுதான், சிறிது நேரத்துக்கு முன்னால் வந்தேன்...''

''வஞ்சிக்கு வந்தவள் அரண்மனைக்கு வராமல் இங்கே ஏன் வந்தாய்? இளம்பருவத் தோழி என்பதெல்லாம் இளம்பருவம் மாறியவுடனே மறந்து விடுமோ?'' என்று

கோபமாகக் கண்களால் உருட்டி விழித்துப் பார்த்தாள் இளவரசி. அந்தப் பார்வையின் கடுமையைத் தாங்க முடியாமல், தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் கண்ணி:

''அப்படியில்லை, தேவி! கொடுங்கோளூரிலிருந்து என்னை அழைத்து வந்தவருக்கு இங்கே புறஞ்சேரியிலே ஒரு வேலையிருந்தது. அதனாலே என்னை இங்கே விட்டுவிட்டுப் போய்விட்டார். இங்கேயிருந்து ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வரலாம் என்றிருந்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்...'' என்று தடங்கல் இல்லாமல் பொய் சொன்ன கண்ணி, ''அது சரி, உனக்குத்தான் படிப்பு முடிந்து விட்டதே, நாளை முக்கியமான திருநாள் இருக்கும்போது, நீ ஏன் தனியே இங்கே வந்து விட்டாய்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

இந்தக் குறுக்குக் கேள்வியைத் தோழியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை தேவி:

''அதுதான் நீ சொன்னாயே, முக்கியமான திருவிழா என்று. அந்த முக்கியமான திருவிழாவுக்கு இங்கே இருக்கிறவர்களை, கருங்குழலாதனார் குடும்பத்தை அழைத்துக் கொண்டு போகத்தான் வந்தேன். வந்த இடத்தில் நீயும் அகப்பட்டுக் கொண்டாய்!'' என்று சாமர்த்தியமாகச் சிரித்து மழுப்பி, தான் அங்கே அடிக்கடி வருகின்ற செய்தியை மறைத்து விட்டாள் இளவரசி.

இரு தோழிகளின் சாமர்த்தியமான பதில்களைக் கேட்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டான் குமரன்:

கள்ளங்கபடமற்ற குழந்தைப் பருவம் கடந்து, இளம்பருவத்துக் காதல் வந்தவுடன், பெண்களின் கண்களில் மட்டுமல்ல— பேச்சில்கூட கள்ளத்தனம் இயல்பாக வந்து விடுகிறதே!...



''ஊரிலே தாத்தா, அம்மா எல்லோரும் நலம்தானே?'' என்று விசாரித்தாள் தேவி.

மூவரும் பிறகு பொதுவான செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சரி, உங்களுடைய தமிழ்ப் படிப்பு எப்படியிருக்கிறது?'' என்று, இப்பொழுதுதான் அவனுடன் முதன் முதலில் பேசத் தொடங்குவது போல், குமரனைப் பார்த்துக் கேட்டாள் தாமக்கண்ணி.

''தமிழ்ப்படிப்பா?... தமிழைவிட, இவருக்குப் படை, போர், வில் அம்பு, எந்திரங்கள் மேலேதான் ஆர்வம் அதிகமாயிருக்கிறது! சேர நாட்டிலுள்ள படைகளைப் பற்றியும் போர்க் கருவிகளைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆனால் தமிழ் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கிறார் என்று கருங்குழலாதனாரைத் தான் கேட்க வேண்டும்!'' என்று சிரித்தாள் தேவி.

''ஏன், உங்கள் தோழி ஒலியாளைக் கேட்டுப் பாருங்கள்! நான் எவ்வளவு அக்கறையோடு தமிழ் படித்து வருகிறேன் என்று அவளுக்குத் தெரியும்,'' என்றான் குமரன்.

''உங்கள் தமிழ்ப் படிப்பைப்பற்றி ஒரு பவளப் பெண்ணிடம் மதிப்புரை கேட்க வேண்டியாய் விட்டதா?'' என்று கேலியாகப் புன்னகைத்தாள் இளவரசி.

கோயிலுக்குப் போயிருந்த கருங்குழலாதனும் மனைவியும் திரும்பி வந்து, தங்கள் வீட்டில் கூடியிருந்த விருந்தினர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

''கண்ணி! வாம்மா... ஊரிலே தாத்தா, உத்திரை எல்லோரும் நலந்தானே?'' என்று அன்பொழுக விசாரித்து, கண்ணியை அணைத்துக் கொண்டு, கனிவோடு தலைமயிரைக் கோதிவிட்டார் கருங்குழலாதன்.

"ஐயா! நாளை திருவாதிரை விழா அல்லவா? அதற்கு உங்களையெல்லாம் அரண்மனைக்கு அழைத்துப் போக வந்தேன்..." என்றாள் இளவரசி.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, எல்லோரையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினாள் தேவி.

அரச விருந்தினர்கள் தங்கும் வேண்மாடத்தில் குமரனையும் கருங்குழலாதனாரையும் தங்க வைத்துவிட்டு, மற்றவர்களை அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றாள் சித்தாதேவி.

திருவாதிரை விழா, இளம் பெண்கள் தங்களுக்குச் சிறந்த கணவனைப் பெறுவதற்குக் கடவுளை வேண்டுகின்ற திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.[2]

இவ்விழாக் காலத்தில் நாள்தோறும் விடிகாலையில் நீராடி, நெய், பால் முதலியன உண்ணாமல், கண்ணுக்கு மையிடாமல், மலர் சூடாமல் விரதம் இருந்து, இறைவனைப் பணிந்து பாடுவார்கள். இறுதி நாளாகிய திருவாதிரை நாள் அன்று, அதிகாலையில் குளித்துப் புத்தாடையும் அணிமணிகளும் அணிந்து, பால் சோறும் நெய்ச்சோறும் உண்பார்கள். இவ்விரதம் இருப்பதால், உத்தமமான கணவன் தனக்குக் கிடைப்பான் என்ற நம்பிக்கையால், எல்லா இளம்பெண்களும் இவ்விரதத்தையும் விழாவையும் சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள்.

---

2. சங்க காலத்தில் 'தைந்நீராடல்' என்றும் பிற்காலத்தில் 'மார்கழி நோன்பு' என்றும் வழங்கப்பட்ட விழா, சேரநாட்டில் திருவாதிரை விழா எனச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் விவரங்களை, அறிஞர் மு. இராகவையங்கார் ஒரு கட்டுரையில் ஆராய்ந்து எழுதியுள்ளார்— 'ஆராய்ச்சித் தொகுதி'— 13-ம் கட்டுரை: பக்கம் 185.



மறுநாள் அதிகாலையிலே, வேண்மாடத்திற்குப் பக்கத்தில் இருந்த இலவந்திகையில் பெண்கள் ஆரவாரத்துடன் குளித்தவாறு பாடும் சப்தம், படுக்கையிலிருந்த குமரனின் காதுகளில் விழுந்தது.

இளவரசியும் தாமக்கண்ணியும் மற்ற கன்னிப் பெண்களும் குளத்தில் பொங்கப் பொங்க நீராடிக் கொண்டிருந்தார்கள். காமனைப் பற்றிய ஓர் இசைப் பாடலைக் கண்ணி பாடிக் கொண்டிருந்தாள்.

முதல்நாள் குமரனைச் சந்தித்துப் பேசியதும் அவளுக்கு ஓர் எதிர்பாராத அதிர்ச்சி ஏற்படத்தான் செய்தது. தன்னைக் குமரன் காதலிக்கவில்லை என்பது ஒரு பெரிய அதிர்ச்சிதான் என்றாலும் அதற்கு அவன் கூறிய காரணமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய்த்தானே இருக்கிறது?

தாமக்கண்ணி, அரசாங்கச் செல்வாக்குள்ள ஒரு பெரும் புலவரின் பேத்தி; ஏனாதிப்பட்டம் பெற்ற தளபதியின் ஒரே மகள்; அவளைக் காதலிக்கவோ, திருமணம் செய்ய ஆசைப்படவோ, சாதாரண ஆளான தனக்குத் தகுதியில்லை என்று குமரன் நினைத்தது ஒருவகையில் சரிதான்; இந்த நினைப்பே, அவனுடைய சிறந்த பண்பை மேலும் எடுத்துக் காட்டுகிறதே!

அவனுடைய தாழ்வு மனப்பான்மையை அகற்றி, அவன் தாமக்கண்ணி மட்டுமல்ல— உலகத்தில் எந்த உயர்ந்த குடும்பத்துப் பெண்ணையும் மணக்கும் அளவுக்குத் தகுதியுள்ளவன் என்பதை அவனுக்குப் புரிய வைத்து, அவன் இதயத்தில் இடம் பெற்றுவிடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தாள் தாமக்கண்ணி.

அந்த இனிய நம்பிக்கையின் பின்னணியில், மறுநாளே நல்ல கணவனுக்காக நோன்பு நோற்கும் விழா நடைபெறுவது அவளுள்ளத்தை மகிழ்ச்சியால் துள்ளச் செய்து கொண்டிருந்தது. அந்தக் காதல் தந்த இனிமை

பின்னணியாக உள்ளத்திற்குள் இசையாய் ஒலிக்க, அருமையாகப் பாடி நீராடிக் கொண்டிருந்தாள் தாமக்கண்ணி.

அந்தப் பாட்டுக்குத் தாளமாக, மற்ற பெண்கள் தம் கைகளால் தண்ணீரைத் தட்டி ஒலி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தங்கள் இடது கையை மூடித் தண்ணீர் மட்டத்துக்குக் கீழே, நீர்மட்டத்தில் அமிழ்த்திக் கொண்டு, வலது உள்ளங்கையால் சாய்வாக அடித்துத் தாளத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்.

தாமக்கண்ணி பாடி முடித்ததும், மற்ற பெண்களும் ஒவ்வொருத்தியாக முறைவைத்துப் பாடி நீராடினார்கள். சூரிய உதயமானதும் இலவந்திகையிலிருந்து வெளியேறி, புத்தாடை அணிந்து, கண்ணுக்கு மையிட்டு, நெற்றித் திலகமிட்டு, கூந்தலில் மலர் சூடி அலங்கரித்துக் கொண்டார்கள். கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து, இளவரசியும் தாமக்கண்ணியும் காலையில் விருந்துப் பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு வேண்மாடத்துக்கு வந்தனர்.

நீராட்டு முடிந்த, பொற்சிலைகளாக வந்த இருவரையும் பார்த்து, அவர்களின் அழகிலே தன்னை மறந்து நின்றான் குமரன்.

இருவரில் யார் அதிக அழகு என்று இப்போதும் அவனால் முடிவு செய்ய முடியவில்லை. நீராடியதும் உலர்வதற்காக விரித்து விடப்பட்டிருந்த கூந்தல், கரு மேகங்கள் போல், அவர்களின் நிலாமுகத்தை மறைக்க முடியாமல் மேலும் அந்த அழகுக்கு அழகு ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

கருங்குழலாதனாரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள் அந்த அழகு மங்கைகள். இருவரையும் அன்பாக அணைத்து வாழ்த்தி மகிழ்ந்தார் தாத்தா.



இருவரும் தாங்கள் கொண்டுவந்திருந்த விருந்துச் சாப்பாட்டை, தாத்தாவுக்கும் குமரனுக்கும் பரிமாறினார்கள். திருவிழாவுக்குரிய அக்கார அடிசிலையும் நெய்ச் சோற்றையும் ருசித்துச் சாப்பிட்டார்கள் விருந்தினர்கள்.

''இன்று அந்தப்புரத்துக்கு இன்னொரு விருந்தினரும் வந்திருக்கிறார்கள். அது யார், தெரியுமா?'' என்று பரிமாறிக்கொண்டே குமரனிடம் கேட்டாள் சிந்தாதேவி.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

''யார் என்று எனக்கு எப்படித் தெரியும்? இளவரசி தன் அந்தப்புரத்துக்கு யார் யாரை விருந்தினராக அழைப்பார் என்று எளியேனுக்கு என்ன தெரியும்?''

''அந்த விருந்தினரை உங்களுக்குத் தெரியும்; அவர் யார் என்று உங்களால் சொல்ல முடியும்...'' என்று குறும்பாக முறுவலித்தாள் இளவரசி.

சிறிது நேரம் யோசித்துப் பார்த்த குமரன் ''ஒலிவியாவா?'' என்றதும், ''பார்த்தீர்களா, சரியாகச் சொல்லி விட்டீர்கள்!'' என்று கலகல எனச் சிரித்தாள் தேவி.

''அவள் யவனப்பெண் என்று உருவத்தால்தான் தெரிகிறது; உள்ளத்தால் அவளும் தமிழ்ப்பெண் போல் தான் இருக்கிறாள்!'' என்று பாராட்டினாள் கண்ணி.

''அப்படியில்லையென்றால், இளவரசிக்குத் தோழியாக இருக்க முடியுமா?'' என்றான் குமரன்.

விருந்துக்குப் பிறகு, அரண்மனைத் தோட்டத்தில் ஆடல் பாடல்களும் கொண்டாட்டங்களும் தொடர்ந்து நடந்தன. அவற்றிலே ஒலிவியாவும் கலந்து கொண்டாள்.

பூங்கிளைகளில் தொங்கிய ஊஞ்சல்களிலே அமர்ந்து ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இனிமையாய்ப் பொழுது போக்கினார்கள். 'இருட்டும் நேரத்தில்

விளையாட்டுக்களை முடித்துக் கொண்டு, திருமால் கோயிலுக்கு எல்லோரும் போய் விட்டார்கள்' என்று தெரிந்ததும் குமரன் வேண்மாடத்திலிருந்து வெளியே வந்து, எதிரில் இருந்த தோட்டத்தில் காற்றாட ஒரு மேடையில் உட்கார்ந்து, ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அப்போது, பின்னாலிருந்து ஒரு பெண், தன் இளம் மலர்க்கைகளால் அவன் கண்களை விளையாட்டாக மூடியதும், திடுக்கிட்டு ''யார் அது?'' என்று திரும்பினான் குமரன்.

## 24

குமரனின் எதிரே உட்கார்ந்திருந்தாள் சிந்தாதேவி. அவளுடைய முகம் வழக்கமான கலகலப்பு இல்லாமல், செல்லக் கோபத்துடன் சிவந்திருந்தது. மென்மையான குளிர்காற்று அவளது பூவுடலைத் தொடுவதற்குப் பயந்து, கலைந்து கிடந்த கேசச் சுருள்களைப் பறக்கவிட்டு அவளது மலர் முகத்தைத் தொட்டுப் பதம் பார்த்துக் கொண்டிருந்தது. சிரிக்கும்போது ஆளை மயக்கி ஆழ்த்தும் அந்தக் கன்னக்குழி பதுங்கியிருக்க, இதழ்கள் இறுகிக் கடினமாக இருந்தன.

''இளவரசி! என்ன கோபம் உங்களுக்கு? உங்கள் வருகை மாதிரியே, கோபமும் திடீர் என்று வந்திருக்கிறதே?'' என்று பணிவாகக் கேட்டான் குமரன்.

''நான் பின்னால் வந்து கண்ணை மூடியபோது, 'யாரது' என்று கேட்டீர்களே, அதற்கு என்ன



அர்த்தம்?''— அவளுடைய குரலில் கோபம் சிறிதும் குறையவில்லை.

''கண்ணை மூடுவது யார் என்பது எனக்குத் தெரியவில்லை என்று அர்த்தம்; இதில் வேறு என்ன அர்த்தம் இருக்கிறது?''

''பின்னால் வந்து கண்ணை மூடி விளையாடுகின்ற உரிமை, எனக்கு மட்டுமே இல்லை என்றும் ஒரு அர்த்தம் இருக்கிறது, இல்லையா?'' என்று கண்களால் அவனை வெட்டினாள் தேவி.

அந்த அர்த்தம் உண்மைதான் என்று அவனால் சொல்ல முடியுமா? இந்தப் பாழும் காதல், இப்போது அவனையும் கள்ளத்தனமான பதிலைச் சொல்ல வைத்தது!

''ஐயையோ!... அப்படியில்லை... திடீரென்று தொட்டதால் திடுக்கிட்டு, அப்படிக் கேட்டேனே தவிர, அதற்கு நீங்கள் சொல்கின்ற மாதிரி அர்த்தமெல்லாம் இல்லை... என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா?'' என்று குழைவாக அவன் விளக்கிய பிறகு, அவளால் அந்தப் பொய்க் கோபத்தை நீடிக்க முடியவில்லை:

''உங்களைப்பற்றி நன்றாகத் தெரியும். நானும் விளையாட்டாகத்தான் கோபித்துக் கொண்டேன்,'' என்று கண் சிமிட்டிச் சிரித்தபோது, பேரியாற்றின் சுழி மீண்டும் அவள் கன்னங்களில் முகிழ்த்தது.

சூழ்நிலையின் கனத்தை இன்னும் இலேசாக்குவதற்காக, பேச்சை வேறு பக்கம் திருப்பினான் குமரன்:

''இளவரசி! உங்கள் நாட்டு அரசர், பெரும் கொடுங்கோல் மன்னர்,'' என்று அவன் சொன்னதும் அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்:

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''மற்ற நாடுகளில் கோபம் மிகுந்த பட்டத்து யானையை வெளியில் தெருக்களில் விடும் போது,

'பட்டத்து யானை வருகிறது' என்று முன்பாகவே பறையறிவித்து மக்களை எச்சரிக்கை செய்வார்கள். ஆனால் உங்கள் மன்னர் அப்படிப் பறையறிவிக்காமல், கண்டோரைக் கொல்லும் யானையை அவிழ்த்துவிட்டிருக்கிறாரே!'' என்று அவன் சொன்னது அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நீண்ட கரிய கண்களை அலங்க மலங்க விழித்தபடி அவள் தடுமாறுவதைப் பார்த்து ரசித்தான் அவன்:

''கண்டாரைக் கொல்லும் கொல்லிப்பாவை போன்ற அழகுச் சிலையான நீங்கள் அரண்மனையிலிருந்து வெளி வரும்போது, முன்னெச்சரிக்கையாகப் பறையறிவிக்க வேண்டாமா?'' என்று குறும்பாகச் சிரித்தான் குமரன்.

அதைக் கேட்டதும் அவள் கன்னத்தில் தோன்றிய நாணச்சிரிப்பு, அவளை இன்னும் பெரிய கொல்லிப் பாவையாக்கியது!

''ஆகா!... உங்களுக்குக் கவிதையுணர்ச்சி இப்பொழுது பொங்கிவர ஆரம்பித்து விட்டது போலிருக்கிறதே!''

''இல்லை... இது என் கற்பனையல்ல; ஒரு புலவர் பாடிய பாட்டைத்தான் நான் சொன்னேன்...'' என்ற குமரன் ''அது சரி, அந்தப்புரத்திலிருந்து எல்லாப் பெண்களும் கோயிலுக்குப் போயிருப்பதாகக் கேள்விப் பட்டேன். நீங்கள் மட்டும் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''நானும் கோயிலுக்குப் போகவிருந்தவள்தான்; ஆனால் இனிமேலும் நான் கோயிலுக்குப் போக வேண்டுமா?''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''கோயிலுக்குப் போவதனாலும் விரதம் இருப்பதனாலும் ஒரு கன்னிப் பெண்ணுக்கு கிடைக்கவேண்டிய தவப் பயன் கிடைத்துவிட்டால் அப்புறம் அவள் கோயிலுக்குப்



போவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?'' என்று சமத்காரமாகச் சொன்ன தேவி, ''எனக்குத் தலைவலி என்று பொய் சொல்லி, கன்னியையும் ஒலியாவையும் மற்றவர்களையும் கோயிலுக்கு அனுப்பிவிட்டு, உங்களைப் பார்க்க இங்கே வந்தேன்...'' என்றாள்.

''காதல் வந்துவிட்டால், பெண்களுக்குப் பொய் மிகத் தாராளமாக வருகிறது!'' என்று சிரித்தான் குமரன்.

''பொய் மட்டுமா, கவிதை கூட வரும், தெரியுமோ?'' என்று வெட்கம் பரிமளிக்க முணுமுணுத்தாள் தேவி.

''அப்படியா?... எனக்குக் கவிதையே வரவில்லையே?''

ஆண்கள் எப்போதுமே உணர்ச்சியை அமுக்கிக் கொள்கிறவர்கள். ஆழமான நடுக்கடலிலே அலைகள் இருக்காது அல்லவா, அதுமாதிரி ஆண்கள் மனம்; ஆனால் பெண்கள் அப்படியல்ல. சீக்கிரமாகவே உணர்ச்சிகளால் அலைமோதுகிறவர்கள்!''

''நீங்கள் எழுதிய கவிதையைச் சொல்லுங்கள், கேட்போம்!'' என்று ஆர்வமாக நிமிர்ந்து உட்கார்ந்தான் குமரன்.

நுண்ணறிவும் சிந்தனைத் திறமும் உடைய தன் காதலியின் பாடலைக் கேட்பதிலே அவன் அளவு கடந்த துடிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஒரு நிபந்தனை: இந்தப் பாடலை நான் பாடியதாக யாரிடமும் சொல்லக்கூடாது,'' என்று கண்டிப்பாகக் கூறினாள் தேவி.

''சரி... என் காதலி மட்டுமல்ல— என் காதலியின் பாட்டுக்கூட பிறர் அறியாத ரகசியமாகவே இருக்கட்டும்!'' என்று குறும்பாகச் சொன்னான் அவன்.

''பாட்டை வெளியே சொல்வதில் ஆட்சேபணை இல்லை; ஆனால் நான் பாடியதாக யாருக்கும் சொல்ல வேண்டாம். யாரோ ஒருவர் பாடிய பழைய பாட்டு

என்று எல்லோரிடமும் சொல்லிவிடலாமே?'' என்ற சிந்தாதேவி, தான் எழுதிய பாட்டை நினைவுபடுத்திக் கொண்டு, மெல்லிய குரலில் பாடினாள்:

''பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனோடு
யாத்தேம்; யாத்தன்று நட்பே
அவிழ்த்தற்கு அரி(து)அது; முடிந்து அமைந்தன்றே...''[1]

பாடலைக் கேட்டதும் குமரன், அதன் சுவையிலும் ஆழ்ந்த கருத்திலும் நுட்பமான உட்பொருளிலும் திளைத்து ரசித்தான்:

''ஆகா! மிகவும் அருமையாகப் பாடியிருக்கிறீர்கள்!... அந்த நட்பு அவிழ்த்தற்கு அரிது என்று கூறுகிறீர்களே, உங்கள் காதலை மன்னர் அங்கீகரிப்பார் என்று நம்புகிறீர்களென்று அர்த்தமா?''

''காதலிப்பது என் உரிமை; திருமணம் செய்விப்பது தான் தந்தையின் கடமை. தந்தை காதலை அங்கீகரிக்காவிட்டால், திருமணம் தானாக நடக்க வேண்டியது தானே?''

---

1. 'குறுந்தொகை': 313— இப்பாட்டைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. ஆகையால் இதைச் சிந்தாதேவி பாடியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. (உண்மையில் இதைப் பாடியவரின் ஆத்மா, மன்னித்தருள்க!)

பொருள்:— கடற்கரையில் வெண்காக்கை என்னும் பறவை, கழியிலே மீனைத் தேடி உண்டு, சோலையில் தங்குகின்ற துறையின் தலைவனோடு நான் இணைந்துவிட்டேன்; அந்த நட்பு நன்றாகப் பொருந்திவிட்டது; அது யாராலும் பிரிக்க முடியாத முடிச்சாக முடிக்கப்பட்டிருக்கிறது.



''அது எப்படி? அவ்வாறு சேரநாட்டு மன்னர் தன் ஒரே மகளை இழந்து விடுவாரா? தனக்குப் பின்னால் அரசாள வேண்டிய உங்களை, ஒரு சாதாரண ஆள் திருமணம் செய்து கொள்ள விடுவாரா?... ஓர் அரச குமாரனுக்குத் தன் மகளை மணமுடித்துப் பார்க்கத்தானே அவர் விரும்புவார்?''

''இந்த விஷயத்தில் அவருடைய விருப்பம் நிறைவேறாது... அரச குடும்பத்தைச் சேர்ந்த யாரையுமே நான் மணந்து கொள்ளப் போவதில்லை...'' என்று தேவி அழுத்தமாகச் சொன்னதும் குமரன் திடுக்கிட்டான்:

''அரசர் என்றாலே ஏன் இப்படி உங்களுக்கு வெறுப்பு?''

''வாழப் பிறந்த உயிர்களோடு விளையாடும் அரசர்களை— தங்களுடைய நிலையற்ற புகழுக்காகவும் பொய்ம்மானத்துக்காகவும் வீண் பெருமைக்காகவும் மக்களைப் பலி கொடுக்கும் அரசர்களை— நான் முழுமையாக வெறுக்கிறேன். போர் என்ற கொடுமையை உலகத்திலிருந்து தவிர்க்க என்னால் முடியாமல் போகலாம்; ஆனால் என் வாழ்க்கையில் போர் என்பதே சம்பந்தப்படாமல் தவிர்த்துக் கொள்ள முடியும்— இது நிச்சயம்! என் தந்தையல்ல, கடவுளே எதிர்த்து நின்றாலும், இந்தத் தீர்மானத்திலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை. யார் எதிர்த்தாலும் சரி, நான் ஒரு சாதாரணக் குடிமகனை மணந்து கொண்டு, இளவரசிப் பட்டத்தையும் அரண்மனை வாழ்வையுமே துறக்கப் போகிறேன்...'' என்ற சிந்தாதேவியின் குரலில் ஒலித்த அசாதாரண உறுதியைக் கண்டு பிரமித்துப் போய் விட்டான் குமரன்.

அப்போது— சிறிது தூரத்தில் ஒரு புதருக்குப் பின்னால் சரசர என்று காலடியோசை கேட்டது!

யாரோ அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட குமரனும் தேவியும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தச் சப்தத்திற்கு இன்னும் சிறிது தூரத்தில் ஏற்பட்ட மற்றொரு காலடியோசை, திகைப்பில் ஆழ்ந்திருந்த அவர்களுக்குக் கேட்காமலே போய் விட்டது!

அன்று இரவு பூராவும் தாமக்கண்ணிக்குத் தூக்கம் வரவில்லை. பக்கத்துக் கட்டில்களிலே இளவரசியும் ஒலியியாவும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இனிமேல் கண்ணிக்குத் தூக்கம் வருமா?... அவள் எத்தனை எத்தனை வண்ணக் கனவுகளுடன் வஞ்சிக்கு வந்தாள்?... கடைசியில் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டு விட்டாள்?... மாவீரன் குமரனுக்கு மனைவியாகி, இல்லறம் இனிமையாய் நடத்தி, குழந்தைகள் பெற்று வளர்த்து, பேரன் பேத்திகள் எடுக்கும் வரை, இனிப்பான கனவுகளிலேயே மிதந்து வந்த அவளுக்கு, கருங்குழலாதனாரின் வீட்டிலே முதல் இடி விழுந்தது.

அவளை மனைவியாக அடையத் தனக்கு அருகதை இல்லை என்ற தாழ்வு மனப்பான்மையிலிருந்த குமரனுக்குத் துணிவூட்டலாம் என்னும் நம்பிக்கையில் அன்று நடந்த திருவாதிரை விழாவில் உற்சாகப் பங்கு கொண்டு, கோயிலிலே இறைவனிடம் மனப்பூர்வமாக, 'குமரனையே தன் கணவனாக' அருளும்படி வேண்டிக்கொண்டாளே, அந்த நம்பிக்கை, கோயிலிலிருந்து அரண்மனை திரும்பியதுமே, நீர்க் குமிழிபோல் உடைந்து கரைந்து விட்டதே!

கோயிலிலிருந்து திரும்பியதும் அந்தப்புரத்தில் தோழியைக் காணாததால் அவளைத் தேடித் தோட்டத்துப் பக்கம் வந்த கண்ணி, சிறிது தூரத்தில் தேவியும் குமரனும் தனியே நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

கீழே கிடக்கும் பூக்கள், இலைகள், சருகுகளில் கால் பட்டு ஓசை ஏற்படாமல் மெதுவாக நடந்து சென்றவள், சிறிது தூரத்திலிருந்த ஒரு புதரின் பின்னால் மறைந்து நின்று, அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.



சூழ்நிலையின் முக்கியத்தை உணர்ந்த அவள் காலுக்குக் கீழே வந்த ஒரு சிற்றெறும்பு, 'சுருக்' என்று கடித்துவிட, அவள் திகைத்துத் தடுமாறி அசைய, அதனால் பக்கத்தில் கிடந்த சருகுகளின் ஒலி எழும்ப, சட்டென்று இருட்டில் மறைவாகவே திரும்பிப் போய்விட்டாள் கண்ணி. அப்போது, சற்றே பக்கத்தில் ஏற்பட்ட இன்னொரு சலசலப்புச் சப்தம் அவள் காதில் விழவில்லை!...

நெஞ்சம் துடிதுடிக்க, கருவிழிகளிலே நீர் கசிந்து துளும்ப, படுக்கையில் வந்து விழுந்த கண்ணி, உணர்ச்சிகளை அடக்க முடியாமல் விம்மி விம்மி அழுது தீர்த்தாள்.

தன்னை மனைவியாக அடையமுடியாது என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டிருக்கிறான் குமரன் என்று நினைத்தாளே, அது எவ்வளவு பெரிய தவறு?... இப்போது— அவனைத் தன் கணவனாக நினைப்பதற்குத் தனக்கு அருகதையில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அவளுக்கல்லவா வந்துவிட்டது!...

குமரனுக்கு, எத்தகைய உயர்ந்த இடத்திலிருந்து காதலி கிடைத்திருக்கிறாள்? அழகிலும் குணத்திலும் கண்ணியைவிட, தேவி உயர்ந்தவளாயில்லாமலிருக்கலாம்; ஆனால் அவளுடைய அந்தஸ்து—? வைரம் இரண்டும் ஒரே தரமானாலும், தங்கத்திலே பதிக்கப்பட்டுள்ள வைரத்துக்கு அதிக மதிப்பு உண்டல்லவா?

உண்மையிலே, தேவி இளவரசி என்பதற்காகத்தான் குமரன், கண்ணியை விட்டுத் தேவியைக் காதலிக்கிறானா?— அப்படியும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. அப்படி அந்தஸ்துக்காகப் பல்லிளிக்கிறவன் குமரன் அல்ல என்பது அவளுக்குத் தெரியும்... எப்படியோ, குமரனுக்குத் தேவியைப் பிடித்திருக்கிறது... காதல் என்பது, இரு

உள்ளங்களில் தெய்வ அனுக்ரகத்தால் ஏற்படும் உணர்ச்சி என்கிறார்களே, அது ஏழேழு பிறவிகளிலும் தொடர்ந்து வருகின்ற பந்தம் என்கிறார்களே, அது உண்மையாகத் தான் இருக்க வேண்டும்?...

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு, குமரனையோ, தேவியையோ குறை சொல்லவோ, பொறாமைப்படவோ இல்லை அந்தத் தோழி. தன்னைவிட, தேவி குமரனுக்கு நல்ல மனைவியாக அமைவாள் என்பதை நினைத்து மகிழ்ந்தாள். அவர்கள் இருவரையும் இப்பொழுதே கணவன்— மனைவியாகக் கற்பனையில் கண்டு, மனப்பூர்வமாக வாழ்த்தினாள் கண்ணி...

இரவு முழுவதும் பொங்கிக் கிடந்த அவளுடைய இதயக்கடல், மறுநாள் காலை விழித்தெழுந்தபோது நிர்மலமாக இருந்தது. குமரனின் காதலியாக அவனைப் பார்க்க வஞ்சிக்கு ஓடிவந்தவள், மீண்டும் தேவியின் பால்யத் தோழியாக மாறினாள்...

மறுநாள் காலையில், ஒலிவியா அரண்மனையிலிருந்து புறப்பட்டாள். போகும்போது, வேண்மாடத்துக்கு வந்து குமரனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றாள்:

''குமரன்! நீங்கள் ஒரு தடவை என் வீட்டுக்கு வாருங்களேன்! உங்களைப்பற்றி என் அண்ணனிடம் சொல்லியிருக்கிறேன்... ஓய்வு நேரம் கிடைக்கும்போது அவசியம் வரவேண்டும்...'' என்று ஒலிவியா சொன்னதும், குமரன் ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போனான்:

தன் வீட்டுக்கு அவனை ஒலிவியா அழைக்கிறாள் என்றால், அவனுடைய நல்ல குணத்தை அவள் அங்கீகரித்துவிட்டாள் என்று அர்த்தம் ஒருவேளை, இளவரசியின் விருந்தினனாக, திருவாதிரை விழாவுக்கு வந்து, வேண்மாடத்தில் தங்கியதால் அவனுடைய கௌரவம், ஒலிவியாவின் பார்வையிலே உயர்ந்து விட்டதோ?



'ஒலிவியாவின் வீட்டுக்குப் போனால் உங்களுக்கு ஆச்சரியமான செய்தி ஒன்று கிடைக்கும்' என்று முன்பு ஒருமுறை இளவரசி அவனிடம் கூறியது நினைவுக்கு வந்தது. அந்த ஆச்சரியம் என்னவாக இருக்கும் என்று அறிய அவன் உள்ளம் துடித்தது.

''ஓ!... மிக்க மகிழ்ச்சி... நிச்சயம் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்'' என்று அவள் அழைப்பை ஏற்றுக் கொண்டான்.

அவள் சென்ற சிறிது நேரத்தில் இளவரசியும் தாமக்கண்ணியும் அங்கே வந்தார்கள்.

கண்ணிக்கு இனிமேலும் அங்கே இருக்க மனம் சங்கடப்பட்டது. உடனே ஊருக்குப் போகவேண்டும் என்று சொல்லிவிட்டாள். இன்னும் சில நாட்கள் அங்கே இருந்துவிட்டுப் போகும்படி தோழி எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துவிட்டாள். ஆனால் கண்ணி ஒரே பிடிவாதமாகப் புறப்பட்டுவிட்டாள்:

''இல்லை, தேவி! நான் உடனே ஊர் திரும்ப வேண்டும். இன்றே திரும்புவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். இன்று நான் போகாவிட்டால், அம்மாவும் தாத்தாவும் மிகவும் கவலைப்படுவார்கள்...'' என்றாள் கண்ணி.

''சரி... உனக்குத் துணையாக நான் வருகிறேன்...'' என்றான் குமரன்.

''எனக்குத் துணையாகவா?...'' என்று பழைய ஏக்கப் பார்வையுடன் அவனைப் பார்த்த கண்ணி, சட்டென்று சமாளித்துக்கொண்டு, ''வேண்டாம். நானே தனியாகப் போய்விடுவேன். எதற்குத் துணை?'' என்று மறுத்தாள்.

''தனியாகப் போக நான் விடுவேனா? நானும் ஐயாவைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டனவே?

வந்து பார்த்துவிட்டுத் திரும்புகிறேன்...'' என்று புறப்பட்டான் குமரன்.

''ஆமாம்... நீ தனியாகப் போவது நல்லதில்லை; பல்லக்கை அனுப்புகிறேன். துணைக்கு இவரும் வரட்டும்...'' என்று சொல்லி, ஒரு பல்லக்கிலே தோழியை அனுப்பிவைத்தாள் இளவரசி.

காட்டில் இயற்கை அழகுக் காட்சிகளை ரசித்தபடி, குதிரையில் பல்லக்கின் பக்கத்திலேயே வந்துகொண்டிருந்தான் குமரன்.

உள்ளேயிருந்த தாமக்கண்ணி, பல்லக்குத் திரைக்குள் இருந்தவாறு, ஏதும் பேசாமலிருந்தது குமரனுக்கு என்னவோ போலிருந்தது:

''கண்ணி! பேசக்கூடாது என்று ஏதேனும் விரதமா?'' என்று குறும்பாகக் கேட்டான் அவன்.

''ஏற்கனவே இருந்த விரதத்துக்கே பயன் கிடைக்கவில்லையே, இனி ஏன் புது விரதம்?''— திரைக்குள்ளிருந்து அந்த விரக்திக் குரல் பேசியது.

''பிறகு, ஏன் எதுவும் பேசாமலே வருகிறாய்?''

''பேசுவதற்கு என்ன விஷயம் இருக்கிறது?''

''ஏன் இல்லை? எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றனவே?''

''அப்படியானால், பேசுங்கள்; நான் கேட்டுக்கொண்டே வருகிறேன்.''

அவளுடைய மனநிலை அவனுக்குப் புரியாமல் இல்லை; பெண்களின் மனதில் உற்சாகம் இருந்தால், அவளைப் 'பேசாதே' என்று தடுப்பது கடினம்; உள்ளத்திலே சோகம் கவ்விக்கொண்டால் அவளைப் பேசவைப்பது கடினம்.



இளம் பருவத்துக்குரிய உணர்ச்சிகள் தளதளக்க, 'காதல் காதல்' என்று பறந்து வந்த அந்தக் கலைக் குயிலின் சிறகைத்தான் அவன் முறித்துவிட்டானே? இனி அந்தக் குயில் கூவிப்பறக்குமா?...

''சரி... பேசவேண்டாம். ஒரு பாட்டாவது பாடேன்!... வழிப் பயணத்தின் களைப்புத் தெரியாமல், பாட்டை ரசித்துக் கொண்டே வருகிறேன்...'' என்று கெஞ்சினான் குமரன்.

அவனுடைய கெஞ்சுதலால் அவள் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது. மேலும் அவனுடைய உள்ளக் குமுறலுக்கும், பாடல் வடிகாலாக அமையுமே?

திரையை விலக்காமலே, உள்ளேயிருந்து அந்தக் குயில் கூவியது; அந்தக் குரலின் அனுபவமும் சோகபாவமும் அவனைத் திடுக்கிட வைத்தன.

அந்தக் கலைக்குயில் எவ்வளவு உருக்கமாக, சோக கீதத்தைக் கூவுகிறது!

''குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி
மண்திணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னிஎவ் வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கிற் சென்றற் றாங்கு
நெஞ்சம் அவர்வயின் சென்றன ஈண்டொழிந்து
உண்டல் அளித்தென் உடம்பே விறற் போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத்திருந்த தனிமகன் போன்றே...'' [2]

---

2. 'நற்றிணை'— 153 பாட்டின் பொருள்: 'கீழ்கடலில் சென்று இறங்கி நீரை முகந்தெழுந்து, இடியாக ஒலித்து மழைபெய்து முடித்த மேகம் தெற்கே சென்று மறைந்ததுபோல், என் நெஞ்சம் என்னை விட்டுக்

அந்தப் பாடலின் சோகக் கருத்து, குமரனின் உள்ளத்தை உலுக்கி விட்டது. அந்தக் குரலின் அவலத்தை உணர்ந்ததுபோல், வேகமாக வீசிக் கொண்டிருந்த காற்றுக் கூட, மௌன அஞ்சலியாகத் தளர்ந்து நின்று விட்டது. சுற்றியிருந்த மரஞ்செடிகொடிகள் எல்லாம் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றுவதுபோல் அசை யாமல் சிறிது நேரம் அமைதியாயிருந்தன. இசையில் வசமாகிய குதிரையின் குளம்படிச் சப்தம் கூட, தாள லயத்தோடு ஒலித்தது.

அவளுடைய குரலிலே பழைய காட்டாற்றின் பாய்ச்சலைக் காணோம்; அமைதியாக ஓடும் ஜீவநதி யின் கம்பீரம் இருந்தது. முன்பு இருந்த, அருவியின் துள்ளல் இல்லை; கொடிகளிடையே சலசல என்று ஓடும் சிற்றாற்றின் சாந்தம் இருந்தது.

பாட்டு முடிந்ததும் குமரன் 'இந்த அமுத கீதக்குரலை வாழ்நாள் முழுவதும் பக்கத்திலிருந்து கேட்கும் பாக்கியம், எவனுக்கு வாய்த்திருக்கிறதோ?' என்று மனதிற்குள் எண்ணியதை, தன்னை மறந்து வெளியே கேட்கும்படி சொல்லிவிட்டான்!

---

காதலரிடம் சென்று தங்கிவிட்டது. ஆகையால் பகை வேந்தரின் படைகளாலே துன்பப்பட்டு ஊரை விட்டு எல்லோரும் ஓடிப்போன பிறகு, பாழ் ஊரைக் காவல் காத்திருந்த ஒரு தனியாளைப்போல, என் உடல் மட்டும் இங்கே இருக்கிறது...'

—இப்பாடலை எழுதியவரின் பெயர் தெரியவில்லை. [பாழ்காத்திருந்த தனிமகன்' என்று பாடிய சிறப்பாலே, இதைப் பாடியவர் 'தனிமகனார்' என்று குறிப்பிடப்படுகிறார்.] ஆகையால் இதைக் கண்ணி பாடியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. உண்மை யான 'தனிமகனார்' மன்னித்தருள்வாராகுக!



இதைக் கேட்டதும், சட்டென்று பல்லக்கின் திரையை நீக்கிவிட்டு, அவனைக் கூர்மையாகப் பார்த்தாள் கண்ணி. அந்தக் கண்களில் வெடித்த சினத்தின் கடுமையை அவனால் நேரே பார்க்கமுடியவில்லை.

அவளைப் பொறுத்தவரையில்— இனி அவளிதயத்தில் எவனுக்கும் இடமில்லை என்று அவள் முடிவு செய்தது, அவனுக்கு எப்படித் தெரியும்?

''கண்ணி! இந்தப் பாட்டு நீ எழுதியதுதானே?''

''ஆம்... எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று வியப்புடன் அவனைப் பார்த்தாள் அவள்.

''இந்தப் பாட்டிலே நீ இருந்தாயே, அதனால் கண்டு பிடித்துவிட்டேன்.''— காதல் ஏற்படுத்திய நம்பிக்கைத் தூண்டுதலில் சிந்தாதேவி ஓர் இன்பப்பாட்டு எழுதினாள்; அதே காதல் நிறைவேறாத அவல உணர்ச்சியால் இவள் துன்பப்பாட்டு எழுதியுள்ளாள் என்று உணர்ந்து கொண்டான் குமரன்.

''இதுதான் அகத்துறையில் நான் எழுதிய முதல் பாட்டு; கடைசிப்பாட்டும் இதுதான்!'' என்று அவள் சொன்னதும் திடுக்கிட்டான் குமரன்:

''கண்ணி! என்ன சொல்கிறாய் நீ?... இவ்வளவு உணர்ச்சிபூர்வமாகப் பாடுகிற நீ, இன்னும் நிறையப் பாட வேண்டும்.''

''இல்லை... காதல் உணர்ச்சி சோக உணர்வாகப் பரிணமித்த போது எழுந்த பாட்டு இது. இனிமேல் என் உள்ளத்திலே காதல் என்னும் உணர்வுக்கே இடமில்லை; இந்தப் பாடலைக்கூட, என் பாட்டு என்று நான் சொல்லிக் கொள்ளப் போவதில்லை. என் உள்ளத்திலிருந்து காதல் அழிந்து விட்டதுபோல், இந்த உலகத்திலிருந்து இந்தப் பாடலும் செத்தொழிந்து போகட்டும்!''

''இல்லை... இவ்வளவு அருமையான உணர்ச்சிப் பாட்டை நான் மறக்கமாட்டேன்; இதைத் தமிழிலக்கியம் இழக்கும்படியாகவும் விடமாட்டேன்!'' என்று ஓர் உறுதியுடன் சொன்னான் அந்த ரசிகன்.

''தயவுசெய்து இந்தப் பாட்டை நான் பாடியதாக யாருக்கும் சொல்ல வேண்டாம். உலகத்தைப் பொறுத்த வரையில், தாமக்கண்ணி அகப்பாட்டே பாடியதில்லை என்ற பெயர் நிலவட்டும். இனி நானும் ஒரு தனியாளாய் வாழப் போகிறேன்...'' என்று அவள் கூறியதும் குமரன் வேதனையால் குமுறினான்:

''இல்லை, கண்ணி! தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்... நீ வாழ வேண்டிய இளம்பெண். யாரோ ஒரு அறிவற்றவன் உன் காதலை மறுத்துவிட்டானென்றால், அதற்காக உன் வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்ள வேண்டுமா?... உனக்கு அருமையான மணமகனை நானே தேடிக் கொண்டு வருகிறேன்...''

''வேண்டாம். இனிமேல் தாமக்கண்ணி ஒரு மனைவியாக மாட்டாள்; இனி எப்போதும் அவள் கழார்த்தலையாரின் பேத்திதான்; உத்திரையின் மகள் மட்டும்தான்!... இனி அவள் ஆடுவாள்; பாடுவாள்; ஆனால் காதலிக்க மாட்டாள்.''

''கண்ணி! காதல் என்பது வாழ்க்கையில் ஒரு சிறு பகுதி; அதில் ஏற்பட்ட தோல்விக்காக, வாழ்க்கையையே வெறுப்பது சரியா?'' என்று கேட்கும் போதே குமரனின் குரல் சோகத்தால் தழுதழுத்தது.

''நான் விரக்தி அடையப் போவதில்லை... இளமையின் மேல் ஏற்பட்ட காதலை, திசை திருப்பி விடப்போகிறேன். பருவக்காதல், இனிமேல் கவிதைக் காதலாக, கலைக் காதலாக, தெய்வக் காதலாக உயர்ந்து பரிணமிக்கப் போகிறது. காதல் என்ற உணர்வுக்கு, இப்படிப்பட்ட உயர்ந்த வடிகால்களெல்லாம் இருக்கின்றன, இல்லையா?''



''கண்ணி! தத்துவங்கள் பழங்கள் மாதிரி; முதிர்ந்த காலத்தில்தான் இனிக்கும்; இளமையில் கசக்கும்... உன் போன்ற பருவத் துடிப்புள்ள இளம்பெண்கள், வெறும் தத்துவங்களால் வாழ முடியுமா?''

''முடியும் என்று நிருபித்துக் காட்டுவாள் கண்ணி...''— அவளுடைய குரலில் ஒலித்த அசாதாரண உறுதியும் அழுத்தமும், அவனது உள்ளத்தை இடிகளாகத் தாக்கிக் கண்களில் மழை துளிர்க்கச் செய்தன.

கொடுங்கோளூர் வந்து சேர்ந்ததும், பல்லக்கு வீரர்களை உடனே வஞ்சிக்குத் திருப்பியனுப்பினான் குமரன்.

கருங்குழலாதன் ஏதோ அவசர வேலையாகப் பக்கத்து ஊருக்குச் சென்றிருந்தார்; அன்று இரவுக்குள் அவர் திரும்பிவிடுவார் என்று உத்திரை சொன்னாள்.

''நீங்களும் வஞ்சிக்குப் புறப்படுங்களேன்!... நீங்கள் திரும்பி வராவிட்டால் இளவரசி கவலைப்படுவாள்...'' என்று அவனிடம் மெதுவாகச் சொன்னாள் தாமக்கண்ணி.

''இல்லை... ஐயாவைப் பார்த்துவிட்டு நாளைக் காலையில் புறப்படுகிறேன்,'' என்று அங்கே தங்கிவிட்டான் குமரன்.

அன்று மாலைநேரத்தில் பொழுது போக்குவதற்காக, ஊரை அடுத்திருந்த ஆற்றங்கரைப்பக்கம் சென்றான் அவன்.

மேலைவானிலே சூரியனின் தலைமையில் மேகங்கள் திரளாகக்கூடி மாநாடு நடத்திக் கொண்டிருந்தன. சலசல என்று ஓடிக்கொண்டிருந்த சிற்றாற்றின் கரையில் கிடந்த ஒரு பெரும் பாறையில் மேற்கு நோக்கிப் பார்த்தபடி குமரன் உட்கார்ந்திருந்தான்.

இன்னும் கழார்த்தலையார் திரும்பிவரவில்லை; ஆற்றங்கரை சென்றிருக்கும் குமரனோடு பேசிப் பொழுது

போக்கலாமே என்ற நினைப்பிலே அங்கே சென்ற கண்ணி, தூரத்தில் அவன் ஒரு பாறையில் மேற்கு நோக்கி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

மெதுவாகப் பின்னால் போய் அவனைத் திடீரென்று திடுக்கிட வைக்கவேண்டும் என்ற விளையாட்டு நினைப்பில், அடிமேல் அடி வைத்து நடந்து முன்னேறிய கண்ணியின் பார்வையில் தற்செயலாக— சிறிது தூரத்தில் அவனுக்குப் பக்கவாட்டில் ஒரு புதரில் மறைந்து நின்றபடி ஒருவன் குமரனை நோக்கி அம்பு எய்யக் குறிவைப்பது, தென்பட்டுவிட்டது.

திடுக்கிட்டவளாய் ''குமரன்!...'' என்று கூவியபடி, புதர்ப்பக்கம் கையை நீட்டிக் காண்பித்த கண்ணிக்கு மேலே பேச நா எழவில்லை.

அவள் குரல் கேட்டுக் குமரன் திரும்பிப் பார்த்தான். ஆனால் அவள் கை நீட்டிக் காட்டுவதைக் கவனிக்கவில்லை.

புதரில் மறைந்திருந்தவன், அவள் கூக்குரலைக் கேட்டு சற்றே திகைத்தவனாய்த் திரும்பிப் பார்த்த பிறகு, மறுபடியும் குமரனைக் குறிவைத்து அம்பை எய்துவிட்டான்.

''குமரன்!'' என்று மீண்டும் அலறிக்கொண்டு வேகமாகப் பாய்ந்தாள் தாமக்கண்ணி.

## 25

வஞ்சியை நோக்கி மூன்று குதிரைகள் வெகு வேகமாகப் பறந்து கொண்டிருந்தன.



பிடவூரிலிருந்து புறப்பட்ட அந்த மூன்று குதிரைகளும் இடையில் எங்கும் நின்று ஓய்வெடுக்காமல், வாயெல்லாம் நுரை தள்ள, உடலெல்லாம் வியர்வை பொங்கி வழிந்தோட ஓடிவந்து கொண்டிருந்தன. ஏனென்றால் அவை வஞ்சிவரும் விஷயம், அவ்வளவு அவசரமான, முக்கியமான விஷயம்!

சித்திரன் சொல்வது மட்டும் உண்மையாயிருந்தால், அங்கே தன் எதிரியை ஒழித்துவிட்டு, மறுநாள் சோழ சிம்மாசனத்தில் அரசனாக முடிசூட்டிக் கொள்ளமுடியும் என்ற ஆசைவேகம், இருங்கோவின் குதிரையின் வேகத்தை முந்திக்கொண்டு பாய்ந்தது.

கோட்டை வாசலை நெருங்கியதும், இருங்கோவை ஏற்கனவே தெரியுமாதலால், காவலர்கள் கதவைத் திறந்து அவர்களை உள்ளே அனுமதித்தார்கள். அரண்மனைக்குச் சென்றதும், மண்டபத்தில் இருந்த பெருஞ்சேரலாதன் ''வாருங்கள்!... வாருங்கள்!...'' என்று அவர்களை வரவேற்று உட்காரச் சொன்னான். அப்பொழுது அங்கே இளவரசியும் தந்தையுடன் இருந்தாள்.

''இருங்கோ! நீங்கள் திடீரென்று வந்திருக்கின்ற அவசரத்தைப் பார்த்தால், ஏதேனும் முக்கியமான செய்தி இருக்கும் என்று யூகிக்கிறேன். சரிதானா?'' என்று விசாரித்தான் சேரன்.

''ஆம், அரசே!... நம் எதிரி இங்கே நம் கோட்டைக்குள்ளேயே புகுந்துவிட்டான்!'' என்று பதற்றத்துடன் சொன்னான் இருங்கோ.

''எதிரியா? நம் கோட்டைக்குள்ளா?'' என்று சேரன் திகைத்தபோது, சிந்தாதேவி கலகல என்று சிரித்தாள்:

''நம் கோட்டைக்குள் இப்போது புகுந்திருப்பது நீங்கள்தான்!''

அவனுடைய கேலிச்சிரிப்பு இருங்கோவின் உள்ளத்தில் சுருக் என்று தைத்தது:

''இல்லை, இளவரசி!... நம் எதிரி கரிகாலன் வஞ்சிக்குள்ளேயே நுழைந்திருக்கிறான் ஒற்றனாக...''

''இருக்காது... கரிகாலனாவது, துணிந்து வஞ்சிக்குள் நுழைவதாவது?... அவன் அவ்வளவு முட்டாளா?'' என்று கேட்டான் மன்னன்.

''அவன் முட்டாள் இல்லை, அரசே! ஆனால் நம்மையெல்லாம் முட்டாளாக்க நினைத்துவிட்டான்...'' என்றான் அந்துவன்.

''அரசே! சோழ நாட்டிலிருந்து தளபதி திதியன் இங்கே ஒற்றறிய வந்திருப்பதாக ஒரு நம்பகமான செய்தி எனக்குக் கிடைத்தது; அதைப்பற்றி உங்களுக்குச் சொல்லி எச்சரிக்கை செய்வதற்காக நேற்று இந்தச் சித்திரனை வஞ்சிக்கு அனுப்பினேன். இவன் வஞ்சிக்கு வரும் வழியில் கொடுங்கோளூர் ஆற்றங்கரையில் சாதாரண உடையில் கரிகாலனைப் பார்த்திருக்கிறான்...'' என்று விளக்கமாகச் சொன்னான் இருங்கோ.

சேரனுக்கு வியப்பாயிருந்தது:

''சித்திரா! அவன் கரிகாலன் என்று நிச்சயமாகத் தெரியுமா?''

நன்றாகத் தெரியும்; கரிகாலரைச் சிறுபிள்ளையிலிருந்து முடிசூடி அரசராகியவரை நன்றாகத் தெரியும் எனக்கு...'' என்று அழுத்தமாகச் சொன்னான் சித்திரன். அவன்தானே வளவனை இரண்டு தடவை தூக்கிச் சென்று கொல்ல இருந்தவன்?

''சரி, சித்திரா! நடந்ததைச் சொல்...'' என்று பரபரத்தான் சேரன்.

''கொடுங்கோளூர் ஆற்றங்கரையில் ஒரு பாறையில் உட்கார்ந்திருந்தார் கரிகாலன். நான் அவரைப் பார்த்தது.



அவருக்குத் தெரியாது. பக்கத்திலிருந்த ஒரு புதரில் மறைந்து நின்றபடி அவர் மேல் அம்பைக் குறிவைத்தேன். அந்தச் சமயம் குறுக்கே பாய்ந்து ஒரு பெண், அம்பைத் தடுத்துவிட்டாள்; கரிகாலர் தப்பிவிட்டார். அந்தப் பெண்ணுக்கு முழங்காலில் அம்பு தைத்துவிட்டது...''

''பிறகு, கரிகாலனைப் பிடிக்காமல் விட்டுவிட்டாயா?'' என்று பொங்கினான் சேரன்.

''அவரை நான் ஒருத்தன் பிடிக்க முடியுமா, அரசே? அவர் தனியாளாய் நூறு வீரர்களை விரட்டியடிப்பார்!... நான் அவருக்குத் தெரியாமல் ஒளிந்து ஊருக்குள் ஓடி வந்துவிட்டேன்...''

''அவர் வஞ்சிக்குள் வந்திருப்பவர் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டாள் தேவி.

''கரிகாலர், காயப்பட்ட பெண்ணைத் தூக்கிக் கொண்டு, ஊருக்குள் வந்தார். அவர் பின்னாலேயே வந்து, நான் சாமர்த்தியமாக விசாரித்ததில், அவர் பெயர் குமரன் என்றும் வஞ்சியில் தமிழ் படிக்க வந்திருக்கின்ற சிறந்த வீரர் என்றும் கேள்விப்பட்டேன்...'' என்று சித்திரன் சொன்னதும், சிந்தாதேவிக்குத் தூக்கிவாரிப் போட்டது:

''என்ன, குமரனா?... நன்றாக விசாரித்தாயா?'' என்று பதறினாள் அவள்.

''எந்த விஷயத்தையும் தந்திரமாக விசாரித்து உண்மை அறிவதில் சித்திரன் நிபுணன், இளவரசி!'' என்று தன் கையாளுக்கு நற்சான்றிதழ் கொடுத்தான் இருங்கோ.

''கரிகாலனைக் காப்பாற்றி, காலில் காயம்பட்டாளே, அந்தப் பெண் யார் என்று விசாரித்தாயா?'' என்று கேட்டான் சேரன்.

"அந்தப் பெண் பெயர் தாமக்கண்ணியாம்; கழார்த் தலையார் என்ற புலவரின் பேத்தியாம்..."

அதைக் கேட்டதும் சேரனுடைய கரிய புருவங்கள் நெரிய, கண்கள் சிவந்தன.

"இந்த விஷயத்தில் கரிகாலனும் தாமக்கண்ணியும் சேர்ந்துதான், நம்மை ஏமாற்றியிருக்கிறார்கள். சதித் திட்டம் வகுத்துத்தான் அவனை இங்கே அனுப்பிருக் கிறார்கள்..." என்று உதடுகள் துடிதுடிக்க உறுமினான் அவன்.

"என்ன அப்பா! இப்படிப் பேசுகிறீர்கள்?... கரிகாலருக்கு உதவிசெய்ய வேண்டிய அவசியம் தாமத் கண்ணிக்கு என்ன இருக்கிறது?... மகா அறிவு உடைய உங்களையும் உங்கள் அதிகாரிகளையும் கூட்டாளி களையுமே அந்தக் கரிகாலர் ஏமாற்றியிருக்கிறார் என்றால், அந்தப் பேதைப் பெண்ணையும் புலவரையும் ஏமாற்றுவது கடினமா?" என்று தந்தைக்குச் சூடு கொடுத்தாள் தேவி.

"ஆம்... அங்கே ஒரு சாதாரணக் குடும்பத்து இளைஞர் மாதிரிதான் நாடகமாடியிருக்கிறார்..." என்றான் சித்திரன்.

"வரட்டும்... அந்த நாடகமாடியை இனி நாடோடி யாக்குகிறேன். குகைக்குள்ளேயே வந்து, தூங்கிய புலியை இடறிய குருட்டுச் சிறுவன்போல், கரிகாலன் நம் நாட்டுக் குள் நுழைந்திருக்கிறான்... அந்த நாயை உடனே பிடித்துத் தெருத்தெருவாக இழுத்து வரச்செய்கிறேன்..." என்று கர்ஜித்த சேரன், வெளியே நின்ற வீரர்களைக் கூப்பிட்டான்.

"அரசே! வேண்டாம். நாம் இங்கிருந்து வீரர்களை அனுப்பினால், ஒருவேளை செய்தி தெரிந்துகொண்டோ அல்லது வீரர்களிடம் பிடிபடாமலோ, அந்த அசகாய



சூரன் தப்பித்துவிடலாம். ஆகையால் நாமே நேரில் சென்று அந்தக் கழுதையைப் பிடித்துவிடுவோம்..." என்று யோசனை சொன்னான் இருங்கோ. கரிகாலன் எப்படிப் பட்டவன் என்பதை, அனுபவப்பட்ட அவன்தானே அறிவான்?

"சரி... வாருங்கள்... புறப்படுவோம்..." என்று கிளம்பினான் சேரன்.

"அப்பா! நானும் வருகிறேன்... என் தோழியைப் பார்க்கவேண்டும்போல் இருக்கிறது..." என்று மெதுவாகச் சொன்னாள் தேவி.

"ஓ!... இளவரசியும் தாராளமாக வரலாமே!" என்று தானாகவே அனுமதி வழங்கினான் இருங்கோ. வழிநெடுக அவளுடன் பேசிக்கொண்டே— குறைந்த பட்சம், அவளைப் பார்த்துக் கொண்டே— போகலாமே என்ற சபலம் அவனுக்கு.

தன் கூட்டாளியின் பேச்சை மீற விரும்பாமல், தலையை அசைத்தான் சேரன்.

எல்லோரும் வேகமாகக் கொடுங்கோளூர் நோக்கி, குதிரைகளில், சில வீரர்களுடன் சென்று கொண்டிருந் தார்கள். அவர்கள் எதற்காக, எங்கே செல்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாமல் இரகசியமாகவே வைத்துக் கொள்ளப்பட்டது.

சாலையிலே போகும் போது, இளவரசியின் குதிரை யின் பக்கமாகத் தன் குதிரையைச் செலுத்திக் கொண்டு, அவளுடன் பேச்சுக் கொடுக்க முயற்சி செய்து கொண்டே வந்தான் இருங்கோ. ஆனால் தேவியின் மனமோ, பெருஞ் சிக்கலில் அகப்பட்டுக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

காயம்பட்ட தோழியின் உடல்நிலை பற்றி மட்டுமல்ல— தன்னுடைய காதலன் குமரன் உண்மை யாகவே மன்னன் கரிகாலனாக இருந்துவிட்டால்—?...

— அவள் நெஞ்சக்கடலில் ஏற்பட்ட புயலில், சிந்தனை அலைகள் வேகமாக எழும்பி மோதிக் கொண்டிருந்தன...

தன்னையே முட்டாளாக்கித் தன் நாட்டுக்குள்ளும் அரண்மனைக்குள்ளும் புகுந்துவிட்ட கரிகாலனை எப்படி எப்படியெல்லாம் சித்திரவதை செய்து அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டே, ஆத்திரத்தால் குமுறியபடி வந்துகொண்டிருந்தான் சேரன்.

கரிகாலனைப் பிடித்து ஒழித்த பிறகு, சேர இளவரசியும் தானும் சோழ சிம்மாசனத்தில் வீற்றிருந்து, [1] அத்தாணி மண்டபத்திலே இளமங்கையரின் நடனங்களைக் கண்டு ரசிக்கும் இனிய காட்சிகளைத் தன் மனக் கண்ணில் எழுப்பிக் கொண்டே வந்து கொண்டிருந்தான் இருங்கோ.

கொடுங்கோளூரில், கழார்த்தலையார் வீடு வந்ததும், வீரர்களைச் சுற்றிலும் நிற்க வைத்தார்கள்.

தாமக்கண்ணி, படுக்கையில் அசையாமல் படுத்திருந்தாள். ஒரு பக்கத்தில் கழார்த்தலையாரும் உத்திரையும், மறுபக்கத்தில் குமரனும் தோழி இன்பவல்லியும் கவலையுடன் அமர்ந்திருந்தார்கள்.

அன்று காலையிலே அந்த வீடு எவ்வளவு உற்சாகமாயிருந்தது?... தாமக்கண்ணியோடு குமரனும் வந்ததைக் கண்டு உத்திரைக்கும் தோழிக்கும் மகிழ்ச்சி நிறைந்தது— அவர்கள் உள்ளத்திலே ஓர் இனிய கற்பனை விரிந்து மலர்ந்து மணத்தது!

கண்ணியின் அழகுக்கும் கலைத் திறமைக்கும் குணத்துக்கும் ஏற்ற ஒரு மணமகன் கிடைப்பானா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த தாய்க்கு, குமரனைப்

---

1. அரசனின் கொலு இருக்கைக்காக அமைக்கப்படும் மண்டபம்.



பார்த்துப் பழகியதும், மிகவும் பிடித்துப் போய் விட்டது. மகளும் அவனும் பழகும் முறையைக் கவனித்த போது, தன் ஆசை நிறைவேறும் என்று உறுதியாக நம்பினாள் அவள்.

அவள் மட்டுமா, ஊரிலே பலரும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள்: 'கழார்த்தலையாரின் பேத்திக்கு ஓர் அருமையான மாப்பிள்ளை தானாகவே வீடு தேடி வந்து விட்டான்' என்று சிரித்து மகிழ்ந்தார்கள்.

வஞ்சியிலிருந்து தாமக்கண்ணியை அழைத்து வந்த குமரன், அங்கேயே தங்கி, கழார்த்தலையாரைப் பார்த்து விட்டுத்தான் திரும்பிச் செல்வான் என்று தெரிந்ததும், மிக்க மகிழ்ச்சியோடு அவனுக்கு விருந்து தயாரிக்கத் தொடங்கிவிட்டாள் உத்திரை.

தன் தாயின் மகிழ்ச்சிக்குக் காரணம், மகளுக்குத் தெரியாமல் இல்லை. உண்மையைச் சொல்லிவிடலாமா என்று நினைத்த அவள், 'வேண்டாம்; குமரனுக்கும் தேவிக்கும் திருமணம் நடக்கும்போது, எல்லோரும் தெரிந்து கொள்ளட்டும்!' என்று அமைதியாக இருந்து விட்டாள்.

மாலை நேரம். வாசலில் உட்கார்ந்து தூரத்தில் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் தாமக்கண்ணி. ஓயாமல் ஒழியாமல் வேலை செய்து கொண்டிருக்கும் உலகத்தின் உழைப்பைப் பாராட்டி, கதிரவன் அதற்குப் பொன்னாடை போர்த்தியிருந்தான். கூடு திரும்பிக் கொண்டிருந்த கொக்குகளும் நாரைகளும் அந்தப் பொன்னொளியில் தங்கக்கட்டிகளைப் போல் வானத்திலே மிதந்து சென்றன. காட்டுக்கு மேயச் சென்றிருந்த பசுக்கள், கழுத்து மணிகளின் பின்னணி இசையில், வீடுகளை நோக்கி இளநடை போட்டுக் கொண்டிருந்தன.

பக்கத்து வீட்டுத் தோழி இன்பவல்லி அங்கே வந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்த கண்ணியைப் பார்த்துக் கேலி செய்தாள்:

''என்ன கண்ணி! ஆழ்ந்த சிந்தனை செய்து கொண்டிருக்கிறாய்? அதற்குள்ளே குடும்பக் கவலை வந்துவிட்டதா?''

தோழியின் கேலிப் பேச்சைக் கேட்டும் உற்சாக மில்லாமல் அமைதியாய் இருந்தாள் கண்ணி; வல்லி, அருகில் வந்து அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள்:

''இனிமேல் என்னோடெல்லாம் பேசுவாயா? தையும் பிறக்கப் போகிறது; கண்ணிக்கு வழியும் பிறக்கப் போகிறது!...'' என்று செல்லமாகத் தோழியின் கன்னத்தைக் கிள்ளியதும், தாமக்கண்ணி சிரிக்கக்கூட இல்லாமல், தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஓகோ!... இப்பொழுதே ஒத்திகை பார்க்கிறாயோ?... கணவன் வந்து மெல்லக் கன்னத்தைக் கிள்ளும்போது, எப்படி வெட்கத்துடன் தலை குனிந்து கொள்வது என்ற ஒத்திகையா?'' என்று சிரித்தபடி தோழியின் மோவாயைப் பிடித்து நிமிர்த்தினாள். அந்த முகத்திலே பழைய உற்சாகம் இல்லை; வாடிய அனிச்ச மலர்போல், அந்த அழகுமுகம் சோர்ந்திருந்தது. கூந்தல் வாரப்படாமல், சுருள் சுருளாகக் காற்றில் பறந்து அலைந்தன. கண்ணிலே மைகூட இட்டுக்கொள்ளவில்லை.

''என்ன கண்ணி, காதலர் வருகின்ற நேரமாகி விட்டது; கண்ணுக்கு மை தீட்டிக்கொள்ளவில்லையே?... ஏன் தீட்டிக்கொள்ளவில்லை என்று நான் காரணம் சொல்லட்டுமா?... மை தீட்டும்போது கண்ணை மூடவேண்டிவரும்; அப்பொது கண்ணிலே இருக்கும் காதலர் உருவம் மறைந்துவிடுமே? அதனால்தான் மையே தீட்டாமல், கண்ணிலிருக்கும் காதலனையே பார்த்து,



நினைத்து ரசித்துக் கொண்டிருக்கிறாய், இல்லையா?'' என்று சிரித்தாள் தோழி.

''வல்லி! நானும் திருக்குறள் படித்திருக்கிறேன்; கொல்லன் தெருவிலே ஊசி விற்காதே,'' என்றாள் கண்ணி.

''ஆமாம்... நான் திருக்குறள் படித்தவள் மட்டும்தான்; நீயோ அதை அனுபவித்தவள்!... சரி சரி!... நீ என்னோடு இனிமேல் பேசுவாயா?... அதோ, அங்கே ஆற்றங்கரை யிலே உன் காதலர் உட்கார்ந்திருக்கிறார். அங்கே போய்ப் பேசிக் கொண்டிருந்து விட்டு வா... நாங்கள் விருந்து சமைத்து வைக்கிறோம்...'' என்று சொல்லி, உள்ளே உத்திரைக்கு ஒத்தாசை செய்யச் சென்றாள் இன்பவல்லி.

கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் பறவைகளின் சப்தம், கண்ணியின் கவனத்தை ஆற்றங்கரைப் பக்கம் திருப்பியது. மேலை வானிலே, கதிரவன் மேகப்பெண் களிடம் ஏதோ ரகசியமாய்க் கிசுகிசுக்க, அவற்றின் முகமெல்லாம் சிவந்து ஜொலித்தன.

கண்ணியின் கால்கள் தாமாகவே மேற்குப் பக்கம் எழுந்து நடந்தன. குமரனோடு பேசிப் பொழுதுபோக்கி விட்டு வரலாம் என்ற நினைவு துள்ளி எழ, அங்கே கிளம்பினாள்......

புதரில் மறைந்திருந்த எதிரி எய்த அம்பிலிருந்து குமரனைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்து அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி. பாறையில் உட்கார்ந்திருந்த குமரனின் நெஞ்சுக்குக் குறி வைக்கப் பட்ட அம்பு, அலறிக் கொண்டே குறுக்கே பாய்ந்த கண்ணியின் வலது முழங்காலில் தைத்தது.

''ஆ!'' என்று கதறிக் கொண்டு கீழே விழுந்த கண்ணியைக் கண்டு பதறி, எழுந்து ஓடி வந்தான் குமரன். அம்பு வந்த திசையில் அவன் பார்த்தபோது, ஒருவன்

திரும்பி ஓடுவது தெரிந்தது. அவனை விரட்டிப் பிடிக்க வேண்டும் என்று நினைத்தபோது, கண்ணி வலி தாங்காமல், சிறகிழந்த பறவைபோல் துடித்துத் துவள்வதைப் பார்த்த குமரன், நெஞ்சம் நெகிழ்ந்து உருகினான்.

முழங்காலில் பாய்ந்திருந்த அம்பை உருவிவிட்டு, தன் துண்டைக் கிழித்து, பாய்ந்து வந்த இரத்தத்தை அடக்கக் கட்டுப் போட்டான். இரத்த வெள்ளத்தைப் பார்த்த கண்ணி, மூர்ச்சையாகி விட்டாள். சிறிது நேரத்தில் காயம்பட்ட முழங்காலில் நீல நிறம் பரவியதைக் கண்ட குமரன் திடுக்கிட்டு, அம்பை எடுத்துப் பார்த்தான்; அம்பின் நுனியில் கொடிய விஷம் தடவப் பட்டிருந்ததைக் கண்டு கொண்டான்.

சேர நாட்டிலே, இத்தகைய விஷ அம்பைத் தன்மீது எய்ய நினைத்தவன் யாராயிருப்பான் என்று சிந்தித்துப் பார்த்தான்; ஒன்றும் புரியவில்லை அவனுக்கு.

தாமக்கண்ணியை வீட்டுக்கு வேகமாகத் தூக்கிக் கொண்டு வந்தான். இன்பவல்லி ஓடிப்போய் மருத்துவரை அழைத்து வந்தாள். அந்த நேரத்தில் கழார்த்தலையாரும் வீடு திரும்பி விட்டார். கண்ணியின் நிலையைக் கண்டு தாயும் தாத்தாவும் அழுது துடித்தார்கள்.

மருத்துவர், விஷத்துக்கு மாற்று மருந்து கொடுத்து விட்டு, காயத்தில் பச்சிலை வைத்துக் கட்டினார்.

''ஐயா! என் மகள் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே?'' என்று கதறியழுதாள் தாய்.

''கண்ணியின் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை; காயம் சாதாரணமானதுதான்; ஆனால்......'' என்று தயங்கிய மருத்துவர், கண்ணியைப் பார்த்தார்; அவள் கண்களை மூடி, இன்னும் மயக்கத்திலேயே இருந்தாள்.

''ஐயா!... ஆனால் என்ன?... தயங்காமல் சொல்லுங்கள். அவள் காலுக்கு ஒன்றும் கெடுதல் இல்லையே?'' என்று பதறினார் தாத்தா.



''காலிலே பாய்ந்திருக்கிற விஷம், மிகக் கொடுமையானது; மிக வேகமாகப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது. அது முழங்கால் நரம்புகளைப் பார்த்து அறுத்துச் சேதமாக்கிவிட்டது. அதனால்... முன்பு மாதிரி, இவள் வலது காலால் நேராக நடக்க முடிந்தால், அது உங்கள் புண்ணியம்தான்!'' என்று குறிப்பாக உணர்த்தினார் மருத்துவர்.

திடுக்கிட்டுப் போனார்கள் எல்லோரும்.

''அப்படியென்றால், கண்ணிக்கு அந்தக் கால் சரியாக நடக்க வராதா?'' என்று படபடத்தான் குமரன்.

''வராது என்று ஒரு மருத்துவர் உறுதியாகச் சொல்ல முடியாது. மருத்துவத்திலும் சில அற்புதங்கள் நிகழ்வது உண்டு. ஏனென்றால் மருத்துவருக்கும் மேலே, ஒரு பெரிய மருத்துவர் இருக்கிறார்!'' என்று மேலே கையைக் காண்பித்து விட்டுப் புறப்பட்டார் அவர்.

இடியோசை கேட்ட நாகம்போல், எல்லோரும் திகைத்து நின்றார்கள்: 'கடவுள் அருளால் ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் ஒழிய, கண்ணியின் கால் ஊனம் தான்!'

மருத்துவர் சொன்ன செய்தி, இன்னொரு விஷ அம்பாகக் குமரனின் உள்ளத்தில் பாய்ந்தது; தன்னைக் காப்பாற்றுவதற்காக அவளுடைய ஒப்புயர்வற்ற நடனக் கலை நொண்டியாகி விட்டதே!

தாமக்கண்ணி, தன்மேல் காதல் கொள்வாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவளுடைய அழகு, குணம், கலை, அறிவு ஆகியவற்றை அவன் பல தடவை உளமாரப் பாராட்டியிருக்கிறான்; புகழ்ந்திருக்கிறான்; இனிய முறையில் பேசிப் பழகியிருக்கிறான்; இந்தப் பாராட்டு, புகழ்ச்சி, பேச்சு, பழக்கத்தையெல்லாம் கூட்டிப் பார்த்து, அதைக் காதல் என்று கணக்குப் போட்டுப் பெரும் தப்புச் செய்துவிட்டாள் கண்ணி.

அவளை ஓர் அற்புதக் கலைச் செல்வியாக மதித்துப் போற்றி, அவளுடைய கலையின் ரசிகனாகத் தன்னைப் பாவித்தானே தவிர, அந்தக் கலையரசிக்குக் காதலனாகத் தன்னை அவன் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

அவனிடம் காதலை எதிர்பார்த்து ஏமாந்து உள்ளத்தில் அடிபட்ட கண்ணிக்கு, இப்போது அவனுக்காக உடலிலும் அடிபடும் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதே என்று நினைத்துப் புழுங்கினான் குமரன். அன்று இரவு முழுவதும் அவள் படுக்கையருகிலேயே உட்கார்ந்திருந்தான்.

இரவு முழுவதும் அரைப் பிரக்ஞையாகவே கிடந்த கண்ணி, விடிகாலையில் மயக்கம் முற்றிலும் தீர்ந்து, கண்ணை விழித்துப் பார்த்தாள். அப்போது, மற்றவர்கள் வெளியே சென்றிருந்தார்கள்; குமரன் மட்டும்தான் அங்கே பக்கத்தில் இருந்தான்.

அவள் தன் மலர்விழிகளைச் சிறிது அசைத்துத் திறந்த போது "கண்ணீ!... கண்ணி!!..." என்று அன்பு ததும்பப் பரிவோடு, அவள் முகத்தின் அருகே குனிந்தான் அவன்.

"நீங்கள்... நலமாயிருக்கிறீர்களா?" என்று ஒவ்வொரு எழுத்தாகப் பலவீனமான குரலில் முணுமுணுத்தவாறு அவனை ஏற இறங்கப் பார்த்தாள் கண்ணி.

"இதோ... நான் பாவி, நன்றாகத்தானிருக்கிறேன்..." என்று அவன் விரக்தியாகச் சொன்னதும், சட்டென்று தன் கையால் அவனது வாயை மெல்லப் பொத்தினாள் அவள்:

'அப்படிச் சொல்லாதீர்கள்!...' என்று கண்களால் பேசிவிட்டு, "அம்மா, தாத்தா எங்கே?" என்று கேட்டாள்.

"இப்பொழுதுதான் வெளியே போனார்கள்... உனக்குக் கால்வலி எப்படியிருக்கிறது?" என்று ஆதுரத்துடன் கேட்டான் அவன்.



"அம்பு எய்தவன் தப்பி ஓடிவிட்டானா?"

"ஓடிவிட்டான் கோழைப்பயல்!..."

"அவன் ஏன் உங்களைக் கொல்ல நினைத்தான்?" என்று அவள் கேட்டதும், சற்று திகைத்துப் போனான் குமரன்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை... அவன் மட்டும் பிடிபட்டிருந்தால்—" என்று தன் கைகளை இறுகப் பிசைந்து, பற்களைக் கடித்தான்.

"நல்லவேளை! அவன் முதலில் குறி பார்த்தபடி எய்திருந்தால், உங்களை என்னால் காப்பாற்ற முடியாமல் போயிருக்கும்; முதல் குறியை விட்டுவிட்டு, இரண்டாவது குறிவைத்து எய்ததனால்தான் நான் குறுக்கே ஓடிவர நேரம் கிடைத்தது... ஆகவே அவனுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்!..." என்று புன்முறுவலோடு சொன்னாள் கண்ணி.

அவளது தியாக உள்ளத்தைக் கண்டு, குமரனின் கண்களில் நீர் கசிந்து திரண்டது.

"கண்ணி! என்னை ஏன் காப்பாற்றினாய்? சிறுமி கட்டிய சிற்றிலை இடிப்பதுபோல், உன் ஆசைக் கனவுகளை அழித்த என்னைக் காப்பாற்றுவதற்காக நீ ஏன் உயிரைத் தியாகம் செய்ய ஓடி வந்தாய்?... அந்த நஞ்சூட்டிய அம்பு, நடனக் கலையையல்லவா பாழாக்கிவிட்டது?—" என்று உணர்ச்சி வேகத்தில் குமுறிய குமரன் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான்:

'அம்பிலே நஞ்சு தடவியிருந்ததையும் அவளது கால் ஊனமானதையும் இப்போது அவளிடம் சொல்லியிருக்கக் கூடாது; அவளுடைய இளம் இதயம் இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாது' என்று நினைத்தான் அவன்.

ஆனால் தாமக்கண்ணி, அதைக் கேட்டதும் அதிர்ச்சியோ, துயரமோ அடையாமல், சிரித்த முகத்தோடிருந்தாள்:

"பாவம்! அவன் மிகவும் அவசரக்காரன் போலிருக்கிறது! உடலில் பட்டதும் உயிரைப் போக்கக்கூடிய நஞ்சைத் தடவாமல், சாதாரண நஞ்சைத்தானே தடவியிருக்கிறான்?"— என்ற அவனுடைய புன்முறுவல், குமரனின் உள்ளத்தை வாளாக அறுத்தது.

அப்போது—

தடதட என்று கதவைத் தட்டிக் கொண்டு சேரன் பெருஞ்சேரலாதனும் சிந்தாதேவியும் இருங்கோவும் மற்றவர்களும் உள்ளே வேகமாக நுழைந்தார்கள்.

திடுக்கிட்டு எழுந்த குமரன் அவர்களை வரவேற்பதற்குள், சேரன் பாய்ந்து, அவனது கையைப் பிடித்துக் கொண்டான். சிந்தாதேவி, தாமக்கண்ணியிடம் ஓடினாள்.

"கயவனே! என்னிடமேயா உன் சாகசத்தைக் காட்டினாய்? சிங்கத்தின் குகைக்குள் புகுந்து விளையாடுகிறாயா, குள்ளநரியே?" என்று குமரனைப் பிடித்து உலுக்கினான் சேரன்.

"இளங்கன்று பயமறியாது அல்லவா? அதுதான் துணிச்சலாகவே காரியத்தில் இறங்கியிருக்கிறான்!..." என்று கிண்டலாகச் சிரித்தான் இருங்கோ.

குமரன் சற்றே சமாளித்தபடி "என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை?" என்று கேட்டான்.

"ஒன்றும் புரியாத சிறு பிள்ளைதான்!... சேர நாட்டைப் பற்றிப் புரிந்து கொள்ளாததால்தான், ஆழம் தெரியாமல் இங்கே காலை விட்டுவிட்டு இப்போது சிக்கிக்கொண்டிருக்கிறாய்!" என்று சீறினான் மன்னன்.

"சேரநாட்டு நிலைமையைப் புரிந்துகொள்ளத்தானே, ஒற்றறிய வந்திருக்கிறான்?" என்று பல்லை நறநற என்று கடித்தான் இருங்கோ.



"ஒற்றறியவா?... நானா?..." என்று குமரன் கேட்டதும், கடகட என்று எகத்தாளமாகச் சிரித்தான் சேரன்.

"ஆகா!... உங்கள் நாடகத்தின் கடைசிக் காட்சியையும் நடத்திக் காட்டிவிடுங்கள், கரிகால் சோழரே! இது நாடகத்தின் கடைசிக் காட்சி மட்டுமல்ல; உங்கள் வாழ்க்கையின் கடைசி நாளும் இதுதான்!"

"கரிகால் சோழரா?... அவர் எங்கிருக்கிறார்?" என்று சுற்றுமுற்றும் பார்த்தான் குமரன்.

"இதோ... என் கைப்பிடியில் கைதியாக விழித்துக் கொண்டு தடுமாறுகிறார்!" என்று மேலும் அவனை உலுக்கினான் சேரன்.

இதைப் பார்த்த சிந்தாதேவிக்கு, குமரனின் திகைப்பையும் வியப்பையும் கண்டு, மனதிற்குள் மகிழ்ச்சி துளிர்த்தது.

'ஒருவேளை, அவர் கரிகாலனாக இல்லாமல், குமரனாகவே இருப்பாரோ? அவர்மேல் ஏற்பட்ட சந்தேகம் பொய்யாயிருக்குமோ?...'

அவனைப் பார்த்து சிந்தாதேவி, "நீங்கள்தான் கரிகாலர்; மாறுவேடத்தில் இங்கு ஒற்றறிய வந்திருக்கிறீர்கள் என்று சந்தேகித்து உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறார் அப்பா..." என்று நிலைமையை விளக்கி, அவனுடைய குழப்பத்தை நீக்கினாள்.

"சந்தேகம் அல்ல; நிச்சயம், உறுதி, தெளிவு, உண்மை..." என்று சொற்களை அடுக்கித் தன் சொல் வன்மையைக் காட்டினான் இருங்கோ.

உடனே குமரன், புன்முறுவல் பூத்தான்; அடுத்த வினாடி, சிரிக்கத் தொடங்கினான்; மற்றவர்களுக்கெல்லாம் வியப்பாயிருந்தது—

குமரன் கடகட என்று வாய்விட்டுச் சிரித்தான்!

## 26

திடீரென்று சேர மன்னரும் இளவரசியும் மற்றவர்களும் உள்ளே நுழையக் கண்டதும், குமரனும் தாமக்கண்ணியும் திகைப்படைந்தனர்.

கண்ணி காயப்பட்டதைக் கேள்விப்பட்டு, அவளைப் பார்க்க வந்திருப்பார்களோ என்று நினைத்தான். அவன் நினைப்புக்கு ஏற்றாற்போல சித்தாதேவி, வேகமாகக் கண்ணியிடம் ஓடி அவளைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

ஆனால் சேரன், தாமக்கண்ணியை ஏறெடுத்துக்கூடப் பார்க்காததோடு, தன்னையும் பிடித்துக்கொண்டது, குமரனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அரசரே தன்னைப் பிடிக்கவேண்டிய அவசர ஆத்திரம் என்ன என்று புரியவில்லை அவனுக்கு. தொடர்ந்து அவர்கள் பேசியதிலிருந்து அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

அவனைக் கரிகாலன் என்று சந்தேகப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை இளவரசியே முன்வந்து விளக்கியதும், சட்டென்று சிரிக்க ஆரம்பித்தான்.

இதற்குள், வீட்டுக்கு அரசனும் இளவரசியும் வந்திருப்பதைக் கேட்டு, கழார்த்தலையாரும் உத்திரையும் பக்கத்துவீட்டுத் தோழியும் அங்கே வந்து அவர்களை வரவேற்றார்கள்.

அரசரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள குமரன் சிரிப்பதைப் பார்த்து அனைவரும் திகைத்தார்கள். அரசன் புருவத்தை நெறித்தான்.

''அரசே! என்னை மன்னிக்கவேண்டும்... உங்கள் சந்தேகத்தைக் கேட்டதும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சோழமன்னர் கரிகாலன் எங்கே, இந்தச்



சாதாரண ஆள் குமரன் எங்கே?... இதேபோல் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அப்பொழுதெல்லாம் சிரிப்புத்தான் வந்தது. அதே சம்பவம் சேரநாட்டிலும் நடக்கிறது என்பதைப் பார்க்கும்போது, சிரிக்காமல் என்னால் இருக்க முடியவில்லை...'' என்று பணிவாகச் சொன்னான் குமரன்.

''இப்படிச் சிரித்தே ஏமாற்றிவிடலாம் என்று எண்ணாதே! இது உன் குற்றத்தை மேலும் அதிகப் படுத்தும்...'' என்று உறுமினான் இருங்கோ.

''அரசே! நான் ஒருதடவை புகார் நகருக்குப் போயிருந்தபோது, காலிலே முள் தைத்து நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தேன். சில அரசாங்க ஆட்கள் என்னை நெருங்கிப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் ஏன் அப்படி அக்கறையோடு பார்க்கிறார்கள் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு பல்லக்கு வந்து நின்றது; என்னைப் பார்த்து 'பல்லக்கில் ஏறிக்கொள்ளுங்கள்!' என்று பணிவோடு சொன்னார்கள். நான் வியப்போடு அவர்களைப் பார்த்துத் திகைத்து நின்றேன். 'நீங்கள் மாறுவேடத்தில் இருப்பதைப் பார்த்த பிறகுதான் பல்லக்கைக் கொண்டுவந்தோம்' என்றார்கள். 'மாறுவேடமா?' என்று மீண்டும் திகைத்தேன். 'அரசே நீங்கள் மாறுவேடத்திலிருப்பதை நீங்களே மறந்து விட்டீர்களா?' என்று அவர்கள் அடக்கமாகச் சிரித்தார்கள். எனக்குச் சிரிப்புத் தாங்கமுடியவில்லை. இயற்கையின் அற்புதங்களில் இதுவும் ஒன்று! நானும் கரிகாலரும் ஒரே மாதிரித் தோற்றம் உடையவர்கள் போலிருக்கிறது. இதனால் இன்னும் பல வேடிக்கைகள் நடந்திருக்கின்றன...'' என்று குமரன் சொல்லிக் கொண்டிருக்க, சேரன் திகைப்போடு இருங்கோவைப் பார்த்தான்; இருங்கோ அந்துவனைப் பார்க்க, அந்துவன் சித்திரனைப் பார்த்தான்!

''இன்னொரு ஊரிலே ஒரு வீட்டில் போய், தண்ணீர் கேட்டேன். அவர்கள் அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று பிரமாதமான விருந்துச் சாப்பாடே போட்டுவிட்டார்கள். 'எங்களுடைய எளிய சாப்பாடு உங்களுக்குப் பிடிக்கிறதோ என்னவோ? ஏதோ எங்களால் இயன்றதைச் செய்திருக்கிறோம்' என்று பணிவுடன் சொன்னார்கள். என்னைக் கேலி செய்கிறார்களோ என்று சந்தேகப்பட்டேன். 'உங்களுக்கு அரண்மனையில் அருமையான சாப்பாடு இருக்கும்; இந்த ஏழை வீட்டு உணவைத் தாங்கள் சாப்பிட்டதே எங்களுக்குப் பெரும் பாக்கியம், அரசே!' என்று அவர்கள் சிரித்து மகிழ்ந்ததும், நானும் சிரிப்பதைத்தவிர என்ன செய்வது?'' என்று குமரன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

சிந்தாதேவிக்கு மகிழ்ச்சி பொங்கியது:

அவளுடைய காதலன் மன்னன் கரிகாலன் அல்ல; சாதாரணக் குமரன்தான்!

அவன் தொடர்ந்து ''இன்னொரு ஊரிலே—'' என்று ஆரம்பித்ததும் ''நிறுத்து, உன் புராணத்தை!'' என்று எரிச்சலோடு அடக்கினான் சேரன்.

தேவி ''இனி என்ன செய்வது, அப்பா?'' என்று தந்தையைப் பார்த்தாள்.

அவன் ஆத்திரம் பொங்க, சித்திரனைப் பார்த்தான்.

சித்திரன் மீண்டும் குமரனை உற்றுப் பார்த்துவிட்டு ''இவர் கரிகாலரேதான்!'' என்றான் உறுதியாக.

குமரன் புன்முறுவலோடு சித்திரனை நெருங்கி நின்றான்:

''நீ கரிகாலரைப் பார்த்திருக்கிறாயா?''

''நன்றாகப் பல தடவை பார்த்திருக்கிறேன்,'' என்றான் சித்திரன்.



''அவருக்குக் கரிகாலன் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது, தெரியுமா?''

''அவருடைய கால் தீயிலே கரிந்து போனதால்...''

''அவருடைய இரண்டு கால்களுமா தீயிலே கருகின?''

''இல்லை... ஒரு கால்தான்...''

''ஒரு கால் என்றால்— வலது காலா, இடது காலா?''

''வலது கால் மட்டும்தான்...''

''இதோ, என் இரண்டு கால்களையும் பார்!...'' என்று குமரன் தன் கால்களை மூடியிருந்த உடையை நீக்கிக் காட்டினான்.

இரண்டு கால்களும் கருப்பாக இருந்தன!

சித்திரன் திகைத்து விழித்தான்.

''நன்றாகப் பார்த்து விட்டாயா?... இப்பொழுது சொல்— நான் கரிகாலரா?'' என்று அழுத்தமாகக் கேட்டான் குரமன்.

சித்திரன் திருதிரு என்று விழித்தான்; அவன் முகம் பேயறைந்தது போலிருந்தது. எல்லோருடைய கண்களும் அவன்மேல் ஆத்திரத்தை உமிழ்ந்தன.

''பாவம்! நீ மட்டுமா, எத்தனையோ பேர் இதுமாதிரி ஏமாந்திருக்கிறார்கள். இந்த சிருஷ்டி விநோதம் பலரைத் திகைக்க வைத்திருக்கிறது. எனக்குப் பிறவியிலேயே இரண்டு கால்களும் கறுப்பு; ஒரு கால் மட்டும் கறுப்பாக இருந்திருந்தால், நான் சோழ சிம்மாசனத்தில் கூட ஒரு நாள் உட்கார்ந்து விடலாம் போலிருக்கிறது!... இந்த உருவ ஒற்றுமையால், சோழநாட்டில் எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டன; ஆனால் இங்கே ஆபத்து ஏற்பட்டுவிட்டது'' என்று சிரித்தான் குமரன்.

சிந்தாதேவியின் உள்ளம் மகிழ்ச்சியால் துளும்பியது:

"அப்பா! நீங்களும் சரியாக யோசித்துப் பாராமல், இவர்கள் பேச்சைக்கேட்டு ஓடிவந்தீர்களே? ஒரு பாவமும் அறியாத இவரை என்ன பாடுபடுத்திவிட்டீர்கள்?......" என்று கடிந்துகொண்டாள் அவள்.

"ஆமாம்... நம் நாட்டுக்குள்ளே அடியெடுத்து வைக்கக் கரிகாலனுக்குத் துணிவு வருமா? புலிவாழும் காட்டுக்குள்ளே ஆடு துணிந்து நுழையுமா? நுழைந்தாலும் நம் அரசாங்க ஆட்களை ஏமாற்ற முடியுமா?" என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான் பெருஞ்சேரலாதன்.

இருங்கோவைச் சுட்டெரிப்பதுபோல் கண்களால் பார்த்து வெறித்தாள் இளவரசி:

"புலிக்கும் பூனைக்கும் வித்தியாசம் தெரியாமல், கற்பனைக் கதை ஜோடித்தீர்களே, உங்கள் அறிவு மிகப் பிரமாதம்!... எதற்கும் சுயபுத்தி வேண்டும்— சந்தேகப் படுவதற்குக்கூட!... அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல, வீரமுள்ள இளைஞர்களெல்லாம் உங்கள் கண்ணுக்குக் கரிகாலர் மாதிரி தெரியும் போலிருக்கிறது!" என்று அவள் ஆத்திரமாகப் பேசியதும், இருங்கோவுக்கு வெலவெலத்துப் போய்விட்டது. வெட்கமும் அவமானமும் தாங்க முடியாமல் தலைகுனிந்து நின்றான் அவன்.

அங்கிருந்த எல்லோரும், குமரன் மேல் ஏற்பட்ட சந்தேகம் தவறானது என்று நம்பிவிட்டார்கள்— ஒரே ஒருவரைத் தவிர!

"குமரா! நடந்ததை மறந்துவிடு... எனக்கு கரிகாலன் மேல் உள்ள ஆத்திரத்தில் சரியாகச் சிந்திக்கத் தவறிவிட்டேன்..." என்று குமரனின் தோளில் தட்டிக் கொடுத்தான் சேரன்.



பின்பு, காயம்பட்டிருந்த தாமக்கண்ணியைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டு மன்னன் புறப்பட்டான்.

"அப்பா! நான் இரண்டு நாட்கள் கண்ணியோடு இருந்துவிட்டு வருகிறேன்..." என்று கெஞ்சினாள் சிந்தாதேவி.

அவளுக்கு அனுமதி கொடுத்துவிட்டு, கழார்த்தலையாரிடம் விடைபெற்றுக்கொண்டு வஞ்சி திரும்பினான் சேரன்.

மன்னனும் மற்றவர்களும் சென்ற சிறிது நேரத்தில் குமரனும் புறப்பட்டான்:

"ஏன், நீங்களும் புறப்பட்டுவிட்டீர்கள்? இரண்டு நாள் இங்கே தங்கிவிட்டுப் போனால் என்ன?" என்று மெதுவாகக் கேட்டாள் இளவரசி.

தன் தோழிக்கு ஆதரவாக, கண்ணியும் அவனை அங்கே தங்கியிருக்கும்படி புன்முறுவலோடு கேட்டுக் கொண்டாள்; ஆனால் குமரன் மறுத்துவிட்டான்:

"இளவரசி! நான் இன்னும் வீடு திரும்பாததை நினைத்து ஆசிரியர் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார். பாடம்கேட்டு மூன்று நாட்களுக்கு மேல் ஆகி விட்டன..."

"ஆமாம்... வந்த வேலையைச் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும் இல்லையா? அந்த வேலை முடிந்தால் தானே இன்னொரு வேலையை முடிக்க முடியும்?" என்று குறிப்பாகக் கேலிசெய்து சிரித்தாள் கண்ணி.

அவள் பேச்சின் குறிப்பு, அவனுக்குப் புரிந்தது போலவும் இருந்தது; புரியாதது போலும் இருந்தது; இளவரசிக்கும் அப்படித்தான்.

அவர்களைப்பற்றிய விஷயம், கண்ணிக்குத் தெரியும் என்பது அவர்களுக்குத் தெரியாதே!

குமரன் அவசரப்பட்டு வஞ்சி திரும்பியது வேறொரு காரணத்திற்காக—

ஒலிவியா அவனைத் தன் வீட்டுக்கு அழைத்திருந்தாளே, அந்த அழைப்பை ஏற்று, விரைவிலேயே அங்கே போய், இளவரசி குறிப்பிட்டதுபோல், என்ன ஆச்சரியமான செய்தி கிடைக்கிறது என்று அறிய வேண்டும் என்னும் ஆர்வம் அவனை உந்தித் தள்ளியது.

குமரன், ஆசிரியர் வீட்டுக்குப் போவதற்கு முன்னாலேயே, வழியில் ஒலிவியாவைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

துறைமுகத்தின் பக்கத்தில், ரோம் நகரிலிருந்து வந்திருந்த தன் தாய்நாட்டு [1]மிகாமன்களோடு ஏதோ பேசிக் கொண்டிருந்த ஒலிவியா, அந்த வழியில் சென்ற குமரனைப் பார்த்ததும் ஓடி வந்தாள்:

"நீங்கள் எப்பொழுது ஊரிலிருந்து வந்தீர்கள்? அங்கே எல்லோரும் நலமாயிருக்கிறார்களா?" என்று மழலைத் தமிழில், விசாரித்தாள் அவள்.

கடற்கரைக் காற்றிலே அவளுடைய பொன்னிறக் கூந்தல் சுருள்கள் எழுந்து எழுந்து பறந்து கொண்டிருந்தன. நீலக்கடலின் பின்னணியிலே அவள் ஒரு கிரேக்கப் பொற்சிலைபோல் அழகுருவமாய் நிற்பதைப் பார்த்து ரசித்தபடி சற்று நேரம் நின்று விட்டான் குமரன்.

கொடுங்கோளூரில் தாமக்கண்ணிக்கு ஏற்பட்ட ஆபத்தையும் இளவரசி அங்கேயிருப்பதையும் குமரன் சொன்னான்; ஆனால் தன்னைக் கரிகாலன் என்று சந்தேகித்த நிகழ்ச்சியைச் சொல்லாமல் மறைத்து விட்டான்.

1. மிகாமன்: கப்பலை ஓட்டும் மாலுமி.



"ஐயோ, பாவம்!... தாமக்கண்ணி இப்பொழுது எப்படியிருக்கிறாள்?" என்று கவலையோடு கேட்டாள் ஒலிவியா.

"அவள் உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை; ஆனால் அவளால் இனிமேல் நடனம் ஆடமுடியாது..." என்று தழதழத்த குரலில் சொன்னான் குமரன்.

அதைக் கேட்டதும் ஒலிவியா திகைத்துக் கலங்கிப் போனாள்.

"ஐயோ!... அவள் எவ்வளவு அற்புதமாக நடனம் ஆடுவாள்? அவளை ஒரு தடவை எங்கள் ரோமுக்கு அழைத்துப் போய், தமிழ்நாட்டு நடனக் கலையின் சிறப்பை அங்குள்ளவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேனே?... அது வீண் கனவாகப் போய் விட்டதே!"

"இதற்கெல்லாம் இந்தப் பாவிதான் காரணம். என்னைக் காப்பாற்றுவதற்காகத்தானே, தன் காலைத் தியாகம் செய்யும்படி நேர்ந்து விட்டது?" என்று வருந்தினான் அவன்.

"இல்லை... அப்படிச் சொல்லாதீர்கள்!... எல்லாம் விதி; நாம் எல்லாம் விதியின் கருவிகள்; நம் ஆசிரியர் அடிக்கடி சொல்வாரே, 'நீர் வழிப்படும் புணைபோல...'[2] என்று— நீர் வழியே செல்லும் ஓடம்போல், நம் வாழ்வும் விதி வழியே செல்லக் கூடியதுதானே?" என்று தத்துவ ரீதியாக விளக்கினாள் ஒலிவியா.

தமிழ்ப்பாடல்களை அருமையாகப் புரிந்து கொண்டு, அழகாகப் பயன்படுத்தும் அந்த யவனப் பெண்ணின் அறிவைக் கண்டு வியந்தபடி நின்றான் குமரன்.

2. புறநானூறு— 192-ம் பாட்டு— 9-ம் அடி.

''சரி... எங்கள் வீட்டுக்கு வரும்படி சொன்னேனே, எப்பொழுது வருகிறீர்கள்?'' என்று நினைவூட்டினாள் அவள்.

''ஒலிவியா! எனக்கு ஒரு சந்தேகம். நாம் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிப் பழகி எத்தனையோ நாட்களாகிவிட்டன; ஆனால் இப்பொழுது— திருவாதிரை விழாவுக்கு மறுநாள்தானே என்னை உங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தாய்?... எப்படி இப்போது மட்டும் என்மேல் நல்ல எண்ணம் வந்தது?''

ஒலிவியாவின் முகம் சிவந்து மேலும் அழகாகும்படி, நீலக் கண்களின் மெல்லிய இமைகள் படபடக்க, சிரித்தாள்:

''என்னோடு பேசுகின்ற ஒவ்வொரு இளைஞனும், உடனே என் வீடு எங்கேயிருக்கிறது என்று கேட்பான்; அல்லது என் பின்னாலேயே சுற்றி வருவான்; அல்லது என் வீட்டை எப்படியாவது தெரிந்து கொண்டு, தற்செயலாக வந்ததுபோல், வீட்டுக்குள் நுழைவான்!... ஆனால் நீங்கள் அப்படியில்லை. என்னோடு அனாவசியமாக ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டீர்கள்; தேவையில்லாமல் பழகிப் பல் இளிக்கமாட்டீர்கள்; அதனால் உங்கள் நல்ல பண்பை நான் புரிந்து கொண்டேன்.''

''அப்படியா?... இளம்பெண்களிடம் கண்ணியமாகப் பழகுகின்ற இளைஞர்கள் இங்கே எத்தனையோ பேர் இருக்கிறார்களே?—''

''இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அப்படிப்பட்ட சாதாரண இளைஞர் அல்ல; உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்பதையும் நீங்கள் நம்பிக்கைக்குரிய ஒரு வீரர் என்பதையும் திருவாதிரை நாள் அன்று, அரண்மனைத் தோட்டத்திலே இரவில் உங்களைப் பார்த்ததும் தெரிந்து கொண்டேன்...'' என்று குறும்பாக அவள் சிரித்ததும், திடுக்கிட்டுப் போனான் அவன்:



''அரண்மனைத் தோட்டத்திலா? அங்கே என்ன பார்த்தாய்?''

''நீங்களும் இளவரசியும் காதல்மொழி பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்...'' என்று ஒளிவு மறைவில்லாமல் பட்டென்று சொன்னாள் ஒலிவியா.

வெட்கத்துடன் தலைகுனிந்தபடி சிரித்தான் குமரன்.

''ஆகவே எதிர்கால மன்னருக்கு இப்பொழுதே நம் வீட்டில் வரவேற்புக் கொடுக்க வேண்டும் என்று அன்றே முடிவு செய்தேன்... நீங்கள் இப்பொழுது ஆசிரியர் வீட்டுக்குப் போய் விட்டு, மாலையில் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். யவனச்சேரியில் அகஸ்டஸ் கோயில் இருக்கிறதல்லவா, அதற்கு வடக்கேதான் எங்கள் வீடு. அந்த வரிசையில் கடைசி வீடு; வாசலில் வாகை மரம் நிற்கும்— அதுதான் அடையாளம்...''

''சரி, நிச்சயம் மாலை வருகிறேன்...'' என்று சொல்லி விட்டு, ஆசிரியர் வீட்டுக்குப் புறப்பட்டான் குமரன்.

வழியெங்கும் அவன் உள்ளம் சிந்தனையில் சுழன்றது...

தானும் இளவரசியும் அரண்மனைத் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்ததை ஒலிவியா பார்த்தது, அவனுக்கு எவ்வளவு நன்மையாகி விட்டது? அதன் மூலம்தானே, ஒலிவியாவின் அழைப்பு கிடைத்திருக்கிறது?...

கோட்டை, படைக்கருவிகள், வீரர்கள், போர்முறை எல்லாம் தெரிந்து கொண்டிருந்தாலும், ரோமிலிருந்து வந்திருப்பதாகச் சொல்லப்படும் யவனப் பொறியியல் வல்லுநனைக் காணவே முடியவில்லையே என்ற ஒரு கவலை குமரனின் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது...

இளவரசியிடம் கேட்டால், 'இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்னவேலை' என்று, சிரித்துத் தள்ளி விட்டாள். அதற்குமேல் அவளிடம் துருவினால், அந்தப் புத்திசாலி உண்மையை மோப்பம் பிடித்துவிடலாம்!...

யவனப் பெண்ணான ஒலிவியாவிடமோ அதைப் பற்றிப் பேசவே முடியவில்லை; பொதுவாக, யவனர்கள் அரசர்க்கும் அரசாங்கத்துக்கும் அரண்மனைக்கும் மிகவும் விசுவாசமான, ரகசியக் காப்பாளர்களாகப் பணியாற்று பவர்கள் என்பது தமிழகம் முழுவதும் தெரியும். அந்த விதிக்கு விலக்காக இல்லை ஒலிவியா...

எப்படியாயினும் சரி, இனிமேலும் வஞ்சியிலே நீடித்து இருப்பது ஆபத்து; அந்த இருங்கோவின் ஆட்களால் எந்த வினாடியிலும் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று உணர்ந்து, கவனமாகவே நடமாடினான் குமரன்.

கருங்குழலாதனாரிடம், கொடுங்கோளூரில் நடந்த நிகழ்ச்சிகளை, ஒலிவியாவிடம் சொன்னது போலவே, சொன்னான்.

அவரும் மனைவியும், தாமக்கண்ணியின் தியாகத்தைக் கேட்டு, மெய்சிலிர்த்துப் போனார்கள்:

''இந்தப் பெண்களை அன்புக்கும் தியாகத்துக்கும் எடுத்துக்காட்டாகவே கடவுள் படைத்திருப்பார் போலிருக்கிறது! சிறிது பழகிவிட்டாலே, அவர்களுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராகிவிடுகிறார்கள். ஒரு கதை சொல்வார்கள்: ஒரு சிறுமி, இன்னொரு குழந்தையைத் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு, மலைப்பாதையில் ஏறிச் சென்றாளாம். மேலே, அவர்களைப் பார்த்த ஒருவர் 'ஏம்மா, அவனை நடக்கவிட்டுக் கூட்டிவந்தால் என்ன? இவ்வளவு கஷ்டப்பட்டுத் தூக்கிக் கொண்டு வருகிறாயே?' என்று கேட்டாராம்; 'இவன் என் தம்பி, ஐயா!' என்று சொன்னாளாம் அந்தப் பெண்... அப்படி, சிறுவயதிலிருந்தே தியாகம் செய்யப் பழகிவிடுகிறார்கள் பெண்கள்...'' என்று மனம் நெகிழ்ந்து சொன்னார் கருங்குழலாதன்.

அன்று மாலை பாடம் நடத்தி முடித்ததும், குமரன் ''ஐயா! நான் ஒலிவியா வீட்டுக்குப் போய்வருகிறேன்...'' என்று அனுமதி கேட்டான்.



''ஒலிவியா வீட்டுக்கா? அவள் உன்னைக் கூப்பிட்டாளா?'' என்று வியப்புடன் கேட்டார் ஆசிரியர்.

''ஆம், ஐயா! இன்று காலையில்கூட இரண்டாவது முறையாக அழைத்தாள்...''

''குமரா! உனக்கு ஏதோ முகராசி இருக்கிறது!...'' என்று சிரித்தார் கருங்குழலாதன்.

கடற்கரை ஓரமாக, யவனச் சேரியை நோக்கி நடந்தான் குமரன்.

வழியில் இருந்த பரதவச்சேரியில் சில பிள்ளைகள் இறால் மீனைச் சுட்டுத் தின்றுகொண்டும், சிலர் ஆமையின் கறியைக் கொறித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தைகள் அடப்பம் பூவைப் பறித்துத் தலையில் கட்டிக்கொண்டிருக்க, சில குழந்தைகள் ஆம்பற்பூவைப் பறித்து மாலையாகத் தொடுத்துக்கொண்டிருந்தார்கள். அகன்ற இடமுள்ள மன்றத்திலே இளைஞர்கள் ஆட்டுக் கிடாய்களையும் சிவல் பறவைகளையும் ஒன்றுக்கொன்று சண்டையிட வைத்து வேடிக்கை பார்த்துப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். சில திண்ணிய இளைஞர்கள் தங்களுக்குள் மற்போரும் சிலம்பமும் செய்து பயிற்றிபெற்றுக் கொண்டிருந்தார்கள். சிறுவர் வீசும் கவண் கல்லுக்கு அஞ்சி, பன்றிகளும் கோழிகளும் நாலாபக்கமும் ஓடி ஒளிந்து கொண்டிருந்தன. சங்கு எடுக்கும் பரதவர்கள் கடலுள் மூழ்கி, வலம்புரிச்சங்குகளுடன் படகில் கரைக்கு வரும்பொழுது, அவர்களது வருகைக்காக ஆவலோடு காத்திருந்த குடும்பத்தினர் சங்குகளை முழக்கி அவர்களை வரவேற்கும் காட்சி அருமையாக இருந்தது

இக்காட்சிகளை வேடிக்கை பார்த்துக்கொண்டே, யவனச்சேரியிலிருந்த அகஸ்டஸ் கோயிலுக்கு வந்து சேர்ந்தான் குமரன்.

அங்கேயிருந்து வடக்கே சிறிது தூரம் நடந்து சென்றதும், கடைசியாக ஒரு பெரிய தோட்டம் தெரிந்தது. சுற்றிலும் உயரமான மதிற்சுவர் எடுக்கப்பட்ட அந்த வீட்டின் முன்னே வாகை மரம் தன் இலைக்கைகளை ஆட்டி அவனை வரவேற்றது.

அந்த மதிற்சுவருக்கு உள்ளே ஏதோ கொல்லன் பட்டறை போல் சத்தம் கேட்டது. அகலமான உயர்ந்த மதிற்சுவரையும் தாண்டி, அந்த ஒலி கேட்பதைக் கொண்டு, உள்ளே ஏதோ வேலை தொடர்ந்து நடப்பதை யூகித்தான். சாதாரணமாக அந்தச் சுவரில் ஏறி எட்டிப் பார்க்க முடியாத அளவு உயரமாகவும் வழுவழுப்பாகவும் ஏறுவதற்கு வசதியில்லாததாகவும் அந்த மதிற்சுவர் அமைந்திருந்தது.

குமரனின் கவனத்தைக் கவர்ந்த அந்தச் சப்தம், அவ்வழியே போய்வரும் யவனர்களுக்கு எந்தவித ஆர்வத்தையும் ஏற்படுத்தாததால், அந்தச் சப்தம் அவர்களுக்கு நெடுநாட்களாய்ப் பழகிப்போயிருக்கவேண்டும் என்று குமரன் யூகித்தான்.

வாகை மரத்தை நோக்கிச் சென்ற குமரன், அதை ஒட்டி ஒரு சிறு மாளிகை, மதிலையடுத்து அமைந்திருப்பதைப் பார்த்தான். அதுதான் ஒலிவியாவின் வீடு; அதற்கும் அந்த மதிற்சுவர் உட்பகுதிக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்ற யோசனையுடன், வாசலைத் தாண்டி, வீட்டுக்குள் நுழைந்து, கதவைத் தட்டினான். தட்டியதும் கதவு சடக்கென்று திறந்துகொண்டது; உள்ளே யாரையும் காணோம்.

''ஒலிவியா!... ஒலிவியா!!'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான். எந்தப் பதிலும் இல்லை. ஏதாவது அவசர வேலையாக வெளியே சென்றிருப்பாள் போலிருக்கிறது; 'நாம் வருவோம் என்பதை எதிர் பார்த்துக் கதவைப் பூட்டாமல் சென்றிருப்பாளோ'



என்று நினைத்தபடி, அந்த அழகான வரவேற்பறைக்குள் நுழைந்து சுற்றிலும் பார்வையை ஓட்டினான் குமரன்.

அந்த அறையை அழகான கலைப்பொருள்களால் அலங்கரித்துவைத்திருந்தாள் ஒலிவியா. கலைமகள், திருமகள், யவனர்களின் இசைத்தெய்வம் அப்பலோ, காதல்தெய்வம் பாலாஸ், அதினி ஆகியவை ஒருபுறமும் சிவன், முருகன். திருமால், யவனர்களின் போர்க்கடவுள் ஆர்டமிஸ், ஹெர்குலிஸ், உலிஸஸ், அக்கிலஸ் ஆகிய வீரர்களின் சிலைகள் மற்றொரு புறமுமாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. பாவைவிளக்குகளும் யவனச் செப்புக்களும் யவனநாட்டின் கண்கவரும் கண்ணாடிச் சாமான்களும் ஒரு பக்கம் வரிசையாக, கலைச்சிறப்போடு அடுக்கப்பட்டிருந்தன. அவளுடைய அண்ணன் ஒரு வணிகன் என்று சொன்னாளே, அவன் இறக்குமதி செய்யும் பொருள்களின் மாதிரிகள்போலும் அவை!...

அறையின் வலது பக்கமாக வந்தபோது, டண், டண் என்று இரும்புப்பட்டறையில் அடிக்கும் ஒலி, சிறிது கேட்டது. ஒருவேளை, அந்த மதில் இதன் பக்கத்தில் இருக்குமோ?...

அந்தச் சுவரின் நடுவே ஒரு சிங்கத்தின் தலை— மரத்தால் செய்யப்பட்டது— இருந்தது. சுவரில் ஆணியில் மாட்டப்பட்டிருந்ததுபோல் தோன்றிய அது சிறிது கழன்று வெளியே வந்ததுமாதிரி தெரிய, அதைக் கையினால் அழுத்திச் சரியாக இருக்கும்படி செய்ய முயன்றபோது, 'சரக்' என்று அந்த இடத்தில் சுவர் கதவுபோல், ஒரு ஆள் நுழையும் அளவில் திறந்து கொண்டது.

அதனுள்ளே சிறிது இருட்டாக இருந்தது. இப்போது அந்தப் பட்டறை ஒலி, தெளிவாகப் பக்கத்தில் கேட்டது. அந்த ரகசியப் பாதை, பட்டறைக்குப் போகும் பாதை என்பதைப் புரிந்துகொண்டான் குமரன்.

மெதுவாக அடியெடுத்து வைத்து மேலே நகர்ந்தான் அவன். ஒரே பரந்தவெளியாகக் காணப்பட்ட அந்த இடத்தைச் சுற்றி உயரமான மதில் தெரிந்தது. அதுதான், அவன் வரும்போது வெளியிலிருந்து பார்த்த மதில்.

அங்கே நிறைய இரும்புப் போர்க்கருவிகள் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரிந்தன. ஏராளமான விசைவில்கள், பிரம்மாண்டமான வேறுபல எந்திரங்கள் காட்சியளித்தன. தூரத்தே பட்டறை ஒன்றில் பல ஊதுலைகளுக்கு முன்னால், ஆட்கள் பலர் வேலைசெய்து கொண்டிருப்பது தெரிந்தது. அங்கே கேட்ட பலத்த ஓசைகளின் நடுவே, அவன் அங்கே நுழைந்ததை யாரும் கவனிக்கவில்லை. அங்கே வேலை செய்கிறவர்கள் எல்லோருமே யவனர்களாக இருப்பதைக் கண்டான் குமரன்.

இந்த ரகசியமான இடத்தில்தான் சேரன் யவனப் பொறிகளைத் தயாரிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் இந்த இடத்திற்கும் ஒலிவியாவின் வீட்டுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

ஒலிவியாவின் வீட்டுக்குப் போனால் ஓர் ஆச்சரியமான செய்தி கிடைக்கும் என்று இளவரசி சொன்னாளே, அது இதுதானோ?...

"சட்டென்று ஏதோ உள்ளுணர்வு துடிக்க, திரும்பிப் பார்த்தான் குமரன். பின்னால் ஒரு யவனவீரன் ஈட்டியால் அவனைத் தாக்க ஓங்கிக் கொண்டு நின்றான்!

யவனமொழியில் ஏதோ கூவிக்கொண்டே ஈட்டியை ஓங்கிய அந்த வீரனிடமிருந்து விலகி வேகமாக ஓடி, தானும் ஓர் ஈட்டியை எடுத்துக்கொண்டு எதிரே நின்றான் குமரன்.

ஹெர்க்குலிஸ் போன்று உருண்டு திரண்ட புஜங்களுடனும் நெடிய திண்ணிய உடலுடனும் கண்கள் சிவக்க



எதிரே நின்ற யவனனைப் பார்த்து, குமரனுக்கே அச்சமாயிருந்தது. அவன் ஆத்திரமாகச் சுற்றிய ஈட்டியின் வீச்சிலிருந்து லாகவமாகத் தப்பிய குமரன், தானும் அவனை நோக்கி ஈட்டியைச் சுழற்றினான். இருவரும் சிலம்புபோல் ஈட்டிகளைச் சுழற்றிப் போரிட்டனர்.

கனமான ஈட்டியை வைத்துக் கொண்டு, வாள்போல் வேகமாகச் சுழற்றும் அந்த யவனன் முன்னால், குமரன் தன் முழு பலத்தையும் வைத்துத் தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. தன்னுடைய ராட்சஸ பலத்தின் முன்னால் ஓர் இளைஞன் இவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்கிறானே என்ற ஆச்சரியமும் ஆத்திரமும் அந்த வீரன் முகத்தில் பிரதிபலித்தன.

நெடுநேரம் இருவரும் போரிட்டுக் கொண்டிருக்க, அந்தச் சப்தம் கேட்டு, பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்த எல்லா யவனர்களும் யம கிங்கரர்கள் போல், ஆளுக்கு ஒரு கருவியைத் தூக்கிக் கொண்டு அவர்களைச் சூழ்ந்து நின்றார்கள்.

குமரன் உடலும் உறுதியும், களைப்பாலும் அச்சத்தாலும் தளர்ந்து விட்டது: 'சரி... இன்று நன்றாக இங்கே மாட்டிக் கொண்டு விட்டோம்; இவனைப் போரிலே வென்றாலும் சுற்றி நிற்கும் எமன்களிடமிருந்து தப்ப முடியுமா?... அரசரிடம் கொண்டு போய் விட்டு விடுவார்கள்; ஏற்கனவே நம்மேல் சந்தேகம் ஏற்பட்டு, மயிரிழையில் தப்பினேன்; இனிமேல் தப்பிக்க முடியாது... எந்த முட்டாள்தான் இரண்டு முறை ஏமாறுவான்?' என்று எண்ணமிட்டபடியே ஈட்டியைச் சுழற்றிக் கொண்டிருந்தான் குமரன்.

ஓடி வந்து சுற்றி நின்றவர்களை, ஏதோ சொல்லி, அப்படியே நிற்க வைத்துவிட்டு, அந்த யவனன் மட்டும் குமரனோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தான்.

பயத்திலும் குழப்பத்திலும் சோர்ந்து போன குமரன், கண்ணிமைக்கும் நேரம் சற்றுக் கவனக் குறைவாக இருந்த போது, அந்த நொடியின் நொடிப் பொழுதில், யவனன் ஈட்டியை, குமரன் தலையில் அடிக்க ஓங்கினான்.

## 27

தன்னுடன் சமமாக நின்று ஓர் இளைஞன் போரிடுகிறானே என்ற ஆத்திரத்திலும், தன் ரகசிய இடத்தைக் கண்டுபிடித்து ஓர் அன்னியன் உள்ளே நுழைந்து விட்டானே என்ற கோபத்திலும் ஈட்டியை ஓங்கிய யவனன், ஓலமிட்டவாறு ஓடி வரும் ஒலிவியாவைக் கண்டதும், சட்டென்று ஈட்டியைத் தளர்த்திப் பிடித்துக் கொண்டான்.

ஓடி வந்த ஒலிவியா யவனமொழியில் ஏதோ சொல்லித் தன்னைக் காப்பாற்றி விட்டாள் என்பதைப் புரிந்து கொண்ட குமரன், நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

''அண்ணா! இவர்தான் குமரன். என்னோடு படிக்கிறார் என்று சொன்னேனே, அது இவர்தான்...'' என்று குமரனை அவனுக்கு அறிமுகப்படுத்தியதும், அவன் முகம் மலர்ந்து மகிழ்ச்சி பொங்க, ''அப்படியா? மிக்க மகிழ்ச்சி...'' என்று தட்டுத் தடுமாறித் தமிழில் பேசி, பரிவோடு குமரனின் கைகளை இறுகப் பிடித்துக் குலுக்கினான் யவனன்.

''குமரன்! இவர்தான் என் அண்ணன் மெனிலாஸ்...'' என்று தன் அண்ணனை அறிமுகப்படுத்தினாள் தங்கை.



''வணக்கம், மெனிலாஸ்!'' என்று சொல்லிவிட்டு, ''ஒலிவியா! உன் அண்ணன் வணிகர் என்று சொன்னாயே?'' என்று அவளைப் பார்த்ததும், மெனிலாஸ் கடகடவென்று எந்திரம்போல் உரக்கச் சிரித்தான்:

''என் தங்கை, பழக்கமில்லாதவர்களிடம் அப்படித் தான் சொல்லுவாள். அவளும் ஒரு பெண்தான் என்றாலும் அவளிடமிருந்து ரகசியங்களை யாரும் தெரிந்து கொண்டு விடமுடியாது!''

''ஆமாம்... உங்கள் தங்கை ஒரு சாதாரணப் பெண் அல்ல என்று எனக்குத் தெரியும். அவள் அறிவையும் சிந்தனைத் திறனையும் இலக்கிய ஆர்வத்தையும் பார்த்து நான் வியந்து பாராட்டியிருக்கிறேன்... இவ்வளவு அருமையான பெண்ணைத் தங்கையாக அடைவதற்கு நீங்கள் பெரும் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்!...'' என்று ஒலிவியாவைப் புகழ்ந்து சொன்னதும், மெனிலாஸின் முகத்தில் மகிழ்ச்சியும் பெருமையும் பளிச்சிட்டன.

''உண்மைதான்; அதனால்தான் என் தங்கையின் வார்த்தைக்கு நான் மிகவும் மதிப்புக் கொடுத்து அதன்படி நடப்பேன். நான் வெறும் முரடன்தான்; எந்திரங்களுடன் பழகிப் பழகி எனக்கு மென்மையான உணர்வுகளும் சிந்தனைகளும் காய்ந்து போய்விட்டன...'' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டான் மெனிலாஸ்.

''அப்படி நினைக்காதீர்கள்... கல்லுக்குள்ளும் ஈரம் கசிவதுண்டு... நீங்கள் தங்கைமேல் வைத்திருக்கின்ற பாசமும் அன்பும் உங்கள் முரட்டுத்தனத்தை மெல்ல மெல்லக் குறைத்துவிடும்...'' என்று சமாதானப்படுத்தினான் குமரன்.

''எங்கள் நாட்டுக்குத் தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்களோடு பேசிப் பழகி, இங்கே வந்து தமிழ் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள் ஒலிவியா. அதற்காகவே இந்த வேலையை ஏற்றுக்கொண்டு, இங்கே

வந்து, அரசருக்குப் போர்க்கருவிகள் செய்து கொடுக்கிறேன்...'' என்றான் மெனிலாஸ். யவன நாட்டிலிருந்து வந்த பொறியியல் வல்லுநன் இவன்தான் என்று உணர்ந்து கொண்டான் குமரன்.

''நீங்கள் கோட்டையிலும் அரண்களிலும் செய்து வைத்திருக்கின்ற போர்க் கருவிகளைப் பார்த்தேன். மிக அருமையாகவும் நுட்பமாகவும் இருக்கின்றன. அவற்றைச் செய்த நிபுணரைப் பார்த்துப் பாராட்டவேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் உங்களைச் சந்திக்கும் வாய்ப்பே கிடைக்கவில்லை...'' என்று பாராட்டினான் குமரன்.

''இளவரசியே என்னை இதுவரை சந்தித்ததில்லையே!... அவர்களுக்கு, போர், படைக்கருவிகள், எந்திரங்கள் என்றாலே பிடிக்காது என்று என் தங்கை சொல்லியிருக்கிறாள். உங்களைப்பற்றியும் ஒலிவியா நிறையச் சொல்லியிருக்கிறாள். புலியையும் தனியாய் நின்று கொன்ற வீரர் என்றும் இருபது முப்பது பேர்களை எதிர்த்து வென்ற வீரர் என்றும் உங்களைப்பற்றிக் கூறியிருக்கிறாள். அவ்வளவு சிறந்த வீரரான நீங்கள், இயல்பாக, படையிலே சேர்ந்து தளபதியளவுக்கு உயர முடியும்; ஆனால், அந்த முரட்டு வழியில் செல்லாமல், கவிதை, இலக்கியம் என்று ஆக்க வழியில் நீங்கள் செல்வதைக் கண்டு நான் பெரிதும் ஆச்சரியப்பட்டேன்... எங்கள் நாட்டில் வீரத்துக்கும் கலைக்கும் தொடர்பே இருப்பதில்லை. எங்கள் வீரர்கள், பொழுதுபோக்குகளில் கூட, மென்மையான இசை, காவியம், இலக்கியம், ஓவியம் முதலியவற்றில் ஈடுபட மாட்டார்கள்; மனிதர்களும் மிருகங்களும் போரிட்டு மடிவதை வேடிக்கை பார்க்கிறதிலேதான் பொழுது போக்குவார்கள்!... சிறந்த வீரராகவும் கலாரசிகராகவும் இருக்கும் உங்களைச் சந்தித்துப் பாராட்டவேண்டும் என்று எனக்குப் பல நாட்களாக ஆசை...'' என்றான் மெனிலாஸ்.



''ஆமாம்... நல்ல ஆசை! நான் சிறிது நேரம் தாமதமாக வந்திருந்தால், இவரை ஈட்டியாலே கொன்றிருப்பாய்!'' என்று அண்ணனைக் கடிந்து கொண்டாள் தங்கை.

''இவர்தான் குமரன் என்று எனக்கு எப்படித் தெரியும்? யாரோ ஒரு ஆள் நம் ரகசிய இடத்துக்குள் நுழைந்து விட்டானே என்ற ஆத்திரம்தான்!... ஆனால் என்னோடு இவ்வளவு நேரம் தாக்குப் பிடித்துச் சண்டை போட்டது ஒன்றே, உங்கள் வீரத்துக்கு நல்ல சான்று... ஒலிவியா உங்களைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மைதான் என்று என்னிடம் நேரடியாகவே நிரூபித்துக் காட்டி விட்டீர்கள்!'' என்று சிரித்தான் மெனிலாஸ்.

''நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன். அப்போது துறைமுகத்திலிருந்து ஒருவன் ஓடி வந்தான்; கப்பல் பழுது பார்க்கும் தொழிற்சாலையில் டெமட்ரியஸ் திடீரென்று மயங்கி விழுந்து விட்டான் என்றும் மருத்துவர் வீட்டுக்குப் போக வேண்டும் என்றும் சொன்னான். அதனால் வீட்டைத் திறந்து போட்டு விட்டு ஓடிப் போய் டெமட்ரியஸை மருத்துவர் வீட்டில் சேர்த்துவிட்டு இங்கு ஓடி வந்தேன். அதற்குள் நீங்கள் எப்படியோ இந்த இடத்திற்குள் புகுந்து விட்டீர்கள்!'' என்று குமரனிடம் சொன்னாள் ஒலிவியா.

''நான் வீட்டைச் சுற்றிப் பார்க்கும்போது, சுவரில் இருந்த சிங்கத்தின் தலையை விளையாட்டாகத் தொட்டேன். அது உண்மையாகவே சிங்கத்தின் குகைக்குள் என்னைத் தள்ளி விட்டு விட்டது!'' என்று சிரித்தான் குமரன்.

''இது சிங்கத்தின் குகை மட்டுமல்ல; இப்படி ஒரு குகை இருப்பதே பலருக்குத் தெரியாது!'' என்றான் மெனிலாஸ்.

"இங்கே இருக்கும் போர்க்கருவிகளைப் பார்க்க ஆவலாயிருக்கிறது... பார்க்கலாமா?" என்று அவனிடம் கேட்டான் குமரன்.

"வேண்டாம். நீங்கள் ஏற்கனவே சண்டை போட்டுக் களைத்திருக்கிறீர்கள்... வாருங்கள், வீட்டுக்குள் போய், சாப்பிட்டு விட்டுப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்..." என்று அழைத்தாள் ஒலிவியா.

"ஆம்... தங்கை சொல்வது சரிதான்; எங்கள் வீட்டுக்கு முதல் முதலாக வந்த வீரருக்கு, மிக மோசமான வரவேற்புக் கொடுத்து விட்டேன். வாருங்கள், முதலில் ஏதாவது சாப்பிடுவோம்..." என்று வீட்டை நோக்கி நடந்தான் அண்ணன்.

"சரி... சாப்பிட்டுவிட்டு இங்கே வந்து பார்வையிடலாமா?" என்று தன் கெஞ்சலைத் தொடர்ந்தான் குமரன்.

"இன்று இருட்டிவிட்டது. நாளை பகலில் எல்லாவற்றையும் பார்க்கலாம்..." என்ற மெனிலாஸ், குமரனின் கையைப் பிடித்துக் கொண்டு, வீட்டுக்குள் வந்து விட்டான்.

குமரனுக்கென்று சிறப்பான விருந்து தயாரித்திருந்தாள் ஒலிவியா. யவன நாட்டு உணவுப் பதார்த்தங்களோடு, சில தமிழக உணவு வகைகளையும் வைத்திருந்ததைப் பார்த்து வியப்படைந்தான் அவன்:

"ஒலிவியாவுக்குத் தமிழ்நாட்டு உணவுகூட சமைக்கத் தெரிகிறதே!..."

"தமிழ்நாட்டு உணவு என்ன, எந்த உணவு சமைத்துப் போட்டாலும் பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் பாராட்டுவதற்கு, எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறாரே, அதனால் எந்த உணவையும் இங்கே சமைத்துப் பழகலாம்!" என்று மெனிலாஸைப் பெருமையுடன் பார்த்துச் சிரித்தாள் தங்கை.



"என்னைப் பொறுத்தவரையில், சமைப்பது எதை என்பதைவிட, சமைப்பது யார் என்பதுதான் முக்கியம்... சாப்பாட்டிலே பதார்த்தங்களின் சுவையா முக்கியம்? பரிமாறுபவரின் அன்புதான் முக்கியம்!" என்றான் மெனிலாஸ்.

அவர்களுடைய சகோதர பாசத்தைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தான் குமரன். உணவுகளை ருசித்துச் சாப்பிட்ட அவன் "சாப்பாடு மிகவும் அருமையாயிருக்கிறது! அறிவுள்ளவர்கள் எதில் ஈடுபட்டாலும், அதிலே திறமைசாலியாகி விடுவார்கள் என்பது உண்மைதான்!" என்று ஒலிவியாவைப் பார்த்துப் பாராட்டினான்.

"என் தங்கை நன்றாகச் சமைக்கிறாள் என்பதுதான் எனக்குத் தெரியும்; நன்றாகத் தமிழ் படிக்கிறாளா என்று என்னால் தெரிந்து கொள்ள முடியாது!" என்று சிரித்தான் மெனிலாஸ்.

"அவள் படிப்பைப்பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன?... 'இப்படி ஒரு அறிவுள்ள மாணவியைப் பெற நான் கொடுத்துவைத்தவன்' என்று எங்கள் ஆசிரியர் பெருமையாகச் சொல்லுவார்..."

"அப்படியில்லை...கருங்குழலாதனார் போல் ஒரு நல்ல ஆசிரியரைப்பெற நாங்கள்தான் கொடுத்துவைத்தவர்கள்... அதற்காகத்தானே நீங்கள் சோழநாட்டிலிருந்து இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்றாள் ஒலிவியா.

"ஆம்... குமரன்! எங்கள் நாட்டில் உங்களைப்போல் வீரராயிருப்பவர்கள், இலக்கியம் படிக்கப்போக மாட்டார்கள்; படையில் சேர்ந்து, படிப்படியாக முன்னேறி, நாட்டு மன்னனாகக்கூட ஆகிவிட முடியும்..." என்று மெனிலாஸ் சொன்னதும், ஒலிவியா சிரித்துக் கொண்டே, அண்ணனின் காதில் ஏதோ யவன மொழியில் கூறினாள். அதைக் கேட்டதும் மெனிலாஸின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது:

"அப்படியா?... மிக்க மகிழ்ச்சி... இதிலே அதிர்ஷ்ட சாலி, குமரன் இல்லை; இளவரசிதான்!" என்று பலமாகச் சொல்லிச் சிரித்தான்.

அவனிடம் தங்கை என்ன கூறியிருப்பாள் என்பதைக் குமரன் யூகித்துக்கொண்டான்— திருவாதிரை விழா அன்று தோட்டத்தில் கண்ட காட்சியைத்தான் அவனிடம் முணுமுணுத்திருப்பாள்!

"குமரன்! இதைக் கேட்கவே எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது... என் தங்கை அடிக்கடி உங்கள் நாட்டுப் பாட்டான 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பதைச் சொல்லிக்கொண்டேயிருப்பாள். சொல்வது மட்டுமல்ல; அதிலே அவளுக்கு உறுதியான நம்பிக்கையும் உண்டு. பொதுவாக, இங்கே வருகிற யவனப் பெண்கள், தண்ணீரிலிருந்து வெளியே வந்த மீன்போல் துடிப்பார்கள்; எப்போது சொந்தநாட்டுக்குத் திரும்பிப்போவோம் என்று ஆவலோடு காத்திருப்பார்கள். ஆனால் என் தங்கை அப்படியல்ல; இந்த நாட்டையே தன் நாடு மாதிரி பாவிக்கிறாள்; இங்கே உள்ளவர்களையே தன் உறவினர்களாகக் கருதிப் பழகி மகிழ்ச்சியாக இருக்கிறாள். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை, காதல்தான் வெகு வேகமாக நடைமுறைப்படுத்தும் போலிருக்கிறது!... சோழநாட்டிலிருந்து வந்த ஒரு சாதாரண இளைஞனை, சேரநாட்டு அரசுரிமையுள்ள இளவரசி காதலிக்கிறாள் என்றால், அந்தத் தத்துவம் எவ்வளவு சுலபமாகச் செயலாகிவிட்டது!" என்று சிரித்தான் மெனிலாஸ்.

உலக ஒற்றுமை பற்றியும் போரில்லாத அமைதி நிலையைப் பற்றியும் உலக ஒருமைப்பாட்டுகாகத் தமிழ்ப் புலவர்கள் கண்ட கனவுகளையும், அந்த லட்சியத்தை நோக்கி மாவீரன் அலெக்ஸாண்டரும் அசோகரும் அடியெடுத்து வைத்தது பற்றியும் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.



"சரி, நேரமாகிவிட்டது... நான் புறப்படுகிறேன். நாளை நண்பகலில் வருகிறேன். நீங்கள் உங்கள் ஆயுதத் தொழிற்சாலையைச் சுற்றிக்காட்ட வேண்டும்..." என்று நினைவுபடுத்தினான் குமரன்.

"ஓ! நிச்சயமாக... எதிர்காலத்தில் நீங்கள் யார் என்பதைத் தெரிந்துகொண்ட பிறகும் நான் மறுக்க முடியுமா?" என்று விளையாட்டுப் பணிவோடு தலை குனிந்தபடி சிரித்தான் மெனிலாஸ்.

"ஒலிவியா! நான் வரட்டுமா?... உன்னுடைய அருமையான சமையலாலும் அன்பான உபசரிப்பாலும் சற்று அதிகமாகவே சாப்பிட்டுவிட்டேன்... மிக்க நன்றி..." என்று விடைபெற்றுப் புறப்பட்டான்.

மறுநாள் நண்பகலில் அவன் ஒலிவியாவின் வீட்டுக்குள் நுழைந்தபோது, மெனிலாஸ் தயாராக உட்கார்ந்திருந்தான்:

"வாருங்கள்... வாருங்கள்... சரியாகக் குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிட்டீர்களே?" என்று சிரித்தபடி வரவேற்றான்.

"உங்களைப்போல் தொழில்நுட்ப அறிஞர்களுக்கு, நேரம் பொன் போன்றது, இல்லையா?"

போதையில்லாத யவனத்தேறல், இருவருக்கும் கொண்டுவந்து கொடுத்தாள் ஒலிவியா:

"நீங்கள் போய்த் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு வாருங்கள்... நான் ஏதாவது சிற்றுண்டி தயாரித்து வைக்கிறேன்," என்று வீட்டிலேயே தங்கிவிட்டாள் ஒலிவியா.

"சிற்றுண்டி யவனநாட்டுத் தயாரிப்பாயிருக்கட்டும்... தமிழ்நாட்டு உணவுதான் எப்போதும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேனே?" என்று சிரித்தவாறு குமரன் மெனிலாஸுடன் தொழிற்சாலைக்குப் புறப்பட்டான்.

முதல் நாள் மாலையில் பார்த்ததைவிட, இப்போது பகல்வெளிச்சத்தில் அந்த இடத்தின் பரப்பு முழுமையாகத் தெரிந்தது.

குமரன் முன்பு வஞ்சிக்கோட்டையிலும் மதில்களிலும் பார்த்தவைகளைத் தவிர, வேறுசில கருவிகளும் அங்கே காணப்பட்டன. பகைவரின் கைகளை நடுங்கச் செய்யும் ஊசிப் பொறிகளும் சிச்சிலிப் பொறிகளும் பன்றிப் பொறிகளும் குவிந்திருந்தன. ஒவ்வொன்றையும் காட்டி விளக்கினான் மெனிலாஸ்.

முதல்நாள் பழகியதைவிட மறுநாள் மெனிலாஸ் நடத்தையில் மரியாதையும் மதிப்பும் அதிகமாயிருந்ததை நுட்பமாய்ப் புரிந்துகொண்டான் குமரன். ஒலிவியா, அவனிடம் சித்தாதேவி— குமரன் காதல்பற்றிச் சொன்னதன் விளைவுதான் அது என்பதும் குமரனுக்குப் புரிந்தது. அங்கேயிருந்த விசைவிற்களைக் கவனமாகப் பார்த்தான் அவன்.

"இதிலே தொடர்ச்சியாக ஐம்பது அம்புகளை எய்ய முடியும்..." என்று அதை இயக்கிக் காட்டினான் மெனிலாஸ். அதைச் சுற்றிப்பார்த்த குமரன், உள்ளேயில் அமைந்திருக்கும் மேல் இணைப்பும் கீழ் இணைப்பும் தான் அதில் மிக முக்கியமான பகுதிகள் என்று யூகித்தான்:

"இந்த மேல் இணைப்பையோ, கீழ் இணைப்பையோ தாக்கி உடைத்துவிட்டால், இது வேலைசெய்யாது, அல்லவா?" என்று கேட்டான் குமரன்

"ஆகா! மிக நுட்பமான விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களே!... இந்த இரண்டு இடங்களும்தான் இதிலே இயங்குகின்ற பகுதிகள். இதிலே ஏதாவது ஒன்று தாக்கப்பட்டாலும், விசைவில் வேலை செய்ய முடியாது..." என்ற மெனிலாஸ், குமரனுடைய தொழில் நுட்ப அறிவைப் பாராட்டி வியந்தான்.



பக்கத்தில் பிரம்மாண்டமான கற்கால் கவணைகள் சில இருந்தன.

"ஹெலன் என்ற கிரேக்க அரசியை, பாரிஸ் என்ற ட்ராய் நகர இளைஞன் கடத்திக் கொண்டு சென்றதால், கிரேக்கத்திற்கும் ட்ராய் அரசர்க்கும் நடந்த பயங்கரமான போரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், இல்லையா?" என்று கேட்டான் மெனிலாஸ்.

"ஆமாம்... பல நாட்கள் கடுமையாக நடந்த சண்டையல்லவா?"

"பல நாட்களா?... பத்து வருஷங்கள் நடந்தது... ராம— ராவண யுத்தம்போல, பயங்கரமான சண்டை... ராமாயணமும் இதுமாதிரி ஒரு பெண்ணால் ஏற்பட்டது தானே?"

"ஹெலன் மாதிரிப் பெண்ணால் ஏற்பட்டதல்ல; கற்புக்கரசி சீதையை வலுக்கட்டாயமாகத் தூக்கிச் சென்றதால் ஏற்பட்ட சண்டை அது... சரி, நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்..."

"அந்த 'ட்ராய்' போரில் இந்த மாதிரிக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள். எதிரிகளின்மேல் பெருங்கற்களைத் தொடர்ந்து வீசித்தாக்கும் கருவி இது..." என்று விளக்கிய மெனிலாஸ், "விசைவில்லிலே முக்கியமான பகுதியைக் கண்டு பிடித்தீர்களே, இதிலே எது முக்கியமான இடம் என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்..." என்று குமரனின் அறிவுக்குச் சோதனை வைத்தான்.

குமரன் அந்த கற்கால் கவணையைச் சுற்றிச் சுற்றி வந்து ஒவ்வொரு பகுதியாகத் தொட்டுத் தட்டிப் பார்த்தான். கடைசியாக, அதன் வலதுபக்கத்தில் ஒரு சங்கிலி சுழல்வதற்காக விடப்பட்டிருந்த இடைவெளியைக்

1. கற்கால் கவணை பற்றிய குறிப்பை 'பதிற்றுப்பத்து'— 88-ம் பாட்டில் காணலாம்.

கண்டுபிடித்தான். அந்த கேந்திரப் பகுதியில் தாக்கி உடைத்து விட்டால் கற்கால் கவணை செயலற்றுப் போய்விடும் என்று யூகித்தான்:

"இதோ இந்த இடைவெளியிருக்கிறதே, இதில் ஒரு ஈட்டியையோ அம்பையோ எய்துவிட்டால், சங்கிலி சுழல முடியாமல் நின்று விடும், இல்லையா?"

"ஆகா!... எவ்வளவு சரியாகக் கண்டுபிடித்து விட்டீர்கள்!... குமரன்! உங்களைப் பற்றி ஒலிவியா எவ்வளவோ பாராட்டிச் சொல்வாள்; உங்கள் நல்ல பண்பால் கவரப்பட்ட அவள் உங்களைப் பற்றி மிகைப் படுத்திச் சொல்கிறாள் என்று நினைப்பேன். இப்பொழுது தான் புரிந்து கொண்டேன்— நீங்கள் நல்லவர் மட்டுமல்ல; வல்லவரும்கூட... நீங்கள் இங்கே அரசராகிவிட்டால், எனக்கே வேலையில்லாமல் போய்விடும் போலிருக் கிறதே!..." என்று சிரித்தான் மெனிலாஸ்.

தொழிற்சாலையின் வடக்குக் கோடியில் பல யவனக் கொல்லர்கள் வேலை செய்துகொண்டிருந்த இடத்திற்கு, குமரனை அழைத்துச் சென்றான் மெனிலாஸ்.

அங்கே, ஓர் ஆள் உயரத்திற்குமேல், ஒரு பெரிய புறாக்கூடு மாதிரி நீண்ட சதுரமான இரும்புக் கூடு உருவாகிக் கொண்டிருந்தது.

"இதோ பார்த்தீர்களா, இது நீங்கள் இதுவரை கேள்விப்பட்டிருக்கவே முடியாத புதிய எந்திரம்; என்னுடைய ஆறு வருஷ ஆராய்ச்சியின் பயனாக இதை வடிவமைத்திருக்கிறேன். இது இன்னும் முழுமை பெற வில்லை இது ஒன்றைச் செய்து முடிப்பதற்கே மூன்று மாதங்களாகும். இப்போது முக்கால் பங்கு முடிந்திருக் கிறது இது முழுமையடைந்தபிறகு எப்படி இருக்கும் என்று காட்டுகிறேன், வாருங்கள்!" என்று ஒரு தனியறைக்கு அவனை அழைத்துச் சென்றான் மெனிலாஸ்.



அங்கே ஒரு மேடையின் மேல், ஒரு 'மாதிரி உருவம்' வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரம்மாண்டமான இரும்புக் கூட்டுக்கு முன்பக்கத்தில் முப்பது நீண்ட இரும்புக் குழாய்கள் இருந்தன. கூட்டின் இரு ஓரங்களிலும் பெரும் இருப்புப் பட்டைச் சங்கிலி கூடு முழுவதும் சுற்றியிருந்தது. அந்தக் கூடு, பட்டைச் சங்கிலிமேல் தான் நகரும்.

"இது சுற்றிலும் கனத்த இருப்புத் தகடுகளால் செய்யப்படுவது; காற்றுப் போக்குவரவுக்கு சில சிறு சிறு ஓட்டைகள் தவிர, உள்ளே எதையும் வெளியே இருந்து பார்க்க முடியாது. உள்ளே பத்துப் பதினைந்து வீரர்கள் இருந்து கொண்டு, முன்பக்கம் உள்ள முப்பது துளைகள் வழியாகவும் விசைவில்களை வைத்து அம்புகளை எய்யலாம். ஒரே சமயத்தில் இதிலிருந்து முப்பது, முப்ப தாக அம்புகள் பாய்ச்சி எதிரிகளை நாசமாக்க முடியும்— ஆனால் வெளியேயிருந்து எந்த அம்பும் ஈட்டியும் வாளும் உள்ளே நுழைய முடியாது; அப்படி அந்தத் துளைகளை அமைத்திருக்கிறேன்..." என்று மெனிலாஸ் விளக்கிக் கொண்டிருக்கும் போதே குமரன் மெய் விதிர்த்துப் போனான். அந்த எந்திரத்தின் முன்னால் எவ்வளவு பெரிய படையும் தாக்குப் பிடித்து நிற்க முடியாது என்பதை உணர்ந்த அவன் முகம் வெளிறிப்போய் விட்டது.

"குமரன்! முன்பு பார்த்த எந்திரங்களில் எல்லாம் பலவீனமான இடங்களைக் கண்டுபிடித்தீர்களே, அது மாதிரி இதிலே பலவீனமான பகுதியே கிடையாது... வீரர்கள் இதன் உள்ளே போய்க் கதவை அடைத்துக் கொண்டுவிட்டால், வெளியேயிருந்து யாராலும் திறக்கவோ உடைக்கவோ முடியாது. உள்ளேயிருப்பவர் களே திறந்து கொண்டு வெளியே வந்தால்தான்... தேவையான உணவுப் பொருள்களை வைத்துக்கொண்டு விட்டால், எத்தனை நாள் வேண்டுமென்றாலும் உள்ளே

இருந்து தொடர்ந்து போரிடமுடியும்...'' என்று மெனிலாஸ் அந்த ராட்சஸ எந்திரத்தின் பெருமையைச் சொல்லச் சொல்ல, குமரனுக்கு இதயம் நொறுங்க ஆரம்பித்தது.

''இந்த எந்திரத்திற்கு 'கணை எயில்' என்று தளபதி பாண்டரங்கன் பெயர் வைத்திருக்கிறார். இது உருவாவது யாருக்குமே— சேர மன்னருக்குக்கூட— தெரியாது. தளபதிக்கும் எனக்கும்தான் தெரியும். தினசரி தளபதி இங்குவந்து பார்த்துவிட்டுப் போவார்; இன்னும் சிறிது நேரத்தில் அவர் வருவார்... மன்னர் இதுவரை என்னிடம் காட்டிய அன்புக்கும் நம்பிக்கைக்கும் என் கைம்மாறாக இந்தச் சாதனையைச் செய்து முடிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன். இதைச் செய்து முடித்து, திடீரென்று மன்னருக்குக் காட்டி, அவரை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்யவேண்டும் என்று நினைத்திருக்கிறேன். தயவு செய்து நீங்களும் இதை யாரிடமும் சொல்லி விடாதீர்கள்!'' என்று கேட்டுக் கொண்டான் பொறியியல் வல்லுநன்.

மெனிலாஸ் பேச்சிலே கவனம் செலுத்த முடியாமல், பயத்தில் குழம்பிப் போயிருந்தான் குமரன்.

''இதைச் செய்து முடிக்க இன்னும் எத்தனை நாளாகும்?'' என்று குரலில் உணர்ச்சியைக் காட்டாமல் கேட்டான் அவன்.

''இன்னும் ஒரு மாதம் ஆகும் என்று நினைக்கிறேன்... இது முடிந்ததும் உங்களைக் கூட்டிவந்து காண்பிக்கிறேன்...'' என்று பெருமிதத்தோடு சொன்னான் மெனிலாஸ்.

பிறகு இருவரும் வீட்டுக்குத் திரும்பிவந்தார்கள்.

ஒலிவியா அன்போடு படைத்த சிற்றுண்டி விருந்தில், கலகலப்பில்லாமல், ஏதோ சாப்பிட்டான் குமரன்.



''என்ன, குமரன்! ஏன் ஒரு மாதிரியாக, உற்சாகமில்லாமல் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் மெனிலாஸ்.

''இது ஒரு விதமான நோய், அண்ணா!'' என்று குறும்பாகச் சிரித்தாள் ஒலிவியா.

''நோயா?'' என்று ஏறிட்டு அவளைப் பார்த்தான் குமரன்.

''ஆம்... காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோய்!... காதலர்கள் சந்தித்துப் பேசும் நேரமல்லவா இது? காதலியோடு பேசிக் கொண்டிருக்க வேண்டிய நேரத்தில் நம்மோடு பேசிக் கொண்டிருந்தால் உற்சாகமாயிருக்குமா?'' என்று விளக்கினாள் அந்தப் பெண்!

அவளுடைய திருக்குறளை ரசிக்கும் மனநிலையில் இல்லை குமரன். அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, சிந்தனை செய்தவாறே கடற்கரை ஓரத்தில் தளர் நடையிட்டு வந்து கொண்டிருந்தான் அவன்...

கொடுங்கோளூரிலிருந்து திரும்பிவந்த இருங்கோவும் அந்துவனும் வஞ்சியில் வேண்மாடத்திலே தங்கி, அடுத்து நடக்க வேண்டிய போர் ஏற்பாடுகளைச் சேரனுடன் பேசத் திட்டமிட்டிருந்தார்கள்.

அன்று, ஆலோசனை மண்டபத்திற்கு அந்துவன் மட்டும் முதலில் வந்தான்.

''வாருங்கள்!... எங்கே, இருங்கோ வரவில்லையா?'' என்று விசாரித்தான் பெருஞ்சேரலாதன்.

''இன்னும் கொஞ்சநேரத்தில் வருவார். அதற்கு முன்னாலே உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பற்றிக் கேட்பதற்காக என்னை முதலில் அனுப்பினார்...'' என்றான் அந்துவன்.

''என்ன விஷயம்?''

''இருங்கோ ஓர் லட்சியவாதி; தான் கொண்ட லட்சியம் நிறைவேறும்வரை, வேறு எதையும் நினைக்காமல், திட்டமிட்டுக் காரியம் சாதிக்கிறவர். உங்கள் துணையாலும் பாண்டியர் உதவியாலும் அவருடைய லட்சியம் விரைவில் நிறைவேறப் போகிறது. ஆகையால் இப்போது அவர் உள்ளம் வேறொரு திசையில் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது...'' என்று மூடுமந்திரமாகத் தொடங்கினான் நண்பன்.

''சொல்வதை விளக்கமாகச் சொல்லுங்கள்... நமக்குள் பேசுவதற்கு என்ன தயக்கம்?''

''எல்லாம் தெரிந்த உங்களுக்கு இதுவும் ஓரளவு தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன். நம் இளவரசி சித்தாதேவியின் வாழ்க்கையிலே மிகவும் அக்கறை கொண்டிருக்கிறார் இருங்கோ. இளவரசி எப்போதும் மகிழ்ச்சியாக, மதிப்பாக, பெருமையாக வாழ வேண்டும் என்று நினைக்கிறார்...''

''அப்படியென்றால்...'' என்று புருவத்தை வளைத்தான் சேரன்.

''இளவரசியைச் சோழ நாட்டு அரசியாகத் தன் சிம்மாசனத்தில் அமர்த்திக் கொள்ள விரும்புகிறார்...''

இதைக் கேட்டுப் பெருஞ்சேரலாதன் திகைப்படைந்து விடவில்லை. இது முற்றிலும் எதிர்பாராதது அல்ல என்றாலும் இந்தச் சமயத்தில் எதிர்பார்க்கவில்லை.

ஆரம்பத்திலிருந்தே இருங்கோவின் கண்களும் கருத்தும் தேவியின் பக்கம் சுழன்றதைச் சேரனின் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. அரசியல் பிரச்னைகளில் காட்டுகின்ற ஆர்வத்துக்குக் குறையாமல், சில சமயங்களில் அதிகமாகவே, இளவரசியின் விஷயத்தில் காட்டுவதை, சேரனும் அறிந்திருந்தான்.



''அரசே! இருங்கோ, தன் லட்சியம் நிறைவேறாமல் திருமணம் செய்து கொள்வதில்லை என்று சபதம் செய்திருந்தார். இப்போது லட்சியம் நிறைவேறப் போகிறது என்பதால்தான் திருமணப் பேச்சில் ஈடுபட்டிருக்கிறார். கரிகாலனை வென்று வீழ்த்திய பிறகு, வெற்றி விழா, திருமண விழா இரண்டும் ஒரே சமயத்தில் நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார்...'' என்று மேலும் தொடர்ந்தான் அந்துவன்.

சோழ நாட்டை வென்று தனக்கு அடிமை நாடாக வைத்திருப்பதை விட, சோழ மன்னனைத் தன் அடிமையாக வைத்திருப்பது, சுலபமானது; சோழ நாட்டு வளங்களைத் தன் நாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு எளிமையான வழி என்று கணக்குப் போட்டான் சேரன். சித்ராதேவியின் மேல் உள்ள மயக்கத்தில், தான் சொல்வதையெல்லாம் கேட்டு இருங்கோ நடப்பான் என்று நினைத்தான் சேரன். வற்றாத ஜீவநதி பாய்ந்து, மண்ணெல்லாம் பொன் கொழிக்கும் சோழ நாடு, தன் நிரந்தர ஆதிக்கத்திற்குள் வருவதை விட்டுவிட அவன் தயாராயில்லை...

சேரனுடைய அமைதியான சிந்தனை, தங்களுக்குச் சாதகமாகவே இருக்கும் என்பதை யூகித்துக் கொண்ட அந்துவன், மன்னனின் மனத்தை உறுதியாக்க, மேலும் பேச்சைத் தொடர்ந்தான்:

''இருங்கோ சோழ மன்னராவது நிச்சயம். சோழ நாட்டுக் குறுநிலத் தலைவர்கள், பாண்டிய மன்னர் எல்லோரும் அவரை ஆதரிக்கிறார்கள். அவர் சோழ மன்னராவதை யாரும்— நாம் கூட— இனித் தடுக்க முடியாது. இத்தனை பாடுபட்டுப் பெற்ற சிம்மாசனமும் அதிகாரமும் அந்தஸ்தும் யாரோ ஒருத்திக்குப் போய்விடக் கூடாது என்றுதான் இருங்கோ கவலைப்படுகிறார்...'' என்று அழகாகப் பேசினான் தோழன்.

பரம்பரைப் பெருமை வாய்ந்த சோழ சிம்மாசனத்திலே தன் மகள் வீற்றிருக்கும் சிறப்பை மனக்கண்ணில் கண்டு பூரித்தான் தந்தை:

''சிந்தாதேவி இதற்கு ஒப்புக் கொள்கிறாளா என்று அவளைக் கேட்டுச் சொல்கிறேன்'' என்று, தன் ஒப்புதலைக் குறிப்பாகத் தெரிவித்தான் மன்னன்.

அந்துவன் உடனே வேண்மாடத்துக்குத் திரும்பி வந்து, இருங்கோவிடம் நடந்ததைச் சொன்னதும், அவன் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது.

இந்தத் திருமணத்தால் இருங்கோவின் காதல் லட்சியம் மட்டுமல்ல— சூழ்ச்சியாளர்களின் லட்சியமான சோழ சிம்மாசனமும் கிடைப்பது நிச்சயமாகிவிட்டதே! தன் மகளை இருங்கோவுக்குத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயதார்த்தம் செய்துவிட்டால், தன் மகளுக்காகவாவது மருமகனுக்குச் சேரன் தொடர்ந்து உதவி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுமே!... அதுமட்டுமல்ல— ஒருவேளை, சோழ சிம்மாசனமே கிடைக்காமற் போனாலும், சிந்தாதேவிக்கு உரிமையான சேர சிம்மாசனமாவது கிடைக்கும் அல்லவா?...

தன் லட்சியங்கள் நிறைவேறப்போகும் பெருமிதத்துடன் இருங்கோ, சேரனைச் சந்திக்க வந்தான்:

''அரசே! கரிகாலன் இப்போது புகாரில் இல்லையாம்; ஒருவேளை உதவி தேடி, துளுநாடு, கோசர்நாடு என்று ஏதாவது வெளிநாடுகளுக்குப் போயிருந்தாலும் போயிருக்கலாம். ஆகவே அவன் உதவி பெற்று வருவதற்குள், நாம் திடீரென்று சோழ நாட்டின்மீது படையெடுத்துத் தாக்கினால் என்ன?'' என்று யோசனை தெரிவித்தான் இருங்கோ.

''ஆம், அரசே! சோழநாட்டில் படைவீரர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதோடு, படைக் கருவிகளும் புதிதாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். சோனகத்திலிருந்து குதிரைகள் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் நாம் உடனே போர் தொடுப்பதுதான் புத்திசாலித்தனம்...'' என்று தூண்டினான் அந்துவன்.



சீக்கிரத்தில் போர் துவங்க வேண்டும் என்று ஏற்கனவே சிந்தித்திருந்த சேரனுக்கு, அவர்களின் யோசனை சரியென்று பட்டது:

''ஆம்... இன்னும் ஒரு வாரத்தில் போருக்கு நம் படைகள் புறப்பட ஆணையிட்டு விடுகிறேன்...'' என்று தீர்மானமாகச் சொன்னான் சேரன்.

''உடனே போர் தொடங்கினால், நாம் இன்னொரு தந்திரமும் செய்து சோழநாட்டைப் பிடித்துவிடலாம்... இங்கே குமரன் என்று ஒருவன் இருக்கிறானே, அவனைக் கரிகாலன் என்று சந்தேகித்து ஏமாந்தோமே, அந்த ஏமாற்றத்தையே ஒரு தந்திரமாக மாற்றிவிடுவோம்...'' என்று இருங்கோ தன்னுடைய திட்டத்தை விவரித்தபோது, அதைக் கேட்டுக் கொண்டே இளவரசியும் உள்ளே வந்தாள்.

இருங்கோவின் திட்டத்தைக் கேட்டு, இளவரசி மட்டுமல்ல, சேரனே திகைத்துப் போனான்.

## 28

அந்தப்புரத்தில் ஒரே சிரிப்பும் கும்மாளமுமாயிருந்தது. காற்றிலே அசையும் வெண்கலமணிகள் போல, பெண்களின் கலகல என்ற சிரிப்பொலி, அந்தப்புரம் முழுவதும் எதிரொலித்தது.

இளவரசியின் தோழிகளில் ஒருத்தியான பொன்னிக்கு அடுத்த வாரம் திருமணம் நிச்சயமாகியிருந்தது. அதனால் மற்ற பெண்கள் பொன்னியைச் சுற்றி நின்று பேசிக் கேலி செய்து கொண்டிருந்தார்கள்:

''ஏண்டி பொன்னி! நீயும் அவரும் முன்பே பழகிக் காதலித்தீர்களா?'' என்று ஒருத்தி அவள் கன்னத்தில் செல்லமாக இடித்தாள்.

''ஆமாம்... தினந்தோறும் மாலை நேரத்தில் குளத்துக்குத் தண்ணீர் கொண்டுவரப் போகிறேன் என்று சொல்லிப்போய், அங்கே கண்ணி வைத்துக் காதலனைக் கொண்டுவந்து விட்டாள்!'' என்றாள் ஒருத்தி.

''நீதான் எதிர் வீட்டுக்காரியாயிற்றே, உனக்கு எல்லாம் தெரியுமே? தினந்தோறும் இவர்கள் சந்தித்துக் கொள்வார்களோ?''

''தினசரி சூரியன் உதிக்கத் தவறினாலும் இவர்கள் சந்திப்புத் தவறாது!... ஒரு தடவை, இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல், குளத்திற்குப் போகாமலிருந்து விட்டாள் இவள். அந்தக் காதலன் என்ன செய்தான், தெரியுமா?''

''என்ன செய்தான்?'' என்று எல்லோரும், பொன்னி யின் எதிர்வீட்டுக்காரியைச் சுற்றிக் கொண்டார்கள்.

''ஒரு நாள் நடுப்பகலில், வீட்டுக்குள்ளே எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, வாசலுக்கு வந்து 'அம்மா! தண்ணீர் கொடுங்கள்; தாகமாயிருக்கிறது...' என்று கூவினான்...''

''அவன் தாகம், தண்ணீரால் தீரக்கூடியதில்லையே!''

''வாசலில் இந்தக் குரல் கேட்டதும் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த அம்மா, பொன்னியிடம் ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு போய்க் கொடுக்கச் சொன்னாள். இவளுக்குத்தான் காதலனின் குரல் தெரியுமே? குவளையைக் கொண்டுவந்து வாசலில் தனியே நின்ற அவனிடம் நீட்டினாள். அவன் என்ன செய்தான் தெரியுமா? குவளையைப் பிடிப்பதற்குப் பதில் குமரியின் கையைப் பிடித்துவிட்டான் அந்தத் திருட்டுப்பயல்!... திடுக்கிட்ட இவள் தன்னை மறந்து 'அம்மா!' என்று பயத்தில் அலறிவிட்டாள். அலறலைக் கேட்டுப் பதறிப் போய் அம்மா வாசலுக்கு வந்துவிட்டாள்.''



''ஐயையோ!... அப்புறம் என்ன ஆயிற்று?''

''அவசரப்பட்டுக் கையைப் பிடித்தானே, அவனுக்கு இப்போது கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நின்றான். அந்தச் சமயத்திலும் சமயோசிதமாகச் சமாளிக்க, பெண்ணால் தான் முடிந்தது!... 'ஒன்றுமில்லையம்மா!... இவருக்குத் தண்ணீர் குடித்தவுடனே விக்கி விட்டது. அதுதான் பயந்து அலறினேன்...' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னாள் இத்தக் கள்ளி!''

''நல்ல வேடிக்கை!... தண்ணீர் குடித்தாலே விக்கல் வருமோ?... அந்த அம்மா, மகள் பேச்சை நம்பி விட்டாளா?''

''ஆமாம்... 'ஏன் தம்பி, மெதுவாகக் குடிக்கக்கூடாது?' என்று பரிவுடன் கேட்டு அவன் நெஞ்சை நீவி விட்டாள் அம்மா... அவள் ஏமாளி என்று அர்த்தமில்லை; மகள் மேலே அவ்வளவு நம்பிக்கை.''

''ஏன் பொன்னி! முதன் முதலிலே அவரை எங்கே சந்தித்துக் காதலித்தாய்?''

''ஒரு நாள் வைக்கோற்போரிலே இவள் வைக்கோல் பிடுங்கிக் கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ ஒரு காளை மாடு வந்து இவளை முட்டித் தள்ளி விரட்டியதாம். அப்போது அந்த இளைஞன் ஓடி வந்து காளையை அடக்கி இவளைக் காப்பாற்றினானாம்...''

''காளையை அடக்கிய காளையை இனிமேல் இவள் அடக்கப் போகிறாள்!''

தோழிகளின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆட்பட்டு, எல்லாவற்றையும் ரசித்து உள்ளுக்குள் மகிழ்பவளாய் வெட்கத்தால் சிவந்த ரோஜாவாய் உட்கார்ந்திருந்தாள் பொன்னி.

எல்லோரையும் பார்த்து, வெளியிலே ரசித்துச் சிரித்துக் கொண்டும், உள்ளுக்குள் துயரத்தால் வெம்பிக் கொண்டும் ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள் சிந்தாதேவி.

'பாவம்! இன்னும் ஒரு வாரத்தில் போர் தொடங்கப் போவது இந்தப் பேதைப் பெண்களுக்குத் தெரியாதே! அந்தப் போரிலே, பொன்னியின் கணவன்கூட பலியாகலாம்; இந்தப் பொன்னி மாதிரி இன்னும் எத்தனையோ பெண்கள், போர்ப்புயலிலே வாழ்க்கையை இழந்து, விதவைகளாகலாம்...' என்ற எண்ணம் பொங்கிக் குமுற, அமைதியாக ஊஞ்சலில் மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தாள் இளவரசி.

அப்போது பெருஞ்சேரலாதன் உள்ளே நுழைந்தான். அரசர் வந்ததும் தோழிப் பெண்கள் ஓடி மறைந்தார்கள். அவர்களில் பொன்னியை மட்டும் பிடித்து நிறுத்திக் கொண்டாள் தேவி.

''என்ன, தேவி! எங்கும் ஒரே குதூகலமாயிருக்கிறது?... என்ன செய்தி?'' என்று கேட்டான் மன்னன்.

''அப்பா! பொன்னிக்கு அடுத்த வாரம் திருமணம் நிச்சயமாகியிருக்கிறதாம். அதற்காகத்தான் இவளைக் கேலி செய்து பேசிக் கொண்டிருந்தார்கள்.''

''அப்படியா, பொன்னி! மிக்க மகிழ்ச்சி... நான் வர முடியாவிட்டாலும் இளவரசி உன் திருமணத்துக்கு நிச்சயம் வருவாள்...'' என்று மன்னர் சொன்னதும்



பொன்னி நாணம் துள்ள உள்ளே ஓடிவிட்டாள். தந்தை தேவியின் பக்கம் திரும்பினான்:

''தேவி! உனக்கு இளைய பெண்களுக்கெல்லாம் திருமணம் நடக்கிறது... ஆனால்—'' என்று தந்தை ஏதோ பேச்சுக்கு அடிப்போடுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட மகள், மெதுவாக நழுவப் பார்த்தாள்; ஆனால் சேரன் விடவில்லை:

''தேவி! நில்... உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும்...'' என்று அவன் சொன்னதும், எதிரே அமைதியாக நின்றாள் மகள்.

''தேவி! இன்னும் ஒரு வாரத்தில் சோழநாட்டின் மேல் படையெடுப்பு நடந்து, சோழ சிம்மாசனத்தில் இருங்கோ அமரப் போகிறார்...''

''எனக்கு அதில் நம்பிக்கையும் இல்லை; விருப்பமும் இல்லை...''

''உனக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, அது நடக்கத்தான் போகிறது... சோழநாட்டுக் குறுநிலத் தலைவர்களும் பாண்டியரும் இருங்கோவை ஆதரிக்கிறார்கள்... எனக்கும் வயது ஆகிக் கொண்டே போகிறது. சீக்கிரமே உன்னைச் சோழ நாட்டு அரசியாக்கி விட்டால்—'' என்று தந்தை ஆரம்பித்ததும், சிந்தாதேவி திடுக்கிட்டுப் போனாள்:

''அப்பா! என்ன சொல்கிறீர்கள்?''

''ஏன் பதறுகிறாய்? நல்லதைத்தான் சொல்கிறேன்... இருங்கோ உன்னை மணந்து கொள்ள ஆசைப்படுகிறார்...''

''என்ன, அந்த அயோக்கியனா?...'' என்று வெடித்தாள் தேவி.

இருங்கோ அனாவசியமாக— சில சமயங்களில், அநாகரிகமாகவே கூட— இளவரசியை 'நோக்கி'யதையும்

பேசியதையும் நினைத்து மகள் குமுறுகிறாள் என்று நினைத்துக் கொண்டான் தந்தை:

"இளைஞர்களெல்லாருமே இளம்பெண்கள் விஷயத்தில் சிறிது அயோக்கியர்கள் மாதிரித்தான் நடந்து கொள்வார்கள் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. 'நம்மேல் கொண்ட எல்லையில்லா அன்பால் தான் அப்படி எல்லை மீறி நடந்து கொள்கிறார்' என்று புரிந்து கொள்ள வேண்டும்..." என்று சமாதானம் சொன்னான் சேரன்.

"இல்லை, அப்பா! அவனை நான் புரிந்து கொண்ட அளவு, நீங்கள் புரிந்து கொள்ளவில்லை..."

"இருங்கோ சாதாரண ஆள் இல்லை, தேவி! விரைவிலே சோழநாட்டுக்கு மன்னனாகப் போகிறவர்..."

"சோழநாடு மட்டுமல்ல— உலகத்தின் வளம் எல்லாவற்றையும் வைத்துக்கூட, ஒருவன் நல்ல பண்புகளை வாங்க முடியாது, அப்பா!"

"தேவி! உன் அழகுக்கும் அறிவுக்கும் நீ பேரரசியாக விளங்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீ அந்தஸ்திலும் அதிகாரத்திலும் தன்னிகரில்லாத ராணியாக வாழ வேண்டும் என்று நினைக்கிறேன்..."

"அழகான அரண்மனையிலே, அன்னத் தூவிப் படுக்கையிலே, அறுசுவை உணவிலே, பகட்டுப் பட்டாடைகளிலே, நவரத்ன அணிமணிகளிலே வாழ்வதுதான் இன்பம் என்று நினைக்கிறீர்களா, அப்பா?... இல்லை... ஓட்டைக் குடிசையிலே, கூழ் குடித்து வாழ்கின்ற குடும்பங்களிலும் இனிமையான வாழ்வு உண்டு..."

"தேவி! எனக்கே பாடம் கற்றுக் கொடுக்கிறாயா?... தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக உன்னை வளர்த்த என் பேச்சைத் தட்டுமளவுக்குத் துணிந்து



விட்டாயா?... தேவி! எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன்..." என்றான் தந்தை. அவனுடைய குரலில் பாதி கோபமும், பாதி பாசமும் மாறிமாறி ஒலித்தன.

"என் நன்மைக்காக என்று சொல்லாதீர்கள், அப்பா! ஒருவேளை, உங்களுடைய நன்மைக்காக வேண்டுமானால் இருக்கலாம்..." என்று அவள் குத்தலாகக் கூறியதும் சேரனுக்குக் கோபம் மூண்டது.

"உன் நன்மைக்கும் அல்ல, என் நன்மைக்கும் அல்ல— இந்த நாட்டின் நன்மைக்காகச் சொல்கிறேன்; நீ இருங்கோவை மணந்துகொள்ள வேண்டும்..." என்று கண்டிப்பான குரலில் சொன்னான் மன்னன்.

"இந்த நாட்டின் நன்மையைப் பற்றி நீங்கள் பேசக் கூடாது, அப்பா!... உங்களுடைய சொந்த மானத்துக்காகவும், சுய கௌரவத்துக்காகவும், வீண் வீம்புக்காகவும், ஆயிரக்கணக்கான உயிர்களை, போர் என்ற பெயரிலே பலியிடப்போகும் நீங்கள், நாட்டு நன்மையைப் பற்றிப் பேசத் தகுதியில்லை... போர்க்களத்திலே பலியாகப் போகும் அந்த அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதற்காக, நான் நீங்கள் குறிப்பிடும் யாரையும் திருமணம் செய்து கொள்ளத் தயார்!... இந்தப் போரை உடனே நிறுத்திவிடுகிறீர்களா?" என்று மடக்கினாள் சிந்தாதேவி.

இந்த நிபந்தனையைக் கேட்டதும், குழம்பித் திணறினான் சேரன்:

"தேவி! இந்தப் போர் இப்போது என் சொந்தப் பிரச்னை மட்டுமல்ல; இருங்கோவின் உரிமைப் பிரச்னை. அவர் அரசராகும் உரிமைக்காக நடத்தும் போரை நான் எப்படி நிறுத்த முடியும்?... மேலும் இந்த அரசியல், போர் போன்ற விஷயங்களில் தலையிட உனக்கு அவசியமில்லை; அது அவருடைய சொந்த விஷயம்..." என்று பேச்சைத் திருப்பினான் மன்னன்.

"அப்படியென்றால், திருமணம் என்பது என் சொந்த விஷயம்..."

"நீ சாதாரணப் பெண்ணாயிருந்தால், சொந்த விஷயம்தான்; ஆனால் இளவரசியாக, மன்னனின் மகளாகப் பிறந்துவிட்ட உனக்கு அந்த உரிமை கிடையாது."

"அதற்காக, உங்கள் அரசியல் சூதாட்டத்திலே என்னைக் காயாகப் பயன்படுத்துகிறீர்களா? அரசியல் பலிபீடத்திலே என்னைப் பலி கொடுக்கப் போகிறீர்களா?"

"அது தவிர்க்க முடியாதது என்றால், அதைத் தவிர வேறு வழியில்லை!..." என்றான் சேரன் அமைதியாக.

சிந்தாதேவி சிறிதுநேரம் மௌனமாக இருந்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

அந்த முடிவு இப்பொழுது திடீரென்று தோன்றியதில்லைதான்; ஆனால் அந்த முடிவைச் செயல்படுத்த இதுதான் தகுந்த நேரம் என்று தோன்றியது அவளுக்கு.

"அப்பா! நான் இளவரசியாக இருப்பதால்தானே, நீங்கள் அரசியல், கடமை என்றெல்லாம் சொல்லி, என்னைக் கட்டாயப்படுத்த முடிகிறது?... நான் இளவரசியாகவே இல்லாவிட்டால்—"

"என்ன சொல்கிறாய், தேவி?" என்று பரபரப்புடன் மகளது முகத்தைப் பார்த்தான் தந்தை.

"இளவரசிப் பட்டம் என் உயிரோடு ஒட்டியதில்லையே? பின்னால் உடம்பில் போர்த்தப்பட்ட பட்டாடைதானே? சுமையாகிவிட்ட அந்தப் பட்டாடையைத் தூக்கியெறிந்து விடுகிறேன்... உரிமையில்லாத இளவரசியாக இருப்பதைவிட, உரிமையுள்ள வேலைக்காரியாக இருப்பது மேல்..." என்று மகள் அமைதியாகப் பேசுவதைக் கேட்டுத் தந்தையுள்ளம் கலங்கி நைந்தது:



"தேவி! ஏன் இப்படி விரக்தியாகப் பேசுகிறாய்? இப்பொழுது என்ன நடந்துவிட்டது என்று இந்த மாதிரி அவலப்படுகிறாய்?" என்ற சேரனின் கண்கள் கசிந்தன.

"இப்பொழுது நடந்ததற்கு மட்டுமல்ல, இதற்கு முன்னால் நடந்ததற்காகவும் இனிமேல் நடக்கப் போவதற்காகவும் சேர்த்தே, நான் முன்பு செய்து வைத்திருந்த முடிவுதான் அப்பா, இது... நான் அரசர் யாரையுமே திருமணம் செய்துகொள்வதில்லை என்று தீர்மானமாக முடிவு செய்திருக்கிறேன். ஒரு சாதாரணக் குடிமகனை மணந்து ஒரு சாதாரணப் பெண்ணாகவே வாழ்வேன்— இது உறுதி!..." என்று அழுத்தமாகச் சொன்னாள் சிந்தாதேவி.

"தேவி! ஒரு பெரிய நாட்டின் இளவரசி— அதிலும் நாட்டை ஆளும் உரிமையுடைய ஒரே மகளான உன் மாதிரி ஓர் இளவரசி— ஒரு குடிமகனை மணந்து கொண்டதாக இதுவரை யாரும் கற்பனைகூட செய்யவில்லை அம்மா!..." என்று கண்ணீர் மல்க, குரல் தழதழக்க அரற்றினான் தந்தை.

"அசோகர் மாதிரி ஒரு மாபெரும் மன்னர், போரையே வெறுத்து அமைதி காத்தார் என்பதைக் கூடத்தான், யாரும் அதுவரை கற்பனை செய்யவில்லை. ஆனால் அசோகர் செய்ததுதான், இன்றும் இனிமேலும் வரலாற்றில் நிலைபெறப் போகிறது!... அப்பா!... நான் என் முடிவில் மாறப்போவதில்லை— இது சத்தியம்..." என்று ஆவேசமாகக் கூறிய மகளின் மனஉறுதியைக் கண்டு மன்னன் திகைத்தான்.

அவள் எடுத்த முடிவை விட்டுவிடாமல் பிடிவாதமாகச் செயல்படுத்துவாள் என்று தந்தைக்குத் தெரியும். ஆகவே, இந்த விஷயத்தில் சிறிது விட்டுப் பிடிக்கவேண்டும் என்று உணர்ந்தான் அவன்:

''தேவி! என்னை மன்னித்துக்கொள்ளம்மா!... என்னென்னவோ பேசி உன் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேன்... உனக்கு நல்லது என்று நான் நினைத்ததைச் சொன்னேன்; உன்னுடைய நன்மையைத் தவிர இந்தக் கிழவனுக்கு வேறு என்ன இருக்கிறது?... நான் சொன்னதையெல்லாம் தனியாக இருந்து சிந்தித்துப்பார்! நீ சிந்தனைத் திறனுள்ள புத்திசாலி என்று எனக்குத் தெரியும். நான் சொல்வது சரி என்ற முடிவுக்கு நீ வந்தால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்; நான் சொல்வதெல்லாம் தவறு என்ற முடிவுக்கு நீ வந்தால், நான் வருத்தப்படப் போவதில்லை...'' என்று குரல் கம்மப் பேசிய தந்தை, கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தான்.

தந்தை சென்ற பிறகு, அடுத்து என்ன செய்வது என்று தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தாள் சிந்தாதேவி.

இருங்கோவால் இப்போது இரட்டை ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கம்— தேவியைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டு, அதற்காகச் சேரனை நெருக்கிக் கொண்டிருக்கிறான். இன்னொரு பக்கம்— குமரனையே போர்க்களத்தில் பலியிடுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறான்.

இரண்டிலிருந்தும் ஒரே சமயத்தில் தப்புவதற்கு ஒருவழி தோன்றியது; முன்னாலேயே தான் முடிவு செய்தபடி இளவரசிப் பட்டத்தை உதறி எறிந்துவிட்டு, ஒரு சாதாரணப் பெண்ணாக மாறி, குமரனை மணந்து கொண்டு, அரசியலுக்கும் அரண்மனைக்கும் ஒரேயடியாய்த் தலைமுழுகிவிட வேண்டியதுதான்; கழார்த் தலையார்போல், தானும் அரசியல் துறவுபூண வேண்டும் என்று அவரிடமே பலமுறை கூறியிருக்கிறாள்; 'தேவி! அவசரப்படாதே. எதற்கும் ஒருநாள் வரும்; அதுவரை பொறுத்திரு.... ஒருவேளை அதற்குள் உன் தந்தையே



இருந்திவிடலாம்' என்று கழார்த்தலையார் தேவியைத் தடுத்துவைத்திருந்தார். இப்போது, அந்த உரிய காலம் வந்துவிட்டது; தந்தை எப்போதும் இருந்தப்போவ தில்லை. அவர் உடலில் ஓடும் போர்வெறி ரத்தம் மாறவே போவதில்லை...

சிந்தித்தபடியே கடற்கரைக்குப் புறப்பட்டாள். வழக்கமாகக் குமரனைச் சந்தித்துப் பேசும் இடத்தில் வந்து அமர்ந்தாள் அவள்.

மேற்கு வானத்தில், பெண்களின் நெற்றியைப்போல் பிறைநிலா தோன்றி ஊர்ந்து கொண்டிருந்தது. சேர்ந் திருக்கும் காதலர்களுக்கு இன்பத்தையும் பிரிந்திருப்பவர் களுக்குத் துன்பத்தையும் வாரி வழங்கியபடி ஓடிக்கொண் டிருந்தது தென்றல். கடற்கரையில் ஈரமணலில் [1] கூடல் இழைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி.

தொடங்கிய வட்டம் முழுதாக அமையாமல், பிரிந்தே போய்க்கொண்டிருப்பதைக் கண்டு பரபரப்புடன், மேலும் மேலும் விரலால் கூடல் இளைத்துக் கொண்டிருக்கும் போது, பின்னால் வந்து நின்றான் குமரன்:

''என்ன, இளவரசியார் எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டமிட்டு இப்படிக் கூடல் இழைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே எதிரே வந்து உட்கார்ந்தான் அவன்.

---

1. கண்ணை மூடிக்கொண்டு, மணலிலே விரலால் வட்டம் போட ஆரம்பித்து, ஆரம்பித்த இடத் திலேயே வந்து சேர்ந்து முழுவட்டம் அமைந்து விட்டால், தாங்கள் நினைத்தது நடக்கும் என்ற நம்பிக்கை பழங்காலப் பெண்களுக்கு உண்டு— 'கூடல் இழைத்தல்' என்னும் இப்பழக்கம் சீவக சிந்தாமணி போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

''பல தடவை வட்டம் போட்டுப் பார்த்து விட்டேன். முனை இரண்டும் ஒன்று சேரவே மாட்டேன் என்கிறது!'' என்று ஆற்றாமையோடு சிணுங்கினாள் தேவி. சிறு குழந்தைக்குரிய சிடுசிடுப்பும் கோபமும் அந்த நிலவு முகத்திலே படிந்து, முற்றிலும் புதிய அழகுடன் மிளிரும் காதலியைப் பார்த்து ரசித்தான் குமரன்.

''அதனாலே, நீங்கள் நினைத்திருக்கிற காரியத்துக்குப் பல தடைகள் ஏற்பட்டுக் கடைசியில்தான் வெற்றி கிடைக்கும் என்று அர்த்தம். அவ்வளவுதானே?'' என்று ஆறுதல் சொல்லித் தேற்றினான் அவன்.

''நம் காதலுக்குத் தடையாக இப்போது யார் வந்திருக்கிறார்கள், தெரியுமா?... இருங்கோ— அவன் என்னைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறானாம்...'' என்று கடுகடுப்பாகச் சொன்னாள் தேவி.

''அப்படியா? அவனுக்கு அநியாயமான ஆசைகளாகவே வரும்போலிருக்கிறது!... முதலில் சோழ சிம்மாசனத்தின் மீது ஆசை; இப்போது சேர இளவரசியின் மீது ஆசை! சோழ மன்னனுடன் கொண்டிருக்கும் பகையோடு, உன் வாழ்க்கையிலும் குறுக்கிடுவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை...''

''என் வாழ்க்கை மட்டுமல்ல; உங்கள் உயிரோடும் விளையாட நினைக்கிறான் அவன்.''

''என் உயிரோடேயா?'' என்று சற்று திகைத்தான் குமரன்.

''ஆம்... உங்களைக் கரிகாலன் என்று தவறாகச் சந்தேகித்து ஏமாந்தார்கள் அல்லவா, அந்த ஏமாற்றத்தையே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளப் போகிறானாம்...''

''எப்படி?''



''உங்களையே, கரிகாலர் என்று உலகத்துக்குக் காட்டி ஏமாற்றப் போகிறானாம். இப்போது கரிகால் சோழர் புகாரில் இல்லாமல், வேறு எங்கோ சென்றிருக்கிறாராம்; அதனால் உடனே சோழநாட்டின் மீது படையெடுத்து—'' என்று அவள் சொன்னதும் குமரன் திடுக்கிட்டான்:

''என்ன, உடனேயா?''

''ஆம்... இன்னும் ஒரு வாரத்திற்குள்ளே சேர நாட்டுப் படைகள், சோழ நாட்டை நோக்கிப் புறப்படப் போகின்றன. சோழநாட்டிலே போர் தொடங்கியதும் உங்களை அங்கே கொண்டு போய், போர்க்களத்திலே கொன்று போட்டுவிட்டால், சோழ நாட்டுப் படையும் மக்களும் 'கரிகாலர் இறந்துவிட்டார்' என்று நம்பிக் குழம்பிப் போய் சரணடைந்து விடுவார்கள்... புகாரை எளிதாகக் கைப்பற்றிச் சிம்மாசனத்தில் அமர்ந்து விடலாம் என்பது இருங்கோவின் திட்டம்...'' என்று தேவி விளக்கியதும், முதலில் திகைப்பு வர, அதைச் சமாளித்தபடி, கலகல என்று சிரித்தான் குமரன்:

''மிக அருமையான திட்டம்!... கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது என்று சொல்வார்களே. அதைவிடப் புத்திசாலித்தனமான திட்டம்!...''

''ஆகவே உங்களைச் சீக்கிரமே பிடித்துச் சிறையில் அடைத்து வைக்கப் போகிறார்கள். அதற்குள் நாம் இந்த அரசியல் சகதியிலிருந்து தப்பி விடுவோம். அரசியல், அரண்மனை, போர் முதலியவற்றிலிருந்து வெகுதூரம் விலகிப்போய் விடுவோம்... நான் என் தந்தையிடம் முடிவாகச் சொல்லிவிட்டேன்: 'நான் இனிமேல் இந்த நாட்டு இளவரசியும் இல்லை; நான் எந்த அரசனையும் மணந்து கொள்ளப் போவதும் இல்லை' என்று சபதம் செய்துவிட்டு வந்துவிட்டேன்...'' என்றதும் குமரன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்:

''சபதமா?... என்ன சபதம்?... ஏன் இந்த மாதிரிச் சபதம்?'' என்று படபடத்தான் அவன்.

''நீங்கள் ஏன் இதைக் கேட்டு இப்படிப் பதறுகிறீர்கள்? இது இன்றைய முடிவு அல்ல; நான் எப்போதோ எடுத்து விட்ட முடிவைத்தான் இப்போது சொல்கிறேன். 'நான் எந்த இளவரசனையும் அல்லது அரசனையும் மணந்து கொள்ளப் போவதில்லை. உங்களைப் போன்ற ஒரு சாதாரணக் குடிமகனைத்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று முன்னாலேயே தீர்மானித்திருந்தேன்...''

அவனுடைய உறுதியான பேச்சைக் கேட்டுத் திக்பிரமையடைந்தவனாய் உட்கார்ந்திருந்தான் குமரன். அவனுடைய முகத்திலே நெளிந்த பரபரப்பையும் கவலைக் கோடுகளையும் கவனித்த தேவி, அவனைக் கூர்ந்து பார்த்தபடி, அவனது உள்ளத்தின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முயன்றாள்.

'இனிச் சிந்தித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை; உண்மையைத் தெரிவிக்க வேண்டிய அவசியமும் அவசரமும் இப்பொழுது ஏற்பட்டு விட்டது' என்பதை உணர்ந்தான் குமரன்.

''தேவி!'' என்று அவன் ஆழ்ந்த குரலில் தொடங்கியதுமே, சட்டென்று நிமிர்ந்தாள் சிந்தாதேவி.

இதுவரை அவன் அவளை இப்படி பெயர் சொல்லி அழைத்ததே இல்லை; 'இளவரசி' என்று மரியாதைப் பண்மையோடுதான் பேசுவான்:

''தேவி! என்னை மன்னித்துக்கொள்... இனியும் தொடர்ந்து உன்னை ஏமாற்றிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. உன்னிடம் உண்மையைத் தெரிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது... நான் கரிகாலன் என்று சந்தேகப்பட்டார்களே, அது சந்தேகம் அல்ல; உண்மை



தான்!'' என்று அழுத்தமாகச் சொன்ன குமரனைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள் தேவி:

''என்ன சொல்கிறீர்கள்?''

''உண்மையைச் சொல்கிறேன், தேவி! நான்தான் உண்மையிலே கரிகாற்சோழன்; உங்கள் நாட்டுக்குள் வந்து, படையைப் பற்றியும் போர்க் கருவிகளைப்பற்றியும் ஒற்றறியத்தான் இப்படிச் சாதாரணக் குடிமகனாகத் தமிழ் படிக்க வந்ததுபோல் வந்தேன்...'' என்று குமரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தேவியின் முகம் வெளுத்து, உடலெங்கும் துடிப்புப் பரவ, கண்கள் சிவந்து இதழ்கள் நடுங்கின.

குமரனைச் சந்தித்தது முதல், அவனுடைய பேச்சு, நடத்தை, படைக்கருவிகளின் மேல் காட்டிய ஆர்வம் எல்லாம், அவளது நினைவுத் திரையில் நிழல் சித்திரங்களாக ஓடி மறைந்தன...

''தேவி! என்னைத் தவறாக நினைக்காமல், என் நிலையை நீ புரிந்து கொள்ள வேண்டும்... நானாக, உங்கள் நாட்டின் மேல் படையெடுக்கப் போவதில்லை; நானாக, உங்கள் நாட்டின் ஒரு புழுவுக்குக் கூடக் கெடுதல் செய்யமாட்டேன்; உங்கள் மண்ணில் ஒரு புல்லைக் கூட நான் அழிக்க விரும்பவில்லை. ஆனால் என் மேல் ஒரு போர் திணிக்கப்படுகிறது என்று உனக்கே நன்றாகத் தெரியும். நான் ஆக்ரமிப்புப் போர் நடத்தப் போவதில்லை; தற்காப்புப் போர்தான் செய்யப் போகிறேன்... உனக்குப் போர் என்பதே பிடிக்காது என்று எனக்குத் தெரியும். மக்களுக்கு அமைதியான வாழ்க்கை அளிப்பதே ஒரு மன்னனின் கடமை என்று நீ நினைப்பதும் எனக்குத் தெரியும்... நீ நினைப்பது போலவே, ஒரு லட்சிய அரசனாக என்னால் வாழ்ந்து காட்ட முடியும்; மக்களுடைய நல்வாழ்வுக்காகவே வாழும் மன்னனாக நான் மாற முடியும்; போரே இல்லாத ஒரு அமைதியான

நாட்டை உருவாக்கி, அதற்கு நான் அரசனாகவும் நீ அரசியாகவும் விளங்கும் நிலையை ஏற்படுத்த முடியும்—'' என்று உணர்ச்சிபூர்வமாக அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போது, தேவி குறுகிட்டாள்:

''இல்லை... இல்லை... அரசன் யாரையுமே நான் மணப்பதில்லை என்று சபதம் செய்திருக்கிறேன்...'' என்று குமுறினாள் அவள்.

''தேவி! உன் சபதத்தின் அர்த்தம் என்ன? சபதத்தின் வார்த்தைகளை மட்டும் பார்க்காதே!... ஒரு வார்த்தைக்கு அர்த்தம், அதன் எழுத்திலே இல்லை; கருத்தில்தான் இருக்கிறது... உனக்குப் போர் வெறிபிடித்த அரசர்களைத் தான் பிடிக்காது; சுயநலம் கருதும் மன்னர்களைத்தான் நீ வெறுக்கிறாய்!... நீ நினைக்கிறபடியே ஓர் லட்சிய அரசன் இருந்தால், அவனை மணந்து கொள்வதில் என்ன தவறு?''

அவன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவளுடைய சிந்தனை வேறு திசையில் திரும்பியது: அவளையும் அவளுடைய காதலையும் பயன்படுத்திக் கொண்டு, அவளது நாட்டின் படை ரகசியங்களையெல்லாம் தெரிந்து கொண்டு விட்டானே, கரிகாலன்?...

''நான் இப்படி ஏமாறுவேன் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை... என் விரலைக் கொண்டே என் கண்ணைக் குத்திவிட்டீர்களே?... இந்த நாட்டு இளவரசியின் பேதைத்தனத்தையும் பலவீனத்தையும் பயன்படுத்திக் கொண்டு, சேர நாட்டின் படை ரகசியங்களை அறிந்து கொண்டதன் மூலம், என்னை நாட்டுத் துரோகியாக்கி விட்டீர்களே?'' என்ற தேவியின் நீள் விழிகளில் நீர் திரண்டது.

''அப்படியில்லை, தேவி! பகைவர் நாட்டில் ஒற்றறிவது என்பது அதர்மம் அல்ல; நான் ஒற்றன் என்று தெரிந்து நீ உதவினால்தான் துரோகம்; உனக்கே தெரியாமல்



ஏமாறுவது துரோகம் அல்ல... உண்மையில், நீ இல்லா விட்டால், இன்னொருவரைப் பயன்படுத்திக்கொண்டு, ஒற்றறிந்திருப்பேன்... பகைவர் நாட்டுக்குள் நுழைந்து, உயிரைப் பற்றியும் கவலைப்படாமல், இங்கே நான் ஒற்றறிய வந்ததற்குக் காரணம்— என் நாட்டுச் சிம்மாசனத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கடமையுணர்வு மட்டுமல்ல; உன்னை என் இதய ஆசனத்தில் அமர்த்திக் கொள்ள வேண்டும் என்ற காதல் உணர்வும் காரணம்தான்!...''

''இனியும் காதலைப் பற்றி உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' என்ற தேவியின் குரல் தழுதழுத்து உடைந்து அழுதது.

''உறுதியாக நம்புகிறேன், தேவி!... உன்மேல் கொண்ட காதலுக்காக, என் சோழநாட்டையும் அரசுரிமையையும் தூக்கியெறிந்துவிட்டு, உன்னோடு ஒரு சாதாரணக் குடிமகனாக என்னால் மாறிவிட முடியும்; ஆனால், உன்னைச் சந்திப்பதற்கு முன்னாலே, என்னைப் பெற்று வளர்த்த தாயின் சபதத்தையும், என்னைப் பார்க்காமலே மறைந்துவிட்ட தந்தையின் கனவையும் நிறைவேற்றியாக வேண்டிய தார்மீகக் கடமை, என் காதலுள்ளத்தைக் கட்டுப்படுத்துகிறது, தேவி!... ஆனால் அதே சமயம், கடமைக்காக நான் காதலைத் தியாகம் செய்யப் போவதுமில்லை... என் தாயின் சபதத்தை நிறைவேற்றி, ஒரு வலுவான பேரரசை நிலைநிறுத்தி விட்டால், என் காதலியின் லட்சியத்தையும் நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறேன்... போர் இல்லாத ஒரு அமைதி நிலையை உருவாக்குவதற்கு, ஒரு வலுவான அரசன் இருக்க வேண்டும்; படை பலம் உள்ளவன்தான், சமாதானத்தைப் பற்றிப் பேசமுடியும். அப்போதுதான் சமாதானப் பேச்சுக்கே மதிப்பு ஏற்படும்... சமாதானம் பற்றி சாம்ராட் அசோகன்தான் பேசவேண்டும்; கலிங்கநாட்டரசன் பேசினால் கேலலம்— இல்லையா?...

சமாதானத்தை நிலைநாட்டவே, போர் தேவைப் படுவதுண்டு— இது ஒரு முரண் போல் தோன்றும்; ஆனால் அது தர்க்கரீதியான தத்துவம்!...'' என்று உருக்கமாகக் காதலியிடம் மனம் கசியப் பேசினான் குமரன்.

ஆனால் சிந்தாதேவி அவனுடைய பேச்சாலே, மாறுதலோ, சலனமோ அடையாமல், மௌனமாயிருந்த தைப் பார்த்து, அவனுக்குத் திகைப்பாயிருந்தது.

திடீரென்று வெடித்த உண்மை, அவளை எப்படித் திடுக்கிட வைத்திருக்கும் என்பது அவனுக்குப் புரிந்தது:

அரச வாழ்வையே துறக்கத் தீர்மானித்த அவள், காதலனாகத் தேர்ந்தெடுத்தது ஓர் அரசனை— அதுவும் தன் தந்தைக்குப் பகைவனான அரசனை— என்ற கசப்பான உண்மையை அவளது மென்மையான உள்ளம் எவ்வாறு தாங்கப் போகிறது என நினைத்துக் கவலைப்பட்டான்.

இந்தப் பிரச்னையில் தேவி என்ன முடிவெடுப்பாளோ என்ற ஆர்வத்துடிப்புடன், நெஞ்சம் நடுங்க, அவள் வாயையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் அவன்...

## 29

சிந்தாதேவி குழம்பிப் போய் உட்கார்ந்திருந்தாள். அவளது கைவிரல்கள் ஈரமணலில் வளைந்து வளைந்து ஏதோ கிறுக்கிக் கொண்டிருக்க, மனமெல்லாம் சிந்தனை யலைகளால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.



''தேவி! சீக்கிரம் ஒரு முடிவுக்கு வா... நான் உடனே என் நாட்டுக்குப் போக வேண்டும். என் நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பாற்றுவது எவ்வளவு முக்கியமோ, அதே மாதிரி என் காதலியையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவது முக்கியம்... உன்னை என்னுடன் சோழ நாட்டுக்கு அழைத்துப் போகிறேன்— என் காதலியாகக் கூட அல்ல; சேரநாட்டு இளவரசியாகவே அழைத்துச் செல்கிறேன். உன்னுடைய மனமாற்றத்துக்காக, எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருக்கிறேன். நீ எப்பொழுது விரும்புகிறாயோ, அப்போது நம் காதல், குடும்பமாக மாறட்டும்...'' என்றான் குமரன்.

சிந்தாதேவி மென்மையாகச் சிரித்தாள்:

''நீங்கள் எவ்வளவு இனிய கனவுகளைக் காண்கிறீர்கள்!... போர் என்ற காட்டுத் தீ, குடும்ப மலர்களை மட்டுமல்ல, காதல் அரும்புகளையும் கருக்கி விடும், தெரியுமா?... இப்பொழுது, இந்தச் சூழ்நிலையில், முடிவு எடுப்பது, என் கையிலுமில்லை; உங்கள் கையிலுமில்லை... போர் என்பது இரு பக்கமும் கூர் உள்ளதில்லையா? எந்தப் பக்கத்தினாலும் அது தீங்கு செய்யலாம்...''

''இல்லை, தேவி! நான் ஈடுபடப் போவது அறப் போர்; அறம் எப்படியும் வெல்லத்தான் வேண்டும். நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது...''

''நம்பிக்கை, நமக்குப் பலம் அளிக்கலாம்; ஆனால் எதிரிக்குப் பலவீனத்தை ஏற்படுத்துமா?... தயவு செய்து நீங்கள் உடனே உங்கள் நாட்டுக்குப் புறப்படுங்கள். நீங்கள் இங்கிருக்கும் ஒவ்வொரு நொடியும் ஆபத்து காத்திருக்கிறது. எந்தச் சமயத்திலும் உங்களைப் பிடித்துச் செல்ல வீரர்கள் வரலாம். ஆகையால் நீங்கள் உடனே இங்கிருந்து புறப்படுங்கள்...''

''சரி... நம் வாழ்க்கையைப் பற்றிய உன் முடிவு என்ன?''

''என் நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கப் போகிற போர், ஒரு முடிவுக்கு வரட்டும்; பிறகு என்னுடைய முடிவைச் சொல்கிறேன்... நீங்கள் புறப்படுங் கள்...'' என்று அமைதியாகவும் அதே சமயம் அழுத்தமாக அவனிடம் வலியுறுத்தினாள் சிந்தாதேவி.

இளவரசியிடமிருந்து உடனடியாக எந்த முடிவையும் பெற முடியாது என்பதைப் புரிந்து கொண்டான் குமரன். இந்தக் காதல் விவகாரம் மாதிரியே, தன் நாட்டின்மேல் நடைபெறப் போகிற படையெடுப்புப் பிரச்னையும் இப்போது அவன் இதயத்திற்குள் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டது...

''தேவி! உன் கட்டளைப்படியே புறப்படுகிறேன்...'' என்று எழுந்த குமரன், அவள் முகத்தையே நீண்ட நேரம் பார்த்தவாறு நின்றான். ஏழேழ் பிறவிகளுக்கும் தொடர்ந்து பிரியாமல் பழகிய ஒருத்தியை விட்டுப் பிரிவதுபோல், அவனுடைய நெஞ்சம் கனத்து நொந்தது. கண்களிலிருந்து நீர் கசிய, அவளுடைய ஒளி வீசும் விழிகளைச் சந்தித்து மௌனமாகப் பார்த்தவாறு இருந்தான்.

தேவியின் இதயம் ஏனோ திடீரென்று படபடத்துத் துடிக்கவும் அவள் நிமிர்ந்து, தன் அகன்ற பெரிய நீண்ட விழிகளில் அவனுடைய உருவத்தை அள்ளி நிரப்பிக் கொள்வதுபோல், தீர்க்கமாக நோக்கினாள்.

''நண்பர்களாகச் சந்தித்தோம்; இப்பொழுது காதலர் களாகப் பிரிகிறோம். இனி மீண்டும் சந்திக்கும் விதி யிருந்தால்—'' என்று தேவி சொன்னதும் குமரன் பதற்றத்துடன் கையை நீட்டி அவளது வாயை மூடினான்:

''தேவி! ஏன் அப்படி அமங்கலமாகப் பேசுகிறாய்?... நாம் நிச்சயம் மீண்டும் காதலர்களாகச் சந்திப்போம்...'' என்று குரல் தழதழக்கச் சொன்னான் அவன்:



''தேவி! தீயிலே சுடச்சுட, பொன் தூய்மையடைந்து ஒளிவீசுவதுபோல, உண்மையான காதலும் தடைகளால் சோதிக்கப்படும்போது, மேலும் இறுகி நிலைபெறுவது வழக்கம்...'' என்று உறுதிப்படுத்தினான் குமரன்.

''தடைகளைக் கடந்து வெற்றி பெறும் காதலைவிட, தடைகளால் அழிந்து தோல்வியடையும் காதல்தான், இலக்கியமாக, வரலாறாக, நிலைத்த புகழ் பெறுகிறது— இல்லையா?'' என்ற தேவியின் கலங்கிய கண்களைக் கண்டு, குமரன் என்ன பேசுவதென்று புரியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

விழிகளிலிருந்து கசிந்து கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தேவி ''சரி, நேரமா கிறது... புறப்படுங்கள்...'' என்று அவசரப்படுத்தினாள்.

அந்தச் சூழ்நிலையில் உணர்ச்சிகள் கொந்தளிக்கும் உள்ளங்களின் எண்ணங்களுக்குச் சொல்லுருவம் கொடுத்துக் கொண்டிருந்தால், அந்தப் பேச்சு முடிவடைய வெகு நேரமாகிவிடும் என்பதை உணர்ந்த குமரன், எழுந்தான்:

''தேவி! நான் போய் வருகிறேன். இங்கே உடலளவில் நீ என்னைப் பிரிந்திருக்கலாம்; ஆனால் ஆத்மார்த்தமாக உன்னை என்னுடனேயே கூட்டிச் செல்கிறேன்...'' என்று குரல் குழைய, நெஞ்சம் கசிந்தழுக, தளர்வாக நகர்ந்து புறப்பட்டான் குமரன்.

அவன் நகர்ந்து நகர்ந்து, தன் கருவிழியின் பார்வை எல்லையைத் தாண்டி, ஒரு புள்ளியாக மாறுவதுவரை, அவன் உருவத்தையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள் சிந்தாதேவி.

அவளுடைய உள்ளங்களின் அலைகளுக்குத் தோற்றோடுவது போல், எதிரே நீலக்கடலின் அலைகள் சுருண்டு விழுந்து பின்வாங்கிக் கொண்டிருந்தன. கடல்

பரப்புக்கு மேலே பறந்து சென்ற ஒரு பறவை வழிதடுமாறிப் போய், கரையோரத்தில் தாழப்பறந்தபடியே, கூட்டைத் தேடிக் கொண்டிருந்ததை அவள் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால், அந்தப் பறவையின் சோகத்தில் தனதையும் ஐக்கியப்படுத்திக்கொண்டு, நெடுமூச்செறிந்து தேற்றிக்கொண்டிருப்பாளோ, என்னவோ?

**கொ**டுங்கோளூரை நோக்கிக் குமரன் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் எவ்வளவு அவசரமாகச் சேர நாட்டைவிட்டு வெளியேற விரும்புகிறான் என்பதைப் புரிந்துகொண்டது போல், அவனுடைய குதிரை விரைவாகத் தாவிச்சென்றது.

குமரன் சேரநாட்டுக்கு வந்த இரண்டு காரியங்களுமே வெற்றிகரமாக முடிந்துவிட்டாலும், இளவரசி விஷயத்தில் தான் அவனுக்கு அச்சமும் திகைப்பும் இருந்தது. ஒரு சாதாரண ஆளாகவே இருந்து அவளது காதலைப் பெற்றுவிட்ட சாதனையில் கொண்டிருந்த மகிழ்ச்சியை, அவளுடைய பிந்திய முடிவு தகர்த்துவிட்டது. எந்த அரசனையுமே திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று அவள் கொண்டிருந்த சபதம், எந்த முடிவையுமே பிடிவாதமாக நடைமுறைப்படுத்தும் அவளது உறுதி முதலியவை அவனுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது; என்றாலும் அவளுடைய சபதத்தின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அவள் எதிர்பார்க்கும் ஓர் லட்சிய மன்னனாக மாறி, அவளுடைய சபதத்தைத் திருத்திவிடலாம் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

அழகும் அறிவும் நிறைந்த சிந்தாதேவியின் காதலைப் பெறுவதற்காக, அவன் ஒரு சாம்ராஜ்யத்தையே இழக்கத் தயார்தான்; ஆனால் அவனுடைய தந்தையின் லட்சியத்தையும் தாயின் சபதத்தையும் மாமனின் கனவை



யும் நிறைவேற்ற வேண்டிய தார்மீக நிர்ப்பந்தத்தை அந்தக் காதலனால் மீற முடியவில்லை...

போரிலே வெற்றியைப் பற்றிச் சிந்தாதேவிக்கு இருந்த சந்தேகம், குமரனுக்கு இல்லவேயில்லை. சேரநாட்டுப் படைகள், கருவிகள், போர் முறைகள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டிருந்ததால், அவற்றையும் பாண்டிய நாட்டுப் படையையும் வெல்லக்கூடிய வலிமையும் திறமையும் தனக்கு இருப்பதை அவன் கணக்கிட்டிருந்தான். போரிலே வெற்றியை அடையப்போகும் நேரத்தில், போர்வெப்பத்தில் அந்த அழகுமலர் கருகிவிடாமல் காப்பாற்றுவதில் தன் கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

குதிரை கொடுங்கோளூருக்குள் நுழைந்தது. மாலை நேரத்துச் சந்தடி அடங்கி, முன்னிரவு நேரத்தில் நடமாடிக் கொண்டிருந்த சிலரும், குமரனைக் கவனிக்கவில்லை.

தாமக்கண்ணியை நினைத்தபோதே அவனுடைய உள்ளம் கனத்து நைந்தது. ஒருதலைக் காதலால் ஏமாந்து போன அந்தக் கலையரசி, அவனுக்காக உயிரையே தியாகம் செய்ய முன்வந்து, உயிருக்குச் சமமான கலைச் செல்வத்தைப் பறிகொடுத்து விட்டாளே என்று மனங் குமைந்தான்.

வீட்டின் பின்புறத்தில் குதிரையை நிறுத்தினான்; முன்புபோல், சுதந்திரமாக அந்தச் சேரநாட்டுக்குள் அவன் நடமாட முடியுமா?

வீட்டுக்குள் நுழைந்ததுமே முன் ஜாக்கிரதையாகக் கதவைச் சாத்தி உள்ளே தாழிட்டான் குமரன்.

வீட்டிலே யாரும் இல்லை; கோயிலுக்குப் போயிருப்பார்கள் போலிருக்கிறது. உள் அறையில் தாமக்கண்ணி கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். பக்கத்திலே போய் அவளைப் பார்த்தான் அவன்.

காலிலே இப்போது ஒரு சிறு கட்டுப் போட்டிருந்தது. ஓர் அற்புத அழகுச் சிலை போல், அவள் உறங்கும்போது காட்சியளித்தாள். உறக்கத்திலும் அவள் எழில், உறங்காமல் விழித்துக் கொண்டிருந்தது. விரிந்த தாமரை இதழ்கள் மீண்டும் மூடிக்கொண்டது போல், விழி இதழ்கள் அழகாக மூடி இருந்தன. எதிர்பாராமல் தன் கணையால் அடிபட்ட மயிலை இரக்கத்துடன் பார்ப்பது போல், அவளைப் பார்த்துக் கண் கலங்கினான் அவன்.

துள்ளிக் குதித்தாடும் அழகுக் கால்கள் கட்டுப்பட்டுக் கிடக்கும் அவல நிலைமையைக் கண்டு, அவன் உள்ளம் நெருப்பில் விழுந்த புழுவாகத் துடிக்க, கண்களிலிருந்து கடகட என்று இறங்கிய கண்ணீர்த் துளிகள், அவளுடைய காலில் விழுந்தன. கண்ணீரின் ஸ்பரிசத்தால் உறக்கம் விழித்துக் கண் மலர்ந்த தாமக்கண்ணி, எதிரே நிற்கும் குமரனை வியப்புடன் பார்த்தாள்:

''நீங்களா?... வாருங்கள்... உட்காருங்கள்...'' என்று பரிவோடு வரவேற்றாள் அவள்.

அவளுடைய மாறாத பரிவும் குறையாத அன்பும் அவன் உள்ளத்தை வாளாக அறுத்துத் தண்டித்தன:

''கண்ணி! எனக்காக நீ ஏன் தியாகம் செய்ய நினைத்தாய்? உன் உருவமுள்ள கலைக் கோயிலின் வாசலின் கடைசிப் படியில் நிற்கக்கூடத் தகுதியற்றவன் நான்...'' என்று அழுதான் அவன்:

''கண்ணி! நீ ஆடி நடந்து வரும் அழகைக் கற்றுக் கொள்ள கோலமயில்கள் உன் பின்னால் வருமே? நீ ஓடியாடும் எழில் காண, கலைமான்கள் காத்து நிற்குமே? உன் சிங்காரச் சிற்றடிகள் தாளத்துடன் நடக்கும்போது பூமகளே ரசித்து மென்மையாய்த் தாங்குவாளே? அந்தக் கால்கள் இனி அழகு நடை போடுமா? உன் நடனத் திறனை வளர்த்து உலகமெல்லாம் உன் புகழ் பரப்பி, நடனக் கலையரசியாக முடி சூட்ட வேண்டும் என்று லட்சியம் கொண்டிருந்தாரே உன் தாத்தா, அவர் இனி உன் ஊனக்கால்களைப் பார்த்து எப்படித் துடிப்பார்?...''



குமரனுடைய புலம்பலைக் கண்டு கண்ணியின் உள்ளம் உருகியது; ஆனால் அப்போதும் சிரித்த முகத்துடன் இருந்தாள்:

'உங்கள் உயிரைக் காப்பாற்றிய மகிழ்ச்சியே எனக்குப் பெரிது; இந்த நடையும் நடனமும் போனதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஒரு பெண்ணுக்கு இவையெல்லாம் எதற்காக? ஊருக்கும் உலகத்துக்குமா இவற்றை அவள் கற்றுக் கொள்கிறாள்?—'' என்று, மேலே சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள் கண்ணி.

அவள் சொல்லாமல் நிறுத்திக் கொண்டது என்ன என்பது அவனுக்குப் புரிந்தது...

''வானத்திலே வலம் வந்த சந்திரனை, தாழ்ந்த குளத்து அல்லி காதலித்தது; ஆனால் சந்திரன், உயர்ந்த இடத்திலுள்ள தாரகையைத்தான் நெருங்கினான்... அதன் பிறகு அல்லிக்கு அழகு எதற்கு? உயிர்தான் எதற்கு?'' என்று ஆழ்ந்த பெருமூச்சுடன் அவள் சொன்ன உவமை, அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது; அவன் இளவரசியைக் காதலிப்பது இவளுக்கும் தெரிந்திருக்கிறது...

''இல்லை, கண்ணி! நீ நினைப்பது தவறு; உன்னை விட இளவரசி உயர்ந்தவள் என்பதற்காக அவளைக் காதலிக்கவில்லை. உண்மையில் உன்னைப் பார்ப்பதற்கு முன்பே அவளைப் பார்த்து நான் காதலித்தேன் ஆனால் அவளை முதலில் சந்தித்தபோது அவள் இளவரசி என்பது தெரியாமல்தான் அவளை விரும்பினேன். அவளுடைய காதலைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் இங்கே வந்தேன்... கண்ணி! இனியும் உன்னிடம் நான் நாடகமாட விரும்பவில்லை. நான் யார் என்பதை இளவரசிக்குச் சொல்லிவிட்டுத்தான் இங்கிருந்து வெளி

யறுகிறேன். நான் யார் என்று தெரிந்தால், நீ ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போவாய்!'' என்று சிரித்தான் குமரன்.

''இல்லை... நீங்கள் கரிகாலர் என்று முன்பே எனக்குத் தெரியும் என்பதைக் கேட்டால், நீங்கள்தான் ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போவீர்கள்!'' என்று சிரித்தாள் கண்ணி.

குமரன் திடுக்கிட்டுப் போனான்:

''கண்ணி! உனக்கு எப்படித் தெரியும்? எப்போது தெரியும்?''

''இரண்டு நாட்களுக்கு முன்புதான் தெரியும்!... நான் வஞ்சியிலே உங்கள் காதலைத் தெரிந்துகொண்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, இப்போது என் மகிழ்ச்சி அதிகமாகியிருக்கிறது. நான் ஆற்றங்கரையிலே செய்த தியாகத்தின் மதிப்பு, இப்போது பலமடங்கு அதிகமாகியிருக்கிறது... என் தோழி மிகவும் கொடுத்து வைத்தவள்; அவளை நீங்கள் மணந்துகொண்டு இல்லறம் நடத்துகின்ற இனிய காட்சியை நான் இப்போது நாள்தோறும் கற்பனையில் கண்டு மகிழ்கிறேன்...'' என்ற கண்ணியின் கண்கள் மகிழ்ச்சியில் சிரிப்பதைப் பார்த்துக் கண்கலங்கினான் குமரன்.

''கண்ணி! உன் உயர்ந்த உள்ளத்தை எப்படிப் பாராட்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை... என் வாழ்க்கை மட்டுமல்ல, உன் வாழ்க்கையும் எனக்கு முக்கியம்தான்... உன் ஒப்பற்ற திறனால் உலகெல்லாம் கலையரசியாகப் பவனி வரவேண்டிய உன்னைக் காலை ஒடித்து வீட்டுப் பறவையாக்கி விட்டேன். இனி உன்னை ஓர் இல்லத்தரசியாக்கிப் பார்த்து மகிழ வேண்டியது என் கடமை...'' என்று அவன் சொன்னதும் சட்டென்று கண்ணி குறுக்கிட்டாள்:

''வேண்டாம்... அந்த வீண் முயற்சியில் நீங்கள் இறங்கித் தோல்வியடைய வேண்டாம்... பெண்களை



மலருக்கு ஒப்பிடுகிறார்களே, அது அவர்களுடைய வெறும் அழகுக்காக மட்டும் அல்ல; அவர்களுடைய உள்ளத்திற்காகவும்தான். மலர் வாழ்க்கையில் ஒரு முறைதான் மலர்கிறது; அது மலர்ந்த சமயத்தில் வண்டு வராமல் போனால், வாடியமலர் மீண்டும் மலர்வதில்லை— பெண்களின் மனமும் அப்படித்தான். இனி என் மனதில் இன்னொரு உருவம் இடம்பெற முடியாது. என்ன காரணத்தாலோ, ஔவையார் துறவியாகவே வாழ்ந்தாரே, அவரைப்போல் நானும் இனி வாழ்க்கையைப் பொறுத்தவரை, துறவிதான். இனி என் வாழ்வின் துணை, இலக்கியம்தான்; குடும்பம், தமிழகம்தான்— இது உறுதி...'' என்று ஆவேசமாகக் கூறிய கண்ணியின் விழிகளில் ஒளிர்ந்த உறுதியைக் கண்டு பிரமித்து நின்றான் குமரன்; அந்த மெல்லிய உடலிலே எத்தனை உறுதியும் அடங்கிக் கிடக்கின்றது!

''கண்ணி! இப்படி ஒரு சோக முடிவுதான் உனக்கு ஏற்படவேண்டுமா?... மகிழ்ச்சியாக வாழவேண்டிய இளம் பருவத்திலே, துறவியாக வாழும் நிலையை ஏற்படுத்திய எனக்குக் கடவுள் தண்டனை கொடுப்பார், கண்ணி!''

''இல்லை... கடவுள் அருளால்தான் நான் இப்படிக் காலை இழந்து முடமாகியிருக்கிறேன்... உங்கள் மேல் ஏற்பட்ட காதலைத் துறந்தபோதே நான் என் வாழ்க்கையையும் துறக்க முடிவு செய்துவிட்டேன். ஒருவேளை நான் இந்த அழகோடும் இளமையோடும் நடனமாடிக்கொண்டிருந்தால், யாராவது இன்னொருவர் என்னை விரும்பி மணக்க நினைப்பார் என்பதால்தான், இறைவன் என்னிடமிருந்து கலையையும் காலையும் பறித்துக்கொண்டிருக்கிறான். நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்... இனி, கண்ணியை நீங்கள் ஒரு கலையரசியாகக் காண முடியாது; கவியரசியாகத்தான் பார்ப்பீர்கள்!'' என்று சலனமில்லாமல் தீர்மானமாகப்

பேசிய அந்த இளம் உள்ளத்தின் வைரத்தைக் கண்டு, பேச நா எழாமல் நின்றான் குமரன்.

''அரசே! இப்பொழுதே உங்களைப் பற்றிக் கவிதை பாட எனக்கு ஆசைதான்; ஆனால் இப்போது உங்களைப் பற்றிப் பாடினால் உங்கள் வீரத்தையும் காதலையும்தான் பாடமுடியும். ஓர் அரசருக்கு வீரமும் காதலும் மட்டும் சிறப்பு அல்ல; செங்கோல் செலுத்தும் அரசனாய், மக்கள் விரும்பும் மன்னனாய், புலவர்க்கு வழங்கும் புரவலனாய், கலைஞர்களுக்கு வாரிவழங்கும் காவலனாய் ஆனபிறகு, உங்களை நான் பாடுவேன்... சரி, நீங்கள் புறப்படுங்கள்... போர் என்பது எவ்வளவு கொடுமையானது என்று எனக்குத் தெரியும். என்னைப்போல் எத்தனையோ அப்பாவி மக்களின் குடும்பங்களில் அந்த இடி விழுந்திருக்கிறது. ஆனால் நீங்கள் போர்வெறியரல்ல என்பதும் எனக்குத் தெரியும். அழகையும் கலையையும் கவிதையையும் ரசிக்கின்ற ஒருவர், வெறியராயிருக்க முடியாது... ஆனால் போர் என்பது உங்கள் மேல் திணிக்கப்படும் போது, நீங்கள் பணிவது கோழைத்தனம் என்பதையும் நான் உணர்கிறேன்... அரசே! ஒரே ஒரு வேண்டுகோள்...'' என்று கண்ணி கேட்டதும் பதறினான் குமரன்:

''வேண்டுகோள் என்று சொல்லாதே! கட்டளை என்று சொல்!... கண்ணி! நான் மற்றவர்களுக்குக் கரிகாலனாக இருக்கலாம்; ஆனால் உன் முன்னாலே, உன் தியாக சந்நிதியிலே, நான் சாதாரண, குமரன்தான்!...''

''அரசே! உங்கள் போர் காரணமாக, இளவரசிக்கு எந்தத் தீங்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. அவள் அறிவுள்ளவள்தான்; என்றாலும் பெண்ணாகப் பிறந்துவிட்டதால், சிறிது உணர்ச்சிவசப்பட்டவள்! அவளை நீங்கள் எந்தச் சமயத்திலும் இழந்துவிடக் கூடாது— உண்மையில் இது என்னுடைய கட்டளைமாதிரிதான்! ஏனென்றால், நான் இப்போது வெறும் தாமக்கண்ணி



யாகப் பேசவில்லை. துறவி தாமக்கண்ணியாராகப் பேசுகிறேன். வயதிலே, அந்தஸ்திலே எப்படியிருந்தாலும், துறவி அரசனைவிட உயர்ந்தவர் அல்லவா?'' என்று சிரித்தாள் அவள். அவளுடைய நட்புணர்வைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தது அவனுக்கு.

''அரசே! அதோ, அந்த மாடப்பிறையில் இருக்கும் என் சலங்கைகளை எடுத்து வாருங்கள்...'' என்றாள் கண்ணி.

அவள் ஆடும்போது கலகல என்று சிரித்துக் குதிக்கும் சலங்கைகள் இப்போது அமைதியாக மாடப்பிறையில் கிடந்தன. அவற்றை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்தான்.

சலங்கைகளைத் தன் கையில் ஏந்திக் கொண்டு சில விநாடிகள் கண் கலங்க அவற்றை உற்று நோக்கினாள்:

''அரசே! இந்தச் சலங்கைகளை என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நடன மங்கை உங்களோடு சில நாட்கள் இனிமையாகப் பேசிப் பொழுது போக்கினாள் என்பதற்கு நினைவாக இவை உங்களிடம் இருக்கட்டும். எனக்குத்தான் உங்கள் அரண்மனையில் இடம் கிடைக்கவில்லை; என் சதங்கைகளுக்காவது அரண்மனை வாழ்வு கிடைக்கட்டும்!...''

''அப்படிச் சொல்லாதே, கண்ணி! இந்தச் சதங்கை இல்லாவிட்டாலும், என் நெஞ்சத்தில் உன் நினைவுகள் கலகல என்று ஒலித்துக் கொண்டேயிருக்கும்... உன் அன்பும் தியாகமும் என் வாழ்க்கையில் மறக்கக் கூடியவை அல்ல...''

''இந்த நிலையற்ற சதங்கையால் மட்டுமல்ல, என்றும் அழியாத இலக்கியத்தாலும் உங்களுடன் என் நினைவை நிச்சயம் பிணைத்துக் கொள்வேன். எதிர்காலத்தில் நீங்கள் புகழ் பெற்ற மன்னராகத் திகழும்போது, இந்தத்

துறவி முடத்தாமக் கண்ணியார் உங்கள் மேல் ஓர் இலக்கியம் பாடுவாள்; ஆனால் அதிலே ஒரு காதலியின் உணர்ச்சிகள் இருக்காது; ஒரு புலவரின் உணர்வுகள்தான் இருக்கும்!...''

வாழ்க்கையின் பவித்திரமான காதலை இழந்த பிறகும் இந்தப் பெண்ணால் எப்படி இவ்வளவு தெளிவாக, நிதானமாக இருக்க முடிகிறது என்பதை நினைத்து வியந்தான் அவன்.

''சரி... நீங்கள் புறப்படுங்கள்... போர் முடிந்து வெற்றி வீரராக, என் தோழியின் கணவராக மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்...'' என்றாள் தாமக்கண்ணி.

அந்தச் சமயம், வாசற்கதவை யாரோ படபட என்று தட்டும் சப்தம் கேட்டது. குமரன் திடுக்கிட்டு எழுந்தான்:

''கண்ணி! அரசாங்க வீரர்கள் என்னைக் கைது செய்ய வந்தாலும் வரலாம். நான் இப்படியே பின்புறமாகப் போய் விடுகிறேன்...'' என்று விடை பெற்றுக் கொண்டு வேகமாக வெளியேறினான் குமரன்.

வஞ்சியில் போர் ஏற்பாடுகள் மளமள என்று நடந்து கொண்டிருந்தன. படைப்பிரிவுகளை இறுதியாக்கி, படைக் கருவிகளை எடுத்துச் செல்லும் பண்டிகள் முதலியன அணியணியாக நிறுத்தப்பட்டன.

அரண்மனையில் பெருஞ்சேரலாதனும் அமைச்சரும் தீவிரமாக ஆலோசனை செய்து கொண்டிருந்தபோது, சிந்தாதேவி அங்கே வந்தாள். கடைசி முறையாக, தந்தையிடம் பேசிப் போரைத் தவிர்க்க முயற்சி செய்ய நினைத்தாள் அவள்:

''அப்பா! இந்தப் போர் அவசியம்தானா?... எத்தனையோ குடும்பங்களின் தலைவர்களை, இளைஞர்களை அழித்து, தாய்மார்களை, இளம் பெண்களையெல்லாம் விதவையாக்கும் இந்தக் கொடிய போர் தேவைதானா, அப்பா?...''



பெருஞ்சேரலாதன் திரும்பி அவளை ஆழமாகப் பார்த்தான். அவனுடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள் மகள்; 'நீதான் இளவரசிப் பட்டமே தேவையில்லை என்று துறக்கப்போவதாகச் சொன்னாயே, பிறகு ஏன் இப்படி அரசியல் விவகாரத்தில் தலையிடுகிறாய்?' என்பது போல் பார்க்கும் தந்தை முன்னால் அஞ்சாமல் நின்றாள் தேவி:

"அப்பா! இந்த நாட்டின் இளவரசியாக நின்று கொண்டு, இந்தக் கேள்வியை நான் கேட்கவில்லை; இந்த நாட்டின் ஒரு சாதாரணப் பெண்ணாகத்தான் கேட்கிறேன்... அப்பா! பெரியப்பாவைக் கொன்று விட்டான் ஒரு சோழன் என்பதற்காகச் சோழ நாட்டை அழிக்கப் போர் தொடுக்கிறீர்களே, இந்தப் போரிலே நான் உங்களையும் இழக்கநேரிட்டால்—''

இந்தக் கேள்வியை மகளிடமிருந்து தந்தை எதிர்பார்க்கவில்லை!... என்றாலும் அதனாலே உள்ளம் திடுக்கிட்டுவிடவில்லை சேரன்:

''மகளே! மானத்துக்காக உயிர்துறந்தான் உன் தந்தை என்று நினைத்து நீ பெருமைப்படலாம்...''

''உயர்ந்த லட்சியத்துக்காக, தன் நாட்டைக் காப்பதற்காக உயிர்துறந்தால் அதை நினைத்துப் பெருமைப்படலாம். ஆனால் பிறர் நாட்டை ஆக்கிரமிப்பதிலே உயிர் துறந்தால், அது பெருமைக்குரிய விஷயமா?... அப்பா! ஒரு தந்தை என்ற முறையில் பிரமாதமாகப் பேசிவிட்டீர்கள்; ஆனால் ஒரு மகள் ஸ்தானத்தில் இருந்து பாருங்கள்! தளபதி திரையன் இறந்ததும் மனைவி உத்திரைக்குப் பரிசு கொடுத்தீர்கள்; பொன் கொடுத்தீர்கள்; ஆனால் அவளுக்கு வாழ்வு கொடுக்கமுடிந்ததா?... உத்திரை மட்டுமா, அவர் போல்

எத்தனையோ பெண்கள், உங்களுக்காக வாழ்க்கையை இழந்து நிற்கிறார்கள்; அந்த அவலக்காட்சி, உங்கள் உள்ளத்தைச் சுடவில்லை... ஒருவேளை உங்கள் மகளே வாழ்வை இழந்தால்தான், அந்த அவலத்தை உணர்வீர்களோ, என்னவோ?'' என்று மகள் கேட்டபோது திணறிப் போய்விட்டான் சேரன்:

''தேவி! அப்படியே என் மகள் வாழ்க்கையை இழக்க நேரிட்டாலும், நான் என் உறுதியிலிருந்து பிறழ மாட்டேன்! உயிர், வாழ்க்கை என்று பார்க்கும்போது, எனக்கு நீயும் ஒன்றுதான்; மற்ற பெண்களும் ஒன்றுதான்... தேவி! நீ ஏதோ கரிகாலன் மிகவும் நல்லவன் என்று நினைத்துப் பேசுகிறாயே, அவன் எவ்வளவு பெரிய அயோக்கியன், தெரியுமா? நான் வலிய அவனோடு போர்தொடுக்கிறேன் என்று குறை சொல்கிறாயே, அவன் என் குடும்பத்திற்கு அவமானம் ஏற்படுத்த என்ன முயற்சி செய்தான், தெரியுமா?...'' நீ ஒருநாள் கொடும்பாளூரிலிருந்து வந்தபோது, திடீரென்று தாக்கி உன்னைத் தூக்கிச்செல்லத் திட்டமிட்டது யார், தெரியுமா?—கரிகாலன்தான்!...'' என்று சேரன் சொல்லிக்கொண்டிருக்கும் போது, அவசரமாக உள்ளே வந்தான் இருங்கோ. அவன் கூடவே ஒரு சேரவீரனும் வந்தான்.

''அரசே! குமரனைக் கூட்டிவர ஆட்களை அனுப்பினேன். ஆனால் அவனைக் கருங்குழலாதனார் வீட்டிலும் காணோம்; வஞ்சியில் வேறெங்கும் காணோம்...'' என்று படபடத்தான் இருங்கோ.

''அப்படியா? ஒருவேளை, கொடுங்கோளூருக்குப் போயிருந்தாலும் போயிருப்பான்...'' என்றான் சேரன்.

குமரனைப் பிடித்துக் கரிகாலனாக நடிக்கவைத்துக் கொல்லும் திட்டம், அமைச்சருக்குப் பிடிக்கவில்லை:

''அரசே! போர்க்களத்திலே குமரனைக் கொன்று போட்டு, இவன்தான் கரிகாலன் என்று சொன்னால், சேர



நாட்டுமக்கள் நம்பிவிடுவார்களா?... கரிகாலருக்கு ஒரு கால்தான் கறுப்பு; குமரனுக்கோ இரண்டு கால்களுமே கறுப்பாயிருக்கிறதே?'' என்று கேட்டார் அவர்.

இருங்கோ, கடகட என்று சிரித்தான்: ''அமைச்சரே! இந்தச் சாதாரண தந்திரம் கூடவா உங்களுக்குத் தெரியவில்லை? குமரனைப் போர்க்களத்துக்குக் கொண்டு போகும் முன்பு, அவனுடைய இடதுகாலில் ஒரு சிவந்த வண்ணத்தைப் பூசி, கறுப்பை மறைத்து விடுவோம்...'' என்று அமைச்சரைப் பார்த்து எகத்தாளமாகச் சிரித்த இருங்கோவைப் பார்த்து, தேவி மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில் சட்டென்று அவள் சிந்தனையில் ஒரு பொறி தட்டியது: 'ஒருவேளை அப்படியும் இருக்குமோ?' என்ற எண்ணம் எழும்பிய உடனே, அரண்மனையிலிருந்து குதிரையில் கிளம்பி, வேகமாகக் கொடுங்கோளூருக்கு வந்தாள். குமரன் நாமக்கண்ணியின் வீட்டுக்குப் போய்விட்டுத்தான் சேரநாட்டை விட்டு வெளியேறுவான் என்று அவளுக்குத் தெரியும்.

அவசரமாக, கண்ணியின் வீட்டுக்கதவைப் படபட என்று தட்டினாள் தேவி. சிறிதுநேரம் கழித்து, கதவைத் திறந்து நின்ற தோழியைப் பார்த்ததும், கட்டியணைத்துக் கொண்டாள் தேவி.

''கண்ணி! நன்றாயிருக்கிறாயா?... கால்வலி எப்படியிருக்கிறது?'' என்று பரிவோடு கேட்டு, தோழியின் காலை மென்மையாகக் கைகள் தடவிக்கொடுக்க, கண்கள் சுற்றுமுற்றும் சுழன்று தேடுவதைக் கண்ணி கவனிக்கத் தவறவில்லை:

''தேவி! என்ன திடீரென்று வந்திருக்கிறாய்? ஏதாவது அவசர வேலையா?'' என்று குறும்பாகச் சிரித்த தோழியின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க வெட்கமாயிருந்தது தேவிக்கு:

''ஒன்றுமில்லை... உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான்...''

''அதற்காக இந்த இருட்டு வேளையில் வர வேண்டுமா?...'' என்று மேலும் குறும்பாகச் சிரித்தாள் கண்ணி. அதற்கு மேலும், தன் ஆர்வத்தைத் தேவியால் கட்டுப்படுத்த முடியவில்லை:

''கண்ணி! குமரன் இங்கே வந்தாரா?'' என்று கேட்டு விட்டாள்.

''குமரனா? அவர், தான் கரிகாலன் என்று சொல்ல வில்லையா?''

''அப்படிச் சொல்வதில்தான் எனக்குச் சந்தேகம்...''

''ஏன் அந்தச் சந்தேகம்?''

''ஓர் அரசர், எதிரி நாட்டுக்கு ஒற்றறிய வருவாரா என்பது முதல் சந்தேகம்; இரண்டாவது சந்தேகம்—கரிகாலருக்கு ஒரு கால் மட்டும்தானே கறுப்பு; இவருக்கு இரண்டு கால்களும் கறுப்பாயிருக்கின்றனவே?... இதை அப்பொழுதே கேட்க மறந்துவிட்டேன். ஒருவேளை, என் தந்தை என்னை இருங்கோவுக்கு மணம் செய்துவைக்கத் தடையாயிருக்கும் காதலனைக் கொன்று விடுவார் என்ற பயத்தில் நாட்டை விட்டு ஓட, தான் கரிகாலன் என்று பொய்சொல்லியிருப்பரோ என்று நினைக்கிறேன்...''

''தேவி! உன் சந்தேகம் இரண்டுமே வீண்தான். அவருக்கு உண்மையில் ஒரு கால்தான் கறுப்பு. ஒருநாள் அவர் இங்கிருக்கும்போது, விடியும் முன்பு எழுந்து அவர், தன் அறைக்குள் ரகசியமாக ஏதோ ஒரு கறுப்புக் களிம்பை எடுத்து இடது காலில் பூசிக்கொள்வதை நான் கவனித்தேன். நன்றாக இருக்கும் இடது காலை ஏன் கறுப்பாக்கிக் கொள்கிறார் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை. அதை ஒரு பெரிய விஷயமாகவும் நான் நினைக்கவில்லை. அதன் மர்மம், பிறகு அரசர்வந்து அவரைக் கரிகாலன் என்று குற்றஞ்சாட்டியபோது, அவர் தப்பித்த போதுதான் விளங்கியது! அதனால் அப்போது என்னைத் தவிர, எல்லோரும் அவரை நம்பிவிட்டீர்கள்...'' என்று விளக்கினாள் கண்ணி.



''கண்ணி! ஒரு மன்னரே ஒற்றறிய வருவது ஆச்சரிய மில்லையா?''

''அது ஒன்றும் ஆச்சரியமில்லை, தேவி! காதல் இதைவிட ஆச்சரியமான காரியங்களையும் செய்யும். கரிகாலர் உன்னை முன்பேயே பார்த்திருக்கிறார்; உன் காதலைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே குமரனாக வந்தார்...'' என்றதும் திகைத்து நின்றாள் தேவி.

''தேவி! உன்மேல் கரிகாலர் எவ்வளவு காதல் கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிவேன். உனக்காக, தன் நாட்டை மட்டுமல்ல— உயிரையே தியாகம் செய்யவும் அவர் தயார்; ஆனால் அவருக்கு, பிறப்பிலேயே சில கடமைகள் ஏற்பட்டுள்ளன... நீ இளவரசி என்பதற்காக அவர் உன்னைக் காதலிக்கவில்லை. உன் அறிவையும் பண்பையும் கண்டுதான் காதலித்தார்; நீ வெறும் சபதத்திற்காக அந்த நல்ல மன்னரை இழந்து விடாதே!'' என்று குரல் தழதழக்கப் பேசினாள் கண்ணி.

தோழியின் பரிவான சொற்களின் பின்னே தொனிக்கும் அன்பைப் புரிந்துகொண்டாள் தேவி:

''கண்ணி! நடக்கப்போகும் போரிலே அவரை நான் இழந்துவிட்டால்—'' என்று அவள் கேட்டதும், கண்ணி திகைத்து ஊமையானாள்.

''கண்ணி! நானும் அவரை எவ்வளவு காதலிக்கிறேன் என்பதை உன்னிடம் இதுவரை சொல்லவில்லை! நான் போர்க்களத்துக்குப் போக முடிந்தால், என் உயிரைக் கொடுத்தும் அவரைக் காப்பாற்றுவேன்... ஆனால், இங்கிருந்தபடியே, அவரைக் காப்பாற்றமுடியுமா?'' என்ற

தேவியின் குரல் உடைந்து சிதறி விம்மல்களாய் வெடித்தன...

**சே**ர நாட்டு எல்லையைத் தாண்டிச் சோழ நாட்டுக்குள் புகுந்த கரிகாலன், வேகமாகப் புகாரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

இரவு முழுவதும் கண் விழித்து, ஒரே பயணமாகச் சேரநாட்டைத் தாண்டி விட்டான். அந்நாட்டு எல்லைக்குள் இருந்தால் எந்த வினாடியும் கைதாகலாம் என்ற அச்சத்தில்தான் அவ்வளவு வேகமாக வந்தான்.

காலை வெயிலில் பறவையினங்கள், இரவின் குளிரைக் கடந்த மகிழ்ச்சியில் கூவிப் பறந்து கொண்டிருந்தன. இரவில் உறங்கி ஓய்வெடுத்துக் கொண்ட மிருகங்கள், எழுந்து நிமிர்ந்து உடலை முறுக்கியவாறு, உணவு தேடப் புறப்பட்டன. காட்டின் சுகமான குளிர்காற்று, கரிகாலனின் உடலை இனிமையாகத் தொட்டுச் சென்றது.

சோழநாட்டு எல்லைக்குள் சிறிது தூரம் வந்ததும், கரிகாலனின் எதிரே ஒரு குதிரைவீரன், முகத்தில் தாடி மீசையுடன் வந்து கொண்டிருந்தான். அவனைத் தாண்டிக் கரிகாலன் சென்றதும், அவன் சட்டென்று திரும்பிவந்து, கரிகாலனின் இரண்டு கால்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

உடனே முகஞ்சிவக்க, வாளையுருவி, கரிகாலனைத் தாக்க ஆரம்பித்து விட்டான் அவன். அவன் வீராவேசமாக வாளைச் சுழற்றிய வேகம் கரிகாலனையே திகைக்க வைத்தது. இரவு முழுவதும் பயணத்தால் களைத்துச் சோர்ந்த கரிகாலனின் வீச்சுக்களை, நறுக் நறுக் என்று தடுத்து, உக்கிரமாக வாளை வீசித் தாக்கினான் அந்த வீரன்.

எதிரிநாட்டிலிருந்து தப்பிவந்து, கடைசியில் தன் நாட்டுக்குள்ளே எதிரி வீரனிடம் பிடிபடப் போகிறோமே என்று நினைத்துக் கலங்கினான் கரிகாலன்.

# 30

குமரன் எங்கே போயிருப்பான் என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான் இருங்கோ.

''கொடுங்கோளூரிலும் அவனைக் காணோம் என்று வந்துவிட்டார்கள் வீரர்கள். ஒரு வேளை நம் திட்டம் தெரிந்து தப்பி ஓடியிருப்பானோ?'' என்று சந்தேகப் பட்டான் அந்துவன்.

அப்போது பெருஞ்சேரலாதனும் சிந்தாதேவியும் அங்கே வந்தார்கள்.

''என்ன இருங்கோ! ஏன் கவலையாக உட்கார்ந்திருக் கிறீர்கள்?'' என்று கேட்டான் சேரன்.

''இந்தக் குமரனைப் பிடித்து வைத்து, சோழ நாட்டு மக்களை ஏமாற்றி விடலாம் என்று திட்டமிட் டிருந்தேன்—'' என்று இருங்கோ ஆரம்பித்ததும், சிந்தாதேவிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

''ஆகா! கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கின்ற திட்டங்கள் தீட்டுவதில் உங்களுக்கு இணையே யில்லை!...''

அவளுடைய கேலிச் சிரிப்பு, இருங்கோவுக்கு மட்டுமல்ல, சேரனுக்கே எரிச்சலாயிருந்தது:

''தேவி! நீ அறிவில் சிறந்தவளாயிருக்கலாம்; ஆனால் ராஜ தந்திரங்களைப் புரிந்துகொள்ளுமளவுக்கு உனக்கு அனுபவம் போதாது!''

''தந்திரங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்க லாம், அப்பா! ஆனால் ஆட்களையுமா புரிந்து கொள்ள முடியாது?'' என்று தொடர்ந்து சிரித்தாள் தேவி.

''என்ன சொல்கிறாய் நீ?'' என்று சிடுசிடுத்தான் தந்தை.

''அப்பா! நீங்கள் பூனையைப் பிடித்துப் புலிவேடம் போட நினைக்கவில்லை; நீங்கள் பூனையென்று நினைப்பதே புலியைத்தான்...''

எல்லோரும் திகைத்து அவளைப் பார்த்தபடி நின்றார்கள்.

''ஆம், அப்பா! குமரன் உண்மையில் கரிகாலன்தான். உங்கள் நாட்டில் ஒற்றறிவதற்காகக் கரிகாலன், குமரனாக இங்கே வந்திருந்தார். தன் இடது காலிலும் கறுப்பு வண்ணத்தைப் பூசி, நம் முகத்திலே கரியைப் பூசி விட்டார்!...''

''அப்படியா? இது உனக்கு முன்பே தெரியுமா?'' என்று குமுறினான் சேரன்.

''எனக்கும் கடைசியில்தான் தெரியும்,'' என்று நிதானமாகச் சொன்னாள் தேவி.

''தெரிந்த பிறகுமா அந்தப் பாவியை விட்டு விட்டாய்?'' என்று கர்ஜித்தான் மன்னன்.

''அவர் மட்டும்தான் பாவியா, அப்பா? போர் என்பதே பெரிய பாவம் என்று நினைக்கிறவள் நான். போர் தொடுக்கிறவரைவிட போரிலே ஒரு பகுதியான ஒற்றறிபவர் பெரிய பாவியா?... போர் செய்வது ஒரு நியாயம் என்றால், ஒற்றறிவதும் நியாயம்தானே?... ஏன், திருவள்ளுவரே ஒற்றறிவதன் அவசியத்தைப் பற்றி பாடியிருக்கிறாரே?''

''ஒற்றறியும்போது பிடிபட்டால் என்ன தண்டனை, தெரியுமா? மரண தண்டனை!...'' என்று உறுமிய சேரன் ''அந்த மரண தண்டனைக்குரியவனை ஒரு இளவரசி சும்மா விட்டுவிட்டாள் என்பது மகா அவமானம்!...



உன்னை என் மகள் என்று சொல்வதற்கே என் நா கூசுகிறது...'' என்று பொரிந்தான் தந்தை.

இதைக் கேட்டு, தேவி ஏதோ சூடாகப் பதில் சொல்ல வாயெடுக்க, அந்தச் சமயத்தில் அவளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தான் இருங்கோ:

''அரசே! அந்த அயோக்கியன் விஷயத்தில் இளவரசி என்ன செய்ய முடியும்? இவ்வளவு ஆட்சித் திறமையுள்ள வஞ்சியிலேயே, நம்மை ஏமாற்றிப் பிடிபடாமல் தப்பித்திருக்கிறான் என்றால், இளவரசி பிடிக்க நினைத்தாலும் முடியுமா?... அது கிடக்கட்டும். அரசே! நேற்று முளைத்த ஒரு சிறு பயல், அனுபவமும் ஆற்றலும் நிறைந்த உங்களையே ஏமாற்றி விட்ட விஷயம், உலகத்துக்குத் தெரிந்தால் சிரிப்பார்களே! நம் கோட்டைக்குள்ளேயே புகுந்து ஒற்றறிந்து நம்மை அவமானப்படுத்திய அவனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டாமா? சிங்கத்தின் குகைக்குள் புகுந்து தப்பிச் சென்ற அந்தக் குள்ளநரியைக் கொன்று கிழிக்க வேண்டாமா?... புறப்படுங்கள்!'' என்று சேரனுக்கு மான உணர்ச்சியையும் போர் வெறியையும் தூண்டிவிட்டான் இருங்கோ.

''ஆம்... என் நாட்டுக்குள்ளேயே புகுந்து என் ஆட்சியைக் கேவலப்படுத்திய அந்த நாயையும் அவன் நாட்டையும் சின்னாபின்னப் படுத்துவேன்... இன்றே படைகள் புறப்படட்டும்! தளபதியிடம் சொல்லி, படைகளை அணிவகுக்கச் சொல்லுங்கள்! வீரமுரசு ஒலிக்கட்டும்!... புரோகிதரை அழைத்து, புறப்பட நேரம் கணிக்கச் சொல்லுங்கள்!'' என்று வீரவெறியில் ஆணைகளை முழங்கினான் பெருஞ்சேரலாதன்.

கோட்டையில் போர் முரசுகள் முழங்கின; நிமித்திகர் குறிப்பிட்ட நல்ல முகூர்த்தத்தில் அரசவாளையும் கொற்றக்குடையையும் பட்டத்து யானையின் பிடரியில் வைத்து அனுப்பி வைத்தார்கள்.

படையெடுப்பில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கும் தானைத் தலைவர்களுக்கும் 'பெருஞ்சோறு'[1] அளித்து, வஞ்சிமாலை சூடிப் புறப்பட்டான் மன்னன். ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் அரசு அதிகாரிகளும் கூடி நின்று வாழ்த்த, பட்டத்து யானையில் ஏறினான். சிவனது திருநீற்றை நெற்றியில் அணிந்திருந்த சேரன், ஆடக மாடத்துத் திருமாலின் பிரசாதத்தைத் தோள்களில் தரித்துக் கொண்டான். நடன மங்கையரும் சூதரும் மாகதரும் வைதாளிகரும் சூழ்ந்து நின்று வெற்றி வாழ்த் தொலிக்க, தேர், யானை, குதிரை, காலாட்படைகள் நிலம் தெளியும்படியாக நகர்ந்தன.

பாண்டியப் படைகளையும் புறப்பட்டு வந்து, சேரருடன் சேர்ந்து கொள்ளும்படி சொல்ல, நீலனை மதுரைக்கு அனுப்பினான் இருங்கோ. தனக்கு உதவி செய்ய ஒப்புக் கொண்ட மற்ற குறுநிலத் தலைவர்களை ஒன்று சேர்த்துப் படைகளைத் திரட்டவும், சேர பாண்டியப் படைகளுக்கு உணவு ஏற்பாடு செய்யவும் நெடுந்தத்தனை அனுப்பி வைத்தான்.

கீழ்த் திசையிலிருந்து எறியப்பட்ட பொன் வட்ட மாய்ச் சூரியன் சுழன்று கொண்டிருக்கும் அதிகாலைப் பொழுதில், கரிகாலன் அந்த வீரனுடன் சுழன்று சுழன்று போரிட்டுக் கொண்டிருந்தான். வயதானவர் போல் தோன்றினாலும், அந்த வீரன் கரிகாலனுக்குச் சமமாக நின்று சில சமயங்களில் அதிகத் திறமையுடனே போரிடு வதைக் கண்டு திகைத்துப் போனான் அவன்.

தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிப் புயல் வேகத்தில் கரிகாலன் அடித்தபோது, அதைத் தடுக்க

1. போர்க்களம் செல்லும் வீரர்களுடன் அரசனும் உடனிருந்து உண்ணும் விருந்து 'பெருஞ்சோற்று விருந்து' எனப்படும்.



முடியாமல் அந்த வீரன் திணற, கரிகாலனின் வாள் அவனுடைய தாடையில் பட்டுக் கிழிக்க, தாடியும் மீசையும் கீழே விழ, அங்கே தளபதி திதியன் நின்று கொண்டிருந்தார்!

"தளபதி! நீங்களா?" என்று கூவிய கரிகாலனின் குரலைக் கேட்டுத் திகைத்தார் திதியன்.

"நீ... நீங்கள்... யார்?" என்று தடுமாறிக் கேட்டார் அவர்.

"ஏன், தளபதியாரே! என்ன சந்தேகம்? நான் கரிகாலன்தான். சேரநாட்டிலிருந்து திரும்பி வருகிறேன். இந்தப் பொய்த்தாடி மீசையில் உங்களைத்தான் எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஆனால் உங்களுக்கும் என்னை அடையாளம் தெரியாமல் போய் விட்டதா?"

"அடையாளத்தால்தான் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. உங்களுடைய இரண்டு கால்களிலும் கறுப்பு இருக் கிறதே?" என்று திதியன் கேட்டதும், கரிகாலன் கடகட என்று சிரித்தான்.

"இதுதான், சேரநாட்டின் முகத்தில் பூசிய கரி!" என்று நடந்ததையெல்லாம் சொல்லி "அது சரி, நீங்கள் ஏன் என்னைத் தாக்கினீர்கள்?" என்று கேட்டான் கரிகாலன்.

"நான் பாண்டிய நாட்டுக்குப் பக்கத்தில் போயிருந்த போது— சேரநாட்டில் கரிகாலன் மாதிரியே இருக்கிற ஒருவனை வைத்து ஆள் மாறாட்டம் செய்ய இருங்கோ திட்டமிட்டிருப்பதாக, பாண்டிய ஒற்றனிடமிருந்து தந்திரமாக அறிந்தேன். உங்கள் இரு கால்களும் கருப்பாக இருப்பதைப் பார்த்ததும் அந்த ஆள் நீங்கள்தான் என்று நினைத்துச் சண்டையிட்டேன்..." என்று விளக்கிய தளபதி "நீங்கள் சேரநாட்டுப் படைகளையும் கருவிகளை யும் பார்க்க முடிந்ததா?" என்று காரியத்தில் கண்ணாக விசாரித்தார்.

''ஆம்... விசையில், கற்கால் கவணை எல்லாம் பார்த்துவிட்டேன். அது மட்டுமல்ல— அங்கே கணை எயில் என்ற ஒரு பயங்கரமான கருவி தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அது முற்றுப் பெற்றுக் களத்திற்கு வந்துவிட்டால், சேரனை யாருமே வெல்லமுடியாது; அவனை எதிர்க்கும் எந்த வீரனும் விண்ணுலகு செல்ல வேண்டியதுதான்!''

''அப்படியா?'' என்று வியந்த திதியன், ''சேரனை எதிர்த்து நீங்கள் நிற்கும் போதும், உங்களையும் விண்ணுலகு அனுப்பிவிடுவாரா?'' என்று குறும்பாகச் சிரித்தார்.

''ஏன், என்னை மட்டும் கொல்லமாட்டாரா?''

''எந்தக் கொலைவெறியனும், தன் மகள் விதவையாகும்படி செய்யமாட்டானே?'' என்ற தளபதியின் சிரிப்பைக் கண்டு திகைத்தான் மன்னன்.

''தளபதி! என்ன சொல்கிறீர்கள்?''

''நீங்கள் சொல்லாமல் விட்டுவிட்ட விஷயத்தைச் சொல்கிறேன்...! புகார் இந்திரவிழாவில் நீங்கள் மாறுவேடத்தில் சேரநாட்டு இளவரசியைச் சந்தித்துப் பேசியதையும், காரிக்கண்ணனார் வீடுவரை போய் 'இளஞ்செல்வி, சேர இளவரசிதான்' என்று தெரிந்துகொண்டதையும் நான் காரிக்கண்ணனாரிடமே பிறகு கேட்டு அறிந்துகொண்டேன். நீங்கள் முதியவராக மாறுவேடமிட்டுத் தனியாகச் சென்றதால், உங்களுக்குப் பாதுகாப்பாக நானும் மாறுவேடத்தில் உங்களுக்குத் தெரியாமலே பின்தொடர நேர்ந்தது. பிறகு, ஐம்பெருங் குழுக் கூட்டத்தில், நீங்கள் சேரநாட்டுக்கு ஒற்றறியப் போக விரும்பியபோது, குழு ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே பின்பு என்னைத் தனியாக அழைத்து 'நான் சேர நாடு போகவேண்டும்' என்று நீங்கள் உறுதியாகச் சொன்னபோது புரிந்துகொண்டேன். இளஞ்செல்வி



வேடத்தில் வந்த சேர இளவரசியைச் சந்தித்துப் பேசத்தான் நீங்கள் சேரநாடு போகத் துடிக்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொண்டு, உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தேன்... அதுசரி, நீங்கள் சேரநாடு சென்ற காதல் விஷயம் என்னவாயிற்று?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார் திதியன்.

அவரிடமிருந்து அதை மறைக்க முடியாது என்று உணர்ந்த கரிகாலன், ''அதுவும் கிட்டத்தட்ட பழம்தான்; காலம் கனிந்ததும், காதலும் கனிந்துவிடும்...'' என்று குறிப்பாகச் சொன்னான்; ஆனால் தாமக்கண்ணி பற்றி ஒன்றுமே கூறாமல் மறைத்துவிட்டான்.

''அது சரி, எனக்குப் பதிலாக நீங்கள் உள்நாட்டிலே சுற்றி வந்தீர்களே, நாட்டு நிலைமை எப்படியிருக்கிறது!'' என்று பேச்சை மாற்றினான் மன்னன்.

''நாட்டிலே எல்லோரும் உங்கள்மேல் அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள்; அதிலும் ஒருத்தி, உங்கள் மேல் உயிரையே வைத்திருக்கிறாள்!'' என்று பூடகமாகத் திதியன் சொன்னதும், திடுக்கிட்டான் கரிகாலன்:

''தளபதி! என்ன சொல்கிறீர்கள்?''

''அரசே! விளக்கமாகச் சொல்கிறேன். நான் மாறுவேடத்தில் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்ததும் ஒரு நன்மையாய்ப் போய்விட்டது... உங்களிடம் மக்கள் கொண்டுள்ள அன்பையும் பிரியத்தையும் ஊர் ஊராகக் கண்டு மகிழ்ந்து வரும்போது, நாங்கூரில் நீங்களும் அரசியாரும் மாமாவும் தங்கியிருந்த வீட்டுப் பக்கம் போனேன். அங்கேயிருப்பவர்களுக்கு, அந்த வீட்டிலிருந்த சிறுவர்தான், இப்போது நாடாளும் மன்னர் என்பது தெரியாது!''

''ஆமாம்... அப்படித் தெரிய வாய்ப்பில்லையே! நாங்கள் அந்த ஊரைவிட்டுப் போய் வெகு நாட்கள்

சென்று கருவூரில் இருக்கும் போதுதானே, யானை என்னை மன்னனாக்கியது? யானை புகார் திரும்பிய போதும் நாங்கூர் வழியாக நான் வரவில்லையே?''

''அப்படி வந்திருந்தால், உங்களுக்கு ஒரு பிரச்னை முன்னமேயே தெரிந்திருக்கும்.''

''பிரச்னையா?... நாங்கூரிலா?''

''ஆம், அரசே!... அங்கே ஓர் இளம் பெண், உங்களையே— உங்களையே என்றால்— சிறுவர் வளவனையே, தனது வருங்காலக் கணவனாக எண்ணி, நாள்தோறும் விரதமும் பிரார்த்தனையும் ஆண்டுதோறும் [2] தைநீராடலுமாகத் தவம் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அவளுடைய தோழி மூலம் தெரிந்து கொண்டேன்...''

''யார் அந்தப் பெண்?'' என்று திகைத்துப் போய்க் கேட்டான் அவன்.

''உங்கள் இளம் பருவத் தோழி அருட்கோதை,'' என்றதும், சிறுபிராயத்து விளையாட்டுக்களும் இனிய நிகழ்ச்சிகளும் கரிகாலனின் நினைவுத் திரையில் நிழலோவியங்களாக நகர்ந்து சென்றன...

''அரசே! ஒரு தடவை நீங்கள் விளையாடும் போது, கடவுள் சந்நிதானத்தில் பூக்கட்டிப் போட்டு, கடவுள் அருளால் கணவன்— மனைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மண மேடையில் ஒன்றாக உட்கார்ந்தீர்களாமே, அந்த நிகழ்ச்சியை வெறும் விளையாட்டாக நினைத்து மறந்து விடவில்லை கோதை; அதை உண்மையாகவே எண்ணி, அந்த நிகழ்ச்சி மறுபடியும் நடக்கும் என்ற நம்பிக்கையோடு

2. தைந்நீராடல்— தாங்கள் விரும்பும் கணவரை அடைய இளம் பெண்கள் மார்கழி மாதத்தில் நோற்கும் நோன்பு.



தவம் இருக்கிறாளாம்...'' என்று தளபதி விளக்கியதும் திகைத்துப் போனான் கரிகால் வளவன்.

''அது வெறும் சிறுபிள்ளை விளையாட்டுத்தானே, தளபதி? விளையாட்டு என்பதை விட, அதற்கு வேறு அர்த்தமும் உண்டா?''

''பெண் மனம் எப்படி நினைக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது, அரசே!... புகாரிலே [3] ஏழு பத்தினிப் பெண்டிரைப் பற்றிச் சொல்வார்களே, நினைவிருக்கிறதா?... காவிரிக்கரை மணலில் மண் பாவை செய்து விளையாடும் போது 'இந்தப் பாவை உன் கணவன்' என்று சொல்லி விட்டு, மற்ற தோழியர் வீடு சென்ற பிறகும், அந்தப் பாவை தண்ணீர் பட்டு அழிந்து போகாமல் அதைக் காத்துக் கொண்டிருந்த ஒரு பத்தினிப் பெண் போல், இந்தக் கோதையும் உங்களையே கணவனாகக் கருதி இருக்கிறாளாம்; வேறு யாரையும் மணந்து கொள்ள மறுத்து, உங்களையே கணவனாக வரித்து, நீங்கள் என்றாவது ஒருநாள் அவளைத் தேடி வருவீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் கற்பைப்பற்றி ஊர் மக்களெல்லோரும் பாராட்டிப் பேசுகின்றார்கள்...'' என்று விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தார் திதியன்.

கரிகால் வளவனின் நெஞ்சம், கோதையின் நினைவுகளால் நிறைந்து கனத்தது.

கோதை அவனைக் காதலிக்கிறவள் மட்டுமல்ல; அதற்கும் மேலே, அன்று அவன் பகைவர்களால் நெருப்பில் எரிக்கப்பட்ட போது, அவளுடைய உதவியில்லாமல்

3. புகார் நகரப் பத்தினிப் பெண்டிர் எழுவர் பற்றிய வரலாறுகளை சிலப்பதிகாரம்— வஞ்சின மாலைக் காதையில் காணலாம்.

இருந்திருந்தால், இன்று வளவன் இறந்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும்! இப்போது அவனுடைய பதவி, பட்டம், வாழ்வு எல்லாம் கோதை போட்ட பிச்சைதான்! அவள் அப்படி உதவி செய்தது, அவனிடமிருந்து கைம்மாறு கருதியல்ல; அப்படிக் கைம்மாறு எதிர்பாராமல் உதவியது அவளுடைய சிறப்பு என்றால், அவளுக்குக் கைம்மாறு செய்யத் தவறுவது வளவனுக்கு இழுக்கு அல்லவா?... ஆனால் அந்தக் கைம்மாறு, இவ்வளவு சிக்கலான பிரச்னையாக இருக்கும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லையே!

''தளபதி! நீங்கள் கோதையைப் பார்த்தீர்களா? நலமாக இருக்கிறாளா?'' என்று குரல் கம்ம விசாரித்தான் பால்யத் தோழன்.

''தோழியின்மூலம், நான் யாரென்று சொல்லாமல், கோதையைப் பார்த்தேன். அழகிலே, சேர இளவரசிக்கு எந்த வகையிலும் குறைந்தவர்களல்ல; சோழ நாட்டுப் பட்டத்தரசியாக வீற்றிருக்க எல்லாப் பொருத்தமும் அவர்களுக்கு இருப்பதைப் பார்த்தேன்... அரசே! நம்நாட்டு மக்கள் இரட்டை மகிழ்ச்சியடைவார்கள். தங்கள் மன்னனுக்கு அழகான ஓர் அரசியும், அறிவான ஓர் அரசியும் வாய்த்திருப்பதைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். மற்ற அரசர்கள், பட்டத்தரசிக்குப் பின்னால்தான் மற்றொருத்தியை மணந்து கொள்வார்கள். ஆனால் நீங்கள் ஒரே சமயத்தில் இரண்டு அரசிகளை மணந்து கொள்ளப் போகிறீர்கள்!'' என்று சிரித்தார் தளபதி.

கரிகாலன், தளபதியின் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அவனும் மற்ற மன்னர்களைப்போல் வாழ நினைப்பவனாயிருந்தால், இருவர் என்ன, மூன்று அரசிகளைக் கூட மணந்துகொள்ளலாம். ஆனால்—



அந்தச் சமயம், ஒரு குதிரை வேகமாகக் காட்டில் வரும் சப்தம் கேட்டுத் திரும்பினார்கள் கரிகாலனும் திதியனும். சில நொடிகளில், வேகமாக வந்த அந்தக் குதிரை வீரன், இவர்களைப் பார்த்ததும் சட்டென்று இறங்கி, வணங்கினான்.

''என்ன செய்தி?'' என்று கேட்டார் தளபதி.

''அரசே! வாழ்க நின் கொற்றம்... சேரநாட்டுப் படை, இன்று வஞ்சியிலிருந்து புறப்பட்டுவிட்டது. வழியிலே பாண்டிய நாட்டுப் படைகளும் சேர்ந்து கொள்ளுமாம். இந்தச் செய்தியைச் சொல்லத்தான் புகார் நகரத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன்...'' என்றான் அந்தச் சோழநாட்டு ஒற்றன்.

அதைக் கேட்டுக் கரிகாலன் அதிர்ச்சியடைந்து விடவில்லை:

''இது ஓரளவு நான் எதிர்பார்த்ததுதான்; நான் அவர்களை ஏமாற்றிவிட்டேன் என்ற ஆத்திரத்தில் உடனே படையெடுத்துப் புறப்பட்டிருக்கிறார் சேர மன்னர்... தளபதி! வாருங்கள், போவோம்...'' என்று தலைநகரை நோக்கிக் குதிரையைத் தட்டிவிட்டான் கரிகாலன்.

அரண்மனையை அடைந்ததும் அவசரமாக எண்பேராயத்தைக் கூட்டி, சேரனுடைய படையெடுப்பைப் பற்றிக் கூறினான் கரிகாலன். பாண்டிய நாட்டுக்கு ஒற்றறியச் சென்ற உருத்திரன், முன்னமேயே நாடு திரும்பியிருந்தான். அவன் பாண்டியப் படைகளின் நிலையை எடுத்துச் சொன்னான்:

''நாம் பாண்டிய நாட்டுப் படையைப் பற்றியோ, படைக்கருவிகளைப் பற்றியோ, பயப்படத் தேவையில்லை. ஏறக்குறைய நம் படைக் கருவிகள் போலவே இருக்கின்றன. ஆனால் படைவீரர்கள் நம் வீரர்களைப் போல் இளைஞர்களாயில்லை; வயது முதிர்ந்து,

போதுமான பயிற்சி இல்லாமல் சோப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வியூக அமைப்புக்களும் மிகப் பழமையானவையே. அந்தப் படையை நாம் மூன்றே நாட்களுக்குள் முதுகு காட்டி ஓடச் செய்து விடலாம்'' என்று விளக்கினான் உருத்திரன்.

''அவையோர்களே! சேர நாட்டுப் படையை அவ்வளவு எளிதாகத் தள்ளிவிட முடியாது. நெடுங்காலமாகவே நம் நாட்டின் மேல் படையெடுத்து அழிக்கத் திட்டமிட்டிருப்பதால், படைகளுக்குத் தினசரி பயிற்சியும் வலிமையும் அளித்து வைத்திருக்கிறார் சேர மன்னர். ரோம் நாட்டிலிருந்து வந்துள்ள ஒரு பொறியாளன், பல புதுமையான படைக்கருவிகளைச் செய்து தந்திருக்கிறான். விசை விற்கள், கற்கால் கவணைகள் என்ற புதிய கருவிகளைப் பற்றியும், அவை இயங்கும் முறை, அவற்றை எதிர்த்து அழிக்கும் நுட்பமான தாக்குதல் பற்றி, நம் படையினருக்கு நானே நேரில் விளக்கிக் காட்டுகிறேன். சேரனுடைய படைகள் புறப்பட்டுவிட்டன. அவை இங்கு வந்து சேர ஒரு வாரம்தான் ஆகும். அதற்குள் நாம் அந்தக் கருவிகளைச் செய்ய முடியாது. என்றாலும் சில விசை விற்களைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன். இன்றே நம் கொல்லர்களையும், தச்சர்களையும் கூட்டி வந்து விசை விற்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்கிறேன்...'' என்று மடமட என்று விளக்கமாக விவரித்துக் கொண்டே சென்றான் கரிகாலன். மெனிலாஸ் உருவாக்கும் கணை எயில் பற்றி ஒன்றும் சொல்லவில்லை; அந்த ராட்சஸக் கருவியைப் பற்றிச் சொன்னால், எல்லோரும் பீதியடைந்து விடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

எண்பேராயத்திலிருந்த சிலருக்கு, மன்னன் எப்போது சேர நாடு சென்றான் என்பது புரியவில்லை; 'மன்னர் சேர நாட்டுக்குச் செல்லக்கூடாது. திதியன் செல்லட்டும்' என்று தானே முன்பு ஐம்பெருங் குழுவில் முடிவாகியிருந்தது?



ஆனால் இதைப் பற்றிக் கேட்பதற்கு அப்போதிருந்த அவசர நிலைமை தகுந்த சமயமாக இல்லாததால், அவர்கள் பேசாமலிருந்து விட்டார்கள்.

கரிகாலன் விரைவாகப் பேச்சை முடித்துக் கொண்டு, செயலில் இறங்கினான். படைத் தளபதிகளை அழைத்து, பாண்டிய நாட்டுப் படைகள், போர் முறை பற்றி உருத்திரன் விளக்கச் சொன்னான். அதே நேரத்தில், கரிகாலன் கொல்லர்களையும் தச்சர்களையும் கூட்டி, சேர நாட்டு விசை வில் போல் ஒரு 'மாதிரி' செய்து காண்பித்து, அதே போல் பல விசைவிற்கள் தயாரிக்கும்படி கட்டளை பிறப்பித்தான். நூற்றுக்கணக்கான உலைகள், ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் தீக்கக்க ஆரம்பித்தன; நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள், ஓய்வு இல்லாமல் வேலை செய்யத் தொடங்கினார்கள்...

படைத் தளபதிகளையும் முக்கியமான வீரர்களையும் அழைத்து, சேரநாட்டுப் போர் முறை, தாக்கும் வியூக அமைப்புக்கள் பற்றி விளக்கினான் கரிகாலன். விசை விற்களும் கற்கால் கவணைகளும் எப்படி இயங்குகின்றன, அவற்றின் பலஹீனமான பாகங்கள் எவை, அவற்றை எவ்வாறு தாக்கி உடைக்க வேண்டும் என்பதையெல்லாம், சில மாதிரிக் கருவிகளை வைத்து நுட்பமாக விவரித்தான் அவன்.

மின்னல் வேகத்தில் போருக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

கரிகாலன் ஒரு புத்திசாலித்தனமான முடிவு செய்தான்: எதிரிப்படைகள் புகாரையடைந்து முற்றுகையிட்டுத் தாக்கும்வரை, சோழப்படை காத்திருக்கக் கூடாது. முற்றுகையால் தலைநகரத்துக்கும் மக்களுக்கும் கேடுகள் ஏற்படும். எனவே எதிரிகளை வழியிலேயே ஓர் இடத்தில் தடுத்து நிறுத்திப் போர் செய்யவேண்டும் என்று தீர்மானித்தான். இந்த முடிவை, திருத்தாமனும் திதியனும்

மற்றவர்களும் ஒப்புக் கொண்டார்கள். சோழர்படை உடனே புகாரிலிருந்து அணிவகுத்துப் புறப்பட்டது.

பெருங்கணி குறித்துத்தந்த நேரத்தில் வாளையும் கொற்றக் குடையையும் யானையின் மேல் வைத்து அனுப்பிவிட்டு, தாயிடம் விடை பெறுவதற்காக [4] வட்டுடையில் வந்து நின்றான் கரிகாலன்.

அந்த வீரத்தாய், கணவனுடைய வீரவாளை அவனிடம் கொடுத்து ''மகனே! இதோ உன் தந்தையின் வீரமும், தாயின் ஆசியும் உன்னுடன் துணையாக வருகின்றன. வெற்றி வீரனாகத் திரும்பி வா!'' என்று நெற்றியில் திலகமிட்டு அனுப்பினாள்.

யானைக் கூட்டத்தை எதிர்த்துக் கிளம்பும் சிங்கக் குட்டி போல் புறப்பட்ட கரிகாலனின் வீரத்தைக் கண்டு நாடே வியந்து போற்றியது. இந்த இளம்வயதிலேயே, அனுபவமுள்ள சேரபாண்டியரை எதிர்த்துக் களம்புகும் அவனது துணிவைக் கண்டு, படைவீரர்களுக்குப் புது உற்சாகம், பொன்னி வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தது... படை செல்லும் வழியெல்லாம், இளைஞர்கள் தாமாகவே படையில் வந்து சேர்ந்து கொண்டனர்.

சேரநாட்டிலிருந்து வந்த படையுடன் பாண்டியர் படையும், பதினொரு வேளிர்களின் படைகளும் சேர்ந்து கொண்டு, புகாரை நோக்கி வந்துகொண்டிருந்தன.

இரு பக்கத்துப் படைகளும் [5] வெண்ணியில் சந்தித்து நின்றன.

---

4. வட்டுடை— போர்வீரர்கள் அணியும் கவச உடை
5. தற்போது தஞ்சாவூரின் கிழக்கே 24 கி.மீ. தூரத்தில், கோயில் வெண்ணி என்று வழங்கப்படும் இடம்: தஞ்சை— நாகப்பட்டினம் இருப்புப்பாதையில் ஒரு நிலையம்.



கரிகாலனுக்கு எதிராக சேரன் பெருஞ்சேரலாதன், பாண்டியன் நம்பி நெடுஞ்செழியன், இருங்கோ முதலிய வேளிர்கள் நின்றார்கள். போரிலே சிறந்த அனுபவமுள்ள இவர்களுக்கு எதிராக நின்ற சோழப்படைக்கு இளைஞன் கரிகாலனே தலைவன்; அவனுடைய படையில் இருந்தவர்கள் எல்லோரும் நாட்டுப் பற்று மிகுந்தவர்கள்; உயிரைக் கொடுத்தும் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றும் தியாக உணர்ச்சிமிக்க மறவர்கள்.

வஞ்சிமாலை சூடிய கரிகாலன், சிங்கம்போல் கம்பீரமாக நின்று வஞ்சினம் கூறினான்:

''என் அன்புக்குரிய வீரர்களே! நமக்கு முன்னால் ஒரு கடுஞ்சோதனை காத்திருக்கிறது; 'சோழ நாட்டுக்கு, தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியுமா? சோழ நாட்டு மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சி இருக்கிறதா?' என்ற சோதனையை உலகம் நடத்திக்கொண்டிருக்கிறது... அந்தச் சோதனையிலே நாம் வெற்றியடைவோம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை... வீரர்களே! குனிந்துகொண்டே வாழ்வதைவிட, நிமிர்ந்து நின்று சாவது மேல்... வீசி வரும் காற்றுக்குத் தடை விதிக்கலாம்; பாய்ந்து வரும் ஆற்றுக்கு அணை கட்டலாம்; சீறி வரும் கடலலைகளுக்கும் கரை கட்டலாம். ஆனால் சோழ நாட்டு வீரர்களின் சுதந்திர வேகத்தை யாராலும் தடுக்க முடியாது... உங்களுடைய வீரத்தின் முன்னால் எதிரிகளின் கூலிப்படைகள் தூள்தூளாக உடையப் போவது நிச்சயம். வீரர்களே! வெற்றியின் மேல் நான் இவ்வளவு நம்பிக்கை கொண்டிருப்பது, ஏன் தெரியுமா?... நம்மிடம் மிகப் பெரிய வலிமை இருக்கிறது; உலகத்தின் எவ்வளவு பெரிய படையாலும், எவ்வளவு திறமை வாய்ந்த வீரர்களாலும் அழிக்க முடியாத ஆயுதம் ஒன்று நம்மிடம் இருக்கிறது— அதுதான் நியாயம்; நீதி; அறம்!... அந்த நியாய வலிமை, தர்மபலம் நம்மிடம் இருக்கிறது. நாம் பிறநாட்டு மண்ணுக்கு ஆசைப்படவில்லை; பிறநாட்டுப்

பொன்னுக்காகப் போரில் இறங்கவில்லை; மற்றவர்களை அடிமைப்படுத்தும் எண்ணத்தோடு சண்டை செய்ய வில்லை. நம்முடைய தாய்நாடு— பிறந்த பொன்னாடு, அடிமையாவதிலிருந்து காப்பாற்றுவதற்காகப் போரிடு கிறோம்... சுதந்திரத்திற்காக நடந்த போர் எதுவும் தோற்றதாகச் சரித்திரமே இல்லை!... வீரர்களே! அன்னை காவிரி நம் இரத்தத்தில் ஊட்டி வளர்த்த வீரம், அவளுடைய சுதந்திரத்திற்காகவே பயன்படட்டும்... இந்தப் போரிலே நான் வெற்றி பெறாவிட்டால், என்னைக் கொடுங்கோலரசன் என்று உலக மக்கள் பழி தூற்றட்டும்!... பைந்தமிழ்ப் புலவர்கள் என்னைப் பாடாது போகட்டும்!... என் அன்னை 'இவன் என் மகன் இல்லை' என்று வெறுத்து ஒதுக்கட்டும்!...''

மன்னனுடைய வஞ்சின மொழிகளைக் கேட்டு, வீரர் கள் கூட்டம் மெய்சிலிர்த்து நின்றது.

'கரிகாலர் வாழ்க!... பொன்னி வளவன் வாழ்க!... வெற்றி நமதே...' என்று வானை எட்ட எழுந்த முழக்கங் கள், வீரர்களின் உற்சாகத்தைக் காட்டின.

எதிரிகளின் படை நிற்கும் முறைக்குத் தகுந்தபடி, கரிகாலன் தன் படையை மூன்று பிரிவுகளாக அணிவகுத்து நிறுத்தினான். சேரனுடைய படைக்கு எதிராக அவனும், பாண்டியப் படைக்கு எதிராகத் திருத்தாமனும் வேளிர் களின் சில்லறைப் படைகளுக்கு எதிரே திதியனும் நின்று போர் துவங்கினார்கள்.

கடுமையாகத் தொடங்கிய போர், மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்தது. எந்தப் பக்கம் வெற்றித் திருமகள் மாலையிடப் போகிறாள் என்று யூகிக்க முடியாத அளவுக்கு, இரு படைகளும் சமநிலையில் நின்று போரிட்டுக் கொண்டிருந்தன. சோழப் படையின் இளமை யும் துடிப்பும் உற்சாகமும், பயிற்சி நிறைந்த சேரர்களை யும் அனுபவமிக்க பாண்டிய வீரர்களையும், எளிதில் தோற்கடிக்க முடியவில்லை.



சேரர்களின் விசைவிற்களின் பலஹீனமான பகுதி களைக் குறிவைத்து ஈட்டிகளை எறிந்து அவற்றை உடைத்தெறிந்தார்கள் சோழ நாட்டு வீரர்கள். ஆனால் கற்கால் கவணையை அவ்வளவு சுலபமாக உடைக்கமுடியவில்லை. சங்கிலி சுழல்வதற்கான இடை வெளியில் ஈட்டியையோ, அம்பையோ எய்து சங்லியை அறுத்து விட்டாலும், அன்று இரவே புதிய சங்கிலிகளைப் போட்டு, அதை இயங்கவைத்துக் கொண்டிருந்தார்கள் சேரவீரர்கள். ஆனால் அவற்றுக்குத் தேவையான கற்களின் எண்ணிக்கை குறையக் குறைய, புதிய கற்களைத் தேடிக் கொண்டுவர முடியவில்லை. சேரநாட்டில் கிடைப்பது போல், சோழநாட்டுச் சமவெளியில் கற்கள் கிடைக்காத தால், சில கற்கால் கவணைகள் வேலையின்றிச் சோம்பி யிருந்தன.

நான்காம் நாள், வேளிர்களின் படை சிறிது கலகலக்கத் தொடங்கியது. வேளிர்களின் கூலிப்படைக்கு, திட்டமான பயிற்சிகளோ, போர்முறையோ இல்லை. கூலிக்காகப் போரிட வந்தவர்களுக்கு, உற்சாகம் எத்தனை நாளைக்கு நீடிக்கும்? மேலும் இந்தக் கூட்டணி வீரர் களுக்கு, உணவுவசதிகளும் வரவரக் குறைந்தன. இருங்கோ சொன்னதுபோல், சோழநாட்டு மக்கள் எதிரிகளுக்கு உதவி செய்யவேயில்லை. அவன் பேச்சை நம்பி ஏமாந்த சேரனும் பாண்டியனும் படைகளுக்கு வேண்டிய உணவு வசதிகளைத் தங்கள் நாடுகளிலிருந்தே வரவழைக்க வேண்டியிருந்தது. வயிறு காய்ந்து கொண்டிருக்கும் படை எவ்வாறு இயங்கும்?

நான்காம் நாள் சிறிது சோர்ந்த வேளிர்களின் படையை சட்டென்று முழுமூச்சுடன் தாக்கிச் சிதற அடித்து நொறுக்கிவிட்டார் திதியன். போர்க்களத்திலே நிறைந்திருந்த பிணக் குவியல்களுக்குள்ளே இருங்கோவும் அவனது தோழர்களும் அடையாளம் தெரியாமல் இறந்து கிடந்தார்கள்.

போர்க்களத்தின் இரத்த வெள்ளத்தைப் பிரதிபலித்த மேலைவானத்திலே நுழைந்த பகலவன், சோழப் படையின் வீரத்தைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தியதும் அன்றையப்போர் நிறுத்தப்பட்டது.

'சோழநாட்டு மக்கள் பலர் நமக்கு உதவி செய்வார்கள்' என்று இருங்கோ சொன்னதை நம்பி, சோழ நாட்டுக்குள் அடியெடுத்து வைத்த சேரனும் பாண்டியனும் சேற்றில் அகப்பட்ட யானைகள் போல் திகைத்து நின்றார்கள். தண்ணீரிலே நிற்கும் யானையை முதலை இழுத்து அமுக்கிவிடுமே?

சோழப் படையின் உற்சாகத்துக்கும் வீரத்துக்கும் முன்னால், இன்னும் எத்தனை நாள் தாக்குப்பிடிக்க முடியும் என்று திகைத்தவாறே, [6] கட்டூர் சென்று படுத்திருந்தான் சேரன்.

அப்போது, வஞ்சியிலிருந்துவந்த குதிரைவீரன் ஒருவன் கொண்டுவந்த செய்தி, சோர்ந்திருந்த சேர மன்னனைத் துள்ளி எழச்செய்தது. புத்துயிர் வந்ததுபோல் குதித்து வெளிவந்த மன்னன், அந்த நல்ல செய்தியைப் படை வீரர்களுக்குத் தெரிவித்ததும், வீரர்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் திளைத்து ஆடிப்பாடத் தொடங்கினார்கள்.

சிறிது நேரத்தில் அந்தச் செய்தி ஒற்றர் மூலம் கரிகாலனுக்கும் எட்டியது. இடிவிழுந்த நாகம்போல் அதிர்ச்சியடைந்து விட்டான் அவன்.

இரவு முழுவதும் சேரனுக்கு உற்சாகமும் கரிகாலனுக்கு அதிர்ச்சியும் அளித்த அந்தச் செய்தி, மறுநாள் காலையில் வந்த மற்றொரு செய்தியால் அடிபட்டுப் போய்விட்டது.

இரண்டாவது செய்தியைக் கேட்டு, சேரன் மட்டுமல்ல, கரிகாலனும் திடுக்கிட்டுச் செயலிழந்து போனான்.

---

6. கட்டூர்— போர்வீரர்கள் இரவில் தங்கியிருக்கும் பாசறை.

## 31

16863
328839

கரிகாலன் மாறுவேடத்தில் வந்து தன் நாட்டுப் படை ரகசியங்களையெல்லாம் ஒற்றறிந்து சென்று விட்டான் என்பதை அறிந்ததும் ஏற்பட்ட ஆத்திரத்தில், உடனே படையெடுப்புக்கு ஆணைகள் பிறப்பித்து விட்டான் பெருஞ்சேரலாதன்.

கோட்டையில் போர் முரசு ஒலித்ததும், யவனச்சேரியிலிருந்து வேகமாக வந்தான் படைத்தலைவர்களில் ஒருவனான பாண்டரங்கன். அவனுடைய மேற்பார்வையில் தான் கணைஎயில் உருவாகிக் கொண்டிருந்தது.

பெருஞ்சேரலாதனிடம் கணைஎயில் பற்றி விவரித்தான் பாண்டரங்கன். அரசருக்கு ஒரு திடீர் மகிழ்ச்சியளிக்க வேண்டும் என்பதற்காகவே, கணைஎயில் உருவாகி முடியும் வரை அதை ரகசியமாக வைத்திருந்ததாகக் கூறினான் அவன்.

அதைக் கேட்டதும் மகிழ்ச்சி பொங்கியவனாய், பெருஞ்சேரலாதன் உடனே மெனிலாஸின் தொழிற்கூடத்துக்கு வந்து அவனைக் கட்டித் தழுவிப் பாராட்டினான்.

"அரசே! இன்னும் இருபது நாட்களுக்குள் இது முழுமைபெற்றுவிடும். அதற்குப் பிறகு நாம் படையெடுத்துச் சென்றால், நம்மை யாருமே எதிர்த்து நிற்க முடியாது!" என்றான் பாண்டரங்கன்.

"மிக்க மகிழ்ச்சி!... ஆனால் படையெடுப்புக்கு ஆணை பிறப்பித்து முரசு முழங்கிய பிறகு, பின்வாங்குவதோ, ஒத்திப்போடுவதோ, நம் அரச பரம்பரைக்கே இழுக்கு ஏற்படுத்துவதாகும்... பரவாயில்லை... இந்தக் கணைஎயில்

இல்லாமலே சோழனை ஒழித்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது...'' என்றான் சேரன்.

''அந்த நம்பிக்கையை விட, இந்த எந்திரம் மிகவும் நம்பகமானது, அரசே!'' என்று சொன்னான் மெனிலாஸ்.

''அரசே! அறிவித்தபடி படைகளைக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள். நான் இங்கே இருந்து, நிறைய ஆட்களை வைத்து இரவும் பகலும் வேலை செய்து இன்னும் ஒரு வாரத்துக்குள் இதை முடித்து, போர்க்களத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் புகார் போய்ச் சேர்வதற்கு எப்படியும் பத்துப் பதினைந்து நாட்களாகும் நீங்கள் அங்குப் போய்ச் சேர்ந்து முற்றுகை தொடங்குவதற்குள் நான் இந்தக் கணைஎயிலுடன் அங்கு வந்து விடுவேன்...'' என்று உறுதியாகச் சொன்னான் பாண்டரங்கன்.

''ஆம், அரசே! நீங்கள் புகார் போய்ச் சேரும்போது, இந்த எந்திரம் அங்கே உங்கள் பக்கத்தில் வந்து நிற்கும் படியாகச் செய்கிறேன்...'' என்று ஆமோதித்தான் மெனிலாஸ்.

''சரி... அப்படியே செய்யுங்கள்... நான் குறிப்பிட்டபடி புகார் நோக்கிப் புறப்படுகிறேன்...'' என்று சொல்லிச் சென்றான் பெருஞ்சேரலாதன். ஆனால் கரிகாலன் அவனுடைய படையை நடுவழியிலேயே தடுத்துப் போரிடுவான் என்று சேரன் எதிர்பார்க்கவில்லையே!...

வெண்ணிப் போர்க்களத்தில் நான்காம் நாள் வேளிர்களின் படை தோற்றோடிய பிறகு, சோர்வுடன் படுக்கச் சென்ற சேரனிடம், வஞ்சியிலிருந்து வந்த குதிரைவீரன், கணைஎயில் செய்து முடிக்கப்பட்டு மறுநாள் புறப்படப் போவதாகச் செய்தி தெரிவித்ததும், சேரன் புத்துயிர் பெற்று மகிழ்ந்தான். இந்தச் செய்தியைப் படைவீரர்களுக்கும் தெரிவித்து, அவர்களுடைய சோர்வை நீக்கி, நம்பிக்கையூட்ட எண்ணிய சேரன், கணைஎயில் பற்றிய



செய்தியை வெளியிட்டான். அதைக் கேட்ட சேரவீரர்கள், போரிலே வெற்றி பெற்றது போன்ற உணர்வுடன் துள்ளிக் குதித்து ஆடிப்பாடினார்கள்.

சேரர்களின் கட்டூரைச் சுற்றியிருந்த சோழ ஒற்றர்கள் மூலம், இச்செய்தி கரிகாலனை எட்டியதும், அவன் இடியோசை கேட்ட நாகம் போல் நிலைகுலைந்தான்.

உடனே மாமா திருத்தாமனையும், திதியனையும் அழைத்து, கணைஎயிலின் பிரம்மாண்டமான தன்மையை விளக்கிச் சொன்னான்.

''அரசே! நாம் ஒரு சிறு படை கொண்டு சென்று, அதை வழியிலேயே மடக்கி உடைத்து விடலாமா?'' என்று துடித்தார் திதியன்.

''முடியாது, தளபதி! அது நூற்றுக்கணக்கான எதிரிகளை ஒரே சமயத்தில் அம்பு எய்து அழிக்கக் கூடிய சக்தியுள்ளது. அதை எந்தக் கருவியாலும் உடைக்க முடியாது. அது நொறுக்க முடியாத, நுழைய முடியாத இரும்புக் கோட்டை!...'' என்று தளர்ந்த குரலில் சொன்னான் கரிகாலன்.

''கற்கால் கவணைக்கு இருப்பதுபோல், இதற்கு ஏதும் பலவீனமான பகுதியில்லையா?'' என்று கேட்டார் திருத்தாமன்.

''இல்லை, மாமா! கணைஎயிலை உடைப்பதோ, மூடிய கதவை உடைத்து உள்ளே போவதோ, செய்தலனால் கூட முடியாது!... அந்தப் பயங்கரக் கருவியைக் கண்டு பயந்துதான், அது செய்து முடிப்பதற்குள் போரை முடித்து விடவேண்டும் என்று நான் அவசரப்பட்டேன்; முடியவில்லை... அவர்கள் அசுர வேகத்தில் இரவும் பகலும் வேலை செய்து எந்திரத்தை முடித்து விட்டார்கள்... அதன் முன் எதிர்த்து நிற்பவர்கள், ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான அம்புகளால் தாக்கப்படுவார்கள்.

போர்க்களத்தை விட்டு ஓடினால் ஒழிய, அதனிடமிருந்து தப்பிக்க முடியாது. அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிப்பதற்குக்கூட நமக்கு நேரம் இல்லையே?'' என்று கவலைப்பட்டான் கரிகாலன்.

கணைஎயிலின் தாக்குதலிலிருந்து எப்படித் தப்புவது, அதை எவ்வாறு எதிர்த்து நிற்பது என்று மூவரும் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்...

வஞ்சி நகரில், மெனிலாஸின் தொழிற்கூடம் பரபரப்பாயிருந்தது. அல்லும் பகலும் உழைத்து நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் கணைஎயிலைச் செய்து முடித்துவிட்டார்கள் தளபதி பாண்டரங்கனும் அவர் களில் ஒருவனாக, ஊண் உறக்கமின்றித் தொழிற்சாலையி லேயே தங்கி, வேலையை வெகு விரைவில் முடித்திருந்தான்.

கணைஎயில் செய்து முடித்ததைக் கேள்விப்பட்டதும் இளவரசி சிந்தாதேவி அதைப் பார்வையிட வந்தாள்.

அதனுடைய வலிமை, அது இயங்கும் முறை, அதன் உடைபடாத தன்மை எல்லாம் விளக்கிய மெனிலாஸ், அதனுள்ளேயும் திறந்து பாகங்களைக் காண்பித்தான்:

''இளவரசி! இதற்குள்ளே நம் வீரர்கள் போர்க்கருவி களோடும், உணவுப் பொருள்களோடும் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டு விட்டால், யாராலும் இதை உடைத்து உள்ளே நுழைய முடியாது; நானேகூட இதை உடைக்கமுடியாது...'' என்று பெருமிதமாகச் சொல்லி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான் அவன்.

''இளவரசி! நான் அறிந்தவரையில், உலகிலே இதுதான் மிகப் பயங்கரமான ஆயுதம் என்று நிச்சயமாகச் சொல்லலாம்...'' என்று கம்பீரமாகச் சொன்ன மெனிலாஸை அலட்சியமாகப் பார்த்தாள் சிந்தாதேவி:



''இல்லை, மெனிலாஸ்! உலகிலே மிகப் பயங்கரமான ஆயுதம் இதுவோ, வேறெதுவுமோ அல்ல— மனிதனுடைய மூளைதான்! அந்த மூளையிலிருந்து இதைவிடப் பயங்கர மான ஆயுதங்கள் இன்னும் தோன்றலாம், இல்லையா?''

இளவரசியின் பேச்சைக் கேட்டு, மெனிலாஸ் மட்டு மல்ல, ஒலிவியாவும் திகைத்துப் போனாள்.

''ஒலிவியா! நீ அடிக்கடி சொல்வாயே, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற தமிழ்த் தத்துவம் எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று சொல்வாயே— அந்த லட்சிய உலகத்தைப் படைப்பதற்குத்தான் உன் அண்ணன் இந்த ராட்சஸ அழிவுக் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்...'' என்று குமிழ் சிரிப்புடன் இளவரசி சொன்னதும், ஒலிவியா ஒன்றும் புரியாமல் விழித்தாள்:

''தேவி! என்ன சொல்கிறீர்கள்?''

''இப்படிப்பட்ட எந்திரங்களால், போரும் பகையுமாக இருக்கின்ற இந்த உலகத்தை முற்றிலும் அழித்துவிட்டு, புதியதோர் லட்சிய உலகத்தைப் படைக்கலாம், இல்லையா?'' என்று கன்னங்குழி விழ, கலகல என்று சிரித்தாள் தேவி.

அந்தச் சிரிப்பிலே, சிரிப்புக்கும் பின்னே ஏதோ அர்த்தம் இருப்பதுபோல் தோன்றியது ஒலிவியாவுக்கு.

கணைஎயிலைப் பார்வையிட்டுவிட்டு சிந்தாதேவி அரண்மனைக்குத் திரும்பினாள்.

மறுநாட் காலை, கோயிலில் விசேட பூஜை நடத்தி, பிரசாதங்களை அணிவித்து, கணைஎயிலைப் போர்க்களத் துக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தான் பாண்டரங்கன்.

கணைஎயிலின் ராட்சஸத் திறனை அறிந்து பயத்தால் முகம் வெளுத்தது கீழ்வானம். சோழ நாட்டில் நிகழப் போகும் பயங்கர அழிவை அறிந்ததுபோல், கூட்டிலிருந்த

பறவைகளும் கோழிகளும் 'ஐயோ, ஐயோ...' என்று சிறகையடித்துக் கூவின. அந்த எந்திரத்தைப் பார்க்கவே அஞ்சியவனாய், கிழக்கே மேகங்களுக்கிடையே ஒளிந்து கொண்டே கிளம்பினான் கதிரவன்.

கணைஎயில், சுற்றிலும் மலர்த் தோரணங்கள் அலங்கரிக்க, குங்குமத் திலகமும் சந்தனமும் பூசப்பட்டு, நகரத் தயாராயிருந்தது. அதை ஏற்றிச் செல்வதற்காகவே விசேஷமாகச் செய்யப்பட்ட, எட்டுச் சக்கரங்கள் அமைந்த நீளமான இரும்பு வண்டியில், வாயு வேகத்தில் செல்லும் வலிமையுள்ள பதினாறு குதிரைகள் பூட்டப்பட்டுத் தயாராக நின்றன. கணைஎயிலுக்குள் நுழைய வேண்டிய படை வீரர்கள், தங்களுக்குத் தேவையான வில், அம்பு, ஈட்டி முதலிய கருவிகளுடன் காத்திருந்தார்கள்.

சுற்றிலும் தளபதி பாண்டரங்கன், மெனிலாஸ், ஒலிவியா, தொழிலாளர்கள், மற்ற அரசாங்க அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். அரண்மனையிலிருந்து சிந்தாதேவியும் தோழிகளுடன் வந்துவிட்டாள்.

இளவரசியின் முகம் வாடியிருந்ததைக் கவனித்தாள் ஒலிவியா. அவளுடைய ஒளி முகத்தில் இவ்வளவு சோகச் சுவடுகள் பதிந்திருந்ததை ஒலிவியா பார்த்ததேயில்லை. சுற்றிலும் நின்றவர்களை ஒருமுறை விழிகளைச் சுழற்றிப் பார்த்தாள் இளவரசி. அப்படிச் சுழன்று வந்த அந்த அழகு விழிகள், யவனத் தோழியின் மேல் சில நொடி நேரம் அதிகமாக நீடித்து நின்று கலங்குவதைப் பார்த்துத் திகைத்தாள் ஒலிவியா.

அந்தக் கணைஎயில் நடத்தப்போகும் அழிவை நினைத்துச் சிந்தாதேவி கலங்குகிறாள் என்று யூகித்தாள் ஒலிவியா.

கணைஎயில் அழிக்கப்போவது இளவரசியின் காதலனை மட்டுமா?— அவளுடைய கணவன்,



அவளுடைய கனவுகள், அவளுடைய லட்சியங்கள், அவளுடைய வாழ்க்கையாசைகள்— எல்லாவற்றையும் அல்லவா அழித்து ஒழிக்கப் போகிறது?...

''இளவரசி! நேரமாகிறது... கணைஎயில் புறப்படலாமா?'' என்று பணிவோடு கேட்டான் பாண்டரங்கன்.

''ஆம்... போகவேண்டியதுதான்...'' என்ற சிந்தா தேவி, பணிப்பெண்ணிடமிருந்த சிமிழில் குங்குமத்தை எடுத்து, கணைஎயிலின் நெற்றியில் இட்டதும், பின்னாலே வந்து சட்டென்று கதவைத் திறந்து உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டுவிட்டாள்!

இதைச் சற்றும் எதிர்பாராத பாண்டரங்கன் பதறிப் போய், ''இளவரசி! இளவரசி!... வெளியே வாருங்கள்!...'' என்று கூவினான்.

''இல்லை... நான் வெளியே வரப்போவதில்லை... இந்தக் கணைஎயில்தான் எனக்குக் கல்லறை. இந்தப் போர் அசுரனுக்கு நான்தான் முதற்பலியும் கடைசிப் பலியும்... தன் ஒரே மகளின் உயிரை இழந்த பிறகாவது, உங்கள் மன்னர் என்னைப் போன்ற பல உயிர்களை அழிவிலிருந்து காப்பாற்றட்டும்!...'' என்று உள்ளேயிருந்து ஒலித்த குரல், வரவர, மங்கி, தேய்ந்து, கடைசியில் நின்றுவிட்டது...

ஒலிவியாவும் தோழிகளும் மற்றவர்களும் கணைஎயிலைச் சுற்றி நின்று கதறினார்கள்.

''மெனிலாஸ்...! இதை உடைத்தெறி!... சீக்கிரம்!...'' என்று அலறினான் பாண்டரங்கன்.

''அண்ணா! என் தேவியைக் காப்பாற்று!... என் தோழியைக் காப்பாற்று!'' என்று மெனிலாஸைப் பிடித்து உலுக்கியழுதாள் ஒலிவியா.

மெனிலாஸ் உடம்பெல்லாம் நடுங்க, தலையில் கை வைத்துக் கொண்டு குமுறியழுதான்:

''முடியாது... என்னால் முடியாது... யாராலும் முடியாது...'' என்று அலறிய அவன், தன் படைப்பைச் சுற்றிச் சுற்றி வந்து, பைத்தியக்காரன்போல், இருகைகளையும் அதன்மேல் ஓங்கி ஓங்கி, ரத்தம் கசியக் கசிய அடித்துக் கதறிக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயம், அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி, ஒலிவியாவிடம் ஒரு கடிதத்தை நீட்டினாள்:

''இந்த ஓலையை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள் இளவரசி.''

''எப்பொழுது சொன்னார்கள்?'' என்று படபடத்தாள் தோழி.

''காலையில் இரண்டு ஓலைகளை என்னிடம் கொடுத்து, 'தொழிற் கூடத்தில் ஒரு பரபரப்பான நிகழ்ச்சி நடக்கும்; அது நடந்ததும் இதை ஒலிவியாவிடமும், இன்னொன்றை தாமக்கண்ணியிடமும் கொடு...' என்று சொன்னார்கள்... அந்தப் பரபரப்பு இதுதான் என்று தெரியாமல் போய்விட்டதே!'' என்று அழுதாள் பணிப்பெண்.

ஓலையைப் பிரித்துப் படித்தாள் ஒலிவியா.

'அன்புள்ள தோழி ஒலிவியாவுக்கு, சிந்தாதேவி எழுதிய முடங்கல்: உண்மை அன்பு என்பது, மொழிக்கும் நாட்டுக்கும் அப்பாற்பட்டு, உள்ளங்களில் தோன்றுவது என்ற உண்மையை உன் அன்பால் நிரூபித்துக் காட்டினாய்... உன்னோடு பழகிய நாட்களை ஏழேழ் பிறவிக்கும் நினைவு வைத்திருப்பேன். யாதும் ஊரே; யாவரும் கேளிர்; என்ற கொள்கையை, நீ விரும்பிய அளவு, என்



நாட்டினர் விரும்பவில்லை. நல்ல கருத்துக்கள் உள்ளூரிலே விலை போகாது போலிருக்கிறது!... இப்போது துவங்கியிருக்கும் போருக்கு நானே கடைசிப் பலியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். கடுமையான நஞ்சைச் சாப்பிட்டுவிட்டுத்தான், கணையெயிலுக்குள் நுழைந்திருக்கிறேன். ஆகவே என் மரணத்தை யாரும் தடுக்க முடியாது. வாள் எடுத்தவன் வாளாலேயே சாவான் என்று சொல்வார்கள். அதைப்போல், போரிலே ஈடுபடும் அரச குடும்பங்களும் போராலேயே அழிய வேண்டும் என்பது விதி... உன் அண்ணனின் அறிவுத் திறனைப் பார்த்து வியந்திருக்கிறேன். ஆனால் அந்த அறிவினாலே, மக்களுக்குப் பயன்படும் எத்தனையோ நல்ல கருவிகள் செய்திருக்கலாம்; உயிர்களை அழிக்கும் இந்த நாசக் கருவிகள் செய்யும் எண்ணத்தை இனிமேலாவது அவர் மாற்றிக் கொள்ளட்டும்... இந்த மாதிரிப் போர்க் கருவிகள் மூலம் கொன்ற ஆயிரக்கணக்கான உயிர்களின் ரத்தம், அவர் கையிலே ஒட்டிக் கொண்டிருக்கிறதே, அதை உங்கள் போ, டைபர் நதியில் மட்டுமல்ல, எங்கள் கங்கை, காவிரியில் கூட கழுவிவிட முடியாது என்பதை அவர் உணரட்டும்... போர் இல்லாத ஓர் உலகம் இனித் தோன்றுமானால், அதிலே மீண்டும் உன் தோழியாகப் பிறக்க விரும்புகிறேன்...'

கண்களிலிருந்து நீர் தாரையாகப் பொழிய, தோழியின் கல்லறையையே பார்த்தவாறு நின்றாள் ஒலிவியா.

மெனிலாஸ் கீழே உட்கார்ந்து தன் கைகளைத் தரையில் ஓங்கி அடித்தபடி விம்மி அழுது கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தான். அந்தக் கண்ணீரால், தன் கைகளில் ஏற்பட்ட ரத்தக்கறையை அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்தானோ?

கணைஎயிலுக்குள் நுழைந்து அடைத்துக் கொண்டு இளவரசி இறந்த செய்தி வந்தபோது, பெருஞ்சேரலாதன் மட்டுமல்ல— கரிகாலனும் திடுக்கிட்டு நிலைகுலைந்து போனான்.

தன்னையும் தன் படையையும் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரையே தியாகம் செய்த தேவியை நினைத்துக் குமுறிக் குமுறி அழுதான் கரிகாலன்.

மகளைப் பறிகொடுத்த பெருஞ்சேரலாதன், சில வினாடிகள் தந்தையாகக் கண்ணீர் வடித்தான். சிறிது நேரத்தில் மீண்டும் சேர மன்னனாக மாறி, போருக்குத் தயாராகிவிட்டான்!

கணைஎயிலை எதிர்பார்த்து ஏமாந்துபோன சேர வீரர்கள் முழுமூச்சாக, 'வாழ்வா, சாவா' என்று முடிவு காணும் வகையில் மோதினார்கள்.

அன்று மிகவும் கடுமையான போர் நிகழ்ந்தது.

தன் அவமானத்துக்கும் தன் மகள் சாவுக்குக் காரணமான கரிகாலனை நேருக்கு நேர் நின்று தாக்க ஆரம்பித்தான் சேரன். இளமைத் துடிப்புக்கும் அனுபவத்திறனுக்கும் இடையே நீண்ட போர் நடந்தது. அவர்களுடைய ஆவேசமான போர் கண்டு அஞ்சிய கதிரவன் உலகை விட்டு ஓட எண்ணியவனாய் மேற்குப் பக்கமாக நகர்ந்து கொண்டிருந்தபோது, கரிகாலன் எய்த ஓர் அம்பு, பெருஞ்சேரலாதனின் மார்பில் பாய்ந்து ஊடுருவ, அவன் கீழே விழுந்துவிட்டான்.

அரசன் வீழ்ந்ததும் சேரப்படை வீரர்கள் திகைத்துப் போய், போர் செய்வதை நிறுத்திவிட்டார்கள். அதே சமயம், பாண்டியனைத் தன் சரமாரியான அம்புகளால் உடலெங்கும் துளைத்து வீர சொர்க்கம் அனுப்பிவிட்டார் திருத்தாமன். தன் தங்கையின் குலத்தைப் பழித்துப்



பேசியவனைப் பழிவாங்கிய மகிழ்ச்சியில் அவர் உள்ளம் நிறைந்தது.

அன்றையப் போரிலே வெற்றி மகள் கரிகாலனுக்கு வாகை மாலை சூட, சோழநாடு மகிழ்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்தது.

கரிகாலனுடைய அம்பு, பெருஞ்சேரலாதனின் மார்பைத் துளைத்துக் கொண்டு ஊடுருவி முதுகு வழியே வெளியேறிவிட்டது. கீழே விழுந்த சேரனின் உயிர் போகவில்லை. வீரர்கள் அவனைத் தூக்கிக் கொண்டுபோய் கட்டுரில் படுக்க வைத்தார்கள்

முதுகில் புண் ஏற்பட்டதைப் பெரும் இழுக்காக எண்ணி வேதனைப்பட்ட பெருஞ்சேரலாதன், களத்திலேயே உயிர் போயிருக்கக் கூடாதா என்று கவலைப்பட்டான்.

'இந்தப் புறப் புண்ணோடு நான் இனிமேல் உயிர்வாழ மாட்டேன்; வடக்கிருந்து[1] உயிர்நீப்பேன்' என அறிவித்துவிட்டான்.

பக்கத்திலிருந்தவர்களெல்லாம் 'நீங்கள் பெற்றது புறப்புண் அல்ல; மார்புப் புண்தான். மார்பிலே புண்படுவது வீரருக்கு இழுக்கு அல்ல. உங்களுடைய வீரத்தைத் தமிழ் நாட்டார் குறைவாக எண்ண மாட்டார்கள்,' என்று எவ்வளவோ சொல்லியும் அந்த மாவீரன் கேட்கவில்லை. 'புண் எப்படி ஏற்பட்டாலும், முதுகிலே புண் இருப்பதை மறைக்க முடியுமா? முதுகிலே ஊடுருவிய புண்ணோடு வாழ்ந்தான் சேரன் என்ற இழுக்கு, பெருமை வாய்ந்த சேரர் பரம்பரைக்கு என்னால்

---

1. தனியிடத்தில் வடக்கு நோக்கி அமர்ந்து, உணவும் நீரும் உண்ணாமல் உயிர் துறக்கும் வழக்கம், 'வடக்கிருத்தல்' எனப்படும்.

ஏற்பட வேண்டாம்; மார்பிலே ஏற்பட்ட புண்ணின் தொடர்ச்சியாக முதுகிலே ஏற்பட்டதைக்கூட புறப்புண் என்று நாணி உயிர்துறந்தான் என்ற பெருமையாவது எனக்குக் கிடைக்கட்டும்...' என்று உறுதியாகச் சொல்லி வடக்கிருந்தான்.

பெருஞ்சேரலாதனின் இந்த மான உணர்ச்சியை, கழார்த்தலையார் போன்ற பல புலவர்கள் பாராட்டிப் பாடினார்கள். கரிகாலனின் வீரத்தைப் புகழ்ந்த வெண்ணிக்குயத்தியார்கூட, [2]'போரில் வென்ற கரிகாலனைவிட, புறப் புண்ணுக்காக நாணி வடக்கிருந்த சேரலாதன் புகழ் பெற்றவன்' என்று கரிகாலன் முன்னிலையிலே பாடினார்.

கரிகாலனுடைய கன்னிப்போர், அவனுக்கு வெற்றியைக் கொடுத்து அவன் பெயரை வரலாற்றில் இடம்பெறச் செய்தது. வாகை சூடிய மன்னன் தலைநகருக்குத் திரும்பியபோது, வழியெங்கும் மக்கள் கூடிநின்று ஆரவாரத்துடன் வரவேற்று வாழ்த்தினர். வெற்றி விழா நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. வீதியெல்லாம் அலங்காரம் செய்யப்பட்டு, வீடுகளெல்லாம் அழகும் குதூகலமும் பொங்கி நிறைந்தன.

கரிகாலன் புகார் வந்ததும் அரண்மனையில் வீரர்களுக்கு ஏராளமான பரிசுகளை வழங்கினான். அவன் புகழ் பாடிய புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் விறலியருக்கும் பரிசுகளை வாரி வழங்கினான். சோழ நாடு முழுவதுமே கரிகாலனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தது. எதிர்காலத்தில் அவனால் நாடு பெறப் போகும் சிறப்புக்களை எண்ணி மக்கள் மகிழ்ந்தார்கள்.

போரில் வெற்றி பெற்ற விழா நடக்கும் போதே, மற்றொரு விழாவும் நடைபெற வேண்டும் என்று தாய் நல்லினிதேவி விரும்பினாள்.

---

2. புறநானூறு— 66



திருத்தாமனிடம் ''அண்ணா! எனக்கு வயதாகி விட்டது. கரிகாலனைக் கவனித்துக் கொள்வது என்னால் இனிமேல் முடியாது போலிருக்கிறது. ஆகையால் அவனைக் கவனிப்பதற்கு ஒரு ஆளைச் சேர்க்க வேண்டும்...'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள் நல்லினி.

தங்கை என்ன நினைக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார் திருத்தாமன்.

''வாகை மாலை சூடிய மகன், மணமாலை சூடும் காட்சியைப் பார்க்க விரும்புகிறார் போலிருக்கிறது!'' என்றார் பக்கத்திலிருந்த இதியன்.

''ஆம்... அண்ணா! நம் கரிகாலனுக்கு ஏற்ற ஒரு பெண்ணைப் பாருங்கள்...'' என்றாள் தாய்.

''நல்லினி! நீ ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? திருமணம் என்பது வளவனின் சொந்த விஷயம்; அவன், மனதிலே ஏதாவது ஒரு பெண்ணை நினைத்திருந்தால்—'' என்று யோசித்தார் மாமன்.

''இல்லை இல்லை... என் மகன் அப்படிப்பட்டவன் இல்லை; என் குழந்தையைப் பற்றி எனக்குத் தெரியும்...''

''மகன், தாய்க்கு எப்போதும் குழந்தைதான்; ஆனால் அவன் வளர்ந்து மன்னராகி விட்டதை நீ மறந்துவிடக் கூடாது...''

''நாட்டுக்கு மன்னனானாலும் தாய்க்கு மகன்தானே?''

''அரசியாரே! மன்னரைப் பற்றித் திருத்தாமன் கூறுவதை நானும் ஆமோதிக்கிறேன். அவர் யாரைக் காதலிக்கிறாரோ, எனக்குத் தெரியாது; ஆனால் அவரைக் காதலிக்கிற ஒரு பெண்ணை எனக்குத் தெரியும்...'' என்ற இதியன், நாங்கூரின் அருட்கோதையைப் பற்றி விவரமாகக் கூறினார்.

கோதையின் காதலையும் தவத்தையும் கேட்டதும் மெய்சிலிர்த்துப் போனாள் நல்லினிதேவி.

"தளபதி! அந்தக் கோதைதான் சிறுவயதில் வளவன் உயிரையே காப்பாற்றினாள்..." என்று நடந்ததைத் தளபதியிடம் சொன்னார் திருத்தாமன்.

"அண்ணா! அந்தக் கோதைதான் வளவனுக்கு இந்த வாழ்வும் பட்டமும் அரசும் கொடுத்தவள்; இந்தச் சோழ நாட்டு அரியாசனத்தில் பட்டத்தரசியாக அமர அவளுக்கு எல்லாத் தகுதியும் உண்டு. அன்று அவனுடைய உயிர்க்குத் துணையாக இருந்தவள், இனி அவனுக்கு வாழ்க்கைத் துணையாக இருக்க வேண்டும்... தளபதி! நீங்கள் உடனே சென்று, கோதையை அரச மரியாதையுடன் அழைத்து வாருங்கள்!" என்று கட்டளையிட்டாள் அரசி.

வருங்காலப் பட்டத்தரசியை அழைத்து வருவதற்காக, திதியன் பல்லக்குடனும் வீரர்களுடனும் நாங்கூரை நோக்கிப் புறப்பட்டார்.

அதே சமயம், வேறொரு திசையில், கரிகாலன் தனியாகக் குதிரையில் கொடுங்கோளூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

போரிலே, தன் வெற்றியை, அதற்குக் காரணமான தாயக்கண்ணியின் குடும்பத்தாரிடம் நேரில் சொல்லவும், தனக்காகச் சிந்தாதேவி செய்த தியாகத்துக்கு நன்றி சொல்லவும், துடிப்புடன் போய்க் கொண்டிருந்தான், பழைய குமரன்.

அவனுடைய அந்த அவசரப் பயணத்துக்கும் துடிப்புக்கும் இவை மட்டுமல்ல காரணங்கள்— வேறொரு முக்கியமான காரணமும் அவனுடைய இதய ஆழத்தில் இருந்தது!



கொடுங்கோளூரை அடைந்து, தாமக்கண்ணியின் வீட்டுக்குள் நுழைந்தபோது, அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

## 32

கொடுங்கோளூரை நோக்கி, பழைய குமரனாக வந்து கொண்டிருந்த கரிகாலனின் இதய ஆழத்தில் தோன்றியிருந்த எண்ணம், அவனை விரைவாக இயக்கிக் கொண்டிருந்தது.

'அவன் காதலித்த சிந்தாதேவியின் ஸ்தானத்தில், அவனைக் காதலிக்கும் தாமக்கண்ணியை வைத்து நன்றி செலுத்த அவனது நெஞ்சம் துடித்தது. தனக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராகி, காலை இழந்து, கலையைப் பறிகொடுத்து, முடமாகிப் போன அவளைப் பட்டத்தரசியாகத் தன் பக்கத்தில் வைத்துக் கொள்வது, அவன் செய்ய வேண்டிய கைம்மாறு என்பதை அவன் உணர்ந்தான்.

'பெருமை வாய்ந்த சோழ சிம்மாசனத்தில் ஒரு முடத்தை வைக்கலாமா?' என்று மறுப்பாள் அவள். 'தகுதியுள்ளவளை அதில் வைக்கத் தவறிவிட்டால் என் நன்றியுணர்வு முடமாகிப் போகும்!' என்று அழுத்தமாகச் சொல்லி அவளைச் சம்மதிக்கவைக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே வந்தான் கரிகாலன்.

எத்தனையோ இனிய கற்பனைகளுடனும் எதிர்கால கனவுகளுடனும் கொடுங்கோளூர் வந்த கரிகாலன், வீட்டிலே தாமக்கண்ணி துவராடையணிந்து சந்நியாசினி

யாக அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றான்.

''வாருங்கள்! வாகை சூடிய சோழ மன்னரே! வாருங்கள்!...'' என்று பரிவோடும் உரிமையோடும் புன்முறுவல் பூத்து அவனை வரவேற்றாள் தாமக்கண்ணி.

''கண்ணி! ஏன் இந்தக் கோலம்?... இந்த இளவயதிலே இந்த அலங்கோலம் அவசியமா?'' என்று சிடுசிடுத்தான் அவன்.

''இது அலங்கோலமில்லை; நான் ஏற்றுக்கொண்டு விட்ட வாழ்க்கையின் அடையாளம்.''

''அதுதான் கேட்கிறேன்; இந்த வாழ்க்கையை நீ ஏன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்?''

''அரசே! பெண்களைப் பலஹீனமானவர்கள் என்கிறார்களே, அது இந்த வகையிலும் பொருத்தமாகத் தான் இருக்கிறது— அவர்களது நெஞ்சத்திலே ஒருவருடைய நினைவைப் பதித்து விட்டால் அதை நீக்கவோ, மாற்றிக் கொள்ளவோ வலிமையற்றவர்களாகத் தான் இருக்கிறார்கள்...'' என்று நிச்சலனமாகத் தத்துவம் பேசிக் கொண்டிருந்தாள் அவள்.

''நெஞ்சத்தின் நினைவை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படாவிட்டால்—?...'' என்று குறிப்பாகச் சொல்லி நிறுத்திக் கொண்டான் வளவன்.

தாமக்கண்ணி, நிமிர்ந்து அவன் முகக் குறிப்பை ஆழமாகப் பார்த்தாள்:

''அரசே! நீங்கள் ஒரு ஆண் என்பதை மறுபடியும் நிருபித்துக் காட்டுகிறீர்கள்; ஆனால் நான் ஒரு பெண் என்பதை என்னால் மறைக்க முடியவில்லை!...'' என்ற கண்ணியின் பேச்சு, புரிந்தது போலவும் புரியாதது போலவும் இருந்தது அவனுக்கு.



அவனுடைய மௌனத்தைக் கண்டு அவளே தொடர்ந்தாள்:

''அரசே! நடந்ததையெல்லாம் கேள்விப்பட்டேன். தன்னுடைய லட்சியக் கொள்கைக்காகவும், லட்சியக் காதலுக்காகவும் சிந்தாதேவி தன் உயிரையே தியாகம் செய்தாள். ஆனால் எனக்கு அவ்வளவு துணிவு இல்லை; அதனால்தான் இன்னும் துறவியாக உயிரோடு உங்கள் முன்னால் நிற்கிறேன். நான் உங்களைக் காதலித்த போது, என் தோழியும் உங்களைக் காதலிக்கிறாள் என்பதைக் கண்டு, அவளுக்காக என் காதலைத் தியாகம் செய்தேன். அதிலே எனக்குப் பூரண மனத் திருப்தி இருந்தது. அந்தத் திருப்தியிலேயே தொடர்ந்து வாழ்வது எனக்குச் சுகமாக இருக்கும் போலிருக்கிறது. அது மட்டுமல்ல— எந்த இல்லற வாழ்வு வேண்டுமென்று ஆசையோடு துடித்துக் கொண்டிருந்தாளோ, அந்த வாழ்வு தேவிக்குக் கிடைக்காமல் போய்விட்டது; என் தோழிக்குக் கிடைக்காத வாழ்வு எனக்கும் கிடைக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்...'' என்றதும் குறுக்கிட்டான் கரிகாலன்:

''கண்ணி!—''

''அரசே! நீங்கள் என்ன கேட்க நினைக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது... என்னுடைய மனநிலைக்கு இது ஒரு தெளிவான விளக்கம் இல்லைதான்; ஆனால், மனம் இருக்கிறதே, அது ஒரு விசித்திரப்— அதிலும் பெண் மனம், விசித்திரத்திலும் விசித்திரம்!... இல்லையா?'' என்று மெல்லச் சிரித்தாள் கண்ணி.

அந்தச் சிரிப்பிலும், சிரிப்பு விளையாடும் முகத்திலும், முகத்தில் ஒளிவிடும் கண்களிலும், பழைய கவர்ச்சி மறைந்து, அறிவுச்சுடர் தெறிப்பதை உணர்ந்து, தன்னை மறந்து, அவள் முன்னால் பேச்சற்று யறியாது ஓர் விநயத்துடன் அவள் முன்னால் பேச்சற்று நின்றான் கரிகாலன்.

''அரசே! சிந்தாதேவி எனக்குக் கடைசியாக எழுதிய கடிதத்தைப் பாருங்கள். அதிலே அவளுடைய உள்ளத் துடிப்பை உணர்வீர்கள்!'' என்று சொல்லி எழுந்து, வலது காலைச் சாய்த்துச் சாய்த்து இழுத்தவாறு நடந்து போய், முடங்கலை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

அந்த வீட்டுக்குள்ளே, கலைமானாகத் துள்ளி ஓடிய அந்த அழகு மயில், இப்போது நொண்டிக் கிளியாகத் தத்தித் தத்தி நடக்கும் அவலக் காட்சியைக் கண்டு அவனது நெஞ்சில் வெடித்த இரத்தம் கண்களில் நீராகக் கசிய, முடங்கலின் எழுத்துக்களைச் சிறிது நேரம் மறைத்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டு, இளவரசியின் ஓலையைப் படித்தான் கரிகாலன்.

'அன்புத் தோழி கண்ணிக்கு, சிந்தாதேவி எழுதிய முடங்கல்:

என் தோழிகளிடம் மட்டுமல்ல, யாரிடமுமே சொல்லிக் கொள்ளாமல், இந்த உலகத்தை விட்டுப் போகிறேன்.

இந்த உலகத்தை, போர் இல்லாத மகிழ்ச்சியான உலகமாக மாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் வாழ்ந்தேன். ஆனால் ஒரு பெண்ணால் உலகத்தை மாற்றுவது என்பது முடியாத காரியம் என்று உணர்ந்தேன். இருந்தாலும், என்னால் ஒரு மனிதரை மாற்ற முடிந்தது என்ற மனத் திருப்தியடைகிறேன். கரிகால்சோழர் என் லட்சியங்களைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார் அவருடைய முந்தையக் கடமைகளை நிறைவேற்றிய பிறகு, நான் கண்ட லட்சிய நாட்டை உருவாக்குவார்; தனக்காக மக்களை மடியச் செய்யாமல், மக்களுக்கான நன்மைகளைச் செய்வார். 'மக்களுக்காக மன்னன்' என்ற லட்சிய நிலையை நிறுவுவார் என்ற நம்பிக்கை



எனக்கு இருக்கிறது. அந்த லட்சியத்தை அவர் நனவாக்க வாய்ப்பே இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான், அவரைக் காப்பாற்ற என் உயிரைத் தியாகம் செய்ய முடிவு செய்தேன். ஆகவே இது வெறும் காதல் தியாகம் மட்டுமல்ல— ஒரு லட்சியத்துக்காகவும் கொள்கைக்காகவும் செய்த தியாகம்!...

வெற்றி பெற்றதும் கரிகாலர் உன்னைப் பார்க்க வரும்போது என் கடைசி ஆசையைக் கூறு:

இனிமேல் மூவேந்தர்களுக்கிடையே போர் என்பதே ஏற்படாதவாறு குடும்ப உறவுகளைப் பிணைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்:

'எதிர்காலத்தில் சேரமன்னனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும்; அந்த மகளும் ஒரு கவியரசியாகச் சேரநாட்டுக்கு வரவேண்டும்' என்று அவரிடம் சொல்...

கடிதத்தைப் படித்ததும், கண்களில் நீர் மல்க, விம்மியவாறு நின்றான் கரிகாலன்.

''அரசே! நீங்கள் அழக்கூடாது. நீங்கள் அழக்கூடாது என்றுதான் என் தோழி உயிரையே தியாகம் செய்திருக்கின்றாள். அந்தத் தியாகத்தின் அர்த்தத்தை வீணாக்கி விடாதீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக நாட்டையாள வேண்டும். குடும்ப வாழ்வை மேற்கொண்டு, என் தோழி விருப்பப்படி ஒரு கவியரசியைப் பெற்று எங்கள் நாட்டுக்கு மருமகளாக அனுப்பவேண்டும். அது மட்டுமல்ல— அந்தக் கவியரசி ஒரு கலையரசியாகவும் திகழவேண்டும்; இது என்னுடைய வேண்டுகோள். எனது சதங்கைகள் உங்கள் மகளின் பொற்பாதங்களில் ஒலிக்க வேண்டும்!...'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள் கண்ணி...

''கண்ணி! உங்கள் ஆசைகளை நிச்சயம் நிறைவேற்றுவேன். என் சொந்த வாழ்க்கையில் மட்டுமல்ல,

அரச வாழ்க்கையிலும் சிந்தாதேவியின் ஆசைகளை நிறைவேற்றுவேன். பேரே இல்லாத ஓர் அமைதியான நாட்டை உருவாக்கி, அங்கே மக்களுக்கு நிலையான தொண்டுகளைச் செய்து, மக்களுக்காகவே மன்னன் என்ற லட்சிய நிலையைப் படைப்பேன்...'' என்று கரிகாலனும், உணர்வின் துடிப்பும் உண்மையும் சொற்களிலும் வெளிப்பட அழுத்தமாகப் பேசினான்.

''ஆம், அரசே! நீங்கள் அப்படி ஒரு லட்சிய அரசராக, மக்களின் இதயத்தில் ஆட்சி நடத்தும் மன்னராகத் திகழும்போது, நான் உங்களை ஒரு இலக்கியத்தின் தலைவனாக்கிப் பாடுவேன்; அந்தப் பொன்னாளை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன்...'' என்று குரல் தழதழக்கச் சொன்னாள் தாமக்கண்ணி.

கழார்த்தலையாரையும் உத்திரையையும் சந்தித்து நன்றி சொல்லிவிட்டு, அரண்மனைக்குத் திரும்பிய கரிகாலன், தாயைப் பார்க்க அந்தப்புரம் சென்றபோது அங்கே இருந்த பெண்ணைப் பார்த்து திகைத்து நின்றான்.

பருவ மெருகு பூசிய வாளிப்பான உடற்கட்டில் கொல்லிப்பாவை போல் இருந்தாள் அருட்கோதை. தன் உடலையும் உயிரையும் அவனுக்காகவே அர்ப்பணிக்கக் காத்திருந்தவள்போல், அவனைக் கண்டதும் மெய்சிலிர்க்க எழுந்து நாணம் பொங்க நல்லினியின் பக்கத்தில் ஒடுங்கி, கடைக்கண்ணால் அவனைக் கொல்வது போல் பார்த்தாள். அந்தப் பார்வை ஆயிரம் வேலாக, வளவனின் நெஞ்சத்தில் பாய்ந்து ஊடுருவியது.

''கோதை! நீயா—? எவ்வளவு வளர்ந்துவிட்டாய்? ஆளே அடையாளம் தெரியவில்லையே?'' என்று விழிகளை அகற்றி அவளுடைய உருவத்தை விழுங்கினான்.

''ஆமாம்... நீ மட்டும் அன்று மாதிரி சிறுபிள்ளையாகவே இருக்கிறாயோ?'' என்று சிரித்தாள் தாய்.



கரிகாலனுக்கும் கோதைக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் தொடங்கின.

தந்தையைப் போல் மகனும் ஒரு சாதாரணக் குடும்பத்துப் பெண்ணைப் பட்டத்தரசியாக ஏற்றுக் கொண்டிருப்பதைக் கண்ட மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சி. தெருக்களில் விளையாடும் சிறுவர் முதல், வேதிகையில் உட்கார்ந்திருக்கும் குடுகுடு கிழவர் வரை, அனைவருடைய முகத்திலும் களிப்பு நடனமாடியது. வீதியெல்லாம் வண்ணத் தோரணங்களும் மணி வளைவுகளும் அமைக்கப்பட்டு, வாழைக்குலை, பனங்குலை, கமுகு, இளநீர், தென்னங்குருத்து முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டாரும், தம் வீட்டுத் திருமணம் போல், வீட்டை அழகுபடுத்திக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

புலவர்களும் கலைஞர்களும் சூழ, மக்கள் வெள்ளம் ஆரவார அலைகளை வீசிக் கொண்டிருக்க, வானை முட்டும் வாழ்த்தொலிகளுக்கிடையே, கரிகால்வளவன்—அருட்கோதை திருமணம் நிகழ்ந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னே, நாங்கூரிலே சிறுவர்களாய் விளையாடும் போது நடந்த திருமண 'ஒத்திகை,' இப்போது நாடறிய அரங்கேற்றமாகியது!

அன்று நாடு முழுவதும் விருந்தும் பொழுதுபோக்குக் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. நகரின் பல்வேறு பகுதிகளிலும் இசைக்கலைஞர்களும் நாடக விறலியரும் நாட்டிய மங்கையரும், மக்களுக்குக் கலைவிருந்து படைத்துக் கொண்டிருந்தார்கள்

அன்று இரவு, நிர்மலமான வானத்தில் நிலவு உலா வந்துகொண்டிருந்தது. கதிரவனின் கொடிய வெப்பத்தால் தளர்ந்து வாடி நின்ற குமுதமலரை, வெண்ணிலா குளிர்ந்த கிரணங்களால் தொட்டு உற்சாகப்படுத்தியது.

பால்நிலவின் ஒளியிலே, நெடுமாட முற்றங்களிலே கலந்திருக்கும் காதலர்களிடையே புகமுடியாத தென்றல், தன் தோல்விக்குப் பழிவாங்க, பிரிந்திருக்கும் காதலர்களைத் தேடி ஓடிக் கொண்டிருந்தது...

மணக்கோலத்தோடு, பள்ளியறைக்குள் நின்று கொண்டிருந்தாள் அருட்கோதை. அவளுடைய அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் கரிகால்வளவன்.

மேகம் போன்ற கருங்கூந்தலின் பின்னணியில் அவள் முகம், மற்றொரு நிலாவாக ஒளிர்ந்தது. கண்களிலே தீட்டியிருந்த அஞ்சனம், ஏற்கனவே நீண்டிருந்த கொடிய விழியம்பை மேலும் கூர்மையாக்கி விட்டிருந்தது. சுழியிட்டு ஓடும் அழகுப் பிரவாகம் போன்ற கன்னங்களுக்கிடையே எள்ளுப்பூ நாசி எடுப்பாக நின்றது. 'நான் அழகா, நீ அழகா' என்று போட்டியிட்டுப் போரிடுவது போல், இரு செவ்விதழ்களும் கனிந்து துடித்தன. கொளுவிய கன்னத்தின் ஓரத்தில் வைத்திருந்த திருஷ்டிப் பொட்டு, மேலும் அழகை அதிகப்படுத்திக் காட்டி திருஷ்டி பட வைத்தது. ஆழ்கடலில் முத்துக்கள் பதுங்கிக் கிடப்பது போல், இத்தனை அழகுச் சுரங்கத்திலே நானும் இருக்கிறேன் என்று முத்துப்பற்கள் வெளியே சில சமயங்களில் எட்டிப் பார்த்தன...

''கோதை!...'' என்று குழைவாக அழைத்தான் கரிகாலன். சட்டென்று தன் காலடியில் விழுந்து வணங்கிய அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டான்.

''கோதை! உன் தவம் பலித்து விட்டது, பார்த்தாயா?... எத்தனையோ ஆண்டுகள் நான் உன்னைப் பார்க்காமலிருந்தாலும், நீ என்னை மறக்காமல், என்னையே கணவனாக நினைத்திருந்தாயே, அந்தக் கற்புக்கு, தெய்வம் அருள் செய்யாமல் இருக்க முடியாது...'' என்ற வளவனின் குரல் உணர்ச்சியில் தழுதழுத்தது.



''என் பிரார்த்தனைக்கு, தெய்வம் இரட்டிப்பு அருள் அல்லவா வழங்கியிருக்கிறது? ஒரு சாதாரண வீரருக்காகத் தவம் செய்த எனக்கு, அவரையே ஒரு மன்னராக அல்லவா வழங்கியிருக்கிறது?'' என்றாள் கோதை.

''அந்த அரச பதவியும் நீ போட்ட பிச்சைதான், கோதை!'' என்று கரிகாலன் சொன்னதும் அவள் பதறிப்போய் அவனது வாயை, தன் காந்தள் விரல்களால் மூடினாள்:

''இல்லை... அப்படிச் சொல்லாதீர்கள்!... தெய்வத்துக்கு நாம் அளிப்பது பிச்சையல்ல; காணிக்கை...'' என்று கண்களில் நீர் கசியக் கூறினாள் கோதை.

அப்போது, எங்கிருந்தோ, நடனச் சதங்கைகளின் கலீர் கலீர் ஒலி கேட்டது.

''பக்கத்தில், நடன நிகழ்ச்சி நடக்கிறது போலிருக்கிறது!'' என்றாள் பட்டத்தரசி.

அந்தக் கலீர் கலீர் ஒலி, கரிகாலனின் உள்ளத்திற்குள் ஆழமாக ஒலித்தது.

உள்ளே சென்று, தாமக்கண்ணி கொடுத்த சதங்கைகளைக் கொண்டு வந்து, மனைவியிடம் காட்டினான் வளவன். அப்போது அவனையும் அறியாமல் விழியிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள், சதங்கைகளின்மேல் பட்டுத் தெறித்தன.

''ஏன் அழுகிறீர்கள்?'' என்று திடுக்கிட்டாள் கோதை.

''கோதை! இந்தச் சதங்கைகளுக்குப் பின்னணியிலே இரண்டு ஜீவன்களின் சோகக்கதை அடங்கியிருக்கிறது...''

''சோகக் கதையா? என்ன அது, சொல்லுங்கள்!...''

"சொல்கிறேன், கோதை!... என் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள வந்திருக்கும் உன்னிடம் சொல்லாமலா?" என்று நிகழ்ந்தவைகளைச் சொல்லத் தொடங்கினான் வளவன்......

தாமக்கண்ணி, சிந்தாதேவி ஆகியவர்களின் காதலும் தியாகமும் கோதையின் மனத்தை உருக்கி இளக வைத்தன. அவர்களுக்குக் கிடைக்காத பாக்கியம், எளிய குடும்பத்துப் பெண்ணான தனக்குக் கிடைத்திருப்பதை நினைத்து அவள் உடல் சிலிர்த்தது.

"கோதை! அவர்களின் ஆசையை நீதான் நிறைவேற்ற வேண்டும். உன்னைப்போல் ஓர் அழகிய மகளைப் பெற்றுத் தந்தால், தாமக்கண்ணியைப்போல் கலையரசியாகவும், சிந்தாதேவியைப்போல் கவியரசியாகவும் ஆக்கி, சேரநாட்டுக்கு மருமகளாக்கி விடுவேன்... இந்தச் சதங்கைகளின் நாதம் உன் மகள் கால்களில் கொடுங்கோளூரில் ஒலித்தால்தான், என் வாழ்க்கையிலே நிம்மதி ஏற்படும்..." என்று நெடுமூச்செறிந்தான் வளவன்...

கணவனே கண்கண்ட தெய்வம் என்று நினைக்கும் அந்தக் கற்புக்கரசி, கரிகாலனின் ஆசையை நிறைவேற்றாமலிருப்பாளா?

அடுத்த ஆண்டு, தங்கச்சிலை போன்ற பெண் குழந்தையைப் பெற்று, அதன் பிஞ்சுக்கால்களில் கண்ணியின் சதங்கையை அணிவித்து அதன் கலீர் கலீர் ஒலியைக் கேட்டு மகிழ்ந்தனர் பெற்றோர்கள்...

கரிகால்வளவனின் இளமைக்கால வரலாற்றைக் கூறி முடிக்கிறார் மாநாய்கர்.

இத்தனை நேரமும் உடலெல்லாம் செவியாக இருந்து ஆர்வத்துடன் கேட்ட பொற்பாவையும் இளமருதனும் வியப்புடன் அவரைப் பார்க்கிறார்கள்:



"அப்பா! கரிகால் மன்னரின் வாழ்க்கையிலே இத்தனை ரகசியக் கதைகள் இருக்கின்றனவே?" என்று விழிமலர்கள் விரிய தந்தையிடம் கூறுகிறாள் மகள்.

"ஆம், பாவை! இந்த இளமைக்கால நிகழ்ச்சிகளின் பாதிப்புத்தான் கரிகாலனின் பிற்காலச் சாதனைக்கு அடிப்படை... தன் தந்தையும் தாயும் பாண்டியனிடம் சபதத்தை நிறைவேற்ற, வெண்ணிப் போரிலே பாண்டியனை வென்ற பிறகு, ஒளிநாகர், பொதுவர், குறும்பர், அருவாளர், வடுகர் முதலியவர்களையும், வச்சிரநாடு, மகதநாடு, அவந்தி நாடு முதலிய நாட்டு அரசர்களையும் வடநாட்டு மன்னர்களையும் இலங்கை வேந்தனையும் வென்று, தந்தை கண்ட கனவுப்படி 'எழுமுடிமாலை' தரித்துக் கொண்டார்... தன் மாமன் கனவு கண்ட லட்சிய வீரனாக, மற்றொரு அலெக்ஸாண்டராக வெற்றிகளைக் குவித்த பிறகு, சிந்தாதேவி கனவு கண்ட லட்சிய மன்னராக, மற்றொரு அசோகராக மாறினார். 'காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி'[1] அடிக்கடி வெள்ளமாக வந்து மக்களைப் பயமுறுத்திய காவிரியைக் கட்டுப்படுத்தி, நெடுகக் கரை எழுப்பி, வேளாண்மை நிலங்களுக்கு நீர் பாய்ச்சக் கல்லணை கட்டி, பல வாய்க்கால்கள் வெட்டி, பொன் விளையும் நாடாக்கினார். தொண்டை நாட்டின் இருபத்து நான்கு கோட்டங்களிலும் நிலையின்றித் திரிந்த ஆயிரக்கணக்கான குறும்பரையும் அருவாளரையும் அடக்கி, அவர்களைக் காவிரிக் கரையோரத்தில் குடியமைத்து வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தி உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்கினார். நாடெங்கும் புதிய சாலைகளை அமைத்தார்; பழைய சாலைகளைச் செப்பனிட்டார். புதிய கல்விக் கூடங்களை அமைத்தார்; எண்ணற்ற கலைப்பயிற்சி மன்றங்கள் தொடங்கி,

---

1. 'பட்டினப்பாலை'— (283- 284)

கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் வழங்கினார். மக்களின் நோய்களைத் தீர்க்கும் ஆதுர சாலைகள் பல ஏற்படுத்தியுள்ளார். நீதி, நிர்வாகத்தில் அனுபவமும் அறிவும் நேர்மையும் வாய்ந்தவர்களை நியமித்திருக்கிறார். உறந்தை என்னும் பழைய தலைநகரைச் செம்மைப்படுத்தி, மக்களுக்குப் பல வசதிகள் செய்துள்ளார். வெளி நாட்டு வணிகத்தை வளர்ப்பதற்காக, பெருங் கப்பல்களும் நகரையொட்டி ஆற்றுக்குள் வந்து நிற்கும்படியாக, காவிரியின் முகத்துவாரத்தை ஆழப்படுத்தியிருக்கிறார்... சுருக்கமாகச் சொன்னால், தமிழ்நாட்டில் இவர் ஆட்சிக் காலம், பொற்காலமாக விளங்குகிறது. வரலாற்றிலே, கரிகாலர் மாதிரி வீரர்கள் சிலரைக் காண்பீர்கள்; ஆனால் அவர் மாதிரி, மக்களுக்கு நன்மைகள் செய்த மன்னரைக் காண்பது அரிது!...'' என்று விளக்கமாகக் கூறுகிறார் மாநாய்கர்.

''ஆம், மாமா!... கரிகாலருடைய போர்க்கள வெற்றிகள் வரலாற்றில் மறைந்து போய் விட்டாலும், அவரது அறக்களச் சாதனைகள், நிலைத்து நிற்கும். காவிரிக்குக் கரை கட்டியதும் கல்லணை அமைத்ததும், அவர் பெயரைத் தமிழகத்தில் நிலமுள்ளளவும் நீர் உள்ளளவும் நினைவூட்டிக் கொண்டிருக்கும்!'' என்று பாராட்டுகிறார் மருமகன் இளமருதன்.

''நம் மன்னர், வல்லவர் என்பதை உலகம் மறந்தாலும், நல்லவர் என்பதை மறக்க முடியாது... நாடும் மக்களும் வளங்கொழிக்கச் செய்த அவரை வளவன், திருமாவளவன் என்று சொல்வது பொருத்தம்தான்...'' என்கிறாள் மகள்.

''மன்னனுக்காக மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களுக்காக மன்னன் என்ற லட்சிய நிலையை இந்த மண்ணில் நிறுவியது மட்டுமல்லாமல், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற தமிழ்த் தத்துவப்படி, இந்த நாட்டிலே பல்வேறு நாட்டினரும் நாகரிகத்தவரும்



மொழியினரும் ஓரினமாகக் கலந்து வாழும் சூழ்நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறார் மன்னர். இதை, கடியலூர் உருத்திரங்கண்ணன், 'மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப் புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும் பட்டினம்'[2] என்று பாடியிருக்கிறார். இந்த மண்ணிலே பல்வேறு மொழி பேசும் பல வெளிநாட்டு மக்களும் ஒன்று சேர்ந்து உரிமையோடும் உறவினர் போல் வாழ்வதை நீங்களே பார்த்திருப்பீர்களே, இதன்மூலம் சிந்தாதேவியின் இலட்சியத்தை நிறைவேற்றிவிட்டார்...'' என்று மேலும் விளக்குகிறார் தந்தை.

''ஆம், அப்பா! இப்படியெல்லாம் பல சாதனைகள் செய்து, தான் ஒரு நல்ல மன்னர் என்று பெயர் பெற்ற பிறகுதான், தாமக்கண்ணியார், அவரைத் தலைவராக்கிப் 'பொருநராற்றுப்படை' பாடினார் போலிருக்கிறது!... ஆனால் அந்தப் பாடலிலே, தனக்கும் கரிகாலருக்கும் உள்ள தொடர்பையும், தன் ஏக்க உணர்வுகளையும் எவ்வளவு சாமர்த்தியமாக மறைத்துப் பாடியிருக்கிறார்?'' என்று வியப்படைகிறாள் பொற்பாவை.

''தாமக்கண்ணியின் விருப்பத்தை நிறைவேற்றத்தான், தன் மகள் ஆதிமந்திக்கு நடனம் கற்பித்து, கொடுங்கோளூரிலே அரங்கேற்றம் நடத்தப் போகிறார் போலிருக்கிறது?'' என்று கேட்கிறான் மருமகன்.

''அது மட்டுமல்ல— அந்த அரங்கேற்றத்திலே ஓர் ஆச்சரியமான அறிவிப்பும் செய்யப் போகிறார் என்று சொன்னீர்களே, அப்பா! அது என்ன என்று, நான் சொல்லட்டுமா?... அரங்கேற்றம் முடிந்ததும், 'கலையரசியும் கவியரசி[3]யுமான ஆதிமந்தியை, சேரநாட்டு மன்னர்

---

2. 'பட்டினப்பாலை'— (216-218)

3. ஆதிமந்தி பாடிய பாடல் ஒன்று, 'குறுந்தொகை' (31) யில் காணப்படுகிறது.

அத்திக்கு மணம் முடிக்கப் போகிறேன்' என்று கரிகாலர் தெரிவிக்கப்போகிறார், இல்லையா?'' என்று சிரிக்கிறார் பொற்பாவை.

''ஆதிமந்திக்குக் கணவராகப் போகும் அத்தி இருக்கிறாரே, அவரே ஒரு சிறந்த ஆட்டன்.[4] கலையிலும் அழகிலும் இலக்கியத்திலும் ஈடுபட்டு ரசிப்பவர்கள், உயிர்க்கொலை, போர் முதலியவற்றை விரும்ப மாட்டார்கள். ஆகவே இனிமேல் இந்த நாடுகளில் போர் முரசே ஒலிக்காது; நடனச் சதங்கைகளும் இசைப்பாடல் களும்தான் ஒலிக்கும்!...'' என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார் மாநாய்கர்.

''மாமா! புகழ்பெறும் ஒவ்வொருவனின் முன்னேற்றத் துக்கும் பின்னணியிலே ஒரு பெண் தூண்டுதலாக இருப்பாள் என்று ரோம் நாட்டிலே ஒருவர் என்னிடம் சொன்னது நினைவு வருகிறது. கரிகாலரின் வாழ்வுக்குப் பின்னணியிலே இரண்டு பெண்கள் இருந்ததால்தானோ என்னவோ, அவர் சிறந்த வீரராகவும் ஆட்சியாளராகவும் இரண்டு துறைகளிலும் வரலாற்றுப் புகழ் பெற்றிருக் கிறார்!'' என்று முறுவலிக்கிறான் இளமருதன்.

முற்றும்

16863
32883381

4. அக்கால நாட்டிய ஆசிரியர், 'ஆட்டன்' என்று வழங்கப்பட்டார். அத்தியும் 'ஆட்டன் அத்தி' என்று வரலாற்றில் குறிப்பிடப்படுகிறான்.

## இந் நாவல் படைப்புக்கு உதவிய நூல்களில் சில

1 தென்னிந்திய வரலாறு— கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி
2 தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும் — டாக்டர் கே. கே. பிள்ளை
3 சோழர் வரலாறு— டாக்டர் மா. ராசமாணிக்கனார்
4 சேரர் வரலாறு— அ. சிதம்பரனார்
5 கரிகால் வளவன்— கி. வா. ஜகந்நாதன்
6 சேர மன்னர் வரலாறு— ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
7 சேரன் செங்குட்டுவன்— மு. இராகவையங்கார்
8 தென்னாட்டுப் போர்க்களங்கள்— கா. அப்பாத்துரை
9 பண்டைத் தமிழர் போர் நெறி— கா. கோவிந்தன்
10 கோநகர் கொற்கை— அ. இராகவன்
11 கட்டுரை மணிகள்— மு. இராகவய்யங்கார்
12 தமிழகத்தின் துறைமுகங்கள்— மா. ரா. இளங்கோவன்
13 சங்ககாலப் பாவலரும் காவலரும் // — இர. பாலகிருட்டிணன்
14 பொருநராற்றுப்படை— முடத்தாமக்கண்ணியார்
15 பட்டினப்பாலை— கடியலூர் உருத்திரங்கண்ணனார்
16 பதிற்றுப் பத்து
17 தொல்காப்பியம்— நச்சினார்க்கினியர் உரை
18 பழமொழி
19 குறுந்தொகை
20 நற்றிணை
21 புறநானூறு
22 சீவகசிந்தாமணி
23 சிலப்பதிகாரம்
24 *The Colas— K. A. Nilakanta Sastri*
25 *An Outline History of the World— H. A. Davies*